

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
# அரசின் ஐந்தாண்டு சாதனைகள்

**(2011-2016)**


# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்
வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
அரசின் ஐந்தாண்டு சாதனைகள்
(2011–2016)
(சிறப்பு வெளியீடு)–பிப்ரவரி 2016

ஆசிரியர் - வெளியிடுபவர் :
**ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
**ச. ஜெயலலிதா**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
**சா. இளங்கோ**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
**அ. மகேஸ்வரி**
**சு. கமலா**
**த. தெய்வானை**

உதவி ஆசிரியர்கள் :
**த. ஷேக் முகமது**
**ச. மஞ்சுளா**
**மு. மோகனவல்லி**

நிருபர்கள் :
**இரா. பாலாஜி**
**அ. மதன்**

கணினி வடிவமைப்பு :
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

ஆசிரியருக்கு உதவியாளர் :
**நி. ஷீலா**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
**கோ. சந்திரசேகர்**

வடிவமைப்பாளர் :
**கோ. முரளி கிருஷ்ணன்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542221 / 22542224**


"மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்பதை அடிக்கடி சொல்லி வருகிறேன். அதைப் போலவே மக்களால் எனது தலைமையிலான அரசு, மக்களுக்காகவே எனது தலைமையிலான அரசு என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

## இந்த இதழில்....


- **அவனி புகழ்ந்திடும் ஆதிதிராவிடர் நலத்துறை சாதனைகள்**
  ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.......... 3
- **விருதுகளும் பரிசுகளும் பெற்று வியத்தகு சாதனைகள் படைத்த வேளாண்துறை**
  வேளாண்மைத்துறை.......... 9
- **கால்நடைகளின் வளர்ச்சி! கிராமப் பொருளாதாரத்தில் எழுச்சி!**
  கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை..........22
- **நலிந்த மக்கள் வாழ்வுயர நலம் சேர்க்கும் வளத்திட்டங்கள்**
  பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ..........49
- **மேம்பட்ட தமிழகத்தை உருவாக்கும் வெளிப்படையான வரி நிருவாகம்!**
  வணிக வரி மற்றும் பதிவுத்துறை..........55
- **ஒன்றுபட்ட மக்களை உயர்த்தி வாழ்வளிக்கும் உன்னத திட்டங்கள்!**
  கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை..........62
- **மின்வெட்டை அறவே நீக்கி மின்மிகை மாநிலமாய் பிரகாசிக்கும் தமிழகம்!**
  எரிசக்தித்துறை..........73
- **எதிர்கால சந்ததிக்கு இனிய உலகைத் தந்திடும்! மாசைக் கட்டுப்படுத்தி மகிழ்ச்சியே பொங்கிடும்!**
  சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை..........78
- **தமிழகத்தை வளப்படுத்திய தன்னிகரில்லா வரவு செலவுத் திட்டங்கள்**
  நிதித்துறை ..........89
- **செய்யும் தொழிலில் நிகரில்லா நெய்யும் தொழிலுக்கு ஆக்கம் அளித்திடும் மகத்தான அருஞ்சாதனைகள்!**
  கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை..........92
- **மக்கள் நல்வாழ்வைப் பேணி மக்கள் நலம் காக்கும் சாதனைகள்**
  மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை..........105
- **இதுவரை இல்லாத அளவு புதிய கல்லூரிகள் புதிய பல்கலைகழகங்கள் உருவாக்கம் புதிய ஆசிரியர்கள் நியமனம்**
  உயர்கல்வித்துறை..........113
- **சொகுசான பயணங்களுக்கு வழிகாட்டும் பாங்கான சாலைப் பணிகள்**
  நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை..........119

- **சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காக்கும் சட்டத்தின் ஆட்சி! - சரித்திரத்தின் சாட்சி!**
  உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ........ 124
- **வீட்டுவசதி அளிப்பதில் விரைந்த மேம்பாடு வியத்தகு சாதனைகள்!**
  வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ........ 153
- **தொழிற்துறையில் புதுமை முயற்சி! வரலாறு காணாத வளர்ச்சி!**
  தொழில்துறை ........ 157
- **தன்னிகரில்லாத் திட்டங்களில் தழைத்தோங்கும் தகவல் தொழில் நுட்பம்!**
  தகவல் தொழில்நுட்பவியல்துறை ........ 161
- **தொழிலாளர் நலன் மேம்படுத்தும் தொய்விலா சாதனைகள்!**
  தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ........ 166
- **திட்டமிட்ட செயலாக்கம் சட்டக் கல்விக்கு உயர்வூக்கம்**
  சட்டத்துறை ........ 176
- **ஜனநாயகம் தழைத்தோங்கும் மக்கள் மன்றத்தின் மகத்துவத்தைப் பிரதிபலிக்கும் சட்டமன்றம்!**
  சட்டமன்றப் பேரவைச் செயலகம் ........ 179
- **இளைஞர்களுக்கு எழுச்சி தரும் சிறு தொழில் வளர்ச்சி!**
  குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை ........ 181
- **நகராட்சி நிருவாகத்தின் மாட்சி!**
  **நல்லாட்சிக்கு இதுவே சாட்சி!**
  நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ........ 184
- **திறம்பட்ட மனித வளத்தால் சிறந்திடும் அரசுத்துறை நிருவாகம்**
  பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை ........ 196
- **திட்டவளர்ச்சியால் சிறப்பு முயற்சியால் முன்னேறும் தமிழகம்**
  திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை ........ 200
- **தியாகச் செம்மல்களின் நலம் காக்கும் சாதனைகள்**
  பொதுத்துறை ........ 205
- **ஏற்றமிகு கட்டடங்கள், எழிலார்ந்த நீர்நிலைகள்... போற்றுதலுக்குரிய புகழ்மிகு திட்டங்கள்!**
  பொதுப்பணித்துறை ........ 210
- **முதன்மைத் தமிழகத்தை முனைந்து உருவாக்கும் வருவாய்த்துறை**
  வருவாய்த்துறை ........ 230
- **ஊரக மக்களின் உள்ளம் களிக்க ஊர்தோறும் மகிழ்ச்சி செழிக்க ஒப்பில்லாச் சாதனைகள்**
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ........ 240
- **84,568 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செழித்தோங்கி வளர்ந்திடும் பள்ளிக்கல்வி**
  பள்ளிக்கல்வித்துறை ........ 247
- **குழந்தை நலம் - மகளிர் நலம் குறைவின்றிக் காத்திடும் சமூகநலம்**
  சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ........ 258
- **இல்லத்தரசியர் இதயங்களில் இனிமை ஊட்டும்!**
  **மாணவ, மாணவியர்க்கு தன்னம்பிக்கை கூட்டும்!**
  சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை ........ 263
- **உலகெங்கும் தமிழ் முழக்கம் ஒலிக்கச் செய்யும் உன்னத சாதனைகள்**
  தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை ........ 264
- **சுற்றுப் பயணிகளை உவர்ந்து ஈர்க்கும்**
  **ஒப்பிலாத் தலங்கள் உலகத்தர கட்டமைப்புகள்**
  சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை ........ 283
- **வளர்ச்சிப் பாதையில் என்றும் முன்னோக்கிய பயணம்!**
  போக்குவரத்துத்துறை ........ 302
- **மாற்றுத்திறனாளிகளுக்கு மதிப்பளிக்கும் மக்கள் அரசின் மகத்தான சாதனைகள்**
  மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ........ 307
- **இளைஞர்களுக்கு ஊக்கம் தரும் இணையிலாச் சாதனைகள்**
  இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ........ 312

# அவனி புகழ்ந்திடும்
# ஆதிதிராவிடர் நலத்துறை சாதனைகள்



- தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க வழங்கப்படும் திட்ட அலகுத் தொகை ரூ.7.50 இலட்சம். அதில் 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் என்ற இரண்டில் எது குறைவோ அது மானியம். இதுவரை வழங்கப்பட்ட மொத்த மானியம் ரூ.438.73 கோடி. மொத்த அலகுத் தொகை ரூ.1,216.58 கோடி.

- 43 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.

- ரூ.39 கோடி சிறப்பு மானியத்தில் 779 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் கழிப்பறை வசதிகள்.

- ரூ.222.35 கோடி செலவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கு

8,63,159 விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவியாக ரூ.104.76 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.44.76 கோடி விடுவிக்கப்பட்டது. இதன் மூலம் 8,066 நபர்கள் பயன்.

- தாட்கோ நிறுவனத்திற்கு பங்கு மூலதனம் ரூ.33.15 கோடி.

- தாட்கோவால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய திரைப்பட முன்னேற்றக் கழகத்தில் திரைப்படத் தொழில் பயிற்சி முடித்த 43 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

- சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் அனுமதிக்கப்பட்ட ஆதிதிராவிட / பழங்குடியின / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு “சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு” நிர்ணயித்த கற்பிப்புக் கட்டணம் உட்பட கட்டாயக் கல்வி கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப் படி அனைத்தையும் அரசே ஏற்பு. ரூ.2,589.17 கோடி வழங்கப்பட்டு 28,21,770 மாணவ / மாணவியர்கள் பயன்.

- 12ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தனித்தனியே முதல் பரிசாக ரூ.6,000/, இரண்டாம் பரிசாக ரூ.4,000/–, மூன்றாம் பரிசாக ரூ.2,000/– வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.3,000/, ரூ.2,000/– மற்றும் ரூ.1,000/– ஆக உயர்வு. வழங்கப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.32.57 இலட்சம். 1,598 மாணவ, மாணவியர்கள் பயன்.

- முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் பரிசுத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.3,000/– ஆக உயர்வு. இதுவரை, வழங்கப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.296.88 இலட்சம். பயனடைந்தோரின் எண்ணிக்கை 11,046.

- அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகைத் திட்டத்தின் கீழ், 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் ஓர் ஆதிதிராவிட மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை முதல் ஆண்டிற்கு ரூ.2,000/– ஆகவும், அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ரூ.1,500/– ஆகவும் உயர்வு. வழங்கப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.10.26 இலட்சம். பயன்பெற்றோர் எண்ணிக்கை 559 ஆகும்.

- உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ், கல்லூரி விடுதிகளில் தங்கி இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் பல்தொழில்நுட்ப படிப்பு பயில்வோருக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.7,500/– ஆகவும், முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் படிப்பு பயில்வோருக்கு ரூ.8,000/– ஆகவும் உயர்வு. ரூ.7,949.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் இதுவரை 1,14,682 மாணவ, மாணவியர்கள் பயன்.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில், 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி அளிக்கும் தலைமையாசிரியர்களுக்கு ரூ.10,000/–, 100 விழுக்காடு தேர்ச்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு ரூ.5,000/– ஊக்கப் பரிசு.

- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு கூடுதலாக 1,500 இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், இடைநிற்றலைத் தவிர்த்து தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்க 5 ஆண்டுகளில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.128.83 கோடி ஆகும். இத்திட்டத்தில் 16,32,174 பெண்கள் கல்வி பயின்று பயன்.

- ரூ.25 கோடி ஒதுக்கீட்டில், சுமார் 25 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன் வளர் பயிற்சிகள், தொழில் முனைவோர், வேலை வாய்ப்புகள் தொடர்பான பயிற்சிகள். பயனடைந்த தொழில் முனைவோரின் எண்ணிக்கை 11,734.

- “ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு” ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு.



- தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 93 ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளுக்குச் சொந்த கட்டடங்கள் ரூ.56.04 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

- 1,080 மாணவ–மாணவியர் விடுதிகளில் இன்றியமையா கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.83.40 கோடி நிதி ஒதுக்கீடு.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையினைக் கடைப்பிடிக்காத கிராமம் ஒன்றுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த அளிக்கப்படும் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு.

- கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ.5.28 கோடி செலவில் 6,245 இரண்டடுக்கு கட்டில்கள் வழங்க ஆணை.

- மத்திய அரசின் UPSC முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு பயிற்சிக்காக வழங்கப்படும் தொகை ரூ.50,000/– ஆக உயர்வு. 76 மாணவ, மாணவியர் பயன்.

- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த 10 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடரல்லாத ஒரு எழுத்தாளருக்கு சிறந்த படைப்புகளுக்கான பரிசுத்தொகை ரூ.40,000/– என உயர்வு. இதுவரை 22 படைப்பாளிகள் பயனடைந்துள்ளனர். ரூ.4,40,000/– வழங்கப்பட்டுள்ளது.

- புதிதாக 54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளது.

- ரூ.146 இலட்சம் செலவில், 582 விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் சுகாதார நலனைப் பாதுகாக்க சுகாதாரக் குட்டை தகளி (Napkin Burner). பயன்பெற்ற மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 43,258 ஆகும்.

- ரூ.80.80 இலட்சம் செலவில் சமையல் பொருட்களைச் சரியான அளவில் விநியோகிக்க 1,616 விடுதிகளுக்கு எடை இயந்திரங்கள்.

- ரூ.30 கோடி செலவில் 200 ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளை புதுப்பிக்கும் / பழுதுபார்க்கும் பணிகள்.

- ஆதிதிராவிடர் நலனுக்காக ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் கீழ், ரூ.39,434 கோடி ஒதுக்கீடு. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.2,178.09 கோடி ஒதுக்கீடு.

- 2014–2015ஆம் ஆண்டில் அனைத்து கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்கு ரூ.1,675.51 கோடி ஒதுக்கீடு.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வித் திட்டங்களுக்கான பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சமாக உயர்வு.

- முனைவர் பட்டம் மேற்கொள்ளும் 700 மாணாக்கர்களுக்கு வருடத்திற்கு ரூ.50,000/– நிதியுதவி. வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.6.86 கோடி. பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,372.

- ரூ.2.88 கோடியில் 76 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள்.

- ரூ.5.50 கோடியில் 100 மேல்நிலை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு நவீன வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைத்தல்.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி I முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு ரூ.50,000/– நிதி உதவி. இதுவரை பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 32. செலவிடப்பட்ட தொகை ரூ.16 இலட்சம்.

- பட்டயக் கணக்கர்கள் (Chartered Accountants) / செலவுக் கணக்கர்கள் (Indian Cost and Works Accountants) ஆகியோருக்கு புதிதாக தொழில் தொடங்கிட ரூ.50,000/– நிதி உதவி.

- மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 8,406 ஆதிதிராவிடர் பெண்களுக்கு நவீன தையல் இயந்திரம் மானியத்துடன் கூடிய விளிம்புக் கடனுதவி. 3,219 பயனாளிகளுக்கு ரூ.447.44 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு முதலாம் ஆண்டு பரிசுத்தொகை ரூ.1,600/– ஆகவும், தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகை ரூ.2,000/– ஆகவும் உயர்வு.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சி.
- 70 விடுதிகளுக்கு, தலா ரூ.5 இலட்சம் விலையில் மொத்தம் ரூ.3.50 கோடி செலவில் 70 உணவு சமைக்க உதவும் நீராவி கொதிகலன்கள்.
- ரூ.1 கோடி செலவில் 50 பழங்குடியின மாணாக்கர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு IIT மற்றும் NIT போன்ற உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில சிறப்புப் பயிற்சி.
- ரூ.7.50 கோடி மதிப்பில் 100 பயனாளிகளுக்கு தாட்கோ மூலம் நில மேம்பாட்டுத் திட்டத்திற்காக வழங்கப்படும் நிதியுதவியை அனைவரும் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்துதல்.
- 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியரை ஊக்கப்படுத்த மாநில அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியருக்கு முதல் பரிசு ரூ.50,000/– இரண்டாம் பரிசு ரூ.30,000/– மூன்றாம் பரிசு ரூ.20,000/– வழங்கப்படுகிறது. ரூ.61.07 இலட்சம் செலவில் 530 மாணவ / மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.
- தாட்கோ மூலம் 6,553 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள 78,639 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.264.46 கோடி பொருளாதாரக் கடனுதவி, இதில் ரூ.179.29 கோடி மானியம்.
- ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இரு தொழில் நுட்பக் கல்லூரிகள்.
- திருவள்ளூர் மாவட்டம், வடகரை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் (ITI) ரூ.10 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.1.10 கோடி செலவில் 1,367 நீராவி இட்லி குக்கர்கள் வழங்க ஆணை.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள்மற்றும்உண்டிஉறைவிடப்பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் ரூ.4.71 கோடி செலவில் உறையுடன் கூடிய தலையணை வழங்க ஆணை.
- மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் ரூ.2 கோடி செலவில் தலா ஒரு மழைக் கோட்டும், குளிர்காலங்களில் மாணவ, மாணவியரின் உடல்நலத்தைப் பாதுகாக்கும் வகையில் அனைவருக்கும் ரூ.1.08 கோடி செலவில் தலா ஒரு கம்பளிச் சட்டை.
- ரூ.2.13 கோடி செலவில் 2014–2015ஆம் கல்வி ஆண்டில், 10 கல்லூரி விடுதிகள் துவங்க ஆணை.
- விடுதிகள் மற்றும் பள்ளிகளில் அவசர மற்றும் உடனடியாக சிறு, சிறு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 1,647 விடுதி காப்பாளர்களுக்கும் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வீதம் ரூ.2.47 கோடியும், அதேபோன்று 1,096 ஆதிதிராவிடர் நல பள்ளிகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு பள்ளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் ரூ.1.10 கோடியும் வழங்க ஆணை.
- B.Ed., படித்த 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற ஏதுவாக ரூ.66 இலட்சம் செலவில் பயிற்சி நிறுவனம் மூலம் சிறப்பு பயிற்சி. ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் (D.T.Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed., பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்ய ரூ.55 இலட்சம் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக சிறப்புப் பயிற்சி.





- ரூ.1.14 கோடி செலவில் 207 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரணர், சாரணியர் இயக்கம்.
- ரூ.73 இலட்சம் செலவில் மலைப் பகுதிகளில் இயங்கி வரும் 216 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று வரும் 13,154 மாணவ / மாணவியருக்கு சூரிய எரிசக்தியுடன் கூடிய விளக்குகள் (Solar lamps) வழங்க ஆணை.
- ரூ.52 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக்கு ரூ.25,000/– வீதம், 207 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு கல்வி சுற்றுலா மேற்கொள்ள ஏற்பாடு.
- தொழிற்கல்வி பயிற்றுவிக்கும் பொறியியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படித்து தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ, மாணவியர் IIM போன்ற மைய கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க பொது நுழைவுத் தேர்வில் (CAT-இல்) தேர்ச்சி பெற ரூ.50 இலட்சம் செலவில் ஒரு மாணவருக்கு ரூ.50,000/– வீதம் 100 பொறியியல் பட்டதாரிகளுக்கு ஆயத்த பயிற்சி.
- ரூ.49.16 இலட்சம் செலவில் சிறு, சிறு விபத்துகளுக்கு முதலுதவி அளிக்க 1,346 விடுதிகளுக்கும் 100 அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகள்.
- ரூ.26 இலட்சம் செலவில் 207 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையே மாவட்ட / மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.
- மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்க ரூ.16.80 இலட்சம் செலவில் 1,397 பள்ளிகளில் உள்ள 414 ஆசிரியர்களுக்கு யோகா பயிற்சி.
- மனித நேய வார விழா நடத்துவதற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50,000/– மாநில அளவில் விழாவினை நடத்துவதற்கு ரூ.1 இலட்சம் என உயர்வு.
- ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் சமபந்தி விருந்தினை அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் தவிர) மேம்படுத்தி செயல்படுத்த அதற்கான தொகை ரூ.2,500/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (தொகுதி–1) முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி.
- 2015–2016ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான

கல்வி கட்டணங்களுக்கு ரூ.663.53 கோடி ஒதுக்கீடு. அரசு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.1,954.83 கோடி.

- 460 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலவிடுதிகளுக்கு ரூ.21.02 கோடி செலவில் நீராவி கொதிகலன்கள் வாங்கி வழங்க ஆணை.
- ரூ.1.46 கோடி செலவில் 1,314 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்க ஆணை.
- ரூ.4.40 கோடி செலவில் பணிபுரியும் மகளிருக்கு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் விடுதிகள் துவங்க ஆணை.
- 2015–2016ஆம் நிதியாண்டில், ரூ.4.94 கோடி செலவில் 5 ஆதிதிராவிடர் நல / பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 15 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்த ஆணை.
- ரூ.8.59 கோடி செலவில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள முத்தரை பாலாடா பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ஒரு மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியினைத் தோற்றுவிக்க ஆணை.
- ரூ.1.31 கோடி செலவில் 26 பழங்குடியினர் நல உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத் திறன் வகுப்பறை (Smart class Rooms)கள் அமைக்க ஆணை.
- ரூ.1.65 கோடி செலவில் 10 புதிய கல்லூரி விடுதிகள் தோற்றுவிக்க ஆணை.
- 2015–2016ஆம் நிதியாண்டில், ரூ.96 இலட்சம் செலவில், எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்க ஆணை.
- ரூ.91 இலட்சம் செலவில் 42 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 306 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்கள் உணவருந்துவதற்கு துருப்பிடிக்காத ஸ்டீல் தட்டுகள் மற்றும் குவளைகள் வழங்க ஆணை. தரைப் பகுதிகளில் இயங்கும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு மழை மேல்அங்கிகள் வழங்கவும், 206 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டிகளும் வழங்கிட ஆணை.
- ரூ.38.25 இலட்சம் செலவில் அனைத்து ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகள் வழங்க அறிவிப்பு.
- ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளில் தலா ஒரு சிறந்த பள்ளியினைத் தேர்வு செய்து அப்பள்ளியின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட பள்ளி ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் வீதம் 2 பள்ளிகளுக்கு வழங்க ஆணை.
- ஆதிதிராவிட / பழங்குடியின விடுதிகளில் தங்கியுள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு மாத உணவுப்படி ரூ.755 ஆகவும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.875 ஆகவும் உயர்வு. பள்ளி மாணவ, மாணவியரின் மொத்த மாத உணவுப்படி ரூ.6.39 கோடி. கல்லூரி மாணவ, மாணவியரின் மொத்த மாத உணவுப்படி ரூ.1.11 கோடி. இதன்மூலம் 97,239 மாணவ, மாணவியர்கள் பயன்.
- சோப்பு, எண்ணெய் செலவினங்களுக்கான பள்ளி விடுதி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.50 ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.75 ஆகவும் உயர்வு. இதுவரை பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.5.07 கோடி பயனடைந்தோர் எண்ணிக்கை 84,592. கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.1,14 கோடி பயனடைந்தோர் எண்ணிக்கை 12,647 நபர்கள் பயன்.
- ரூ.5 இலட்சம் செலவில் வன்கொடுமை தடுப்பு மற்றும் ரூ.3 இலட்சம் மதிப்பில் கொத்தடிமை தொழிலாளர் தொடர்பான விவரங்களை இணையதளம் மூலம் இணைத்திடவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் கைப்பேசி இணைப்பு (CUG Connection) ரூ.1.66 இலட்சம் செலவில் வழங்கிட ஆணை.

❖ ❖ ❖

# விருதுகளும் பரிசுகளும் பெற்று வியத்தகு சாதனைகள் படைத்த வேளாண்துறை



- வரலாற்றிலேயே முதன்முறையாக 2011ஆம் வருடம் ஜூன் மாதம் 6ஆம் தேதியே பாசனத்திற்காக மேட்டூர் அணை திறப்பு. இதனால் டெல்டா நெல் சாகுபடி பரப்பு 1,80,000 ஏக்கர் அதிகரிப்பு. 1,22,230 விவசாயிகள் பயன்.
- உரங்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு 4 சதவிகித மதிப்பு கூட்டப்பட்ட வரி விலக்கு. 63.40 இலட்சம் விவசாயிகள் பயன்.
- விவசாயிகளுக்கு டிஏபி உரம் தட்டுப்பாடின்றி கிடைத்திட டான்பெட் நிறுவனத்திற்கு ரூ.580 கோடி வட்டியில்லா முன்பணம் மற்றும் கடன் உதவி.
- வேளாண் துறைக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.23,655.5 கோடி.
- நுண்ணீர்ப் பாசனத்திற்கு சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியம். இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியம். நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 1,65,802. அரசு மானியம் ரூ.799.3590 கோடி.
- நுண்ணீர்ப் பாசன மானியத்திற்கு சிறு/குறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் என்ற உச்ச வரம்பு நீக்கம்.
- கரும்புக்கான மாநில பரிந்துரை விலை ஒரு டன்னுக்கு ரூ.2,850/– ஆக உயர்வு. 781.50 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்து மொத்த தொகை ரூ.16,994.49 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த பயறு சாகுபடித் திட்டத்தின் கீழ் 8,289 கிராமங்களில் 12.446 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி.
- வட்டார அளவில் வேளாண்துறை உதவி இயக்குநர்களுக்கு ரூ.23.68 கோடி செலவில் 379 புதிய வாகனங்கள். மேலும், 2014–2015ஆம் ஆண்டில் 124 புதிய வாகனங்கள்.
- 2011–2012ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் 101.52 இலட்சம் மெ.டன் உற்பத்தி சாதனைக்காகவும் 2013–2014ஆம் ஆண்டில் 6.14 இலட்சம் மெ.டன் பயறு உற்பத்தி சாதனைக்காகவும் மத்திய அரசால் தமிழக அரசுக்கு ‘கிரிஷிகர்மான் விருதுகள்’,

2014–2015ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் 127.96 இலட்சம் மெ.டன் உற்பத்தி சாதனை. (4ம் மதிப்பீடு)

- திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி 2012ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 8,272 கிலோ நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்த மதுரை மாவட்ட விவசாயி திரு. பி.சோலைமலை அவர்களுக்கும், 2013ஆம் ஆண்டில் 6,110 கிலோ நெல் உற்பத்தி செய்த ஈரோடு மாவட்ட விவசாயி திரு. என்.பரமேஸ்வரன் அவர்களுக்கும் மற்றும் 2014ஆம் ஆண்டில் 6,130 கிலோ நெல் உற்பத்தி செய்த ஈரோடு மாவட்ட விவசாயி திரு. கே.பி.துரைசாமி அவர்களுக்கும் தலா ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பதக்கம்.
- "அட்மா" திட்டத்தின் கீழ் 1,322 விரிவாக்க அலுவலர்கள் மற்றும் 8,180 உழவர் நண்பர்கள் நியமனம்.
- ரூ.68.417 கோடி நிதி செலவில் 3,04,727 ஏக்கர் பரப்பளவில் நடவுமுறையில் துவரை சாகுபடி தொழில்நுட்பம் 26 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ரூ.78.33 கோடி செலவில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழாக்கள் 80.86 இலட்சம் விவசாயிகள் பங்கேற்றுப் பயன். 18.35 இலட்சம் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு 11.21 இலட்சம் "விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடுகள் விநியோகம்".
- உழவர் பெருவிழாவில் ரூ.42.78 கோடியில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் விநியோகம்.
- 2012–2013ஆம் ஆண்டில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திடவும், உற்பத்தியினை அதிகரிக்கவும் ரூ.46.71 கோடி செலவில் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட சிறப்பு சம்பா தொகுப்புத் திட்டம். மேலும், மேட்டூர் அணையிலிருந்து நீர்வரத்து குறைவானதால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து சம்பா பயிரினைக் காப்பாற்றிட ரூ.27.25 கோடி செலவில் கூடுதல் தொகுப்புத் திட்டம். மேலும், டீசல் மானியம் 12.43 கோடி செலவில் வழங்கப்பட்டது.
- 2012–2013ஆம் ஆண்டு மழையின்மை காரணமாக ஏற்பட்ட பாதிப்பிலிருந்து டெல்டா விவசாயிகளைக் காத்திட 5.32 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.27.67 கோடி செலவில் காப்பீடு நிறுவனத்திற்கு முழு பிரீமியத் தொகை அரசே செலுத்தியது. இதனால் விவசாயிகளுக்கு கிடைத்தநெல் சம்பா/ தாளடி பயிருக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.740.80 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.
- 2013–2014ஆம் ஆண்டில் டெல்டா மாவட்டங்களில் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியினை உறுதி செய்திட தடையில்லா மின்சாரம் மற்றும் ரூ.4.83 கோடி மதிப்பிலான இடுபொருள்கள் விநியோகம் (உயிர் உரங்கள், தாவர பூச்சிக்கொல்லி மருந்து, நுண்ணூட்டச்சத்து மற்றும் ஜிப்சம்). மேலும், குறுவை நெற்பயிர்களைக் காத்திட ரூ.9.26 கோடி மதிப்பிலான 6,000 எச்.டி.பி.இ. பைப்புகள்.
- டெல்டா மாவட்டங்களில் 2014ஆம் ஆண்டில் குறுவை சாகுபடி விவசாயிகள் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்க ரூ.11.14 கோடி செலவில் இடுபொருட்கள் விநியோகம் (நுண்ணூட்டக் கலவை, துத்தநாக சல்பேட், உயிர் உரங்கள், ஜிப்சம்) குறுவை சாகுபடியினை நிலை நிறுத்திட ரூ.18.25 கோடி மதிப்பிலான நடவு இயந்திரம், விசை களையெடுக்கும் கருவி மற்றும் எச்.டி.பி.இ. குழாய்கள் விநியோகம்.
- 2015ஆம் ஆண்டில் டெல்டா மாவட்டங்களில் ரூ.29.80 கோடி செலவில் குறுவை சிறப்பு தொகுப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இயந்திரங்கள் மூலம் நெல் நடவுப்பணி, உற்பத்தி பெருக்க இடுபொருள்களை (நெல் நுண்ணூட்டச் சத்து மற்றும் உயிர் உரங்கள்) பயன்படுத்தியதற்காக மானியம் வழங்குதல், இலவச ஜிப்சம் விநியோகம் மற்றும் வெண்ணார் பகுதியில் உழவு மானியமும் பசுந்தாள் உர பயிர் அல்லது பயறு வகைகள் விதைகள் முழு மானியத்தில் விநியோகிக்கப்பட்டது. இதனால் டெல்டா மாவட்டங்களில் 3.05 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- மண்வளமறிந்து உரமிட 67.45 இலட்சம் விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடுகள் விநியோகம்.
- 3.53 இலட்சம் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு 2012–2013ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணமாக ரூ.524.26 கோடியும், டெல்டா அல்லாத பிற



மாவட்ட விவசாயிகள் 19.27 இலட்சம் பேருக்கு ரூ.800.79 கோடியும் வழங்கப்பட்டது.

- ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க சேவைக்கு ரூ.14.97 கோடி ஒதுக்கீட்டில் 10 மாவட்டங்களில் உழவர் மையங்கள்.
- 100 வட்டாரங்களில் ரூ.150 கோடி ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்.
- விவசாயிகளுக்கு வேளாண் தகவல்களை விரைந்து அனுப்பும் திட்டமாக, அனைத்து மாவட்டங்களிலுள்ள களப்பணியாளர்களுக்கும் GPRS, GIS மற்றும் GPS வசதிகளுடன் கூடிய 2,319 கையடக்கக் கருவிகள் வழங்கப்பட்டன.
- வானிலை, இடுபொருள்கள் இருப்பு விவரம், பண்ணை அளவிலான உத்திகள், சந்தைப்படுத்துதல் மற்றும் திட்டப் பயன்கள் ஆகியவற்றை அறிந்து, உற்பத்தியிலுள்ள இடைவெளியைக் குறைக்கும் நோக்குடன், வட்டார அளவில் 125 இடங்களில், திருச்சி (26), ஈரோடு (36), திருவாரூர் (42) மற்றும் கோயம்புத்தூர் (21) மாவட்டங்களில் தொடுதிரை கணினி மூலம் "பயிர் மருத்துவர்" மென்பொருளைப் பயன்படுத்தி விவசாயிகள் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அறிந்துகொள்ளும் வசதி.
- ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் பாரம்பரிய வேளாண்மைப் பொருட்களான சிகைக்காய், பருத்தி, இளநீர் ஆகியவற்றின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்ச்சி.
- மாநில முழுவதும் தரமான சான்று பெற்ற விதைகள் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் ரூ.25 கோடி சுழல்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை மூலம் "அம்மா சீட்ஸ்" வட்டார அளவில் அம்மா சேவை மைய விற்பனை வாயில்கள் வழியாக விநியோகிக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய 56 வட்டாரங்களின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 150 கிராமங்களில் சுற்று சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மாதிரி கிராமங்கள் ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக பண்ணை மகளிரின் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த 550 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- பத்து மாதிரி அங்கக கிராமங்கள் மாவட்டத்திற்கு தலா ஒரு கிராமம் வீதம் வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, சேலம், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பத்து மாவட்டங்களில் ரூ.1 கோடி நிதி செலவினத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.41.17 இலட்சம் செலவினத்தில் தமிழகத்தில் செயல்பட்டுவரும் 4 தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள் மூலம் (மாதவரம், குடுமியான்மலை – புதுக்கோட்டை, ஊட்டி மற்றும் தளி) தோட்டக்கலையில் உயர்தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி 17,800 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.
- நகர்ப்புற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.5 கோடி செலவில் சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் "நீங்களே செய்து பாருங்கள்" சிறுதளைகள் மூலம் வீட்டு மாடிகளில் காய்கறி சாகுபடி செய்தல் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2015–2016ஆம் ஆண்டில் இத்திட்டம் மதுரை மற்றும் திருச்சி மாநகரங்களில் ரூ.537 இலட்சம் நிதிச் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ரூ.10.36 கோடி செலவில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் பயனடையும் வகையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2.60 இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூ.170.17 கோடி நிதியில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.
- 27,851 ஏக்கர் பரப்பளவில் ரூ.46.07 கோடி செலவில் தோட்டக்கலைப் பயிர்கள் துல்லிய பண்ணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- தோட்டக்கலைப் பயிர்களில் பந்தல் சாகுபடி முறை 2,900 ஏக்கர் பரப்பில் ரூ.20.536 இலட்சம் நிதியில் ஊக்குவிக்கப்பட்டது.
- ரூ.6 கோடி செலவில் தமிழகத்தில் 10 மாவட்டங்களில் தோட்டக்கலைத் தகவல்

மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.2 கோடி செலவில் தோட்டக்கலைத் துறையில் ஆரம்பம் முதல் இறுதிவரை கணினிமயமாக்கல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.51 கோடி செலவில் சென்னை, கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் "பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம்" செயல்படுத்தப்பட்டது.
- மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பிரீமியம் மானியமாக ரூ.30.44 இலட்சம் செலவில், 20,767 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் 8,811 விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.
- தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பிரீமியம் மானியமாக ரூ.1,466.44 இலட்சம் செலவில் 1.99 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் 76,936 விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.
- வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பிரீமியம் மானியமாக ரூ.41.29 இலட்சம் செலவில், 16,364 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் 4,202 விவசாயிகள் பயிர் காப்பீடு.
- திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ரூ.5.73 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா 15.10.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.
- கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா ஆகியவை ரூ.1.13 கோடி செலவில் சீரமைத்து 15.10.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.
- சேலம் மாவட்டம் ஏற்காட்டில் ரூ.7.45 கோடி செலவில் அரசு தாவரவியல் பூங்காவும், ரூ.8.564 கோடி செலவில் ஐந்திணை மரபணுப் பூங்காவும் உருவாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்டம் அச்சடிப்பிரம்பில் ஐந்திணை மரபணுப் பூங்கா (4 எக்டேர்) ரூ.8.16 கோடியில் உருவாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டாவில் ஒரு தேயிலை பூங்கா (4 எக்டேர்) ரூ.79.90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 16.06.2015 அன்று திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.
- நீலகிரி மாவட்டம், தேவாலாவில் ஒரு வண்ணத்துப்பூச்சி தோட்டம் ரூ. 20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 16.06.2015 அன்று திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.
- ரூ.3.80 கோடியில் கொடைக்கானலில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் மாதிரி செயல்முறைப் பண்ணை (4.40 எக்டேர்) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- கன்னியாகுமரியில் ரூ.4 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா (6 எக்டேர்) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ரூ.3.40 கோடி செலவில் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ரூ.8.80 கோடியில் கொய்மலர்களுக்கான மகத்துவ மையமும், திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் ரூ.10.18 கோடியில் காய்கறிகளுக்கான மகத்துவ மையமும் அமைத்திட தேவையான உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், வல்லத்திரக்கோட்டை ரூ.392.43 இலட்சம் செலவிலும், முள்ளுவாடி ரூ.128.32 இலட்சம் செலவிலும், ஆடுதுறை ரூ.51.49 இலட்சம் செலவிலும் மற்றும் விச்சந்தாங்கள் ரூ.124.13 இலட்சம் செலவிலும் மேம்படுத்திட தேவையான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் ரூ.204.25 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.



- ரூ.10 கோடி நிதிச்செலவில் ஈரோடு, தூத்துக்குடி, பெரம்பலூர், திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களில் புதியதாக அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது.
- சென்னை, மாதவரம் அரசு தோட்டக்கலைப் பண்ணை ரூ.573 இலட்சம் செலவில் அலங்கார மற்றும் செயல்விளக்க தோட்டம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை மாதவரம் தோட்டக்கலை பயிற்சி மையத்தினை தோட்டக்கலை மேலாண்மை நிறுவனமாக தரம் உயர்த்தும்பணி ரூ.353 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.
- 1124.57 இலட்சம் இனத் தூய்மையான நடவுச் செடிகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.
- ரூ.9.006 கோடி செலவில் தமிழகத்தில் உள்ள 5 அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனப்படுத்திடவும், பண்ணை விளை நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- ரூ.165 இலட்சம் செலவில் கடலூர் மாவட்டம் நெய்வேலி அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் ரூ.145 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அரசு தோட்டக்கலைப் பண்ணை முழுமையாக நவீன மயமாக்குதல் மற்றும் பண்ணையின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆரம்ப கட்டப் பணிகள்.
- ரூ.192 இலட்சம் செலவில் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் இயந்திரமயமாக்கல் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- ரூ.10 கோடி செலவில் 5 மாவட்டங்களில் புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.345.79 கோடி மதிப்பில் 2,01,640 ஏக்கரில் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டது. ரூ.5 இலட்சம் செலவில் தேனியில் தேசிய அளவிலான வாழைக் கருத்தரங்கு.
- தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் கீழ், குளிர் காய்கறி பயிர்கள் மகத்துவ மையம் ஊட்டி மாவட்டம் நஞ்சநாடு அரசு தோட்டக்கலைப் பண்ணையிலும், பழங்கள் மகத்துவ மையம் திருச்சி மாவட்டத்திலும் ரூ.11 கோடி செலவினத்தில் அமைத்திட நடவடிக்கை.
- வனமல்லாத பகுதிகளில் மூங்கில் சாகுபடி 1,025 ஏக்கர் பரப்பில் ரூ.86.82 இலட்சம் செலவில் தேசிய மூங்கில் இயக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தேசிய மருத்துவப் பயிர்கள் இயக்கத்தின் மூலம் 51,770 ஏக்கர் பரப்பளவில் ரூ.39.42 கோடி செலவில் மருத்துவ பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தானே புயலில் பாதிக்கப்பட்ட 21,696 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி மறுநடவு ரூ.13.82 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.
- தானே புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ.12.35 கோடியில் ஆண்டுப்பயிர்கள் மறுசாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- பகுதி 2 திட்டத்தின் கீழ் மாவட்ட தோட்டக்கலை விரிவாக்க மற்றும் பயிற்சி மையம் தருமபுரி மாவட்டத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.12.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- பகுதி 2 திட்டத்தின் கீழ், மாவட்ட தோட்டக்கலை விரிவாக்க மற்றும் பயிற்சி மையம் ஈரோடு மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.12.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- வடகிழக்குப் பருவ மழை 2015யினால் 35,471.40 எக்டேர் பரப்பளவில் சேதம் அடைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.4,604.70 இலட்சம் நிவாரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 12,653.28 எக்டேர் பரப்பளவிற்கு ரூ.1,713.46 இலட்சம் மற்றும் இரண்டாம் கட்டமாக 22,818.12 எக்டேர் பரப்பளவிற்கு ரூ.2,891.24 இலட்சம் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப்பயிர் சாகுபடி செய்யும்

விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- 2015ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையினால் சேதமடைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கான நிவாரணம் சுமார் 96,478 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூ.1இலட்சத்திலிருந்து ரூ.2இலட்சமாக உயர்வு. வழங்கப்பட்ட பொருளீட்டுக் கடன் ரூ.148 கோடி. பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 12,094.
- ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.150.56 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 88 நவீனக் கிடங்குகள் மற்றும் 70 குளிர்பதனக் கிடங்குகள்.
- உபவடிநிலப்பகுதி விவசாயிகளின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ரூ.39.07 கோடி செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள்.
- விவசாயிகளுக்குப் பயிர் மற்றும் சந்தை சார்ந்த விவரங்களை வழங்குவதற்காகத் திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் ரூ.1.17 கோடி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டது. இதன்படி பயிர் மற்றும் சந்தை சார்ந்த குறுஞ்செய்தி 22.50 இலட்சம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.
- தமிழகத்தில் உணவு பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் கீழ் பல்வேறு உணவு பதப்படுத்தும் திட்டங்களுக்கு ரூ.9.62 கோடி நிதியுதவி.
- கிராமங்களின் அடிப்படை சந்தைக் கட்டமைப்பான ஊரகச் சந்தைகளில் 10 சந்தைகள் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.40 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- தனியார் தொழில் முனைவோர் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட, மாநில நிதித் திட்டத்தின்கீழ், ரூ.2.20 கோடி செலவில் ஸ்ரீரங்கம் மற்றும் கிணத்துக்கடவு பகுதியில் உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையம் மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பரிவர்த்தனைக்கூடம், வாழை பழுக்க வைக்கும் கூடம், மிளகாய்க்கென ஒருங்கிணைந்த விற்பனை வளாகம், சேமிப்புக் கிட்டங்கி, காய்கறி மற்றும் பழங்களுக்கென குளிர்பதனக் கிட்டங்கி, நறுமணப் பொருட்களுக்கான வணிக வளாகம் ஆகிய சந்தை உட்கட்டமைப்புகள் ரூ.83.71 கோடி செலவில் பல்வேறு மாவட்டங்களில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் விற்பனைக் குழு நிதியில் உருவாக்கம்.
- வேளாண் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயினை உயர்த்திட, 28 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.12.26 கோடி ஒதுக்கீடு.
- புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விற்பனைக்குழு நிதியில் உருவாக்கிடவும், கட்டிடவும் மாநில அரசால் ரூ.13.38 கோடி ஒப்பளிப்பு.
- வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 1,69,414 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.20.193 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் 1,412 செயல் விளக்கங்கள் ரூ.56.01 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன. வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பராமரித்து கையாள விவசாயிகளுக்கு 240 பயிற்சிகள் ரூ.66.95 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளன. 534 கிராமப்புற இளைஞர்களுக்குப் பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமான 6 மாதப் பயிற்சிகள் ரூ.68.66 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டன.
- நதிப்பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகள், மலைப்பகுதிகள், பழங்குடியினர் வாழும் பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் மண் அரிப்பினைத் தடுத்து வேளாண் நிலங்களைப் பாதுகாக்கவும், மண்ணின் ஈரப்பதத்தினை தக்கவைப்பதன் மூலம் மண்வளத்தைக் காத்து வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் நடவடிக்கை. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் ரூ.89.66 கோடி செலவில் 1,35,177.5 ஏக்கர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 9,310 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் திட்டத்தின் கீழ், 10 மாவட்ட பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் 1.79 இலட்சம் ஏக்கர் பரப்பில் ரூ.181.16 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், பயிர்வளர்ச்சியின் முக்கிய காலகட்டத்தில் பாசனம் செய்வதற்கும், மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் 1,465 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.34.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், 87,435 ஏக்கர் பரப்பில் நுண்ணீர் பாசனப் பணிகள், 1,006 பண்ணைக் குட்டைகள், 858 நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் மற்றும் பாசனப் பகுதிகளில் குழாய் மூலம் பாசன வசதிகள் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.138.03 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- விவசாயிகள் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நில மேம்பாட்டுக் கருவிகள் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ், டிராக்டர்கள் மூலம் 7,22,490 மணி நேரம் உழவுப் பணிகள், புல்டோசர்கள் மூலம் 3,52,246 மணி நேரம் நில மேம்பாட்டுப் பணிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் மூலம் 65,695 மணி நேரம் அறுவடைப் பணிகள் மற்றும் நெல் நாற்று நடவு செய்யும் கருவி மூலம் 2,577 மணி நேரம் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், வெங்காயம் அதிகம் சாகுபடி செய்யப்படும் 12 மாவட்டங்களில் மொத்தம் ரூ.10 இலட்சம் செலவில் 2 மெட்ரிக் டன் முதல் 20 மெட்ரிக் டன் வரையிலான பல்வேறு கொள்ளளவுடன் மொத்தமாக 250 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள, வெங்காய சேமிப்பு கட்டமைப்புகள், விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் அமைக்கப்பட்டன.
- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மிளகாய் அதிகம் சாகுபடி செய்யப்படும் சிவகங்கை, திருநெல்வேலி, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் ரூ.39.64 இலட்சம் செலவில் மொத்தம் 20 கூடார சூரிய சக்தி மிளகாய் உலர்த்திகள் அமைக்கப்பட்டன.
- 1,495 எண்கள் 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட்டுகளை (4,800 Wp திறனுடையதும் தானியங்கி சாய்மான வசதியுடன் கூடியதும்) அமைக்க விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 50 விழுக்காடு மானியத் தொகையான ரூ.50 கோடி தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழும், 30 விழுக்காடு மானியத்தொகையான ரூ.30 கோடி மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் கீழும் மொத்தம் ரூ.4,262.78 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- 488 எண்கள் 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட்டுகளை தானியங்கி சாய்மான வசதி இல்லாதது) அமைக்க விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 50 விழுக்காடு மானியத் தொகையான ரூ.50 கோடி தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழும், 30 விழுக்காடு மானியத் தொகையான ரூ.30 கோடி மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் கீழும் மொத்தம் ரூ.278.60 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- வேளாண் பொருட்களை உலர வைத்து அதிக சந்தை விலைக்கு விற்பனை செய்து அதிக வருமானம் பெறும் வகையில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் குழுக்களுக்கு ரூ.52.62 இலட்சம் செலவில் 32 சூரிய கூடார உலர்த்தி அமைப்புகள் 50 விழுக்காடு மானியத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
- 6.74 இலட்சம் ஏக்கர் பதிவு பரப்பிற்கு 5.79 இலட்சம் ஏக்கர் பரப்பு விதைச் சான்றளிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 5,02776 மெ.டன் இலக்கிற்கு 4,36,154 மெ.டன் விதைகளுக்குச் சான்றளிப்பு.

- விதை சான்றளிப்புத் திட்டத்தின் சாதனையாக 1,02,382 மெ.டன் அளவு பல்வேறு பயிர்களின் சான்று விதை உற்பத்தி.
- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், விதைச்சான்று, விதை தரக்கட்டுப்பாடு மற்றும் டி.என்.ஏ. மரபணு பரிசோதனை நிலையம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.27.82 இலட்சம் ஒப்பளிப்பு.
- விதை விற்பனை நிலைய ஆய்வுகளில் 3,21,830 எண்கள் இலக்கிற்கு, 3,20,081 எண்கள் விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதை மாதிரிகள் எடுத்தலில் 3,16,830 எண்கள் இலக்கிற்கு 2,82,772 எண்கள் விதை மாதிரிகள் தரப் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளன.
- ரூ.41.32 கோடி மதிப்பிலான 7,684 மெ.டன் அளவுள்ள 7,130 விதைக் குவியல்கள், தரக்குறைவானவை எனக் கண்டறியப்பட்டு விற்பனை தடை செய்யப்பட்டது. விதை சட்ட மீறல்களுக்காக 1,619 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டு, 1,262 வழக்குகளில் அரசுக்கு சாதகமாக தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.
- விதைப் பரிசோதனைத் திட்டத்தில் 4,22,370 எண்கள் இலக்கிற்கு, 4,35,798 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிப்பு.
- அனைத்து விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் ரூ.21.58 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட கணினி வசதிகள்.
- ஏழு விதைப் பரிசோதனை நிலையங்கள், மரபணு பரிசோதனை நிலையம் மற்றும் பி.டி. நஞ்சு பரிசோதனை நிலையம் ஆகியவற்றிற்கு ரூ.90.95 இலட்சம் மதிப்பில் புதிய, மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள்.
- ரூ.26 இலட்சம் செலவில் கோவை கண்ணம்பாளையத்தில் உள்ள இனத் தூய்மை பரிசோதனை பண்ணையில் புதிய குடோன் வசதி ஏற்படுத்துதல், கிணற்றின் உட்புறச் சுவர் கட்டுதல் மற்றும் தற்பொழுதுள்ள நீர்ப் பாசன வசதிகளை மேம்படுத்துதல்.
- அனைத்து விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு ரூ.1.13 கோடி செலவில் தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுத் தரம் மேம்படுத்தப்பட்டது.
- கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை நிலையம் பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தில் (ISTA) உறுப்பினர் ஆக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) தரமேம்பாட்டு சோதனைகளில் தேர்ச்சிப் பெற்று 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம், பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது. பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) அங்கீகாரம் பெறுவதற்கான தகுதி பெறுவது அகில இந்திய அளவில் அரசுத் துறைகளில் இதுவே முதல் விதைப் பரிசோதனை நிலையம் ஆகும். இந்தியாவில் இந்த மைல்கல் சாதனையை எந்த மாநிலமும் எய்தவில்லை.
- சான்று விதை உற்பத்தியைப் பெருக்கவும், தரமான விதைகளை உபயோகிப்பதில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், 2,34,457 எண்கள் விதை உற்பத்தியாளர். விதை உற்பத்தியாளர், விதை சாகுபடியாளர் மற்றும் உழவர்கள் ஆகியோருக்கு விதைச்சான்று மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டு பயிற்சி.
- விதை உற்பத்தியில் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்திட அட்மா (ATMA) திட்டத்தின் கீழ், ரூ.57.25 இலட்சம் மதிப்பில் விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள்.
- அங்கக சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் 1,38,700 ஏக்கர் இலக்கிற்கு 1,20,794 ஏக்கர் பரப்பு பதிவு.
- ஜி.எஸ்.1 இந்திய நிறுவனத்திடம் இருந்து நிறுவன முற்சேர்க்கை எண் மற்றும் பார்கோடிங் வாங்கப்பட்ட, இரகசிய வார்த்தை மூலம் பாதுகாக்கப்பட்ட மூன்றாம் பிரிவு டிஜிட்டல் கையொப்பம் பெறப்பட்ட ரூ.1,60,000/– மதிப்புள்ள ஏழு ஜி.பி.எஸ். கருவிகள் மூலம் அங்கக விவசாயிகளுக்கு வாய்ப்பு மற்றும் வணிகச்சான்று வழங்கும் வசதி.
- விதைச்சான்று திட்டங்களை விரைந்து செயல்படுத்திட 16 எண்கள் புதிய வாகனங்கள் (14 ஈப்பு மற்றும் 2 மகிழுந்து) ரூ.93.86 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.57.50 இலட்சம் செலவில் 10 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு விதை ஆய்வு துணை





இயக்குநர்கள் மற்றும் விதைச்சான்று உதவி இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டது.

- நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டத்தின் கீழ், கரும்பு மகசூலை இரட்டிப்பாக்குவது தொடர்பாக 1,400 நிழல் வலைக் கூடங்கள் வழங்கி கரும்பு நாற்றுக்கள் உற்பத்தி செய்ய ரூ.7.40 கோடி மானியம்.
- 2,763 நீர்வடிப்பகுதிகளில் ரூ.1,643.18 கோடி செலவில் 13.802 இலட்சம் எக்டேர் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 5.547 இலட்சம் எக்டேர் பரப்பில் ரூ.677.65 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நிலவள மேம்பாட்டின் கீழ் 1.18 இலட்சம் எக்டேர், நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள்.
- நீர்வள மேம்பாட்டின் கீழ் 2,792 கசிவு நீர்க்குட்டைகள், 10,743 பண்ணைக் குட்டைகள், 4,756 கால்நடைக் குட்டைகள், 6,894 அமிழ்வு நீர்க்குட்டைகள், 11,472 தடுப்பணைகள் மற்றும் 6,102 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தாவர வள மேம்பாட்டின் கீழ் 55,468 எக்டேர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடு வளர்ப்புப் பணிகள்.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

- 17 மாவட்டங்களில் 1,222 நீர்வடிப்பகுதிகளில் இத்திட்டம் ரூ.36.70 கோடி செலவில் 1.53 இலட்சம் ஏக்கர் நிலம் மேம்பாட்டுப் பணிகள்.
- நிலவள மேம்பாட்டின் கீழ் 5,340 ஏக்கர் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நீர்வள மேம்பாட்டின் கீழ் 550 கசிவு நீர்க்குட்டைகள், 1,401 பண்ணைக் குட்டைகள்,

340 கால்நடை குட்டைகள், 742 அமிழ்வு நீர்க்குட்டைகள், 1,119 தடுப்பணைகள் மற்றும் 784 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தாவர வள மேம்பாட்டின் கீழ் 16,540 ஏக்கர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப் பணிகள்.

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

- வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் 24 மாவட்டங்களில் 910 நீர்வடிபகுதிகளில் ரூ.27.89 கோடி ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 46,490 எக்டேர் தரிசு நிலம் விளைநிலங்களாக மாற்றம்.
- நிலவள மேம்பாட்டின் கீழ், 2,267 எக்டேர் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நீர்வள மேம்பாட்டின் கீழ், 417 கசிவு நீர்க்குட்டைகள், 1,000 பண்ணைக் குட்டைகள், 391 கால்நடைக் குட்டைகள், 917 அமிழ்வு நீர்க்குட்டைகள், 1,041 தடுப்பணைகள் மற்றும் 1,494 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தாவர வள மேம்பாட்டின் கீழ், 15,643 எக்டேர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவன பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப் பணிகள்.

**தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவப்ரா)**

- தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் (நவப்ரா) 11ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், 18 மாவட்டங்களில், 200 நீர்வடிப்பகுதிகளில் ரூ.24.06 கோடி செலவில் 1,00,250 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 502 பண்ணைக் குட்டைகள், 780 கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் 315 தடுப்பணைகள் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி**

- நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நபார்டு) 25 மாவட்டங்களில் 155 நீர்வடிப் பகுதிகளில் 77 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் ரூ.8.60 கோடி செலவில் 17,917.5 ஏக்கர் நிலம் மேம்பாடு 17,250 ஏக்கர் நிலமேம்பாட்டு பணிகள், 480 பண்ணைக்குட்டை அமைத்தல் மற்றும் 405 எக்டேர் தாவர மேம்பாட்டுப் பணிகள்.

**நீர்வடிப் பகுதி பசுமைத் திட்டம்**

- நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம் திருச்சி மாவட்டம், நாட்டார்பட்டி நீர்வடிப்பகுதியிலும் மற்றும் வேலூர் மாவட்டம் தும்பேரி நீர்வடிப்பகுதியிலும் ரூ.2.74 கோடி மற்றும் ரூ.2.52 கோடி செலவில் முறையே ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றத்திற்காகவும் விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- திருச்சி மாவட்டம், நாட்டார்பட்டி நீர்வடிப் பகுதியில் பின்வரும் பணிகள் முடிக்கப் பெற்றுள்ளது. 20 ஆழ்துளை கிணறுகள், 220 பண்ணைக் குட்டைகள், 213.31 ஏக்கர் நிலமேம்பாட்டு பணிகள், 450 ஏக்கர் மண் ஆய்வு பணிகள், 213 ஏக்கர் உழவு மற்றும் நடவு பணிகள், ரூ.127.810 இலட்சம் செலவில் இதர துறைகளில் முன்னேற்ற பணிகள் மற்றும் நுண்ணுயிர் பாசனப்பணிகள் முடிக்கப்பெற்றுள்ளன.
- வேலூர் மாவட்டம் தும்பேரி நீர்வடிப்பகுதியில் பின்வரும் பணிகள் முடிக்கப் பெற்றுள்ளது. 26.50 ஏக்கர் நிலமேம்பாட்டு பணிகள், 16 ஆழ்துளை கிணறுகள், 78 பண்ணைக் குட்டைகள், மண் ஆய்வு மற்றும் நடவு பணிகள், நுண்ணுயிர் பாசனப் பணிகள், 2 நீர்சேமிப்பு கட்டமைப்பு மற்றும் 16 நீர்பிடிப்பு தொட்டிகள் ஆகிய பணிகள் ரூ.1.03 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

**தானே புயல் நிவாரணம்**

- தானே புயல் நிவாரணமாக பயிர் இழப்பீடு நிவாரணத் தொகை நெல்லுக்கு ரூ.10,000, இதர பாசனப் பயிர்களுக்கு ரூ.7,500, மானாவாரி பயிர்களுக்கு ரூ.4,000 வழங்கப்பட்டது.
- விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ரூ.4.54 கோடி நிதி செலவினத்தில் 2.11 இலட்சம் தென்னங்கன்றுகள் நடவு.
- விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் முறிந்த/பாதிப்புக்கு உள்ளான 3,15,930 தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு மரம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் ரூ.1,065.905 இலட்சம் தொகை 4,973 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.



- தானே புயலில் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ரூ.4.73 கோடி செலவில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்களில் சிறுதழை விதைப்பைகள் விநியோகம். பயனடைந்த விவசாயிகள் 4,967 பயன்.
- தானே புயலில் 21,696 ஏக்கர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட மரங்கள் ரூ.21.69 கோடி செலவில் அப்புறப்படுத்தப்பட்டன.
- தானே புயலில் பாதிக்கப்பட்ட 21,696 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி மறுநடவு ரூ.13.82 கோடியில் மேற்கொள்ளப்பட்டது
- தானே புயலில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ.12.35 கோடியில் ஆண்டுப்பயிர்கள் மறுசாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தொகுதியில் நாவலூர் குட்டப்பட்டில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நாட்டிலேயே முதன்முறையாக மகளிருக்காகப் பிரத்யேகமான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.
- பப்பாளி பயிரில் மாவுப் பூச்சி தாக்குதலினால் 90 சதவிகிதம் சேதம் ஏற்பட்டது. பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய வேளாண்மையில் முக்கியப் பூச்சிகள் நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்டு, பெருக்கம் செய்யப்பட்டு, 35,00,000 அசிரோபேகஸ் பப்பாயே பூச்சிகள் பப்பாளி, மரவள்ளி மற்றும் மல்பெரி பயிரிடப்படும் பல்வேறு கிராமங்களில் விடப்பட்டன. இந்த ஒட்டுண்ணி விடப்பட்டதன் மூலம் ஏற்பட்ட தாக்கத்தினால் ரூ.435 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் பாதுகாக்கப்பட்டன. இதன் மூலம் ரூ.265 கோடி மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுவது தவிர்க்கப்பட்டு, சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்பட்டது.

- இந்திய வேளாண் வணிக மையம் வழங்கிய "தேசிய அளவிலான சிறந்த வேளாண் வணிக இயக்குநரகம்" 2011ஆம் ஆண்டுக்கான விருது.
- மகேந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனம் வழங்கிய சிறந்த மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்காக "கிருஷி சிக்ஷா விருது 2011".
- இந்திய அரசின் நிறுவனக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத்துறை, அறிவுசார் சொத்துரிமை அலுவலகம் ஆகியவை இந்திய தொழில்கள் கூட்டமைப்புடன் இணைந்து, "உயரிய இந்தியக் கல்வி நிறுவனங்களின் காப்புரிமை 2013" என்ற விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் சிறுதானியங்களில் ஆய்வு மேற்கொள்ள திருவண்ணாமலை மாவட்டம், அத்தியேந்தல் கிராமத்தில் 2013ஆம் ஆண்டு சிறுதானிய மகத்துவ மையம் நிறுவப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2013ஆம் கல்வி ஆண்டில் ஒருங்கிணைந்த முனைவர் பட்டப்படிப்பு முதல் கட்டமாக உழவியல் மற்றும் வேளாண்மை பூச்சியியல் துறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. நான்கு ஆண்டுகள் கொண்ட இப்படிப்பில், முதலாம் ஆண்டு பாடத்திட்டமும், அடுத்த மூன்று ஆண்டுகளில் ஆராய்ச்சி பணிகளும் நடைபெறும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 1000 வேளாண் தொழில்நுட்பங்கள் காணொலி குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டு தமிழக அரசின் வேளாண்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் கட்டப்பட்ட ரூ. 783.39 இலட்சம் மதிப்பிலான பதின்மூன்று கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19.02.2014 அன்று காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டன. மேலும், ரூ.1,121.20 இலட்சம் மதிப்பீட்டில் 18 கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.
- ரூ.150 கோடி செலவில் நிலைத்த வேளாண்மைக்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும் அதிகரித்து வரும் வேளாண் கல்விக்கான தேவையைப் பூர்த்தி செய்யவும், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள்) நிறுவப்பட்டுள்ளது.
- இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழக இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பொன்விழா ஆண்டு சிறந்த நெல் ஆராய்ச்சி மையத்திற்கான விருது 15.04.2015 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.
- இந்திய வேளாண்மை வணிக மையம் வழங்கிய "தேசிய அளவிலான சிறந்த வேளாண் வணிக இயக்குநரகத்திற்கான" 2014ஆம் ஆண்டிற்கான விருது 19.05.2014 அன்று தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண்மை புதுமைத் திட்ட மாநாட்டில் வழங்கப்பட்டது.
- புதுதில்லியில் உள்ள பிராண்ட்ஸ் நிறுவனம், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே 2014ஆம் ஆண்டிற்கான தரமான கல்விக்கான விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 23.08.2014 அன்று வழங்கியது.
- இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பு (FICCI) 2014ஆம் ஆண்டிற்கான ஒட்ட மொத்த சிறப்பு விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 13.11.2014 அன்று வழங்கியது.
- புதுதில்லியில் உள்ள பிராண்ட்ஸ் நிறுவனம், வேளாண்மை பல்கலைக் கழகங்களுக்கு இடையே 2014ஆம் ஆண்டிற்கான உலகளாவிய தரத்திற்கான விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 10.01.2015 அன்று வழங்கியது.
- தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் வழங்கிடும் 2013–2014ஆம் ஆண்டிற்கான



சிறந்த விதை தொழில்நுட்ப ஆராய்ச்சி மைய விருது காஷ்மீரில் உள்ள ஷேர்–இ–காஷ்மீர் பல்கலைக் கழகத்தில் நடந்த தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் 29ஆவது தேசிய விதை உற்பத்தித் திட்ட மாநாட்டில் 24.04.2014 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.

- தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் 2013ஆம் ஆண்டிற்கான சிறந்த நெல் வினையியல் மையத்திற்கான விருது 06.04.2014 அன்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டது.
- ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பூச்சிகள் அருங்காட்சியகம் அமைக்க ஒப்புதல் 2013–2014ஆம் ஆண்டு அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது.
- கிராமப்புற இளைஞர்களுக்கு நவீன வேளாண்மை கருவிகள் மற்றும் இயந்திரங்கள் இயக்கவும்பராமரிக்கவும்பயிற்சி அளிப்பதற்காக வேளாண் திறன் மேம்பாட்டு மையம் குமுளூரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவங்க 2015ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கிள்ளிகுளத்தில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இலையின் நோய்தன்மை கண்டறியும் ஆய்வகம் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.
- ரூ. 120 இலட்சம் செலவில் நீடித்த அங்கக வேளாண்மையில் ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக உயிர் உரங்கள் மற்றும் அங்கக உரங்களுக்கான தரக்கட்டுப்பாடு ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மை அறிவியல் நிலையம் தருமபுரி, சிறுதானிய மகத்துவ மையம் திருவண்ணாமலை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் விருதுநகர் ஆகிய மூன்று இடங்களில் சிறுதானியங்களை சீராக்குதலில் உமியை நீக்கும் இயந்திரங்கள் சிற்றூர் அளவில் பயன்படுத்தும் வகையில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.
- ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் பவானிசாகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நவீன விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.
- பயிர்களில் நிலைத்த மகசூல் உயர்வு பெற, ரூ. 9 கோடி செலவில் ரைசோடிரான் கருவி கொண்டு நுண்ணிய வகைப்பாடு ஆய்வு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ரூ. 157 இலட்சம் செலவில் அதி அடர்வு நடவு முறையில் மா, கொய்யா மற்றும் முருங்கைத் தோட்டங்கள் அமைக்கப்படுறது.
- திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் தாலூக்காவில் நடப்பு ஆண்டில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்க ஒப்புதல் 2015ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது.
- தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு மாம்பழத்தில் சேதம் விளைவிக்கும் பழ ஈக்களை கவர்ந்து அழிக்கும் முறையை வயல்வெளி ஆய்வுத் திடல்கள் அமைத்து சேதத்தைக் குறைக்கும் திட்டத்திற்கு ரூ.2.45 கோடி ஒப்புதல் 2015ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த விதை உற்பத்தி முனையம் அமைக்க ரூ.5 கோடி ஒப்புதல் 2015ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டு உள்ளது.
- மத்திய அரசின் தேசிய வேளாண்மை அறிவியல் கல்விக் கழகம் (அகாடமி), இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், பசுமைப் புரட்சிக்கான பொன்விழா விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 27.11.2015 அன்று வழங்கியது.

❖ ❖ ❖

கால்நடைப் பராமரிப்புத் துறை

# கால்நடைகளின் வளர்ச்சி கிராமப் பொருளாதாரத்தில் எழுச்சி!



- ரூ.208.42 கோடி செலவில் விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்கும் திட்டம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு 59,950 பயனாளிகளுக்கு கறவைப்பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.874.50 கோடி செலவில் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு 69,706 பயனாளிகளுக்கு தலா 4 வீதம் 27,90,424 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- நபார்டு RIDF XVII திட்டத்தின் கீழ், ரூ.122.24 கோடி மதிப்பீட்டில் 360 கால்நடை நிலையங்களுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டப்பட்டு, 12 கால்நடைப் பண்ணைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.
- RIDF XIX திட்டத்தின் கீழ், ரூ.99 கோடி செலவில் 450 கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டும் பணி விரைந்து நடைபெற்று வருகிறது.



- நபார்டு RIDF XX திட்டத்தின் கீழ், ரூ.61.25 கோடி செலவில் 226 புதிய கால்நடை மருத்துவ நிலையக்கட்டடங்கள் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.
- நபார்டு RIDF XX திட்டத்தின் கீழ், ரூ.62 கோடி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. அதில் 193 கால்நடை மருந்தக கட்டடங்கள் மற்றும் ஒரு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம், கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் இராணிப்பேட்டையில் கட்டடப்பட உள்ளது.
- ரூ.78.305 கோடி செலவில் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின் கீழ், துறையில் உள்ள 1,191 கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. 2,322 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு அறையணிகள் வழங்கப்பட்டது.
- ரூ.25.516 கோடி செலவில், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், (ESVHD) 252 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- 20 கால்நடை மருந்தகங்கள் நிறுவுதல் திட்டத்தில் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 20 புதிய கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டது.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கிராமப்புரங்களில் மேம்படுத்தப்பட்ட கால்நடை மருத்துவ வசதிகளை ஏற்படுத்தும் வகையில் ரூ.3.4 கோடி செலவில் 10 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலைய கட்டடங்கள் (திரவ நைட்ரஜன்) மற்றும் ரூ.13.267 கோடி செலவில் 85 புதிய கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டது.
- கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை நிருவாக அலுவலகங்கள் அடிப்படை வசதிகளுடன் செயல்பட ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் கட்ட ரூ.29.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.90 கோடி நிதி மதிப்பீட்டில் மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 44,000 ஏக்கர் விவசாய நிலங்கள் தீவனப்பயிர் இறவையின்கீழும் மற்றும் 55,000 ஏக்கர் நிலங்கள் மானாவாரி சாகுபடியின் கீழும் கொண்டு வரப்பட்டுள்ளனஇதன் மூலம், தோராயமாக 86.4 LMT பசுந்தீவன உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- பசுந்தீவன உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் 7,397 நீர் தெளிப்பான் கருவிகள் மற்றும் கிடைக்கும் பசுந்தீவனத்தை சேதாரமின்றி முழுமையாகப் பயன்படுத்தும் பொருட்டு 4,178 புல் நறுக்கும் கருவிகளும் விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- பசுந்தீவனத்தை எளிதாகவும், சீராகவும் அறுவடை செய்ய 2,500 புல் அறுக்கும் கருவிகள் 50 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- கால்நடைகளுக்கு மரத்தீவனம் வழங்குவதன் அவசியத்தைஉணர்த்தும்வகையில்,30இலட்சம் அகத்தி மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. 10,000 அசோலா அலகுகள் நிறுவப்பட்டுள்ளது.
- 2015–2016ஆம் ஆண்டு மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் ரூ.25 கோடி செலவில் 62,000 ஏக்கர் விவசாய நிலங்கள் தீவனப்பயிர் இறவை (ம) மானாவாரி சாகுபடியின் கீழ், முறையே கொண்டு வரப்பட்டுள்ளது. 3,000 நீர் தெளிப்பான் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 10,000 அசோலா அலகுகள் நிறுவப்படவுள்ளது. 250 கிலோ கொள்ளளவு கொண்ட 40,000 சைலோ பைகள் 10,000 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (1 விவசாயிக்கு 4 பைகள் வீதம்). தீவன விதைப்பண்ணை அலகுகள் 7 கால்நடை பண்ணைகளில் நிறுவப்பட்டு வருகிறது. 2 இலட்சம் தீவன மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.05 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 31 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.1.51 கோடி செலவில் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு 6,636 முகாம்களின் மூலம் 38,39,550 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 8,91,356 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- ரூ.8.81 கோடி செலவில் 98 அக நுண்ணோக்கிக் கருவிகள் (MT Ultra Sound Scanner) வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.97.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இதுவரை, 2,239




கறிக்கோழி பண்ணைகள் மற்றும் 7,823 நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- ரூ.52.02 கோடி செலவில் 810 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 20 புதிய கால்நடை மருந்தகங்கள் ரூ.1.42 கோடி செலவிலும், 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் ரூ.271.50 இலட்சம் செலவிலும் துவக்கப்பட்டுள்ளன.
- டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் வறட்சி நிவாரணத்திட்டம் மூலம் ரூ.39.65 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 38,202 பயனாளிகளின் 32,360 ஏக்கர் நிலத்தில் 1.525 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டு, அதில் 41,825 மெட்ரிக் டன் பசுந்தீவனம் ஆவின் நிறுவனத்திற்கு 50% மானிய விலையில் அதன் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.18.5 கோடி செலவில், 185 உலர் தீவனக் கிடங்குகள் தொடங்கப்பட்டு, 2,67,169 விவசாயிகளுக்கு, மானிய விலையில் கிலோ ரூ.2/– வீதம் 28,855 மெ.டன் உலர் தீவனம் வழங்கப்பட்டதில், 11,23,258 கால்நடைகள் பயனடைந்துள்ளன. மேலும், இவ்வாண்டு 16 உலர் தீவனக் கிடங்குகள் 8 வறட்சி மாவட்டங்களில் 80 இலட்சம் ரூபாய் செலவில் 2,480.75 மெ.டன் உலர் தீவனம் வழங்கப்பட்டு 1,083 இலட்சம் கால்நடைகள் பயன்.
- வேலூர் மாவட்டம் கீழ்வீதி கிராமத்தில் 83.5 ஏக்கர் நிலத்தில் 5 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் நான்கு பண்ணைக் குட்டைகள் மற்றும் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றுடன் பசுந்தீவன உற்பத்தி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் பசுந்தீவனம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- விழுப்புரம் மாவட்டத்தில் பந்தாடு, நாகல்பாக்கம் கிராமங்களில் 61 ஏக்கர் பரப்பில் தொடர் சங்கிலி வேலி அமைக்கப்பட்டு, 6 பண்ணைக்குட்டைகள், 4 தரைமட்ட தொட்டிகள் 2 திறந்த கிணறுகள் மற்றும் பண்ணை அறை, ஊறுகாய்ப்புல் குழி ஆகியவற்றுடன் பசுந்தீவன உற்பத்தி மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- 2011 முதல் 2015 முடிய கால்நடை பராமரிப்புத் துறையில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பதவிகள் 1 கூடுதல் இயக்குநர், 6 மண்டல இணை இயக்குநர், 12 துணை இயக்குநர், 23 உதவி இயக்குநர், 834 கால்நடை உதவி மருத்துவர், 6 நிருவாக அலுவலர் (பணியாளர்), 4 மேலாளர், 16 கண்காணிப்பாளர், 18 உதவியாளர், 28 இளநிலை உதவியாளர், 16 தட்டச்சர், 5 சுருக்கெழுத்து தட்டச்சர், 50 கால்நடை ஆய்வாளர், 33 ஊர்தி ஓட்டுநர், 5 பதிவுறை எழுத்தர், 2 ஆய்வுக்கூட தொழில்நுட்பர், 2 ஆய்வக உடனாள், 24 கதிரியக்கர், 24 அலுவலக உதவியாளர், 830 கால்நடை பராமரிப்பு உதவியாளர், 31 இரவுக்காவலர், 7 கணினி புள்ளி விவரப் பதிவாளர் (தொகுப்பூதியம் அடிப்படையில்).
- 753 கால்நடை உதவி மருத்துவர்கள், 759 கால்நடை ஆய்வாளர்கள் நிலை–2, 1,314 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், 182 உதவியாளர்கள், 247 இளநிலை உதவியாளர்கள், 140 தட்டச்சர்கள், 13 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், 17 புள்ளியியல் ஆய்வாளர்கள், 20 பதிவுரை எழுத்தர்கள், 12 அலுவலக உதவியாளகள், 7 துப்புரவாளர்கள், 15 இரவுக் காவலர்கள், 82 ஓட்டுநர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் 30 கால்நடை அலுவலர்கள் M.V.Sc.Phd., பட்ட மேற்படிப்பு பயில அனுப்பி வைக்கப்பட்டு பயின்று வருகின்றனர்.
- 350 கால்நடை ஆய்வாளர்கள், 1,577 கால்நடை பராமரிப்பு உதவியாளர், 36 அலுவலக உதவியாளர்கள், 2 ஆய்வுக்கூட தொழில்நுட்பர், 17 ஆய்வுக்கூட உடனாள், 3 மின்னாளர், 24 கதிரியக்கர் காலிப்பணியிடங்களை நிரப்பிட நாளிதழ்களில் விளம்பரம் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ரூ.30.04 கோடி நிதி ஒதுக்கீட்டில் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கால் மற்றும் வாய் நோய் (கோமாரி) தடுப்பூசி 9 சுற்றுகள் 6 மாத இடைவெளி சுழற்சி முறையில் மொத்தம் 8 கோடியே 36 இலட்சம் மாட்டினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- ரூ.14.16 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தில் அஸ்காட் திட்டத்தின் கீழ், நாளதுவரை ஆந்த்ராக்ஸ் நோயினை தடுப்பதற்காக சுமார் 2 கோடி 14 இலட்சம் கால்நடைகளுக்கும், சப்பை நோயினை தடுப்பதற்காக சுமார் 18.24 இலட்சம் மாட்டினங்களுக்கும், தொண்டை அடைப்பான் நோயினை தடுப்பதற்காக சுமார் 17.47 இலட்சம் மாட்டினங்களுக்கும், ஆட்டம்மை நோயினை தடுப்பதற்காக சுமார் 7.40 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- ரூ.0.92 கோடியில் தமிழகத்தில் 15 மாவட்டங்களில் 6 முதல் 8 மாத வயதுடைய 2.6 இலட்சம் கிடேரி கன்றுகளுக்கு கன்றுவீச்சு நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- ரூ.5.33 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தில் 1 கோடியே 76 இலட்சம் ஆட்டினங்களுக்கு ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- ரூ.43.07 கோடி செலவில் 11 புதிய உதவி இயக்குநர் அலுவலகங்களும், 5 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களும், 12 துணை இயக்குநர் நிலையிலான கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலுவலகங்களும், 3 உதவி இயக்குநர் அலுவலகங்களும், 2 கால்நடை நோய் புலனாய்வுப்பிரிவு அலுவலகங்களும் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன.
- புறக்கடைக்கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.348.279 இலட்சம் செலவில் 31 மாவட்டங்களில் மொத்தம் 13,658 பயனாளிகளுக்கு தலா 45 எண்ணிக்கையில் 4 வார வயதுடைய 6.15 இலட்சம் விலையில்லா கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

- "இளநிலை கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பிற்கான (பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச்.)

மின்னணுப்பாடங்களைஉருவாக்கியமைக்காக" இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் தேசிய வேளாண் புத்தாக்கத் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான விருது 15.06.2012 அன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது.

- கால்நடை மருத்துவம், கால்நடை மற்றும் மீன்வள அறிவியல் உள்ளிட்ட வேளாண் அறிவியல் புலத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வழங்கும் சிறந்த கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்பாட்டை அங்கீகரிக்கும் வகையில் "சர்தார் படேல் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறந்த நிறுவன விருது–2011" எனும் உயரிய விருது 16.07.2012 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் மேலும் 5 ஆண்டுகளுக்கு (16.03.2015 முதல் 15.03.2020 வரை) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**புதிய கல்லூரிகள்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் 09.10.2012 அன்று புதிதாக துவங்கப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வசதியுடன் இயங்கி வருகின்றன.
- ஒசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் 80 ஏக்கர் நிலத்தில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரி நிறுவப்பட்டு அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

**புதிய பாடதிட்டங்கள் துவக்கம்**

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் பி.டெக். (கோழி உற்பத்தித் தொழில்நுட்பம்), எம்.வி.எஸ்சி. (உயிர்ப் புள்ளியியல்), பி.எச்டி. (வனவிலங்கு அறிவியல்), எம்.எஸ்சி (உயிர்த் தகவலியல்), எம்.எஸ்சி. (உயிர்ப் புள்ளியியல்), எம்.பி.ஏ. (கால்நடை வணிக மேலாண்மை) எம்.டெக். (உணவுப் பதனிடும் தொழில்நுட்பம்) மற்றும் பி.எச்.டி, (உணவுத் தொழில்நுட்பம்) ஆகிய எட்டு புதிய பாடதிட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்தியாவில் கால்நடை மருத்துவ அறிவியலில் முதன்முதலாகக் கால்நடை அறிவியல் பல்தொழில்நுட்பப் பாடப் பயிற்சிகளை 24.03.2012 முதல் வழங்கி வருகிறது. இப்பாடப் பயிற்சிகள், புதுக்கோட்டையில் உள்ள பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படுகின்றன.

**மாணவர் சேர்க்கை அதிகரிப்பு**

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப்படிப்பில் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை 280லிருந்து 320ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் கால்நடை பராமரிப்புத் துறை வாயிலாக 15 கால்நடை மருத்துவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பயில 12.08.2014 தேதியிட்ட அரசு ஆணை 161இன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- அயல்நாட்டு மாணாக்கர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு பயில மறு ஒதுக்கீட்டுக் கொள்கையின்படி கூடுதலாக 5 இடங்கள் 20.01.2014 தேதியிட்ட அரசு ஆணை 13இன்படி ஏற்படுத்தப்பட்டன.

**ஊக்கத் தொகை உயர்வு**

- இளங்கலை பட்டம் பயிலும் மாணவர்களுக்கு உள்ளுறைப் பயிற்சி ஊக்கத்தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழக அரசு எம்.வி.எஸ்சி. பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையினை ரூ.500/–லிருந்து ரூ.4,000/–ஆக உயர்த்தியுள்ளதோடு, முனைவர் பட்டபடிப்பு மாணவர்களுக்கு முதன் முறையாக ரூ.5,000/– வழங்கி வருகிறது.



**மாணாக்கர் ஆதரவு நடவடிக்கைகள்**

- கிராமப்புறங்களில் பள்ளிப்படிப்பை முடித்து, கால்நடை மருத்துவ அறிவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் கால்நடை மருத்துவப் பாடங்களை எளிதில் பயில பாடங்கள் அனைத்தும் முதன் முதலாக தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் வளர்ச்சி நிதி உதவியுடன் ரூ.94.7 இலட்சத்தில் ஒரு புதிய மாணவியர் விடுதி கொடுவள்ளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டப்பட்டுள்ளது.
- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்முறைக் கால்நடைப் பண்ணை வளாகம் மற்றும் பாலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் ரூ.1.64 கோடி செலவில் இணையதளத் தகவல் மையம் 11.08.2013 அன்று துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**கொடுவள்ளி மற்றும் நாமக்கல் கல்லூரிகளுக்கு கூடுதல் பணியிடங்கள்**

- கொடுவள்ளியிலுள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் மனிதவளத்தை மேம்படுத்த கூடுதலாக 22 ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 17 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டன.

**தொலைநிலைக் கல்வி**

- கால்நடை மருத்துவர்கள், கால்நடை மருத்துவ அறிவியலின் புதிய பாடப் பிரிவுகளைப் பயின்று, தங்களின் திறனை மேம்படுத்திக் கொள்ள 21 தொலைநிலைப் பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்புகள் இணையவழியில் பயிற்றுவிக்கப்படுகின்றன.
- பள்ளிக்கல்வி இடைநின்றோர் மற்றும் பட்டதாரி அல்லாதோரின் வேலைவாய்ப்பை பெருக்கும் பொருட்டும், கால்நடை மற்றும் கோழியினம் சார்ந்த தொழில்களுக்குத் தேவையான திறன்மிகு பணியாளர்களை உருவாக்கும் பொருட்டும் 11 சுயவேலைவாய்ப்பு பாடங்களும், 15 திறன்மேம்பாட்டு பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**உலக கால்நடை மருத்துவ ஆண்டு**

- உலகக் கால்நடை மருத்துவ ஆண்டினை (2011) சிறப்பிக்கும் வகையில், கால்நடை மருத்துவ அறிவியலின் முன்னேற்றங்களை எடுத்துக்காட்டவும், கால்நடை மருத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கெனவும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி 29.07.2011 முதல் 01.08.2011 வரை நடத்தப்பட்டது. தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் 29.07.2011 அன்று கண்காட்சியைத் துவக்கி வைத்து, நாட்டுக் கோழிகளில் இராணிக்கெட் நோயைத் தடுப்பதற்கான குருணை வடிவ, வாய்வழித் தடுப்பு மருந்து அளித்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட "கொக்கரக்கோ" எனும் காணொலி குறுந்தகட்டையும் வெளியிட்டார்.
- உலகக் கால்நடை மருத்துவ ஆண்டின் (2011) நிறைவு விழா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 12.12.2011 அன்று நடத்தப்பட்டது. உலகக் கால்நடை மருத்துவ ஆண்டு கொண்டாட்டம் 2011, தொழில்நுட்ப வெளியீடு 2011, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு முறைகள் ஆகிய மூன்று புத்தகங்கள் மேதகு ஆளுநர் மற்றும் பல்கலைக்கழகவேந்தர் அவர்களால் வெளியிடப்பட்டது. கால்நடை மற்றும் மீன் வளத்தை உயர்த்தும் 21 புதிய தொழில் நுட்பங்கள் வெளியிடப்பட்டன.

**புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்**

- புதிதாக 3 வகை கோழியினங்கள், 5 நோய் கண்டுபிடிக்கும் சாதனங்கள், 2 மென்பொருள் குறுந்தகட்டுப் பேழைகள், 3 மதிப்பு கூட்டிய கால்நடைப் பொருட்கள், 1 மீனில் கலப்படத்தை கண்டறியும் சாதனம், 1 குடற்புழுநீக்கி கலந்த தாதுஉப்புக் கட்டி மற்றும் 1 இறந்த பறவைகளை மட்கச்செய்யும் தொழில்நுட்பம் உள்ளிட்ட 16 புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவையாவும் மாண்புமிகு ஆளுநர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வேந்தர் அவர்களால் "உலக கால்நடை மருத்துவ ஆண்டு (2011) நிறைவு விழாவில்" வெளியிடப்பட்டன.
- கால்நடை மற்றும் மீன் வளத்தை உயர்த்தும் 21 புதிய தொழில் நுட்பங்கள் மாண்புமிகு கால்நடை அமைச்சர் அவர்களால் "கால்நடை மற்றும்

மீன் வள வார விழாவில்'' 19.01.2013 அன்று காட்டுபாக்கத்தில் உள்ள பல்கலைகழகத்தின் விலங்கின அறிவியல் முதுநிலை கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வெளியிடப்பட்டன.

**மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள்**

- பகுதி–II திட்டத்தின் கீழ், 2011–2012 வருடத்தில் ரூ.42.55 இலட்சம், 20.11.2012 அன்று தமிழக அரசால் வழங்கப்பட்டு, சேலம் கருப்பு ஆட்டு பண்ணை நிறுவுதல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுத்தமான இறைச்சி உற்பத்திப் பயிற்சி, செம்மறி ஆடுகளில் குடற்புழு நீக்கம், இறால் வளர்ப்பு பயிற்சிகள் உள்ளிட்ட 4 புதிய ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ரூ.22 இலட்சம் செலவில், கோழி சுவாசக்குழாய் தொற்று நச்சுயிரியை (Avian Infection Bronchitis Virus Variants) கண்டுபிடித்தல் மற்றும் தடுப்பூசி மருந்து தயாரித்தல், ரூ.20.67 இலட்சம் செலவில் மீன் குஞ்சுப் பொரிப்பகங்கள் நிறுவுதல் ஆகிய புதிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு மொத்தம் ரூ.42.67 இலட்சம் தமிழக அரசால் பகுதி–II திட்டத்தின் கீழ், வழங்கப்பட்டு, ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ரூ.501.27 இலட்சத்தில் மதிப்பு கூட்டிய பால் பொருட்கள், உறைவிந்து வங்கியை பலப்படுத்துதல், உழவர்கள் நிலத்திலேயே பசுந்தீவன விதை வங்கிகள் உருவாக்குதல், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் தொழிற் பயிற்சி மையம் என 10 திட்டங்கள் 2011–1012ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மூலம் செயல்படுத்தபட்டன.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மூலமாக 2012–2013ஆம் ஆண்டில், கோழியிலும் மீன்களிலும் உருவாகும் நோய்களைக் கண்டறிதல், ஜெர்சி கலப்பின காளை – தாய்ப்பசு பண்ணையை உருவாக்குதல், ஊரகச் சூழலில் மேம்படுத்தப்பட்ட பால் உற்பத்திக்காக கலப்பினக் காளைகள் உருவாக்குதல், மாண்புமிகு முதலமைச்சரின் விலையில்லா ஆடுகள் மற்றும் கறவைப் பசு வழங்கப்பட்ட பயனாளிகளுக்கான புதிய பயிற்சிப் பாடங்கள் தயாரிப்பின் மூலம் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை பலப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் கோழி இறைச்சிப் பொருட்களுக்கு கிருமியில்லா சான்றிதழ் அளிக்கும் மையம் உள்ளிட்ட 16 திட்டங்கள் ரூ.2,789.03 இலட்சத்தில் செயல்படுத்தபட்டுள்ளன.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஆராய்ச்சிக் கூடம் ரூ.436.23 இலட்சத்தில் மேம்படுத்தப்பட்டது. சென்னை, மாதவரத்திலுள்ள கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான மருந்தியல் கண்காணிப்பு ஆய்வுக் கூடம், டெல்லியிலுள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் வழங்கிய ரூ.555.50 இலட்சம் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்டது.
- கால்நடை உயிர்தொழில் நுட்பவியலின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் “மேம்படுத்தப்பட்ட மற்றும் திறன்நீட்சி தடுப்பூசிகள் மற்றும் கோழிகளைத் தாக்கும் நச்சுயிரிகளின் நோய் எதிர்ப்பைப் புரிதல்'' என்ற ஆராய்ச்சித் திட்டத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், ரூ.250.91 இலட்சம் வழங்கி, செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.36.20 இலட்சம் மதிப்பில் நன்னீரில் கெண்டை மீன் வளர்ப்பு, ரூ.95.25 இலட்சம் மதிப்பீட்டில் கொடுவள்ளி கல்லூரியில் பால் பொருட்களைப் பதப்படுத்தும் கூடம் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் தீவிர சிகிச்சைப் பிரிவு ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் நாமக்கல்லில் மாதிரிப் பால் பொருட்கள் உற்பத்தி செயல் விளக்கப் பிரிவு மற்றும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கறிக்கோழி உற்பத்தி, முட்டைக்கோழி உற்பத்தி அனுபவ பயிற்சிகள் என 5 திட்டங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தபட்டன.
- ரூ.224 இலட்சம் மதிப்பீட்டில் இனப்பெருக்கு விகித மரபணுக்கான உயிர்த்தொழில்நுட்ப மையமும் மற்றும் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி ஆட்டினை அழிவிலிருந்து பாதுகாத்தல் என்ற திட்டமும் மத்திய அரசு நிதியுதவியுடன் நீலகிரியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.



- மதிப்பு கூட்டிய மீன் உற்பத்தி மூலம், நன்னீர் மீன் பண்ணையாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, புதுதில்லி அளித்த ரூ.8.46 இலட்சம் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- விலையில்லா கறவைப் பசுக்களின் உடல்நலம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் தாது உப்புக் கலவை (ஸ்மார்ட்டு கலவை) ரூ.1.50 கோடியில் உற்பத்தி செய்து, பயனாளிகளின் மாடுகளுக்கு தமிழக அரசு நிதியுதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது.
- இராமநாதபுரம் வெள்ளை செம்மறி ஆடுகள் பாதுகாக்கும் திட்டம் ரூ.80 இலட்சத்தில் புதுக்கோட்டையில் உள்ள பல்லைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**புதிய செயல்பாடுகள்**

- பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்படும் கால்நடை மற்றும் கோழிகளுக்கான தடுப்பூசிகள் மற்றும் நோயறி சாதனங்களை வணிகப்படுத்தும் நோக்குடன் கால்நடை உயிர்ப் பொருட்களுக்கான ஆராய்ச்சி நடைமுறை சாத்தியமறி சோதனைக்கூடம் ரூ.2,293.77 இலட்சம் செலவில் புதுதில்லியிலுள்ள உயிர்தொழில்நுட்பவியல் துறை நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ரூ.123.20 இலட்சம் நிதியுதவியில் பல்கலைக் கழக மற்றும் அரசு பண்ணைகளில் தீவன விதைகள் உற்பத்தி செயல்படுத்தப்படுகின்றது.
- ரூ.6.48 கோடியில், இந்தியாவிலேயே முதல் முறையாக கால்நடைகளுக்கான ஆதார செல் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டு செயல்படுகிறது.
- திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிறு விவசாயிகளுக்கு நாட்டின மற்றும் மேம்படுத்தப்பட்ட கோழிக் குஞ்சுகளை வழங்க குஞ்சு பொரிப்பகம் ஒன்றும், ஓரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உயர்ரக முர்ரா எருமையின காளை – தாய்ப்பசுப் பண்ணை ஒன்றும் ரூ.65 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இரண்டு “மண்டல கால்நடை நோய் கண்டறியும் பரிசோதனைக் கூடங்கள்'' ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் ரூ.185.06 இலட்சம் நிதியுதவியுடன் நிறுவப்பட்டு வருகின்றன.
- மத்திய அரசின் தீவன மற்றும் பசுந்தீவன அபிவிருத்தித் திட்டத்தின் ரூ.154 இலட்சம் நிதியுதவியுடன் ஒரத்தநாடு மற்றும் காட்டுப்பாக்கத்தில் உள்ள தீவன பரிசோதனைக் கூடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- பர்கூர் இன மாடுகளைப் பாதுகாக்க வேண்டி, ஈரோடு மாவட்டம் பர்கூரில் ரூ.6 கோடியில் ஆராய்ச்சி பண்ணை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.29 இலட்சம் செலவில் மாதவரத்தில் மாதிரி ஹைட்ரோபோனிக்ஸ் முறை தீவன உற்பத்தி மையம் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.120 இலட்சம் செலவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நானோ தொழில்நுட்ப மையம் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

**தீவனப்புல் விநியோகம்**

- கால்நடைகளுக்கு 1,400.19 மெட்ரிக் டன் பசும்புல் மற்றும் 95.07 மெட்ரிக் டன்உலர் தீவனம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 69.952 மெட்ரிக் டன் தாது உப்பு விநியோகமும் செய்யப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

- திரவ நைட்ரஜன் ஒட்டு மொத்த சேமிப்பு கொள்கலன் மற்றும் திரவ நைட்ரஜன்/ இனப்பெருக்க உள்ளீடு விநியோக கட்டமைப்புகள், 10 மாவட்டங்களில் ரூ.5.50/– கோடி செலவில் நிறுவுதல். இதன்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி குறித்த நேரத்திலும் சரியான முறையில் வழங்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.
- இராணிபேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தின் நுண்ணுயிர் தடுப்பு மருந்து பிரிவை GMP தரத்திற்கு உயர்த்துவதற்காக ரூ.12.02/–கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



- தஞ்சாவூர் மாவட்டம், நடுவூர் கால்நடை பண்ணையில் தீவன விதை உற்பத்தி மையம் மற்றும் உழவர் பயிற்சி மையம் ரூ.9.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டுள்ளது.
- ரூ.7.50 கோடி செலவில் 6 மாவட்ட கால்நடை பண்ணைகளில் 19 புதிய கொட்டகைகள் கட்டுவதற்கு ஒதுக்கீடு பெறப்பட்டு திட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ரூ.1.96 கோடி செலவில் 7 அரசு பண்ணைகளில் கால்நடைகள் கொள்முதல் செய்யப்பட்டு பண்ணையினை மேம்படுத்திட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு திட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**விரிவாக்கக் கல்வி இயக்கத்தின் சாதனைகள்**

- உலக கால்நடை மருத்துவ ஆண்டினை (2011) முன்னிட்டு, 29.07.2011 முதல் 01.08.2011 வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது.
- தமிழக அரசால் 13.04.2012 முதல் 17.05.2012 வரை நடத்தப்பட்ட உழவர் பெருவிழாவை, பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், உழவர் பயிற்சி மையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் 628 கிராமங்களில் நடத்தியதின் மூலம் 1,48,289 விவசாயிகள் பயனடைந்தனர்.
- தமிழக அரசின் உதவியுடன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மண்டல கால்நடை வளர்ப்புக் கண்காட்சிகளை திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் நடத்தியது.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பொங்கல் விழாக் காலத்தை கால்நடை மற்றும் மீன்வள வார விழாவாகக் கடைபிடித்து, பல்கலைக் கழகத்தின் மையங்கள் மூலம் கொண்டாடி வருகிறது. இவ்விழாவையொட்டி, பயிற்சிகள், மக்கள் தொடர்பு முகாம்கள், கால்நடை மற்றும் கோழியின மேலாண்மை தொடர்பான கண்காட்சிகள், வெறிநாய்க்கடிக்கான இலவச தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படுவதோடு, உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் குறித்த பணியரங்குகளும் நடத்தப்படுகின்றன.



**விவசாயிகள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்**

- தமிழக அரசின் விலையில்லா கறவைமாடு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வழங்கும் திட்டத்தின் பயனாளிகளுக்கு அறிவியல் ரீதியிலான கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சிகள் பல்கலைக் கழகத்தின் மாவட்ட அளவிலான மையங்கள் மூலம் இலவசமாக அளிக்கப்படுகின்றன.
- பல்கலைக்கழகப் பயிற்சி நிலையங்கள் மூலம் 3,948 வளாக மற்றும் களப்பயிற்சிகள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்புப் பண்ணையாளர்களுக்கும், வேலையில்லா இளைஞர்களுக்கும் நடத்தியதன் மூலம் 2,29,065 பயனாளிகள் பயனடைந்தனர்.
- மாநிலப் பசுந்தீவன அபிவிருத்தித் திட்டப் பயனாளிகளுக்குத் தேவைப்படும் பயிற்சிகள் பல்கலைக்கழகத்தின் மாவட்ட அளவிலான பல்கலைக்கழகப் பயிற்சி மையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. ஆகஸ்டு முதல் டிசம்பர் 2012 வரை 77 பயிற்சிகள் நடத்தியதில் 8,256 விவசாயிகள் பயனடைந்தனர்.
- தமிழக அரசின் விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள் பயன்பெறும் வண்ணம் “ஊரக மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு கால்நடை உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள்” என்ற தலைப்பிலான கருத்தரங்கு, கால்நடைகளின் நலம் மற்றும் அவற்றால் உண்டாகும் வளம் ஆகியவற்றைப் பேணிக்காக்கும் நோக்குடன் 08.06.2012 அன்று நடத்தப்பட்டது.

**நிறைவேற்றப்பட்ட புதிய திட்டங்கள்**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தாழம்பேடு கிராமத்தில் சூரிய மின்சக்தியில் இயங்கும் கிராம அறிவுப் பரப்பல் மற்றும் தகவல் மையத்தினை காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையமும், அமெரிக்காவின் வெர்ஜினியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் இணைந்து நிறுவி, 10.07.2012 அன்று முதல் செயல்படுகிறது.
- ரூ.5.10 கோடி செலவில் விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், நாகப்பட்டினம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் பல்கலைக்கழகத்திற்கென ஆறு புதிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்.
- ரூ.1.50 கோடியில் தேனி, திருச்சி, இராஜபாளையம் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்காக நிரந்தரக் கட்டிடங்கள்.
- தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி உதவியுடன் ரூ.3.86 கோடி செலவில் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் டாக்டர் பி.வி.ராவ் நினைவு கோழியினப் பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.694.80 கோடியில் விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில், மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் தீவனப் பயிர் உற்பத்தி மையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**நிவாரணப் பணிகள்**

- வடகிழக்குப் பருவ மழை 2015ஆம் ஆண்டு பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ள பெருக்கின் போது காஞ்சிபுரம், சென்னை, கடலூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டது. எனவே பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 9,171 சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 6,93,389 கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது. மேலும் 6,16,142 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 11,02,890 பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு 7 டன் கோ–4 பசுந்தீவனமும், ஒரு டன் தாது உப்புக் கலவையும், 500 கிலோ கால்நடைத் தீவனமும், 100 கிலோ வைக்கோல் கட்டிகளும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் விலையின்றி வழங்கப்பட்டது. மேலும், 2,500 கோழிகளுக்கு வாய்வழி அளிக்கும் வெள்ளைக் கழிச்சல்

நோய்க்கான குருணை வடிவத் தடுப்பு மருந்தும் (Newcastle disease - oral pellet vaccine) அளிக்கப்பட்டன.

- கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்பை நிலையூன்ற விஞ்ஞானிகள் குழுவை அனுப்பி, அங்குள்ள மண்ணின் தரமறி சோதனை மேற்கொள்ளப்பட்டு, கால்நடைகளுக்கு உகந்த தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கான வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், இராமையன்பட்டியிலும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடங்கள் 15.07.2015 அன்று திறந்து வைக்கப்பட்டன. புதிதாகத் துவங்கப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வசதியுடன் இயங்கி வருகின்றது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை, விழுப்புரம், இராஜபாளையம், திருச்சி கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் கட்டடங்கள் மற்றும் தேனி உழவர் பயிற்சி மைய கட்டடங்களை 15.07.2015 அன்று திறந்து வைத்தார்கள்.
- வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.694.80 கோடியில் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் பசுந்தீவனம் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அங்கீகாரம்:**

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை மற்றும் நாமக்கல்லில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் மார்ச் 2015 முதல் மார்ச் 2020 வரை கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கான ஆணை, ஏப்ரல் கடைசி வாரத்தில் கிடைக்கப்பெற்றது. நாட்டில் உள்ள 22 மாநில வேளாண் பல்கலைக் கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் இந்த அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**கால்நடை உயிரியியல் பாதுகாப்பு சோதனைச் சாலை மற்றும் சிறப்பு ஆராய்ச்சி மையம்**

- தமிழக கால்நடைகளின் வளத்தையும், நலத்தையும் மேம்படுத்த, கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி மற்றும் நோய் கண்டறிய பயன்படும் ஆய்வகப் பெட்டிகளின் தரமறிய, கால்நடை உயிரியியல் பாதுகாப்பு சோதனைச் சாலை மற்றும் சிறப்பு ஆராய்ச்சி மையம் என்ற உலகத் தரமிக்க சிறப்பு ஆராய்ச்சி மையம் ரூ.12 கோடியே 75 இலட்சம் செலவில் அமைக்கப்படுறது.

**நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்**

- அவசர, அவசிய மருத்துவ வசதிக்காக கால்நடைகளை அழைத்துவர இயலாத அளவுக்கு தொலைதூர கிராமப் பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன் முறையாக 10 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் ரூ.6.34 கோடி அரசு நிதி உதவியுடன் வாங்கப்பட்டுள்ளது, இந்த முன்னோடித் திட்டம், முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 5 மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாமக்கல், மதுரை, காஞ்சிபுரம்) செயல்படுத்தப்படுகிறது. இந்த கால்நடை மருத்துவ ஊர்தியை அவசர சிகிச்சைக்காக தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் பொழுது, கால்நடை இருக்கும் இடத்திற்கே சென்று சிகிச்சை அளிக்க முடியும். உடல்நிலை மோசமான நிலையில் உள்ள கால்நடைகளை அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு தீவிர சிகிச்சைக்காக கொண்டு சேர்க்கமுடியும்.

**கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை தரம் உயர்த்துதல்**

- மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சேவைகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை மேலும் சிறப்புடன் சென்றடையும் நோக்கில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் பரிசோதனை மையமாக உயர்த்தப்படுகிறது.

❖ ❖ ❖

# பொங்கிப் பெருகும் பால் வளத்தால் தமிழகம் படைத்திட்ட வெண்மைப் புரட்சி



புதுக்கோட்டை பால் பண்ணை - குளிர்ந்த நிலையில் பால் சேமித்து வைக்கும் சைலோ




திருவள்ளூர் மாவட்டம் - காக்களூர் புனரமைக்கப்பட்ட பால் பண்ணை



ஈரோடு மாவட்டம்
கால்நடை தீவன கச்சாப்பொருட்கள் இருப்பு வைக்கும் கிடங்கின் உள்தோற்றம்



- இதுவரை இல்லாத அளவில் அதிகபட்சமாக 31.32 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 15.10.2015இல் ஆவின் நிறுவனம் சாதனை.

- பால் பணப் பட்டுவாடா நிலுவையினை உடன் வழங்க ரூ.192.14 கோடி வழிவகை முன்பணம்.

- ஆவின் பால் கொள்முதல் தொடர்ந்து அதிகரித்து வந்து 2014–2015இல் நாளொன்றுக்கு 23.68 இலட்சம் லிட்டராக உயர்ந்து மேலும் 2015–2016இல் (டிசம்பர் 2015 வரை) நாளொன்றுக்கு 29.41 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

- பால் உற்பத்தியாளர்கள் நலனைக் காத்திட 18.11.2011இல் பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/–லிருந்து ரூ.20/– ஆகவும், 01.01.2014 முதல் ரூ.20/– என்பது ரூ.23/– ஆகவும், 01.11.2014 முதல் ரூ.23/– லிருந்து ரூ.28 ஆகவும், 18.11.2011 முதல் எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.26/–லிருந்து ரூ.28/–ஆகவும்,



01.01.2014 முதல் ரூ.28/–லிருந்து ரூ.31/– ஆகவும் மேலும் 01.11.2014 முதல் ரூ.31/–லிருந்து ரூ.35 ஆகவும் உயர்த்தப்பட்டது.

- இலாபத்தில் செயல்படும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் 1.09 இலட்சம் உறுப்பினர்களுக்கு போனஸ், பங்கு ஈவுத் தொகை மற்றும் ஊக்கத்தொகை ரூ.57.29 கோடி.
- கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, மதுரை, சேலம், திண்டுக்கல், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தாங்கள் ஈட்டிய இலாபத்திலிருந்து கூடுதல் விலையாக ரூ.157.22 கோடி வழங்கியதால் ஏறத்தாழ 3.48 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு பயன்.
- விலையில்லாக் கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளைக் கொண்டு 4,351 கிராமங்களில் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கம்.
- 175 மொத்த பால் குளிர்விப்பான்கள் புதிதாக நிறுவப்பட்டது மூலம் பால் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 7.44 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ஸ்மார்ட் கார்டு திட்டம் அறிமுகம், ஸ்மார்ட் கார்டு கொண்டுள்ள, ஆவின் பால் நுகர்வோர் www.aavinmilk.com என்ற இணையதளம் மூலம் மாதாந்திர பால் அட்டைகள் புதுப்பித்துக் கொள்ளும் வசதி.
- ஆவின் சாக்லேட், மேங்கோ மில்க்ஷேக், பால் பேடா, ஸ்ரீகந்த், மில்க் பிரெட், மில்க் கேக் மற்றும் ஏழு சுவைகளில் மில்க் ஷேக் அறிமுகம்.
- 182 புதிய ஆவின் பாலகங்கள் தொடக்கம். மூன்று ஆவின் நடமாடும் பாலகங்கள் தொடக்கம்.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 04.01.2013 அன்று ஆவின் விற்பனை நிலையங்களில் புதிய 'ஊட்டி டீ' விற்பனை துவக்கி வைக்கப்பட்டது.
- பால் விற்பனை இதுவரை நாளொன்றுக்கு 10.30 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதிகபட்சமாக 11.50 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டி சாதனை.
- இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மொத்த ஆண்டு விற்பனை வருவாய் ரூ.2,369 கோடியிலிருந்து ரூ.3,881 கோடியாக உயர்வு.
- இணையம் மற்றும் ஒன்றியத்தில் பணிபுரியும் 1,447 பணியாளர்களுக்குப் பதவி உயர்வு.



- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு சிறப்புத் துணை விதிகள் உருவாக்கப்பட்டன.
- ரூ.97 கோடியாக இருந்த உட்கட்டமைப்பிற்கான முதலீடு ரூ.593.65 கோடியாக உயர்வு.
- புதுக்கோட்டையில் ரூ.2.99 கோடி செலவில், நாளொன்றுக்கு 35,000 லிட்டர் பால் திறன் கொண்ட நவீன பால்பண்ணை 18.07.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- காக்களூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணையாக ரூ.4.51 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ஈரோடு கால்நடை தீவன ஆலையில் ரூ.3.5 கோடி செலவில், மூலப்பொருள் மற்றும் கால்நடைத் தீவன சேமிப்பு கூடங்கள் நிறுவப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாதவரம் பால்பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் நிலையிலிருந்து 3.5 இலட்சம் லிட்டராக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உயர்த்தப்பட்டுள்ளது.
- இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் தங்கள் சுயநிதியிலிருந்து சுமார் ரூ.97.18 கோடி மதிப்பீட்டில் தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளன.
- ரூ.54.80 கோடி செலவில் கோயம்புத்தூர் பால்பண்ணையின் பால் கையாளும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டராக உயர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.514.26 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த கூட்டுறவு பால்பெருக்கத் திட்டத்தின் கீழ், மதுரை பால்பண்ணை உட்கட்டமைப்பு மற்றும் தேனி மாவட்டத்திலுள்ள பால் குளிர்விப்பு நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.18.34 கோடி செலவில், ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மை அமைப்பின் மூலம், சேலம், ஈரோடு, மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் உள்ள பண்ணைகளில் நவீன கணிப்பொறி வசதிகள் ஏற்படுத்தி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.35.32 கோடி செலவில் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் பசுந்தீவனப் பற்றாக்குறைகளைப் போக்கிட சென்னை மாவட்டத்தைத் தவிர இதர 31 வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மானிய விலையில் கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை மற்றும் பசுந்தாள் தீவனத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 3,21,521 விவசாயிகள் பயன்.
- மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 77 நபர்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 250 நபர்கள் புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- கால்நடை தீவனம் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் கறவைகளுக்கு ஒன்றிய நிதியிலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.2/– முதல் ரூ.4/– வரை மற்றும் தாது உப்புக் கலவை கிலோ ஒன்றுக்கு ரூ.25/– மானியமாக வழங்கப்படுகிறது.
- கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் அதன் மூலம் பால் உற்பத்தியினை பெருக்க, தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ.39.28 கோடி வழங்கப்பட்டு வம்சாவளி சோதனை திட்டம், வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் ரூபாய் 72 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖

## எண்ணிலாச் சாதனைகளால் பல்கிடும் மீன்வளம்!
## பாதுகாக்கப்படும் மீனவர் நலம்



- மீன்பிடித் தடைக் காலத்தில் ரூ.1,000/– ஆக வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.2,000/– ஆக உயர்த்தப்பட்டு கடந்த நான்காண்டுகளில் 7,77,921 மீனவ குடும்பங்களுக்கு ரூ.155.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- மீன்பிடிப்புக் குறைந்த காலத்திற்கு ஒவ்வொரு கடல் மீனவர் குடும்பங்களுக்கும் ரூ.4,000/– வழங்கும் ஒரு புதிய சிறப்பு நிவாரணத் திட்டத்தினை தமிழக அரசு அறிமுகப்படுத்தி 2011–2012ஆம் ஆண்டில் 1,59,564 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.63.83 கோடியும், 2012–2013ஆம் ஆண்டில் 1,61,012 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.64.40 கோடியும் மற்றும் 2013–2014ஆம் ஆண்டில் 1,64,530 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.65.81 கோடியும், 2014–2015ஆம் ஆண்டில் 1,65,243 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.66.09 கோடியும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2015–2016ஆம் ஆண்டிற்கு ரூ.66 கோடி ஒப்பளிக்கப்பட்டு 31.12.2015 முடிய திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையிலான 10 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,06,244 மீனவக் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.42.50 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வரும் ஏப்ரல் 2016க்குள் வழங்கப்படும்.

- ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், அண்மைக்கடல் பகுதியிலுள்ள மீன்பிடி அழுத்தத்தைக் குறைக்கவும், விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளை சூரை மீன்பிடிப்பிற்கு மாற்றியமைக்க அரசு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்கென ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டு 151 படகுகளுக்கு ரூ.3.51 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் புதிய சூரை மீன்படகுகள் வாங்கிட மானிய உதவியினை 25 சதவிதத்திலிருந்து 50 சதவிதமாக உயர்த்தி ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகு கட்டுவதற்கான செலவினத்தில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கிட 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.6.48 கோடியும் 2014–2015ஆம் ஆண்டில் ரூ.5 கோடியும் ஒப்பளிக்கப்பட்டு மீனவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் பல்வேறு குழுக்களின் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுடைய 171 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. படகு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- தனியார் பங்களிப்புடன் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்காக, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலம் வழங்கிட தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தினால் நில ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. கடலூர், நாகப்பட்டினம் கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒப்பந்தப்புள்ளி மூலம் நீண்டகால குத்தகைக்கு நிலம் வழங்கிட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க தனியார் பங்களிப்பாளர்களுக்கு நில ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் அமைத்தல்**

- நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்க ரூ.18.10 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு 2012–2013ஆம் ஆண்டில் ரூ.8 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.54.64 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டிற்கு ரூ.13.65 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, ரூ.3.41 கோடி முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீன்வள தொழில்நுட்ப நிலையங்கள் அமைத்திட தலா ரூ.34.07 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 2012–2013ஆம் ஆண்டிற்கு தலா ரூ.7 கோடி வீதம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் செயல்பட தொடங்கி பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.5.5 கோடி வீதம் ஒப்பளிக்கப்பட்டு ரூ.11 கோடி தற்போது வழங்கப்பட்டு விட்டது. 2014–2015ஆம் ஆண்டிற்கு இரண்டு நிலையங்களுமாக ரூ.31 கோடி ஒப்பளிக்கப்பட்டு ரூ.7.75 கோடி முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்ட மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பிற விரிவாக்க மையங்களுக்காக ரூ.24.77 கோடி ஒப்பளிக்கப்பட்டு முதல் தவணையாக ரூ.6.19 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 2014ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டுகளில் 5,96,647 கடல் மீனவ பயனாளிகளுக்கு ரூ.71.26 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ், கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரசின் பங்களிப்பு ரூ.1,200/–லிருந்து ரூ.1,800/–ஆக உயர்த்தப்பட்டு 2014–2015ஆம் ஆண்டில் 1,94,436 பயனாளிகளுக்கு மொத்தம் 34.99 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.37.40 கோடி ஒப்பளிக்கப்பட்டு 31.12.2015 முடிய திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையான 10 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 1,47,920 மீனவர்களுக்கு மொத்தம் ரூ.22.62 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று கடலோர மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வரும் ஏப்ரல் 2016க்குள் வழங்கப்படும்.

- மாநில மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 2014ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டுகளில் 5,05,537 மீனவ மகளிருக்கு ரூ.60.55 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ், மீனவ மகளிருக்கு வழங்கப்பட்டு வந்த அரசின் பங்களிப்பு ரூ.1,200/– லிருந்து ரூ.1,800/– ஆக உயர்த்தி 2014–2015ஆம் ஆண்டில் நிவாரணத் தொகையாக ரூ.31.82 கோடி 1,76,786 கடல் மீனவ மகளிர் பயனாளிகளுக்கு



வழங்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.34.98 கோடி ஒப்பளிக்கப்பட்டு 31.12.2015 முடிய திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையான 10 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 1,38,680 மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.24.96 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று கடலோர மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வரும் ஏப்ரல் 2016 திங்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும்.

- பாரம்பரிய மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டில் 2,450 பயனாளிகளுக்கு ரூ.6.46 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2012–2013ஆம் ஆண்டில் 1,398 மீனவ பயனாளிகளுக்கு ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டிற்கு 635 பயனாளிகளுக்கு ரூ.1.90 கோடி உட்பொருத்து / வெளிப்பொருத்து இயந்திரம் வாங்குவதற்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 5,500 பாரம்பரிய மீன்பிடி படகு மீனவர்களுக்கு விற்பனை விரி விலக்களிக்கப்பட்ட மண்ணெண்ணெய் 1 லிட்டர் ரூ.25/– என்ற மானிய விலையில் வழங்கிட 2011–2012 முதல் 2015–2016 வரை ரூ.230.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- 29.11.2011 அன்று போதைப் பொருள் கடத்தியதாக பொய்யான குற்றம் சாட்டப்பட்டு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் கொழும்பு உயர்நீதிமன்றத்தால் 30.10.2014 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடம்



மீனவ கிராமத்தைச் சேர்ந்த 5 அப்பாவி மீனவர்கள் அரசின் இடைவிடாத தொடர் முயற்சியின் காரணமாக 19.11.2014 அன்று விடுவிக்கப்பட்டு 20.11.2014 அன்று தாயகம் திரும்பினார்கள். இம்மீனவர்களை விடுவித்திட வழக்கு செலவுக் கட்டணமாக மொத்தம் ரூ.25 இலட்சமும் அம்மீனவர்களது குடும்பத்திற்கு இடைக்கால நிவாரணம், தின உதவித்தொகை மற்றும் அவர்களது வாழ்க்கையைப் புதிதாக தொடங்கிடவும் ரூ.38.85 இலட்சம் நிவாரண உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

- அண்மைக்கடல் பகுதிகளில் கடல் மீன்வளத்தை அதிகரிக்க 17 இடங்களில் செயற்கை பவளப்பாறைகள் ரூ.2.63 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்ட பாரம்பரிய மீனவர்கள், சங்கு குளித்தல் தொழிலை நவீன முறையில் மேற்கொள்ளும் பொருட்டு பரீட்சார்த்த முறையில் "நீருக்கடியில் சுவாசிக்க உதவும் ஒருங்கிணைந்த தற்சார்பு உபகரணம்" (SCUBA – Self Contained Underwater Breathing Apparatus) அலகினை வாங்கிய 10 மீனவர்களுக்கு மானியத் தொகையாக மொத்தம் ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மீனவர்களின் பயன்பாட்டிற்காக காற்று கலன்களில் காற்றினை அடைப்பதற்கான காற்றழுத்தி (Compressor) ஒன்றும் ரூ.5.67 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய மாநில அரசு நிதிபங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டில் 109 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.89,12,500/–மும், 2012–2013ஆம் ஆண்டில் 126 மீனவ குடும்பங்களுக்கு ரூ.1,17,50,000மும், 2013–2014ஆம் ஆண்டில் 158 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.1,43,00,000மும், 2014–2015ஆம் ஆண்டில் 119 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.1,12,88,653மும், 2015–2016ஆம் ஆண்டில் 111 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.95,50,000மும் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து நிவாரணமாகப் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டில் 105 மீனவ இளைஞர்களுக்கு கடல்சார் கல்வி பயில ரூ.50 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு 139 மீனவ இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு 56 மீனவ இளைஞர்களுக்கு ரூ.20 இலட்சம் உதவித்தொகை இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ், ரூ.17.63 கோடி செலவில் சென்னை மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்திற்கு கூடுதல் நிதி ரூ.60.65 கோடியும், தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திற்கு கூடுதல் நிதி ரூ.57.40 கோடி மற்றும் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய ரூ.73.52 கோடியும் நிதி ஒப்பளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி கிராமத்தில் சுமார் ரூ.72.44 கோடி செலவில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையிலுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய மாநில நிதியுதவியுடன் ரூ.148 கோடிக்கான திருத்திய மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.09.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கடலூர் மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகளுக்காக தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியின் கீழ் ரூ.10.34 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணி முடிவுற்றுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் துறை ஆகிய இடங்களில் தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல் (BOOT) திட்டத்தின் கீழ் மீன்பிடித் துறைமுகங்கள்

அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டது. முட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் தோராயமாக ரூ.113.90 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது. தொழில்நுட்ப ஆலோசனைக்குழு வரைவு திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதர ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. மாநில அளவிலான சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தேசிய அளவில் அனுமதி பெற கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் துவக்கப்படும்.

- ரூ.78.93 இலட்சம் செலவில் தேசிய மீன்வள மேம்பாட்டுவாரியநிதியுதவியுடன்புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடை ஆகிய இடங்களில் மீன் இறங்கு தளங்களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், ரூ.7.78 கோடி செலவில் கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடையில் மீன் இறங்கு தளத்தை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் விரிவாக்கம் செய்யும் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு (NABARD-RIDF-XVIII) நிதியுதவியுடன் ரூ.62.95 கோடி செலவில் தமிழ்நாட்டில் 11 மீன் இறங்கு தளங்களும், ரூ.37.05 கோடி செலவில் 12 இடங்களில் அரசு மீன் விதை பண்ணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளில் 11 இடங்களில் மீன்இறங்கு தளங்கள் பணிகள் நிறைவுற்றுள்ளது. மேலும் 12 மீன் பண்ணைகளில் 11 இடங்களில் பணி நிறைவுற்றுள்ளது. மீதமுள்ள 1 இடத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளன

- ரூ.1.03 கோடி செலவில் பாரம்பரிய மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 இடங்களில், சூரிய சக்தி மற்றும் காற்று விசை மூலமாக இயங்கும் வழிகாட்டி விளக்குகள்.

- அவசரகால சுனாமி மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ், ரூ.132.35 கோடி திருத்திய மதிப்பீட்டில், நாகப்பட்டினம் மற்றும் பழையாற்றில் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தும் பணி, நாகூர் மற்றும் அண்ணன்கோயில் மீன்இறங்கு தளங்கள் அமைக்கும் பணிகளுடன் கடலூர் மாவட்டம் வெள்ளாறு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் உப்பனாறு ஆறுகளின் முகத்துவாரம் நிலைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளில் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதர பணிகள் அனைத்தும் முடித்து பயன்பாட்டில் உள்ளது.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அமைக்க ரூ.50 இலட்சம் செலவில் 50 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டு இவை தற்போது செயல்பாட்டில் உள்ளன.

- நீர்த்தேக்கங்களில் மீன்வளத்தினைப் பாதுகாக்கும் பணிக்காக 38 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குவதற்கு ரூ.107.11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு பணிக்காக 38 படகுகள் விநியோகிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- சூரை மீன்பிடிப்புப் பயிற்சி வழங்கவும் கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குவதற்காக தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் 2011–2012இன் கீழ், ரூ.84.97 இலட்சம் நிதி, மீனவளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மூன்று படகுகளில் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு படகுகள், மீன்துறை உதவி இயக்குநர், மீன்பிடி துறைமுக மேலாண்மை பிரிவு, தூத்துக்குடி வசமும், மற்றொரு படகு மீன்துறை உதவி இயக்குநர், கன்னியாகுமரி வசமும் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- பூண்டி நீர்தேக்கத்தில் மிதவைக் கூடுகளில் மீன் வளர்ப்பதற்காக தேசிய வேளாண்மை அபிவிருத்தித் (தேசிய புரத இணை உணவு இயக்கம்) திட்டம் 2011–2012இன் கீழ், ரூ.334 இலட்சம் நிதி மீன்வள தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.



- ரூ.135.26 இலட்சம் செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் பரங்கிப்பேட்டையில் ஒருங்கிணைந்த கடலோர மீன்வளர்ப்பு மாதிரிப் பண்ணை அமைக்கப்பட்டு மீன்வளர்ப்புப் பணி மற்றும் பயிற்சிகள் நடைபெற்று வருகிறது.

- ரூ.85.85 இலட்சம் செலவில் 1,300 கடல் மீனவர்களுக்கு பிற மாநிலங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.20.81 கோடி செலவில் அரசு மீன் பண்ணைகளை சீரமைத்தல், அலுவலர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கணவாய் மீன்பிடித்தல், நவீன மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் உட்பட 2012–2013ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- 2013–2014ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்த்தல், மீன் மற்றும் இறால் உற்பத்தியை புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றி பெருக்குதல், உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலை வழங்குதல், சுகாதாரமான முறையில் மீன்களை கையாளும் உபகரணங்களை வழங்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்திட ரூ.4.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2013–2014ஆம் ஆண்டில் தமிழகத்தில் 3,687 பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் 20.33 இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன. இதற்காக மீன்குஞ்சுகள் தீவனம் உரம் மற்றும் அறுவடை போன்ற உள்ளீட்டு செலவினங்களுக்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டு மீன்வளர்ப்புப் பணிகள் நடைபெற்று 441.066 டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது.

- 2014–2015ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்த்தல் பணிக்கு அரசால் ரூ.113.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. டிசம்பர் 2014 முடிய 54.26 எக்டேர் பரப்பில் 936 பண்ணைக் குட்டைகளில் 6.88 இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன்வளர்ப்புப்பணி நடைபெற்று வருகிறது. மேலும், மீன்குஞ்சுகள் இருப்புக்கான 50 சதவிகிதம் உள்ளீட்டு மானியம் விடுவிக்கப்பட்டது. இதுவரை 240.80 டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியுதவியின் கீழ், பண்ணைக் குட்டைகளில் கிப்ட் திலேப்பியா மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.25.38 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணையாக ரூ.13.38 இலட்சம் விடுவிக்கப்பட்டது. மார்ச் 2015 முடிய 500 பண்ணைக் குட்டைகளில் 1.87 இலட்சம் குறுகிய காலத்தில் வேகமாக வளரும் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 66.71 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது தவணையாக ரூ.12 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு மேலும் 500 பண்ணைக் குட்டைகளில் மீன்குஞ்சு இருப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்தில் ஒரு மீன் சுத்தப்படுத்தும் நிலையம் ரூ.1 கோடி செலவில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மீனவ மகளிருக்கு மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்க தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு இந்நிலையம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் ரூ.12.05 கோடி செலவில் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

- தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், 2011–2012 முதல் 2014–2015ஆம் ஆண்டு வரை 14 மாவட்டங்களிலுள்ள 40 உபவடி நிலப் பகுதிகளுக்கு பல்வேறு மீன் உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ரூ.15.63 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.10.60 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் நிலத்தில் 109 மீன்குஞ்சுப் பண்ணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 35 நவீன மீன் விற்பனை அங்காடிகள் 4 மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் மற்றும் நைல்

திலேப்பியா மற்றும் அமூர் கெண்டை மீன் உற்பத்தி மையம் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

- உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்கிட மீன் கூண்டுகளில் மீன் வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு 2012–2013ஆம் ஆண்டில் ரூ.9.58 கோடி தேசிய புரத இணை இயக்கம் மூலம் ஒப்பளிக்கப்பட்டு மீன்வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு பண்ணை அமைக்கும் திட்டம் செயல்படுத்திட 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.5.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மீன்வளர்ப்பு, மீன்குஞ்சு வளர்ப்பதற்கான மானியம் மீன்வளர்ப்போருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- 2014–2015 ஆம் ஆண்டில் அரசு மீன் விதைப் பண்ணைகளில் 35.28 கோடி நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2015 –2016 ஆம் ஆண்டு டிசம்பர் 2015 வரை ரூ.39.64 கோடி நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய வருட சாதனைகளை விஞ்சியதாகும்.

- நபார்டு – RIDF XIX திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் ஆண்டில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தவும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தவும் அரசால் ரூ.75 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- நபார்டு – RIDF XIX திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் ஆண்டில் ரூ.11 கோடி செலவில் நாகப்பட்டினம் மாவட்டம் வெட்டாறு முகத்துவாரத்தை நிலைப்படுத்தவும், ரூ.20.20 கோடி செலவில் கடலூர் மாவட்டம் வெள்ளாறு முகத்துவாரத்தை நிலைப்படுத்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வெட்டாறு முகத்துவாரப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. வெள்ளாறு முகத்துவார பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- தரங்கம்பாடி, ஆற்காட்டுத்துறை, ஜெகதாப்பட்டினம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக அரசால் ரூ.2 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தரங்கம்பாடி மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளது. ஆற்காட்டுத்துறை, ஜெகதாப்பட்டினம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ள உலகவங்கி நிதியுதவியுடன் CDRRP திட்டத்தின் கீழ், ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆய்வு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்ஆய்வு பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களிடம் விருப்பம் தெரிவிப்பதற்கான வேண்டுகோள் (EOI) கோரப்பட்டுள்ளது.

- நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியை அதிகரிக்க 2011–2012ஆம் ஆண்டில் ரூ.79.04 இலட்சம் செலவில் 69.26 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. 2012–2013ஆம் ஆண்டில் ரூ.25.87 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு விரலிகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. மேட்டூர் மற்றும் திருக்காம்புலியூரில் நன்னீர் மீன்குஞ்சு உற்பத்தி மையம் ரூ.25.20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் டிரவுட் மீன்குஞ்சு பொரிப்பகத்தினை மேம்படுத்த ரூ.30 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்தது.

- மீன் உற்பத்தியை அதிகப்படுத்திட மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 53 நீர்த்தேக்கங்களின் மீன்பிடிக்கும் உரிமையை குத்தகைக்கு விடும் முடிவினை தமிழக அரசு எடுத்துள்ளது. இது வரை 33 நீர்த்தேக்கங்கள், குத்தகைக்கு விடப்பட்டு ரூ.17.56 கோடி குத்தகை தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 2015–2016ஆம் ஆண்டில் மீதமுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகை பொது ஏலம் மூலம் நடத்திட திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- 2013–2014ஆம் ஆண்டில் தேசிய மேம்பாட்டு வாரியம் மூலம் ரூ.7 இலட்சம் செலவில் பண்ணைக்குட்டை பயனாளிகளுக்கு மீன்வளர்ப்பு பயிற்சி வகுப்பு நடத்த ஒப்பளிக்கப்பட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.



- மேற்கு தொடர்ச்சி மலை நீர்பிடிப்புப் பகுதிகளின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2012–2013ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை மற்றும் அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.70.13 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணி முடிவடைந்துள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் மேற்கு தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள பாசனக் குளங்களின் மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய உள்ளீட்டு மானியமாக ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டத்தின் கீழ், ரூ.66.66 இலட்சம் மீன்வள மேம்பாட்டிற்காக மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் இறால் வளர்ப்போருக்கு மானியம் வழங்கிட ரூ.3.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.77.33 இலட்சம் மானியம் பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 118 எக்டேர் பரப்பளவில் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த 77 உவர்நீர் மீன்பண்ணை விவசாயிகள் பயனடைந்தனர்.

- பல்வேறு நலத்திட்டங்களை மீன்துறை சார்நிலை அலுவலகங்கள் சீரிய முறையிலும் விரைவாக நிறைவேற்றும் பொருட்டும் தமிழக அரசு ரூ.1.14 கோடி செலவில் 19 ஈப்புகளை வழங்கியுள்ளது.

- ரூ.1.83 கோடி செலவில் 21 நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. ரூ.7.70 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளும் உபகரணங்கள் இந்நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டில் கூடுதலாக சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் பல்வேறு இடங்களில் சென்னை மதுரை உள்ளிட்ட பெரு நகரங்களில் ரூ.40 இலட்சம் செலவில் 4 நவீன சில்லரை மீன் விற்பனை அங்காடிகள்.

- பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் உள்நாட்டு மீன் இறங்கு தளம்.

- சென்னை சாந்தோமில் ரூ.250 இலட்சம் செலவில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு கூடுதல் நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கோயம்புத்தூரில் உள்ள உக்கடத்தில் மொத்த மீன் விற்பனை சந்தையை ஐதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி ரூ.2.25 கோடி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி நிதியுதவி ரூ.0.99 கோடி ஆகமொத்தம் ரூ.3.24 கோடி செலவில் குளிர்காப்பு அறை பனிக்கட்டி அறை கழிவு அகற்றும் வசதிகளுடன் நவீனப்படுத்தி தரம் உயர்த்திட திட்டமிடப்பட்டு, இப்பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி மூலமாக முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மீன் சந்தை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் 01.03.2015 முதல் இயக்கப்படுகிறது.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் விற்பனையை மேம்படுத்துவதற்காக கோயம்புத்தூர் குறிச்சியில் ரூ.70 இலட்சம் செலவில் நவீன மீன் கையாளும் நிலையம் மற்றும் நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் மீன் விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 40 சதவிகித மானிய திட்டத்தின் கீழ், 4 மகேந்திரா பொலிரோ பிக் அப் வாகனங்கள் ரூ.26.8 இலட்சத்தில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- இவ்வரசு பொறுப்பேற்ற பின் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் 19 ஆண்டுகளுக்குப் பின், 8 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 20 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் தகுதியான பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இளநிலை பொறியாளர், இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள்

மற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் உள்ளிட்ட 20 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் முதல் முறையாக ரூ.44.55 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாக 2012–2013ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.1.44 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வாணியஞ்சாவடியில் ரூ.89.08 இலட்சத்தில் மீன் விற்பனை அங்காடி மற்றும் மீன் உணவகம்.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.30.75 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ மகளிர்களுக்கு தலா ஒரு நடமாடும் மீன்விற்பனை ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் வையாவூர் மீனவ கிராமத்தில் நவீன மீன்விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மீனவ மகளிர்களை பிற மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தில் 03.07.2013 அன்று நடைபெற்ற தேர்தலில் 17 பேர் நிருவாகக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்கிட ஜெகதாப்பட்டினம் மீனவ கிராமங்களில் டீசல் விற்பனை நிலையம் துவங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 146 விசைப்படகு மீனவர்களும், 80 நாட்டுப்படகு மீனவர்களும் பயனடைவர்.
- அரியலூரில் நவீன மீன் விற்பனை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.
- தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் மீனவர் கூட்டுறவு சங்க மீன் விற்பனையை மேம்படுத்துவதற்காக தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் 40 சதவீதம் மானியத் திட்டத்தின்கீழ் மூன்று மகேந்திரா போலிரோ பிக்அப் ஊர்திகள் ரூ.16.21 இலட்சம் மதிப்பில் வாங்கி மூன்று மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் மொத்தம் 260 மீனவ மகளிருக்கு சூரிய ஒளியால் இயங்கும் மின் விளக்குகளைதயாரித்தல் மற்றும் அவற்றினைப் பழுது நீக்குதல் பயிற்சி ரூ.5.42 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுவருகிறது.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் 80 விசைப்படகு மீனவர்களுக்கு கடல் மின்னணு உபகரணங்கள் இயக்குதல் மற்றும் இயந்திர பராமரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1,000 மீனவர்களுக்கு 40 தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
- 2011–2012ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இத்துறையின் பல்வேறு பதவிகளுக்கான 444 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.
- சர்வதேச தரத்துடன் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மாமல்லபுரத்தில் கடற்காட்சியகம் அமைத்திட, அரசு கலந்தாலோசனை மற்றும் விளம்பர செலவினங்களுக்காக ரூ.2.5 கோடி ஒப்பளித்துள்ளது. விரிவான திட்ட கோட்பாடு, செய்யத்தக்கமைக்கான அறிக்கை மற்றும் தகுதி பெறுதலுக்கான வேண்டுகோள் (RFQ) ஆகியவற்றிற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. வரைவு ஒப்பந்த அறிக்கைக்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட உடன் தனியார் பங்களிப்பாளரை இறுதி செய்வதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்படும்
- சேத்துப்பட்டு ஏரியினை புனரமைத்து ரூ.42 கோடி செலவில் பொழுதுபோக்கு தூண்டில் மற்றும் பசுமைப் பூங்கா அமைப்பதற்காக அரசு ஒப்புதல் பெறப்பட்டு விரிவான திட்ட



அறிக்கை பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்காக 2013–2014ஆம் ஆண்டிற்கு முதல் கட்டமாக ரூ.22 கோடியும் 2015–2016ஆம் ஆண்டில் ரூ.12.50 கோடியும் விடுவிக்கப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை நிலைப்படுத்த ஆய்வுகள் மேற்கொண்டு தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை மூலம் மாதிரி ஆய்வுகள் முடிக்கப்பட்டு, சுற்றுசூழல் அறிக்கை தயாரிக்கும் பணி நடைப்பெற்று வருகிறது.
- 2014–2015ஆம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.60 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனப்படுத்தவும், ரூ.18 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் உள்ள ஆற்று முகத்துவாரத்தை நிலைப்படுத்தவும் அரசு முனைந்துள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. புன்னக்காயல் திட்டத்திற்கு மாநில சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் கடல்சார் ஒழுங்கு முறை ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. மல்லிப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக சூற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 2014–2015ஆம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் CDRRP திட்டத்தின் கீழ், புதிய திட்டங்களுக்கான ஆய்வு பணித்தளங்கள் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 1) ஜெகதாப்பட்டினம் 2) ஆற்காட்டுத்துறை 3) இராமேஸ்வரம் 4) இணையம்புத்தன்துறை ஆகிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரிடம் விருப்பம் தெரிவிப்பதற்கான வேண்டுகோள் கோரப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டு நபார்டு – RIDF XX, திட்டத்தின் கீழ், ரூ.79.40 கோடி செலவில் 9 இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கவும், 4 இடங்களில் மீன்விதைப் பண்ணைகள் அமைக்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒப்பந்ததாரர் நிர்ணயிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.3.60 கோடி செலவில் இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மீன்வளத்துறைக்கு ஒருங்கிணைந்த நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.67 இலட்சம் செலவில் சென்னை இராயபுரம், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஆணை பெறப்பட்டு சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிகள் முடிவுற்றது.
- 2015–2016 ஆம் நிதியாண்டில் அரசு நபார்டு – RIDF XXI, திட்டத்தின் கீழ் 5 மீன்இறங்கு தளங்கள், 10 மீன்பண்ணைகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் கோவளம் கடற்கரையோரப் பாதுகாப்பிற்காக ரூ.68.30 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் சூரை மீன்பிடித் துறைமுகம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் என்னும் இடத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும் கடலூர் மாவட்டம் முதுநகரில் பழைய மீன்பிடித் துறைமுகத்தை புனரமைக்கவும் ரூ.4 கோடி செலவில் ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்க அரசு ஒப்பளித்துள்ளது. ஆலோசகர் நியமிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.52 கோடி செலவில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கோடு, தமிழ்நாட்டின் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் உள்ள மீன்பிடிக் கலன்களுக்கு கம்பியில்லா தொலை

தொடர்பு வசதிகள், ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- நிலைத்த நீடித்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL–I) திட்டத்தின் பரிந்துரைகளை, மீன்வள மேலாண்மையில் கூட்டு மேலாண்மை அறிமுகப்படுத்துதல், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் மற்றும் மாற்றுவதற்கான உத்திகளை உருவாக்குதல் மற்றும் அறிவுசார் மேலாண்மையை தரம் உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்திட ரூ.49 கோடி உலக வங்கியால் ஒப்பளிக்கப்பட்டு திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- ஊரக மகளிர்க்கு வண்ண மீன் வளர்ப்பின் மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்கிடும் பொருட்டு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியின் கீழ், ஒப்பளிக்கப்பட்ட ரூ.2.13 கோடியில் முதல் தவணையாக ரூ.1.06 கோடி பெறப்பட்டுள்ளது. இத்தொகையிலிருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 250 பயனாளிகளுக்கு ரூ.67.91இலட்சம்முதல் தவணை மானியமாகவும் பயிற்சிக்காகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்**

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று ரூ.12 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நிருவாக கட்டடம் நாகப்பட்டினத்தில் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. 2014–2015 ஆண்டிற்கு ரூ.6.83 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2015–2016ஆம் ஆண்டிற்கு ரூ.6.59 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு தலா ரூ.1.65 கோடி வீதம் மூன்று தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் உள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையமானது மீன்வளக் கல்லூரிமற்றும் ஆராய்ச்சி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு 4 ஆண்டு இளநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பு (பி.எப்.எஸ்சி) வழங்கப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையமானது மீன்வளப் பொறியியல் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு இந்தியாவிலேயே முதன் முறையாக மீன்வளப் பொறியியல் பட்டப்படிப்பு துவக்கப்பட்டுள்ளது. இந்த கல்வி ஆண்டில் (2015 – 2016) 20 மாணவர்கள் மீன்வளப் பொறியியல் பட்டப்படிப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ளனர். ரூ. 12 கோடி மதிப்பீட்டில் மீன்வளப் பொறியியல் கல்லூரியின் கல்விக்கூட கட்டடங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 13.11.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மற்றும் பிற விரிவாக்க மையங்களுக்காக ரூ.12.62 கோடி ஒப்பளிக்கப்பட்டு, தலா ரூ.3.15 கோடி வீதம் மூன்று தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் 40 மாணவர்களுக்கு இளங்கலை மீன்வளப் பட்டப்படிப்பிற்கும், 22 மாணவர்களுக்கு முதுநிலை பட்டப்படிப்பிற்கும் மற்றும் 11 மாணவர்களுக்கு முனைவர் பட்டப்படிப்பிற்கும் சேர்க்கை நடைபெற்றது.

- இந்தியாவில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மீன் தர உறுதிபாடு மற்றும் மேலாண்மை துறை முதுநிலை அறிவியல் பட்டப்படிப்பினை 2012–2013 முதல் தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கி வருகிறது. சீனாவில் உள்ள குவான்டாங் பல்கலைக்கழகத்தின் உயர்நிலை பிரதிநிதியான பல்கலைக்கழக துணை தலைவர் பேராசிரியர். ரூ. ஜியான்சென் தூத்துக்குடி தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தினை 2014 அக்டோபர் 15, 16ஆம் தேதிகளில் பார்வையிட்டதுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திட மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பிற அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கருத்தரங்கு 13.09.2013 அன்று மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடியில் தொலைநோக்குத் திட்டத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது

- 22 தொழில் நுட்பங்கள் குறித்து மீன் விவசாயிகள் மீன் பதனப்படுத்துனர், மீன் தொழில்முனைவோர் மற்றும் மீனவர்களின் பயன்பாட்டிற்காக 22.05.2013 அன்று தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தால் கூட்டம் நடத்தப்பட்டது.



- அகில இந்திய வானொலி நிலையம் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியுடன் இணைந்து அலங்கார மீன் வளர்ப்பு, சிறந்த மேலாண்மை பயிற்சி, நன்னீர் மீன் வளர்ப்பில் மேலாண்மை ஆகிய தலைப்புகளின் வானொலி வேளாண் பள்ளி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- குறை அடர்த்தியுள்ள உப்பு நீரில் பண்ணை விவசாயிகள் வனாமி இறால் வளர்த்து பயன்பெறுதல் எனும் தலைப்பில் மீனவ விவசாயிகள் சந்திப்பு 14.11.2014 அன்று தஞ்சாவூரிலும், 20.11.2014 அன்று திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியிலும், 07.11.2014 மற்றும் 18.12.2014 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் தலைஞாயிறு மற்றும் சீர்காழியிலும் நடைபெற்றது.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2015 அன்று திலேப்பியா ஆராய்ச்சி மையம் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் (10 ஏக்கர்) திறந்து வைக்கப்பட்டது. இம்மையமானது தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் (ரூ.121.04 இலட்சம்) நிறுவப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2015 அன்று சினை இறால் வங்கி கன்னியாகுமரி மாவட்டம் கணபதிபுரத்தில் (7.5 ஏக்கர்) திறந்து வைக்கப்பட்டது. இம்மையமானது தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் (ரூ.198.91 இலட்சம்) நிறுவப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2015 அன்று கடல் மீன் வளர்ப்பு மையம் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் (25 ஏக்கர்) திறந்து வைக்கப்பட்டது. இம்மையமானது தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் (ரூ.184.50 இலட்சம்) நிறுவப்பட்டுள்ளது.

- அமெரிக்காவில் உள்ள அபர்ன் பல்கலைக்கழகம் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்துடன் 07.10.2013 அன்று கல்வி மற்றும் ஆராய்ச்சியில் கூட்டு முயற்சிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது.

- கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்துடன் 22.10.2015 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது.

- மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பொன்னேரியில் தொழில் நுட்பங்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு தொழில் நுட்பங்கள் பற்றிய மூன்று மாத பயிற்சியானது 10 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

- தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் அங்கமான கடல்வாழ் நீர் உயிரின வளர்ப்புத்துறை மூலமாக கடற்பாசி உற்பத்தி மற்றும் இறால் பண்ணை உதவியாளர் பயிற்சிகள் 9 நபர்களுக்கு அளிக்கப்பட்டது.

- பல்வேறு நிதி நிறுவனத்தில் இருந்து சுமார் ரூ.22.86 கோடி பெறப்பட்டு 31 ஆராய்ச்சி திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

- ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ், தூத்துக்குடியில் இயங்கி வரும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மீன் தர உறுதிப்பாடு மற்றும் மேலாண்மைத் துறையில் மீன் தரப்பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாட்டு சான்றிதழ் மையம் தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், உயிரியியல் அடிப்படையில் பாதுகாக்கப் பெற்ற அலங்கார சினை மீன் வங்கியை மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் துறை மாதவரம், சென்னையில் தேசிய மீன் வள மேம்பாட்டுக் கழகத்தின் (என்எப்டிபி) உதவியுடன் நிறுவியது.

- தேசிய வேளாண் அபிவிருத்தி வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.147 இலட்சத்தில் பண்ணைக் குட்டைகளில் மரபணு மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா உருவாக்கம் மற்றும் பகிர்ந்தளித்தலுக்கான மையம் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள உயிர்த் தொழில்நுட்ப துறையின் கீழ் நிறுவப்பட்டது.

- தூத்துக்குடியில் இயங்கி வரும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில்

அமைந்துள்ள மீன்தர உறுதிபாடு மற்றும் மேலாண்மை துறையில் உள்ள மீன்தரக் கட்டுப்பாடு மற்றும் சான்றிதழ் மையத்திற்கு இந்திய தேசிய வேளாண் அபிவிருத்தி வாரியம் அளித்துள்ள ரூ.101 இலட்சம் நிதியுதவியால் தமிழக மீன்வளர்ப்போர் நலனுக்காக மீன் தீவன தர கண்காணிப்பு ஆய்வகம் நிறுவப்பட்டது.

- தேசிய வேளாண் அபிவிருத்தி வாரியம் நிதியுதவியுடன் ரூ.111 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் மாதவரத்தில் அதிக பொருளாதாரம் வாய்ந்த அலங்கார மீன்களுக்கான வளர்ப்புமுறை மற்றும் மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க தொழில்நுட்பம் மேம்படுத்தப்பபட்டுள்ளது.

- தூத்துக்குடியில் இயங்கி வரும் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள மீன்பிடித் தொழில்நுட்பவியல் மற்றும் மீன்வளப் பொறியியல் துறைக்கு இந்திய தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், அளித்த ரூ.2 கோடி நிதியுதவி தமிழக மீனவர்களுக்கென இயந்திர பராமரிப்பு மற்றும் கடல் பாதுகாப்பு பற்றிய பயிற்சி அளிக்க பணிபட்டறை கட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட குளோரோபெனிகால் படிவை கண்டறிந்து மதிப்பீடு முறை, மீன் மக்ரோனி, மதிப்பூட்டப்பட்ட மீன்விரல்கள், சூடேற்றப்பட்ட, குளிர்விக்கப்பட்ட மீன்குழம்பு ஆகிய 4 புதிய தொழில்நுட்பங்களை மாண்புமிகு கால்நடை பராமரிப்பு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் காட்டுப்பாக்கத்தில் மீன்வள வாரவிழாவில் 19.01.2013 அன்று வெளியிட்டார்.

- மீன்வளத் தொழில்நுட்பங்களின் சம்பந்தமாக பல்கலைக்கழகத்தின் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் மூலம் உள் மற்றும் வெளி வளாக பயிற்சிகள் நடைபெற்றது. இதில் 9,749 தொழில் முனைவோர்கள் பயன்பெற்றனர்.

- மீன்பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் 32 வகையான பயிற்சி கையேடுகள்/ மடப்பிதழ்கள் / கோப்புரைகள் தயாரித்து வழங்கப்பட்டன.

- தேசிய மற்றும் சர்வேதேச அளவில் மீன்வள ஆராய்ச்சி சம்பந்தமான 67 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 23 பொது கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- குட்டியிடும் வண்ண மீன்வளர்ப்பு மற்றும் சுகாதாரமான முறையில் உலர்மீன் தயாரித்தல் சுகாதாரமான முறையில் மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்களை பராமரித்தல் சம்பந்தமாக பல்கலைக்கழகத்தின் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் மூலம் உள் மற்றும் வெளி வளாகப் பயிற்சிகள் நடைபெற்றது. இதில், கடலோர மீனவர்கள் மீன்பண்ணையாளர்கள், மீனவ மகளிர் சுயஉதவிகுழு உறுப்பினர்கள் 405 நபர்கள் பயன் அடைந்தனர்.

- திலேப்பியா மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த கெண்டை மீன் வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் நன்னீர் மீன் பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 102 நபர்கள் பயனடைந்தனர்.

- மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தூத்துக்குடியில் தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு கடல் உயிரின பாதுகாப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் இரு குழுக்களாக 34 அதிகாரிகள் பயனடைந்தனர்.

- மீன் மற்றும் இறால் பண்ணையாளர்களுக்கு நீர் தர மேலாண்மை வண்ண மீன் வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் ஏற்படும் சந்தேகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டன. இதில் 4,105 தொழில்முனைவோர் பயனடைந்தனர்.

- நன்னீர் வண்ணமீன் தொழில்நுட்ப பூங்கா அமைக்க ரூ.10.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பூங்காவின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள வண்ணமீன் வளர்ப்போர், தொழில்முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயனடைவர். இப்பூங்காவானது மாதவரத்தில் மீன்வளப் பல்கலைகழக வளாகத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

### பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# நலிந்த மக்கள் வாழ்வுயர நலம் சேர்க்கும் வளத்திட்டங்கள்



- வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து 69 சதவிகித இட ஒதுக்கீட்டினை செயல்படுத்தி சமூகநீதி நிலை நாட்டப்பட்டுள்ளது.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் ஆண்டுப் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்வு.
- 51 தமிழாசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கம்.
- பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவர்களுக்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 15 பள்ளிகளில் ஆங்கில வழி பாலர் வகுப்புகள் (LKG) தொடக்கம்.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் ரூ.10,000/– ரூ.7,000/– மற்றும் ரூ.5,000/– என உயர்வு.

- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாகத் தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை/மேனிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூ.10,000/– பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் புதியத் திட்டம் செயலாக்கம்.

- ரூ.3.05 கோடி செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள், குடிநீர் வசதிகள், ஆய்வக உபகரணங்கள், கழிப்பறைகள், கூடுதல் வகுப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள்.

- வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 218 விடுதிகளுக்கு ரூ.216.38 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள்.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கான மாத உணவுப்படி 20.09.2011 முதல் 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்வு. இக்கட்டணங்கள் 01.03.2013 முதல் மீண்டும் முறையே ரூ.755/– ஆகவும், ரூ.875/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- ரூ.16.53 கோடி செலவில் சிறுபான்மையின மாணவியருக்கு 8 விடுதிகள் உட்பட மொத்தம் 77 புதிய விடுதிகள்.

- விடுதிகளில் கூடுதலாக 10 விழுக்காடு மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம்.

- 500 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் புதிய சமையல் பாத்திரங்கள்.

- 100 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.12.5 இலட்சம் செலவில் புதிதாக அரைவை இயந்திரங்கள்.

- பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பயின்று அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் ரூ.10,000/–, ரூ.7,000/–, ரூ.5,000/– என உயர்வு.

- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்வு.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பல்வகைச் செலவினம் முறையே ரூ.25/– மற்றும் ரூ.50/– என்பதிலிருந்து ரூ.50/– மற்றும் ரூ.75/– ஆக உயர்வு.

- 120 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.53 இலட்சம் செலவில் எரிவாயு இணைப்புகள் (LPG).

- 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.57 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள்.

- 22 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர்கள் விடுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் பாதுகாப்புச் சுவர் அமைப்பு.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள் அளிப்பு.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் ரூ.3,000/–, ரூ.2,000/–, ரூ.1,000/– பரிசுத்தொகை முறையே ரூ.6,000/–, ரூ.4,000/–, ரூ.2,000/– என இரண்டு மடங்காக உயர்வு.

- அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 22,18,412 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.736.81 கோடி செலவில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.



- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 28,56,197 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.802.38 கோடி செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 13,440 பயனாளிகளுக்கு ரூ.4.78 கோடி செலவில் விலையில்லா தையல் இயந்திரங்கள், 10,034 பயனாளிகளுக்கு ரூ.4.25 கோடி செலவில் விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் நிருவாக மானியம் 45 இலட்சம் ரூபாயிலிருந்து, ஒரு கோடி ரூபாயாக உயர்வு.

- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2,400–லிருந்து 2,600 ஆக உயர்வு. 750 ரூபாயாக வழங்கப்பட்டுவந்த மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு.

- வக்ஃபு வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக் கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக ரூ.3 கோடி.

- தமிழ் மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிருவாக மானியம் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்வு.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை 1,03,001 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பயனாளிகளுக்கு ரூ.273.96 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 36,964 சிறுபான்மையினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.113.19 கோடி கடன்.

- ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படுவதை போன்று 75,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி மேற்படிப்பு உதவித்திட்டத்தின் கீழ் கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்களும் 2012–2013ஆம் ஆண்டு முதல் ரூ.16.44 கோடி செலவில் முழுமையாக வழங்கப்படுகிறது.

- 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் 1,000 இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு (500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்கள்) அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு ஒரு நபருக்கு ரூ.3,000/– வீதம் பரிசுகள் வழங்க “முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்” என்ற புதியத் திட்டம் செயலாக்கம்.

- மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் 12ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்லூரிகளிலும் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு முறையே தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா விருதுத்தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி ரூ.1.86 கோடி செலவில் 1,865 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 6,550 மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த ஒரு நபருக்கு ரூ.2,800/– வீதம் ரூ.1.83 கோடி செலவில் பயிற்சி.

- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் மற்றும் காப்பாளினிகள் கல்வியாண்டின் இடையில் ஓய்வு பெறும்போது பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படுவது போன்று கல்வி ஆண்டு இறுதி வரை பணிபுரியும் வகையில் பணி நீட்டிப்பு.

- திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தில் (Skill development Training) ரூ.80.74 இலட்சம் செலவில் பல்வேறு பயிற்சிகளைப் பெறும் 4,370 பயனாளிகளுக்கு ரூ.400/– மாதாந்திரப் பயிற்சிக்கால உதவித்தொகை வழங்கல்.

- 45 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் துப்புரவாளர் பணியிடங்கள் அனுமதி.

- மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.47 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டிகள் (Special Guide).

- 1,275 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.70.17 இலட்சம் செலவில் மின் அரைப்பான்கள்.

- 105 கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 8,465 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.71 கோடி செலவில் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளது.

- மசூதிகள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக ரூ.2.40 கோடி நிதி.

- பள்ளி வாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக புதிதாக “வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி” உருவாக்கப்பட்டு ரூ.3 கோடி நிதி.

- மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகை 1:1 என்பதற்கு பதிலாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தப்பட்டு ரூ.3.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கிறிஸ்துவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் ஒரு கோடி நிதியுதவி. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,968 பயனாளிகள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

- 476 மாணவியர் விடுதிகள் மற்றும் 77 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு அவர்களின் நலனை பாதுகாக்க ரூ.1.39 கோடி செலவில் தலா ஒரு சுகாதார குட்டை தகளி (Sanitary Napkin Incinerator) வழங்கப்பட்டுள்ளது.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்கக்கு ரூ.1.48 கோடி செலவில் போர்வைகளும் மற்றும் ரூ.46 இலட்சம் செலவில் பாய்களும், வழங்கப்பட்டன.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பொது அறிவுத்திறனை மேம்படுத்தவும் நடப்பு நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஏதுவாகவும் கல்லூரி விடுதி ஒன்றுக்கு ரூ.25,000/–வீதமும் பள்ளி விடுதி ஒன்றுக்கு ரூ.5,000/– வீதமும் அனைத்து விடுதிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் ரூ.1.02 கோடி செலவில் வழங்கப்பட்டன.

- மாணவ/மாணவியர்கள் தங்கிப் பயிலும் 300 விடுதிகளுக்கு ரூ.18 இலட்சம் செலவில் பல்நோக்கு தீ அணைப்பான் கருவிகள் வழங்கப்பட்டன.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவுகளுக்கான கட்டணத்தை பள்ளி விடுதி மாணவ/ மாணவியருக்கு ரூ.2/–லிருந்து ரூ.20/–ஆகவும் கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு ரூ.3/–லிருந்து ரூ.40/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.85 இலட்சம் ஒதுக்கீடு.

- விடுதிக் கட்டடங்களின் பராமரிப்பு பணிகளுக்காக ஒரு முறை ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

- 1,266 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு ரூ.1.01 கோடி செலவில் இட்லி வேக வைப்பான்கள்.

- பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.39 இலட்சம் செலவில் விளையாட்டு சாதனங்கள்.

- கல்லூரிகளுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ரூ.9 கோடியே 75 இலட்சம் செலவில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் உண்டி உறையுள் கட்டணங்கள் வழங்கப்பட்டது.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி இதற்காக ரூ.23.24 கோடி அனுமதி.

- 3 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 அரசு கள்ளர் சீரமைப்பு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 அரசு







கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகவும் ரூ.3.29 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- 52 அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.10.40 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கள்ளர் சீரமைப்புக் கல்வி அலுவலருக்கு ரூ.9 இலட்சம் செலவில் ஓட்டுநர் பணியிடத்துடன் கூடிய வாகனம் வழங்கப்பட்டது.

- 52 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு தலா ரூ.50,000/– வீதம் ரூ.26 இலட்சம் செலவில் விளையாட்டு பொருட்கள் வாங்கப்பட்டது.

- உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகப் பயின்று 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.15,000/– ரூ.10,000/– மற்றும் ரூ.5,000/– எனவும், 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.10,000/–, ரூ.5,000/– மற்றும் ரூ.3,000/– எனவும் உயர்வு.

- 500 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் பாத்திரங்கள்.

- 14 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.28 இலட்சம் செலவில் நீராவி சமையல் கலன்கள்.

- 1,304 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு ரூ.162.13 இலட்சம் செலவில் தலையணைகள்.

- 15பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.141.41 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்கள்.

- 67 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல கல்லூரி விடுதிகளுக்கு ரூ.7.91 இலட்சம் செலவில் இரும்பு புத்தக அலமாரிகள்.

- 15 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.24 இலட்சம் செலவில் கணினி மற்றும் உபகரணங்கள்.

- 15 அரசு கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் ரூ.75.75 இலட்சம் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அறிமுகம்.



- புதியதாக தரம் உயர்த்தப்பட்ட 8 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 5 கணினிகள் வீதம் ரூ.22.40 இலட்சம் செலவில் 40 கணினிகள் மற்றும் உபகரணங்கள்.
- 3 மாவட்டங்களுக்கு ரூ.18 இலட்சம் செலவில் பழைய ஈப்புக்கு பதிலாக புதிய ஈப்புகள்.
- தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.82 கோடி செலவில் புதிய 10 கல்லூரி விடுதிகள்.
- 10 கல்லூரி விடுதிகளில் ரூ.4.5 கோடி செலவில் கூடுதல் தங்கும் வசதிகள் (Dormitories) ஏற்படுத்துதல்.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி காப்பாளர் காப்பாளினிகளுக்கு அதிகாரம் வழங்கி ஓர் விடுதிக்கு ஓர் ஆண்டிற்கு ரூ.15 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.195.75 இலட்சம் ஒப்பளிப்பு.
- மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் 54 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேனிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகை.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பணிபுரியும் 1,000 சமையலர் / உதவி சமையலர்களுக்கு பணியிடை பயிற்சி.

**2015–2016ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்**

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்காக ரூ.2.82 கோடி செலவில் 10 புதிய கல்லூரி விடுதிகள் துவக்கப்படும்.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளின் பராமரிப்பு பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.
- தருமபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பாளர் பணியிடம் ரூ.6.79 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.
- சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயில்வதற்கு நிதி உதவி வழங்கும் திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- 5 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.9.90 இலட்சம் செலவில் தளவாடச் சாமான்கள் (Furniture) வழங்கப்படும். ❖

# மேம்பட்ட தமிழகத்தை உருவாக்கும் வெளிப்படையான வரி நிருவாகம்!



**வணிகவரித் துறை**

- 2013–2014ஆம் ஆண்டில், வணிகவரித் துறை ரூ.56,852 கோடியினை வரி வருவாயாகத் திரட்டியுள்ளது. முந்தைய ஆண்டின் மொத்த வணிக வரி வருவாயைக் காட்டிலும் 18.73 சதவிகிதத்திற்கு அதிகமான வளர்ச்சியினை பதிவு செய்துள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில், இத்துறையின் பங்காக ரூ.60,314.61 கோடி வரியாக வருவாய் திரட்டியுள்ளது. இத்துறையானது முந்தைய ஆண்டில் மொத்த வணிக வரி வருவாயை காட்டிலும் 6.09 சதவீதத்திற்கு அதிகமாக வளர்ச்சியினை பதிவு செய்துள்ளது.
- 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய உள்ள காலத்தில் ரூ.60,314.81 கோடி வரி வருவாயினை துறை ஈட்டியுள்ளது. முக்கிய தொழில்களான சிமெண்ட், வாகன உற்பத்தித் துறையில் குறைந்த வளர்ச்சி வீதம் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் தொடர் விலைக்குறைப்பு இருந்த போதிலும் 2013–2014ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 6.09 சதவிகிதம் வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.
- நவம்பர் 2015 வரை ரூ.39,533.50 கோடி வரி வருவாய் வசூல் செய்துள்ளது. 2014–2015ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடனான வரி வருவாயுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது நடப்பாண்டில் ஒட்டு மொத்த வளர்ச்சி நிலை 2.26 சதவீதமாக உள்ளது. பெட்ரோலிய பொருட்களின் விலை குறைவால் பிற மாநிலங்களை போல் அல்லாமல் இம்மாநிலம் இப்பொருட்களின் வரி விகிதங்களை உயர்த்தாமல் நிர்வகித்துள்ளது.

**வருவாய் நிலை**

- 2015–2016ஆம் ஆண்டில் டிசம்பர் 2015 வரை ரூ.44,281.77 கோடி வரி வருவாய் வசூல் செய்துள்ளது. 2014–2015 ஆம் ஆண்டை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது நடப்பாண்டில் ஒட்டு மொத்த வளர்ச்சி நிலை 1.76 சதவீதமாக உள்ளது.

**வரி வசூல்**

- 2010–2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013–2014ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தியுடனான நிகர வணிக வரி வருவாய் விகிதம் 5.21 விழுக்காட்டிலிருந்து 6.52 விழுக்காடாக சீராக உயர்ந்துள்ளது. இது வணிக வரி வசூலின் சீரான முன்னேற்றத்தைக் காட்டுவதாக உள்ளது. மொத்த உற்பத்தியுடனான மாநில வரி வருவாய் 2013–2014ஆம் ஆண்டில் 10.07 விழுக்காடாக அமைந்தது.

**வருவாய் வசூலின் போக்கு**

- வரி ஏய்ப்பினைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால், இந்தியப் பொருளாதாரத்தில் பொதுவான மந்தநிலை நிலவியபோதிலும் வருவாய் வசூலில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியினை துறை தக்க வைத்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் துறையால் நிருவகிக்கப்படும் அனைத்து சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் ரூ.2,79,995 கோடியாகும்.

**வரி நிருவாகத்திற்கான செலவு**

- வருவாய் வரவினங்கள் மற்றும் வணிகவரித் துறைக்கான செலவு விவரங்கள் துறையின் நிருவாக செலவு மிகவும் குறைவாக உள்ளதைத் தெளிவுபடுத்துகின்றன.

**உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் – சோதனைச் சாவடிகளை நவீனப்படுத்துதல்**

- 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்களை இயக்குவதில் உள்ள இடர்பாடுகளான பணியாளர் பற்றாக்குறை, இணையதளங்களில் ஏற்படும் தடங்கல்கள், மின்தடை, அமைவிடங்கள் சரியாக அமையாமை, இடப் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டு, நிலம் கையகப்படுத்துவதற்கும், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், நவீன முறையில் மேம்படுத்தும் விதமாக 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ.33.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதியக் கட்டடங்கள் கட்டுதல்**

- 2011–2012ஆம் ஆண்டில், ரூ.23.01 கோடி செலவில் 15 இடங்களில் வாடகை கட்டடங்களில் இயங்கும் 42 வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள். 2012–2013ஆம் ஆண்டில், ரூ.11.18 கோடி செலவில் இராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குனேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் 16 வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள்.
- 2013–2014ஆம் ஆண்டில், வாள்வச்ச கோஸ்தம், தேவகோட்டை, சிதம்பரம், ஆற்காடு ஆகிய 4 இடங்களில் வணிகவரி அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் ஆகிய 3 இடங்களில் வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்கும் ரூ.10.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ஆற்காடு, வாள்வச்ச கோஸ்தம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 3 இடங்களில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- ரூ.78.82 கோடி மதிப்பீட்டில் 2014–2015ஆம் ஆண்டில், தென் சென்னை, வடசென்னை பகுதியில், 86 வணிக வரி அலுவலகங்களை உள்ளடக்குவதற்கு ஏதுவாக, வணிகவரித் துறை மற்றும் பதிவுத் துறைக்கும் பொதுவான ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை.
- ஒசூரில் ரூ.120 கோடி செலவில் வணிகவரித் துறை, போக்குவரத்து துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து அனைத்து துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைப்பதற்கும், சென்னை எழிலகத்தில் முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகத்தை ரூ.1.38 கோடி செலவில் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை.
- வெவ்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 151 வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த கட்டடங்கள், ஒசூருக்கு அருகில் ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி அமைத்தல் மற்றும் சென்னை எழிலகத்தில் உள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தை மேம்படுத்தல் போன்றவற்றிற்காக ரூ.245.26 கோடி ஒதுக்கீடு.
- வரி வருவாயினை சிறப்பான வகையில் மேற்கொள்ள ஏதுவாக வணிகவரித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 2012–2013ஆம் நிதியாண்டில் ரூ.86.91 இலட்சம் செலவில் 16 வாகனங்கள்.

**முழுமையான கணினி மயமாக்கல்**

- வணிகவரித் துறையில் முழுமையான கணினிமயமாக்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக கடந்த 2011–2012இல் ரூ.230.96 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் மென்பொருள் மேம்பாடு, வன்பொருள் வழங்குதல் மற்றும் பராமரித்தல் பணி நடைபெற்று 29.01.2016 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- வணிகவரித் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் மாற்று வழி இணைப்புத் திட்டத்திற்கு (Redundant Network Connectivity) 2011–2012இல் ரூ.3.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மறு சீரமைத்தல்**

- பணி பகிர்மானங்கள் ஒரே சீராக இருக்கும் நோக்கில், சென்னைக் கோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு 01.08.2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 01.09.2014 முதல் துறை நடவடிக்கைகள் இணையதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

**மனித வள மேம்பாடு (Human Resources Development)**

- வணிகவரித் துறையில் காலியாக உள்ள 1,325 பல்வேறு பதவிகளுக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2011–2012இல் நிரப்பப்பட்டுள்ளது.
- பல ஆண்டுகளாக தற்காலிகமாக இருந்த 4,500 பணியிடங்களில், தற்பொழுது 3,375 பணியிடங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.
- வணிகவரித்துறையில் பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 61 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.10 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் வணிகவரி பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சி.

**வரிவிலக்கு**

- 18.86 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில் வீட்டு உபயோக சமையல் எரிவாயு மீதான வரிக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
- வேளாண் உபகரணங்கள் மற்றும் இடுபொருள்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.87 கோடி மதிப்புக் கூட்டு வரி விலக்கு.
- கோதுமை, ஓட்ஸ், கையினால் தயாரிக்கப்படும் பூட்டு, இன்சுலின், தலைக்கவசம் மற்றும் பாலூட்டும் புட்டிகள் மற்றும் காம்புகள் ஆகியவற்றுக்கு 01.04.2012 முதல் முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.
- ஓட்டல்களில் தங்குமிட வசதிக்கு ஆடம்பர வரி விதிப்புக்கான உச்ச வரம்பு 04.07.2013 முதல் ரூ.199/– லிருந்து ரூ.499/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மீன்பிடி கயிறுகள், மீன்பிடி மிதவைகள், மீன்வலை முறுக்கு நூல், மீன்பிடி விளக்குகள் மற்றும் மீன்பிடி திருப்புகை போன்ற மீன்பிடிப்புக்கு பயன்படும் துணைப் பொருட்கள் மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி முற்றிலுமாக விலக்கிக்கொள்ளப்பட்டது.
- அனைத்துவகையான கொசு வலைகளுக்கு விதிக்கப்படும் 5 சதவிகித மதிப்புக்கூட்டு வரி 01.04.2015 முதல் முற்றிலுமாக விலக்கிக்கொள்ளப்பட்டது.
- நெய்தலுக்கு முன்பாக நூலுக்கு பசையிடுவது தொடர்பான (Sizing of Yarn) ஒப்பந்த பணிகளுக்கு (Works Contract) மதிப்புக்கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**வரி குறைப்பு**

- மின் சக்தியால் இயங்கக் கூடிய இரு சக்கர வாகனம், காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகள், மரக் குச்சிகள் மற்றும் மரப் பட்டைகள் மற்றும் சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாஃபர்கள் ஆகியவற்றின் மீதான 14.5 சதவிகித வரி 5 சதவிகிதமாக 01.04.2012 முதல் குறைக்கப்பட்டுள்ளது. ஜெனரேட்டருக்கு அளிக்கப்பட்டது போன்று, ஜென்செட் மீதான 14.5 சதவிகித வரியானது 5 சதவிகிதமாக 07.12.2012 முதல் குறைக்கப்பட்டுள்ளது.
- இணக்க வரி முறையில் வரி செலுத்தும் பதிவு பெற்ற வணிகர்கள் அந்த ஆண்டில் வரி விதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத் தொகையானது, ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டும்போது அதற்கு மேலாக உள்ள விற்பனைத் தொகைக்கு மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவிகிதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது.
- குறித்துரைக்கப்பட்ட வரி விதிப்பு வரம்பு அளவை தாண்டாத சிறு வணிகர்கள் வசூலித்த வரியினை அரசிடம் ஒப்படைக்கும் முன் உள்ளீட்டு வரி வரவை எடுத்துக் கொள்ளும் வசதி செய்துதரப்பட்டுள்ளது.
- வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதும் நடைமுறை 2011–2012ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ந மூ ன ா க் க ள் ச ரி ய ா ன த ா க வு ம்

முழுமையானதாகவும் இருக்கும் நேர்வில் அதைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31ஆம் தேதியன்று அனைத்து வரிவிதிப்புகளும், வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக கருதப்படும்.

- ஏலக்காய் மீது விதிக்கப்பட்டு வரும் மதிப்புக்கூட்டு வரி 01.04.2015 முதல் 5 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- மின் சேமிப்புக்கான கருவிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக, அனைத்து வகையான ஒளி உமிழ் டையோடு விளக்குகள் (LED Lamps) மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி 01.04.2015 முதல் 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையினரை ஊக்குவிக்கவும், விவசாயிகளுக்கு நன்மை பயக்கவும், காற்றழுத்தக் கருவிகள் (Air Compressors), 10 குதிரைத் திறன் வரையிலான மோட்டார் பம்புகள் மற்றும் அவற்றின் பாகங்கள் மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி 01.04.2015 முதல் 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- கைப்பேசிகள் (Cellular Telephones/Mobile Phones) மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி 01.04.2015 முதல் 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- ஆடம்பர வரி விதிப்புக்கான உச்ச வரம்பு ரூ.199லிருந்து ரூ.499 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**சமாதானத் திட்டம்**

- வரி நிலுவைகளை தீர்வு செய்ய ஏதுவாக சமாதானத் திட்டம் 01.11.2011 முதல் 30.04.2012 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 3,979 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 30.04.2012 வரை ரூ.100.32 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**வரிவிதிப்பு தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள்**

- 2013–2014ஆம் ஆண்டு முதல் வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து வணிகவரி மண்டலங்களில் நடத்த ஆண்டுதோறும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு. ஒவ்வொரு மண்டலத்திலும் ஆண்டிற்கு இரண்டு முறை முகாம்கள் நடத்தப்படுகிறது.

**குறை தீர்க்கும் நாள் கடைப்பிடித்தல்**

- வணிகர்களிடம் இருந்து பெறப்படும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளைத் தீர்க்கும் நோக்கில், ஒவ்வொரு வணிகவரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் திங்கட்கிழமைதோறும் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**வணிகர் நலம்**

- கடந்த 2011–2012இல் சிறு மற்றும் குறு வியாபாரிகள் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக சேரும் வகையில், ஆயுட்கால உறுப்பினருக்கான சந்தா தொகை ரூ.500/– லிருந்து ரூ.100/–ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதி ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு வருடமும், நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்னதாக, வணிகம் மற்றும் தொழில் சார்ந்த பிரதிநிதிகளுடன் விவாதம் நடைபெறுகிறது. அதில், வரிவிதிப்பு தொடர்பான மாற்றங்கள், வரி விகிதம் குறைப்பு மற்றும் வரி விலக்கு அளிப்பது, வணிகர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை இடர்பாடுகள் குறித்தும், விரிவான ஆலோசனை மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது.
- வரி நடைமுறை தொடர்பாக தொழில் (ம) வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்படும் அன்றாடச் சிக்கல்களைக் களையும் பொருட்டு முக்கியமான இனங்கள் தொடர்பாக வணிக சங்கங்களுடன் கலந்தாலோசிக்க வணிக வரி ஆணையர் தலைமையில் ஒரு வரி செலுத்துவோர் மாநில ஆலோசனைக் குழு உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## பதிவுத் துறை

**வருவாய்**

- 2013–2014ஆம் நிதியாண்டில் 26,53,291 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.8,055.74 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் வருவாய் 8.05 சதவிகிதம் கூடுதலாகும்.
- 2014–2015ஆம் நிதியாண்டில் 25,73,931 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.8,279.64 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.






கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டின் வருவாய் 2.78 சதவிகிதம் கூடுதலாகும்.

- 01.04.2012முதல்விற்பனை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையை 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைத்து அரசு ஆணை.
- முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்குப் பெறுவதற்கான உச்சவரம்பை ரூ.5,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்வு.

**வழிகாட்டி மதிப்பு சீரமைப்பு**

- சந்தை மதிப்பிற்கும் வழிகாட்டி மதிப்பிற்கும் உள்ள முரண்பாட்டை களைய 2012இல் புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி கொண்டு வரப்பட்டது. இது உண்மையான சந்தை மதிப்பினை பிரதிபலிக்கும் விதமாக அமைந்துள்ளது.
- கட்டுமான உடன்படிக்கைகளுக்கு 1 சதவிகிதம் முத்திரை தீர்வை வசூலித்திடவும் மேற்படி ஆவணத்தை கட்டாய பதிவு ஆவண வகைப்பாட்டில் கொண்டு வரவும் அரசால் சட்ட திருத்தம் 01.10.2013இல் கொண்டுவரப்பட்டது.
- பொது மக்களுக்கு வசதி செய்யும் பொருட்டு பொது அதிகார ஆவணங்களைப் பொறுத்தவரை, அவை உரிய முத்திரைத்தீர்வை மதிப்புடன் உள்ளதா என்பதைக் கண்டறிந்து சான்றளிக்கும் அதிகாரம் அனைத்து சார்பதிவாளர்களுக்கும் வழங்கப்பட்டது.
- பொது மக்களுக்கு பயன்தரும் வகையிலும் விரைவு நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும் முத்திரைத்தீர்வை திருப்பி தரும் அதிகாரத்தை அனைத்து மாவட்டப்பதிவாளர்களுக்கும் வழங்கப்பட்டது.
- அடமான உரிமையை விடுவிக்கும் ஆவணங்கள் மீது, பதிவு செய்ய வரும் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பதிவுக்கட்டணத்திற்கு ரூ.4,000/– என உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது.
- 2015–2016 நிதியாண்டில் டிசம்பர் வரை 18,82,354 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.6294.42 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.
- சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அசையாச்சொத்து தொடர்பான அசல் ஆவணங்கள் இழந்தோருக்கு, 14.12.2015 முதல் 28.12.2015 வரையிலான காலத்தில் கட்டணம் ஏதுமின்றி சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க

முத்திரை தீர்வை மற்றும் பிற கட்டணங்கள் விலக்களித்து சிறப்பு முகாம்களில் சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு சான்றிட்ட நகல்கள் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டன.

**பதிவுத்துறை பயிற்சி நிலையம்**

- பதிவுத்துறை பயிற்சி நிலையத்தில் அளிக்கும் பயிற்சி முறையினை மேம்படுத்தும் பொருட்டு 04.10.2013இல் ஆண்டு மானியமாக ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- பதிவுத்துறை பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களுக்கு மென்பொருள் தேர்ச்சி, தலைமைப் பண்புகள், பொதுமக்கள் தொடர்பு, வாழ்க்கை நிருவாகத்திறன் மற்றும் தொடர்பு மேம்பாடு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகிறது.
- ரூ.49 இலட்சம் செலவில் பயிற்சியாளர் தங்கும் விடுதி கட்டி தரப்பட்டுள்ளது. பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் 17 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம்.

**உள்கட்டமைப்பு**

- பதிவுத்துறையில் உயர் அலுவலர்களுக்கு ரூ.1.22 கோடி செலவில் 23 பொலீரோ வாகனங்கள்.
- கணினி வழி ஆவணப் பதிவிற்கு, அதாவது மின் ரேகை பதிவு மற்றும் வலை நிழலி வழியாக புகைப்படம் எடுக்கவும் தடையில்லா மின்சாரம் பெற 150 மின்னாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. 2013–2014ஆம் நிதியாண்டில் மேலும் கூடுதலாக 150 மின்னாக்கிகள் கொள்முதல் செய்திட ரூ.4.82 கோடி ஒப்பளிப்பு.
- பதிவுத்துறை அலுவலர்களுக்கு 627 மின்னணு கையொப்பமிடும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு ரூ.3.50 இலட்சம் ஒப்பளிப்பு.

**கட்டடங்கள்**

- வரும் 5 ஆண்டுகளில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் அரசு கட்டடங்களில் செயல்படும் என அறிவிக்கப்பட்டது.
- 160 சார்பதிவாளர் தனி அலுவலகங்கள் கட்டுவதற்கும், 50 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 25 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்கள் கட்டுவதற்கும் ரூ.126.52 கோடி ஒதுக்கப்பட்டு இதுநாள் வரை 116 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 29 சார்பதிவகங்களை உள்ளடக்கிய 16 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பான்கள்**

- ஆவணங்கள் பாதுகாப்பிற்காக ரூ.4.78 கோடி செலவில் தீ விபத்து தடுப்பு உபகரணங்களாக, தீ தடுப்பான்கள், தீ தடுப்பு வாளிகள், மின் அணைப்பு முறிப்பான்கள், அலுமினிய ஏணிகள் ஆகியவை கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டு கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையில் உள்ளது.

**கணினிமயமாக்கல்**

- எவ்வித கட்டணமுமின்றி வில்லங்கச்சான்று விவரங்கள் இணையவழி பார்த்திடும் வசதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.06.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- வங்கிகள் மூலம் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்தும் வசதி நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.
- பழைய தொகுதிகளை இலக்கமயமாக்கிடவும். நுண்ணியப்பதிவு (Micro fiche) மேற்கொள்ளவும், தினசரி பதிவாகும் ஆவண பிம்பங்களை நுண்ணியப்படப்பதிவாக மாற்றிடும் திட்டமானது அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ரூ.143 கோடி ஆகும்.

**ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான கணினி மயமாக்கல் திட்டம்**

- நிறுவன வலைத்திட்டமிடல் அடிப்படையில் கணினிமயமாக்கல் திட்டமிடப்பட்டுள்ளது.
- பொதுமக்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை வழங்கும் வகையில் வலைதள அடிப்படையிலான மென்பொருள் தயாரித்தல் முதல் செயல்படுத்துதல் வரையிலான திட்டத்திற்கு ரூ.176.44 கோடி ஒதுக்கீடு.
- இதன்மூலம்பாதுகாப்புமிகுந்தவெளிப்படையான சொத்துப்பதிவு, சரியானநேரத்தில் இணையவழி சேவைகள் அளித்திடுதல், சொத்துரிமை சரிபார்த்திட வருவாய்த்துறை தரவுடன் இணைத்திட வழிவகை, இணையவழி மற்றும் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் எளிதாக கண்டறிந்து பரிசீலனை செய்தல்.





**இணையவழி நேரம் ஒதுக்குதல்**

- பதிவுப் பொதுமக்கள் ஆவணம் மற்றும் திருமணப்பதிவு தொடர்பாக உரிய சார்பதிவாளர்களுடன் இணையவழி நேர ஒதுக்கீடு பெறும் முறையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.11.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- இந்த நடைமுறையால் பதிவு அலுவலகத்தில் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்க்கப்பட்டுள்ளது.

**ரேகைக்கருவி மற்றும் வலை நிழலி**

- ஆள்மாறாட்டம் மற்றும் போலிப்பதிவு நடைமுறைகளைத் தடுத்திட வலை நிழலி (Web camera) மூலம் புகைப்படம் எடுத்திடுதல் மற்றும் மின்னணு ரேகைக்கருவி (Biometric) மூலம் கைரேகை எடுத்திடும் முறையானது அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் 01.11.2013 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**இணைய நெறிமுறை புகைப்படக்கருவி**

- போலி ஆவணப்பதிவுகளை தடுத்திட அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் இணைய நெறிமுறை புகைப்படக்கருவி (IP camera) பொருத்தப்பட்டு 06.11.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- சார்பதிவாளர் செயல்பாடுகள் மற்றும் பதிவு முறை நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ள பதிவு அலுவலகங்களின் செயல்பாடுகள் தொலைக்கண்காணிப்பு செய்யப்படுகிறது.
- பதிவு நடைமுறைகளுக்கான சான்றாவணமாக பதிவு நடைமுறைகளின் ஒளிக்காட்சிப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பதிவு பொதுமக்களுக்கு அளிக்கப்படுகின்றன.

**வங்கிகள் மூலம் பணம் செலுத்தும் முறை**

- இந்தியன், இந்தியன் ஓவர்சீஸ், கனரா, பஞ்சாப்நேஷனல், பரோடா, இந்திய மாநில வங்கி ஆகிய வங்கிகள் மூலம் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்தும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# ஒன்றுபட்ட மக்களை உயர்த்தி வாழ்வளிக்கும் உன்னத திட்டங்கள்



**வேளாண்மைப் புரட்சிக்கு வித்திடும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- வேளாண் உற்பத்தியை அதிகரிக்க 48,89,855 விவசாயிகளுக்கு ரூ.22,058.61 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டு உள்ளது.
- பயிர்க் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு 7 சதவிகித வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால், விவசாயிகள் சார்பாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. வட்டித் தள்ளுபடியாக ரூ.589.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் தேங்காயைத் தரமான கொப்பரையாகத் துரிதமாக மாற்ற ரூ.1.47 கோடி செலவில் 25 சூரிய ஒளி தேங்காய் கொப்பரை உலர் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.



- விவசாய வேலையாட்கள் பற்றாக்குறையினைக் களைய 2,104 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.25.59 கோடி அரசு மானியத்தில் ரூ.80.44 கோடி மதிப்பில் உழவு இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், மினி டிராக்டர் போன்ற இயந்திரங்கள் மற்றும் இதரக் கருவிகளுடன் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் உபயோகத்திற்கு குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.
- வேளாண் பெருமக்களுக்கு இரசாயன உரங்கள் தேவையான அளவில் உரிய நேரத்தில் மாநிலம் முழுவதும் கிடைக்கும் வகையில் கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கப்படும் வட்டியில்லாக் கடன் ரூ.130.50 கோடியிலிருந்து, ரூ.150 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- தரமான அதிக அளவிலான நெல் விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்கத்தோடு, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் விதை சுத்திகரிக்கும் இயந்திரம் ரூ.19.13 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு நாளொன்றிற்கு 20 மெ.டன் விதைகள் சுத்திகரிக்கப்படுகிறது.
- விவசாயப் பெருமக்களுக்கு வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்களாக 2.88 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,328.70 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.3,786.41 கோடி மதிப்புள்ள வேளாண் விளை பொருட்கள் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**பயிர்க் கடன்**

- 7,98,874 ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ரூ.3,079.56 கோடி.
- 8,88,239 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.3,822.44 கோடி.
- 30,91,279 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.13,380.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**வளம் காணும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு**

- 30,758 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.107.31 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- 2011–2012 மற்றும் 2012–2013 ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள் 5ஆண்டு சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் 2,000 நபர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- இவ்வகையில் மாற்றுத்திறனாளி உறுப்பினர்களுக்கு அதிக அளவில் கடன் பெறும் பொருட்டு 2013–2014ஆம் ஆண்டில் பங்கு மூலதன மானியமாக முறையே 2,000 மற்றும் 1,000 நபர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் பங்கு மூலதன மானியமாக 1,000 நபர்களுக்கு தலா ரூ.2,500 வீதம் 25 இலட்சம் வழங்கப்பட்டது.

**மகளிர் மேம்பாட்டிற்கு மகத்தான பணி**

- மகளிர் தொழில் திறனை ஊக்குவித்து, பொருளாதாரத் தன்னிறைவு பெற 55,589 மகளிருக்கு ரூ.205.21 கோடியில் தொழில் முனைவோர் கடன்.
- பணிபுரியும் மகளிர் குடும்பத் தேவைகளுக்காக 45,330 மகளிருக்கு, ரூ.193.25 கோடி சம்பளக் கடன்.
- மகளிர் சுய தொழில் செய்து மேம்பட 2,58,236 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2,472.17 கோடி கடன்.
- நகரக் கூட்டுறவு வங்கிகளில் 2,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.10 இலட்சம் 5 வருடங்களில் திரும்ப செலுத்தும் வகையில், வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாகவும், 2013–2014ஆம் வருடங்களில் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.25 இலட்சம் பங்கு மூலதனம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் வட்டியில்லா பங்கு மூலதன மானியமாக தலா ரூ.2,500/– வீதம் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 4,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.20 இலட்சம் 5 வருடங்களில் சமதவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில், 2011–2012 மற்றும்



2012–2013ஆம் ஆண்டுகளில் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாகவும், 2013–2014ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு 22,000 உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.5.50 கோடி பங்கு மூலதன மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.மேலும் 2014–2015ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் பங்கு மூலதன நிதியுதவியாக அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 2011–2012,2012–2013, மற்றும் 2013–2014ஆம் ஆண்டுகளில்தொடக்ககூட்டுறவுவேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மொத்தமாக 1,500 மகளிர் உறுப்பினர்களுக்கு 5 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வகையில் தலா ரூ.1,000/– வீதம் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக ரூ.15/– இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் பேணும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதியை உயர்த்திட, 2012–2013ஆம் ஆண்டில் நபர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் 40,000 உறுப்பினர்களுக்கு ரூ.10 கோடி பங்கு மூலதனம் மானியம்.
- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு 5 வருடங்களில் சமதவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக 2011–2012, 2012–2013, மற்றும் 2013–2014ஆம் ஆண்டுகளில் தலா 8,000 நபர்கள் வீதம் 24,000 நபர்களுக்கு தலா ரூ.250/– வீதம் ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



- 2011 முதல் 2015ஆம் ஆண்டுகளில் நகரக் கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதியினை அதிகரிக்கும் பொருட்டு 5 ஆண்டு சமதவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் 4,000 பேருக்கு தலா ரூ.500/– வீதம் ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- நகரக் கூட்டுறவு வங்கிகளில் 2013–2014ஆம் ஆண்டில் பங்கு மூலதனம் மானியமாக தலா ரூ.2,500/– வீதம் 10,000 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு ரூ.2.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் பங்கு மூலதன மானியமாக 1,000 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் உள்கட்டமைப்பு மற்றும் நிதியாதாரங்களை மேம்படுத்தி, நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்திட ரூ.30.88 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- மலைவாழ் மக்கள் வசிக்கும் இருப்பிடங்களுக்கே சென்று அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்திட 2012–2013ஆம் ஆண்டில் ரூ.94.95 இலட்சம் மதிப்பீட்டில் 10 நகரும் நியாய விலைக் கடைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2013–2014ஆம் ஆண்டில் மலைவாழ் பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்திட, ரூ.38.36 இலட்சம் மதிப்பீட்டில் 3 நகரும் நியாய விலைக் கடைகளும் மற்றும் சென்னை மாநகரத்திற்கு நியாய விலைக் கடைகளில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு ரூ.28.46 இலட்சம் மதிப்பீட்டில் 2 நகரும் நியாய விலைக் கடைகளும் நிறுவப்பட்டுள்ளன.
- மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்யும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் விற்பனைத் திட்டத்தின் கீழ், பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து பொது வணிக முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு சாமை அரவை இயந்திரம் ரூ.1,50,000 மானியமாக வழங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.
- ரூ.22,36,084 மதிப்புள்ள 7,248.50 கிலோ தேன், ரூ.28,38,300 மதிப்புள்ள 39,291 கிலோ புளி, ரூ.12,67,932 மதிப்புள்ள 25,176.50 கிலோ சாமை மற்றும் ரூ.5,73,101 மதிப்புள்ள 8,669 கிலோ வரகு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நீலகிரி மாவட்டத்தில் பந்தலூர் வட்ட தொல் பழங்குடியினர் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோத்தகிரி வட்ட மலைவாழ் பழங்குடியினர் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் சிட்லிங் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய 3 புதிய பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**மக்கள் நலப்பணியில் கூட்டுறவு நிறுவனங்கள்**

- வீட்டுவசதி மற்றும் வீட்டு அடமானக் கடன்களாக 66,372 நபர்களுக்கு ரூ.1,537.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 3.78 கோடி நபர்களுக்கு ரூ.1,40,520.66 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- சிறு தொழில் மேற்கொள்ளவும் சிறு போக்குவரத்து வாகனங்கள் இயக்க உள்ளிட்ட நோக்கங்களுக்கு பண்ணைசாராக் கடனாக 1,97,676 நபர்களுக்கு ரூ.1,238 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்களை, கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகையில் 6,72,830 நபர்களுக்கு ரூ.663.83 கோடி சிறு வணிகக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நலிவடைந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ரூ.50 இலட்சம் வீதம் சிறப்புக் காசுக் கடன் உதவி வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதன் மூலம், அத்தகைய சங்கங்களின் வணிகத்திறனை ரூ.1 கோடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு 2013–2014ஆம் ஆண்டில் 72 சங்கங்களுக்கு தலா ரூ.50 இலட்சம் வீதம் காசுக் கடன் அனுமதிக்கப்பட்டதன்

மூலம் ரூ.130.61 கோடி கடன் வழங்கப்பட்டு 35,621 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் 2014–2015ஆம் ஆண்டில் 67 சங்கங்களுக்கு தலா ரூ.50 இலட்சம் வீதம் சிறப்புக் காசுக்கடன் அனுமதிக்கப்பட்டதன் மூலம் 21,573 நபர்களுக்கு ரூ.79.90 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நவீனமயமாக்கலும், வாடிக்கையாளர்களின் நலனும்**

- இந்தியாவில் இரண்டாவது மாநிலமாக, 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் வங்கியியல் உரிமத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளன.
- கூட்டுறவு வங்கிகளின் சிறந்த செயல்பாடு மற்றும் நவீன மயமாக்கப்பட்டதன் விளைவாகக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை ரூ.26,247.43 கோடியிலிருந்து ரூ.49,184.63 கோடியாக உயர்ந்துள்ளது.
- கூட்டுறவு வங்கிகளை புத்துயிரூட்டி அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த ரூ.154.62 கோடி மாநில அரசின் பங்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 41 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களை புத்துயிரூட்டி அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த 2012–2013இல் ரூ.20.50 கோடி சிறப்புக் காசுக்கடன் விடுவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் தீர்வு முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் வணிக வங்கிகளுக்கு இணையான தொழில்நுட்ப தர அளவினை எட்டியுள்ளது.
- 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் கணினி சேவை ரூ.8.80 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 794 கிளைகள் மைய வங்கியியல் சேவையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை வங்கியில் இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் நிதிமாற்றம் செய்ய மின்னணு வங்கியியல் சேவை (E – Banking), நிகழ்நேர நிதி பரிமாற்றம் முறை (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதி மாற்றம் (National Electronic Fund Transfer) ஆகிய வசதிகள்.
- மத்திய கூட்டுறவு வங்கி (226) நகரக் கூட்டுறவு வங்கி (66) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் (100) நகர கூட்டுறவு கடன் சங்கம் (15) ஆகியவற்றின் 407 கிளைகள் ரூ.45.58 கோடி செலவில் குளிர் சாதன வசதியுடன் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.
- ரூ.1 கோடிக்கு மேல் வணிகம் செய்யும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 3,854 லிருந்து 4,431 ஆக உயர்ந்துள்ளது.
- மக்களுக்கு சேவை புரியும் வகையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக 61 புதிய கிளைகள்.
- 4,571 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 3,972 சங்கங்கள் பாதுகாப்பு அறையுடன் செயல்பட்டு வருகின்றன.
- 4,571 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் (கிளைகள் உட்பட) கணினி மயமாக்கல் பணி முழுமையாக முடிவுற்றுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி செலவில் 1,121 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குத் தலா ரூ.25,000/– வீதம் கணினிகள் வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.
- 4,364 பொதுச்சேவை மையங்கள் மூலம் இணையதள சேவைகள்.
- 75 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.2.13 கோடி செலவில் பாதுகாப்புக் கதவு, 20 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.0.48 கோடி செலவில் பாதுகாப்பறை, 112 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.1.83 கோடி செலவில் பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- மத்திய கூட்டுறவு வங்கிகளின் 43 கிளைகளுக்கு ரூ.24.34 கோடி செலவிலும் 16 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ.1.65 கோடி செலவிலும் சொந்தக் கட்டடங்கள்.
- 38 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன் சங்கங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- கூட்டுறவு வரலாற்றில் முதன் முறையாக 6 சங்கங்களில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதர இரண்டு நிலையங்கள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கடன் பெற்று நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**ஒருமுறை கடன் தீர்வு திட்டம் 2014**

- தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு நீண்ட காலமாக வசூலாகாமல் உள்ள விவசாய கடன் தொகைகளை வசூல் செய்ய ஏதுவாக "ஒருமுறை கடன் தீர்வு திட்டம் 2014" செயல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 31.03.2014 தேதியில் தவணைதவறிய கடன்தாரர்கள் 5741–லிருந்து இத்திட்டம் செயலாக்கப்படும் நாளில் 5,453 ஆக குறைந்துள்ளது. இவர்களில் 26.10.2015 முடிய உள்ள காலத்தில் 2,693 கடன்தாரர்கள் 25 கடன் தொகை ரூ.17.18 கோடி செலுத்தி வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். 509 கடன்தாரர்கள் ரூ.8.93 கோடி அளவிற்கு கடன் முழுமையாக செலுத்தி ரூ.9.51 கோடி வட்டி தள்ளுபடி பெற்று பயனடைந்துள்ளார்கள்.
- 30 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.0.75 கோடி மதிப்பில் வாடிக்கையாளர் பாதுகாப்புப் பெட்டகம்.
- டெல்டா பகுதிகளில் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– என்ற வீதத்தில் ரூ.517.98 கோடி நிவாரணத் தொகை 3,48,681 விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 15,96,887 விவசாயிகளுக்கு ரூ.766.60 கோடி நிவாரணத் தொகை விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பயிர்களை காப்பீடு செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் 2012–2013ஆம் ஆண்டு நெல் II பருவத்திற்கு தேசிய வேளாண் பயிர்க்காப்பீடு நிறுவனத்திடமிருந்து ரூ.633.56 கோடி இழப்பீட்டு தொகை கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டு, 5,10,827 விவசாயிகளுக்கு ரூ.609.84 கோடி பயிர்க்காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி 2015–இல் ரூ.132.97 கோடி இதர பயிர்களுக்கு வரப்பெற்று, ரூ.126.45 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 2015இல் நெல் II 2013 பருவத்திற்கு ரூ.28.71 கோடி பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தானே புயலால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு கடலூர் மாவட்டத்தில் 1,92,847 விவசாயிகளுக்கு ரூ.106.73 கோடியும், விழுப்புரம் மாவட்டத்தில் 79,771 விவசாயிகளுக்கு ரூ.25.94 கோடியும் அரசு நிவாரணம் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- 545 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 20 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் அதன் பாதுகாப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் ரூ.29.05 கோடி செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 37 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் அதன் பாதுகாப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் ரூ.2.27 கோடி செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- வேளாண் பெருமக்கள் தங்களது விளை பொருட்களை உலர வைத்து தரம் பிரித்து ஆதாய விலையில் விற்க ஏதுவாக ஆலங்குடி, அறந்தாங்கி, திருமயம் மற்றும் திருமங்கலம் ஆகிய 4 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ரூ.23.35 இலட்சம் மதிப்பீட்டில் உலர்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- விவசாயிகளின் விளைபொருட்களை பதப்படுத்தி, மதிப்புக்கூட்டி விற்பனை செய்திடும் வகையில் ரூ.91.35 இலட்சம் மதிப்பீட்டில் 5 பதனிடும் அலகுகள் அமைக்கப்பட்டு உள்ளது.
- வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு செங்கம், திருவண்ணாமலை, போளூர் மற்றும் காரமடை ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.146.66 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கங்களின் 2,152 கிளைகளில், உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு காமிராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் உரக்கலவை இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

**விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்**

- காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக ரூ.37.58 கோடி அளவிற்கு 12,749 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோட்ட பயிரிடுவோர்க்கு கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக ரூ.268.28 கோடி அளவிற்கு காய்கறி சாகுபடிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- வெளிச் சந்தையில் நிலவிய புளி விலை ஏற்றத்தினை தடுக்கும் பொருட்டு சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கையின் கீழ் 182.367 மெட்ரிக் டன் புளி கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கிலோ புளி ரூ.60/– வீதம் 182.367 மெட்ரிக் டன் புளி பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக விலைக் கட்டுப்பாட்டு நிதியம் உயர்த்தப்பட்டது.

**பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்**

- சென்னையில் செயல்படும் 40 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், கோயம்புத்தூரில் செயல்படும் 10 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் தூத்துக்குடி, மதுரை, திருவண்ணாமலை மாவட்டங்களில் செயல்படும் 6 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் ஆகியவற்றிற்கென ரூ.8.34 கோடி சுழல் நிதியாக, விலைக்கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பு வசதிகள் அமைப்பதற்கென ரூ.103.61 இலட்சம் மானியமாகவும், நடைமுறை மூலதன நிதியுதவியாக ரூ.10.90 இலட்சமும், வட்டியில்லாக் கடனாக கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.
- பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் நடத்தும் 6 பண்டகசாலைகளுக்கு போக்குவரத்து செலவு, கழிவு, வீணாகுதல் மற்றும் கையாளுதல் (spillage, driage, wastage, handling charges) ஆகிய வகைகளில் ஏற்பட்ட செலவு ரூ.1,24,73,120/– மற்றும் ரூ.1,16,79,191–ஐ விலைக் கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் அம்மா மருந்தகங்கள்**

- 2014–2015ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ''ஒரு முன்முயற்சியாக ஏற்கெனவே கூட்டுறவுத்துறையால் நடத்தப்படும் 210 மருந்தகங்களுடன் கூடுதலாக 100 அம்மா மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்படும்'' என அறிவிக்கப்பட்டு 10 புதிய அம்மா மருந்தகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.06.2014 அன்று துவக்கப்பட்டு நாளது தேதிவரை 100 அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- 100 அம்மா மருந்தகங்களுக்கு வட்டியில்லா மூலதன நிதியுதவியாக ரூ.10 கோடி விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தனியார் மருந்தகங்களைப் போல், புதியதாக துவங்கப்பட்ட அம்மா மருந்தகங்கள் சிறந்த பொலிவுடன் விளங்கிட, அவற்றில் கணினி மற்றும் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- இக்கூட்டுறவு அம்மா மருந்தகங்கள் மூலம் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் 15–விழுக்காடு வரை தள்ளுபடியுடன் தரமான மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.
- 2012 முதல் 2015 வரை ரூ.293.73 கோடி மதிப்பிலான மருந்துகள் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

**விலை நிலைப்படுத்தும் நிதி**

- சந்தை குறுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் புளி கொள்முதல் செய்த தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ரூ.67,83,700ம், கிருஷ்ணகிரி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு ரூ.5 இலட்சமும் விலைநிலைப்படுத்தும் நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டது.



- சந்தை குறுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, நல்லெண்ணெய், மிளகாய். மற்றும் புளி ஆகியவை கொள்முதல் செய்ய ரூ.6 கோடி அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு விலைநிலைப்படுத்தும் நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.
- சந்தையில் உயர்ந்து வரும் துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு விலையினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக குறைந்த விலையில் துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு ½ கிலோ பாக்கெட்டுகளில் விற்பனை செய்யும் திட்டத்தினை 24.05.2015இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் கூட்டுறவுகளின் 20 மையங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் 5 மையங்களிலும் விற்பனை செய்திட துவரம் பருப்பு ரூ.53.50 விலையிலும், உளுந்தம் பருப்பு (எ தரம்) ரூ.56.00 மற்றும் (பி தரம்) ரூ.49.50 விலையிலும் 47.097 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 25.731 மெட்ரிக் டன் உளுந்தம் பருப்பும் முறையே 30.11.2015 வரை இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, வெளிச்சந்தையில் துவரம் பருப்பின் விலையினை கட்டுப்படுத்திட சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மற்றும் மதுரை மாவட்டங்களில் கூட்டுறவு பண்டக சாலைகளின் 71 மையங்களில், இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ½ கிலோ ரூ.55/–க்கும், 1 கிலோ ரூ.110 என்ற விலையில் பொதுமக்களுக்கு 216.476 மெ.டன் துவரம் பருப்பு 31.12.2015 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**அயோடின் கலந்த உப்பு விற்பனை**

- அயோடின் குறைவு காரணமாக ஏற்படும் கழுத்துக்கழலை நோயை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் 2011–2012ஆம் ஆண்டு முதல் 31.10.2015 வரை 1,33,800 மெட்ரிக் அயோடின் கலந்த உப்பு ரூ.4,683 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள்**

- நியாயவிலைக்கடைகளுக்கு 1,394 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**அரசு மானியம்**

- பொது விநியோகத் திட்டம் இலாப நோக்குடன் செயல்படுத்தப்படுவது இல்லையென்பதால் பொது விநியோகத்தை மேற்கொள்ளும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் நட்டத்தை அரசு ஈடு செய்து வருகிறது. இவ்வகையில் நட்டத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு கடந்த நான்கு வருடங்களில் ரூ.660 கோடி அரசு மானியமாக தொடர்புடைய சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**நியாய விலைக் கடைகளின் சரக்கு இருப்பை கண்காணித்தல்**

- அன்றாடம் அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகளுக்கு நுகர்வு செய்வதையும், நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இறுதி இருப்பு நிலையினையும் அறிந்துகொள்வதற்கும் ஏதுவாக எல்காட் நிறுவனத்தின் மூலம் பிப்ரவரி 2013 இல் பிரத்தியேகமாக சர்வர் (Server) ரூ.18.35 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.31.74 இலட்சம் செலவில் தனியாக மென்பொருள் மற்றும் வலைத்தளம் உருவாக்கப்பட்டு குறுஞ்செய்தி மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளின் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு நிலை கண்காணிக்கப்பட்டு உடனுக்குடன் பொருள்கள் நுகர்வு செய்யப்படுகிறது.

**நியாய விலைக் கடைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

- மாவட்ட ஆட்சேர்ப்பு மையங்களால் வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்றும், நேரடி விண்ணப்பங்கள் பெற்றும் 2012–2013இல் 4,680 விற்பனையாளர்கள் மற்றும் 1,441 கட்டுநர் காலிப்பணியிடங்களும் 2013–2014இல் 600 விற்பனையாளர்கள் மற்றும் 50 கட்டுநர் காலிப்பணியிடங்களும் 2014–2015ஆம் ஆண்டில் 1,404 விற்பனையாளர்கள் மற்றும் 311 கட்டுநர் காலிப்பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

**பொதுவிநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை (Margin Money)**

- பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தி வரும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அரசால்



வழங்கப்படும் விளிம்புத்தொகை தற்போது வழங்கப்பட்டு வரும் தொகையிலிருந்து 75 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

- இத்திட்டம் 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு ரூ.219.56 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக கூட்டுறவுச் சங்கங்களில் கிடங்குகள், அலுவலகக் கட்டடம், வணிக வளாகம், சுற்றுச் சுவர், பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை, பாதுகாப்பு பெட்டகங்கள், கனினி, ஜெனரேட்டர், நகை எடை பார்க்கும் மின்னணு இயந்திரம், நவீன வங்கி முகப்பு, மற்றும் வாகனங்கள் ஆகிய முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.87.43 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ரூ.145.94 கோடி பங்குத் தொகையாக சங்கங்களின் வியாபார வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது.

**கனினி எடை மேடை**

- வேளாண் பெருமக்கள் தங்கள் விளை பொருட்களை உடனுக்குடன் துல்லியமாக எடை போடஏற்றவகையில்பெருந்துறை,பவானிமற்றும் உசிலம்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.56.67 இலட்சம் மதிப்பீட்டில் கனினி எடை மேடைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், துறையூர் மற்றும் நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தலா ஒரு கனினி எடைமேடைகள் மொத்தம் ரூ.41.55 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

**சேமிப்பு கிடங்கு வசதியில் கூட்டுறவு நிறுவனங்கள்**

- விவசாயிகளின் விளை பொருளுக்கு ஆதாய விலை கிடைக்கும் வகையில் பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும், அதன் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்கவும் மொத்தம் 5,10,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,879 கிடங்குகள் ரூ.483.33 கோடி அரசு மானியத்துடன் ரூ.489.63 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டு 4,11,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,317 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மிகுதியுள்ள கிடங்குகள் கட்டுமான பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**தானிய ஈட்டுக்கடன்**

- விவசாயிகளின் விளை பொருள்களுக்கு சந்தையில் நியாயமான விலை கிடைக்கும் வகையில் ரூ.1,169.82 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு அச்சகங்கள் நவீன மயமாக்கல்**

- தனியார் அச்சகங்களுக்கு நிகராக சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 7 கூட்டுறவு அச்சகங்கள் மொத்தம் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

- அரசு பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இரண்டாண்டுகளில், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் இரண்டாண்டுகளில் ரூ.2 இலட்சம் வரை பணம் செலுத்தாமல் மருத்துவ சிகிச்சை பெறலாம். ஓராண்டு காப்பீட்டுக் கட்டணத் தொகையான (Premium) ரூ.2,120/–ஐ பணியாளர்களும், சங்கமும் சரிபாதியாக பகிர்ந்து கொள்ளும். இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.07.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், 6,245 சங்கங்களைச் சார்ந்த சுமார் 41,061–றக்கும் மேற்பட்ட பணியாளர்களும் மற்றும் அவர்களைச் சார்ந்த சுமார் 1,14,986 குடும்ப உறுப்பினர்களும் ஆக மொத்தம் 1,56,047நபர்கள் பயன் பெறுவார்கள். இதுவரை 342 பணியாளர்கள் ரூ.1,56,10,552 அளவிற்கு மருத்துவ உதவிபெற்று பயனடைந்துள்ளார்கள்.

**கூட்டுறவுத் தேர்தல்**

- 97ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2011இல் உள்ள சரத்துக்களின்படி தமிழ்நாடு கூட்டுறவு சங்கச் சட்டம் திருத்தப்பட்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக கூட்டுறவுச் சங்க தேர்தலுக்கென தனியாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது.
- 97ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் (2011) இல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் ஓர் ஆதிதிராவிட உறுப்பினரும் இரண்டு பெண் உறுப்பினர்கள் இருக்க வழிவகை செய்யப்பட்டிருந்தும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவில் 18 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் மற்றும் 30 சதவிகிதம் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் உரியவாறு திருத்தப்பட்டது.
- திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்படி தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் 24,046 அனைத்து வகை கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தி முடித்து 2,36,797 நபர்கள் நிருவாக குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

- 2014ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் 1.87 கோடி அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கும், 65,606 காவலர் அட்டை குடும்பதாரர்களுக்கும், அகதி முகாம்களில் வசிக்கும்19,528இலங்கைதமிழ் அகதிகளுக்கும் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் பொங்கல் பண்டிகைக்கான இதர பொருட்கள் வாங்குவதற்கு ரூ.100/– ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு தமிழக அரசால் வழங்கப்பட்டது.
- ஒவ்வொரு மாதமும் 1.90 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.06.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 16.05.2011 முதல் 31.12.2015 வரை 1,75,82,316 மெ.டன் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது. 01.11.2015 முதல் 31.12.2015 வரை 6,48,766 மெ.டன் அரிசி நுகர்வு செய்யப்பட்டுள்ளது. அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், உளுத்தம் பருப்பு, துவரம்பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை மாதம் ஒன்றுக்கு ரூ.441 கோடி மானியத்துடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- 18.90 இலட்சம் அந்தியோதயா அன்ன யோசனா குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதம் 1,21,085 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

- வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலையுயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள், கோயம்புத்தூர்,திருவண்ணாமலை, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இரண்டு நகரும் கடைகள் உட்பட 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறிக் கடைகள் துவக்கப்பட்டு 20.06.2013 முதல் செயல்பட்டு வருகின்றன. இடைத்தரகர்கள் தலையீடின்றி விவசாயிகளிடமிருந்து தேவைக்கேற்ப காய்கறிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

- மழையின் காரணமாக சென்னைக்கு காய்கறிகள் வரத்து தாமதமானதால், தமிழக அரசு தற்காலிகமாக சென்னையில் மேலும் 50 பண்ணை பசுமை காய்கறி கடைகள் திறக்கப்பட்டுள்ளது. மேலும், வட கிழக்கு பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் போது காய்கறிகளின் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட விலை உயர்விலிருந்து பொது மக்களை காக்கும் பொருட்டு சென்னையில் 11 நடமாடும் பண்ணை பசுமை காய்கறி கடைகள் மூலம் 32 இடங்களில் காய்கறிகள் குறைந்த விலையில் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

- அக்டோபர் 2015இல் வெளி அங்காடியில் துவரம் பருப்பு விலை மிக அதிகமாக விற்கப்பட்டு வந்ததால், இவ்விலை உயர்விலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு நவம்பர் 1, 2015 முதல் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110/-க்கு நான்கு முக்கிய நகரங்களில் 91 கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய தமிழக அரசு ஆணையிட்டது.

- அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விலிருந்து சாதாரண மக்களைக் காப்பாற்றும்நோக்கத்துடன்தமிழக அரசுவிலைக் கட்டுப்பாட்டு நிதியினை ரூ.50 கோடியிலிருந்து, ரூ.100 கோடியாக உயர்த்தியுள்ளது.

- நெடுந்தொலைவில் மற்றும், தொடர்பற்ற நிலையில் உள்ள பகுதிகளுக்கு பகுதிநேர கடைகள் திறக்கப்படவேண்டியதன் அவசியம் உணர்ந்து இதுவரை 8,924 புதிய பகுதிநேர நியாயவிலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

- சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வெளிச்சந்தையில் விற்கப்படும் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தமிழக அரசு துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் விநியோகம் செய்ய சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தை தொடங்கியது, சிறப்பு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு ஆகியவை தலா கிலோ ரூ.30/– என்ற விலையிலும் மற்றும் பாமாயில் லிட்டருக்கு ரூ.25/– என்ற விலையிலும் வழங்கப்படுகிறது. இதுவரை துவரம் பருப்பு 75,511 மெ. டன், உளுந்தம் பருப்பு 34,675 மெ.டன், பாமாயில் 87,749 கிலோ லிட்டர் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வெளிச்சந்தையில் உயர்ந்து வரும் அரிசி விலையினைக் கட்டுப்படுத்த, வெளிச்சந்தையிலிருந்து ஒரு இலட்சம் மெ.டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு கிலோ அரிசி ரூ.20/– என்ற விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் அமுதம் கூட்டுறவு சிறப்பங்காடிகள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளால் நடத்தப் பெறும் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சிறப்பங்காடிகள் மூலமாகவும் மற்றும் தேவையின் அடிப்படையில் மாவட்டத் தலைநகரங்கள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- அத்தியாவசியப் பொருட்களின் கடத்தலைத் தடுக்கும்பொருட்டு 74 காவலர்களை உள்ளடக்கிய 12 புதிய குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வு அலகுகள் ரூ.4.25 கோடி செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- உணவு தானியங்களைப் பாதுகாப்பாக சேமிக்கும் பொருட்டு, 95 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டும், 18 கிடங்குகள் கட்டப்பட்டும் வருகின்றன.

- 01.11.2015 முதல் 31.12.2015 வரையில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் 519.5 மெ.டன் அரிசி, 10,058 லிட்டர் மண்ணெண்ணெய், 119 எரி வாயு உருளைகள் கைப்பற்றுகை செய்யப்பட்டது. 990 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தை தடுப்பு சட்டம் 1980இன் கீழ் 41 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖

# மின்வெட்டை அறவே நீக்கி மின்மிகை மாநிலமாய் பிரகாசிக்கும் தமிழகம்!



**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்**

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களில் பங்கு மற்றும் கூட்டு முயற்சி மின் திட்டங்கள் மூலம் 7,485.5 மெகாவாட் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது.
- தமிழ்நாடு மின்சார வாரியம் – தேசிய அனல் மின் கழக கூட்டு முயற்சித் திட்டத்தின் (வல்லூர்) (3x500 மெகாவாட்) மூன்று அலகுகள் 29.11.2012, 25.08.2013 மற்றும் 26.02.2015 அன்று செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை–II வணிக ரீதியான மின் உற்பத்தியை 12.10.2013 அன்று துவக்கியது.
- வடசென்னை அனல் மின் நிலையம் நிலை–IIஇன் (2x600 மெகாவாட்) முதல் மற்றும் இரண்டாவது அலகுகள் 20.03.2014 மற்றும் 08.05.2014 அன்று செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- ஜுன் 2011 முதல் டிசம்பர் 2015வரை 1,495.88 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 3,911.5 மெகாவாட் திறனுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் அமைக்க 159 சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்கள் இதுவரை பதிவு செய்துள்ளார்கள். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இதுவரை 82 சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்களுடன் 1,458 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. 31.01.2016 அன்றைய நிலவரப்படி பல்வேறுதிட்டத்தின் கீழ் 414.3

மெகாவாட் மின்சாரம் சூரிய மின் சக்தி நிலையங்களின்மூலம் கிடைக்க பெறுகிறது.

- நீண்ட கால மின் தேவையை எதிர்கொள்ள, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 3,330 மெகாவாட் மின்சாரம் 2014 முதல் பதினைந்து ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.
- 660 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் நிறுவ பொறியியல், கொள்முதல், கட்டுமான (EPC) பணிகளுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.
- எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2x660 மெகாவாட்) நிறுவ, பொறியியல், கொள்முதல், கட்டுமான (EPC) பணிகளுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- உப்பூர் (2x800 மெகாவாட்) அனல் மின் திட்டத்தை செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- உடன்குடி விரிவாக்கம் நிலை 2 (2x660மெகாவாட்) மற்றும் உடன்குடி நிலை 3 (2x660மெகாவாட்) ஆகிய மின் திட்டங்களுக்கு அரசாணை எண். (4D) 1, 03.02.2015 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- தற்போதுள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு மாற்றாக 660 மெகாவாட் திறன் கொண்ட புதிய மாற்று மின் உற்பத்தித் திட்டம் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலை–Iஇல் உள்ள 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது அலகு 14.11.2014 வரை தொடர்ந்து 337 நாட்கள் மின் உற்பத்தி செய்து அதன் வெள்ளி விழா ஆண்டில் சாதனை படைத்துள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை-I (3x210 மெகாவாட்) இந்திய சராசரி மின் சுமை காரணியான 69.93 விழுக்காட்டை விட அதிகபட்ச மின்சுமை காரணியுடன் 91.68 விழுக்காடுகள் பெற்று இயங்கியது.
- 2011–2012ஆம் ஆண்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் அதன் 25ஆவது ஆண்டில் 92.77 சதவிகிதம் மின்சுமை காரணி பெற்று இயங்கியது.
- 2012–2013ஆம் ஆண்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் அதன் 32ஆவது ஆண்டில் 90.04 சதவிகிதம் மின்சுமை காரணி பெற்று இயங்கியது.
- 60 கிலோவாட் திறன் கொண்ட ரூ.55.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மேற்கூரை சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகக் கட்டடத்தில் 30.12.2013 அன்று திறக்கப்பட்டது.
- 207 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 6,029.66 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதை இயக்கி வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் கயத்தாறு 400 கி.வோ. மற்றும் திருவலம் 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் முறையே 04.07.2014 மற்றும் 27.07.2014 முதல் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- ரூ.5,000 கோடி முதலீட்டில், குறிப்பாக சென்னை நகர மின் கட்டமைப்பு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் ரூ.3,572 கோடி நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.
- காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை திறம்பட வெளியேற்ற 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய 400 கி.வோ. மின் கட்டமைப்புகள் தொப்பக்குண்டு, ஆனைக்கடவு மற்றும் இராசிப்பாளையத்தில் ரூ.1,306.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மரபுசாரா எரிசக்தி மின்சாரத்தை வெளியேற்ற உதவும் மின் தொடரமைப்பை ரூ.1,593 கோடி செலவில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்திய அரசின் நிதித்துறை, தேசிய மாசற்ற எரிசக்தி நிதியிலிருந்து (NCEF) ரூ.637.20 கோடி மானியத் தொகையாக (40%) கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் ஜெர்மனி அரசின் KFW நிறுவனத்திடமிருந்து 40% நிதியுதவி குறைந்த வட்டி கடனில் வாங்குவதற்கு கடன் உடன்படிக்கை 17.12.2014 அன்று கையெழுத்தாகி உள்ளது. இந்த மின் தொடரமைப்பு திட்டங்களுக்கான ஒப்பந்த புள்ளிகளின் பணிகள் நடைபெற்று வருகின்றன.



20 சதவிகிதம் பங்கு மூலதனத் தொகையாக அளிக்கப்படவுள்ளது.

- நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து கடன் பெற ரூ.50,614.09 கோடி தமிழக அரசால் கடன் உத்தரவாதமாக அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.37,483.32 கோடி தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.6,353.49 கோடி அளவிலான கடன் சுமையை தமிழக அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்குண்டான வட்டித்தொகை ரூ.558 கோடி (ஆண்டொன்றிற்கு) தமிழக அரசே செலுத்தி வருகிறது.
- மின்சாரத்தை சேமிப்பதற்கான ஒரு முயற்சியாக, விலையில்லா மின்சாரம் பெறும் அனைத்து குடிசை நுகர்வோர்களின் வீடுகளில் உள்ள இழை பல்புகளுக்கு பதிலாக விலையில்லா சி.எப்.எல். (CFL) பல்புகள் அளிக்கும் திட்டம் 30.12.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- 37.68 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மின்கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்த கடைசி நாள் ஆகிய விவரங்களை குறுஞ்செய்தி மூலமாக நுகர்வோருக்கு தெரிவிக்கும் திட்டம் 12.06.2014 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

**முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்**

- தமிழக அரசு நாட்டிலேயே தனித்தன்மை வாய்ந்த மற்றும் மிகப்பெரிய சூரிய மேற்கூரைத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் துவக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 60,000 வீடுகள் வீதம் மாநிலம் முழுவதும் 2011–2012 முதல் 2015–2016 வரையான ஐந்து ஆண்டுகளில் 3இலட்சம் சூரியசக்தி வீட்டு விளக்குகளுடனான பசுமை வீடுகள் கட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 20–30 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் பலகைகள் ரூ.900 கோடி மதிப்பீட்டில் மேற்கூரையில் பொருத்தப்படும்.
- 3,00,000 சூரியசக்தி வீட்டு விளக்குகளுக்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டு 1,53,611 சூரியசக்தி வீட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்கும் திட்டம்**

- 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் கிராமப் பஞ்சாயத்துக்களில் 1 இலட்சம் தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் ஒளிர்விக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலேயே முதன்முதலாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் ஒளிர்விக்கப்பட்டிருந்த தெரு விளக்குகள், மின்சிக்கன சேமிப்பு விளக்குகளாக (LED) மாற்றப்பட்டு 10/15 தொகுப்புகளில் சூரியசக்தி மூலம் ஒளிர்விக்கப்படுகிறது.
- 40,000 தெரு விளக்குகளுக்கு சூரியசக்தி மூலம் மின்னூட்டும் பணிக்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டு 35,560 தெரு விளக்குகள், சூரியசக்தி மூலம் மின்னூட்டும் பணி முடிவுற்றுள்ளது.

**முதலமைச்சரின் சூரிய மேற்கூரை ஊக்கத்தொகை திட்டம்**

- இத்திட்டத்தின் கீழ் 1 கி.வாட். திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் கூடிய சூரிய மேற்கூரை மின் அமைப்புகளை நிறுவும் 10,000 வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு ஒரு கி.வாட்டிற்கு ரூ.20,000/– முதலீட்டு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அரசாணை வெளியிடப்பட்டு, அதன்படி வழங்கப்பட்டு வருகிறது.
- மேலும், வீட்டு உபயோகிப்பாளர்கள், நிகர அளவு திட்டத்தின் கீழ் பயன்பாட்டிற்கு பின் மின் கட்டமைப்பில் செலுத்தும் மின்சாரத்திற்குரிய மின் வரவைப் பெற்றுக் கொள்ளலாம். இது தவிர வீட்டு உபயோகிப்பாளர்கள் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்த விலையில் அதிகபட்சமாக 30 விழுக்காடு மைய அரசின் நிதியுதவியைப் பெறலாம். இதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தின் (www.teda.in) மூலம் ஆன் லைனில் பெறப்பட்டு முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் (first come first serve basis)

ஒப்பளிப்பு அளிக்கப்படும். 01.02.2016 வரை 5,783 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 5,246 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- நாளொன்றுக்கு 500 லிட்டர் கொள்ளளவுள்ள 50 எண்ணிக்கையிலான சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் ஆவின் பால் குளிரூட்டும் நிலையங்களில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

**ரெனர்ஜி 2014**

- இந்தியாவின் மிகப் பெரிய “புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2014 (Renergy 2014) பன்னாட்டுக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி” வெற்றிகரமாக சென்னை வர்த்தக மையத்தில் 2014 ஜுன் 12ஆம் தேதியிலிருந்து 14ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் சுமார் 2,000 பங்கேற்பாளர்களும், 15,000 பார்வையாளர்களும், 200 கண்காட்சியாளர்களும் மற்றும் 100 பேச்சாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சி 2012ஆம் வருடத்திலிருந்து ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. ரெனர்ஜி 2015 செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் உலக முதலீட்டாளர்கள் கூட்டத்துடன் சேர்த்து நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி கோயம்புத்தூரில் 2013 மற்றும் 2015இல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

**மின் ஆய்வுத்துறை**

- மின்சாரச் சட்டம், 2003இல் தெரிவித்துள்ள பாதுகாப்பு விதிமுறைகளை மின் அமைப்புகளில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வது மின் ஆய்வுத்துறையின் பொறுப்பாகும். 1961ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்துறை, மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்குதல், மின் கருவிகள் சோதனை செய்தல், மின் வரி வசூலித்தல் மற்றும் எரிசக்தி சேமிப்பை ஊக்குவித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**மின் ஆய்வுத்துறை வழங்கும் சேவையில் மேம்பாடு**

- நுகர்வோர்கள் மின் ஆய்வுத்துறையிலிருந்து சேவைகளை எளிதில் பெறவும் மற்றும் துறையின் செயல்திறனை அதிகரிக்கும் வகையிலும், வேலைப்பளு மற்றும் மாவட்ட/ தாலுக்கா எல்லைகளை கருத்தில் கொண்டு மின் ஆய்வுத்துறையின் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் அதிகமுள்ள பகுதிக்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்பட்டு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

- மேலும், மின்சாரச்சட்டம் 2003, பிரிவு 162இன் கீழ், புதிதாக தொடங்கப்படும் மின்னமைப்புகளுக்கான அனுமதியை விரைவில் அளித்திடும் வகையில், மின்னமைப்புகளுக்கு அருகில் உள்ள கோட்ட அலுவலகங்கள் வழியாக அனுமதிகள் வழங்கிடும் வகையில் அதிகாரம் வழங்கி அரசால் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அரசு மின்னியல் தரநிர்ணய ஆய்வுக் கூடம்**

- தமிழ்நாடு மின் ஆய்வுத் துறையின் தலைமை அலுவலகமான அரசு தலைமை மின்ஆய்வாளர், சென்னைஅலுவலகத்தில், அரசு மின்னியல் தரநிர்ணய ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக் கூடத்தில் உள்ள உயர்தர மின் அளவிக் கருவியினைக் கொண்டு பல்வேறு மின்வாரியங்களின் மின் அளவிக் கருவிகள் சோதனை செய்யப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடம் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது.

- “சோதனை மற்றும் அளவுகள் நிர்ணய ஆய்வுக் கூடங்களை ஏற்பளிக்கும் தேசிய வாரியம் (NABL)” இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அமைப்பாகும். இந்த அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக் கூடத்தால் வழங்கப்படும் சோதனைச் சான்றிதழ்கள் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும். அரசு மின்னியல் தரநிர்ணய ஆய்வுக் கூடம் NABL அமைப்பால் ஜுலை, 2012இல் அங்கீகரிக்கப்பட்டது.

- அரசு மின்னியல் தரநிர்ணய ஆய்வுக் கூடத்தில் மேற்கொள்ளப்படும் மின் அளவு சோதனைகளை மேம்படுத்த ஏதுவாக மேம்படுத்தப்பட்ட 100 ppm அளவு துல்லியமாக சோதனை செய்யும் திறனுடைய மின் திறன் அளவி ஜெர்மனியிலிருந்து அக்டோபர், 2013இல் கொள்முதல் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக NABL ஏற்பளிப்பில் உள்ள மின்சாரத்தை அளக்கும் திறன் 150 ppm அளவு (Parts Per Million) மிகத் துல்லியமாக அளக்கும் விதமாக ஜுலை, 2014–லிருந்து மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த தரத்தில் தேசிய அளவில் மும்முனை மின் அளவை அளக்க அல்லது சோதனை செய்யும் நிலையில், தேசிய பௌதீக ஆய்வுக்கூடம்–புதுடெல்லி, ஆய்வுக் கூடத்திற்கு அடுத்தபடியாக உள்ள சில ஆய்வுக் கூடங்களில் ஒன்றாக இந்த ஆய்வுக் கூடம் அமையும். இந்த வசதி காரணமாக நம் நாட்டின் பல்வேறு ஆய்வகங்களின் மின் அளவிகருவிகள், மின் பகிர்மான மற்றும் மின் உற்பத்தி நிலையங்களின் மின் அளவிகளை உலக தரத்தில் தற்போது மிகத் துல்லியமாக சோதனை செய்திட முடியும்.





**மின்னமைப்பின் மின்பாதுகாப்பினை உறுதி செய்ய கையடக்க மின் கருவிகள் கொள்முதல்**

- மின்னமைப்புகளில் மின் பாதுகாப்பினை கண்காணிக்கவும் மற்றும் உறுதிசெய்யும் பொருட்டும் இத்துறையின் மின் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் சட்ட திட்ட ஆய்வுகளின் போது கையடக்க அளவில் மின் கசிவுகண்டறியும் கருவி, மின்னோட்டத்தை அளக்கும் கருவி மற்றும் மின் தடை காப்பீட்டு சோதனைகருவி ஆகியன கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இக்கருவிகளைப் பயன்படுத்தி மின் ஆய்வாளர்கள், ஆய்வின் போது கள சோதனை செய்து மின்னமைப்பின் மிக முக்கியமான மின் அளவீடுகளான மின் கசிவு, மின்னோட்டம் மற்றும் மின் காப்பானின் மின் தடை ஆகியவற்றை உறுதிசெய்து மின்சாரத்தினால் விளைவு ஏற்படுத்தக்கூடிய தீங்குகளை உபயோகிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்று பாதுகாப்பினை உறுதி செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கட்டடங்களில் எரிசக்தி சேமிப்புவிதித் தொகுப்பு**

- குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் மற்றும் ஒருசில பெரிய வணிகவளாகக் கட்டடங்களின் இணைக்கப்பட்ட மின் பளு 100 கிலோவாட் அல்லது அதற்குமேல் உள்ள கட்டடங்களின் மின் நுகர்வு அளவினை குறைக்கும் வகையில், கட்டடங்களின் எரிசக்தி சேமிப்பு விதித் தொகுப்பில் மாநிலத்தின் பல்வேறு பருவநிலைப் பகுதிகளுக்கேற்ப மாறுதல் செய்து இந்த வரையறைகளை கட்டட வரைபட அனுமதி வழங்கும் போது உள்ளூர் திட்டக்குழும அதிகாரிகளால் நடைமுறைப்படுத்த தமிழக அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**எரிசக்தித் திறனை மேம்பாடு செய்தல்**

- மின் உபயோக சாதனங்களின் எரிசக்தி சேமிப்புத்திறனை அறிந்து கொள்ளும் வகையில், தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டடம் மற்றும் எழிலகம் பிரதான கட்டடத்தில் மின்சக்தி சேமிப்பு சாதனங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் 20% மின் சேமிப்பு அடையும் வகையில் உறுதி செய்யப்பட்ட மின் சேமிப்பு முறைகளான 5 நட்சத்திர குறியீடு கொண்ட குளிர் சாதனகருவிகள், மின் விசிறிகள் மற்றும் சேமிப்பு T5 குழல் விளக்குகள் பொருத்தப்பட்டன.

❖ ❖ ❖

# எதிர்கால சந்ததிக்கு இனிய உலகைத் தந்திடும்! மாசைக் கட்டுப்படுத்தி மகிழ்ச்சியே பொங்கிடும்!




- சென்னை சேத்துப்பட்டில் உள்ள ஏரியினைச் சுற்றி விளையாட்டு, மீன்பிடி மற்றும் சூழல் பூங்கா அமைப்பதற்கு 2013–2014ஆம் ஆண்டில் ரூ.22 கோடியும், 2014–2015ஆம் ஆண்டில் ரூ.12.50 கோடியும், ஆக மொத்தம் ரூ.34.50 கோடி நிதி மீன்வளத்துறைக்கு விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கயத்தாறில் 500 கிலோ வாட் Solar Photo Voltaic System உடன் இணைந்த 1.5 மெகா வாட் திறன் கொண்ட காற்றாலை ரூ.12 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.
- வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியியல் பூங்கா, கிண்டி தேசிய பூங்கா, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம், பழவேற்காடு பறவைகள் சரணாலயம் மற்றும் அமிர்தி குறு உயிரியல் பூங்கா ஆகியவற்றில் சூழல் மீட்டளிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ரூ.10.01 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சோலைக் காடுகளில் உள்ள தாவரங்களை மறு உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 2013–2014ஆம் ஆண்டில் ரூ.2.07 கோடியும், 2014–2015ஆம் ஆண்டில் ரூ.0.942 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பிளாஸ்டிக் பயன்பாட்டினை குறைத்தல்**

- பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மறு சீரமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ.219.37 கோடியில் இதுவரை ரூ.210.60 கோடி செலவில் 1,551 கி.மீ நீளத்திற்கு சாலைகள் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்சாலைகள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளன.
- பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிக்கும் மையம் அமைக்க ரூ.4.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 95 பிளாஸ்டிக் பதனிடும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக மக்கும் பொருட்களாலான பைகள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மக்களுக்கும் ரூ.75 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் விநியோகிக்க நடவடிக்கை.
- பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வினை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த "Message on Wheels" என்ற திட்டம் 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.64 இலட்சம் செலவில் மாநிலம் முழுவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014–2015ஆம் ஆண்டிற்கு ரூ.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- 10 மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்துப் பயன்படுத்தும் 15 மையங்கள் ரூ.2.20 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 5 பிளாஸ்டிக் கழிவுகளைத் தூளாக்கும் இயந்திரங்கள் ரூ.0.20 இலட்சம் செலவில் ஏற்படுத்தி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பிளாஸ்டிக் பயன்பாட்டினை குறைப்பதில் முக்கிய பங்காற்றிடும் மூன்று சுய உதவிக் குழுக்கள், மூன்று சிறந்த கிராமங்கள் மற்றும் மூன்று சிறந்த சுத்தமான பசுமைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. 2013–2014 மற்றும் 2014–2015ஆம் ஆண்டில் வழங்க ஏதுவாக தலா ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மன்றங்களை பலப்படுத்துதல் மற்றும் புதிய சுற்றுச்சூழல் மன்றங்களை உருவாக்குதல்**

- ஏற்கெனவே இயங்கி வந்த 1,869 சுற்றுச்சூழல் மன்றங்களோடு, 2012–2013ஆம் ஆண்டில் மேலும் 3,200 புதிய மன்றங்களோடு மொத்தம் 5,069 சுற்றுச்சூழல் மன்றங்களின் தொடர் நடவடிக்கைகளுக்காக ரூ.1.27 கோடி 2013–2014ஆம் ஆண்டில் நிதி விடுவிக்கப்பட்டது.
- 2013–2014ஆம் ஆண்டில் மேலும் 3,200 சுற்றுச்சூழல் மன்றங்கள் ஏற்படுத்த ரூ.80 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ரூ.4.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் தற்போதுள்ள 8,269 சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.2,500/– உதவித்தொகை ரூ.5,000/– ஆக உயர்த்தி 2014–2015ஆம் ஆண்டு முதல் வழங்க நிதி விடுவிக்கப்பட்டது.
- புதியதாக 3,200 சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்க ரூ.1.60 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 11,469 சுற்றுச்சூழல் மன்றங்கள் செயல்படுகின்றன.
- பள்ளி மாணவர்கள் சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில், சிறப்பாகச் செயல்பட்டு வரும் 500 சூழல் மன்றங்கள் / தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்களை வலுப்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு பள்ளிக்கு தலா ரூ.20,000/– என்ற விகிதத்தில் ரூ.100 இலட்சம் 2014–2015ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் துறையில் 2014–2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களின் விவரங்கள்**

- ஒருங்கிணைந்த மேலாண்மை அணுகுமுறை உடனடியாக தேவைப்படும் இரண்டு சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளான திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு 2014–2015ஆம் ஆண்டில் தலா ரூ.10 இலட்சம் வீதம் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டங்கள் தயாரிக்க நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
- ஏற்கெனவே இயங்கி வரும் 7 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்களை வலுப்படுத்தும் பணிகளுக்காக 2014–2015ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் வலுப்படுத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.
- 2014–2015ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு 32 மாவட்டங்களில், 96 அறிவிப்புப் பதாகைகள் நிறுவும் பணி முடிக்கப்பட்டுள்ளது. வலைத்தளம் மூலமாக வினாடி–வினா நிகழ்ச்சிகள், சுற்றுச்சூழல் துறை மூலம் குறிப்பிட்ட கால அளவுகளில் தற்போது நடத்தப்பட்டு வருகிறது.
- பருவநிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒரு பிரிவு ஏற்படுத்த ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு வலைதளம் மூலமாக வினாடி–வினா நிகழ்ச்சிகள், சுற்றுச்சூழல் துறை மூலம் குறிப்பிட்ட கால அளவுகளில் தற்போது நடத்தப்பட்டு வருகிறது.
- 2014–2015ஆம் ஆண்டில், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அய்யர்குளம், குயவன்குட்டை மற்றும் கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள சித்தம்பட்டி குளங்களை சூழல் மீட்டளிப்பு செய்ய ரூ.4.50 கோடி பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கும், ஈரோடு மாவட்டம்,



பேரோடு பஞ்சாயத்திற்குட்பட்ட குட்டைத்தயிர் பாளையம்குளம் மற்றும் புஞ்சைக்காளமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட கம்பத்தீஸ்வரன் குளங்களை சூழல் மீட்டளிப்பு செய்ய ரூ.3 கோடி மாவட்ட நிருவாகத்திற்கும், ஆக மொத்தம் ரூ.7.50 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- திருவள்ளூர் மாவட்டம், மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளின் சதுப்புநில பகுதிகளை மீளச்செய்ய ரூ.20 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வன உயிரியல் மற்றும் பறவைகள் சரணாலயங்களிலுள்ள 19 நீர்நிலைகளை புனரமைக்க ரூ.3.59 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- புதிதாக சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்களை உருவாக்கவும், ஆசிரிய–ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கவும் ரூ.1.130 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அமிர்தி உயிரியல் பூங்காவில் பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.36 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.24.618 கோடி செலவில் வனத்துறைக்கும், ரூ.20 இலட்சம் செலவில் அமிர்தி உயிரியல் பூங்காவிலும் பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்படும்.
- சுற்றுச்சூழல் அமைப்புமற்றும் அதன் பாதுகாப்பை வலியுறுத்த 2014–2015ஆம் ஆண்டில் ரூ.1 கோடி செலவில் குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஊடகங்கள் மூலம் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், சர்க்கார் பெரியபாளையம் ஏரியினைப் புனரமைக்க முதற்கட்டமாக ரூ.4 கோடி விடுவிக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மாவட்டம் ஒன்றிற்கு 10 பள்ளிகள் வீதம் சிறந்த சுற்றுச்சூழல் மன்றங்கள் / தேசிய பசுமைப்படை பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்க ரூ.32 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்**

- சென்னை, சேலம், மதுரை, கடலூர், கோவை ஆகிய 5 மாவட்டங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து அங்கீகார சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.
- சிவகங்கை, திண்டுக்கல், நாமக்கல், விருதுநகர், தஞ்சாவூர், விழுப்புரம், புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களில் ரூ.10.4 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு 13.11.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- திருப்பூரில் கழிவுநீர் வெளியேறுவதில் பூஜ்ய நிலையினை எய்திட 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூ.179.34 கோடி விடுவிக்க ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ஒருமுறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாதிருக்க ரூ.32 இலட்சம் ஒதுக்கீட்டில் 32 மாவட்டங்களிலும் விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டது.
- கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்கையில் உயிரிழப்பினை தவிர்க்க ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் 3,000 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
- மறைமலைநகரில் புதிய மாவட்ட ஆய்வகம் ரூ.58 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 11.09.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டது.
- முதன்முறையாக, வாரியத்தின் அனைத்து மாவட்டச் சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு 34 கையடக்க கணினி (Tablet Computer) ரூ.3.96 இலட்சம் செலவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.09.2012 அன்று வழங்கப்பட்டது.
- தமிழகத்தில் முதன்முறையாக சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கிய 12 தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.09.2012 அன்று பசுமை விருதுகள் வழங்கினார்கள்.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங்களுக்கு ரூ.1.28 கோடி செலவில் வாங்கப்பட்ட 86 மிதக்கும் நுண்துகள்கள் 10 (PM 10) கருவிகள் மற்றும் ரூ.11.33 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட 5 மிதக்கும் நுண்துகள்கள் 2.5 (PM 2.5) கருவிகள் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.09.2012 அன்று வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு இடர்படி ரூ.60 லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வசதி 2013–2014ஆம் நிதி ஆண்டிலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் வழங்கப்படுகிறது.
- நிருவாக வசதிக்கெனவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் இரண்டடுக்காகச் செயல்பட்டு வந்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் மாவட்டம், மண்டலம் மற்றும் தலைமை அலுவலகம் என மூன்றடுக்காக செயல்படுகின்றது.
- பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலைகளின் வசதிக்கென அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கென ஒரு புதிய மாவட்ட அலுவலகம் அரியலூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளை முனைப்பாகக் கண்காணிக்க மேலும் ஒரு புதிய மாவட்ட அலுவலகம் பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.
- தொழில் நகரமான கோவை மாவட்டத்தில் உள்ள அநேக தொழிற்சாலைகளை கண்காணிக்க கோவை வடக்கிற்கென ஒரு புதிய மாவட்ட அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சியர்களுக்குப் பசுமை விருதுகளை வழங்கினார்கள்.
- கடலூரில் புதியதாகக் கட்டப்பட்ட மாவட்ட அலுவலகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.06.2014 அன்று திறந்து வைத்தார்கள்.
- தூத்துக்குடி சிப்காட் தொழில் வளாகத்தில் சுற்றுச்சூழல் காற்றின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் வாரியம் ரூ.87 இலட்சம் செலவில் ஒரு சுற்றுப்புறக்காற்று தொடர்கண்காணிப்பு நிலையத்தை அமைத்து இயக்கி வருகின்றது.
- தமிழ்நாட்டில் மாசு கட்டுப்பாடு வாரியம் காற்றின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் 6 இடங்களில் அதாவது, சென்னையில் 4 தொடர்காற்று தர கண்காணிப்பு நிலையங்களையும், தூத்துக்குடி

மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தலா ஒரு கண்காணிப்பு நிலையத்தையும் நிறுவி அவை அனைத்தும் செயல்பட்டு வருகிறது.

- சென்னை மாநகரத்தில் சுற்றுச்சூழல் ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் வாரியம் ரூ.76 இலட்சம் செலவில், பழைய வண்ணாரப்பேட்டை, சௌகார்பேட்டை, அண்ணா நகர், வேளச்சேரி மற்றும் பள்ளிக்கரணை ஆகிய 5 இடங்களில் ஒலி அளவு கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. தொகையில் 50% மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும் மீதமுள்ள 50% தொகை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும் வழங்கப்பட்டது.

- நீர்நிலைகளில் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு வாரியம் ரூ.40 இலட்சம் செலவில் நொய்யல் ஆறு, தாமிரபரணி ஆறு மற்றும் காளிங்கராயன் கால்வாயில், முறையே மூன்று இடங்களில் நீரின் தன்மையை அறிய வாரியம் ஒவ்வொரு நீர்நிலைகளிலும் தலா மூன்று தொடர் நீர் தரம் கண்காணிக்கும் கருவிகளை நிறுவியுள்ளது. இந்நிலையங்கள் மூலம் நீரின் பி.எச்., மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள் மற்றும் நீரில் கரைந்துள்ள ஆக்சிஜன் அளவு கண்காணிக்கப்படுகிறது.

- தொழில் முனைவோர், வாரிய இசைவாணை விண்ணப்பங்களை சுலபமாக இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (Online Consent Management and Monitoring System)–யை ஏற்படுத்தி, 19.01.2015 முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இவ் இணையவழி இசைவாணை முறைமை மூலம் தொழிற்சாலைகளுக்கு உதவும் வண்ணம் வாரியம் தமது 34 மாவட்ட அலுவலகங்களிலும் உதவி மையத்தினை (Care Centre) ஏற்படுத்தியுள்ளது.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைய வழியில் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து இசைவாணைகளை கால தாமதமின்றி வழங்க ஏதுவாக வாரிய உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து பொறியாளர்களுக்கும் ரூ.1.4 கோடி செலவில் 219 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

**வனத்துறை**

- மாநிலத்தில் பசுமைப்பரப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மாபெரும் மரம் நடவுத் திட்டம் 2011–2012 முதல் 2015–2016 வரை ரூ.229.61 கோடி மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் 3.29 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யும் திட்டத்தில் இதுவரையில் மாநிலத்தின் 32 மாவட்டங்களில் ரூ.84.79 கோடி செலவில் 2.61 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

- நடப்பாண்டில், வால்பாறைப் பகுதிகளில் தமிழ்நாடு அரசுப் பேருந்து கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளில் யானைகள் நடமாட்டம் குறித்து உடனுக்குடன் பொதுமக்கள் அறிந்து விழிப்புடன் இருக்கும் வகையில் முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் வசதி ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- 67 இலட்சம் மரக்கன்றுகள் நடும் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் 31.07.2015 முடிய மாநிலத்தில் 32 மாவட்டங்களில் 1,29,245 மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

- 2011–2012 முதல் 2018–2019 வரையிலான காலத்தில் ரூ.686 கோடி செலவில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் "தமிழ்நாடு உயிர்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்" செயலாக்கத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2015–2016ஆம் ஆண்டில் தனியார் நிலங்களில் மரம் நடும் திட்டத்தின் கீழ் 1.02 கோடி மரக்கன்றுகள் 1,021 கிராமங்களில் விவசாயிகளுக்கு இலவசமாக நட்டுத்தரப்படும். இதற்காக 1.07 கோடி மரக்கன்றுகள் எழுப்பப்பட்டு வருகிறது. முன்னோடியாக இதுவரை, ஒரு கோடி மரக்கன்றுகள் எழுப்பப்பட்டுள்ளன. 31.10.2015 முடிய திட்ட செயலாக்கத்திற்கென ரூ.32 கோடியினை திட்ட மேலாண்மை முகமைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–2இன் கீழ் ரூ.111.77 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த நான்காண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 1,377 பயனாளிகளுக்கு ரூ.52.79 இலட்சம் சிறுகடன் வழங்கப்பட்டுள்ளது.



- நகர்ப்புறங்களில் குரங்குத் தொல்லைகளை தவிர்த்திட 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டுகளில் ரூ.3.63 கோடி அனுமதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.3.06 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், இத்திட்டச் செயலாக்கத்திற்கென ரூ.0.67 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

- 2011–2012 முதல் 2013–2014ஆம் ஆண்டு வரை, வனவளங்களைப் பாதுகாத்து, உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட 13ஆவது நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.89.05 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இதுவரையில், இத்திட்டத்திற்கென ரூ.81.48 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டில் செலவிடப்படாத தொகையுடன் சேர்த்து, இத்திட்டம் ரூ.43.13 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டில் 12,775 எக்டேர் நிலப்பரப்பில் தேக்கு மரங்கள் நடவு மற்றும் பராமரிப்பிற்கு ரூ.15.84 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இதுவரையில், ரூ.12.79 கோடி செலவில் 11,075 எக்டேர் பரப்பில் தேக்கு மரத் தோட்டங்கள் எழுப்புதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014–2015ஆம் ஆண்டிலும் ரூ.13.97 கோடி செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் வன உயிரினங்களால் விளை நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பினை கட்டுப்படுத்த ஆசிய யானைகள் திட்டத்தின் கீழ் ரூ.53.33 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது. அவற்றில், ரூ.49.18 கோடி செலவில் பல்வேறு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், சக்கரைக்கோட்டை நீர்தேக்கத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் நான்காவது புலிகள் காப்பகம் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், 2013–2014ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் காவேரி வடக்கு வன உயிரினச் சரணாலயம், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் புள்ளிமான் உயிரினச் சரணாலயம் மற்றும் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கோடியக்கரை வனஉயிரினச் சரணாலயம் பகுதி "அ" மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பகுதி "ஆ" உருவாக்கி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- வனத்துறையின் களப்பணியாளர்களுக்கு பல்வேறு பணிகளில் திறம்பட பயிற்சி அளிக்கும் வகையில் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அட்டகட்டி மற்றும் முதுமலை புலிகள் காப்பகத்தில் தெப்பக்காடு பகுதியிலுள்ள அடிப்படை பயிற்சி மையங்களை வன உயிரின மேலாண்மை மையங்களாக தரம் உயர்த்த தலா ரூ.1 கோடி வீதம் ரூ.2 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- நடப்பாண்டில் வனத்துறையின் வன ஆராய்ச்சிப் பணிகளை ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- நடப்பாண்டில் வனத்துறையில் புலிகள் திட்டத்தினை ரூ.9.36 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு நிதியுதவியுடன் தொடர்ந்து களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் ஆகிய மூன்று புலிகள் காப்பகங்களில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டில் நெல்லை வன உயிரினச் சரணாலயம் 15ஆவது வன உயிரினச் சரணாலயமாக உருவாக்கி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் – தேரூர் – மணக்குடி ஏரிப்பகுதி தமிழ்நாட்டின் இரண்டாவது ஒதுக்குப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் வன உயிரினப் பாதுகாப்புச் சுழல் நிதி ஏற்படுத்திட ரூ.1 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மலைப்பகுதி மாவட்டங்களில் பழங்குடி இளைஞர்களுக்கும் ஏற்கெனவே பணியில்




அமர்த்தப்பட்டிருக்கும் பழங்குடியின வேட்டை தடுப்புக் காவலர்களுக்கும் சம அளவு அடிப்படையில் வனக்காவலர் பணியிடங்கள் 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்திட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 2011–2012ஆம் ஆண்டில், ரூ.12.73 கோடி செலவில் 1.19 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.
- 2011–2012 முதல் 2015–2016ஆம் ஆண்டு வரை மனித வன உயிரின மோதல்களை தடுக்க, வனத்திற்குள் வன உயிரின வாழ்விடங்களை மேம்படுத்தி தீவன வளங்களை ஏற்படுத்த ரூ.20.87 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒப்பளிக்கப்பட்டு, ரூ.13.69 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2012–2013 முதல் 2015–2016 வரை தானே புயல் பாதித்த பகுதிகளான விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.14.96 கோடி மதிப்பீட்டில் மறு உற்பத்திப் பணிகள் மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்டது. இதுவரையில், ரூ.11.11 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- 2011–2012ஆம் ஆண்டில், ஸ்ரீரங்கம் தொகுதியில், திருச்சி வனக்கோட்டம் மேல் அணைக்கட்டு காப்புக் காட்டில், வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திரவனம், யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணமும் வண்ணத்துப்பூச்சி இனங்களின் பாதுகாப்பிற்காகவும் ரூ.7.35 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.4.72 கோடி திட்ட செயல்பாட்டிற்கென செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.2.62 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில், வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.27.13 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) நிறுவனம் அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதுவரையில் ரூ.1.30 கோடி கட்டுமானப்பணிகள் மேற்கொள்ள செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள் ரூ.5.83 கோடி செலவில் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில் நபார்டு நிதியுதவியுடன் 10 மாவட்டங்களில் 50,000 எக்டேர் தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர்வள பாதுகாப்பு மற்றும் மரஅடர்த்தி மேம்பாட்டிற்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில், ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதுவரையில், ரூ.49.70 கோடி செலவில் 50,000 எக்டேர் பரப்பில் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 35,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டு முதல் 2017–2018 வரையிலான ஐந்தாண்டுகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் சோலைக்காடுகள் மீட்டெடுத்தல் மற்றும் மறுதளிர்ப்பிற்காக அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் ரூ.19 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு மரக்கன்றுகள் விநியோகம் செய்திட மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களில் மத்திய நாற்றங்கால்கள் ஏற்படுத்த ரூ.4.80 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில் மரபுவழி சந்தன மரப்பகுதிகளில் இயற்கையாக மறு உற்பத்திக்கு உதவிடுதல் திட்டத்தின் மூலம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் உள்ளூர் சந்தன மரங்களை மீட்டெடுக்க ஆணைகள் பெறப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.
- 2013–2014ஆம் ஆண்டில் வனத்துறையில் சட்டப் பிரிவினைப் பலப்படுத்த மூன்று வழக்கறிஞர் பணியிடங்கள் (குற்றவியல் 1, பொதுநலம் 2) ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டில், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன அருங்காட்சியகம் அமைத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.16 இலட்சம் இத்திட்டம் செயலாக்கத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் ரூ.4 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் வேலூர் அமிர்தி உயிரியல் பூங்கா மற்றும் திருச்சி உயிரியல் பூங்காக்கள் மேம்பாட்டிற்கென ஒப்புதல் வழங்கப்பட்டு, இதுவரையில் ரூ.2.60 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- வேட்டைத்தடுப்புக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஊதியம் ரூ.4,000/– லிருந்து ரூ.6,750/– ஆக உயர்த்தி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு தற்போது உயர்த்தி வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட தமிழ்நாடு உயிரியல் பூங்கா அதிகாரக் குழுமத்தின் கட்டுப்பாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்களின் வளர்ச்சிப் பணிகளை ரூ.6.94 கோடி செலவில் மேற்கொள்ள அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.6.88 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டில், வனப்பகுதிகளில், ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் சூரியசக்தி மூலம் வனஉயிரினங்களுக்குத் தேவையான குடிநீர் வசதியினை மேற்கொள்ள அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், ரூ.2.81 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டில், வனவிலங்கு தாக்கி உயிரிழந்தால் வழங்கப்படும் இழப்பீடு ரூ.1.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும், பயிர்ச்சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– லிருந்து ரூ.25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு தற்போது அதன்படியே நிவாரணத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011 முதல் 2014 வரை 6,852 நிகழ்வுகளுக்கு ரூ.8.56 கோடி பல்வேறு திட்டங்களின் கீழ் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.4.97 கோடி நிவாரணத் தொகையாக வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 3,122 நிகழ்வுகளுக்கு ரூ.4.79 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.2.50 கோடி சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக பணிகளுக்குண்டான நிதிகள் 31.12.2012 முடிய பன்னாட்டு நிதி நிறுவனம் வழங்கி வந்தது. 01.01.2013 முதல் காப்பக பணிக்காக தமிழக அரசு 2013–2014 முதல் 2016–2017 வரை 4 ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு ரூ.2.50 கோடி வீதம் ரூ.10 கோடி கொள்கையளவில் ஒப்பளிப்பு செய்து 2013–2014ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் ரூ.1.32 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி செலவில் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 2012–2013ஆம் ஆண்டில், வனத்துறையில் பணிபுரியும்சீருடைப்பணியாளர்கள்,ஓய்வுபெற்ற சீருடைப்பணியாளர்கள் மற்றும் இறந்துவிட்ட சீருடைப் பணியாளர்களின் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு காவல்துறையில் உள்ள சிறப்பு அங்காடியைப் பயன்படுத்திட ஆணைகளும் காவல்துறை சிறப்பு அங்காடிக்கு கூடுதல் நிதியாக ரூ.10 இலட்சம் ஒப்பளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- 2012–2013ஆம் ஆண்டில், வனத்துறையில் பணிபுரியும் வனப்பணியாளர்களுக்கு காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக சீருடைப்படி, சலவைப்படி மற்றும் இடர்படி ஆகியவற்றை உயர்த்தி வழங்க ரூ.4 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.6.58 இலட்சம் செலவில் மாதந்தோறும் ரூ.400/– வீதம் 137 வேட்டைத் தடுப்புக்காவலர்களுக்கு இடர்படி வழங்குவது விரிவுபடுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டில், வனப்பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவை பலப்படுத்த 13 ஈப்புகள், 26 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ரூ.1.44 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில், ரூ.4.42 கோடியில் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டில், கட்டடங்கள் கட்ட முறையே ரூ.8.89 கோடி மற்றும் ரூ.9.43 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், ரூ.7.58 கோடி செலவிட கட்டடங்கள் கட்டவும், மேம்படுத்தவும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ / மாணவியருக்கு முதன்முறையாக பரிசுத் தொகை ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– வரை மாணவ, மாணவியர் பிரிவுகளில் தனி நபர் தரம் பிடித்தவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், 27 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.7.40 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- 2011 முதல் இதுவரை, ரூ.50.31 கோடி செலவில் முறையே 326.528 கிலோ மீட்டர் நீளத்திற்கு வனத்துறையிலுள்ள சாலைகள் மேம்பாட்டுப்பணிக்கென செலவிடப்பட்டுள்ளது.

- 2011–2012 மற்றும் 2013–2014 வரையான காலத்தில் சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ரூ.29.48 கோடி செலவில் 394.223 கி.மீ. நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைக் கொண்டு வனத்துறைச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில், ரூ.24.62 கோடி செலவில் 137.284 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி வனத்துறை சாலைகள் மீண்டும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் 87.25 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனை மூலம் ரூ.39.40 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில், 298.983 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.137.41 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2014–2015ஆம் ஆண்டில், இதுவரையில் 67.585 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.38.39 கோடி அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டில், 458 கனமீட்டர் தேக்கு மரக்கட்டைகளின் ஏல விற்பனையின் மூலம் ரூ.85 இலட்சம் வருவாய் அரசு ஈட்டியுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில், 3,745.407 கனமீட்டர் தேக்கு மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.12.41 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் இதுவரையில் 109.327 கனமீட்டர் தேக்கு ஏல விற்பனையின் மூலம் ரூ.3.39 கோடி அரசு வருவாயாக ஈட்டியுள்ளது.

- கடந்த நான்காண்டுகளில் ரூ.76 கோடி வருவாய் சமூக வனத்தோட்ட விற்பனை மூலம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

- 2011–2012ஆம் ஆண்டில் ரூ.7.81 கோடி மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் ரூ.6.77 கோடி பஞ்சாயத்துக் குளங்களில் உள்ள சமூகக் காடுகள், தோட்டங்களை விற்பனை செய்து பஞ்சாயத்து வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த நான்காண்டுகளில் 11,545.145 எக்டேர் நிலப்பரப்பு காப்புக்காடாகவும் மற்றும் 8,695.315 எக்டேர் பரப்பு காப்புநிலமாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்**

- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 9,11,899 மெட்ரிக் டன் கூழ் மரம் தமிழ்நாடு காகித ஆலை மற்றும் சேஷசாயி காகித ஆலை ஆகியவற்றிற்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் கிடைக்கப்பட்ட வருவாய் ரூ.3,869.30 இலட்சம்.

- 19,723 எக்டேரில் தைல கூழ் மரத் தோட்டங்கள், குளோனல் கன்றுகள் ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முந்திரி தோட்டங்கள் பொது ஏலம் மற்றும் டேண்டர் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் ஈட்டப்படுகிறது. 2015 ஏப்ரல் முதல் ஜூலை வரை இதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ.34.78 இலட்சம்.

- 3,921 எக்டேரில் தரம் குன்றிய மற்றும் உற்பத்தி இல்லாத முந்திரித் தோட்டங்கள், அதிக உற்பத்தி அளிக்கக்கூடிய வீரிய ரக முந்திரித் தோட்டங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 2011 முதல் 2015 வரை ரூ.98.88 கோடி இலாபத்தை ஈட்டி சாதனை படைத்துள்ளது. 2014–2015ஆம் ஆண்டிற்கு ரூ.19.36 கோடி இலாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2015–2016ஆம் ஆண்டிற்கு ரூ.11.50 கோடி இலாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- பங்குதாரர்களுக்கு (அரசிற்கு) 2011–2012 முதல் 2014–2015ஆம் ஆண்டு வரை பங்களிப்புத் தொகையாக ரூ.1,503.40 இலட்சம் அளித்துள்ளது. 2015–2016ஆம் ஆண்டிற்கான ஆதாய பங்களிப்பாக ரூ.345.01 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

- ரூ.22.69 கோடியை கடனாக, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு வழங்கி நிதி நெருக்கடியிலிருந்து விடுபட உதவியுள்ளது.

**அரசு ரப்பர் கழகம்**

- அரசு ரப்பர் கழகத்திலுள்ள தொழிலாளர்களுக்கு தனியார் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை விட நாள் ஒன்றுக்கு ரூ.31.26 கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

- அரசு ரப்பர் கழகம் ஐ.எஸ்.ஓ. 9001–2008 தரச்சான்று பெற்றுள்ளது.

- அரசு ரப்பர் கழக பால் உற்பத்தியாக நான்காண்டுகளில் மொத்தம் 14,00,772 மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.572.84 இலட்சம் போனஸ் கடந்த நான்கு வருடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

- 730 எக்டேரில் உயர் மகசூல் தரக்கூடிய ரப்பர் மரக்கன்றுகள் கடந்த நான்கு வருடங்களில் நடவு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.5.69 கோடி கடனாக இக்கழகத்தால் வழங்கப்பட்டது.

- வன உயிரின வார விழா சம்பந்தமாக, கடந்த நான்கு வருடங்களாக வனத்துறைக்கு ஆண்டுதோறும் ரூ.2 இலட்சம் இக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

- அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிக்காக ஆண்டுதோறும் ரூ.2 இலட்சம் இக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

- ரூ.2.50 இலட்சம் வனத்துறை நிருவாக புத்தகம் தயார் செய்வதற்காக இக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.1 இலட்சம் இந்திய ரப்பர் கூட்டம் 2014 சம்பந்தமாக இந்திய ரப்பர் ஆராய்ச்சி நிறுவனம், கோட்டயத்திற்கு இக்கழகத்தால் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்**

- தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ரூ.752 இலட்சம் குறுகிய கால கடனாக 17.11.2015 பெறப்பட்டுள்ளது. இத்தொகை ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை, ஓய்வூதிய பலன்கள் மற்றும் தொழிலாளர் நலநிதி போன்றவைகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

- செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் அதிகரித்தல் நிதியின் கீழ் சேரங்கோடு மற்றும் ரயான் கோட்டங்களில் தொழிலாளர்களுக்கு 15 கழிவறைகள் ரூ.5.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் கோத்தகிரி தேயிலைக் கோட்டத்தில் தொழிலாளர்களின் குடிநீர் தேவைக்காக தடுப்பணை ரூ.5.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- இக்கழக கள மேற்பார்வையாளர்களின் தின ஊதியம் 15.06.2013 முதல் உயர்த்தி, மாற்றி அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், அரசு அளித்த ரூ.40 இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- டேன்டீயில் ஒயிட் டீ, கிரீன் டீ, கையினால் செய்யப்படும் கிரீன் டீ போன்ற தேயிலை வகைகளின் தயாரிப்பை தொடங்கி தேயிலைச் சந்தையில் விலை ஏற்றம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- டேன்டீ, சில்லறை விற்பனையில், மணம் ஊட்டப்பெற்ற தேயிலைத்தூள் வகைகள் குருமிளகு போன்றவை முகவர்கள் மூலமாகவும் ஆன்லைன் வர்த்தகம் மூலமாகவும் தொடங்கியுள்ளது.

- 31.03.2013 வருடத்தில் 332.09 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலை அறுவடை செய்யப்பட்டு, அதன் மூலம் 79 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்தது. நடப்பு நிதியாண்டில், நிர்ணயித்த குறியீட்டளவான 390 இலட்சம் பச்சை தேயிலை அறுவடை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

- 2012–2013ஆம் கணக்காண்டிற்கு, இக்கழகத் தொழிலாளர்கள் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு ஊழியர்களுக்கு, அதிகபட்ச அளவான 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூ.4.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அளித்த மூலதன உதவித்தொகை ரூ.4 கோடி மூலம் இக்கழகத்தின் தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டதுடன் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- இக்கழகத்தின் தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அரசு மூலதன உதவித்தொகையாக ரூ.5 கோடி அளித்துள்ளது.

- தேயிலை பறிப்பவர்களுக்கு அரசால் உயர்த்தி வழங்கப்பட்ட ஊக்கத் தொகை மூலம், இக்கழக தொழிலாளர்கள் ரூ.1,000/– முதல் ரூ.3,000/– வரை கூடுதலாக வருமானம் ஈட்டுகின்றனர்.

- சந்தையிடுதல் பிரிவில் சில்லறை விற்பனை முகவர்கள் 66 நபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், மாவட்ட மொத்த விற்பனை முகவர்கள் 12 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். [கோவை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள், புதுச்சேரி (யூனியன் பிரதேசம்)] திருநெல்வேலி, புதுக்கோட்டை, தென்சென்னை, மத்திய சென்னை மற்றும் கூடலூர் மாவட்டங்களில் நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

- தேயிலை வாரியம் மற்றும் உபாசி இணைந்து நடத்திய தென்னிந்திய தேயிலைகளுக்கான போட்டியில் டான்டீயின் டைகர்ஹில் தொழிற்சாலை ‘தங்க தேயிலை இந்தியா பரிசினை’ வென்றுள்ளது. இப்பரிசு டான்டீ தேயிலையின் மதிப்பினை உயர்த்துவதோடு கொள்முதல் செய்பவர்களின் இடையில் இதன் தேவை அதிகமாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- சில்லறை விற்பனையில் தேயிலைத்தூள் 3,45,64,190 கிலோ விற்பனை செய்யப்பட்டு வருவாய் மொத்த தொகை ரூ.64,30,843/– ஈட்டப்பட்டுள்ளது.

- தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக நெல்லியாளம் தேயிலைத் தொழிற்சாலைக்கு 2 சிடிசி புதிய இயந்திரங்களும், ரயான் தேயிலை தொழிற்சாலைக்கு 1 சிடிசி புதிய இயந்திரமும், 1 புதிய ட்ரையரும் வாங்கப்பட்டுள்ளது. குயின்சோலை தேயிலைத் தொழிற்சாலைக்கு 2 புதிய உருளைகள், ரயான் தேயிலை தொழிற்சாலைக்கு 1 ஈட்டர், ரயான் சேரங்கோடு மற்றும் சேரம்பாடி தேயிலை தொழிற்சாலைகளுக்கு ட்ரீனிக் சார்ட்டர் வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# தமிழகத்தை வளப்படுத்திய தன்னிகரில்லா வரவு செலவுத் திட்டங்கள்



- தமிழ்நாடு வரலாற்றில் முதன்முறையாக தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக ரூ.1 இலட்சம் கோடியைத் தாண்டிய வரவு–செலவுத் திட்டம்.
- மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகளின் மதிப்பீடு தொடர்ந்து மூன்றாண்டுகளாக ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.
- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் சதவிகிதம் கடந்த நான்காண்டுகளாக 3 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- நிதிக்குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள்ளாக மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விழுக்காடு பராமரிப்பு.
- தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003இல் கூறப்பட்டுள்ள விதிகளின்படி நிதிநிலையின் போக்கு தொடர்பான விவரம் சட்டமன்றப் பேரவையில் தாக்கல்.
- ஓய்வூதியதாரர்களின் வாரிசுகளான திருமணமாகாத / விவாகரத்தான / விதவை

மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஒய்வூதியம்.

- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான மருத்துவ உதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்வு. 01.07.2012 முதல் 31.12.2015 வரை 1,64,810 பயனாளிகள் ரூ.650.05/– கோடி அளவில் கட்டணமில்லா முறையில் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.
- ஓய்வூதியதாரர் இறக்கும்பொழுது வழங்கப்படும் நிதியுதவி ரூ.35,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்வு.
- தமிழக அரசுப் பணியில் பணிபுரிந்து, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் / மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் ஈர்க்கப்பட்டுப் பணிபுரிந்து, ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்ட விரிவு.
- ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.2,000/– ஆக உயர்வு.
- ரூ.15 இலட்சம் கோடி முதலீட்டில் மாநிலத்தில் முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களை மேம்பாடு செய்யும் வகையில் “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” ஆவணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியீடு.
- 2014–2015ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கீடு. பொதுத் தனியார் கூட்டமைப்பின் கீழ் உள்கட்டமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து நிலவக்கூடிய இடைவெளியினை குறைத்திட இத்தொகையிலிருந்து 20 சதவிகிதத்தைப் பயன்படுத்திட அனுமதி.
- 14 வருவாய் வட்டங்களில் வங்கி சார்ந்த சார்கருவூலங்களைப் புதியதாக அமைத்தல்.
- ரூ.9.07 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டக் கருவூலம் மற்றும் 14 சார் கருவூலங்களுக்குப் புதிய கட்டடங்கள்.
- 9 வருவாய் வட்டத் தலைமையிடங்களில் 9 புதிய சார் கருவூலங்கள் அமைப்பு.
- ரூ.19.82 கோடி மதிப்பீட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 33 சார்நிலைக் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதி.
- நடப்பு நிதியாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மேலும் 17 சார்நிலைக் கருவூலங்களுக்கு ரூ.11.31 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதி.
- கருவூலக் கணக்குத் துறையில் கூடுதலாக கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலியில் புதியதாக மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் அமைத்தல்.
- ரூ.21.60 கோடி மதிப்பீட்டில் சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதி.
- ஓய்வூதியதாரர்/குடும்பஓய்வூதியதாரர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி நிதியுதவி ரூபாய் 2 இலட்சம் வரை நான்காண்டுகளுக்கு நிர்ணயம் செய்து கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சை வசதி பெற ஏற்பாடு.
- “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” தொகுதி II மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.02.2014 அன்று வெளியிடப்பட்டது.
- மலைப்பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான மலையிடப் பணிப் படியானது அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.900 லிருந்து ரூ.1,500 ஆக உயர்வு.
- சராசரி கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டருக்கு மேல் 1,499 மீட்டருக்குள் உள்ள மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான குளிர்காலப் படியானது, அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.250 லிருந்து ரூ.400 ஆக உயர்வு.



- சராசரி கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டருக்கு மேலுள்ள மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கான குளிர்காலப் படியானது அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு 20.02.2014 முதல் ரூ.350 லிருந்து ரூ.500 ஆக உயர்வு.
- அரசுத்துறை நிறுவனத் தணிக்கை துறையில் ஒரு மாவட்டத்திற்கு ஓர் அலுவலகம் என்ற அடிப்படையில் தேனி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புதிய தணிக்கைத் துறை அலுவலகங்கள் தோற்றுவிக்க அனுமதி.
- அரசுத்துறை நிறுவனத் தணிக்கை துறையில் சத்துணவு திட்ட தணிக்கைக்கென தற்காலிகமாக அனுமதிக்கபட்ட 40 ஆய்வாளர் மற்றும் 400 உதவி ஆய்வாளர் பணியிடங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு ஓய்வூதியர் மருத்துவ நலநிதி திட்டம் 1995இன் கீழ் 1,02,361 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.278.02 கோடி மருத்துவ நலநிதி வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறைத் தலைவர் ஆலோசனையின்படியும், மத்திய நிதி அமைச்சகத்தால் வெளியிடப்படும் பங்கு ஈவுத்தொகை தொடர்பான கொள்கைகளை பின்பற்றும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களை கருத்தில் கொண்டும் புதிய பங்கு ஈவுத்தொகையாக நிகர இலாபத்தில் (வரிக்கு பிறகு) 30% (அல்லது) பங்கு மூலதனத்தில் 30% இவற்றுள் எது அதிகமோ அதை நிகர இலாபத்தில் உபயோகப்படுத்தக்கூடிய இலாபத்திற்கு ஏற்றார் போல், அறிவிக்க வேண்டும் என்கின்ற புதிய பங்கு ஈவுக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.
- மாநில பொதுத்துறை நிறுவனங்கள் ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவுகளாக அவற்றின் முதலீடுகள், செயல்பாடுகள் மற்றும் விற்பனை வருமானத்தின் அடிப்படையில் மூலதன செலவின் உச்சவரம்பானது நிர்ணயிக்கப்பட்டது.
- திட்ட மூலதன முதலீட்டின் உச்சவரம்பு ‘அ’ பிரிவு பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரூ.2 கோடியிலிருந்து ரூ.10 கோடியாகவும் மற்றும் ‘ஆ’ பிரிவு பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரூ.1 கோடியிலிருந்து ரூ.5 கோடியாகவும் உயர்த்தியுள்ளது. இதன்மூலம் பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநர் குழுமங்கள் தங்கள் திட்டங்கள் மீது துரிதமான முடிவுகள் விரைவில் எடுக்க ஏதுவாகும்.
- ஊதிய குறை தீர்க்கும் பிரிவால் வழங்கப்பட்ட பரிந்துரையினை ஏற்று ஓர் ஆண்டு காலம் முழுமையாக பணியாற்றி வருடாந்திர ஊதிய உயர்வு பெறும் நாளுக்கு முந்தைய நாள் வயது முதிர்வினால் ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு கருத்தியலாக ஊதிய உயர்வு அனுமதித்து ஓய்வூதிய பயன்கள் பெறுவதற்கு அனுமதி.
- இரண்டாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித்தணிக்கைச் சட்டம் 2014 (தமிழ்நாடு சட்ட எண் 24/2014) நிறைவேற்றப்பட்டு 14.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் சேலத்தில் ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் புதியதாக அமைத்தல்.
- தமிழ்நாடு புதுமை முயற்சி திட்டங்களின்கீழ் 2015–2016ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சுற்றில் மாநில திட்டக் குழு பரிந்துரைத்த 37 புதிய திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக துணை மதிப்பீட்டில் ரூ.1,012.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2014இல், ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கை துணை உட்பட), குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், ரூ.65.94 கோடி மதிப்பில் 25,009 பயனாளிகள் கட்டணமில்லா முறையில் மருத்துவ சிகிச்சை பெற்று பலனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஓய்வூதியர் இறந்த பின்பு 52,520 குடும்பத்தாருக்கு அல்லது வாரிசுதாரருக்கு ரூ.195.54 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# செய்யும் தொழிலில் நிகரில்லா நெய்யும் தொழிலுக்கு ஆக்கம் அளித்திடும் மகத்தான அருஞ்சாதனைகள்!



**கைத்தறி மற்றும் துணிநூல் துறை**

- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.400/–லிருந்து ரூ.1,000/– ஆக 01.01.2012 முதல் உயர்த்தப்பட்டது. 20,456 கைத்தறி நெசவாளர்கள் பயனடைகின்றனர்.

- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்டு வரும் மாத குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550/–லிருந்து ரூ.1,000/–ஆக 01.01.2012 முதல் உயர்த்தப்பட்டது. 1,486 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

- சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு தனது பங்காக வழங்கி வந்த 4 சதவிகித தொகையினை நிறுத்தம் செய்ததனால் மாநில அரசின் பங்கான 4 பைசாவை 8 பைசாவாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. 71,842 நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

- கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வரும் வட்டி மானியத் தொகை நவம்பர் 2012 முதல் மாதந்தோறும் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.57.43 கோடி வட்டி மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தின் கீழ், பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டு வரும் சேலைகளின் தரத்தினை உயர்த்தி, 60ஆம் நெம்பர் பாலிகாட் சேலைகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ரூ.486.36 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 2015ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது வேட்டி, சேலைகள் விநியோகம் செய்வதற்கென ரூ.486.36 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

- விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், சேலை மற்றும் வேட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு, 2012–2013ஆம் ஆண்டு முதல் சேலை ஒன்றுக்கு ரூ.20.50–ம், வேட்டி ஒன்றுக்கு ரூ.10.30–ம் நெசவுக்கு முந்தையப் பணிகளுக்கான கூலியாகக் கூடுதலாக சேர்த்து வழங்கப்படுகிறது. இதன் மூலம் 11,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் 1 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், 2011ஆம் ஆண்டு முதல் 2 இணை சீருடைகளும், 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் புதிய நிறங்களில் 4 இணை சீருடைகளும் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.350 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 45.86 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன்.

- மூடப்பட்ட இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை ரூ.28.02 கோடி செலவில் நவீனப்படுத்தி 04.03.2015 அன்று மீண்டும் திறக்கப்பட்டு உற்பத்தியினைத் துவங்கியுள்ளது.

- ரூ.147.21 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, பாரதி (கோவில்பட்டி), அண்ணா (தேனி) மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் நவீனமயமாக்குதல்.

- ஈரோட்டில் உள்ள மூடப்பட்டிருந்த தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 10.06.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, உற்பத்தி மீண்டும் தொடங்கப்பட்டு, 2011 முதல் 2015ஆம் ஆண்டு வரை ரூ8.43 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. இவ்வாலையை நவீனப்படுத்த ரூ.5.82 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்தன.

- திருப்பூர் சாயக்கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு பூஜ்ய கழிவுநீர் நிலையை எட்டும் பணிக்காக வட்டியில்லாக் கடனாக ரூ.179.34 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருப்பூரிலுள்ள 18 பொது சுத்திகரிப்பு நிலையங்களில் பூஜ்ஜிய கழிவுநீர் நிலையை எட்டும் பணிக்கு வங்கியிலிருந்து பெற்ற கடனில் அசலினை நேர்செய்யும் விதமாக, அரசு ரூ.300 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், நெசவாளர்களுக்கு 10,000 பசுமை வீடுகள் தலா ரூ.2.60 இலட்சம் செலவில் (வீடு கட்டுமானப் பணிக்கு ரூ.2.30 இலட்சம், சூரிய மின்சக்தி விளக்குகளுக்கு ரூ.30 ஆயிரம்) கட்டுவதற்கு ரூ.260 கோடியினை ஒதுக்கீடு செய்து, அரசாணை வெளியிடப்பட்டு 10,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

- கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.757 கோடி செலவில் 1,33,764 கைத்தறி நெசவாளர்களுக்கு மாதமிருமுறை 100 யூனிட்டுகளும், 1,01,410 விசைத்தறி நெசவாளர்களுக்கு மாதமிருமுறை 500 யூனிட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

- கைத்தறி தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், 718 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 520 தனியார் நெசவாளர்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) ஆகியன பயனடையும் வகையில் மொத்தம் ரூ.147.71 கோடி நிதியுதவி 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர 718 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 2014–2015ஆம் ஆண்டில் பொதுக்கணக்கு முறை கணினிமயமாக்குதலுக்காக ரூ.285.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் 424 தொகுப்பூதிய






பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிவரன்முறை. மேலும், ஊதிய நிர்ணயம் கோரிக்கையினை ஏற்று ஊதியக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

- அதிக உற்பத்தியும், விற்பனையும் பெற்றுத்தரும் நெசவாளர் ஒருவரை 'சிறந்த நெசவாளர்' எனத் தேர்வு செய்து ரூ.1,00,000/– பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 2013–2014ஆம் ஆண்டிற்கான சிறந்த நெசவாளருக்கான பரிசு திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளருக்கு வழங்கப்பட்டது. அதேபோல், 2014–2015ஆம் ஆண்டில் திருபுவனம் சோழன்பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினருக்குப் பரிசு வழங்கப்பட்டது.

- நெசவாளர்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்க முடிவு செய்யப்பட்டு, ஓராண்டிற்கு 2,000 பெடல் தறிகள் வீதம் 3 ஆண்டுகளில் 6,000 பெடல் தறிகள் (பெடல் தறி ஒன்றுக்கு ரூ.40,000/– வீதம்) ரூ.24 கோடி செலவில் வழங்க அரசு ஆணையிடப்பட்டு, முதற்கட்டமாக, 2013–2014ஆம் ஆண்டில் ரூ.8 கோடியும், 2014–2015ஆம் ஆண்டு ரூ.8 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

- திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கைத்தறி பெருங்குழுமம் ஒன்று அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பெருங்குழுமத்திற்கு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தினை, குழும மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முகமையாக செயல்படுவதற்கு அனுமதியளித்துள்ளது.



இத்திட்டத்தினை செயல்படுத்த இதுவரை ரூ.2.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு, தலா ரூ.1,500/–வீதம் 25,000 மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்குவதற்கு ரூ.3.75 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மூலம் கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை தறிக்கூடங்களில் 10 நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் நிறுவ ரூ.4.78 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு மார்ச் 2015 முதல் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

- நெசவாளர்களுக்குத் தேவையான பாவு நூலை உடனுக்குடன் வடிவமைத்து தயார் செய்து தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மின்மயமாக்கப்பட்ட பாவு ஓடும் இயந்திரங்கள் தலா ரூ.80,000 செலவில் வழங்க ரூ.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 100 மின்சார பாவு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

- சாதாரண விசைத்தறிகளை நவீனப்படுத்த தறி ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் மானியம் வழங்கும் பொருட்டு 800 விசைத்தறிகளை நவீனப்படுத்த ரூ.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இதன் அடிப்படையில் 800 விசைத்தறிகள் நவீனப்படுத்தப்பட்டன.

- ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2011-2012 முதல் 2014-2015 ஆம் ஆண்டு வரை 41 பொது வசதி மையங்கள் (CFCs) அமைக்க அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி, பாரதி, அண்ணா, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.147.21 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு, 13.11.2015 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

- 100 கைத்தறிகளுக்கு மின்னணுவால் இயக்கப்படும் ஜக்கார்டு இயந்திரங்கள் கொள்முதல் செய்ய, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.120 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.'

- கைத்தறி நெசவாளர்களுக்கு நெய்தலில் ஏற்படும் சோர்வினைக் குறைக்கும் விதமாகவும், அவர்களின் தயாரிப்பினை மேம்படுத்தவும், அதனால் கூடுதல் வருவாயை ஈட்டவும், 100 நியூமேட்டிக் கருவியுடன் கூடிய கைத்தறிகளை கொள்முதல் செய்ய, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.45 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- 6 கோல்கள் கொண்ட 25 சாயத் தொட்டிகள் நிறுவ, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- பட்டு சாயச் சாலைகளுக்கு, 25 கழுவுதல் மற்றும் அலசல் மேற்கொள்ளும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தினை பிரத்தியேக இரகங்களை சந்தைப்படுத்தும் வணிக நிறுவனமாக மேம்படுத்த நவநாகரிக விற்பனை நிலையங்களை துவக்க, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.120 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

- கைத்தறிகளுக்கு 2,000 மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரகளை கொள்முதல் செய்ய, அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.225 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**பட்டு வளர்ச்சித் துறை**

- வெண்பட்டு உற்பத்தியில் தேசிய அளவில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

- மொத்த பட்டுமுட்டைத் தொகுதிகள் விநியோகத்தில், நாட்டிலேயே அதிகபட்ச அளவாக 52 விழுக்காடு இளம் பட்டுப் புழுக்களாக விநியோகிக்கப்படுகிறது.

- 100 பட்டுமுட்டைத் தொகுதிக்களுக்கான பட்டுக்கூடு உற்பத்தித் திறன், நாட்டிலேயே

அதிகபட்ச அளவாக 73.9 கிலோ கிராம் ஆக உள்ளது.

- பட்டு வளர்ச்சித்துறைக்கென சொந்தக் கட்டடம் இல்லாததைக் கருத்தில் கொண்டு, ரூ.1.65 கோடி மதிப்பில் சேலத்தில் இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- பட்டு வளர்ச்சி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கும் ஓசூர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்திற்குக் கூடுதலாக நவீன பயிற்சிக் கூடங்களும், தங்கும் விடுதியும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- பட்டுநூல் உற்பத்தியையும், தரத்தினையும் மேம்படுத்தும் வகையில் 8 அரசு பட்டு நூற்பு அலகுகளிலும் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட புதிய பலமுனைப் பட்டுநூற்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- 2013–2014 நிதியாண்டில் 300 ஊராட்சிகளில் "பஞ்சாயத்திற்கு ஒரு பட்டு விவசாயி" என்ற புதிய திட்டம் செயலாக்கம். இதன் மூலம் 323 புதிய விவசாயிகள் பட்டுவளர்ப்புத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், 2013–2014 நிதியாண்டில் 50 பண்ணைக் குட்டைகளும், 2014–2015 நிதியாண்டில் 30 பண்ணைக்குட்டைகளும் அரசு பட்டுப் பண்ணைகளில் அமைக்கப்பட்டுள்ளது.
- மல்பரி தோட்டங்களுக்கு சொட்டுநீர்ப்பாசனம் முறை அமைக்க 75 விழுக்காடு வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகள் 100 விழுக்காடாக உயர்வு. ஒரு ஏக்கருக்கான அலகு மதிப்பீடு ரூ.30,000/– ஆக உயர்வு, உச்சவரம்பு 5.0 ஏக்கராக அதிகரிப்பு. இதுவரை, 6,791 ஏக்கரில் பயனாளிகளுக்கு ரூ.1,677.99 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்ய மானிய உதவி ஏக்கருக்கு ரூ.10,500/– ஆக உயர்த்தப்பட்டு அதிகபட்ச மானியமாக 5 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யும் விவசாயிக்கு ரூ.52,500/– வழங்கப்படுகிறது. இதுவரை 18,460 ஏக்கரில் 12,802 பயனாளிகளுக்கு ரூ.1,462.27 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ஒரு விவசாயிக்கு நிதியுதவி ரூ.52,500/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்றபின் 5,200 பயனாளிகளுக்கு ரூ.2,325 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்டுவதற்கான மானிய உதவிகள் 1,500 சதுர அடி பரப்பிற்கு மேல் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு குடிலுக்கு ரூ.75,000/– லிருந்து ரூ.82,500/– ஆகவும், 1,000 முதல் 1,500 சதுர அடி பரப்பளவுள்ள குடிலுக்கு ரூ.50,000/– லிருந்து ரூ.87,500/– ஆகவும், 700 முதல் 1,000 சதுர அடி பரப்பளவு உள்ள குடிலுக்கு ரூ.37,500/– லிருந்து ரூ.63,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. ஓலையால் வேயப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு குடில் கூரைகளைப் புதுப்பிக்க நிலை – 1க்கு ரூ.48,750/–ம், நிலை – 2க்கு ரூ.32,500/–ம் நிலை – 3க்கு ரூ.22,750/–ம் வழங்கப்படுகிறது.
- பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு, தளவாடங்கள் மற்றும் மனைக்கான காப்பீடு திட்டம் செயல்படுத்துதல்.
- 2012–2013 நிதியாண்டில் சிறு குறு விவசாயிகளும் பயன்பெறும் வகையில் முதன்முறையாக சிறு அளவிலான 100 இளம்புழு வளர்ப்பு மையங்கள் நிறுவுதல்.
- 14,000 பட்டு விவசாயிகளுக்கு பட்டு மலர் என்ற தமிழ் மாத இதழ், ஒரு இதழ் ரூ.2/– என்ற விலையில் விற்பனை.
- பட்டுச் செடியின் இலை உற்பத்தியை அதிகரித்திட பட்டு விவசாயிகளுக்கு விலையில்லா நுண்ணூட்டச் சத்து ரூ.40 இலட்சம் மதிப்பில் வழங்குதல்.
- 2012–2013 நிதியாண்டில் 5,100 பட்டு விவசாயிகளுக்கு ரூ.25.50 இலட்சம் நிதியுதவியுடன் ஒரு நாள் பயிற்சி மற்றும் ஒரு நாள் கண்டுணர்வு சுற்றுலா நடத்துதல்.



- மகளிர் பட்டு விவசாயிகளுக்கும், அரசு அலகுகளில் பணியாற்றும் மகளிர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் உடல்நலக் காப்பீட்டுத் திட்டம் அரசு நிதியுதவியுடன் செயல்படுத்துதல்.
- பட்டு வளர்ச்சித்துறையின் விரிவாக்கப் பணிக்கு காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பும் வகையில் முதல்கட்டமாக 2013–2014இல் 93 இளநிலை ஆய்வாளர்களும் 16 உதவி ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் 2014–2015 நிதியாண்டில் 157 இளநிலை ஆய்வாளர்களும், 14 உதவி ஆய்வாளர்களும் நியமனம் செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- 2014–2015 நிதியாண்டில் 2,000 பட்டு விவசாயிகள் மற்றும் 500 பட்டுநூற்பு தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக ரூ.49.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலம் வருடத்திற்கு ரூ.33 கோடிக்கு கைவினைப் பொருட்கள் விற்பனை செய்து சாதனை படைத்து வருகிறது. நடப்பு ஆண்டில் ரூ. 40 கோடியினை அடைய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.
- பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் பணி புரிந்து வரும் கைவினைஞர்களின் ஊதியம் 01.06.2011 முதல் 100 விழுக்காடு உயர்த்தப்பட்டது. 2013இல் மேலும் 50 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் ரூ.15,000/– முதல் ரூ.20,000/– வரை ஊதியம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 54 கைவினைஞர்களுக்குப் பூம்புகார் மாநில விருதுகள் வழங்கப்பட்டன. 2014–2015ஆம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு மாநில விருதுகள் 30.03.2015 அன்று வழங்கப்பட்டன. இவ்விருது ஆண்டுதோறும் 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்கப்படும்.
- "பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது" 2011–2012ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2014–2015ஆம் ஆண்டு வரை 255 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதுடன் ரூ.5,000/– ரொக்கப் பரிசும், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவ்விருது ஆண்டுதோறும் 85 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்கப்படும்.
- சுவாமிமலையில் 8 இளம் பயிற்சியாளர்களுக்கு பஞ்சலோகச் சிலைகள் உற்பத்தி செய்ய மூன்றாண்டு பயிற்சி திட்டம் 15.09.2012இல் தொடங்கி 14.09.2015இல் முடிவுற்றது.
- நாச்சியார்கோயிலில் 8 இளம் பயிற்சியாளர்களுக்கு பித்தளை விளக்குகள் உற்பத்தி செய்ய இரண்டாண்டு பயிற்சித் திட்டம் 15.09.2012இல் தொடங்கி 14.09.2014இல் முடிவடைந்தது.
- தஞ்சாவூரில், 8 மகளிருக்கு தஞ்சாவூர் கலைத் தட்டுகள் உற்பத்தி செய்ய ஓராண்டு பயிற்சித் திட்டம் 15.09.2012இல் தொடங்கி 14.09.2013இல் முடிவடைந்தது.
- 2013–2014ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கையின் போது விதி 110இன் கீழ் அறிவித்தபடி ரூ.83 இலட்சம் செலவில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 06.11.2013 முதல் 100 மகளிருக்கு ஓராண்டு தஞ்சாவூர் ஓவியப் பயிற்சி சிறப்பாக நடைபெற்று 05.11.2014 அன்று நிறைவுற்றது.
- அரசு அறிவித்தபடி, தமது வாழ்நாளில் கலையை வாழ்விக்கவும், அதன் மேம்பாட்டிற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக "வாழும் கைவினைப் பொக்கிஷம்" எனும் புதிய விருதினை அறிமுகப்படுத்தி 2013–2014ஆம் ஆண்டிற்காக 10

கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசும், 8 கிராம் தங்கப் பதக்கமும், தாமிரப் பத்திரமும், சான்றிதழும் 28.08.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்த விருது ஆண்டுதோறும் 10 கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளதாக 2014–2015ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 2014–2015ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது 30.03.2015இல் வழங்கப்பட்டது.

- பூம்புகார் மாநில விருது, பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது, வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது, அடுத்த தலைமுறை கைத்திறன் விருது, குழு உற்பத்தி விருது, ஏற்றுமதி விருது மற்றும் பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது போன்ற விருதுகள் வாயிலாக, நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான 245 விருதுகளை கைவினைஞர்களுக்கு அளிக்கும் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.
- விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் ரூ.6 இலட்சம் செலவில் 10 பயிற்சியாளர்களுக்கு ஓராண்டு மரச்சிற்ப பயிற்சியும் 04.10.2013 அன்று தொடங்கி 03.10.2014 அன்று முடிவடைந்தது.
- அகில இந்திய அளவில் பிற மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களிலும் பல்வேறு கண்காட்சிகளை ஏற்பாடு செய்து தமிழக கைவினைஞர்களின் பொருட்களுக்கு கூடுதல் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு இதுவரை 1,049 கண்காட்சிகள் நடத்தப்பட்டது. 2015–2016ஆம் ஆண்டில் சுமார் 250 கண்காட்சிகள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கடந்த மார்ச் 2012 மற்றும் ஜனவரி 2013இல் சிங்கப்பூரில் "கருத்துசார் கண்காட்சிகள்" நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு அரசு தமிழக கைவினைப் பொருட்களின் விற்பனையை வெளிநாட்டில் மற்றும் வெளிமாநிலங்களில் அதிகரிக்கும் வகையில் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் ஒரு புதிய நிதியுதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, வெளிமாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்குபெறும் கைவினைஞர்களுக்கு ஆண்டொண்டிற்கு தலா ரூ.25,000/– வீதம் உதவித் தொகையும் வெளிநாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் கலந்து கொள்ளும் கைவினைஞர்களுக்கு ஆண்டொண்டிற்கு தலா ரூ.50,000/– உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.
- அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி (GEN NEXT COMPETITION) 2013–2014ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, 13 மையங்களில் போட்டி நடத்தப்பட்டு 66 இளம் கைவினைஞர்களுக்கு முதல் பரிசும், மேலும் 66 கைவினைஞர்களுக்கு இரண்டாவது பரிசும், மொத்தம் 132 கைவினைஞர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், சான்றிதழும் ரூ.6.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. 2014–2015ஆம் ஆண்டிற்கு 48 இளம் கைவினைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு 30.03.2015 அன்று வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அரசு அறிவித்துள்ளபடி இக்கழகம் ஸ்ரீரங்கத்தில் 50 மகளிருக்கு காகிதக் கூழ் பொம்மை கைத்திறன் தொழிலில் தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.80 இலட்சம் செலவில் ஆறு மாதப் பயிற்சி வகுப்புகள் 31.03.2015 அன்று துவக்கப்பட்டு 30.09.2015. இப்பயிற்சியின் போது பயிற்சிக்கான மூலப் பொருட்களும், பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகையாக மாதமொன்றுக்கு தலா ரூ.3,000/–மும் வழங்கப்பட்டது.
- 2015–2016 ஆம் ஆண்டு முதல் அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டியில் தேர்வு செய்யப்படும் கைவினைஞர்களுக்கு வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழுடன் ரொக்கப் பரிசு ரூ.2,000/– வழங்கப்படும்.



- இந்நிறுவனம் பாரம்பரிய முறைப்படி பஞ்சலோக சிற்பம் தயாரிக்கும் முறைக்கு புத்துயிர் கொடுக்கும் வகையில் பஞ்சலோக சிற்ப கைத்திறத் தொழிலில் 3 ஆண்டு பயிற்சித் திட்டம் ஒன்றினை "குருகுலம்" என்ற திட்டத்தின்கீழ் தற்சமயம் தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையில் நடத்தி வருகிறது. இதேபோன்று மற்றொரு குருகுலம் பயிற்சித் திட்டம் தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.30 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.
- கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு "கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது" ரூ.2.50 இலட்சம் செலவில் 2014–2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2015–2016ஆம் ஆண்டு விருதுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ஒருங்கிணைந்து பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த கைவினைஞர்கள் அடங்கிய ஒரு குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் "குழு உற்பத்தி விருது" அறிமுகப்படுத்தப்பட்டு 3 குழுக்களுக்கு ரூ.3.75 இலட்சம் செலவில் 2014–2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2015–2016ஆம் ஆண்டு விருதுக்கான கைவினைஞர்களின் 3 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் விரைவில் வழங்கப்பட உள்ளது.
- "பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது" பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்கும் மற்றும் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் 3 கைவினைஞர்களுக்கு 2014–2015ஆம் ஆண்டு முதல் ரூ.3.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். 2015–2016ஆம் ஆண்டு விருதுக்கான கைவினைஞர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விரைவில் விருதுகள் வழங்கப்பட உள்ளது.
- கைவினைஞர்கள் தங்களுடைய பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்நிறுவனம் 2014–2015ஆம் ஆண்டில் 277 கண்காட்சிகளை நடத்தியுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.225 இலட்சம் செலவில் 255 கண்காட்சிகள் நடத்தப்பட்டன. கைவினைஞர்களின் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு மொத்த செலவில் 20 விழுக்காடாக ரூ.45 இலட்சம் நிதியுதவி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டின் பகுதி–II திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் கீழ்காணும் 3 திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
  - ➢ நாதஸ்வர சீவாளி தயாரிப்பு பயிற்சித் திட்டம் ரூ.3.50 இலட்சம் செலவில் 10 பயிற்சியாளர்களைக் கொண்டு 18.03.2015 அன்று துவங்கப்பட்டு 17.06.2015 அன்று முடிவுற்றது.
  - ➢ அன்னாசிப்பழ நாரில் 3 மாத பூத்தையல் பயிற்சித் திட்டம் ரூ.3.50 இலட்சம் செலவில் 20 பயிற்சியாளர்களைக் கொண்டு 30.12.2014 அன்று துவங்கப்பட்டு 29.03.2015 அன்று முடிவுற்றது.
  - ➢ பனை மரம் ஏறுதல் – போட்டிக்காக ரூ.6.50 இலட்சம் செலவில் திறன் மிக்க போட்டியாளர்கள் மிகுந்துள்ள பகுதிகளில் இப்போட்டி நடத்தப்பட்டது.
- இந்நிறுவனம் கடந்த 2011–2012 முதல் இது நாள் வரை பல்வேறு நிலைகளில் சுமார் 54 பணியாளர்களை அமர்த்தி வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கைவினைப் பொருட்களை மின்வணிகம் மூலமாக விற்பனை செய்ய துவக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சமூக ஊடகங்களான வலைதளம், முகநூல் போன்றவற்றில் தன் படைப்புகள், நிகழ்வுகள் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து விற்பனையைப் பெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.
- இந்நிறுவனத்தின் கீழ், மின் வணிகத் தளம் அமைத்தல் www.poompuhar.org, ஸ்மார்ட் போன் மற்றும் ஐ பேட்களில் பூம்புகாருக்கென உயர்திறன் பயன்பாடு (Hybrid App) உருவாக்குதல், பொருள்களுக்கான மின்னணு விலைச் சீட்டு (Bar Coding) மற்றும் க்யூ ஆர்

[QR] கோடிங் முறையினை அறிமுகப்படுத்துதல், அனைத்து அலுவலர்கள் / மேலாளர்களுக்கும் சந்தைக்கான கருவியாக ஐ பேடு வழங்குதல், நவீனமயமாக்கப்பட்ட சந்தைப்படுத்தும் நடமாடும் விற்பனை வாகன ஊர்தியினைத் துவக்குதல்,நிறுவனப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஜி.ஆர்.டி குழும ஓட்டல்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையொப்பமிடுதல், மின்வணிக சரக்குப் போக்குவரத்திற்காக இந்திய தபால் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையொப்பமிடுதல்.

**இதர சிறப்பு முயற்சிகள்**

- இந்நிறுவன வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் முதன் முதலாக சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ.3 கோடி மதிப்பிலான அழகுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- ரூ.25 இலட்சம் செலவில் மாமல்லபுரம் விற்பனை நிலைய வளாகத்தில் கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ.16 இலட்சம் செலவில் சிறப்புத் தேவைப்பாடுகள் உள்ள சிறார்களுக்கு கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கோ–ஆப்டெக்ஸ்**

**வர்த்தகம்**

- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 2011–2015ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தம் ரூ.1,293.53 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணி மற்றும் விசைத்தறி துணி இரகங்களை சில்லறை விற்பனை செய்துள்ளது.
- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் தொடங்கப்பட்டு 2011–2012ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" திட்டம் தொடர்ந்து 2012–2015ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், ரூ.128.10 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- கோ–ஆப்டெக்ஸ் பொங்கல் கால விற்பனையாக கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூ.231.43 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்று சாதனை படைத்துள்ளது.
- கோ–ஆப்டெக்ஸ் தீபாவளி கால விற்பனையாக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.552.70 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

**நவீனமயமாக்குதல்**

- கடந்த 2011–2012ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2015 வரை ரூ.487.85 இலட்சம் மதிப்பில் 32 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டன.

**ஜவுளி நூலகம்**

- கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக வளாகத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஜவுளி நூலகம் தொடங்கப்பட்டு சுமார் 511 ஜவுளி புத்தகங்கள், வாராந்திர, மாதாந்திர இதழ்கள் மற்றும் நெசவையும் நெசவாளர்களின் வாழ்வையும் மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஆவணப் படம் முதலியன நெசவாளர்கள் மற்றும் மாணவர்கள் பார்வைக்கும் பயன்பாட்டிற்கும் இடம்பெற்றுள்ளது.

**ஜவுளி வடிவமைப்பகம்**

- கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஜவுளி வடிவமைப்பகம் வாயிலாக பட்டு சேலை, பருத்திசேலை,படுக்கைவிரிப்பு,போர்வை ஆகிய இரகங்களில் சுமார் 1,110 புதிய வடிவமைப்புகள் அறிமுகம் செய்யப்பட்டு வாடிக்கையாளர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**ஜவுளி தர பரிசோதனைக் கூடம்**

- கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் ஜவுளி தர பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு கோ–ஆப்டெக்ஸின் அங்கத்தினர்களான நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளின் தரம் ஆய்வு செய்யப்பட்டு வாடிக்கையாளர்களின் பயன்பாட்டை நிறைவு செய்கிறது.



- கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக தரப்பரிசோதனை ஆய்வுக் கூடம் அமைத்து பரிசோதிப்பதைத் தொடர்ந்து அரசு நிதியுதவியுடன் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கைத்தறி உற்பத்தி சரகங்களாகிய சேலம், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களில் தரப்பரிசோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.
- கைத்தறி இரகங்களின் இயற்கை சாயம் தொய்த்தல் மற்றும் இயற்கை பருத்தி துணி நெசவு ஆய்வு மேற்கொள்ள ரூ.8 இலட்சம் ஒதுக்கீடு செய்து நெசவு தொழிலில் பசுமை சூழல் வளர்ச்சிக்கு வித்திடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கைத்தறி பாரம்பரிய வடிவமைப்புகளுக்கு மதிப்பு கூட்டுதல் மற்றும் புத்துயிர் ஊட்டுதலுக்காக ரூ.14 இலட்சம் மதிப்பில் ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

**தேசிய விருது**

- 2013ஆம் ஆண்டு கோ–ஆப்டெக்ஸ் "கைத்தறி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பு" மற்றும் "இந்தியாவில் அதிக அளவில் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்த நிறுவனம்" ஆகிய இரு தேசிய விருதுகளை மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

**குழும வளர்ச்சித் திட்டம் (மைய அரசு உதவியுடன்)**

- கைத்தறி மற்றும் துணி நூல் துறை, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 10 சிறிய கைத்தறி குழுமங்களையும் மற்றும் 4 சிறிய பட்டு கைத்தறி குழுமங்களையும் செயல்படுத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது. இந்தக் குழுமங்களின் நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன.
- ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சித்திட்டத்தின் கீழ், மத்திய அரசு நிதியுதவியுடன், திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் இரு பெரிய குழும வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தொடங்கி செயல்படுத்தப்பட்டு, இக்குழுமங்களின் செயல்பாடுகள் 2014–2015ஆம் ஆண்டில் நிறைவு பெற்றுவிட்டன.
- ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், (CHCDS) விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு அதற்கென ரூ.87.68 கோடி நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், மத்திய அரசு ரூ.70 கோடி மானியமாகவும் மீதமுள்ள தொகை மாநில அரசு பயனாளிகள் பங்களிப்பாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை அரசு கோ–ஆப்டெக்ஸிற்கு ரூ.31.07 கோடி வழங்கியுள்ளது.
- மேற்குறிப்பிட்ட நிதியுதவியினைக் கொண்டு, தறி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தறி மற்றும் உபகரணங்களினால், உற்பத்தி அதிகரித்ததோடு நெசவாளர்களின் கூலியும் மும்மடங்கு உயர்ந்துள்ளது.
- தமிழக அரசு மாநில புதுமை திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.1.20 கோடி கோ–ஆப்டெக்ஸின் 4 விற்பனை நிலையங்களை பிரத்யேக ஆடையகமாக நவீனபடுத்த விடுவித்துள்ளது. சென்னையில் (அடையார்) திட்டப் பணிகள் முடிவுற்றது. மேலும் கொச்சின் மற்றும் கோயம்புத்தூரில் திட்டப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டெல்லியில் திட்டப் பணிகளுக்காக வரைவு புள்ளி பெறப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

- 31.03.2012 முடிய பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான நிலுவை ஓய்வூதியப் பயன்கள் வழங்க ரூ.36.86 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் நிதியாண்டு முதல் மாநில அரசும் கதர் ஆணையத்தைப் போன்று

ஆண்டு முழுவதும் கதர் உற்பத்தி மீது 20 விழுக்காடு நிதியுதவியாக வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. அதில் 15 விழுக்காடு கதர் விற்பனை கழிவாக நுகர்வோர்க்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம், கதர் விற்பனையில் நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் 30 சதவிகித தள்ளுபடி வழங்க வழிவகை ஏற்பட்டுள்ளது.



- கதர் நெசவாளர்கள், சாயமிடுபவர்கள், நூற்பாளர்களுக்கு உற்பத்தி 5 சதவிகித ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது, கதர் உற்பத்தியை அதிகரிக்க வாரியத்திற்கு ரூ.10 கோடி வழிவகை முன்பணமாக அரசு அனுமதித்துள்ளது, கதர் பாலியஸ்டர் பட்டு நெசவாளர்களுக்கு கூலித் தொகையினை அதிகரித்து வழங்கி கூடுதலாக நெசவாளர்களை சேர்த்து உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.14.64 கோடி மதிப்பிற்கு கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- ஊரக பகுதிகளிலுள்ள 30 கிராமிய நூற்பு நிலையங்களில் பணியாற்றும் 770 மகளிர் அடிப்படை வசதிகள் பெறும் வகையில் தலா ரூ.30,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது.
- 68 சர்வோதய சங்கங்களுக்கு ரூ.34.74 கோடி தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- கதர் நூற்போர் மற்றும் நெய்வோர் நல வாரியத்தில் 9,042 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு கல்வி உதவி, திருமண உதவி, ஈமச் சடங்கு உதவி மற்றும் விபத்தினால் ஏற்படும் இழப்புக்கான உதவி 928 நபர்களுக்கு ரூ.41.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- கதர் மற்றும் பாலிவஸ்திரா இரகங்கள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு 30 விழுக்காடு கூலி உயர்த்தப்பட்டு 672 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இதனால், ஆண்டிற்கு ரூ.38.76 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.
- பட்டு நெசவாளர்களுக்கு 50 விழுக்காடு கூலி உயர்த்தப்பட்டு 360 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இதனால் ஆண்டிற்கு ரூ.25.09 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.
- தேனீ வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள 440 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு தேனீப் பெட்டிகள், தேனீ குடும்பங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.30.01 இலட்சம் செலவில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.



- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் 12 கூட்டுறவு சங்கங்கள் ரூ.60 இலட்சம் நிதியுதவியில் புனரமைக்கப்பட்டது.
- கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் ரூ.127.35 கோடி மதிப்பிற்கு உற்பத்தி செய்து ரூ.177.07 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு ரூ.5,022.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 25,845 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மருந்தில்லா மருத்துவத்தின் அடிப்படையில் பொதுமக்களுக்கு இயற்கை சிகிச்சை அளித்திட சென்னை குறளகம் கதரங்காடியில் இயற்கை சிகிச்சை மையம் துவங்கப்பட்டுள்ளது.
- பண்ருட்டி, பெருமாள்மலை, செவ்வாப்பேட்டை ஆகிய 3 சோப்பு அலகுகளை மேம்படுத்திட ரூ.11 இலட்சம் செலவில் புதிய டிடர்ஜென்ட் சோப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி நடைபெற்று வருகிறது.
- பிடாகம் கைமுறை காகித அலகிலுள்ள பீட்டர் (BEATER) இயந்திரம் ரூ.4 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.
- கிராமப் புறங்களில் வசிக்கும் 1,000 கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் பயிற்சி அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மண்பாண்டம், தேனீ வளர்ப்பு, தச்சு மற்றும் கருமார், தோல், சுடுமண் சிற்பங்கள், அகர்பத்தி மற்றும் ஆயத்த ஆடைகள் ஆகிய தொழில்களுக்கு ரூ.98.85 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- திருச்சி, சமயபுரம் சோப்பு அலகில் ரூ.2.50 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டி நவீன சோப்பு தயாரிக்கும் இயந்திரம் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், நேரடியாக 5 நபர்களுக்கும் மறைமுகமாக 100 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்திட வாய்ப்பு உள்ளது.
- திருச்சி, சமயபுரம் அலகில் பழுதடைந்த நிலையில் உள்ள எண்ணெய் பிழியும் அலகு ரூ.2 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டம், விருதாச்சலம் பீங்கான் கலைக்கூடம் ரூ.25 இலட்சம் செலவில் புனரமைத்து நவீன சூளை நிறுவப்பட்டுள்ளது.
- திருக்குழுக்குன்றம் குளியல் சோப்பு அலகு ரூ.9இலட்சம்செலவில்புனரமைக்கப்பட்டுள்ளது.
- மொடக்குறிச்சி சோப்பு அலகில் ரூ.5 இலட்சம் செலவில் புதிய குளியல் சோப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- நெசவு உற்பத்தி அதிகரித்து நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ரூ.30 இலட்சம் மதிப்பில் அச்சு, விழுது, ஜக்கார்டு, நாடா மற்றும் தார் சுற்றும் இயந்திரம் போன்ற உபகரணங்கள் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- சர்வோதய சங்கங்களில் உற்பத்தியில் ஈடுபடும் நூற்போர், நெய்வோர், முறுக்கேற்றுபவர், சாயமிடுபவர் ஆகியோர் மேலும் பயன் பெறும் வகையில் சர்வோதய சங்கங்களுக்கு கதர் உற்பத்தியின் மீது வழங்கப்படும் தள்ளுபடி மானிய உச்சவரம்பு ரூ.10 கோடியினை 2014–2015ஆம் ஆண்டிலிருந்து ரூ.15 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் இயங்கி வரும் தச்சு மற்றும் கொல்லு அலகின் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி உற்பத்தி செலவினைக் குறைத்து, இலாபகரமாக இயங்கிட புதிய கட்டடம் மற்றும் நவீன இயந்திரங்கள் ரூ.65 இலட்சத்தில் நிறுவிட அரசு மானியம்.

- அம்பத்தூர் காலணி அலகில் உற்பத்தி திறனை மேம்படுத்தி தொழிலாளர்கள் அதிக வேலைவாய்ப்பினை பெறவும், நல்ல தரமான காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் அதிக அளவில் உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்திட, நவீன இயந்திரங்கள் ரூ.1.50 கோடி செலவில் நிறுவிட அரசு மானியம்.

- 4 மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ.23.50 இலட்சம் செலவில் 4 ஜீப் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. மதுரை மண்டல துணை இயக்குனர் அலுவலகத்திற்கு ரூ.20 ஆயிரம் செலவில் நிகரி இயந்திரம் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

- மண்பாண்ட தொழில் செய்யும் குடும்பங்களுக்கு மழைகால பராமரிப்பு உதவி தொகையாக தலா ரூ.4,000/– வீதம் 2014–2015 ம் ஆண்டு 12,236 குடும்பங்களுக்கு ரூ.4.89 கோடி வழங்கபட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் செயல்படும் தேன் பதப்படுத்தும் நிலையத்தில் தேன் சுத்திகரிப்பு தரத்தை மேம்படுத்தி, நவீன முறையில் விரைவாகப் பாட்டில்களில் நிரப்பிடும் வகையில், அதிநவீன தேன்பதப்படுத்தும் இயந்திரம் மற்றும் தானியங்கி தேன்நிரப்பும் இயந்திரம் ஆகியவற்றை ரூ.60 இலட்சம் அரசு மானிய நிதியுதவியுடன் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- திண்டுக்கல் மாவட்டம், வேடப்பட்டியில் இயங்கி வரும் ஜவ்வாது அலகின் உற்பத்தியை அதிகரிக்கவும், செலவினைக் குறைக்கவும், அதிக இலாபத்துடன் இயக்கிடவும் நவீன இயந்திரங்கள் நிறுவவும், புதிய கட்டடம் கட்டவும் ரூ.40 இலட்சம் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

- நெசவுத் தொழில் புரியும் பட்டு நெசவாளர்களின் பணிச்சுமையினைக் குறைக்கவும், உற்பத்தியை பெருக்கும் வகையிலும் ரூ.10 இலட்சம் மதிப்பில் தறி உபகரணங்களைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் குறளகம் பிரதானக் கட்டடத்தினைப் புனரமைத்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்**

- மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம், பனைத் தொழிலாளர்கள் நலனுக்காக பனைத் தொழிலை மேம்படுத்திட 2014–2015ஆம் ஆண்டு அரசு பகுதி-II திட்டத்தின் கீழ், கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்கிட ரூ.10 இலட்சமும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் கூட்டுறவு இணையத்திற்கு பதநீர் பாக்கெட் செய்யும் இயந்திரம் மற்றும் ஐஸ் பெட்டிகள் வழங்கிட ரூ.10.21 இலட்சமும், புதுக்கோட்டை தூரிகை அலகு நவீனப்படுத்துவதற்கு ரூ.2.75 இலட்சமும் மற்றும் சேலம் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்திற்கு பதநீர் விநியோகம் செய்யும் வாகன கொள்முதல் செய்ய ரூ.2.71 இலட்சமும் மொத்தம் ரூ.25.67 இலட்சம் அரசு இவ்வாரியத்திற்கு நிதி அனுமதித்துள்ளது.

- பனைப் பொருட்கள் ரூ.5,862.74 இலட்சத்திற்கு உற்பத்தி / கொள்முதல் செய்யப்பட்டு ரூ.6,360 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- ரூ.6.50 இலட்சத்தில் இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி, தூத்துக்குடி மாவட்டம் கோரம்பள்ளம், சேலம் மாவட்டம் தாரமங்கலம், ஆகிய இடங்களில் பனை மரம் ஏறும் தொழிலாளர்களிடையே போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- குறளகம் வளாகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான பனைப் பொருள் அங்காடி ரூ.2.60 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# மக்கள் நல்வாழ்வைப் பேணி மக்கள் நலம் காக்கும் சாதனைகள்



- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகள், 23 முக்கியப் பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளுக்கு அனுமதி, 1.57 கோடி குடும்பங்களுக்கு இத்திட்டத்திற்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு நான்கு ஆண்டுகளில் ரூ.4 இலட்சம் காப்பீட்டுத் தொகை.

- ஆண்டு வருமானம் ரூ.72,000/– மற்றும் அதற்கு குறைவாக உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் பயன். முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் மற்றும் முகாமில் தங்காமல் காவல் நிலையத்தில் பதிவு செய்து பிற இடங்களில் வசிக்கும் இலங்கை அகதிகளும் வருமான வரம்பு இன்றி இத்திட்டத்தில் பயன். ஒரு குடும்பத்திற்கு நான்கு ஆண்டுகளில் ரூ.4 இலட்சம் காப்பீடு.

- குடும்பத்தில் மாற்றுத்திறனாளியாக ஒருவர் இருந்தால், அக்குடும்பம் வருமான வரம்பு இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளியாகச் சேர்க்கப்படும்.

- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் உள்பட, அங்கீகரிக்கப்பட்ட 750 மருத்துவமனைகளில் சிகிச்சை. ரூ.2,759.85 கோடி செலவில் 13.27 இலட்சம் நபர்களுக்கு சிகிச்சை. இதில் அரசு மருத்துவமனைகளில் மட்டும் 5.40 இலட்சம் நபர்களுக்கு ரூ.1,003 கோடி செலவில் சிகிச்சை.

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ரூ.1.5 இலட்சம் காப்பீட்டுத் தொகைக்கு மேல் செலவாகும் சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு அரசே முழு உதவித் தொகை வழங்கும் வகையில் ரூ.10 கோடி முதலீட்டில் சிறப்பு நிதி உருவாக்கம். இந்த நிதிக்கு அரசின் பங்காக கூடுதலாக ரூ.25 கோடி வழங்க ஆணை. இந்த நிதியிலிருந்து இதுவரை 2,887 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.12,000/– ஆக உயர்வு. ரூ.2,910.21 கோடி செலவில் 31.19 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு நிதி உதவி.

- ஒவ்வொரு ஆண்டும் 32.79 இலட்சம் கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கும், 729 பெண் சிறைக்கைதிகளுக்கும், அரசு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெறும் 525 பெண் நோயாளிகளுக்கும் விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.269.80 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.143.14 கோடி செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை 9 உயர் சிறப்பு பிரிவுகள் மற்றும் 400 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. 83 உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவர்களும் 232 மருத்துவமில்லா உதவியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- நடமாடும் மருத்துவமனை திட்டம் 385 வட்டாரங்களில் 2011–2012ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடமாடும் மருத்துவமனைகள் அனைத்து நவீன மருத்துவம் மற்றும் ஆய்வக உபகரண வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மாதத்திற்கு 40 முகாம்கள் நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.219.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை நடத்தப்பட்ட 8.28 இலட்சம் முகாம்களில் 4.96 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

- ரூ.31.60 கோடி செலவில் 23 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 7 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள்.

- ரூ.2.3 கோடி செலவில் 16 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டயாலிசிஸ் கருவிகள்.

- உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்களைச் செயல்படுத்த ரூ.86.35 கோடி செலவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம் என்ற புதிய துறை உருவாக்கம்.

- சென்னை கிண்டி, தஞ்சாவூர், மதுரை, சேலம், பாளையங்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உணவு மாதிரிகளை ஆய்வு செய்ய நிறுவப்பட்டுள்ள 6 பகுப்பாய்வுக் கூடங்கள் மேம்படுத்தல்.

- நாட்டிலேயே முதன்முதலாக சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை மருத்துவர்கள், முடநீக்கியல் நுட்புநர், இதய வரைபட நுட்புநர், நுண்கதிர் வீச்சாளர், பொருத்துநர் (நிலை–2), மருந்தாளுநர், கிராம சுகாதார செவிலியர், நோய் தீர்வியல் உதவியாளர் என 14,707 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழகத்தில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.134.40 கோடி செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 15 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை.

- மருத்துவ வசதி குறைவாக உள்ள வட்டாரங்களில் 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி மற்றும் அறுவை சிகிச்சை வசதிகளுடன் கூடிய 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.131.16 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 7 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்த நடவடிக்கை.





- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ரூ.14.26 கோடி செலவிலும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.14.37 கோடி செலவிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.15 கோடி செலவிலும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.15.06 கோடி செலவிலும் நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- கிண்டி நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (கிங் நிலையம்) தடுப்பூசி உற்பத்தியை மீண்டும் தொடங்கவும், திசு வங்கி அமைக்கவும் ரூ.9.61 கோடி நிதி ஒதுக்கீடு. பாம்புகடி மருந்து தயாரிக்க ரூ.2.30 கோடி நிதி ஒதுக்கீடு.

- சென்னை அரசு பல் மருத்துவமனைக்கு ரூ.13.66 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் சென்னை பல்மருத்துவமனை ஒரு ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், பிரசவித்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் பற்றிய விவரங்களைக் கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்ய ஏதுவாக 9,397 கிராம சுகாதார செவிலியர்களுக்கு ரூ.19.17 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

- துப்புரவுப் பணியாளர், செவிலியர் பணியாளர் நிலை–II மற்றும் மருத்துவமனைப் பணியாளர் காலிப் பணியிடங்களை ஒருங்கிணைந்த பதவியாக்கி, பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர் என வகைப்படுத்தி, தொகுப்பூதியத்தில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தில் 5,521 பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக மருத்துவமனைகளில் நியமனம் செய்ய ஆணை.

- ரூ.97 கோடி மதிப்பில் சிவகங்கையில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி 100 மாணவர் சேர்க்கையுடனும், ரூ.147.70 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் புதிய மருத்துவக்

கல்லூரி 100 மாணவர் சேர்க்கையுடனும் சென்னை ஓமந்தூரார் அரசின் தோட்ட வளாகத்தில் ரூ.200 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி 100 மாணவர்கள் சேர்க்கையுடனும் தொடங்கப்பட்டுள்ளன.

- மருத்துவ மாணவர் சேர்க்கை செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் 50 லிருந்து 100 ஆகவும், கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் 100 லிருந்து 150 ஆகவும், சென்னை மருத்துவக் கல்லூரியில் 165லிருந்து 250 ஆகவும், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 150லிருந்து 250 ஆகவும், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் 100 லிருந்து 150 ஆகவும், திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் 100 லிருந்து 150 ஆகவும், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 75லிருந்து 100 ஆகவும் கூடுதலாக 410 மருத்துவ மாணவர் சேர்க்கையிடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 61 பட்ட மேற்படிப்பு மருத்துவ இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையை ரூ.100 கோடி மதிப்பீட்டில் உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்த ஆணை. முதல் கட்டமாக கட்டடம் கட்ட ரூ.53.97 கோடியும், விபத்துச் சிகிச்சைப் பிரிவு கட்ட ரூ.1.03 கோடியும் நிதி ஒதுக்கீடு. கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.02.2014 அன்று திறக்கப்பட்டுள்ளது.
- 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் அறுவை சிகிச்சை அரங்கங்கள் ரூ.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ரூ.12.30 கோடி செலவில் புதிய அரசு செவிலியர் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, திருவாரூர் மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அரசு – தனியார் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் நிறுவப்பட்டு பயன்பாடு. சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ரூ.5 கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியும், ரூ.1 கோடி செலவில் டிஜிட்டல் ஊடுகதிர் கருவியும் வழங்க ஆணை.
- அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத 14 மாவட்டங்களிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக தரம் உயர்த்த ரூ.97.40 கோடி நிதி ஒதுக்கீடு. இம்மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 351 மருத்துவர் பணியிடங்களும், 918 இதர பணியிடங்களும் கூடுதலாக வழங்கி அரசாணை வழங்கப்பட்டுள்ளது.
- நுண்கதிர்வீச்சாளர் பணியிடம் இல்லாத 98 அரசு மருத்துவமனைகளுக்கு புதிதாக 98 நுண்கதிர் வீச்சாளர்களும், 13 மருத்துவமனைகளுக்கு ஆய்வக நுட்பனர்களும் நியமனம். தமிழ்நாடு சுகாதார திட்டத்தில் 56 அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக கட்டப்பட்ட புதியக் கட்டடங்களுக்கு 167 செவிலியர்கள் நியமனம் செய்ய ஆணை.
- 27 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகள் ரூ.64.46 கோடி செலவில் மேம்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா ரூ.50 கோடி செலவில் பேறுசார் மற்றும் குழந்தைகள் நல மேன்மைமிகு மையங்கள் அமைத்திட ஆணை. மேலும், திருச்சி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் புதுக்கோட்டை அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனைகளில் தலா ரூ.20 கோடி வீதம் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மூன்று மேன்மை மிகு மையங்கள் அமைக்க ஆணை.
- 19 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள 20 மகப்பேறு பிரிவுகளில் உயர் கவனிப்பு வழங்க கூடுதலாக 120 மருத்துவர்கள் நியமனம். மேலும், 55 சீமாங்க் மருத்துவமனைகளில் மகப்பேறு தீவிர சிகிச்சை பிரிவு தொடங்கவும், இங்குள்ள அறுவை சிகிச்சை அரங்கங்களுக்கு கூடுதலாக 440 செவிலியர்கள் நியமனம் செய்யவும் ஆணை.
- ரூ.4.5 கோடி செலவில், 27 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஆப்பரேட்டிங் மைக்ராஸ்கோப்பி கருவி (Operating Microscopy) நிறுவப்பட்டுள்ளது.
- ரூ.7 கோடி செலவில், 4 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு சி.டி.ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.1.30 கோடி செலவில் 30 மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளில் இரத்தசெல் பகுப்பாய்வு மையங்கள் அமைத்திட ஆணை.
- ரூ.2.34 கோடி செலவில் ஸ்ரீரங்கம் அரசுப் பொது மருத்துவமனை விரிவாக்கம். இந்த மருத்துவமனைக்கு ரூ.4.64 கோடி செலவில் சி.டி. ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே மற்றும் முக்கிய மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ.4.50 கோடி செலவில் தீக்காயப் பிரிவை மேம்படுத்தவும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீக்காயப் பிரிவை ரூ.5 கோடி செலவில், ஒரு ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்தவும் ஆணை. சிவகாசி மருத்துவ மனையில் ரூ.4.50 கோடி செலவில் ஒப்புயர்வு மையத்திற்கு கட்டப்பட்ட கட்டடம் 25.06.2014 அன்று திறப்பு.
- ரூ.19.45 கோடி செலவில் 42 ஆரம்ப சுகாதார மையங்களில் தாய் சேய் நல மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- மருத்துவ தகவல், ஆலோசனை, சுகாதாரம் சார்ந்த பொதுமக்கள் குறைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு ஆகிய சேவைகள் வழங்க “104” மருத்துவ தகவல் சேவை 30.12.2013 அன்று தொடக்கம். இச்சிறப்புத்திட்டம் தொடங்கிய நாள் முதல் இதுவரை பொதுமக்களிடமிருந்து 14.45 இலட்சம் அழைப்புகள் வரப்பெற்று மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் 260 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.42 கோடி செலவில் உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை முதலியவற்றில் உள்கட்டமைப்பு மற்றும் சிறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- 30 மாவட்டங்களில் ரூ.6.37 கோடி செலவில் பொது சுகாதாரத் துறை ஆய்வகங்கள். 378 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.58.59 கோடி செலவில் செவிலியர் குடியிருப்பு, 214 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.39.59 கோடி செலவில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள், 39 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.5.85 கோடி செலவில் சொந்த கட்டடங்கள், கரூர் மாவட்டத்தில் 53 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட ஆணை.
- ஸ்ரீரங்கம் தொகுதியில் ரூ.1.14 கோடி செலவில் மூன்று புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.1.86 கோடி செலவில் 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்தல். இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மூன்று துணை சுகாதார நிலையங்களுக்கும் ரூ.1.32 கோடி செலவில் சொந்த கட்டடம் கட்டுதல்.
- அரசு மருத்துவமனைகளில் புற ஆதார முறையில் 5,541 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 1,461 இதர பணியாளர்கள் நியமனம்.
- 108 அவசர ஊர்தித் திட்டத்தின் கீழ் 754 வாகனங்கள் இயக்கம். இந்தத் திட்டத்தில் 8.73 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள், 84,169 பச்சிளம் குழந்தைகள் உட்பட 33.57 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர்.
- அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த 4.31 இலட்சம் தாய்மார்களுக்கு, மருத்துவமனைகளில் இருந்து வீட்டிற்கு செல்ல கட்டணமில்லா வாகன வசதி வழங்கப்பட்டுள்ளது.
- 266 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 7 அரசு மருத்துவமனைகளிலும் பல் மருத்துவப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் ரூ.3 கோடி செலவில் பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்கள்) பயிற்சி மையம் அமைக்க ஆணை.

- செவிலியர் பயிற்சி மாணவர்களின் முதலாம் ஆண்டு மாத கல்வி உதவித் தொகை ரூ.400/– லிருந்து ரூ.600/– ஆகவும், இரண்டாம் ஆண்டு கல்வி உதவித் தொகை ரூ.440/– லிருந்து ரூ.700/– ஆகவும், மூன்றாம் ஆண்டு கல்வி உதவித் தொகை ரூ.480/– லிருந்து ரூ.800/– ஆகவும் 2013 – 2014 முதல் உயர்த்தப்பட்டது. மேலும், இதுவரை உதவித் தொகை பெறாமலிருந்த 1,355 செவிலியர் பயிற்சி மாணவர்களுக்கு 2014 – 2015–ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித்தொகை வழங்க அரசாணை.

- சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்காக அவசர கால சிசு பராமரிப்பு சேவை துவக்கம்.

- 78 நான்கு சக்கர அவசர கால ஊர்திகள் மலைப்பகுதிகளில் இயக்கம்.

- பதிவு செய்துள்ள பரம்பரை இந்திய முறை வைத்தியர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.500–லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.5.74 கோடி கூடுதல் செலவினம்.

- பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடியிலும், கன்னியாகுமரி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடியிலும், அறிஞர் அண்ணா அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.11.70 கோடியிலும் வலுப்படுத்த நிதி ஒதுக்கீடு. மேலும், 6 அரசு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்தவும், தேவையான பணியாளர்களை நியமனம் செய்யவும் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு.

- இந்திய முறை மருத்துவத்திற்காக தனியாக ஓர் ஆராய்ச்சி ஆய்வுக் கூடம் ரூ.12 கோடி செலவில் நிறுவவும், தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் (TAMPCOL) உள்கட்டமைப்பு வசதிகளை ரூ.2 கோடி செலவில் மேம்படுத்தவும், தொற்றா நோய்கள் தடுப்பதற்கு இந்திய முறை மருத்துவத்தின் உபயோகம் குறித்து மக்களிடம் விழிப்பை ஏற்படுத்த ரூ.2.50 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் தொடர்பான மருத்துவ நிலையம் நிறுவ ரூ.9.6 கோடி நிதி ஒப்பளிப்பு.

- இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையில் மாதாந்திர இதழ் தமிழில் வெளியிடுவதற்காக ரூ.2 கோடியில் மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அரசுப்பணியில் உள்ள இந்திய முறை மருத்துவர்கள் வெளிமாநிலங்களில் உள்ள கல்லூரிகளில் கட்டணம் மற்றும் ஊதியத்துடன் உயர்படிப்பு படிப்பதற்கு அரசு அனுமதி.

- மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 6,831 எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு (ஆண்கள் மற்றும் பெண்கள்) தலா மாதம் ரூ.1,000/– ஓய்வூதியம் வழங்க ஆணை.

- மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடு திட்டத்தில், எச்.ஐ.வி / எய்ட்ஸ்–ஆல் பாதிக்கப்பட்ட 22 நபர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

- 100 அரசு மருத்துவமனைகளின் அறுவை அரங்குகளுக்கு நானோ சர்பேஸ் ஷீல்டு (Nano Surface Shield) ரூ.5 கோடி செலவில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ஏ.ஆர்.டி. மையங்களுக்கு சென்று, மருந்துகள் வாங்கிவர, 22,406 எச்.ஐ.வி / எய்ட்ஸ் உள்ளவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் 6.7 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.67 கோடி செலவில், ரூ.1,000 மதிப்புடைய 16 பொருட்கள் அடங்கிய “அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்” (Amma Baby Care Kit) வழங்கப்படுகிறது.

- சென்னை அரசு பொது மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு, முடக்கியியல் பிரிவு, சிறு நீரகவியல் அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறு நீரகவியல் மருத்துவப் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு ரூ.50 கோடி செலவில் அடுக்கு





மாடிக் கட்டடம் கட்ட 07.09.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- புதிதாக உருவாக்கப்பட்ட 10 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.25 கோடி செலவில் வட்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்த ஆணை.

- 45 மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 30 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 240 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் சுமார் ரூ.24.50 கோடி செலவில் எதிர் சவ்வூடு பரவல் தண்ணீர் உபகரணம் (Reverse Osmosis Water Plant) நிறுவ ஆணை.

- 12 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.13.20 கோடி செலவில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகளும் 31 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.9.30 கோடி செலவில் சி. ஆரம் எக்ஸ்ரே கருவி (C-Arm X-Ray Machine) வழங்கிடவும் ஆணை.

- சென்னை மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் செவிலிய மாணவியர்களுக்கு ரூ.6 கோடி செலவில் புதிய விடுதி கட்ட 07.09.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- அரசுமருத்துவக்கல்லூரிகளில்முதுநிலைபட்டம், முதுநிலை பட்டயம், உயர்தர சிறப்பு படிப்பு பயிலும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் பயிற்சி மருத்துவர்கள் என 4,088 பயிற்சி மருத்துவர்களின் மாதாந்திர உதவித் தொகை ஆண்டொன்றிற்கு ரூ.28.74 கோடி கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் புகையிலை மற்றும் நிக்கோடின் உள்ள குட்கா, பான் மசாலா மற்றும் வாயில் மெல்லக் கூடிய புகையிலைப் பொருட்களை தயாரிக்கவும், இருப்பு வைக்கவும், பகிர்வு செய்யவும், விற்பனை செய்யவும், தடை செய்யப்பட்டுள்ளது.

- பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், புற நோயாளிகள் பிரிவிற்கு ரூ.5 கோடி செலவில் புதிய கட்டடம் கட்ட ஆணை.

- இயற்கை மருத்துவம், யோகா மற்றும் அக்குப்பஞ்சர் ஆகிய மூன்று பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் 5 மாணவர்கள் சேர்க்கையுடன் மூன்றாண்டு முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்க ஆணை.

- அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.1,134.22 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- சென்னை அரசு பொது மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவமனை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.4.41 கோடி செலவில் நுண்ணுயிர் கிருமி ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

- எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு அமைப்பின் உதவியுடன் (JICA) ரூ.91 கோடி செலவில் புற நோயாளிகள் பிரிவு கட்ட நடவடிக்கை.

- தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.150 கோடி செலவில், அவசர சிகிச்சைப் பிரிவு மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனை, பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் அமைக்க நடவடிக்கை.

- தொற்றா நோய் கண்டறிதல், தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம், 2012இல் 16 மாவட்டங்களிலும், 2013இல் மற்ற 16 மாவட்டங்களிலும் அமலாக்கம். இதுவரை 28.83 இலட்சம் நபர்கள் உயர்இரத்த அழுத்தத்திற்காகவும், 9.94 இலட்சம் நபர்களுக்கு நீரிழிவு நோய்க்காகவும், 3.62 இலட்சம் பெண்கள் கருப்பைவாய் புற்று நோய்க்காகவும், 1.60 இலட்சம் பெண்கள் மார்பக புற்று நோய்க்காகவும் சிகிக்சை அளிக்கப்பட்டது.

- மன நல நோயாளிகளின் நலன் கருதி, இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடியில் 50 படுக்கை வசதிகள் கொண்ட மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு மையம் ரூ.3.24 கோடியில் ஏற்படுத்த ஆணை.

- 10 அரசு வட்ட மருத்துவமனைகளில் ரூ.3.50 கோடி செலவில் பிணவறைப் பிரிவு ஏற்படுத்த ஆணை.

- நீரினால் பரவும் கொள்ளை நோய்களைத் தடுக்க திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்டங்களில் ரூ.4.6 கோடி செலவில் நீர் பகுப்பாய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

- 5,654 நான்காம் நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு மாதம் ரூ.400/– நிதியுதவி வழங்க ஆணை. இது ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் வசதிக்காக 4,035 கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் ரூ.1.67 கோடி செலவில் வழங்கவும், 125 தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்கள் ரூ.63 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டுள்ளன.

- ஏழு அரசு மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கி தொடங்கப்பட்டுள்ளது.

- 352 பேருந்து நிலையங்கள் மற்றும் முனையத்தில் பாலூட்டும் தாய்மார்கள் தங்களின் குழந்தைகளுக்கு தனிமையில் பாலூட்ட தனி அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- சென்னை அடையார் புற்றுநோய் நிலையம் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிறப்பு சிகிச்சை அளிக்கும் உயர்நிலை மையமாகவும் ஒப்புயர்வு மையமாகவும், ரூ.120 கோடி செலவில் மேம்படுத்த ஆணை.

- கரூர் மற்றும் புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க அறிவிக்கப்பட்டு, 150 மருத்துவ பட்டப்படிப்பு இடங்களுடன் தொடங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு கட்டடங்கள் கட்ட ஒவ்வொரு கல்லூரிக்கும் தலா ரூ.229.46 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# இதுவரை இல்லாத அளவு புதிய கல்லூரிகள்! புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கம்! புதிய ஆசிரியர்கள் நியமனம்!



- ரூ.16.50 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் காணொலிக் காட்சியுடன் கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள், மாணவர்களின் மொழித்திறன்களை உயர்த்தி அவர்களை உலகச் சந்தையில் போட்டியிடத் தயார்படுத்தும் வண்ணம் ஆங்கிலம், சீனம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளைக் கற்பதற்கான தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டம் மற்றும் பாடத்திட்ட வளர்ச்சி மையங்கள் அமைப்பு.

- 10 பல்கலைக்கழகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவக் கருவிகள் தயாரிக்கும் மையம் அமைப்பு, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குத் தேவைப்படும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகள் மற்றும் பாடங்களுக்கான தொடுஉணர் வரைகலை (Tractile Graphics) இடம்பெற்றுள்ள மற்றும் இடம் பெறாத பிரெய்லி புத்தகங்களை, இம்மையங்கள் வழங்கும். இந்த மையங்கள் அதிவேகமாகச் செயல்படும் பொருட்டு உயர் அழுத்த பிரெய்லி அச்சுப் பொறியும், தகவல் வங்கியை உருவாக்குவதற்காக தனிநபர் கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்றலில் திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவும் வண்ணம் பல்லூடகம் சார்ந்த கணினி உதவிப்பெட்டகமும் அளிக்கப்படும்.

- அரசு, அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள் / பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் / பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 5,50,576 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள்.

- அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்க சட்டம். திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைப்பு.

- தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு முறை மூலம் பணியிட மாறுதல்.
- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் கல்வியாண்டுகளில் பி.இ. / பி.டெக் பொறியியல் கல்வி பயிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 136 மாணவர்கள் தங்களது பொறியியல் படிப்பைத் தொடர்ந்து பயில முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000/– வீதம் ரூ.34,00,000/– நிதியுதவி.
- 2010–2011ஆம் ஆண்டில் 6.51 இலட்சமாக இருந்த உயர்கல்வி மாணவர்களின் சேர்க்கை 2013–2014ஆம் ஆண்டில் 7.31 இலட்சமாக உயர்வு.
- முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தை அளிக்கும் திட்டத்தின் மூலம் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.528.81 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அரசுக் கலை – அறிவியல் கல்லூரிகளின் கௌரவ விரிவுரையாளர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு. 2011–2012 முதல் 2012–2013 வரை ரூ.65.68 கோடி மதிப்பில் 3,284 நபர்கள் பயன்.
- அரசு பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.5,000லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு.
- அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் பகுதிநேர விரிவுரையாளர்களுக்குத் தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு.
- அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு 151 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 135 விரிவுரையாளர்கள் தேர்வு.
- காஞ்சிபுரம் மாவட்டம் நெம்மேலி, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி மற்றும் நன்னிலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம், தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அரூர், சேலம் மாவட்டம் எடப்பாடி, கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர், திண்டுக்கல் மாவட்டம் வேடச்சந்தூர், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி, மதுரை மாவட்டம் திருமங்கலம், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர், இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம், வேலூர் மாவட்டம் அரக்கோணம், பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் மற்றும் கடலூர் மாவட்டம் திட்டக்குடி ஆகிய 24 இடங்களில் ரூ.141.35 கோடி செலவில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டு 6,726 மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்கின்றனர்.
- தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அடிப்படையில் (PPP mode), ரூ.128 கோடி முதலீட்டில், 3 முதுகலை பாடப்பிரிவுகளுடன் (Computer Science and Engineering, Software Engineering and Database System) ஸ்ரீரங்கத்தில் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (Indian Institute of Information Technology) 2013–2014ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது.
- ரூ.360.84 கோடி செலவில் ஸ்ரீரங்கம், கந்தர்வக்கோட்டை, சங்கராபுரம், பெருந்துறை, அரியலூர், ஊத்தங்கரை, ஜோலார்பேட்டை, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி செக்கானூரணி மற்றும் செய்யாறு ஆகிய 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு 2,839 மாணவ, மாணவியர்கள் பயன்.
- ரூ.381.57 கோடி செலவில் போடிநாயக்கனூர், தஞ்சாவூர், தருமபுரி, மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் புதிதாக அரசுப் பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு 3,550 மாணவ, மாணவியர்கள் பயன்.
- ரூ.100 கோடி செலவில் 93 அரசுப் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகள்.
- ரூ.71.29 கோடி நிதியில், அரசு கலை மற்றும் அறிவியல், அரசு கல்வியியல் / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான நாற்காலிகள், மேசைகள் மற்றும் கரும்பலகைகள் ஆகியவை டான்சி மூலமாக வழங்கப்பட்டுள்ளன. குடிநீர், கழிப்பறை, உணவுக்கூடம் உள்ளிட்ட வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 4,566 ஆசிரியர்கள், 58,398 மாணவர்கள் பயன்.



- ரூ.150 கோடி செலவில் அண்ணா பல்கலைக்கழக மண்டல அலுவலகங்கள் மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களை அயல்நாடு அனுப்பி கல்வி பயிற்றுவிக்கும் திட்டத்தின் மூலம் 25 மாணவர்களும், 5 பேராசிரியர்களும், இங்கிலாந்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களுக்குச் சென்று பயில ஒருவருக்கு ரூ.15 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி செலவினத்திற்கு நிருவாக அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. அதன்படி 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆண்டுகளில் தலா 25 மாணவர்களும், 5 பேராசிரியர்களும் இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் பயின்று வந்துள்ளனர்.
- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு அன்னை தெரசா மகளிர் காமன்வெல்த் பன்னாட்டுமையம் அமைப்பதற்கு ரூ.5 கோடி ஒப்பளிப்பு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்குக் கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீடு. 1,150 மாணவ, மாணவியர்கள் பயன்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழில் நிறுவனங்களையும், மாணவர்களையும் இணைக்கும் பாலமாக பல்கலைக்கழகங்கள் செயல்படும் பொருட்டு, 6 பல்கலைக்கழகங்களில் ரூ.2.50 கோடி செலவில் பல்கலைக்கழகம் – தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள் அமைத்திட ஆணை.
- தகவல் தொழில்நுட்பம் போன்ற நவீன வேலைவாய்ப்புத் தளங்களில், பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற பயிற்சி அளித்திட 9 பல்கலைக்கழகங்களில் ரூ.90 இலட்சம் செலவில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த எழுத்துப் பயிற்சி மையங்கள் நிறுவ ஆணை.
- உயிர் அறிவியல், மருத்துவ உயிர் அறிவியல், உயிர் தொழில்நுட்பவியல், மேலாண்மையியல் மற்றும் வணிகவியல் போன்ற உயர் படிப்புகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள் மேற்கொள்ள உயர்தர தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களுடன் 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2.50 கோடி செலவில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு சிறப்பு மையங்கள்.
- தற்பொழுது முதுகலைப் பட்டமேற்படிப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதைக் கருத்திற்கொண்டு பெரம்பலூர், ஈரோடு, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் பல்கலைக்கழகங்களில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையங்கள்.
- கல்லூரி மாணவர்கள் இடையில் படிப்பை நிறுத்திவிடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கல்லூரியில் மெதுவாக கற்கும் மாணவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் திட்டத்தை 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 18 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படுத்த ரூ.30 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தில் 2013–2014ஆம் ஆண்டில் 6,056 மாணவர்களும் 2014–2015ஆம் ஆண்டில் 8,887 மாணவர்களும் பயன்.
- வேலைவாய்ப்பிற்கு ஆளுமைத்திறன், பேச்சுத்திறன், குழுப்பணித்திறன் போன்ற 60 விதமான அடிப்படை மென்திறன்களை மாணவர்களுக்குக் கற்பிக்க 5 பல்கலைக் கழகங்களுக்குட்பட்ட 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மென்திறன் மையங்கள் ரூ.1.35 கோடி செலவில் அமைத்திட ஆணை.
- தொழில் முனையும் திறனை / தொழில்நுட்பத்தை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் அந்த அறிவை பரப்பச் செய்வதோடு ஆராய்ச்சி வழிமுறைகள் (ம) கண்டுபிடிப்புகள் பேணிக் காத்திட 9 பல்கலைக்கழகங்களில் ரூ.29.88 இலட்சம் செலவில் தொழில்நுட்பம் அடைகாப்பு மற்றும் பகிர்த்தளிக்கும் மையங்கள் அமைத்திட ஆணை.

- கணினி, ஒளி–ஒலி மற்றும் நவீன மின் ஒலிக் கருவிகளைப் பயன்படுத்தி கல்வி பயில 10 பல்கலைக்கழகங்களில் ரூ.50 இலட்சம் செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வடிவக் கருவிகள் தயாரிக்கும் மையங்கள் அமைத்திட ஆணை.

- ரூ.23.20 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி மையம் மற்றும் பெண்களுக்கான தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்துடன் கூடிய சுயவேலைவாய்ப்பு மையம்.

- ரூ.3.5 கோடி செலவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மை மையம்.

- ரூ.2.90 கோடி செலவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தினை பசுமை வளாகமாக மாற்ற ஆணை.

- ரூ.25 இலட்சம் செலவில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கல்வி மையம்.

- ரூ.1.68 கோடி செலவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரிகளின் முழு நேர வகுப்பில் பயின்றுவரும் 6,000 மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை.

- ரூ.35 இலட்சம் செலவினத்தில் 15 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சித் திட்டம்.

- மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பிரபலமாக்குவதற்காக ரூ.7.50 இலட்சம் செலவில் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவி.

- இலங்கை தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு முதன் முறையாக பி.இ./ பி.டெக்./ எம்.பி.ஏ./ எம்.சி.ஏ/ எம்.இ./ எம்.டெக்./ போன்ற இளநிலை மற்றும் முதுகலை கல்வி பயில நேரடி மாணவர் கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம்–2 இன் கீழ் 01.12.2014 வரை ரூ.98.79 கோடி நிதி ஒதுக்கீடு.

- ரூ.17.10 கோடி செலவில் 11 இருபாலர் அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளும், ஒரு அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியும், ஒரு பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்பு மகளிர் கலை அறிவியல் கல்லூரியையும் தொடங்க அனுமதி.

- 2011–2012 முதல் 2014–2015 வரையிலான கல்வியாண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு இதற்கென 1,924 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன.

- ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் தமிழக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை நீட்டிப்பு.

- 2014–2015ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகருக்கு அருகில் உள்ள சாந்தி நகரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் மாலை நேரக் கல்லூரி.

- இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவுடன் இணைந்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மென்பொருள் அடைகாப்பு மையம்.

- ரூ.65 இலட்சம் செலவில் அழகப்பா பல்கலைக் கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம்.

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் உள்ள காரப்பாக்கம் கிராமத்தில் ரூ.95 கோடி செலவில் கல்வியியல் வளாகமும் நிருவாக வளாகமும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- உயர்கல்வித்துறையின் கீழ் உள்ள 13 பல்கலைக் கழகங்களில் நூலகம் சார்ந்த தகவல்கள், ஆராய்ச்சி மற்றும் பாடப் பொருட்களை இணையதளம் மூலம் இணைத்து மின்தொடர்பு நூலக களஞ்சியங்களை இணையதள வசதியுடன் ரூ.1.86 கோடி செலவில் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

- திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ரூ.161 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டத்தில் ரூ.137 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆகமொத்தம் ரூ.459 இலட்சம் மதிப்பீட்டில் 24,350 சதுர அடி (2,263 ச.மீ) பரப்பளவில் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





- ரூ.1,39,65,756/– செலவில் திருச்சி மண்டலக் கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து தஞ்சாவூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தையும் கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து தருமபுரி மாவட்டத்தில் புதியதாக ஒரு மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தையும் ஏற்படுத்துதல் மற்றும் வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை மறுசீரமைத்தல்.

- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட தஞ்சாவூர் மற்றும் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு முறையே 7 மற்றும் 9 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மறுசீரமைத்த வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு 3 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- 2014–2015ஆம் கல்வியாண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, மணல்மேடு மற்றும் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஆகிய இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் (இருபாலர்) ரூ.1,695.88 இலட்சம் செலவில் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டன. ஒவ்வொரு கல்லூரிக்கும் 15 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகரில் இளங்கலை பொருளியல் (B.A. Economics), இளங்கலை ஆங்கிலம், (B.A. English) மற்றும் இளங்கலை வணிகவியல், (B.Com) ஆகிய 3 பாடப்பிரிவுகளுடன் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிக்கு 11 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தொடரும் மற்றும் தொடராச் செலவினங்கள் மற்றும் நிரந்தர




நிருவாக ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது.

- தேனி மாவட்டம், வீரபாண்டி, ஈரோடு மாவட்டம், சத்யமங்கலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆகிய 3 இடங்களில் இளங்கலை பொருளியல் (B.A. Economics), இளங்கலை ஆங்கிலம், (B.A. English) மற்றும் இளங்கலை வணிகவியல், (B.Com) ஆகிய 3 பாடப்பிரிவுகளுடன் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) செயல்பட்டு வருகிறது. அக்கல்லூரிகளுக்கு 84 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களும், தொடர் செலவினம் ரூ.2.32 கோடி, தொடராச் செலவினம் ரூ.79.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு மூலதனச் செலவினம் ரூ.21.75 கோடி நிர்வாக ஒப்பளிப்பு.

கட்டடம் கட்டுவதற்கு ரூ.828.57 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.09.2015 அன்று சட்டமன்றத்தில் 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படும் என அறிவித்ததற்கிணங்க, சென்னை மாவட்டம் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி, திருவாரூர் மாவட்டம், வலங்கைமான், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஆகிய இடங்களில் 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளுக்காக 305 பணியிடங்களும், தொடர் செலவினமாக ரூ.17.86 கோடி நிதி ஒப்பளிப்பும், தளவாடங்கள் கொள்முதல் செய்ய தொடரா செலவினமாக ரூ.2.50 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளின் கட்டடப் பணிகளுக்காக ரூ.128.30 கோடி

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.09.2015 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததற்கிணங்க, 2014–2015ஆம் ஆண்டிற்கான அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 611 உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நிரப்பிட 29.12.2015இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.09.2015 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததற்கிணங்க, மாநில புதுமை திட்ட நிதியின் கீழ் “பேரிடர் மற்றும் சமுதாய பயன்பாட்டுக்காக ஆளில்லா வான்வெளி வாகனம்” திட்டமிட்டு வடிவமைக்கப்பட ஏதுவாக 2015–2016ஆம் ஆண்டிற்கென ரூ.9,72,64,000/–ஐ அண்ணா பல்கலைக் கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்து 18.12.2015இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# சொகுசான பயணங்களுக்கு வழிகாட்டும் பாங்கான சாலைப் பணிகள்



- நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக டிசம்பர் 2015 வரை ரூ.19,354.46 கோடி செலவில் 46,890.50 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகளும் மற்றும் ரூ.3,067.50 கோடி செலவில் 1,793 பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலம்/கீழ்பாலங்களும் கட்டிமுடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

**சாலைகள்:**

- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.10,638.41 கோடி செலவில் 21,772.17 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- நபார்டு கடனுதவியுடன் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ் 699.22 கி.மீ. நீளமுள்ள 185 சாலைகள் ரூ.291.36 கோடி செலவில் மேம்பாடு செய்யப்பட்டு, 29 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயனடைகின்றனர்.

- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மீஞ்சூர் – காட்டூர் – திருப்பாலைவனம் சாலையில் 17.40 கி.மீ. நீளத்திற்கு அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணி ரூ.36.45 கோடி செலவில் முடிவுற்றது. தரமணி இணைப்புச்சாலையின் இடதுபுறம் 3.65 கிமீ. நீளத்திற்கு அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணி ரூ.14.88 கோடி செலவில் முடிவுற்றது. திருமழிசை சத்தியவேடு சாலை கிமீ 5/0 – 10/0 வரை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணிகள் ரூ.8.50 கோடி செலவில் முடிவுற்றது. மேலும், சென்னை மறைமலை அடிகள் பாலம் இரும்புலியூர் சாலையில் கி.மீ.17/4இல் இராஜ கீழ்ப்பாக்கம் முதல் அகரம் தென் சாலை வரை தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலையில் நில எடுப்பு முடிவடைந்துள்ள பகுதிகளில் மட்டும் புதிய இணைப்புச் சாலை அமைக்கும் பணி ரூ.27.50 கோடியில் முடிக்கப்பட்டது.

**சென்னை வெளிவட்டச் சாலை**

**கட்டம்–I**

- ரூ.1,081.40 கோடி மதிப்பீட்டில் மண்ணிவாக்கம் முதல் நெமிலிச்சேரி வரை 27 கி.மீ. நீளத்தில் சென்னை வெளிவட்ட முதற்கட்ட சாலைப் பணிகள் பொது–தனியார் பங்களிப்புடன் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்கம்,

ஒப்படைத்தல் (DBFOT) மற்றும் ஈவுத்தொகை வழங்கும் அடிப்படையில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

**கட்டம்–II**

- ரூ.1,075 கோடி மதிப்பீட்டில் நெமிலிச்சேரி முதல் மீஞ்சூர் வரையில் 30.50 கி.மீ. நீளத்தில் அமைக்கப்படவுள்ள சென்னை வெளிவட்ட இரண்டாம் கட்ட சாலை பணிகளுள் தற்போது 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**கிழக்கு கடற்கரை நான்கு வழிச்சாலை**

- ரூ.272.10 கோடி மதிப்பீட்டில் அக்கரை முதல் பூஞ்சேரி வரையிலான 33.5 கி.மீ. நீளமுள்ள கிழக்கு கடற்கரை இரு வழிச்சாலையை மையத் தடுப்புடன் கூடிய நான்கு வழிச் சாலையாக விரிவாக்கும் பணி பிப்ரவரி 2014இல் துவக்கப்பட்டு 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**எண்ணூர் துறைமுக இணைப்பு சாலை**

- ஆண்டார்குப்பத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜப்பான் நிறுவனமான திருவாளர்கள் தோஷிபா – ஜேஎஸ்டபிள்யூ நிறுவனம் உற்பத்தி செய்யும் 575 மெ.டன் எடை கொண்ட மின் உற்பத்தி இயந்திரத்தை எண்ணூர் துறைமுகத்திற்கு கொண்டு செல்ல உதவும் வகையில் ரூ.188 கோடி செலவில் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை, வட சென்னை அனல் மின் நிலைய சாலை, எண்ணூர் துறைமுகச் சாலைகளும் அவற்றில் அமைந்துள்ள பாலங்கள் உட்பட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, (99 விழுக்காடு பணிகள்) நிறைவடைந்துள்ளன.
- தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் III இன் கீழ் 15கி.மீ. நீளத்தில் ரூ.39.42 கோடியில் 3 சாலைப் பணிகளும், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 62.40 கி.மீ. நீளத்தில் ரூ.49.70 கோடி செலவில் 15 சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டது.
- திட்டம் சாரா பணிகளின் கீழ், ரூ.4,680.39 கோடி மதிப்பில் 20,664.12 கி.மீ. நீள சாலையில் புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்றன.
- புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ், 843.56 கி.மீ. நீளமுள்ள 78 சாலைப் பணிகள் மற்றும் 6 பாலப் பணிகள், ரூ.607.68 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- மாநிலங்களுக்கிடையிலான சாலை இணைப்புத் திட்டத்தின் கீழ், 20 கி.மீ. நீள 2 சாலைப் பணிகள் ரூ.8.68 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 44.89 கி.மீ. நீள 5 சாலைப் பணிகள் ரூ.38.41 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ், 30.40 கி.மீ. நீள சாலைப் பணி ரூ.18.67 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- பிரதம மந்திரி கிராமப்புறச் சாலை அபிவிருத்தித் திட்டம் பகுதி VIII (2012–2013) திட்டத்தின் கீழ், 1,059.15 கி.மீ. நீளமுள்ள 326 எண்ணிக்கையிலான மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.274.89 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளின் கீழ், 856.32கி.மீ.நீளமுள்ள82சாலைப்பணிகள்மற்றும் 12 பாலப் பணிகள் ரூ.31.11 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.
- பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளின் (Non Plan) கீழ் மொத்தம் ரூ.515.22 கோடி மதிப்பிலான 835.63 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**ஒரகடம் தொழிற்பூங்கா சாலை திட்டம்**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரகடம் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் பெருகிவரும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப போக்குவரத்து பயன்பாட்டிற்காக சாலை மற்றும் பால கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒரகடம் தொழிற்பூங்கா சாலை திட்டத்தின் மூலம் கீழ் கண்ட பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெற்று வருகின்றது.

**முதற்கட்டப் பணிகள்**

- சிங்கப்பெருமாள்கோயில் – திருப்பெரும்புதூர் சாலையினை மத்தியத் தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல் (SH-57) கி.மீ 0/6 முதல் 24/6 வரை 24 கி.மீ. வண்டலூர் வாலாஜாபாத் சாலையினை மத்தியத் தடுப்புடன் கூடிய நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல் (SH–48) கி.மீ 30/4 முதல் 63/ 8 வரை 33.4 கி.மீ. ஒரகடம் கூட்டுச்சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்.



- மேற்கண்ட சாலைகளில் மொத்தமுள்ள 57.4 கி.மீ திட்டப்பணியில் 52.90 கி.மீ நீளத்திற்குப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள 4.50 கி.மீ சாலையில், 0.40 கி.மீ பணி நடைபெற்று வருகிறது. ஒரகடம் சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி நிறைவு பெற்று போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது. இதுவரை ரூ. 476.82 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**இரண்டாம் கட்டப் பணிகள்**

- இரண்டாம் கட்டமாக சிங்கப்பெருமாள்கோயில் முதல் திருப்பெரும்புதூர் நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி, கி.மீ 12/6 முதல் 24/6 வரை (12 கி.மீ) எடுத்துக் கொள்ளப்பட்டது.
- மொத்தமுள்ள 12 கி.மீ. நீள சாலையில் 11.20 கி.மீ சாலைப்பணிகள் முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள 0.80 கி.மீ சாலை நில எடுப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நில எடுப்பு பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை (டிசம்பர் 2015) ரூ.90.90 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**மூன்றாம் கட்டப் பணிகள்**

- சிங்கப்பெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி, கி.மீ 0/6 முதல் 12/6 வரை (12 கி.மீ) எடுத்துக் கொள்ளப்பட்டது.
- மொத்தமுள்ள 12 கி.மீ. நீள சாலையில் சாலை அமைத்தல் குறுக்கு வடிகால் சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் தடுப்புச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் 5 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.32.59 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**மதுரை சுற்றுச்சாலை**

- மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகே துவங்கி சிவகங்கை சாலை, தேசிய நெடுஞ்சாலை 49இல் (இராமநாதபுரம் சாலை), நெடுங்குளம் சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை 45பி (அருப்புக்கோட்டை சாலை) ஆகியவற்றை இணைத்து தேசிய நெடுஞ்சாலை 7இல் (விருதுநகர் சாலை) கி.மீ. 27/2இல் கப்பலூரில் முடியும் மதுரை சுற்றுச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி ரூ.213.69 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் 27.2 கி.மீ சாலையை இருவழித்தடத்திலிருந்து மையத்தடுப்புடன் கூடிய 4 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணி, இரு இரயில்வே மேம்பாலங்கள், ஆற்றுப்பாலங்கள், சிறுபாலங்கள், கல்வெர்ட்டுகளை அகலப்படுத்துதல், சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல் மற்றும் தடுப்பு சுவர் மற்றும் வடிகால்களை அமைத்தல் ஆகிய பணிகளும் உள்ளடங்கும். தற்பொழுது பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**புறவழிச்சாலைகள்**

- இளையான்குடி, எட்டுக்குடி, துறையூர், பெரம்பலூர் (இரண்டு கட்டங்கள்), தாராபுரம் (இரண்டு கட்டங்கள்) பட்டுக்கோட்டை (முதற்கட்டம்), ஒசூர் (இரண்டாம் கட்டம்), வந்தவாசி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் கும்பகோணம் மற்றும் ராசிபுரம் (கட்டம் 1, பகுதி 1) ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை ரூ.163.94 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

**பாலங்கள்**

- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.607.43 கோடி செலவில் 1,286 பாலம் / சிறுபாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ.17.91 கோடி மதிப்பில் மாத்தூர் – திட்டக்குடி, குண்டு – உப்பலவாடி, திருச்சி – துறையூர் பாலம், பெருவிளை பாலம், ஆசாத்நகர், நசுவன்கரை, விளாத்திக்குளம்– பெருநாழி, நான்குனேரி – ஏர்வாடி ஆகிய 8 பாலப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.38.60 கோடி மதிப்பில், கடலூர் மாவட்டத்தில், நொச்சிக்காட்டில் ஒரு உயர்மட்டப்பாலம், இராமநாதபுரம் மாவட்டத்தில், சாயல்குடியில் ஒரு உயர்மட்டப்பாலம், தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு பாலம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரண்டு பாலங்கள் கட்டப்பட்டுள்ளது.
- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.6.91 கோடி மதிப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் கி.மீ. 6/6 இல் ஒரு பாலமும், ரூ.15.64 கோடியில் சென்னை அடையாற்றின் குறுக்கே திரு.வி.க. பாலத்திற்கு அருகில் மூன்று வழித்தடப்பாலமும், கூவம் ஆற்றின் குறுக்கே பெரிய மேற்கத்திய சாலை கி.மீ.11/2ஐ முகப்பேறு பகுதியுடன் இணைக்கும் சாலை ரூ.16.04 கோடியிலும் எண்ணூர் – முகத்துவாரத்தின் மீது எண்ணூர் விரைவு சாலையையும், வடசென்னை அனல்மின்

நிலையத்தையும் இணைக்கும் பாலம் கட்டும் பணிகள், ரூ.52.66 கோடியிலும் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டது மற்றும் வில்லிவாக்கம்–அம்பத்தூர் இரயில்வே நிலையங்களுக்கிடையே பட்டரவாக்கம் இரயில்வே நிலையம் அருகில் கடவு எண்.5இல் உயர் மட்ட பாலம் கட்டும் பணி ரூ.36.06 கோடியிலும் 5 நடைமேம்பாலங்கள்–பெருங்குடி, TCS, SBIOA, MEPZ மற்றும் குரோம்பேட்டையில் ரூ.36.86 கோடியிலும் முடிக்கப்பட்டது.

- அண்ணாநகர் 2ஆவது நிழற்சாலை முகப்பேர் சாலை உள்வட்ட சாலை சந்திப்பு (திருமங்கலம்) மேல் நிலைப்பாலம், மூலக்கடை சந்திப்பு கி.மீ. 8/6 ஜி.என்.டி. சாலையில் மேல் நிலைப்பாலம் மற்றும் தாம்பரம் முடிச்சூர் சாலை கி.மீ. 16/6இல் பாலப்பணி ரூ.111.80 கோடி மதிப்பீட்டில் தற்போது செயலாக்கம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.
- நபார்டு கடனுதவியுடன், 414 பாலங்கள், ரூ.946.36 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயனடைகின்றனர்.

**அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்**

**பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.25.92 கோடி மதிப்பில் 93 கட்டடங்கள் மற்றும் ஒரு புதுப்பிக்கும் பணி முடிக்கப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு.**

- விழுப்புரம், திருப்பூர் சென்னை, சேலம் மற்றும் மதுரை 5 வட்ட அலுவலகக் கட்டடங்கள்.
- தாராபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், வாணியம்பாடி, இராமநாதபுரம், தென்காசி, வேலூர், திருப்பூர், கோவை (தர உறுதி), கடலூர் (விரிவு), மதுரை (தே.நெ), சேலம், தூத்துக்குடி மற்றும் எடப்பாடி ஆகிய 14 கோட்ட அலுவலகக் கட்டடங்கள்.
- சேலம், திருச்சி, திண்டுக்கல், மற்றும் குளித்தலை 4 மண்டல ஆய்வகக் கட்டடங்கள்.
- செய்யாறு, துறையூர், அறந்தாங்கி, நாமக்கல் (தர உறுதி), பாப்பிரெட்டிபட்டி, தேனி (தர உறுதி), மதுரை, முதுகுளத்தூர், அம்பத்தூர், கிருஷ்ணராயபுரம், பாளையங்கோட்டை, சூலூர், பள்ளிப்பட்டு, மணப்பாறை, ஆவுடையார் கோவில், வேதாரண்யம், கமுதி, திண்டுக்கல் (தர உறுதி), சத்தியமங்கலம், உசிலம்பட்டி, சிவகாசி, பொள்ளாச்சி (தர உறுதி), மதுராந்தகம், ஒரத்தநாடு, தோவாளை, தாம்பரம், மயிலாடுதுறை, ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர், தாராபுரம் (தர உறுதி), சிவகிரி, சேலம் மற்றும் எடப்பாடி ஆகிய 33 உட்கோட்ட அலுவலகக் கட்டடங்கள்.
- போடிநாயக்கனூர், மேட்டுப்பாளையம், துறையூர், சேலம், எடப்பாடி, பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி, விழுப்புரம், பெரியகுளம், ஏலகிரி, கோயம்புத்தூர், ஆனைமலை, கொடைரோடு, ஏற்காடு, வேலூர், காரைக்குடி, பள்ளிப்பாளையம், சங்கராபுரம், இராயக்கோட்டை, பாளையம்பட்டி (விருதுநகர் மாவட்டம்), அந்தியூர், மதுரை, திருவையாறு, நாகர்கோவில், திருச்செந்தூர், மேட்டூர், இலுப்பூர், ஆலங்குளம், நத்தம், பரமக்குடி மற்றும் செங்கிப் பட்டி ஆகிய 31 பயணியர் மாளிகைகள்.
- பரங்கிப்பேட்டை, செம்பனார்கோயில், எடப்பாடி, உத்தமப்பாளையம் மற்றும் மருங்காபுரி ஆகிய 5 இடங்களில் பிரிவு அலுவலகங்கள்.
- மலைப்பாளையம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புராதனக் கட்டடங்களுக்கு (பயணியர் மாளிகை) பாதுகாப்பு பணிகள்.

**இரயில்வே பணித் திட்டம்**

- இரயில்வே பணித் திட்டத்தின் கீழ், இரயில்வே கடவுகளில் ஏற்படும் விபத்துகளை தவிர்ப்பதற்காகவும், காத்திருப்பதை தவிர்ப்பதற்காகவும் மாநில அரசும், இரயில்வே அமைச்சகமும், இரயில்வே மேம்பாலம் / கீழ்பாலம் கட்டும் பணிகள், அணுகு சாலை மற்றும் சேவை சாலை பணிகளுக்கான செலவீனத்தை சரிசமமாக ஏற்று, முன்னுரிமை அடிப்படையில் எடுத்து பல்வேறு மாவட்டங்கள் பயன் அடையும் வகையில் ரூ.1,116.94 கோடி செலவில் 52 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

- சுனாமியால் பாதிக்கப்பட்ட கீழ மணக்குடி மற்றும் மேல மணக்குடி கிராமங்களை இணைக்கும் உயர்மட்டப்பாலப்பணி ரூ.21.30 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.
- வெற்றிகரமாக முதல் திட்டத்தினை முடித்தவுடன், உலக வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களின் கடனுதவி பெற்று மேம்பாட்டுத் திட்டங்கள் வகுப்பதற்கு திட்ட ஆய்வு II, M/s. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, சென்னை (IITM) மூலம் நடத்தப்பட்டது. 2,867 கி.மீ நீள சாலை தொடர்கள் ஆய்வு செய்யப்பட்டு பொருளாதார ரீதியான லாப அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்பட்டது.





- மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஒப்புதலின் கீழ், 575 கி.மீ. நீளத்திற்கு சாலைகளை ரூ.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் விரிவான திட்ட அறிக்கை, இந்த திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 572 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்தல், பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு, நிறுவன மேம்பாடு ஆகிய பணிகளை மேற்காள்வதற்காக உலக வங்கி மூலம் US$ 300 மில்லியன் கடன் பெற வழி செய்யும் கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் 28.05.2015இல் கையெழுத்திடப்பட்டது. கடன் ஒப்பந்தம் 10.07.2015 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானங்கள் ஒப்பந்தம் மூலம் 427 கி.மீ. நீளமுள்ள முக்கிய சாலைகளை அகலப்படுத்தி தரம் உயர்த்துதல் மற்றும் சாலை கட்டுமானம் பணிக்கு ரூ.1,705 கோடிக்கு 10 ஒப்பந்தக்கூறுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தமானது சாலை மேம்பாட்டிற்குப்பின் 5 ஆண்டு காலப் பராமரிப்புப் பணிகளையும் உள்ளடக்கியதாகும்.
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–Iஇல் மேம்பாடு செய்யப்பட்ட ஆற்காடு முதல் திருவாரூர் வரையுள்ள சாலை மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையுள்ள 597 கி.மீ சாலையினை வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான சாலைப் பராமரிப்பின் கீழ் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுத் தனியர் கூட்டமைப்பின் கீழ், 145 கி.மீ. நீள சாலைகளை 4 வழித்தட சாலைகளாக அகலப்படுத்தி மேம்படுத்திட ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.
- சாலைப் பணிகள், நிறுவன கொள்திறன் மேம்பாடு (ICE) கூறுகள், சாலைப் பாதுகாப்பு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் (LA), புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு (R&R) செலவு உள்ளடக்கும் திட்டத்திற்கான செலவுக்கு திருத்திய நிருவாக தொகை ரூ.5,171 கோடிக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது

**நிருவாக உட்கட்டமைப்பு மேம்பாடு**

- எடப்பாடி, பெரம்பலூர் மற்றும் செய்யார் கோட்ட புதிய அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டது.
- சாலைகளைப் பராமரிக்க உயரிய தொழில் நுட்பத்துடன் கூடிய புவியியல் தகவல் அமைப்பு, ஒருங்கிணைந்த திட்டம், மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு மற்றும் சாலை மேலாண்மை அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய e–பாதை மென்பொருட்களை நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்கு துவங்கப்பட்டது. மேலும், ரூ.3 கோடி மதிப்பில் இரண்டு நவீன தகவல் சேகரிப்பு உபகரணங்கள் (Advanced Data Collection Equipment) வாங்கப்பட்டது.

❖ ❖ ❖

### உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காக்கும் சட்டத்தின் ஆட்சி! சரித்திரத்தின் சாட்சி!



**காவல்துறை**

- ரூ.163 கோடி செலவில் தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சி கல்லூரி, காவலர் தேர்வு பள்ளிகள் மற்றும் 13 பணியிடை பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் உள்பயிற்சி கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், மகளிருக்கான பாதுகாப்பை உறுதி செய்திட அவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுத்திட 13 அம்ச செயல் திட்டம் அறிவிப்பு.
- காவல் துறையில் 16.01 சதவிகித பெண்கள் பங்கேற்புடன் தமிழகம் முதலிடம். 2012ஆம் ஆண்டில் 1,835 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
- ரூ.72 இலட்சம் செலவில் 26 ஆயுதப்படை தலைமையிடங்கள் மற்றும் 10 தமிழ்நாடு சிறப்புக் காவல்படை தலைமையிடங்களிலும் காவல்துறை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்காக 36 புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள்.
- ரூ.1.32 கோடி செலவில் சேலம் மற்றும் திருநெல்வேலியில் டெட்ரா தொழில்நுட்ப நவீன கட்டுப்பாட்டு அறைகள் (Tetra Based Modern Control Room) நிறுவப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் கோவை மற்றும் மதுரையில் நவீன கட்டுப்பாட்டு அறைகள் நிறுவும் பணி.
- ரூ.30.45 கோடி செலவில் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள காவல் ஆணையரகங்களுக்கு இலக்கு அடிப்படையில் (Digital Based) இயங்கும் காவல் வானொலி தொடர்புத் திட்டம் ஒப்பளிப்பு.
- நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.1 கோடி செலவில் காவல்துறை சிறப்பு அங்காடிகள் சென்னை, மதுரை மற்றும் திருச்சியில் தொடக்கம்.
- தமிழக முதலமைச்சரால் காவலர், தலைமைக் காவலர் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு பொங்கல் தினத்தன்று வழங்கப்படும் பதக்கத்திற்கான மாதாந்திர பதக்கப்படி ரூ.100 லிருந்து ரூ.200 ஆக உயர்வு. மேலும், காவல் வானொலி பிரிவில், காவல் புகைப்படக் கலைஞர் மற்றும் நாய்ப்படை பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு அவர்களது தொழிற்சிறப்பு மற்றும் மாசற்ற பணியை அங்கீகரிக்கும் வகையிலும் தமிழக முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கத்திற்கான பதக்கப்படி இரட்டிப்பாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் குடும்பத்தினருக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி உச்சவரம்பை விட மருத்துவ செலவு அதிகமாகும் போது அதனை ஈடுசெய்ய ரூ.2 கோடி காவல் துறை கருணைக் கொடை நிதியத்திற்கு வழங்கல்.
- ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 11,622 முதல் 16,000 ஆக உயர்த்த சிறப்பு நடவடிக்கை. அவர்களுக்கான தினப்படி ரூ.65லிருந்து ரூ.150 ஆக உயர்வு. மேலும் சென்னைப் பெருநகர ஆணையரகத்தில் இரவுப் பணிக்கான படி ரூ.200 ஆக உயர்வு.
- 117 சிறுவர் மற்றும் சிறுமிகள் குழு அமைப்பு. 2013–2014ஆம் ஆண்டில் மட்டும் ரூ.3 கோடி செலவில் 400 குழுக்கள் அமைத்திட ஒப்பளிப்பு. இக்குழுக்களுக்கான ஆண்டு மானியம் ரூ.66,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்வு.
- சென்னையில் உள்ள காவலர்களுக்கான படைக் குடியிருப்பு ரூ.3 கோடி செலவில் புதுப்பிப்பு.
- கூடங்குளம் அணு மின் திட்டத்திற்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, காவல் துறையினர் மிகவும் கவனமுடன் நிலைமையை கையாண்டு சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு.
- இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் மத்திய அரசு கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி போராட்டக்காரர்களுக்கு எதிராக திறம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டது.
- பயங்கரவாதிகள் மற்றும் மத அடிப்படைவாதிகளிடமிருந்து, தங்களது உயிருக்கு ஆபத்தை எதிர்கொண்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 167 முக்கிய நபர்கள், / முக்கிய பிரமுகர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், ஹட்கோ காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பல்லபள்ளி கிராமத்தில் சட்டத்திற்குப் புறம்பாக வைத்திருந்த 544 எலெக்ட்ரிக் டிடோனேட்டர்கள், 187 ஜெலட்டின் குச்சிகள், 675 கிலோ அமோனியம் நைட்ரேட் பறிமுதல் செய்யப்பட்டது.
- கொளத்தூர் காவல் நிலைய (சேலம்) எல்லைக்குட்பட்ட பாலமலை கிராமத்தில் கஞ்சா பயிரிடப்பட்டு (ரூ.1.20 இலட்சம் மதிப்புள்ள சுமார் 120 கிலோ எடை கொண்டது) இருந்தது காணப்பட்டது. தடை செய்யப்பட்ட அப்போதைப் பொருளானது கைப்பற்றப்பட்டு எதிரிகள் கைது செய்யப்பட்டனர்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கடந்த ஒரு வருட காலத்தில் மத அடிப்படைவாதிகள் கைது செய்யப்பட்ட பணிகளில் ஈடுபட்ட 251 காவல் பணியாளர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.2.65 கோடி வெகுமதி அளித்தார்.
- 2,27,577 கள்ளச் சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு 29,292 பெண்கள் உள்பட 2,30,699 குற்றவாளிகள் கைது.
- ரூ.22.96 கோடி மதிப்பிலான 57.41 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிப்பு.
- ரூ.5.37 கோடி மதிப்பிலான 5.38 இலட்சம் லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது.
- ரூ.13.90 இலட்சம் மதிப்பிலான 46,354 லிட்டர் கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு.
- ரூ.21.23 கோடி மதிப்பிலான 21,23,529 இந்திய தயாரிப்பு அயல் நாட்டு மதுபானம், போலி மற்றும் அண்டை மாநில மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது.
- மதுவிலக்கு குற்றத்தில் ஈடுபட்ட 7 டிராக்டர்கள், 35 லாரிகள், 9 ஜீப்கள், 109 வேன்கள், 506 கார்கள், 131 ஆட்டோக்கள் மற்றும் 3,800 மோட்டார் சைக்கிள்கள் உட்பட மொத்தம் 4,597 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.



- மதுவிலக்கு குற்றத்தில் ஈடுபட்ட 2,140 வாகனங்கள் ஏலத்தில் விடப்பட்டு ஏலத்தொகை ரூ.3.44 கோடி அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
- 636 தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக்காவல் சட்டம் 14/1982இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
- 637 மதுவிலக்கு தொடர் குற்றவாளிகள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 52–Eஇன் கீழ் ஊரை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
- மொத்தம் ரூ.6.31 கோடி நீதிமன்ற அபராதமாக செலுத்தப்பட்டுள்ளது.
- 2010ஆம் ஆண்டின் முடிவில் 71ஆக இருந்த கரும்புள்ளி கிராமங்களை 31.10.2013இல் 12 ஆக குறைக்கப்பட்டது. கரும்புள்ளி கிராமங்களே இல்லாத நிலையினை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- விஷச்சாராய சாவுகள் ஏதும் நிகழவில்லை.
- குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் வலைப்பின்னல் திட்டம் (CCTNS) தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.5 கோடி ஒப்பளிப்பில் 1,000 புதிய கணினிகள்.
- தமிழகத்திலுள்ள 1,482 காவல் நிலையங்களும் வலைதள அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டு காவல் நிலைய தகவல்கள் சென்னையில் உள்ள மாநில தகவல் தொகுப்பு மையத்திலுள்ள பிரதான கணினியில் தொகுக்கப்படுகிறது.
- தமிழக காவல்துறை பெருமையடையும் வகையில், குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைதள அமைப்பினை செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்கிறது.
- மாநில குற்ற ஆவண காப்பகத்தில் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் 34 உருவப்படங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் 5 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் உருவப்படம் துல்லியமாக பொருந்தியுள்ளது.
- இதுநாள் வரையில் பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டுவந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் பற்றிய விவரங்களை மின் ஆளுகை திட்டத்தின் கீழ், கணினியில் பதிவு செய்யும் பொருட்டு மாநில குற்ற ஆவண காப்பகத்தின் சொந்த முயற்சியால் “HISS” மென்பொருள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் வாயிலாக பல்வேறு சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தொடர்புடைய (Property Offences) 308 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளின் விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.



- குற்றவழக்குகளில் 2,483 பேர் கைது செய்யப்பட்டு ரூ.31.43 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன.
- உரிமம் இல்லாத புதிய படங்களின் திருட்டு வீடியோ குறுந்தகடுகளின் விற்பனையை முற்றிலும் ஒழிக்க அனைத்து வீடியோ கடை உரிமையாளர்களுடனும் சந்திப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு 3,127 வழக்குகளைக் கண்டுபிடித்து 3,181 குற்றவாளிகளைக் கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து 3,166.385 கிலோ உலர் கஞ்சா, 1.534 கிலோ ஹெராயின், 1 கிலோ மெத்தகுலோன், 1.520 கிலோ ஹாசிஸ் ஆயில், 2.600 கிலோ எப்பிட்ரின், 800 கிராம் கொகெய்ன் ஹெராயின், 1.015 கிலோ பிரவுன் சுகர் போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், 389.50 கிலோ கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. மொத்த மதிப்பு ரூ.7.07 கோடி.
- குண்டர் தடுப்பு சட்டத்தில் 41 போதைப் பொருள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.
- நெடுஞ்சாலை ரோந்துப்பணியை வலுப்படுத்தும் பொருட்டு 138 ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.16.35 கோடி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது.
- சென்னை காவல் கான்வாய் பணி, ரோந்துப் பணிகளுக்கு என ரூ.22.95 கோடி செலவில் 326 வாகனங்கள் வாங்கி வழங்கப்பட்டன.
- ரூ.9.26 இலட்சம் செலவில் தமிழக அதிரடிப் படைக்கு ஒரு தார் ஈப்பு ஒன்றும், முதலமைச்சரின் பாதுகாப்புப் பணிக்கு ரூ.2.16 கோடி செலவில் 19 இன்னோவா வாகனங்களும், நுண்ணறிவும் பிரிவுக்கு ரூ.55 இலட்சம் செலவில் புல்லட் புரூஃப்ஸ்கார்பியோ ஈப்பு ஒன்று வாங்கி வழங்கப்பட்டன.
- ரூ.88.40 கோடி செலவில் காவல்துறை நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ரூ.45.48 இலட்சம் மதிப்பில் புதியதாக 6 காவல் நகரம் / மாவட்டங்களில் தொடங்கிய ஆள் கடத்தல் தடுப்புப் பிரிவுக்காக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. 1,454 மாணவ, மாணவியர் பரிசு பெற்றுள்ளனர்.
- சிறப்பு உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்கு ஆண்டுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக்கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ இதில் எது குறைவோ அந்த தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது.
- 301 மாணவர்களுக்கு ரூ.46 இலட்சம் வழங்கப்பட்டு பயன். சிறப்பு கல்வி உதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.25,000 ஆகவும், விடுதிக் கட்டணம் சேர்த்தும் வழங்கப்படும் என அறிவிப்பு.
- காவல்துறையினர் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறந்தால் ரூ.5 இலட்சம், நிரந்தர உடல் ஊனத்திற்கு ரூ.2 இலட்சம், ஒரு கண், பாதம், விரல்களை இழந்தால் ரூ.1 இலட்சம், தீக்காயம், துப்பாக்கி சூடு (ம) எலும்புமுறிவுகளுக்குரூ.50,000 சிறுகாயத்திற்கு ரூ.10,000 வழங்கல். இதுவரை 125 நபர்களுக்கு ரூ.96.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலுள்ள பணியாளர்களுக்கு வழங்கி வந்த தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணை. ரூ.33.40 இலட்சம் ஒதுக்கீட்டில் 28 பயனாளிகள் இதுவரை பயன்பெற்றுள்ளனர்.
- ரூ.14 கோடி ஆண்டு செலவினத்தில் காவலர்களுக்கு அவர்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகின்றன.
- மறைந்த காவல் ஆளிநர்களின் 514 குடும்பத்தாருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.13.39 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- காவலர்களின் சீருடை தையல் கட்டணம் ஜோடி ஒன்றுக்கு ரூ.250 லிருந்து ரூ.450 ஆக உயர்வு.
- போக்குவரத்தை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள 6,500 காவல் துறையினருக்கு கோடைகால மாதங்களான ஏப்ரல் முதல் ஜூலை வரை எலுமிச்சம் பழச்சாறு வழங்க ஏதுவாக ரூ.95,16,000க்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.
- அனைத்து காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை இடர்படி மாதந்தோறும் ரூ.300லிருந்து ரூ.400 ஆகவும், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.350லிருந்து ரூ.450 ஆக உயர்வு.
- சிறப்பு தனிப்படையில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடர்படி ரூ.2,000லிருந்து ரூ.3,000 ஆக உயர்வு.
- உணவுப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையில் பணியாற்றும் காவலர்கள் முதல் தலைமை காவலர்கள் வரை மிகை நேர படியினை நாள் ஒன்றிற்கு ரூ.200 ஆக உயர்வு.
- காவலர் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் காவல் ஆளிநர்களுக்கான பண வெகுமதி ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.2 இலட்சம் ஆக உயர்வு. மேலும், போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் குழுக்களில் அனைவருக்கும் தலா ரூ.50,000 வழங்க ஆணை.
- மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற 56ஆவது அகில இந்திய காவல் பணி திறன் போட்டிகளில் சுழல் கோப்பை மற்றும் பதக்கங்கள் வென்ற காவல் ஆளிநர்களுக்கு ரூ.61.50 இலட்சம் வழங்கி ஆணை.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை காவலர் தேர்வில் ஆதரவற்ற விதவைகளுக்கு, பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டில் 10 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து ஆணை.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் 2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா) தேர்வில் இணையவழி மூலம் விண்ணப்பம் அளிப்பதை முதன் முறையாக அறிமுகப்படுத்தி உள்ளது.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தால் 984 + 94 (பின்னடைவு) காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா) (ஆண்கள் மற்றும் பெண்கள்) பணியிடங்களை நிரப்ப எழுத்து தேர்வு நடத்தப்பட்டு 1,632 நபர்களுக்கு நேர்முகத் தேர்வு 03.09.2015 முதல் 15.10.2015 வரை நடைபெற்றது. நீதிமன்ற ஆணைக்கிணங்க, மேலும், 37 நபர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வில் தேர்வு செய்யப்பட்ட 1,078 சார்பு ஆய்வாளர்கள் அடங்கிய தற்காலிக தேர்வுப் பட்டியல் 15.11.2015 அன்று வெளியிடப்பட்டது.
- 2013–2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படைக்கு 10,099 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்வினை நடத்தியுள்ளது. அதன் பின்னர் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை உறுப்பினர்களை தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளில் காவலர்களாக பணியமர்த்த ஏதுவாக எழுத்து தேர்வு 29.11.2015 அன்று நடத்தப்பட்டது. இத்தேர்வில் 8,500 தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை உறுப்பினர்கள் இரண்டாம் நிலை காவலர் பதவிக்கு (தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்திற்காக சென்னை எழும்பூரில் புதிதாக கட்டப்பட்ட அதி நவீன கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி மூலம் 24.05.2015 அன்று திறக்கப்பட்டு, 02.06.2015 முதல் செயல்பட்டு வருகிறது.
- அரசு சட்டக் கல்லூரியிலுள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கிட ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு.
- 10 மாவட்டங்களில் புதிதாக போக்குவரத்து காவல் நிலையங்கள் அமைத்தல்.
- திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளுக்கு சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் பதவிகள் தோற்றுவித்தல்.
- ரூ.74.40 இலட்சம் செலவில் 31 மாவட்டங்களில் உள்ள காவல் கண்காணிப்பாளர்களுக்கு உதவும் பொருட்டு 31 சட்ட ஆலோசகர் பதவிகள் வழங்க ஆணை.
- திருப்பூர் மாவட்டம், சிறப்பு பிரிவிற்காக (ஒரு விரல் ரேகைப் பிரிவு, புகைப்படப்பிரிவு, நாய்ப்படைப்பிரிவு, சுருக்கெழுத்துப்பிரிவு, காவல் தொலைத்தொடர்பு பிரிவு, நடமாடும் தடய அறிவியல் பிரிவு) புதிதாக பதவிகள் தோற்றுவித்தல்.





- பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மங்களமேட்டில் புதிதாக உட்கோட்டம் அமைத்தல்.
- சீர்காழி மற்றும் மயிலாடுதுறையில் இரண்டு நிரந்தர மதுவிலக்கு சோதனைச் சாவடி மற்றும் நடமாடும் சோதனைச் சாவடியும் அமைத்தல்.
- திருச்சி மாநகரத்திற்கு வழங்கப்பட்ட 2 காவல் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை நிலை உயர்த்தி காவல் ஆய்வாளர்கள் பதவிகளாக ஸ்ரீரங்கம் மற்றும் தங்கமலை குற்றப்பிரிவிற்கு வழங்கிட அரசாணை.
- தமிழ்நாடு காவல்துறையில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக 9 புதிய பதவிகள் (1 காவல் துணைக் கண்காணிப்பாளர், 1 காவல் ஆய்வாளர், 2 உதவி காவல் ஆய்வாளர்கள், 5 காவலர்கள்) தோற்றுவிப்பு.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 12 புதிய குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப்பிரிவு தோற்றுவிப்பு.
- விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் காவல் நிலையம் ஆய்வாளர் தரத்திற்கு உயர்வு.
- மாநிலங்களுக்கிடையே 37 சோதனைச் சாவடிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று நிரந்தர சோதனைச் சாவடிகளும் தோற்றுவிப்பு.

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் போக்குவரத்து நுண்ணறிவுப்பிரிவு வழங்கி ஆணை.

- 15 மாவட்டங்களில் உள்ள ஆயுதப்படைப் பிரிவிற்கு கூடுதலாக 32 ஆயுதப்படைப்பிரிவு நிறுமங்களும் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வத்திராயிருப்புக்கு ஒரு ஆயுதப்படை நிறுமமும் வழங்கி ஆணை.

- 7 காவல் ஆய்வாளர்கள் மற்றும் 29 காவல் உதவி ஆய்வாளர்கள் தோற்றுவிப்பு.

- மதுரை மாநகர காவல் அதிகார எல்லையை விரிவுபடுத்தி மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளை இணைத்து அறிக்கை.

- திருப்பூர் மாவட்டத்திற்கு இரண்டு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தோற்றுவிப்பு.

- காவல் நிலையங்களில் பணிபுரியும் காவல் அதிகாரிகள், சமூக அலுவலர் (Liaison Officer) என பெயரிடப்பட்டு கிராம பஞ்சாயத்து தலைவர் மற்றும் பொதுமக்களிடம் சமூக உறவு கொண்டு அனைத்து சட்டம் ஒழுங்கு தகவல்களை சேகரிக்க அரசாணை.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கருமத்தம்பட்டியைக் மையமாகக் கொண்டு புதிய உட்கோட்டம் தோற்றுவிப்பு.

- தமிழக அரசு 2012–2013 மற்றும் 2013–2014 ஆண்டுக்கு நுண்ணறிவுப் பிரிவின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் காவல் ஆய்வாளர்களுக்கு வினைத்திறமிக்க கைபேசிகள் (Smart Phones) மற்றும் காவல் துறையில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் காவல் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் அனைவருக்கும் CUG SIM கார்டுகள் மற்றும் மதுவிலக்கு அமல்பிரிவு தலைமையிடத்தில் இலவச அவசர அழைப்பு வழி (Prohibition help line) வழங்குவதற்கு ரூ.3.77 கோடி மதிப்பில் நிதி ஒப்பளிப்பு.

- ரூ.432.52 கோடி செலவில் பல்வேறு பகுதிகளில் காவல்துறைக்கு புதிய கட்டடங்கள், குடியிருப்புகள் மற்றும் வளாகங்கள்.

- 40 வயது முடிவடைந்த காவல் ஆளிநர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அரசாங்க மருத்துவமனைகளில் பண செலவில்லா முழு உடல்கூறு பரிசோதனை செய்ய ஆணை.

- காவல் நிலையங்களுக்கு ஒதுக்கப்படும் நிரந்தர முன் பணம் ரூ.5,000லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு.

- சென்னை பெருநகர் காவல் ஆணையரகத்தில் பணிபுரியும் அனைத்து காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.100லிருந்து ரூ.200 ஆகவும் அதே போல், சென்னை அல்லாத பிற இடங்களில் தற்போது வழங்கப்பட்டுவரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.75லிருந்து ரூ.150 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- சிறப்பு தனிப்படையில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கடின படி ரூ.900 ஆக வழங்க அறிவிக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட 6,805 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு .

- தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையுடன் இணைந்த, தனிப்பிரிவு பயிற்சிப் பள்ளியில் முக்கிய நபர்கள் பாதுகாப்பு, நுண்ணறிவு விவரங்கள் தொடர்பாக 1,297 அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் 100 போதைப் பொருள் விழிப்புணர்வு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.

- மராட்டிய மாநிலத்திலுள்ள புனே நகரில் பேரிடர் மீட்பு மையம் அமைக்கப்பட்டு 06.02.2014 முதல் செயல்படுகிறது. தமிழ்நாட்டின் மாநில தகவல் மையத்திலிருந்து பேரிடர் மீட்பு மையத்திற்கு தகவல் அனுப்பப்பட்டு அது வெற்றிகரமாக செயல்படுவதை உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதல் முறையாக, மாநில எல்லைக்கப்பால், பேரிடர் மீட்பு மையத்திற்கு தகவல்களை அனுப்பியது தமிழக காவல் துறை மட்டுமே ஆகும்.

- 24.02.2014 நாள் முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட (Urban Common Service Center) நகர்புறப் பொது சேவை மையத் திட்டத்தின் கீழ், குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் வலைப்பின்னல் திட்டத்திலுள்ள பொதுமக்கள் நுழைவு வாயில் (Citizen Portal) பயன்படுத்தும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது.



- 'சென்னை மாநகரத்திலுள்ள சாத்தன்காடு காவல் நிலையத்தில் நாட்டிலேயே முதல் முறையாகக் குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைப்பின்னல் திட்டத்தின் கீழ், வி.சாட் இணைப்பு ஏற்படுத்தப்பட்டு 25 காவல் நிலையங்கள் வி.சாட் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

- நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகள்: 2011 முதல் செப்டம்பர் 2014 வரையிலான கால கட்டத்தில், சிறப்பு இலக்குப் படையானது மாவோயிஸ்டுகளுக்கு எதிராக 3 செயலாக்க (ஆபரேசன்) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது மற்றும் அவற்றில் தற்போது நடைபெற்று வரும் "ஆபரேசன் சேரம்பாடி" எனப்படும் மூன்றாவது செயலாக்க நடவடிக்கை திட்டமானது நீலகிரி மாவட்டத்தில் கேரள, கருநாடக எல்லைகளை ஒட்டியுள்ள வனப்பகுதிகளில் கடந்த 14.02.2013 முதல் இடைவெளியின்றி தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது.

  - 28 மதுவிலக்கு சோதனைச்சாவடிகளுக்கு தற்காலிகக் கட்டடம் (Pre-fabricated structure) அமைக்க ரூ.1.33 கோடி நிதி ஒப்பளித்து ஆணை.

  - எல்லையோர 24 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளுக்கு ரூ.1.35 கோடி செலவில் தலா ஒரு நான்கு சக்கர வாகனம் (Bolero) வழங்கப்பட்டுள்ளது.

  - காவல் துறை நவீனப்படுத்துவது தொடர்பாக 2013–2014ஆம் ஆண்டில் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ரூ.107.85 கோடி (மத்திய அரசு பங்கு ரூ.64.71 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.43.14 கோடி) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- தமிழக அரசு 01.04.2014 முதல் 31.12.2014 வரை கட்டடங்கள்/ காவல் நிலையங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.1,06,79,65,290/– மதிப்பில் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது.

- குற்றப் பிரிவு, குற்றப்புலனாய்வு பிரிவு, கணினி வழி குற்றங்கள் கண்டுபிடிப்பு பிரிவினை வலுப்படுத்த வன்பொருள் மற்றும் மென்பொருள் வாங்க நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை.

- தமிழ்நாட்டில் காவல்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஓய்வு பெற்ற பணியாளர்கள்,

அவர்தம் குடும்பத்தினர்களும் மற்றும் இறந்து போன காவல்துறை பணியாளர்களின் குடும்பத்தினர்களும் பயனடையும் விதமாக ஆவடி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் சிறப்பு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 44 இடங்களில் பல்முனை விற்பனை அங்காடிகள் துவங்க மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து 32 மாவட்டங்களிலும் (ஆணையரகங்கள் உட்பட) 12 தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளிலும் ஆக மொத்தம் 44 இடங்களில் பல்முனை விற்பனை அங்காடிகள் துவங்க ரூ.6,55,60,000 ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.



- இணையதளம் மூலமாக கால அவகாச நீட்டிப்பு, வெளியேறுதல், திரும்பிச் செல்லும் நுழைவிசைவு பெறுவதற்கு ஏதுவாக, இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் தொடங்கி வைக்கப்பட்ட குடிபெயர்தல் நுழைவிசைவு பெற்ற அந்நிய நாட்டவர் பதிவு மற்றும் கண்டுபிடித்தல் முறையானது (IVFRT) 01.12.2013 முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 01.04.2015 முதல் 31.12.2015 வரையில், இணையதளம் வாயிலாக அயல்நாட்டவர் அளித்த 3,718 கருத்துருக்கள் உரிய நடவடிக்கைக்காக தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- 2015ஆம் வருடத்தில் ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரை 2,512 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,518 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். சுமார் 10,15,087 தமிழ் மற்றும் இதர மொழி குறுந்தகடுகள், ஆபாச குறுந்தகடுகள், ரூ.7,96,16,170/– மதிப்பிலான 907 கணினிகள் மற்றும் அதன் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டது. ரூ.2,57,30,090/– மதிப்பிலான போலி தயாரிப்புகள் மீது 218 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.
- ரூ.25,76,57,469/– மதிப்பிலான 165 ஜீப்புகள், 1,249 இருசக்கர வாகனங்கள், 12 ஆல்டெரெய்ன் ஜீப்புகள், 12 ஆல்டெரெய்ன் இருசக்கர வாகனங்கள், 12 புரொப்பகண்டா வேன்கள், 2 டெம்போ டிராவலர் வேன், 2 தண்ணீர் லாரி, 1 ரெக்கர், 8 பேருந்து, 20 சிற்றுந்து, 2 ஆம்புலன்ஸ், 1 வஜ்ரா, 1 வாட்டர் கேன்ஆன் மற்றும் 1 லாரி என மொத்தம் 1,488 வாகனங்கள் காவல்துறை பயன்பாட்டிற்காக வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
- மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை அமைக்க நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு ரூ.11.43 கோடி, முதல் வருட தவணையாக வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- கடலோர பாதுகாப்பு திட்டம் நிலை–2ன்படி விரிவாக்கம் சம்மந்தமாக 11 கடலோர காவல் நிலையங்கள் வழங்க பணியிடங்கள் வழங்கப்பட்டு ரூ.697.40 இலட்சம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.



- மாநில அரசு காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டிற்காக வாகனங்கள், தொலைத்தொடர்புக் கருவிகள் மற்றும் பாதுகாப்பு கருவிகள் வாங்குவதற்காக ரூ.50.10 கோடிக்கான நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு அனுமதியினை வழங்கியுள்ளது.

**குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

- ரூ.5 இலட்சம் செலவில் இயக்குநரக பிரிவு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 11 கணினிகள்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிலை–2, அரசு உதவி குற்ற வழக்கு நடத்துநர்களாக 23 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம்.
- ரூ.5.11 கோடி செலவில் குற்ற வழக்கு தொடர்வு இயக்ககத்தைச் சார்ந்த 390 குற்றவியல் வழக்குரைஞர்களின் பயன்பாட்டிற்கென உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை இணையம் மூலம் பெறும் வசதிகள், கணினிப் பயிற்சி வழங்குதல், மடிக்கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் வழங்குதல், சட்டப் புத்தகங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பதின்மூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி, ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத்திலிருந்து இவ்வியக்ககத்தைச் சார்ந்த 390 குற்றவியல் வழக்குரைஞர்களுக்கு அவர்களுடை திறமை மற்றும் அறிவுத் திறனை பெருக்கிக் கொள்ளும் வகைக்காக 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டுகளின் செயல்திட்டம் மூலம் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புரைகளை இணையம் மூலம் பெறும் வசதிகள், கணினிப் பயிற்சி வழங்குதல், மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வழங்குதல், சட்டப்புத்தகங்கள் வழங்குதல் ஆகியவற்றிற்காக ரூ.5.10 கோடி செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.
- 2014–2015 ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தில் இவ்வியக்ககப் பிரிவு அலுவலகங்களுக்கு ரூ.6.71 இலட்சத்தில் ஏழு துல்லிய படிப்பெருக்கிகள், இணை இயக்குநர் (நிருவாகம்) அவர்களின் பயன்பாட்டிற்காக ரூ.5.86 இலட்சம் செலவில் ஒரு ஈப்பு வாகனம். மேலும், 15 கணினிகள் வாங்குவதற்காக ரூ.8.67 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல்.
- 2015ஆம் ஆண்டில் குற்ற வழக்குத் தொடர்வுத்துறையில் காலியாக இருந்த இணை இயக்குநர் (நிருவாகம்) மற்றும் இயக்குநர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் ஆண்டிற்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலின்படி 16 அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை–1லிருந்து குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர் / அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- ரூ.1,67,953/– செலவில் சென்னை உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பிற்காக சுழல் கண்காணிப்பு கேமரா நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.9,23,020/– செலவில் மாநிலத்தில் உள்ள 30 மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்கு இணையதள தொடர் இணைப்பு வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.9,08,600/– செலவில் சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்கு கட்டுகளை எடுத்து செல்வதற்காக 2 டாடா ஏஸ் வாகனங்கள் வாங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.4,36,23,318/– செலவில் மாநிலத்தில் உள்ள 695 நீதியரசர்களுக்கு மடிக்கணினி மற்றும் லேசர் அச்சுப்பொறிகள் வாங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.7,60,000/– செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்திற்கு 12 கணினி மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.12,11,10,000/– செலவில் சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள 60 நீதியரசர்களின் அலுவல் பயன்பாட்டிற்கு 60 ஸ்கோடா வாகனங்கள் வாங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டது.
- ரூ.9,97,353/– செலவில் திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு இணையதள இணைப்பு (LAN) வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டது.

**தடய அறிவியல் துறை**

- தடய அறிவியல் துறை கணினிமயமாக்கம்.
- தடய அறிவியல் துறையின் துப்பாக்கி நிபுணரின் கருத்தின் அடிப்படையில் தில்ஷன் கொலை வழக்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- மாண்புமிகு அமைச்சர் மரியம்பிச்சை அவர்களின் மரணம் பற்றிய காரணம் தடய அறிவியலாளரின் நுண்ணிய மதிநுட்பத்தால் தீர்வு காணப்பட்டது.
- பம்பாயில் நடந்த தடய அறிவியலாளர் அகில இந்திய மாநாட்டில், "குழந்தை பாலியல் வன்முறை மற்றும் கொலைக் குற்றம் புரிந்தவரை மரபணு சோதனை மூலமாக அடையாளம் காணல்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரையாகத் தேர்வு.
- தடய அறிவியல் துறையில் 50 பணியாளர்கள் வேலைவாய்ப்பகம், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.
- கொலை, பாலியல் வன்முறை மற்றும் இதர குற்ற வழக்குகளில் சேகரிக்கப்படும் இரத்தக் கறை மனித அல்லது மிருக இரத்தமா என்றும் அதனுடைய வகை என்ன என்றும் விரைவில் ஆய்வுசெய்துகண்டறிவதற்கெனகோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் குருதி வடிநீரியல் ஆய்வு பிரிவுகளை நிறுவுவதற்காக 2012–2013ஆம் நிதியாண்டில் ரூ.53.25 இலட்சம் அரசு ஒப்பளிப்பு.
- அடையாளம் தெரியாத மற்றும் உருக்குலைந்த உடல் யாருடையது என அடையாளம் காணுவது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் சென்னை தடய அறிவியல் துறை மரபணு ஆய்வு பிரிவின் ஆய்வு திறனை மேம்படுத்துவதற்காக "மைய விலக்கு" கருவி வாங்க 2014–2015ஆம் நிதியாண்டில் அரசு ரூ.40 இலட்சம் ஒப்பளிப்பு.
- குற்றங்களை விரைவாக புலனாய்வு மேற்கொண்டு கடைபிடிக்க ஏதுவாக தரமான தடய அறிவியல் பணிகளை வழங்க பகுதி–2 மற்றும் காவல் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், தடய அறிவியல் துறையை நவீனப்படுத்த அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.
- தடய அறிவியல் துறையின் மரபணு பிரிவில் கடந்த 2015ஆம் ஆண்டு கடலோர விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி அதிலிருந்த மூன்று விமானிகளின் நிலைமை அறியப்படாதிருந்த நிலையில், சில எலும்புத் துண்டுகள் கிடைக்கப்பெற்று மரபணு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் விமான விபத்தில் இறந்ததை உறுதி செய்தது.
- தடய அறிவியல் துறையில் தடய பொருட்களின் உலோக விகிதாசாரத்தை துல்லியமாகக் கண்டறிய ஊடு கதிர் உடன் ஒளிர்வு பகுப்பி கருவி, வெடிப்பொருட்களின் அளவைக் கணக்கிட அயனி அலகிடும் கருவி, சர்ச்சைக்குரிய உரையாடல்களில் பேசிய நபர்களை கண்டறிய தடய குரலியல் ஆய்வகம், மரபணு சோதனைக்குட்படுத்தப்படவிருக்கும் எலும்புகளை பாதுகாப்பதற்கு இரண்டு குளிர் பதன அறை, போதைப் பொருட்களை துல்லியமாக கண்டறிவதற்கான வாயு நிறவியல் நிறைமானி மற்றும் தலைமை ஆய்வகத்தின் 15 பகுப்பாய்வு பிரிவுகளைக் கண்காணிப்பதற்கு 18 மின்னணு கண்காணிப்பு சாதனங்கள் ஆகியவை ரூ.1 கோடியே 97 இலட்சம் செலவில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்**

- தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமானது இந்நாள் வரை 1,971 வீடுகள் உங்கள் சொந்த இல்லத் திட்டத்தின் கீழும், 39,674 காவல் வாடகை குடியிருப்புகள், 1,055 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை ஊழியர் குடியிருப்புகள், 1,075 சிறை துறை ஊழியர்கள் குடியிருப்புகள், 620 காவல் நிலையங்கள், 573 ஓய்வறைகள், 15 மாவட்ட காவல் அலுவலகங்கள், 12 ஆயுதப்படை வளாகங்கள், 19 துயில் கூடங்கள், 152 நாய் பட்டறைகள், 18 சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலையக் கட்டடங்கள், 5 சிறப்பு பிரிவு சிறப்பு புலனாய்வுத் துறை காவல் நிலையக் கட்டடங்கள், 5 நவீன கட்டுப்பாட்டு அறைகள், 4 மண்டல தடய அறிவியல் துறை கட்டடங்கள், 20 ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறைக் கட்டடங்கள், 4 காவல் துறை துணை தலைவருக்கான சரக அலுவலகங்கள், 4 காவல் துறை தலைவருக்கான மண்டல அலுவலகங்கள் மற்றும் 4 மாநகர காவல் அலுவலகங்களும் கட்டி முடித்துள்ளன.



- உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ், மேலக்கோட்டையூரில் ரூ.456 கோடி மதிப்பிலான 2,673 வீடுகள் கட்டப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
- 11,496 குடியிருப்புகள் ரூ.896.20 கோடி செலவிலும், 290 காவல் நிலையங்கள் ரூ.123.01 கோடி செலவிலும் மற்றும் 160 இதர கட்டடங்கள் ரூ.186.39 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

- வீர, தீர செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) 2012ஆம் ஆண்டில் 5 பணியாளர்களுக்கும் மற்றும் 2013ஆம் ஆண்டில் 3 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது. இப்பதக்கம் பெறுவோருக்கு மாதம் ரூ.500 பணப்பயன்.
- தமிழ்நாடு முதலமைச்சரின் நேர்த்திமிகுந்த செயலுக்காக தீயணைப்புத் துறையினருக்கு வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கை 3லிருந்து 6ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை மற்றும் தமிழ்நாடு விரல் ரேகைப்பிரிவு அலுவலர்கள் சிறப்பாக பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையில் மற்றும் பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்களுக்கு வழங்கப்படும் பதக்கப்படி இரட்டிப்பாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் கோட்டம், சின்னசேலம், மதுரை கோட்டம், டி.கல்லுப்பட்டி மற்றும் திருநெல்வேலி கோட்டம், ஆலங்குளம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைப்பு.
- ரூ.97.97 இலட்சம் செலவில் சிவகங்கை மற்றும் ஊட்டியை தலைமை இடமாகக் கொண்டு புதிய கோட்டங்கள்.
- சென்னை மாநகரப் பயன்பாட்டிற்காக ரூ.45.70 கோடி செலவில் 54 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வானோக்கு உயர்வு ஏணி கொண்ட ஊர்தி ஒன்று மற்றும் 101 மீட்டர் உயரம் வரை நீளக்கூடிய வானோக்கி உயர ஏணி கொண்ட ஊர்திகள் இரண்டு கொள்முதல்.
- ரூ.3.20 கோடி செலவில் மாநகரங்களின் உபயோகத்திற்கு 9 மேம்படுத்தப்பட்ட நவீன இரக நீர்தாங்கி வண்டிகள், உயர் அழுத்த பம்ப் பொருத்தப்பட்ட விரைந்து செல்லும் திறன் கொண்ட 8 சிறிய இரக நீர்தாங்கி வண்டிகள், வெட்டும் விரிக்கும் திறன்கள் ஒருங்கிணைந்த 22 கோம்பி கருவிகள்.
- ரூ.96 இலட்சம் செலவில் அம்பத்தூர், திருச்சி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 4 சிறிய நுரைத் தகர்வு ஊர்திகள்.
- ரூ.71 இலட்சம் செலவில் துறையின் பயன்பாட்டுக்காக 14 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள்.
- தீயணைப்போர் பதவியில் ஏற்படும் காலியிட மதிப்பீட்டினை தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்திற்கு நேரிடையாக அளிக்க இயக்குநருக்கு அதிகாரம்.
- பணியாளர்களின் உணவுக் கட்டணமானது நாள் ஒன்றிற்கு சென்னையில் பணிபுரிபவர்களுக்கு ரூ.80 லிருந்து ரூ.100 ஆகவும் மற்றும் புறநகரில் பணி புரிபவர்களுக்கு ரூ.55 லிருந்து ரூ.75 ஆகவும் உயர்த்தப்பட்டு, பின்னர் காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக சென்னையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.100 லிருந்து ரூ.200 ஆகவும் மற்றும் பிற பகுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.75 லிருந்து ரூ.150 ஆகவும் உயர்வு.
- காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக உதவிக் கோட்ட அலுவலர் நிலை வரை உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ.180லிருந்து ரூ.400 ஆகவும் மற்றும் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி ரூ.210லிருந்து ரூ.450 ஆகவும் உயர்வு.
- மோப்பநாய்ப் படைப் பிரிவிலுள்ள மோப்ப நாய் ஒவ்வொன்றிற்கும் உணவுக் கட்டணம் நாளொன்றிக்கு ரூ.100லிருந்து ரூ.200 ஆக உயர்வு. மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் ரூ.250 லிருந்து ரூ.300 ஆக உயர்வு.



- "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ், வீடுகள் பெற காவல்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் தகுதியுடையவர்களாக சேர்த்து ஆணை.
- ரூ.28 கோடி செலவில் தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயிலிருந்து பாதுகாக்கும் 1,980 ஜோடி தற்காப்பு உடைகள்.
- ரூ.5.99 கோடி மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறைத் தலைமையகத்திற்கு புதிய கட்டடம் உருவாக்கம்.
- தீயணைப்போர் ஓட்டி மற்றும் இயந்திரக்கம்மியர் ஓட்டுநர் பதவிகளில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதில் இருந்து தேக்க நிலையினை களையும் வகையில் 165 இயந்திரக்கம்மியர் ஓட்டுநர் பதவிகள் நிலைய அலுவலர் (போக்குவரத்து) பதவியாக தரம் உயர்வு.
- 791 நபர்கள் தீயணைப்போராக பணி நியமனம்.
- பல்பொருள் அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் பொருட்களை பெறும் சலுகையினை காவல்துறைப் பணியாளர்களுக்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களும் பெற்றிட ஆணை நீட்டிப்பு.
- கோட்ட அலுவலர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்களுக்கான குழுக் காப்பீட்டுத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்வு.
- பணியின்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு பணியாளர்களுக்கான குழுக் காப்பீடு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகை ரூ.1இலட்சத்திலிருந்து ரூ.2இலட்சமாக உயர்வு.



- ரூ.92.12 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தின் பயன்பாட்டிற்கு உரிய மீட்பு உபகரணங்களுடன் 4 பிக் அப் வேன்கள்.
- ரூ.9.50 இலட்சம் செலவில் மூச்சுக் கருவிகளுக்கு பிராணவாயு நிரப்புவதற்கு தேவைப்படும் "மூச்சு காற்று நிரப்பும் கருவி" (Breathing Air-Compressor) ஒப்பளிப்பு.
- கோட்ட அலுவலர் என்ற பதவிப் பெயரானது "மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 550 தீயணைப்போர்களுக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பயிற்சி அளித்திட ரூ.21.29 இலட்சம் ஒப்பளிப்பு.
- இனி வருங்காலங்களில், வீரதீரச் செயலுக்கான "தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணி பதக்கம்" (அண்ணா பதக்கம்) பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பதக்கப் படி ரூ.500க்கு பதிலாக ரொக்க பரிசாக ரூ.5 இலட்சம் வழங்கிட உத்தரவு.
- துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம், மதுரவாயல் மற்றும் மேடவாக்கம் ஆகிய 5 இடங்களில் மொத்தம் ரூ.3.7 கோடி செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்க ஒப்பளிப்பு.
- துறையினை வலுப்படுத்தும் விதமாக ரூ.944.93 இலட்சம் செலவில், 10 தரம் உயர்த்தப்பட்ட நீர்தாங்கி வண்டிகளும், 52 விரைவு ஊர்திகளும், 52 அதிக அழுத்தப் பம்புகள் (விரைவு ஊர்திகளின் மேல் பொருத்தக் கூடியது) மற்றும் "வெட்டும் மற்றும் விரிக்கும்" திறன் ஒருங்கிணைந்த 38 கருவிகள் ஒப்பளிப்பு.
- கோயம்புத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு சிறிய ரக நுரை தகர்வு ஊர்தி ரூ.25 இலட்சத்தில் ஒப்பளிப்பு.
- தேடல் மற்றும் மீட்புப் பணிக்கான கருவிகளாக, 140 கையடக்க அதிக ஒளி வீசும் தேடும் விளக்குகள், 12 கதவு திறப்பான்கள், 64 கயிறு ஏணிகள், 64 இரப்பர் மின்தடை கையுறைகள், 25 சிமிட்டி கலவை உடைப்பான்கள், 8 இரப்பர் படகுகள், 100 உயிர் காப்பு மிதவைகள், 100 உயிர்காப்பு மேலங்கிகள் மற்றும் 5 போர்வெல் மீட்பு கருவிகள் ரூ.64 இலட்சத்தில் ஒப்பளிப்பு. 2,000 செயற்கை இழையிலான நீண்ட நீர்விடுகுழாய்கள் அதற்குரிய இணைப்புகளுடன், 1,000 எண்ணிக்கை நீண்ட மணிலா கயிறுகள், 2 அவசரகால மீட்பு ஊர்திகள், 40 மிதவை இரப்பர் படகுகள், 25 அதிக சக்தி கொண்ட இரம்பங்கள், 30 அதிவேக எளிதில் தூக்கிச் செல்லும் பம்புகள், 350 செறிவூட்டும் திறன் கொண்ட தேடும் விளக்குகள், 250 செறிவூட்டும் திறன் கொண்ட கையடக்க விளக்குகள், 20 நீளும் திறன் கொண்ட அவசரகால விளக்குகள் மொத்தம் ரூ.71.50 இலட்சத்தில் ஒப்பளிப்பு.
- கீரமங்கலம், அலங்காநல்லூர், அவநாசி, அன்னூர், சென்னிமலை, செய்யூர் மற்றும் திருமருகல் ஆகிய 7 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மொத்தம் ரூ.6.30 கோடி செலவினத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 24.05.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மொத்தம் 130 பணியாளர் குடியிருப்புகள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 24.05.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய வளாகத்தில், 13 அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 30.11.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### சிறைச்சாலைகள்துறை

- சிறைகளில் உள்ள நவீன சாதனங்களை பராமரிக்க ஒரு ஆய்வாளர் (தொழில் நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர் (தொழில் நுட்பம்) பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.15.26 இலட்சம் செலவில் தோற்றுவிப்பு.
- சிறைவாசிகளை சீர்த்திருத்துவதற்காக 9 புதிய மனவியல் நிபுணர் பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.45.08 இலட்சம் செலவில் தோற்றுவிப்பு.
- சென்னை, கூடுதல் காவல்துறை இயக்குநர்/ சிறைத்துறை தலைவர் அலுவலகத்தில், ஆண்டொன்றுக்கு ரூ.1.10 இலட்சம் செலவில் புதிதாக ஒரு சட்ட ஆலோசகர் பதவி உருவாக்கம்.

- ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் புழல் சிறை வளாகத்தில் பார்வையாளர் காத்திருப்பு அறை, சோதனையிடும் அறை மற்றும் வழிக்காவலர்கள் அறை போன்ற கூடுதல் வசதிகளை ஏற்படுத்திட ஆணை.
- ரூ.40.40 இலட்சம் செலவில் சிறையினுள் தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்திட புழல் மத்திய சிறை–1 மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு எக்ஸ் கதிர் மூலம் பொருட்கள் சோதனையிடும் ஊடுகருவி.
- ரூ.8.75 கோடி செலவில் சிறைத்துறைக்கென சென்னை எழும்பூரில் புதிய நிருவாக தலைமையிடக் கட்டடம்.
- ரூ.7.65 கோடி செலவில் திருச்சி, சேலம், மதுரை மற்றும் கடலூர் மத்திய சிறை களப்பணியாளர்களுக்கு 100 குடியிருப்புகள்.
- ரூ.36.52 இலட்சம் செலவில் சிறைத்துறை பயன்பாட்டிற்கென துப்பாக்கி குண்டுகள்.
- ரூ.4.40 இலட்சம் செலவில் மதுரை, மத்திய சிறை, திருச்சி மற்றும் புழல் மத்திய சிறை–1 மற்றும் 2 ஆகிய சிறைகளுக்காக பல்நோக்கு நகல் பெருக்கி மற்றும் அச்சு இயந்திரம்.
- ரூ.4.95 இலட்சம் செலவில் மத்தியசிறை–கோவை, மத்தியசிறை–1, புழல் பார்ஸ்டல் பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டச் சிறைகளின் பயன்பாட்டிற்காக 55 வாக்கி டாக்கி கருவிகள்.
- ரூ.4.32 இலட்சம் செலவில் மத்தியசிறை, மதுரை, கோவை, கடலூர் மற்றும் வேலூர் ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு 8 தடையடா மின்வழங்கும் கருவிகள்.
- ரூ.5 இலட்சம் செலவில் மத்தியசிறை திருச்சி, மற்றும் சேலம் ஆகியவற்றுக்கு 6 பன்முக கதவு வடிவ உலோகம் கண்டுபிடிக்கும் கருவி.
- ரூ.2.10 இலட்சம் செலவில் மத்தியசிறை–சேலம், மதுரை, மத்தியசிறை–2–புழல், பெண்கள் தனிச்சிறை–புழல், வேலூர் மற்றும் திருச்சி ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு வீடியோ கேமிரா கருவிகள்.
- சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.12 என வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.100 ஆக உயர்வு.
- சிறைத்துறையின் அனைத்து களப் பணியாளர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட குழுக் காப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- தமிழக முதலமைச்சரால் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு பொங்கல் தினத்தன்று வழங்கப்படும் பதக்கத்திற்கான மாதாந்திர பதக்கப்படி ரூ.100லிருந்து ரூ.200ஆக உயர்வு.
- ரூ.25.93 இலட்சம் செலவில் சென்னை மற்றும் கோவை சரகங்களின் கீழுள்ள கிளைச் சிறைகள், தனிக்கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் மாவட்ட சிறைகளின் பயன்பாட்டிற்கு 50 கணிப்பொறிகள் மற்றும் இணைந்த பிற கருவிகள்.
- ரூ.80.72 இலட்சம் செலவில் சிறைத்துறையின் பல்வேறு அலுவலகங்களுக்குப் புதிய வாகனங்கள்.
- “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் கட்டப்படவுள்ள 2,673 வீடுகளில் சிறைத் துறையில் பணிபுரியும் இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் சிறை அலுவலர் வரையிலான 56 களப்பணியாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு.
- ரூ.23 இலட்சம் செலவில் 10 மத்திய சிறைகள், நான்கு சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் அலுவலகங்கள், தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம், மூன்று பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல்பள்ளி–புதுக்கோட்டை ஆகிய அலுவலகங்களில் 9 தொலை இயக்கி அஞ்சல் முத்திரை இயந்திரங்கள். (Remotely controlled Franking Machines)
- சிறைகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான சீருடைப் பணியாளர்களுக்கு சீருடை தைப்பதற்கான தையற்கூலி, காவல்துறையினருக்கு வழங்கப்படுவதற்கு இணையாக ரூ.250இல் இருந்து ரூ.450ஆக உயர்த்தி ஆணை.



- ரூ.2.21 கோடி செலவில் மத்திய சிறைகளில் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் வகையில், 60 மேம்படுத்தப்பட்ட சிசிடிவி கேமராக்கள்.
- ரூ.35 கோடி செலவில் அனைத்து மத்திய சிறைகளிலும் மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தி (Roof top Solar Photo Voltaic) முறையினை அமைத்திடும் பொருட்டு முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட ரூ.5 இலட்சம் ஒப்பளிப்பு.
- ரூ.3 கோடி செலவில் புழல் மத்திய சிறை வளாகத்தில் முன்னோடித் திட்டமாக சூரிய சக்தி மின்னாக்கி (Pilot Solar Power Generator Plant) அமைத்திட ஆணை.
- ரூ.96.18 இலட்சம் செலவில் வேலூர், கடலூர், சேலம் மற்றும் புழல் மத்திய சிறைகளில் எக்ஸ் கதிர் மூலம் பொருட்கள் சோதனையிடும் ஊடு கதிர் (Baggage Scanner) கருவி.
- சிறைவாசிகளை மனநல ரீதியாக திருத்துவது குறித்து ஆராய்ச்சி செய்ய, தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் குழு அமைப்பு. இதற்கென ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு.
- ரூ.1.63 கோடி செலவில் சிறைவாசிகள் தமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் பேசுவதற்கு 9 மத்திய சிறைகளில் 54 தொலைபேசி சேவை மையங்கள் அமைப்பு.
- சிறைச்சாலைகளில், உற்பத்தி மற்றும் பராமரிப்பு பிரிவுகளில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம், செயல் திறன் வாய்ந்த நபர்களுக்கு ரூ.60 லிருந்து ரூ.100 ஆகவும் பகுதி செயல் திறன் வாய்ந்த நபர்களுக்கு ரூ.50லிருந்து ரூ.80 ஆகவும் செயல் திறனற்ற நபர்களுக்கு ரூ.45லிருந்து ரூ.60 ஆகவும் உயர்வு.
- சிறைவாசிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் காணொளிக் காட்சி (Video Conferencing) மூலமாக அவர்களின் நீதிமன்ற காவலை நீட்டிப்பு செய்வதற்காக ரூ.3.19 கோடி செலவில் 28 நீதிமன்றங்களில் அதற்கான சாதனங்கள் அமைப்பு.
- ரூ.5.85 இலட்சம் செலவில் சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ‘ஆ’ வகுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கான சீருடை அரைக்கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக மாற்றம்.
- ரூ.6.90 இலட்சம் செலவில் 16 கிளைச் சிறைச் சாலைகள், பார்ஸ்டல் பள்ளிகளில் குடிநீர் வசதிக்கென சவ்வூடு பரவல் முறையில் குடிநீர் தூய்மை செய்யும் இயந்திரங்கள்.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் தமிழகச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு, கல்வி கட்டணத் தொகையிலிருந்து முழு விலக்கு.
- ரூ.45 இலட்சம் செலவில் புழல் மத்திய சிறை–1இல் நவீன அடுமனை (Bakery Unit).
- அனைத்து மத்திய சிறைகளிலும் சிறை அங்காடிகள் (Prison Bazaar) ஏற்படுத்திட ஆணை. இதற்கென ரூ.10 இலட்சம் சுழல்நிதி ஒதுக்கீடு.
- ரூ.2.5 கோடி செலவில் புழல் மத்திய சிறை வளாகத்தில், கழிவு நீரை மறு சுழற்சி மூலம் சுத்திகரிப்பு செய்திட BOOT முறையில் நவீன சுத்திகரிப்பு நிலையம்.
- ரூ.3.6 கோடி செலவில் பழமையான அனைத்து மத்திய சிறைகளில் தற்போது உள்ள கழிப்பிட வசதிகளை மாற்றி, சுகாதார வசதி மேம்படுத்தி ஆணை.
- ரூ.18 இலட்சம் செலவில் மத்திய சிறைகளிலுள்ள தச்சு தொழிற்கூடங்களை நவீனமாக்கம்.
- ரூ.5 இலட்சம் செலவில் சிறை மருத்துவமனைகளின் மருத்துவ வசதிகளை மேம்படுத்தி அவசரகால மருத்துவ ஊர்திகளுக்கு உயிர்காக்கும் கருவிகள் வழங்கல்.
- ரூ.1.3 கோடி செலவில் அனைத்து மத்தியசிறைகள், பெண்கள் தனிச்சிறை மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் பார்வையாளர்கள் மேலாண்மை திட்டம் செயல்பாடு.
- சிறைவாசிகளின் சொந்தப் பணக்கணக்கிலிருந்து மேற்கொள்ளும் வாராந்திர செலவினத் தொகை உச்சவரம்பு ‘அ’ பிரிவு சிறைவாசிகளை பொறுத்தமட்டில் ரூ.375லிருந்து ரூ.750 ஆகவும், ‘ஆ’ வகுப்பு

சிறைவாசிகளுக்கு ரூ.225லிருந்து ரூ.450 ஆகவும் உயர்வு.

- ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில் சிறைவாசிகளின் பயன்பாட்டுக்கென முகசவர ரேசர்கள்.
- ரூ.1.99 கோடி செலவில் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளுக்கென கோவையில் புதியதாக பெண்கள் தனிச் சிறை.
- காவல்துறை பணியாளர்கள் பெறுவதைப் போன்றே அனைத்து பொருட்களையும் மானிய விலையில் "காவல்துறை பொருள் வழங்கீட்டு மையத்தில்" (Police Canteen) பெற்றுக் கொள்வதற்கான சலுகை சிறைத்துறை பணியாளர்களுக்கும் நீட்டிப்பு.
- காணொளிக் காட்சி மூலமாக விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்றக் காவலை நீட்டித்திட தமிழ்நாட்டில் உள்ள சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் ரூ.6.92 கோடி செலவில் 60 இடங்களில் காணொளிக் காட்சி சாதனங்கள்.
- ரூ.14.55 இலட்சம் செலவில் 96 ஆண் கிளைச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளின் பயன்பாட்டிற்கென ரேடியோ மற்றும் தொடர்புடைய சாதனங்கள்.
- ரூ.1.50 கோடி செலவில் கோவை மத்திய சிறையில் நான்கு நவீன விசைத்தறிகள்.
- ரூ.1.75 கோடி செலவில் தென் மாவட்டங்களிலிலுள்ள நீதிமன்றங்களில் தண்டனை பெற்று வரும் பெண் தண்டனை சிறைவாசிகளுக்கென மதுரையில் புதியதாக பெண்கள் தனி கிளைச் சிறை .
- திருப்பூர் மாவட்டத்தில் ரூ.9.96 கோடி செலவில் மாவட்ட சிறை வளாகம்.
- செங்கல்பட்டு தனிக்கிளைச்சிறை ரூ.2.62 கோடி செலவில் மாவட்ட சிறையாக மாற்றம்.
- ரூ.12.95 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சிறை, பார்ஸ்டல் பள்ளி மற்றும் பெண்கள் இணைப்புச் சிறை.
- ரூ.14.94 கோடி செலவில் தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட சிறை.
- தமிழ்நாடு சிறை நல நிதிக்கு தற்போது ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்வு.
- ரூ.5 கோடியில் சிறைத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை தங்கு தடையின்றி வழங்க "மூலப்பொருட்கள் இருப்பு மையம் ஒன்றை" ஏற்படுத்திட ஆணை.
- பாளையங்கோட்டை மத்திய சிறையில் நிலவிவரும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும், சிறைவாசிகள் மற்றும் பணியாளர்களின் நலன் காக்கவும், ரூ.1.55 கோடி செலவில் தாமிரபரணி ஆற்றில் இருந்து கிடைக்கும் நீரை ஆதாரமாகக் கொண்டு, தூய்மையான குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்திட ஆணை.
- திருச்சியில் உள்ள பெண்கள் தனிச்சிறையில் நவீன இயந்திரங்களுடன் கூடிய தையற்கூடம் ரூ.5 இலட்சம் செலவில் நிறுவிட ஆணை.
- பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் சிறப்பு உணவிற்காக வழங்கப்படும் தொகை ரூ.5லிருந்து ரூ.50 ஆக உயர்வு.
- ரூ.13.16 கோடி செலவில் சிறைக் களப்பணியாளர்களுக்கான குடியிருப்பு வசதியினை அதிகரிக்கும் நோக்கத்துடன் அரசு ஆண்டு தோறும் 100 குடியிருப்புகள் கட்டிவருகிறது. அதன்படி 2014–2015ஆம் ஆண்டில் 100 குடியிருப்புகள் கட்ட ஆணை.
- மின்நிலையங்களில் நிலக்கரியை எரிப்பதால் உண்டாகும் கழிவுப் பொருளான சாம்பலைப் பயன்படுத்தி செங்கல் தயாரிக்கும் உற்பத்திக் கூடங்களை புழல், சேலம், திருச்சி மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் ரூ.152 இலட்சம் செலவில் ஏற்படுத்திடவும், சேலம் மத்திய சிறையில் புதியதாக ஒரு "ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்" தயாரிக்கும் தொழிற்கூடம் ரூ.90 இலட்சம் செலவில் அமைத்திடவும் மற்றும் வேலூர் சிறையில் உள்ள காலணித் தொழிற்கூடத்தை ரூ.18 இலட்சம் செலவில் மேம்படுத்திடவும் மொத்தம் ரூ.260 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.



- வேலூர் மத்திய சிறைக்கு புதிய ட்ராவலர் சிற்றுந்து வாகனம் ரூ.9.53 இலட்சம் செலவில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டம் புரசடைஉடைப்பு திறந்தவெளிச் சிறையின் உபயோகத்திற்காக ரூ.9.90 இலட்சம் செலவில் டிராக்டர் வாகனம் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டது.
- மதுரை, மத்திய சிறையின் கட்டுப்பாட்டிலுள்ள புரசடைஉடைப்பு திறந்தவெளிச் சிறைக்கு ரூ.1.06 இலட்சம் செலவில் ஸ்டீல் தளவாடங்கள் கொள்முதல் செய்துகொள்ள அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும், அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், ஊதியம் ஈட்டிக் கொள்வதற்கு ஏதுவாக உரிய வேலைவாய்ப்பினை பெற்றிடவும், பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளிக்கும் பொருட்டு திருச்சி மத்திய சிறையில் தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI Branch) தொடங்கிட நிருவாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- சேலம் மத்திய சிறையிலுள்ள வாத்தியக் குழுவிற்கு அரசால் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகை, ரூ.4,000/–த்திலிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட வேலூர் சரக சிறைத்துறை துணைத்தலைவர் அலுவலகத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் நிருவாகத்திற்கு உதவியான பணியிடங்களை தொடரும் செலவினம் ரூ.7.52 இலட்சம் மற்றும் தொடரா செலவினம் ரூ.16.68 இலட்சம் செலவினத்தில் உருவாக்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி வசதியை உபயோகிக்கும் எண்ணிக்கையை மாதம் ஒன்றுக்கு 3 முறையிலிருந்து 5 முறையாகவும், 30 மணித்துளிகளிலிருந்து 45 மணித்துளிகளாகவும் அதிகரித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- புழல் மத்தியசிறை–1 சிறையின் ஏற்கெனவே உபயோகத்தில் உள்ள டிராக்டர் வாகனத்திற்கு ரூ.1.55 இலட்சம் செலவில் டிப்பிங் டிரைலர் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- புதிதாகக் கட்டப்பட்டுள்ள பெண்கள் இணைப்புடன் கூடிய திருப்பூர் மாவட்ட சிறைக்கு ரூ.103.22 இலட்சம் செலவில் புதிதாக 22 பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு மற்றும் அச்சிறைக்கு தேவைப்படும் தளவாடங்களை வாங்குவதற்கு ரூ.4.39 இலட்சம் தொடரா செலவினமாக ஆணையிடப்பட்டுள்ளது.
- புதிதாக கட்டப்பட்டுள்ள கோவை பெண்கள் தனிச்சிறைக்கு, ஏற்கெனவே உள்ள கோவை பெண்கள் இணைப்பு சிறையின் 14 பணியிடங்களை மறு பணியமர்த்துதல் மூலமும், மேலும் ரூ.102.26 இலட்சம் தொடர் செலவினத்தில் கூடுதலாக 21 புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டம் புரசடைஉடைப்பு திறந்தவெளிச் சிறையின் பயன்பாட்டிற்கு ரூ.71,349/– தொடரா செலவில் மற்றும் ரூ.54,495/– தொடரும் செலவினத்தில் புதிய தொலைபேசி இணைப்பு (Internet connectivity) உடன் நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.
- புதிதாக கட்டப்பட்டுள்ள மதுரை பெண்கள் தனிச்சிறைக்கு, ரூ.158.03 இலட்சம் செலவில் 35 பணியிடங்களை தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- 9 மத்திய சிறைகளில் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்டதும், 3 பெண்கள் தனிச்சிறைகளில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்டதுமான குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் ரூ.51.75 இலட்சம் செலவில் நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.
- மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள், திறந்த வெளிச் சிறைகள் மற்றும் மண்டல நன்னடத்தை அலுவலர் அலுவலகங்களில் ரூ.16.94 இலட்சம் தொடர் செலவினம் மற்றும் ரூ.3.47 இலட்சம் தொடரா செலவினத்தில் அகண்ட அலைவரிசை இணைப்பு வசதி ஏற்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் முதல் தலைமை காவலர்களுக்கு இரவு




உணவுப்படி தலா ரூ.100/– வீதம் வழங்குவதற்கு, வருடத்திற்கு ரூ.58.03 இலட்சம் தொடர் செலவினம் ஆணையிடப்பட்டுள்ளது.

- அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் திறந்த வெளிச் சிறைகள் ஆகியவற்றில் பணிபுரியும் களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்கு 3 வருடத்திற்கு ஒரு முறை மழைக்கோட்டுகள் மற்றும் கொசு வலைகள் ரூ.4.73 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- இராமநாதபுரம், ஆத்தூர், விருதுநகர், நாகப்பட்டினம் மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகளுக்கு தலா ஒரு அவசரகால ஊர்தி மற்றும் ஒரு இரு சக்கர வாகனம் ரூ.29.95 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு தனிக்கிளைச் சிறையை மாவட்ட சிறையாகத் தரம் உயர்த்தி, 19 கூடுதல் பணியிடங்களை (ஒரு மேம்படுத்தப்பட்ட உதவியாளர் பணியிடம் சேர்த்து) ரூ.45.86 இலட்சம் தொடர் செலவில் தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- சிறைவாசிகளுக்கான தொலைபேசி வசதியை 9 மாவட்ட சிறை மற்றும் 2 திறந்த வெளிச் சிறைகளுக்கு ரூ.99.29 இலட்சம் செலவில் விரிவு படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- சிறைச்சாலைகளில் அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் அமைப்புடன் கூடிய பாதுகாப்ப நிலையினை ஏற்படுத்துவதற்காக ரூ.159.48 இலட்சம் செலவில் அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

**போக்குவரத்துத் துறை (உள்துறை)**

- தென்காசி, திண்டிவனம், ஒசூர், தாராபுரம் மற்றும் செங்குன்றம் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.
- திருச்சி (கிழக்கு) குன்றத்தூர், ஈரோடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் நாமக்கல் (தெற்கு) ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் புதிதாக உருவாக்கம்.
- பூந்தமல்லி, சங்கரன்கோவில் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்வு.
- போக்குவரத்துத் துறையின் பகுதி அலுவலகங்களுக்கு 54 ஈப்புகள்.
- ரூ.109.46 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பம் (உள் வருகை மற்றும் வெளி செல்கை) சோதனைச் சாவடிகள் நவீனமயம்.



- ரூ.10.56 இலட்சம் மதிப்பீட்டில் கோவை மாவட்டம், கோபாலபுரம் போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடிக்கு சொந்தக் கட்டடம்.
- ரூ.57.82 இலட்சம் மதிப்பீட்டில் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு வேலூர் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் துவக்கம்.
- ரூ.2.77 கோடி செலவில் சோழிங்கநல்லூர், அம்பத்தூர், வாணியம்பாடி, மயிலாடுதுறை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்வு.
- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பகுதி அலுவலகத்திற்கு சொந்தக்கட்டடம் கட்ட தேவையான நிலம் இந்து சமய அறநிலை மற்றும் ஆட்சித் துறையிடமிருந்து ரூ.1.32 கோடி வழங்கி கொள்முதல்.
- பொறியியல் சாராத சாலைப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து 9 மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டு துறைகளுக்கும் ரூ.14.25 கோடி நிதி ஒதுக்கீடு.
- சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ள ரூ.60 இலட்சம் மற்றும் அரசு உதவியுடன் இயங்கும் 11 அவசர விபத்து சிகிச்சை மையங்களுக்கு ரூ.52.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- முதலமைச்சர் விபத்து நிவாரண நிதித் திட்டத்தின் கீழ், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ரூ.20 கோடி வழங்கல்.
- சென்னை மாநகர ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தினை குறைந்தபட்சம் 1.8 கி.மீக்கு ரூ.25 ஆகவும், அதனை அடுத்து ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.12 என கட்டணம் உயர்த்தி நிர்ணயம்.
- ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் புதிய இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) அலுவலகங்கள் துவக்கம்.
- ரூ.11.25 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களாக தரம் உயர்வு.
- ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள்.
- பவானி மற்றும் துறையூர் பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.
- ரூ.71.30 இலட்சம் மதிப்பீட்டில் 70 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 பகுதி அலுவலங்களுக்கு அதிநவீன வருடுபொறி (Scanner) வழங்குதல்.
- ரூ.11.92 இலட்சம் செலவில் போக்குவரத்துத் துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சரக அலுவலகங்களுக்கு 16 வருடுபொறியுடன் (ஸ்கேனர்) கூடிய நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல்.
- ரூ.18.04 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீபெரும்புதூர், கள்ளக்குறிச்சி, வேடசந்தூர் மற்றும் பாலக்கோடு ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு சர்வர், யு.பி.எஸ். மற்றும் நகல் எடுக்கும் கருவிகள் வழங்குதல்.
- ரூ.11.36 இலட்சம் மதிப்பீட்டில் கோபாலபுரம் (கோவை), அம்பராம்பாளையம் (கோவை), லோயர்கேம்ப் (தேனி) மற்றும் பண்ணாரி (ஈரோடு) ஆகிய சோதனைச் சாவடிகளுக்கு சர்வர்கள் வழங்குதல்.
- ரூ.54.06 இலட்சம் மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உள்ள பழைய சர்வர் மற்றும் அச்சுப்பொறிகளை மாற்றி புதியன வழங்குதல்.
- ரூ.10 கோடி செலவில் 14 இடங்களில் கணினி மயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுத்தளங்கள் அமைத்தல்.
- ரூ.2.79 கோடி செலவில் கரூர் மாவட்டம், மண்மங்கலம், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஆகிய 4 இடங்களில் புதியதாக பகுதி அலுவலகங்கள்.
- சிதம்பரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள்

ரூ.1.55 கோடி செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும்.

- ரூ.2.86 கோடி செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் உள்ள பழைய கணினிகள் மற்றும் பழைய அச்சுப் பொறிகளை மாற்றி புதியன வழங்குதல்.
- ரூ.1.23 கோடி செலவில் ஒரு சரக அலுவலகம் மற்றும் பல்வேறு வட்டாரப் போக்குவரத்து மற்றும் பகுதி அலுவலகங்களுக்கு யுபிஎஸ் வழங்குதல்.
- ரூ.70.36 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகங்களான கும்மிடிப்பூண்டி, பண்ருட்டி, செஞ்சி, ஆம்பூர், இலுப்பூர், திருத்துறைப்பூண்டி, இலால்குடி, அரவக்குறிச்சி மற்றும் வால்பாறை ஆகிய 10 அலுவலகங்களுக்கு புதியதாக ஜீப்புகள் வழங்குதல்.
- ரூ.29.01 இலட்சம் செலவில் பல்வேறு பகுதி அலுவலகங்களுக்கு யு.பி.எஸ். வழங்குதல்.
- ரூ.20.55 இலட்சம் செலவில் 79 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 58 பகுதி அலுவலகங்களுக்கு Bar Code Scanner வழங்குதல்.
- ரூ.91.90 இலட்சம் செலவில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பகுதி அலுவலகங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- ரூ.228.99 இலட்சம் செலவில் அரியலூர் மற்றும் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டி பாளையம் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.10.56 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் மாவட்டம் கோபாலபுரம் சோதனைச்சாவடிக்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.175.97 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் பகுதி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

**நீதிமன்றங்கள் துறை**

- ரூ.9.61 கோடி மதிப்பீட்டில் மதுரையில் அமைக்கப்படவுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்குப் புதிய கட்டடம்.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்ட எழுத்தர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பூதியம் ரூ.5,000லிருந்து ரூ.7,500/–ஆக உயர்வு.
- 10 நடமாடும் நீதிமன்றங்களுக்கு ரூ.6.24 இலட்சம் கூடுதல் தொகை அளிப்பு.
- குடும்பநல வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்கென மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ரூ.8.06 கோடி செலவில் திருநெல்வேலி, திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், வேலூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் குடும்பநல நீதிமன்றங்கள் அமைப்பு.
- அனைத்து மாவட்டங்களிலும் ரூ.1.34 கோடி செலவில் பெரம்பலூர் நீங்கலாக 31 மாலை நீதிமன்றங்கள் அமைப்பு.
- ஊழல் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 4 சிறப்பு நீதிமன்றங்களுக்கு ரூ.4 இலட்சம் செலவில் கணினி உபகரணங்கள்.
- ரூ.1.07 கோடி செலவில் மோட்டார் வாகன விபத்து வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென தருமபுரியில் மாவட்ட பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் மற்றும் சார்பு நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைப்பு.
- சென்னையில் விடுமுறைக் கால குடும்பநல நீதிமன்றத்தில் பணிபுரியும் நீதிபதி மற்றும் பணியாளர்களுக்கு 2012, 2013 ஆண்டுகளுக்கு ரூ.28.84 இலட்சம் செலவில் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.1.09 கோடி செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ், பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றம்.
- குடும்பநல நீதிமன்றத்தில் பணிபுரியும் குடும்பநல ஆலோசகர்களுக்கு நாள் ஒன்றுக்கு அளிக்கப்படும் கட்டணத்தொகை ரூ.200லிருந்து ரூ.400 ஆக உயர்வு.
- ரூ.9.75 இலட்சம் செலவில் குற்றவியல் நடுவர் நீதிபதி நிலையிலான 39 விரைவு நீதிமன்ற நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதிகள்.
- தருமபுரி மாவட்டம் ஒசூரில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பு.
- தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமாக மாற்றம்.
- ரூ.1.10 கோடி செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பு.
- ரூ.11.78 இலட்சம் செலவில், திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் மதுரையிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகம் ஆகியவற்றுக்கு சுற்றுச்சுவர்கள்.
- ரூ.4.88 கோடி மதிப்பீட்டில், மதுரையில் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி, மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் தங்குவதற்கான ஐந்து மாளிகைகள் கட்டுதல்.
- ரூ.3.88 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இணைப்புக் கட்டடத்தின் பின்புறம் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுமானம்.
- ரூ.2.07 கோடி செலவில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுமானம்.
- ரூ.72.20 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை.
- அம்பாசமுத்திரத்திலுள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்.
- ரூ.1.5 கோடி செலவில், மதுரையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை, தளவாடங்கள் வைப்பறை மற்றும் காவலர்கள் ஓய்வு அறை.
- ரூ.15.50 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்பு.
- ரூ.22.21 கோடி செலவில் சென்னையிலுள்ள ஐந்து பாரம்பரிய நீதிமன்றக் கட்டடங்கள் பராமரிப்பு.
- ரூ.25 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலுள்ள நீதிபதிகளின் குடியிருப்புகளுக்கு டீசல் மின்னாக்கி (Diesel Generator).
- ரூ.15.90 இலட்சம் செலவில் உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு ஒளிநகல் இயந்திரம் மற்றும் இதர உபகரணங்கள்.
- ரூ.5.03 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், கடலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு தீயணைப்பு கருவிகள்.
- ரூ.92.15 இலட்சம் செலவில் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள நீதித்துறை அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள்.
- அரசு ஒப்புதலின்படி, மாநில சட்ட பணிக்குழுவிற்கு ஏழு அரசு சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை.
- அரசு வழக்காடுதல் துறைக்கு 10 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பு.
- ரூ.4.59 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்று தீர்வு மையக் கட்டடம்.
- ரூ.2.65 கோடி செலவில் பதின்மூன்றாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நீதித்துறை அதிகாரிகளுக்கு (Training to Mediators) பயிற்சி.
- ரூ.2.22 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு மடிக்கணினி மற்றும் துணைக் கருவிகள்.

- 35 நீதிமன்ற மேலாளர்களுக்கு உதவியாக 35 தட்டச்சர் பதவிகள் மற்றும் 35 அலுவலக உதவியாளர் பதவிகள் முறையே ரூ.12,000, ரூ.8,000 தொகுப்பூதியத்தில் உருவாக்கம்.
- நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு உதவி குற்ற வழக்கு நடத்துநர் பதவி உருவாக்கம்.
- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் அலுவலக இருப்பிடத்திற்கு இரண்டு கண்காணிப்பாளர் (சமையற்கலை) மூன்று உணவு பரிமாறுபவர் பதவிகள் புதியதாக உருவாக்கம்.
- ரூ.84.25 இலட்சம் செலவில் குற்ற வழக்கு இயக்ககத்தின் வழக்கு நடத்துநர்களின் பயன்பாட்டிற்காக சட்டப்புத்தகங்கள்.
- ரூ.5.10 கோடி செலவில், குற்ற வழக்கு தொடர்வுத் துறையைச் சார்ந்த அரசு குற்றவழக்கு நடத்துநர்களுக்காக மடிக்கணினி, அச்சு இயந்திரம் உச்சநீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை ஆன்லைன் வாயிலாகப் பெறுதல், சட்டப் புத்தகங்கள் வாங்குதல் மற்றும் கணினிப் பயிற்சி.
- சென்னை பெருநகரத்திலுள்ள 12 காவல் மாவட்டங்களை நிருவகிக்கும் காவல் துணை ஆணையர்களுக்கு, குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் பிரிவுகள் 107 முதல் 110 இன் படி செயலாக்க நீதிபதியாக செயல்படும் அதிகாரம்.
- ரூ.54.27 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள் II, III & V மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி ஆகியோரின் அலுவலக பயன்பாட்டிற்கு மூன்று டொயோட்டோ இன்னோவோ வாகனங்கள்.
- இறந்த வழக்குரைஞர்களின் சட்ட முறையிலான வாரிசுதாரர்களுக்கும் நியமனதாரர்களுக்கு வழக்குரைஞர்கள் நலநிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சமாக உயர்வு.
- தமிழ்நாடு வழக்குரைஞர் நலநிதிக்கு ஆண்டுதோறும் ரூ.4 கோடி அரசின் மானியமாக வழங்க ஆணை.
- தமிழ்நாடு மாநில நீதிப்பணியில் உரிமையியல் நீதிபதிகளாக 172 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம்.
- நிலுவையில் உள்ள வழக்குகளை தரமான, வெளிப்படையான முறையில் அணுகிடும் அரசின் தீர்மானத்திற்கேற்ப தமிழ்நாடு மாநிலத்திற்கென தனி வழக்காடும் கொள்கை உருவாக்கம்.
- ரூ.163 கோடி நிதி ஒப்பளிப்பில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித்துறையின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர மானியம் ரூ.15 இலட்சத்திலிருந்து 2012–2013ஆம் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- 2013ஆம் ஆண்டிற்கான மாவட்ட நீதிபதி பதவியிடங்களுக்கான தேர்வு நடத்துவதற்காக ரூ.12 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 23 மாவட்ட நீதிபதிகளுக்கு (பயிற்சி) உதவி செய்வதற்காக பணியாளர்கள் மற்றும் கணினி வழங்குவதற்காக ரூ.1.72 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2 இலட்சம் செலவில் பெரம்பலூர் மாவட்டம் மகளிர் நீதிமன்றத்திற்கு ஓட்டுநர் பதவி உருவாக்கம்.
- ரூ.2.46 கோடி செலவில் மாநிலத்திலுள்ள சார்பு நீதிமன்றங்களுக்கு அறைக் கலன்கள் வசதி அளித்தல்.
- ரூ.55 இலட்சம் செலவில் மகளிர் விரைவு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு குளிர்சாதன மகிழுந்து அளித்தல்.
- ரூ.2.5 இலட்சம் செலவில் 10 கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதி அளித்தல்.
- ரூ.60.38 இலட்சம் செலவில் 18 மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு தலா ஒரு தட்டச்சர் பதவி உருவாக்கம்.



- ரூ.4.68 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றத்திற்கு ஓட்டுநர், இரவு காவலர் மற்றும் மசால்சி (Masalchi) பதவிகள் உருவாக்கம்.
- நீதிமன்றங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களிலுள்ள மின்னாக்கிகளுக்கு டீசல் வாங்குவதற்காக ரூ.13.20 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு.
- ரூ.29 கோடி செலவில் 29 மாவட்டங்களில் 29 மாற்றுத் தீர்வு மையக் கட்டடம்.
- ரூ.171.43 கோடி செலவில் நீதித்துறை அதிகாரிகள், சமரசம் செய்பவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு பயிற்சி.
- ரூ.5.31 இலட்சம் செலவில் மாநில நீதித்துறை பயிற்சிக் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகைக்கு அறைகலன்கள் .
- ரூ.8.88 கோடி செலவில் மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) மாபெரும் மக்கள் நீதிமன்றம் (மெகா லோக் அதாலத்) மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம்.
- ரூ.2.40 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் 150ஆவது ஆண்டு விழா.
- ரூ.12.91 இலட்சம் செலவில் மாநில தலைமை வழக்குரைஞர் அவர்களுக்கு புதிய டொயோட்டா இன்னோவா கார் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.23 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு மடிக்கணினி மற்றும் துணைக் கருவிகள்.
- ரூ.20 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மாற்றுத் தீர்வு மைய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா.
- ரூ.1.53 இலட்சம் செலவில் மாநில தலைமை வழக்குரைஞர் அலுவலகத்திற்கு அறைகலன்கள் மற்றும் கணிப்பொறி.
- ரூ.1.04 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு 250 கணிப்பொறிகள் உள்பட கணிப்பொறி உபகரணங்கள்.
- ஒவ்வொரு விழாவிற்கும் ரூ.1.50 இலட்சம் வீதம் ஆண்டுக்கு ரூ.3 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், குடியரசு தின விழா மற்றும் சுதந்திர தின விழா.
- சென்னை உயர்நீதிமன்ற 150ஆவது ஆண்டு கொண்டாட்டத்தின் துவக்க விழாவின் நினைவாக சென்னை உயர்நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு ஒரு ஊதிய உயர்விற்கு நிகரான ரொக்கத்தை பரிசாக ஒரு முறை மட்டும் வழங்கி ஆணை.
- அனைத்திந்திய மகளிர் வழக்கறிஞர்களின் தேசிய மாநாட்டை நடத்துவதற்காக தமிழ்நாடு மகளிர் வழக்கறிஞர்களின் கூட்டமைப்பிற்கு ரூ.20 இலட்சம் மானியம்.
- தமிழ்நாடு வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் இறந்து போவதன் பேரில், தமிழ்நாடு வழக்கறிஞர்களுடைய எழுத்தர்கள் நலநிதியத்தின் உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் அல்லது நியமனதாரர்கள் / சார்ந்தவர்களுக்கு செலுத்தப்படும் நிதி உதவி ரூ.50,000 லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- 35 நீதிமன்ற மேலாளர்களின் உபயோகத்திற்காக 35 மடிக்கணினிகள் 10 ஜிகாபைட் அளவுள்ள தகவல் அட்டைகள் இரண்டு வருடத்திற்கான திட்ட அமைப்புடன் தலா ரூ.68,793/– வீதம் மொத்தம் ரூ.24.08 இலட்சம் செலவில் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- கடலூர் மாவட்டம் திட்டக்குடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஒரு உதவியாளர் பதவி உருவாக்க தொடரும் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.1.25 இலட்சம் ஒப்பளிப்பு.
- பொருளாதாரக் குற்றப்பிரிவில் ஒரு மூத்த சட்ட ஆலோசகர் பணியிடமும் அவருக்கு உதவி செய்ய ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடமும் ரூ.6.13 இலட்சம் செலவில் புதிதாக தோற்றுவிப்பு.
- அனைத்து மாவட்டங்களிலுள்ள காவல் கண்காணிப்பாளர்களுக்கு உதவியாக ரூ.74.40 இலட்சம் செலவில் ஒரு சட்ட அலுவலர் பதவி தோற்றுவிப்பு.
- சென்னை மத்தியக் குற்றப்பிரிவிற்கு ரூ.7.20 இலட்சம் செலவில் ஒரு சட்ட ஆலோசகர் பதவி தோற்றுவிப்பு.

- மாநிலத்தில் உள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துநர்களுக்கும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்க ரூ.78.87 இலட்சம் ஒப்பளிப்பு.
- மாநிலத்திலுள்ள அனைத்து குற்ற வழக்கு நடத்துநர்களுக்கும் 71 சட்டங்களை உள்ளடக்கிய கைபேசியில் பயன்படுத்தும் மென்பொருள் வழங்க ரூ.4.83 இலட்சம் ஒப்பளிப்பு.
- ரூ.10.31 கோடி செலவில் மாவட்ட நீதிபதிகள் தரத்தில் உள்ள நீதிபதிகளின் அலுவலக பயன்பாட்டிற்காக குளிர்சாதன வசதியுடன் கூடிய 134 வாகனங்கள்.
- பழனி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் ரூ.3.40 இலட்சம் செலவில் மின்தூக்கி வசதி.
- திருச்சியிலுள்ள மாவட்ட நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளுக்கு ரூ.22.18 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர்.
- ரூ.1.57 கோடி செலவில் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்தில் சிறப்பு பராமரிப்பு பணிகள்.
- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணம் நீதிபதிக்கான குடியிருப்புக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.5.20 இலட்சம் ஒதுக்கீடு.
- ரூ.13.98 கோடி செலவில் முசிறியில் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிக்கான குடியிருப்பு, கொடுமுடியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு, சிவகிரியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு, பரங்கிப்பேட்டையில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் .
- ரூ.72.94 கோடி செலவில் துறையூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், உளுந்தூர்பேட்டை ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், திருத்துறைப்பூண்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், சீர்காழியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், திண்டுக்கல்லில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், செய்யாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், சாத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், திருநெல்வேலியில் நீதிபதிகளுக்கான 10 குடியிருப்புகள், சென்னை சைதாப்பேட்டையில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், கரூரில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்.
- விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மைய ஆவண வைப்பறை ரூ.29.70 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை.
- ரூ.10.87 கோடி செலவில் மாநிலத்திலுள்ள 94 சார்நிலை நீதிமன்ற வளாகங்களில் மின்னாக்கி வசதிகள் செய்ய ஆணை.
- குற்ற வழக்கு தொடர்வுத் துறையில் புதியதாக பணியமர்த்தப்பட்டுள்ள நிலை–2, அரசு உதவி வழக்கு நடத்துனர்களுக்கு அடிப்படை பயிற்சியாக இரண்டு வாரம் உள்ளரங்க பயிற்சியும், அதைத்தொடர்ந்து ஒரு வாரம் நீதிமன்றங்களில் செயல்முறை பயிற்சியும் அளிக்க 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளுக்கு தலா ரூ.3.26 இலட்சம் வீதம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- ஆண்டொன்றுக்கு ரூ.2.47 கோடி வீதம் நான்காண்டுகளுக்கு ரூ.9.88 கோடி செலவில், நீதித்துறை பயிற்சிக் கழகம் மூலமாக நீதித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி.
- நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர மானியம் ரூ.15 இலட்சமானது, 2012–2013ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- 2015–2016 நிதியாண்டில் 139 நபர்கள் உரிமையியல் நீதிபதிகளாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இரண்டு பதிவாளர் பதவிகள் ரூ.26,76,216/– தொடர் செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டன.
- கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அமைக்கப்படவுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்களுக்கு பணியாளர் பதவியிடங்கள், மகிழுந்து, மரச்சாமான்கள் போன்ற வசதிகளுக்கான ரூ.6.31 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அமைக்கப்படவுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையங்களுக்கான கட்டடங்களுக்கு கூடுதல் செலவினமாக ரூ.3.43 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூரில் அமைக்கப்படவுள்ள நீதித்துறை பயிற்சிக் கழகத்தின் மண்டல மையம் தொடக்க விழா செலவினத்திற்கு ரூ.14 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்றத்திற்கு 429 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்து ரூ.1,155.77 இலட்சம் ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சேலத்தில் செயல்பட்டு வரும் குடும்ப நல நீதிமன்றத்திற்கு ஒளிநகல் கருவி (Xerox Machine) வாங்குவதற்கு ரூ.1.21 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலிருந்து தனியாக பிரித்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க ரூ.3.99 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மதுரையில் செயல்பட்டு வரும் விரைவு நீதிமன்றம் எண்.1 மற்றும் 2–விற்கு ஒளி நகல் கருவி (Xerox Machine) வாங்குவதற்கு ரூ.2.42 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வைப்பீடுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997இன் கீழான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்திற்கு ஒளிநகல் கருவி வாங்குவதற்கு ரூ.1.21 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985இன் வழக்குகளுக்கான இரண்டு சிறப்பு நீதிமன்றங்களுக்கு தலா ஒரு ஒளிநகல் கருவி வாங்குவதற்கு ரூ.2.52 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒரு தட்டச்சர் பதவி தோற்றுவிப்பதற்கு ரூ.1.96 இலட்சம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- அரியலூரில் இயங்கி வரும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு மகிழுந்து வாங்க ரூ.0.107 இலட்சம் கூடுதலாக வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் இயங்கி வந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தைப் பிரித்து தனியாக குற்றவியல் நீதிமன்றம் ரூ.3.89 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சேலம் மாவட்டம், ஓமலூரில் இயங்கி வந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தைப் பிரித்து தனியாக குற்றவியல் நீதிமன்றம் ரூ.8.49 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம், பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர், விருதுநகர் மாவட்டம் சிவகாசி, கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம், திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர், அரியலூர் மாவட்டம் அரியலூரில் குற்றவியல் நீதிமன்றம் ரூ.475.48 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் இயங்கி வந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தை பிரித்து தனியாக குற்றவியல் நீதிமன்றம் ரூ.101 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சென்னையில் கூடுதலாக 4 குடும்ப நல நீதிமன்றங்கள் ரூ.314.94 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



- கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாடகைக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பதிவாகும் அசல் மனுக்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ரூ.55.89 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- தேனி, பரமக்குடி, ஆரணி, நாகர்கோயில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில், 10 கூடுதல் விரைவு நீதிமன்றங்கள், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் ரூ.586.39 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரிலும், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்திலும், உரிமையியல் அதிகாரங்களுடன் கூடிய சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் ரூ.108.82 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் இயங்கி வந்த 3ஆவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தினைப் பிரித்து தனியாக கள்ளக்குறிச்சியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ரூ.26.78 இலட்சம் செலவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சிறை கைதிகள் அறை கட்டுவதற்கு ரூ.4.70 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- இரணியல், திருமயம், சங்கரன் கோயில், உளுந்தூர்பேட்டை, செய்யாறு, எழும்பூரிலும் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு கூடுதல் ஒப்பளிப்பாக ரூ.782.15 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- நாமக்கல்லில் நீதிபதிக்கான குடியிருப்புகள் ரூ.153.70 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் நீதிபதிக்கான குடியிருப்புகளுக்கு சுற்றுசுவர் கட்டுவதற்கு ரூ.6.44 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை எழும்பூரிலுள்ள நீதிமன்றங்களை அல்லிகுளத்திற்கு மாற்றுவதற்கு ரூ.11.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலுள்ள மாண்புமிகு நீதிபதிகளுக்கான குடியிருப்புகளுக்கு குளிர்சாதன வசதி



செய்வதற்கு ரூ.6.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அவைக்கூடம் மற்றும் அருங்காட்சியகம் கட்டுவதற்கு கூடுதல் ஒப்பளிப்பாக ரூ.184.42 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- மதுரையிலுள்ள மாவட்ட நீதிமன்றக் கட்டடத்திற்கு மின்னாக்கி வசதி செய்வதற்கு ரூ.131.90 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- போடிநாயக்கனூர், திருக்கழுக்குன்றத்திலும் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.712.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- நன்னிலத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.374.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சேரன்மகாதேவியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ஆகியவை ரூ.364.10 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டையில் புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக ரூ.68.47 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் கழிவறை வசதி செய்வதற்கு ரூ.566.21 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- பெருந்துறை, தருமபுரியிலும் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.4,129.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி தங்குவதற்கான மாளிகை மற்றும் மாண்புமிகு நீதபதிகள் தங்குவதற்கான ஐந்து மாளிகைகள் கட்டுவதற்கு கூடுதல் ஒப்பளிப்பாக ரூ.27.67 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, மதுரை மாவட்டம் திருமங்கலம், கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் (2), திருச்சி மாவட்டம் மணப்பாறை, மதுரை மாவட்டம் மதுரை (3) யிலும் ரூ.3,80,18,541/– செலவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சேலம் மாவட்டம் ஓமலூர், நாமக்கல் மாவட்டம் பரமத்தி, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், திருச்சி மாவட்டம் லால்குடி, தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் சூலூரில் ரூ.2,73,39,107/– செலவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்டம் திட்டக்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், மதுரை மாவட்டம் திருமங்கலத்திலும் ரூ.3,22,95,276/– செலவில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னையில் மாவட்ட நீதிபதிகள் மாநாடு நடத்த ரூ.12.75 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1 அலுவலகத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்க ரூ.76,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒன்பது அடுக்கு புதிய கட்டடத்தில் பதிவேடுகளைப் பாதுகாப்பதற்கான ரூ.1.16 கோடி செலவில் Compactor / Optimizer வாங்குவதற்காக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 60 லிருந்து 75 ஆக உயர்த்தப்பட்டதில் கூடுதலாக 15 நீதிபதிகளுக்கான 15 சிற்றுந்து வாங்குவதற்கு ரூ.2.77 கோடியும், 94 புதிய பணியிடங்கள் உருவாக்குவதற்கு ரூ.2.55 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- டெல்லியிலுள்ள தமிழ்நாடு Legal Cell அலுவலகத்தில் கணினி கொள்முதல் செய்ய ரூ.2.25 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள சமரச தீர்வு மையத்திற்கு தொலைபேசி இணைப்புகள் வழங்க ரூ.62,472 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்க ரூ.1.21 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- உயர்நீதிமன்றம், அரசு வழக்குகள் துறை அலுவலகத்திற்கு இணைய மின் இதழ்களுக்கான கூடுதல் தொகை ரூ.25,400/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தின் 2011–2014 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை வெளியிட ரூ.3.70 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகளின் மாளிகைகளுக்கு மின் அறைகலன்களுக்காக ரூ.28 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணினி அச்சுப்பொறிகள் மற்றும் ஒளிநகல் கருவிகள் வாங்க ரூ.19.36 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர், கூடுதல் தலைமை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணினி அச்சுப்பொறிகள் மற்றும் ஒளிநகல் கருவிகள் வாங்க ரூ.46.97 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாவட்ட சட்டப் பணிகள் குழுவிற்கு முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் 20 செயலாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க ரூ.1.80 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- மாநகர அரசு வழக்கறிஞர், மாநகர உரிமையியல் நீதிமன்ற அலுவலகத்திற்கு கணிப்பொறி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.4,842/– கூடுதல் நிதியாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- இளநிலை கட்டளை நிறைவேற்றுநர்களுக்கு அறுதியிட்ட பயணப்படியாக ரூ.200/–லிருந்து ரூ.300/– ஆகவும், முதுநிலை கட்டளை நிறைவேற்றுநர்களுக்கு ரூ.400/– ஆகவும் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு வழக்கறிஞர்களின் நலநிதி தொடர்ந்து செயல்பட ஏதுவாக அந்நிதியத்திற்கு ரூ.4 கோடியை மானியமாக 2015–2016 ஆண்டிற்கு அரசாணை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

- 2011–2012, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015ஆம் ஆண்டுகளில் தலா ரூ.1 கோடி செலவில் சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது.

- கள்ளச்சாராயக் குற்றவாளிகள் பயனடையும் வகையில் கடனாக வழங்கப்பட்ட மறுவாழ்வு நிதி 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூ.2.20 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டதோடு மானியமாகவும் மாற்றப்பட்டது.

- இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாக கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காக 2015–2016ஆம் ஆண்டிற்கு ரூ.5 கோடி அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- மதுபானங்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்த 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# வீட்டுவசதி அளிப்பதில் விரைந்த மேம்பாடு வியத்தகு சாதனைகள்!



**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

- ரூ.2,765.57 கோடி செலவில் 19,114 புதிய குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு, அதில் 11,344 அலகுகள் ரூ.664.61 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 7,770 அலகுகள் ரூ.2,100.96 கோடி செலவில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- 43,528 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசால் அறிவிக்கப்பட்ட வட்டித் தள்ளுபடி திட்டத்தின் மூலம் 14,992 ஒதுக்கீடுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான வீடுகள் ஒதுக்கீடு 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

- பல்வேறு காரணங்களால், நீண்டகாலமாக, கடன்களை திரும்பச் செலுத்தாததால், வட்டிச் சுமை அதிகமாகி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு உரிய நிலுவையை செலுத்த இயலாத, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட அலகுகளைப் பெற்ற ஒதுக்கீடுதாரர்களுக்கென அரசு வட்டித் தள்ளுபடித் திட்டத்தை அறிவித்தது. இதன்மூலம் 14,992 ஒதுக்கீடுதாரர்கள் பயன்.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

- சென்னை மற்றும் இதர நகரங்களில், பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.3,702.26 கோடி செலவில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 62,609 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 2015–2016ஆம் நிதியாண்டில் "அனைவருக்கும் வீட்டுவசதி" திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக ரூ.457.50 கோடி செலவில் 12,500க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுடன், பேரூராட்சிகளில் 20,000 பசுமை வீடுகளை ரூ.420 கோடி செலவில் கட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.
- தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மதுரை மாநகரை குடிசைகளற்ற பகுதிகளாக மாற்றுவதற்கு தோப்பூர் உச்சப்பட்டி துணைகோள் நகரத்தில் 4,500 குடிசை வாசிகளை மறு குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.
- சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, சென்னை திருவொற்றியூரில் உள்ள அகில இந்திய வானொலி நிலைய திட்டப்பகுதி, நொச்சி நகர் மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப்பகுதிகளில் அவசர சுனாமி மறு குடியமர்வுத் திட்டத்தின்கீழும் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ராஜீவ்காந்தி வீட்டுவசதித் திட்டத்தின்கீழும், ரூ.350 கோடி செலவில் 7,801 அடுக்குமாடிக் குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது.
- 4,227 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டுமானம், பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக 13ஆவது நிதிக்குழுவின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.300 கோடி அளவிலான பணிகள் நிறைவு.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் 33,234 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,741.26 கோடி செலவில் கட்டப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன. 9,084 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.650 கோடி செலவில் முன்னேற்றத்தில் உள்ளன.
- 12,009 விற்பனைப் பத்திரங்கள் (குடியிருப்புகள் 5,354; மனைகள் 6,655) வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.280 கோடி செலவில் சென்னை மற்றும் இதர நகரங்களில் 3,500 பாழடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறு கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், இதர நிதி ஆதாரங்களைக் கொண்டு பாழடைந்த 1,172 குடியிருப்புகளை ரூ.93.46 கோடி செலவில் மீண்டும் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ரூ.62,810.18 கோடி செலவில் இராஜீவ் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 10 நகரங்களில் 2,596 குடிசைப் பகுதிகளில் வாழும் 5.20 இலட்சம் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் கணக்கெடுப்பு முடிவடைந்து அக்குடும்பங்களுக்கு வீட்டுவசதி அளிக்கவும், குடிசைப்பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்தவும் திட்டக் கருத்துருக்களுக்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- தமிழகத்தில், 21 குடிசைப்பகுதிகளில் ரூ.414.25 கோடி செலவில் 6,055 கான்கீரிட் குடியிருப்புகள் இதர மேம்பாட்டு வசதிகளுடன் கட்ட மைய அரசு ஒப்புதல் பெறப்பட்டு இதில் 4,918 குடியிருப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.26 கோடி செலவில் சென்னை மற்றும் இதர நகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள்.
- குடிசைப் பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு நன்கு வாழத் தகுதியுள்ள இடங்களை






அளிப்பதற்காக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் குடியிருப்புகளின் பரப்பளவை 325 சதுர அடியிலிருந்து 400 சதுர அடியாக உயர்த்தியுள்ளது.

- ரூ.34.05 கோடி செலவில் குடிசைப்பகுதிகளில் உள்ள வசதிகளை மேம்படுத்த சாலைகள், தெரு விளக்குகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் 456 நகர குடிசைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு 1.04 இலட்சம் குடும்பங்கள் பயன்.

## நகர் ஊரமைப்பு இயக்ககம்

- நகர் ஊரமைப்பு இயக்ககம், உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.1,600 கோடிக்கு மேல் பல்வேறு துறைகளுக்கு வழங்கியுள்ளது.

**நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியம் வழங்கி செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

**புராதன நகர மேம்பாட்டுத் திட்டம்**

- புராதன நகரத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், நகர ஊரமைப்பு இயக்கத்தால் ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் மானியமாக வழங்கப்பட்டு வந்த ரூ.50 இலட்சம், ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 26 புராதன நகரங்களுக்கு ரூ.22.23 கோடி மானியம் .

**போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்**

- 2011–2012ஆம் ஆண்டிலிருந்து முறையே மாநகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாகவும், நகராட்சிகளுக்கு ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- 2011 முதல் 2015 வரை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின்கீழ், 3 மாநகராட்சிகள் மற்றும் 32 நகராட்சிகளுக்கு ரூ.14.51 கோடி தொகையினை வழங்கியுள்ளது.

### பூங்கா அபிவிருத்தித் திட்டம்

- பூங்கா அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 140 பூங்காக்களை மேம்படுத்த ரூ.14.93 கோடியினை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான மானியத் தொகை ரூ.2.25 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் ரூ.1,639.61 கோடி அளவிலான பெரும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

### பெருந்திட்டம்

- ரூ.41 கோடி செலவில் புதிய தொழில்நுட்ப உதவியுடன் முழுமைத் திட்டம்/ மண்டலத் திட்டம் நகர மற்றும் ஊரமைப்பு பரப்பளவு முழுவதையும் 3 கட்டங்களாகப் பிரித்து செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது. 8,447 சதுர கி.மீ. பரப்பிற்கு முதற்கட்டப்பணி முடிவுறும் தருவாயிலுள்ளது.

### விரிவு மேம்பாட்டுத் திட்டம்

- கடந்த நான்காண்டுகளில் 150 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் / நுண்ணிய அளவிலான திட்டப்பணிகள் தொடங்கி நிறைவு பெற்றுள்ளன.

### 2012–2013

- நகர ஊரமைப்பு இயக்ககமானது ரூ.2.20 கோடி செலவில் இணையதளம் மூலமாக வரைபடங்களை தானியங்கி முறையில் கூராய்வு செய்ய மின் ஆளுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

- சென்னை மத்திய இரயில் நிலையத்தை பல்வழி போக்குவரத்து ஒருங்கிணைப்பு மையமாக உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ரூ.389.42 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.
- ரூ.128.41 கோடி மதிப்பீட்டில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 14.41 ஏக்கர் பரப்பளவில் சுமார் 492 கடைகள் கொண்ட உணவு தானிய அங்காடி வளாகம்.
- ரூ.22 கோடி மதிப்பீட்டில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விபத்துக்களைத் தடுக்கும் முயற்சியாக உள்வட்டச் சாலையை ஒட்டிய மஞ்சம்பாக்கம் கிராமத்தில் சுமார் 11.64 ஏக்கர் பரப்பளவில், ஓட்டுநர்களுக்கான வசதிகளுடன் சுமார் 400 சரக்குந்து வாகனங்கள் நிறுத்துமிடத்தை கட்டியுள்ளது.
- சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மறைமலைநகர், சித்தமனூர் பகுதியில் சுமார் 32.26 ஏக்கர் நிலப்பரப்பில், 30 தொழிற்கூடங்களுக்கான மனைப்பிரிவுகளை சுமார் ரூ.14 கோடி செலவில் மேம்படுத்தியுள்ளது.
- சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில், ரூ.20 கோடி செலவில் கூடுதல் இரண்டு அடுக்கு தரைதள வாகன நிறுத்தம் கட்டும் பணி.
- 320 தெருக்களை சீர்படுத்துவதற்கும், இணைப்பு சாலைகள் மற்றும் சாலைகளை அகலப்படுத்த கட்டுமானர்களிடமிருந்து நிலம் பெறப்பட்டது. இதில் 256 தெருக்களுக்கான நிலங்கள் தொடர்புடைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி நிதியுதவித் திட்டத்தின் மூலம் 98 உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.1,577.08 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு 24 சமூகம் சார்ந்த சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.387.19 இலட்சம் செலவில் வழங்கியுள்ளது.

## கூட்டுறவு வீட்டுவசதித் துறை

### வட்டித் தள்ளுபடித் திட்டம்

- வட்டித் தள்ளுபடி திட்டத்தின் கீழ் குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினர்களுக்கு முறையை 75, 50 மற்றும் 25 விழுக்காடு வட்டியும், 100 விழுக்காடு அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.513.41 கோடி தொகை 56,438 உறுப்பினர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டது.

❖ ❖ ❖

# தொழில்துறையில் புதுமை முயற்சி! வரலாறு காணாத வளர்ச்சி!




- அரசு மே 2011 முதல் 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ரூ.1,35,992 கோடியாகும்.
- தொழில் துறையின்கீழ் உள்ள வழிகாட்டி மையம் (Guidance Bureau), ஒற்றைச் சாளர முறையின் வாயிலாக கூடுதலாக ரூ.4,466.93 கோடி அளவிற்கு 47 திட்டங்களின் மூலம் முதலீட்டினை ஈர்த்துள்ளது.
- அசோசெம் (ASSOCHAM) பிப்ரவரி 2015 வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த ஒரு ஒப்பீட்டு பகுப்பாய்வு என்ற தலைப்பில், வளர்ச்சிக்கான காரணிகளாக கருதப்படும் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதி, மின்சாரம், சாலைகள், சுகாதாரம், வருவாய் மற்றும் சமபங்கீடு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய ஒன்பது குறியீடுகளில், எட்டு





குறியீடுகளில் முன்னிலை பெற்றுள்ளதால் தமிழ்நாட்டினை, " Best Performing State" என்று அறிவித்துள்ளது.

- 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தினங்களில் நடத்தப்பட்ட "உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு–2015" மாபெரும் வெற்றியாக அமைந்ததுடன், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2,42,160 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 4,70,065 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம்.
- ரூ.3,375 கோடி முதலீட்டில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் லார்சன் அன்டு டூப்ரோ நிறுவனம் இணைந்து மிகப் பெரிய துறைமுக வசதியுடன் கூடிய கப்பல் கட்டும் தளம். இத்திட்டத்தில் சுமார் 4,000 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பு.
- ரூபாய் 55 கோடி செலவில் தமிழ்நாடு உயிரி தொழில் பூங்கா III கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் நிறுவப்பட உள்ளது.
- சிப்காட் தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி நிதியுடன் 'தொழில் கட்டமைப்பு தொகுப்பு நிதி' (Industrial Infrastructure Consolidated Fund) உருவாக்கம்.
- ரூ.486.98 கோடி செலவில், சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் மற்றும் புதிய தொழிற் பூங்காக்களில் உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள்.
- சிப்காட் நிறுவனம், மாநிலத்தின் 12 மாவட்டங்களில், 20 தொழில் வளாகங்களை உருவாக்கியுள்ளது. ஐந்தாண்டுகளில் 3,374 ஏக்கர் நிலம், 432 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து ரூ.15,218.52 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளது. 72,648 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.
- சிப்காட் நிறுவனம் மதுரை–தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலை திட்டத்தினை செயல்படுத்த, மதுரை–தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலை மேம்பாட்டு நிறுவனம் (Madurai Thoothukudi Industrial Corridor Development Corporation Limited) ஒன்றினை நிறுவியுள்ளது. இப் பெருவழிச் சாலைக்கான நில எடுப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் பூங்காக்கள் / வளாகங்கள் / வளர்ச்சி மையங்கள் அமைப்பதற்காக இதுவரை சுமார் 31,645 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியுள்ளது. 6,869 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது.
- தென் மாவட்டங்களில் தற்போது இயங்கிவரும் மற்றும் புதிதாக அமைய உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில், தொழிற்சாலைகளை அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் அக்டோபர் 2013 முதல் சிறப்பு தொகுப்புச் சலுகைகள்;
  - ✶ 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு.
  - ✶ பத்திர குத்தகை மீதான முத்திரைத்தாள் பதிவின் போது கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு.
  - ✶ பின்வழங்கு மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிப்பு.
  - ✶ தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்குதல்.
  - ✶ மதிப்புக் கூட்டிய வரி (VAT) அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான ரூ.50 கோடி என்பது ரூ.10 கோடியாக குறைப்பு.

இத்திட்டத்தின்கீழ், 50 விழுக்காடு மானிய விலையில் இதுவரை 61.26 ஏக்கர் நிலம் நிலக்கோட்டை, புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி மற்றும் கங்கை கொண்டான் தொழில் வளாகங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் உருவாகும் கழிவுகளை மூலப்பொருட்களாகக் கொண்டு, ரூ.148 கோடி முதலீட்டில், நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய சிமெண்ட் தொழிற்சாலை துவக்கப்பட்டுள்ளது. மேலும், 900 மெட்ரிக் டன் அதிகரிக்க ரூ.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. காகித ஆலையில் உற்பத்தியாகும் திடக் கழிவுப் பொருட்களைக் கொண்டு, ஒரு காகித ஆலைக்குள் சிமெண்ட் தயாரிக்கப்படுவது இந்தியாவிலேயே இது முதல் முறையாகும்.
- திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் ரூ.1,650 கோடி முதலீட்டில் சுமார் 874 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை ஆலை துவக்கம்.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட, உபயோகப்படுத்திய காகிதங்களிலிருந்து, மை நீக்கம் செய்யப்பட்ட காகிதக் கூழ் தயாரிக்கும் பிரிவினை ரூ.167 கோடி மூலதனத்தில் நிறுவி உள்ளது.
- ரூ.158 கோடி மூலதனத்தில் நீராவி மற்றும் மின் சக்தி உற்பத்தி அமைப்புகளை சீரமைத்துப் புதுப்பிக்க, மூன்று பழைய குறைந்த திறன் கொண்ட கொதிகலன்களை மாற்றிவிட்டு ஒரு புதிய அதிக திறன் கொண்ட கொதிகலனும், 18.5 மெகாவாட் குறைந்த திறன் கொண்ட இரண்டு மின்னாக்கிகளை மாற்றிவிட்டு, 41 மெகாவாட் அதிக திறன் கொண்ட ஒரு மின்னாக்கியையும் நிறுவி உள்ளது.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித்திறன் கொண்ட ஈரப்பதம் கொண்ட நுண்ணிய கால்சியம் கார்பனேட் (Wet Ground Calcium Carbonate) ஆலையை, M/S OMYA, Switzerland உடன், Build – Own – Operate (BOO) என்ற முறையில், 200 டன் உற்பத்தித் திறன் கொண்ட வீழ்படிந்த கால்சியம் கார்பனேட் (Precipitated Calcium Carbonate) Miyia, M/S OMYA, Switzerland உடன், Build – Own - Operate என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள் நிறுவி உள்ளது.



- ரூ.30 கோடி செலவில் மதிப்புக் கூட்டிய காகிதம் மற்றும் காகித அட்டை தயாரிக்கக் கூடிய சிறு தொழில் புரியும் நிறுவனங்களுக்கான மையம் (Center for Conversion of Paper and Packaging Board Unit) கரூர் மாவட்டம், மாயனூரில் அமைப்பு.
- வெளிச் சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையேற்றத்தினால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், "அம்மா சிமெண்ட் திட்டம்" தமிழக அரசால் அறிமுகம். மூட்டை ஒன்று ரூ.190/– விலையில் விற்பனை. 29.01.2016 வரை 11,44,133 மெட்ரிக் டன் விற்பனை.
- தமிழ்நாடு உப்பு நிறுவனம் கடந்த ஐந்தாண்டுகளில் 9.70 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது.
- உப்பின் தரத்தினை மேம்படுத்த 100 டன் திறன் கொண்ட உப்பைக் கழுவும் இயந்திரத்தினை ரூ.1.5 கோடி செலவில் இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கத்தில் நிறுவியுள்ளது
- மூன்று வகையான "அம்மா" உப்பு, வெளிச் சந்தையில் குறைந்த விலையில் 29.01.2016 வரை 13,373 டன் உப்பு விற்பனை.
- தமிழ்நாடு உப்பு நிறுவனம், கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.137.53 கோடி அளவிற்கு உப்பினை விற்பனை.





- தொழில் முனைவோருக்கு, வெளிச்சந்தையில் வழங்கும் வட்டி விகிதத்தைவிட 3 சதவிகிதம் குறைந்த வட்டியில் 4,237 நிறுவனங்களுக்கு ரூ.1,859.06 கோடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன்.
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து தொழில் முனைவோரின் மூலதனத்தை 10 விழுக்காடாகக் குறைத்த திட்டத்தின் கீழ், மின் ஆக்கிகள் வாங்க ரூ.16.17 கோடி கடன். 221 பேர் பயன்.
- புவியியல் மற்றும் சுரங்கத்துறை, 2011 முதல் 2016 (டிசம்பர் 2015 முடிய) ஆம் நிதியாண்டு வரை ரூ. 4,413.68 கோடி அளவிற்கு கனிம வருவாய் ஈட்டியுள்ளது.
- தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் ரூ.42 கோடி மதிப்பீட்டில் மேலூரில் 100 சதவிகித ஏற்றுமதி நோக்குடன் புதிய கிரானைட் கற்பலகைகள் மெருகூட்டும் தொழிற்சாலை.
- தமிழ்நாடு கனிம நிறுவனம், 2013–2014ஆம் நிதியாண்டில் ரூ.188.87 கோடி விற்பனை. இதுவே, நிறுவன வரலாற்றில் அதிகபட்ச விற்பனை சாதனை. மேலும், அதே ஆண்டில் அதிகபட்சமாக ரூ.24.69 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.
- 2013–2014ஆம் ஆண்டில் ரூ.45.71 கோடி மதிப்பிலான கிரானைட் பிளாக்குகள் மற்றும் முடிக்கப்பட்ட கிரானைட் பொருட்கள் ஏற்றுமதி.
- 2014–2015ஆம் நிதியாண்டில், விற்பனை முறையே சுண்ணாம்புக்கல் ரூ33.04 கோடி, செழுமைபடுத்திய கிராபைட் ரூ30.33 கோடி, இந்தியத்தரமணல் ரூ.7.10 கோடி மற்றும் விரிவுபடுத்திய வெர்மிகுலைட் ரூ1.93 கோடி விற்பனை.
- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 2014–2015ஆம் ஆண்டில் முதன்முறையாக விற்பனை மூலம் ரூ.110 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.78.98 கோடி வரிக்கு முந்தைய இலாபம் ஈட்டியுள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளில், தொழில் துறையின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் ரூ. 1,976.18 கோடி இலாபம் ஈட்டியுள்ளன. 187.42 கோடி ரூபாயினை பங்கு ஈவுத்தொகையாக (Dividend இந்நிறுவனங்கள் அரசுக்கு அளித்துள்ளன.
- 2011–2012ஆம் ஆண்டில் ரூ.2,100–ஆக இருந்த மாநில அரசு பரிந்துரை விலையானது 2014–2015இல் டன்னுக்கு ரூ.2,850/– ஆக உயர்வு.
- தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், மே 2011 முதல் டிசம்பர் 2015 வரை ரூ.47.32 கோடி அளவிற்கு ஏற்றுமதி மூலம் வருவாய் ஈட்டியுள்ளது.

❖ ❖ ❖

### தகவல் தொழில்நுட்பவியல் துறை

# தன்னிகரில்லாத் திட்டங்களில் தழைத்தோங்கும் தகவல் தொழில் நுட்பம்!




**தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் மற்றும் கணினி சர்வர் பண்ணை**

- தேசிய மின்ஆளுமைத் திட்டத்தின் கீழ், மின்ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் 01.08.2011 அன்று துவங்கப்பட்டது.
- தகவல் பாதுகாப்பு நிருவாகம் மற்றும் தரவு மைய இயக்கங்கள் ஆகியவற்றிற்கான தேசிய அளவில் ISO/IEC 20000–1:2005 மற்றும் 27001:2005 தரச் சான்றிதழ்களை பெற்ற முதல் மாநிலம் தமிழகம் ஆகும். இது தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் செயலாக்கத்தில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.
- தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் தற்போது மேம்படுத்தப்பட்ட ISO தரச் சான்றிதழ்களான ISO/IEC 20000–1:2011 மற்றும் ISO/IEC 27001:2013 ஆகியவற்றைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், தமிழகத் தேர்தல் ஆணைய வாக்காளர் பட்டியல் திட்டம், விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம், மாணவர்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டம், மின்ஆளுமை மற்றும் மின்மாவட்டத் திட்டம் போன்ற 20க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளைச் சார்ந்த 39 இணையப் பதிவுகள்/ செயற்பாடுகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- மாநில குற்ற ஆவணக்கூடம், சென்னை மாநகராட்சி, தகவல் தொழில்நுட்பவியல் துறை (EFPS), வேளாண்மைத்துறை, நகராட்சி நிர்வாக ஆணையரகம் (e-Office), தமிழ்நாடு மின்னணு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் இதர அரசுத் துறைகள் மாநிலத் தரவு மையத்தைப் பயன்படுத்தி வருகின்றன.

- ரூ.40 கோடி செலவில் 40 அடுக்குகளுடன் கூடிய 5,000 சதுர அடி பரப்பளவிலான கட்டடத்தில் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் தேவையான வன்பொருள், மென்பொருள் மற்றும் சோதனைக் கருவிகளுடன் கூடிய கணினி சர்வர் பண்ணை (Server Farm) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கணினி சர்வர் பண்ணை மூலமாக அரசுத் துறைகள் தங்களது செயல்பாடுகளை தரவேற்றம் செய்வதற்கு முன் பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை செய்து கொள்ள முடியும்.

**மேகக் கணினியம்**

- சி–டாக் (C-DAC) நிறுவனத்துடன் இணைந்து ஒரு முன்னோடித் திட்டமாக தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் மேகக் கணினியம் (Cloud) அமைக்கப்பட்டுள்ளது. வேட்டி–சேலை திட்டம், எல்காட் நிறுவனத்தின் நிறுவன வளத் திட்டமிடல் மற்றும் வசதி மேலாண்மை (ERP-FMS) ஆகியவை இக்கணினியத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு முழுமையான மேகக் கணினியத்தை தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

**பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம்**

- தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்கான பேரிடர் மீட்பு மையத்தை (Disaster Recovery Center) திருச்சியில் ஏற்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் உடனுக்குடனான தரவு மீட்புத் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் ஒரு அருகாமை பேரிடர் மீட்பு மையத்தை (Nearline DRC) ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மத்திய அரசின் தரவு மையத்துடன் ஏற்படுத்த நடவடிக்கை.

**தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தேசிய அறிவுசார் வலையமைப்பு**

- மாநில அரசின் முழுமையான நிதியுடன் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (Tamil Nadu State Wide Area Network - TNSWAN) இரண்டாம் கட்ட செயல்பாடுகள் 09.09.2013 அன்று தொடங்கப்பட்டன. 2000க்கும் மேற்பட்ட அரசுத் துறை அலுவலகங்களுக்கு கிடைமட்ட இணைப்பு (Horizontal Connectivity) இதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- 100 mbps அளவு இணைய பரிமாற்றத்தினைக் கொண்ட தேசிய அறிவுசார் வலையமைப்பின் (National Knowledge Network) ஒரு 1 Gbps இணைப்பு தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்துடன் 22.02.2012 முதல் இணைக்கப்பட்டுள்ளது.
- மாவட்ட தலைநகரங்களின் தேவைக்கேற்றவாறு, தேசிய அறிவுசார் வலையமைப்புக்கான அகண்ட அலைவரிசை இணைப்பு 34 mbps/100 mbps/1 Gbps என்ற அளவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**மின் அஞ்சல் பயன்பாடு**

- தலைமைச் செயலகத்தில் உள்ள தேசிய தகவல் மையத்தின் தற்போதைய உட்கட்டமைப்பை பயன்படுத்தி, குறுகிய கால மின் அஞ்சல் பயன்பாடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மின் அஞ்சலை அலுவல் சார்ந்த பதிவுகளுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்பு ஆவணமாக மாற்றுவதற்கான விதிமுறைகளைச் செயல்படுத்தும் வகையிலும், தடையில்லா கணினி இணைப்பினை அளிக்கும் வகையிலும் இது அமையும். ஒரு முழுமையான மின்அஞ்சல் பயன்பாடு (eMail Solution) உருவாக்கப்பட்டுள்ளது.

**மின் மாவட்ட திட்டம் மற்றும் மின்மாவட்ட வலைதளம்**

- தேசிய மின்னாளுமைத் திட்டத்தின்கீழ், அரசின் மின்ஆளுமை சேவைகளைக் குடிமக்களுக்கு அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக வழங்கும் நோக்கில் மின்மாவட்டத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்ந்த கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்கள் மற்றும் வருவாய், சமூகநலம் ஆகிய துறைகளின் மின்மாவட்ட சேவைகளும் இம்மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.
- விரிவாக்கப்பட்ட மின் மாவட்டத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின்ஆளுமை சங்கங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 5 மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வந்த மின்மாவட்டத் திட்டத்தை இதர 27 மாவட்டங்களுக்கும் 24.02.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டது.



- 31.12.2015 வரை மொத்தம் 1.17 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 10 மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளியிலேயே இணையத்தின் வாயிலாக பதிவு செய்து, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை அலுவலகத்திலிருந்து பதிவு செய்ததற்கான அட்டையை, தங்களுடைய தகுதிநிலை மாறாமல் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மேலும், இ–சேவை மையங்கள் மூலம் தற்போது அரசுத் துறைகளால் மின்மாவட்ட வலைதளம் மூலம் வழங்கப்பட்டு வரும் சேவைகளுடன், கூடுதலாக மேலும் 300 சேவைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அரசு இ–சேவை மையங்கள்**

- பொதுமக்கள் அனைவரும் ஒரே இடத்தில், அரசின் பல்வேறு சேவைகளை எளிதில் பெற்றிட அரசு இ–சேவை மையங்களை தமிழக அரசு எல்காட் நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், முதன்மை வேளாண் கூட்டுறவு கடன்வழங்கு சங்கங்கள், கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழு அலுவலகங்கள் மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர் அமைப்பு மூலம் அமைத்துள்ளன.
- 11,120 அரசு இ–சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மேலும், அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் அரசு இ–சேவை மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நகர்ப்புற அரசு இ–சேவை மையங்கள்**

- சென்னையில், 14 நகர்ப்புற அரசு இ–சேவை மையங்கள் மற்றும் மின்மாவட்ட வலைதளம் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 24.02.2014 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.
- இந்த மையங்கள் தற்போது 520 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. இதில் 200 மையங்கள் எல்காட் நிறுவனம் வாயிலாகவும், 320 மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தகவல் தொழில்நுட்ப பணிநிலை உருவாக்கம்**

- மாநிலம் முழுவதும் அரசுத் துறைகளின் மின்ஆளுமை முயற்சிகளைக் கொண்டு செல்லும் வகையில், தகவல் தொழில்நுட்ப பணிநிலை உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக 98 பதவியிடங்களுடன் மின்னாளுமை இயக்குநரகத்தின் கீழ் செயல்பட உள்ளது. இப்பணியிடங்களை நிரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாநிலக் குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம்**

- தமிழ்நாட்டில் மாநிலக் குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தினை நிறுவ ஆணையிடப்பட்டு, இம்மையத்தில், தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் மூலம் குடிமக்களின் பயோமெட்ரிக் தரவுத் தளத்தை உருவாக்கி, அது மைய அரசின் UIDAI நிறுவன ஆதார் எண்ணின் மூலம் சரிபார்க்கும் திட்டம் ரூ.25.93 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு**

- அரசுத் துறைகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளத்தக்க வகையில் மின்வரைபடத் தொகுப்பினை உள்ளடக்கிய புவிசார் தகவல் அமைப்பு ஒன்றினை நிறுவிட நிருவாக ஒப்புதல்.

**குறுந்தகவல் மூலம் கண்காணிப்பு வசதி**

- பொதுமக்கள் மின்மாவட்ட வலைதளத்தில் சமர்ப்பித்திடும் விண்ணப்பங்களின் நிலையைக் குறுந்தகவல்கள் வாயிலாகக் கண்காணித்திடும் வகையில் “குறுந்தகவல் மூலம் கண்காணிப்பு வசதி” ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்**

- 29.12.2015 அன்றுள்ளபடி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 32,22,105 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**“வெப் ரத்னா” விருது**

- 2012 மற்றும் 2014ஆம் ஆண்டுகளுக்கான மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் “வெப் ரத்னா” விருது இணையதளத்தில் மக்களுக்குப் பயன்படும் தகவல்கள் மற்றும் சிறப்பான மின்ஆளுமை சேவைகளுக்காக தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்**

- செயலிழந்த நிலையில் இருந்த அரசு கேபிள் டி.வி. நிறுவனத்துக்குப் புத்துயிரூட்டி, புனரமைத்து, அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.3 கோடி நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். மேலும், அந்நிறுவனத்தின் பெயரினை "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை.
- தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் அதன் சேவைகளை சென்னை நீங்கலாக தமிழகம் முழுவதும் 02.09.2011 அன்றும், சென்னையில் 20.10.2012 அன்றும் துவங்கியது.
- ரூ.70 என்ற குறைந்த மாதக் கட்டணத்தில் நிறைவான சேவைகளை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 70.52 இலட்சம் மற்றும் ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை 26,246 ஆக உள்ளது.
- தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் இலவச சேனல்கள், கட்டணச் சேனல்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல்கள் உட்பட 90 முதல் 100 சேனல்களை வழங்கி வருகிறது. 137 கட்டணச் சேனல்களைக் கொள்முதல் செய்துள்ளது.
- மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு சென்னை மாநகரத்தைச் சார்ந்த சி.ஏ.எஸ். பகுதிகளுக்கான எம்.எஸ்.ஓ. உரிமம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்கப்பட்டவுடன், சென்னை மாநகரப் பகுதிகளுக்கு டிஜிட்டல் முறையில் கேபிள் டி.வி. சேவைகளை இந்நிறுவனம் வழங்கும்.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை இண்டர்நெட் சேவைகளை உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்குவதற்காக ரெயில்டெல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா எனும் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இணையதள சேவை வழங்குவதற்கான உரிமம் பெற்றுள்ள இதர நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் முதற்கட்டமாக டிசம்பர் 2014இல் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 12 அரசு இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டது. மேலும் உள்ள 224 வட்டங்களிலும் பிப்ரவரி 2015 முதல் அரசு இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 11.01.2016 அன்று 126 அரசு இ–சேவை மையங்கள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துவக்கி வைக்கப்பட்டன.

**இல்லம்தோறும் இணையம்**

- அரசின் சேவைகளை இணையம் மூலம் பொதுமக்கள் பெற்று பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்ட மத்திய அரசின் பாரத்நெட் திட்டத்தை தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு மூலம் செயல்படுத்தப்படுவதற்கென "தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன்" என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்திட தொடர் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கெனவே பெற்றுள்ள Internet Service Provider உரிமத்தினை பயன்படுத்தி குறைந்த செலவில் தரமான இணைய இணைப்புகளை வழங்கிடவும், அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணையதள சேவைகள் ஆகியவற்றுடன் சேர்த்து, புதிதாக "இணைய வழி தொலைக்காட்சி" சேவைகளை (Internet Protocol Television-IPTV) வழங்கிடவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள்**

- சமுதாய மற்றும் பொருளாதார வசதிகளில் மிகவும் பின்தங்கியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி, அவர்கள் வேலைக்கு செல்வதற்கு ஏதுவாகவும், கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயராமலும், மேலும் நக்சல் ஆதிக்கத்திற்கு இரையாகாமல் இருப்பதற்காகவும் அரசு மேம்படுத்தப்பட்ட கிராமப்புற வணிக வெளிப்பணிக் கொள்கையை 01.06.2012 அன்று வெளியிட்டது.
- இந்தக் கொள்கையின் அடிப்படையில், கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்களை மேம்படுத்துவதற்கும், மற்றும் இம்மையங்களை ஊரகப் பகுதிகளில் அமைத்திடவும் அரசு ரூ.8.96 கோடி ஒதுக்கியுள்ளது.
- ஸ்ரீரங்கத்தில் ஒரு கிராமப்புற வணிக வெளிப்பணி மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 03.06.2013 அன்று துவக்கி வைத்தார். தமிழகத்தின் மற்ற இடங்களில் இத்தகைய மையங்களை அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கணித்தமிழ் ஆய்வுக்கூடம், தமிழ் மென்பொருள் உருவாக்க மையம், தமிழ் மின் நிகண்டு மற்றும் இணையவழி களஞ்சியம், தகலாற்றுப்படை, கணித்தமிழ் பேரவை மற்றும் தமிழ் குறுஞ்செயலிகள்**

- தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் உள்ள கலையரங்கத்தின் உள்கட்டமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- மொழியியல் அடிப்படையிலான இலக்கணக் குறிப்புடன் கூடிய விரிதரவு திட்டத்திற்காக சங்ககால நூல்கள், சங்கம் மருவிய கால நூல்கள், காப்பியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 56 நூல்களுக்கு முதல்கட்டமாக இலக்கணக் குறிப்பு இடும் பணி நடைபெற்று வருகிறது.
- கணினி மொழிபெயர்ப்பு, OCR போன்ற தமிழ் மென்பொருள்களை உருவாக்குவதற்கு கணித் தமிழில் ஆராய்ச்சி மேற்கொள்ள ஒரு கணித்தமிழ் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டுள்ளது.
- ஒருங்குறி (Unicode) மற்றும் அனைத்துரு எழுத்துரு (TACE) முறைகள் தமிழ்நாடு அரசின் செந்தரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, எழுத்துருக்களையும், விசைப்பலகை இடைமுகங்களையும் உருவாக்கி இலவசமாகப் பயனாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.
- தமிழ் மென்பொருள் உருவாக்கத்தில் ஆர்வமுள்ளவர்களுக்குத் தேவையான ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ள தமிழ் மென்பொருள் உருவாக்க மையத்தை 22.09.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.
- தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் மின்நூலகம், மொழியியல் அடிப்படையிலான தமிழ்விரிதரவு மற்றும் இணையவழிக் கல்விக்கான தமிழ்ப்பாடங்கள் உள்ளன. இதன் உதவியுடன் தமிழ் இணையக் கல்விக்கழகம் "தமிழ் மின் நிகண்டு" ஒன்றை உருவாக்கியுள்ளது. தமிழ் மின் நிகண்டு என்பது பொருள் குறித்த பல சொற்களைக் கொண்டிருக்கும்.
- நாட்டுடைமையாக்கப்பட்ட 2,217 நூல்கள் தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல்களை மின்னுருவாக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- உலகெங்கும் உள்ள தமிழறிஞர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து இணைய வழி பங்காற்றி தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தமிழர், தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை உள்ளடக்கிய தமிழ்மொழி, கலை மற்றும் பண்பாட்டுக்கான விரிவான இணையவழி களஞ்சியம் ஒன்று தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் தமிழர்தம் தொன்மை, தமிழிலக்கியம், பண்பாடு குறித்த தகவல்களைப் பரிமாறிடும் வகையில் "தகவலாற்றுப்படை" திட்டத்தின் கீழ், மாதந்திரத் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.
- கணித்தமிழ் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் "கணித்தமிழ் பேரவை" ஒன்று ஒவ்வொரு கல்லூரியிலும் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் அவர்களால் கணித்தமிழ் பேரவை 30.10.2015 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசியில் தமிழ்ப் பாடங்கள் இலக்கணம் மற்றும் அகராதி ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான குறுஞ்செயலிகள் ரூ.2.5 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

❖ ❖ ❖

தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

# தொழிலாளர் நலன் மேம்படுத்தும் தொய்விலா சாதனைகள்



### தொழிலாளர் நலவாரியம்

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை 97,067. நலத்திட்ட உதவிகளுக்காக ரூ.4,82,35,835/– செலவிடப்பட்டது.

### அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியம்

- 17 அமைப்புசாரா நல வாரியங்களில் 13,95,923 தொழிலாளர்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டதுடன், 20,68,229 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.535 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களால் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதை உறுதி செய்யும் வகையில் மின்னணு பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/–ஆக உயர்வு. இதன் மூலம், 47,422 ஓய்வூதியதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் 60 நபர்களுக்கு ரூ.12.75 இலட்சம் செலவில் கனரக வாகனங்களை இயக்க திறன்மிகு பயிற்சி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் அனைத்து ஓட்டுநர்களும்பயன்பெறும்வகையில் "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்" (Tamil Nadu Unorganised Drivers Welfare Board) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இதுவரை 161 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 19,167 ஓட்டுநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- 17 நல வாரியங்களிலும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களைத் தொழிலாளர்கள் அறியும் வகையில் மாவட்டந்தோறும் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் 1.39 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவுப் பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில்வதற்காக வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக ரூ.2,000/– உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை 2,78,151 பேர் பயன்.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி ரூ.38.48 கோடி செலவில் 19 மாவட்டங்களில் தொழிலாளர் துறை ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தனி நபர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கட்டுமானத் தொழிலாளர் நலநிதியான பங்குத் தொகை அவர்கள் மேற்கொள்ள உள்ள கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாக 17.12.2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் தங்கிப் பணிபுரியும் வெளிமாநில கட்டுமானத் தொழிலாளர் பற்றிய தகவல்களை சேகரித்தல் (Mapping of Inter- State Migrant Construction Workers) தொடர்பான பணி ரூ.33,50,000/– கட்டுமானத் தொழிலாளர் நலநிதியை பயன்படுத்தி நடைபெற்று வருகிறது.
- அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவினைப் புதுப்பிப்பதற்கான கால வரம்பு 2 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலத்திட்டத்தின் பட்டியலில் 15 புதிய வகை கட்டுமானத் தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி தற்போது பணியிடத்தில் பணியில் ஈடுபட்டு இருக்கும்போது, விபத்து ஏற்பட்டு இறக்கும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான நிதி உதவி ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி, வெளிமாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களை (Inter-State Migrant Workers) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணி அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் ரூ.16.39 கோடி செலவில் 50 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. முதல் கட்டமாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு மூன்று மருத்துவ

வாகனங்கள் (3 Tempo Travelers Vehicles) வாங்கப்பட்டு மருத்துவமனைக்கு ஏற்றவாறு கட்டமைப்பு (Fabrication) செய்யப்பட்டு திட்டத்தினை தொடங்குவதற்கு வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள், கட்டுமான பணியிடங்களின் அருகில் உள்ள அனைவருக்கும் கல்வி திட்டத்தின் (SSA) கீழ் செயல்படும் மையங்களில் சேர்ந்து கல்வி பயில ஏதுவாக வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி, கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் தற்காலிக அங்கன்வாடி மையங்கள் அமைக்க ICDS துறையுடன் இணைந்து ரூ.2.31 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழான அறிவிப்பின்படி, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும் என மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் ரூ.105 கோடி செலவில் துயில் கூடங்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும். இவை கட்டப்படும் வளாகங்களில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவை செய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்புசேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

- காஞ்சிபுரம் மாவட்டத்தில், தையூர் “B” கிராமத்தில் ரூ.16.76 கோடி செலவிலும், எழுச்சூர் கிராமத்தில் ரூ.14.90 கோடி செலவிலும் துயில் கூடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிகாட்சி மூலம் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

- திருச்சி மாவட்டத்தில், திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டம், கொட்டப்பட்டு கிராமத்தில் தூங்கும் அறைகள் (Dormitories) கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு 250 தொழிலாளர்களுக்கு தூங்கும் அறைகள் கட்டுவதற்கு 07.01.2016 அன்று ரூ.5,29,37,500/– தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து பெற அரசு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது.

- அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யவும், நலதிட்ட உதவிகள் எளிதாக பெறுவதற்கும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு செலுத்தும் பங்களிப்புத் தொகையினை இணையம் வழியாக வாரிய வங்கி கணக்கிற்கு நேரடியாக விண்ணப்பிக்க இணைய தள வசதி ரூ.1.25 கோடி செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் திட்டங்கள் பற்றிய விவரங்களை பெறுவதற்கும், தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்களின் குறைகளைக் களைவதற்கும் வசதியாக கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய பன்மொழி உதவி மையம் ரூ.16 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கடந்த ஆண்டுகளில் பதிவு எண்ணிக்கை அதிகமாக உள்ள கன்னியாகுமரி, வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் விரைவாக பதிவு செய்யவும், உரிய காலத்தில் நலத்திட்ட உதவித்தொகை பட்டுவாடா செய்வதற்கும் ஏதுவாக கூடுதலாக தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் ரூ1.26 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கு ஏற்ப கன்னியாகுமரி, வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள முறையே விளவங்கோடு, ஆம்பூர் மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் மாவட்ட கண்காணிப்புக் குழுவால் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- வெளி மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் தங்கிப் பணிபுரியும் 33,50,000 வெளி மாநில கட்டுமானத் தொழிலாளர்கள் (Inter-State Migrant Workers), தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.



### தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

- தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தை தோற்றுவித்து அமைப்புசாரா தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அவரை சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் வாயிலாக 668 நபர்களும் குறுகிய கால திறன் ஏய்தும் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், 117 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- பீடித் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு வழங்கும் பங்குத் தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.60,000/–மாக உயர்த்தப்பட்டு 200 வீடுகள் கட்டுவதற்கு ரூ.1.20 கோடி ஒதுக்கீடு.

### சட்டமுறை எடையளவு சட்டம்

- 16.05.2011 முதல் 31.12.2015 வரை எடையளவு சட்டத்தின் கீழ் 16,52,310 ஆய்வுகளும் ரூ.10.25 கோடி முத்திரைக் கட்டணமாகவும், ரூ.5.14 கோடி இணக்கக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டது.

- 16.05.2011 முதல் 31.12.2015 வரை பொட்டலப் பொருட்கள் விதியின் கீழ், 7,58,669 ஆய்வுகளும், ரூ.11.82 இலட்சம் பதிவுக் கட்டணமாகவும் மற்றும் ரூ.3.70 கோடி இணக்கக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டது.

### நிருவாகம்

- மலைத் தோட்ட தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திட தற்போது அனைத்து தோட்ட நிறுவன ஆய்வர்களுக்கும் ஆய்வு பணி மேற்கொள்ள ஊர்திகள் (ஈப்புகள்) வழங்கப்பட்டுள்ளன.

- தொழிலாளர் இனத்தினருக்கு சிறப்பான சேவை செய்திட செயலாக்கம் மற்றும் சமரச பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு 35 வாகனங்கள் (ஈப்புகள்), ரூ.2,06,64,420 செலவில் வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 03.08.2015 அன்று சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டது.

- மதுரையில் 0.1218.5 சதுர மீட்டர் (30 சென்ட்) நிலப்பரப்பில் கட்டுமானம் மேற்கொள்ள ரூ.135 இலட்சம் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழான ஆய்வகங்கள் கட்ட மத்திய அரசு நிதி ரூ.1 கோடியினைக் கொண்டு மதுரையில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகத்துடன் கூடிய ஆய்வகம் ரூ.185 இலட்சம் திட்ட செலவினத்திலும் மற்றும் கோவையில் செயல்முறை மற்றும் இரண்டாம் நிலை ஆய்வகங்கள் ரூ.50 இலட்சம் திட்ட செலவினத்திலும் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் 25.06.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- கடந்த நான்காண்டுகளில் 21,517 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டுள்ளன. 8,262 வழக்குகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. 3,475 தொழிற் தாவாக்கள் நிலுவையில் உள்ளது.

### சமரசப் பணிகள்

- 31.12.2015 அன்றுடன் முடிந்த ஐந்தாண்டுகளில் 26,011 தொழில் தகராறுகள் முடிக்கப்பட்டுள்ளன. 9,441 வழக்குகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. 1,060 தொழிற்தாவாக்கள் நிலுவையில் உள்ளது.

- 108 ஆம்புலன்ஸ் சேவையில் ஈடுபட்டுள்ள 3,000 ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் போனஸ் மற்றும் இதர பணி நிலைமைகள் குறித்து 17.10.2014 அன்று தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)இன் கீழ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

- தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்களின் 12வது ஊதிய உயர்வு குறித்து 28.12.2014 முதல் நடைபெற்ற வேலை நிறுத்தம் 31.12.2014 அன்றைய சமரச பேச்சு வார்த்தையில் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 1.25 இலட்சம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

- 18 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஊதிய உயர்வு குறித்து 11.12.2014 முதல் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். சமரச அலுவலர்களின் தலையீட்டினால், 31.12.2014 முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு அனைவரும் பணிக்குத் திரும்பினர்.

- பீடி சுற்றும் தொழிலில் 10.08.2015 அன்று ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தினால் சுமார் 4 இலட்சம் பீடி சுற்றும் தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

- 45 பொறியியல் நிறுவனங்களிலும், 1 நூற்பாலை நிறுவனத்திலும், 18 சர்க்கரை ஆலைகளிலும், 8 போக்குவரத்து நிறுவனங்களிலும், 1 இரசாயன நிறுவனத்திலும், 20 ஆயத்த ஆடை

நிறுவனத்திலும், 9 தோட்ட நிறுவனங்களிலும், 9 தோல் பதனிடும் நிறுவனங்களிலும், 35 இதர நிறுவனங்களிலும், வேலை நிறுத்தம், முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 2,24,908 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது.

- 13 துணி நெசவு நிறுவனங்களிலும், 8 பொறியியல் நிறுவனங்களிலும், 3 தோல் பதனிடும் நிறுவனங்களிலும் மற்றும் 8 இதர நிறுவனங்களிலும் கதவடைப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 5,476 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது.

**குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்**

- அனைத்து மாவட்டங்களிலுள்ள சட்ட அமலாக்க அலுவலர்கள் மற்றும் மாவட்ட சிறப்பு தடுப்பு படைகள் மூலம், 6,19,595 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 206 முரண்பாடுகள் கண்டறியப்பட்டன. 122 வழக்குகள் தொடரப்பட்டன. 92 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.9.23 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

- அரசின் தீவிர நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட 231 குழந்தைகளில், 97 குழந்தைத் தொழிலாளர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்கள் மற்றும் SSA பள்ளிகள் மற்றும் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 67 குழந்தைத் தொழிலாளர்கள் குழந்தைகள் உதவி மையம் மற்றும் அரசு இல்லங்களிலும் 67 இடம்பெயர்ந்த குழந்தைத் தொழிலாளர்கள் அவர்களது இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கும்பொருட்டு, உரிய அறிவுரைகளுடன் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

- குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 7,339 நிறுவனங்களில் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 40 குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

- 31.12.2015 அன்றைய தேதியில், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ், 235 சிறப்புப் பயிற்சி மையங்களில் 9,203 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

- 31.12.2015 அன்றைய தேதியில், 14,795 மாணவர்கள் முறையானப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

- 31.12.2015 அன்றைய தேதியில், 1,026 மாணவர்கள் தற்போது மருத்துவம், பொறியியல், கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் தங்கள் மேற்படிப்பினைப் பயின்று வருகின்றனர்.

- பொதுமக்களிடையே குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், 2015ஆம் ஆண்டு, குறுஞ்செய்திகள், திரையரங்கங்களில் சிலைடுகள், கையெழுத்து இயக்கம், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, பேரணிகள், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், துண்டு பிரசுரங்கள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்களில் விளம்பர பதாகைகள் மற்றும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு கடிதங்கள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

- உயர்கல்வி பயிலும் முன்னாள் குழந்தைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மேற்படிப்புக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.250/– லிருந்து ரூ.500/– ஆக, 2011–2012ஆம் கல்வியாண்டு முதல் உயர்த்தப்பட்டு, அவர்களது கல்விக் காலம் முழுமைக்கும் வழங்கப்படுகிறது. இதன் மூலம், 2,743 மாணவர்கள் ரூ.1.65 கோடி உதவித் தொகையாகப் பெற்றுள்ளனர்.

- மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டம் 12.06.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப்பரிசும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும், மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு கல்வி பயிற்றுநருக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு தொழிலாளர் ஆய்வர், ஒரு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், ஒரு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் மற்றும் இரண்டு களப் பணியாளர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து தற்போது ஆசிரியையாகப் பணிபுரியும் திருமதி.தீபா, தனியார் வங்கியில் உதவி மேலாளராகப் பணியாற்றும் திரு.சங்கர் மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற திரு.கார்த்திக் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

- ஜூன் 12ஆம் நாளன்று குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மாவட்டங்கள் தோறும் 08.06.2015 முதல் 12.06.2015 முடிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- 08.06.2015 மற்றும் 09.06.2015 ஆகிய நாட்களில் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டன.

- சென்னை தீவுத்திடலில் 41ஆவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் 2015 குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வு தொடர்பாகக் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இக்கையெழுத்து இயக்கத்தில் 64,563 பொதுமக்கள் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உறுதிமொழியில் கையொப்பமிட்டுள்ளனர்.

- சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதந்தோறும் ரூ.150/– உதவி தொகை வழங்கப்படுகிறது.

- தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச சீருடை மற்றும் தேவைப்படும் மாணவர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

- சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவுடன் கூடுதலாக 5 முட்டைகள் / வாழைப்பழம் ஆகியவையும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

- தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையத்தில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே ரூ.5,000/–, ரூ.3,000/– மற்றும் ரூ.2,000/– ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது.

- தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் பயின்று பின் முறையானப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 100 மாணவர்களுக்கும் மேல் தற்போது பொறியியல் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

- 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் கட்டுமானத் தொழிலிருந்து மீட்கப்பட்ட தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன். வி. கார்த்திக் 1,156 மதிப்பெண்களும், வீட்டு வேலையிலிருந்து மீட்கப்பட்ட திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி வி. மகாலட்சுமி 1,142 மதிப்பெண்களும் மற்றும் பட்டாசுத் தொழிலிருந்து மீட்கப்பட்ட விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சி. முத்துச்செல்வி 1,135 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.

- 2015ஆம் ஆண்டு நடைபெற்ற 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் விசைத்தறி தொழிலிலிருந்து மீட்கப்பட்ட நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. வி. இந்துமதி என்பவர் 490 மதிப்பெண்களும், செங்கற்சூளையிலிருந்து மீட்கப்பட்ட சேலம் மாவட்டத்தை சேர்ந்த செல்வி. பி. கீர்த்திகா என்பவர் 483 மதிப்பெண்களும் மற்றும் கட்டுமானத் தொழிலிருந்து மீட்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் கே. சக்திவேல் என்பவர் 484 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.

## தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம்

**தொழிற்சாலைகள் பதிவு செய்தல்**

- தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் புதிதாக 11,411 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு அதன் விளைவாக 3,51,442 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம், 1981**

- தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் சட்டம், 1981 இன்படி 16,989 தொழிற்சாலைகளில் 1,95,107 தொழிலாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளன.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள்**

- 6,693 கட்டுமான நிறுவனங்கள் புதிதாக பதிவு. கட்டட நிறுவன வேலையளிப்பவர்கள் மற்றும்

ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள் அமலாக்கம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இதுவரை 136 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 12,429 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள்**

- பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது குறித்தும் நிருவாகத்தினர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியும், விபத்தினைத் தடுக்கும் வகையில் தொழிலாளர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றன. 495 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 24,829 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்புப் பயிற்சி**

- பாதுகாப்பான முறையில் பணிபுரிவதன் முக்கியத்துவம் குறித்து தொழிலாளர்களுக்கும் மற்றும் நிருவாகத்தினருக்கும் கற்பிப்பதற்காக, இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே 2,260 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 1,03,039 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**மாநில பாதுகாப்பு விருதுகள்**

- தொழிற்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்தவும் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் நிருவாகத்தினர் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், மாநில பாதுகாப்பு விருதுகளுக்கான முதல் பரிசு வெள்ளி கேடயத்தின் மதிப்பினை 2011ஆம் ஆண்டு முதல் ரூ.2,500/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தியும், இரண்டாம் பரிசு வெள்ளி கேடயத்தின் மதிப்பினை ரூ.1,500/–லிருந்து ரூ.4,000/–ஆக உயர்த்தியுள்ளது. 2010 முதல் 2012 வரையிலான ஆண்டுகளுக்கான 197 தொழிற்சாலை நிருவாகத்தினர் விருதுபெற தேர்ந்தெடுக்கப்பட்டு மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.

**உயர்ந்த உழைப்பாளர் விருது**

- விபத்து தடுப்பு நடவடிக்கை மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், பயன்மிக்க கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளின் எண்ணிக்கை 2012ஆம் ஆண்டு முதல் 24லிருந்து 43ஆக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 2010 முதல் 2012 வரை ஆண்டிற்கு 91 தொழிற்சாலைகளிலிருந்து 169 தொழிலாளர்கள் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் பெற தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 26.11.2014 அன்று விருதுகள் வழங்கப்பட்டன.

**சிவகாசியில் பயிற்சி மையம் அமைத்தல்**

- சிவகாசி மற்றும் விருதுநகர் பகுதிகளில் இயங்கி வரும் மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு, சிவகாசியில் நிரந்தரப் பயிற்சி மையம் ரூ.1.25 கோடி செலவில் துவங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருக்கரங்களால், காணொலிக் காட்சி மூலம் கடந்த 25.06.2015 அன்று புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. 23 குழுக்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 714 ஃபோர்மென்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சி வகுப்புகளின் பயனாக விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பெருமளவில் விபத்துக்கள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**நடமாடும் கண்காணிப்புக் குழு**

- பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு வழிமுறைகளை கடைப்பிடிப்பது குறித்து சீரிய முறையில் கண்காணிக்கவும், தொழிலாளர்கள், மற்றும் நிருவாகத்தினருக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படும் வகையிலும், நடமாடும் கண்காணிப்புக் குழு ஒன்று (MobileTeam) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில் விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு, சிறு நாடகங்கள், கிராமிய நடனங்கள் போன்றவை மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு, இதுவரை 979 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**இவ்வியக்கத்திற்கான பிரத்யேக வலைதளம் உருவாக்குதல்**

- 2014–2015 சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, இவ்வியக்கத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்கிட ஆணை வெளியிடப்பட்டது. இவ்வலைதளம் உருவாக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளது உரிமங்களைப் புதுப்பிக்கவும், புதியதாக பதிவு பெற்ற தொழிற்சாலைகளுக்கு, புது உரிமங்களையும் இந்த வலைதளம் மூலம் வழங்க இயலும். இந்த வலைதளம் உருவாக்கப்படுவதன் மூலம் இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த இயலும்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வேலைவாய்ப்புப் பிரிவு**

- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு கல்வித்தகுதியினை 60,51,903 கோடி பதிவுதாரர்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்துள்ளனர்.
- வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 74,002 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.
- 2008, 2009 மற்றும் 2010 வருடத்தில் பதிவை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு புதுப்பித்தல் சலுகை வழங்கியதன் மூலம் 1,27,695 பேர் பயன் பெற்றுள்ளனர்.
- 2011, 2012 மற்றும் 2013 வருடத்தில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டு வருவதன் மூலம், 1,10,694 பேர் பயன்பெற்றுள்ளனர்.
- 1,28,058 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பணிநியமனம் பெற்றுள்ளனர்.
- 30.64 கோடி ரூபாய், 20 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் 1 மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகத்திற்கு சொந்தக்கட்டடம் கட்ட நிதி ஒப்பளிக்கப்பட்டது.

**பயிற்சி பிரிவு**

- சிறந்த முதல்வர் / நற்பயிற்றுநருக்கான (Best Trainer) ரொக்கப் பரிசுத் தொகை ரூ.1,000/– என்பது ரூ.10,000/– ஆக உயர்வு.
- மாநில அளவிலான திறனாய்வுப் போட்டியில் சிறந்த பயிற்சியாளருக்கு வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.5,000/– என்பது ரூ.25,000/– ஆக உயர்வு.

**சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

- கடலூர், கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய மூன்று மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.6.60 கோடி கோடி செலவில் சொந்தக் கட்டடம்.
- தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிரப்பப்படாமல் உள்ள 50 சதவிகித இடங்களை அரசு ஒதுக்கீட்டில், மாவட்ட கலந்தாய்வு மூலம் நிரப்பி, ஏழை இளைஞர்கள் பயன்பெற ஒதுக்கீடு, 2012–2013, 2013–2014ஆம் ஆண்டில் ரூ.41.25 கோடி செலவில் மாநகராட்சி, நகராட்சி எல்லையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையக் கட்டணம் ரூ.12,000/– மற்றும் கிராம தொழிற் பயிற்சி நிலையக் கட்டணம் ரூ.10,000/– ஆகியவற்றை அரசே ஏற்பு. 2013–2014இல் 5,591 மற்றும் 2014–2015இல் 8,322 மாணவர்கள் பயன்.
- 72,545 மாணவர்களுக்கு ரூ.6.53 கோடி செலவில் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகளை 2013–2014, 2014–2015, 2015–2016இல் வழங்கியது.

**விலையில்லா மிதிவண்டி வழங்குதல்**

- அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.6.36 கோடி செலவில் மிதிவண்டி வழங்குதல். 2013–2014இல் 13,725 மாணவர்களும், 2014–2015இல் ரூ.3.72 கோடி செலவில் 8,123 மாணவர்கள் பயன்.
- 26,650 மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2013–2014இல் ரூ.3.65 கோடி செலவில் இரண்டு செட் சீருடைகள் மற்றும் 1 இணை விலையில்லா காலணி. 2014–2015இல் ரூ.2.07 கோடி செலவில் 19,955 மாணவர்கள் பயன்.
- அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.41.25 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டது. 2013–2014இல் 23,320 பயிற்சியாளர்கள் பயன். 2014–2015இல் 6,490 மாணவர்கள் ரூ.10.73 கோடி செலவில் பயனடைந்துள்ளனர்.

- ரூ.13 கோடி செலவில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.100/–லிருந்து ரூ.500/– ஆக உயர்வு. 2014–2015இல் 27,807 மாணவர்கள் பயன்.
- ரூ.15 கோடி செலவில் 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் புனரமைப்பு.

**கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல்**

- 2013–2014இல் 15 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் வகுப்பறை அறைகலன்கள் கொள்முதல் செய்திட ரூ.0.75 கோடி செலவிலும், 15 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்திட ரூ.7.06 கோடி செலவிலும், 2014–2015இல் 37அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்திட ரூ.37.62 கோடி செலவிலும் என மொத்தம் ரூ.45.43 கோடி செலவில் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணை.

**புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்குதல்**

- பழங்குடியின மாணவச் செல்வங்கள் பயன்பெற்றிட கோவை மாவட்டம் – ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் – கூடலூர், சேலம் மாவட்டம் – கருமந்துறை, நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் – ஜமுனாமரத்தூர் ஆகிய 5 இடங்களில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.32.83 கோடி மதிப்பீட்டிலும், அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்டம் – வேப்பலோடை, திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரம், விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – திருவையாறு மற்றும் தேனி மாவட்டம் – போடி ஆகிய 5 இடங்களில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.26.39 கோடி செலவிலும், ரூ.18.55 கோடி செலவில் மணிகண்டம்–திருச்சி, சின்ன சேலம்–விழுப்புரம், காட்டுமன்னார்கோவில்–கடலூர், கடையநல்லூர்–திருநெல்வேலி மற்றும் உடுமலைப்பேட்டை– திருப்பூர் ஆகிய 5 இடங்களில் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.18.55 கோடி செலவிலும் ஆக மொத்தம் 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.77.77 கோடி செலவில் துவக்கம்.
- அகில இந்திய தொழிற் தேர்வில் தேசிய தொழிற் பயிற்சிக் குழுவால் (என்.சி.வி.டி.) ஆங்கிலம் மற்றும் இந்தியில் வழங்கப்பட்டு வந்த வினாத்தாள்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தமிழ் மொழியில் வழங்கப்பட்டன.
- அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் நவீன தொழில்நுட்பம் சார்ந்த திறன்களைப் பெறும் வகையில், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியைப் பயன்படுத்தி, ரூ.50 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் நவீனமயமாக்கப்படும்.
- ரூ.6.07 கோடி நிதி ஒதுக்கீட்டில் அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான மாதாந்திர உதவித் தொகை ரூ.500/–, லேப்டாப், மிதிவண்டி, சீருடை, காலணி, பாடப்புத்தகம், வரைபட கருவி, இலவச பேருந்து சலுகை ஆகியன அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் வழங்கிட ஆணை.
- ரூ.8.25 கோடி செலவில் 55,000 மாணவர்களுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் குறுகிய கால திறன் மேம்படல் பயிற்சி.
- ரூ.50.55 இலட்சம் செலவில் அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை அறிமுகம்.
- ரூ.1.57 கோடி மதிப்பீட்டில், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி மூன்று மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம்.
- ரூ.2.51 கோடி செலவில் நாகப்பட்டினம், நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மெரைன் என்ஜின் பிட்டர் தொழிற் பிரிவு அறிமுகம்.
- 47 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.10.16 கோடி செலவில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் அமைப்பு.
- ரூ.10.36 கோடி செலவில் 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள வெல்டர், எலெக்ட்ரீசியன், வயர்மேன், ஏ.சி. மெக்கானிக் போன்ற தொழிற் பிரிவுகளைக் கூடுதலாகத் தொடங்குதல்.
- ரூ.1.47 கோடி செலவில் நாகர்கோவில் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கென புதிதாக பொருத்துநர் தொழிற்பிரிவு தொடங்குதல் .



- 2014–2015ஆம் ஆண்டு முதல் தொழிற் பள்ளிகளில் நடத்தப்படும் தொழிற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பயிற்சியில் மாணவர் சேர்க்கைக்கான வயது உச்ச வரம்பு 40 லிருந்து 50ஆக உயர்வு.
- அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் மகளிருக்கு உச்ச வயது வரம்பு நீக்கப்பட்டுள்ளது போலவே, 2014–2015ஆம் ஆண்டு முதல் பொது அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் சேர விரும்பும் மகளிருக்கு வயது உச்சவரம்பு நீக்குதல்.
- ரூ.6.25 இலட்சம் செலவில் கடலூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மாற்று வாகனம்.
- ரூ.13 இலட்சம் செலவில் கடலூர் மற்றும் பெரம்பலூர் அரசு தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு கழிப்பறை வசதி.
- 2015–2016இல் தமிழ்நாடு முன்னோடி திட்டத்தின்,கீழ், மலைப்பகுதியான பகுதிகளில் உள்ள 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வகுப்பறைகள் அமைத்திட ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும், அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், ஊதியம் ஈட்டிக் கொள்வதற்கு ஏதுவாக உரிய வேலைவாய்ப்பினைப் பெற்றிடும் பொருட்டு, திருச்சி மத்திய சிறைச்சாலையில் தொழிற் பயிற்சி நிலைய கிளை ரூ.2.81 கோடி செலவில் துவக்கம்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ், திருவள்ளூர் மாவட்டம், வடகரை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூ.8.78 கோடி செலவில் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம்.
- வடசென்னை ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் ரூ.700.06 இலட்சம் செலவில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவக்கம்.
- ரூ.4,597 இலட்சம் செலவில் ஒரத்தநாடு– தஞ்சாவூர் மாவட்டம், விராலிமலை – புதுக்கோட்டை மாவட்டம், சாத்தூர் – விருதுநகர் மாவட்டம், ஆலத்தூர் – பெரம்பலூர் மாவட்டம் மற்றும் திண்டிவனம் – விழுப்புரம் மாவட்டம் ஆகிய 5 இடங்களில் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவக்கம்.
- வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் 9 புதிய தொழிற் பிரிவுகளை 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.493 இலட்சம் செலவில் துவங்கிட அறிவிப்பு.
- தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் சிந்தனைத்திறனை வளர்க்கும் வகையில், மாநில அளவிலான செய்முறை படைப்பாற்றல் போட்டிகளை அறிமுகப்படுத்தி ரூ.50 ஆயிரம் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்குதல்.
- தொழிற் பயிற்சி நிலைய தேர்வு முறைகளில் மாற்றியமைக்கப்பட்ட பருவமுறைத் தேர்வு முறைகளுக்கேற்ப மாநில தேர்வுக் குழுமத்தை ரூ.30 இலட்சம் செலவில் நவீனமயமாக்கல்.
- தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து தேர்ச்சி பெற்றவர்களின் தொழிற் சான்றிதழ் மெய்த்தன்மையை இணையதளம் மூலம் சரிபார்க்கும் திட்டம் ரூ.40 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்துதல்.
- அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கென புதிய தகவல் தொகுப்பு இணையதளம் உருவாக்குதல் மற்றும் இணையதளம் வாயிலாக மாநில அளவிலான மாணவர் நேரடிச் சேர்க்கையை ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)**

- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் 20 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், 8 இடங்களில் ஆயுர்வேதப் பிரிவுகள், 3 இடங்களில் ஒமியோபதிப் பிரிவுகள், 3 இடங்களில் யுனானிப் பிரிவுகள் மற்றும் 5 இடங்களில் யோகாசனப் பிரிவுகள் துவக்கம்.
- தக்கலை, மணவாளக்குறிச்சி, வெப்படை, பள்ளிகொண்டா, அன்னூர், சர்க்கார் சாமக்குளம், படப்பை, சிவகங்கை, மதுராந்தகம், பஞ்சட்டி, ஒரகடம், செங்கல்பட்டு, கொடைக்கானல், வாழப்பாடி, நிலக்கோட்டை, செய்யாறு, புஞ்சைபுகளூர், வெள்ளக்கோவில், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, சுல்தான்பேட்டை, இராமநாதபுரம், காங்கேயம், சூளகிரி மற்றும் ஹரிதா (பெலகொண்டபள்ளி) சிவகாசி–II, நெய்வேலி, ஒசூர்–II ஆகிய இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவக்கம்.

❖ ❖ ❖

# திட்டமிட்ட செயலாக்கம் சட்டக் கல்விக்கு உயர்வூக்கம்




- ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் 2012, 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் கலந்து கொள்ளத் தேர்வான சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் 28 பேர்களுக்கும், 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் கலந்தகொள்ள தேர்வான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியினைச் சார்ந்த 10 மாணவர்களுக்கும் தலா ரூ.75,000/– வீதம் ரூ.28.5 இலட்சம் உதவித் தொகை.
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாஷிங்டனில் நடைபெற்ற பிலிப் சி. ஜெசப் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தேர்வான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியினைச் சார்ந்த 5 மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாக, தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.5 இலட்சம் உதவித் தொகை.
- சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி வழங்கிட ஆணை. இதற்கென ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் தேசிய சட்டப்பள்ளி நிறுவுவதற்கு, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/2012) இயற்றப்பட்டு ரூ.79.22 கோடி மதிப்பில் நிறுவப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.08.2013 அன்று திறக்கப்பட்டது.
- அரசு சட்டக் கல்லூரிகளுக்கு பகுதி–II திட்டத்தின் கீழ், புத்தகங்கள் வாங்க



ரூ.42 இலட்சமும், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள், பேராசிரியர் அறைகள் மற்றும் சிறிய கருத்தரங்கக் கூடம் கட்டுவதற்கு ரூ.85.58 இலட்சமும் மற்றும் விடுதிக் கட்டடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்திட ரூ.13.68 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு.

- ரூ.9 இலட்சம் செலவில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியின் முழுநேர உறைவிடக் காப்பாளருக்கான குடியிருப்புக் கட்டடம்.
- ரூ.13.40 இலட்சம் செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உணவு விடுதியில் விருந்தினர் அறைகள்.
- அரசு சட்டக் கல்லூரிகளில் 43 பேர் விரிவுரையாளர்களாகவும் 4 பேர் நூலகர்களாகவும் நியமனம்.
- தலைமைச் செயலக சட்டத் துறைக்கு 25 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு.
- சட்டத் துறையின் பிரிவுகளுக்குச் சிற்றறைகள் அமைப்பதற்கு ரூ.9 இலட்சம் ஒப்பளிப்பு.
- ரூ.92.57 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதியில் இரண்டாம் தளம் கட்டுதல், மாதிரி நீதிமன்றம் மற்றும் கூடுதல் இரு சக்கர வாகனம், மிதிவண்டி நிறுத்த கட்டடம்.
- ரூ.9.50 இலட்சம் செலவில் சட்டக் கல்வி இயக்குநரகத்திற்கு கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள்.
- ரூ.1.30 இலட்சம் செலவில் செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு குளிர்ந்த குடிநீர் வழங்க குளிரூட்டும் உபகரணங்கள்.
- ரூ.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கணினிகள், மடிக்கணினிகள், அச்சுப் பொறிகள், நகல் பெருக்கிகள் மற்றும் தொலை நகலிகள்.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக மாற்றப்பட்டதால் அக்கல்லூரிக்குப் புதிய கட்டடங்கள் கட்டிட அப்பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்ட தொகை ரூ.1.72 கோடியை அப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கிட ஆணையிடப்பட்டது.
- அரசு சட்டக் கல்லூரிகளில் 2012–2013 ஆம் கல்வியாண்டில் மணிநேர அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வரும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.
- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.6.88 கோடியும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.1.72 கோடியும் நிதி ஒப்பளிப்பு.
- ரூ.59.27 கோடி செலவில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு பெருங்குடி கொட்டிவாக்கம் கிராமத்தில் ஒரு முழுமையான வளாகக் கட்டடம் கட்டும் பணி.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி மாணவர் சேர்க்கையில் இனவாரியான ஒதுக்கீடு செய்திட ஆணை.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் செயல்பாட்டிற்கு ரூ.1 கோடி வழங்கி ஆணை.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் ஆசிரியர் தேர்வு தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் குழு அமைத்து ஆணை.
- மதுரை அரசு சட்டக் கல்லூரியில் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் சட்டம் சார்ந்த பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு பயிலகம் நிறுவிட அனுமதியளித்து ஆணை.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி அலுவலர்களை அனுமதித்தும் மற்றும் அப்பள்ளிக்கு மானியமாக ரூ.4.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை.
- மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதி கூடுதல் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.114.95 இலட்சம் ஒப்பளித்து ஆணை.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் தடயவியல் ஆய்வுக்கூடம் நிறுவிட ரூ.10 இலட்சமும், சட்டக் கல்வியறிவு இயக்க தனிப்பிரிவு நிறுவிட ரூ.30 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு.
- சட்டக் கல்வித் துறையிலுள்ள சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் எம்.எல். பட்ட மேற்படிப்பிற்கு

ஒவ்வொரு பிரிவிற்கும் ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களை 15லிருந்து 20 ஆக உயர்த்தி ஆணை.

- தலைமைச் செயலகம், சட்டத்துறையில் அச்சுப் பொறி இயந்திரங்கள், இரண்டு நகலி இயந்திரங்கள் வாங்கிட ரூ.7 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பி.ஏ.பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை வழங்கிட ஆணை. இதுவரை ரூ.36.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் பொதுக் கழகம், நிருவாகக் கழகம், கல்விக் கழகம் மற்றும் நிதிக்கழகம் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டது.
- ரூ.1.65 இலட்சம் செலவில் தலைமைச் செயலக சட்டத்துறை நூலகம் நவீனமாக்கல்.
- ரூ.4.55 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதியில் புதிதாக கட்டப்பட்ட இரண்டாவது தளத்திலுள்ள அறைகளுக்கு அறைகலன்கள்.
- பகுதி–II திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு சூரிய ஒளி புகும் மேற்கூரையுடன் பன்னோக்குக் கூடம் மற்றும் சூரிய ஒளி மின்னாக்கி அமைக்க ரூ.30 இலட்சமும் மற்றும் சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் மாதிரி நீதிமன்றக் கூடங்கள் அமைக்க தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.40 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு.
- பகுதி–II திட்டத்தின் கீழ், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சுற்றுச்சுவரை உயர்த்தி அமைத்தலுக்கு ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட கூடுதல் கட்டடத்திலுள்ள வகுப்பறைகளுக்கு அறைகலன்கள் வாங்குவதற்காக ரூ.16.93 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளுக்கு கூடுதலாக 14 பெருக்குபவர் மற்றும் 14 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, நிறுவிடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து நிலமாற்றம் பெறப்பட்ட 25 ஏக்கர் நிலத்திற்கான நிலமதிப்புக்காக அந்நிறுவனத்திற்கு ரூ.32.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015ஆம் நிதியாண்டுகளில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் நிருவாக செலவுகளுக்காக ஒரு நிதியாண்டிற்கு ரூ.1 கோடி வீதம் மொத்தம் ரூ.3 கோடி மானியம் ஒப்பளிப்பு.
- "தமிழ்நாடு மாநில புதுமை திட்டங்கள்" திட்டத்தின் கீழ், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளிக்கு "உங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுங்கள் – சட்டம்" என்ற திட்டத்திற்காக, தமிழ்நாடு புதுமை நிதி 2015–2016லிருந்து ரூ.71.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- மாநில சட்ட ஆணையம், தமிழ்நாடு அரசால், ஜார்கண்ட் மாநில உயர்நீதிமன்றம் ஒய்வு பெற்ற தலைமை நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு.என்.தினகர் அவர்கள் தலைமையில் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு தற்போது நிலைக்கேற்ப திருத்தங்களை/ ஆலோசனைகளை பரிந்துரைக்க 27.01.2014 அன்று திருத்தியமைக்கப்பட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் அதன் தலைவர் பதவியேற்ற, அதாவது 10.02.2014ஆம் நாளிலிருந்து மூன்று வருடங்கள் ஆகும். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்திற்கு ஆணைய தலைவர் தவிர முழுநேர உறுப்பினர்களும், பகுதிநேர உறுப்பினர்களும் மற்றும் முழுநேர உறுப்பினர் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையம் 04.09.2014 அன்று தனது முதல் அறிக்கையில் குற்றவியல் நடைமுறைச்சட்டம் மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆகிய சட்டங்களின் சில பிரிவுகளுக்கு அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதை பொறுத்த அளவில் மற்றும் வரைவு தமிழ்நாடு முத்திரைத்தாள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட திருத்தங்களை ஆணையம் பரிந்துரைத்துள்ளது. ❖

# ஜனநாயகம் தழைத்தோங்கும் மக்கள் மன்றத்தின் மகத்துவத்தைப் பிரதிபலிக்கும் சட்டமன்றம்!





- பாரம்பரியம் மிக்க புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 23.05.2011 முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீண்டும் கூடத் தொடங்கியது.
- சட்டமன்றப் பேரவை வளாகத்தில் ஆண் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென தனித்தனியே குளிர்சாதன வசதி கொண்ட நவீன ஓய்வறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.08.2011 அன்று திறப்பு.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கென தனியே நவீன உடற்பயிற்சிக் கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.02.2012 அன்று தொடக்கம்.
- சட்டமன்ற வைர விழாவையொட்டி, சட்டமன்ற வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய கவின்மிகு புகைப்படக் கண்காட்சி 23.11.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு ஒரு வார காலம் நடைபெற்றது.
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 30.11.2012 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது முன்னிலையில் நடைபெற்ற வைர விழா நிகழ்ச்சியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றியதோடு சென்னை அரசினர்

தோட்டத்தில் கட்டப்படவுள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் விடுதிக்கு அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வைரவிழா மலரினை வெளியிட்டார்கள்.

- தொகுதி சீரமைப்பின் காரணமாக, ரூ.4.39 கோடி செலவில் மாவட்டங்களில் 32 புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள்.
- சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேரவை நிகழ்ச்சி நிரல், வினாப் பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்புகள், பேரவைச் செய்தித்தாள் உள்ளிட்ட ஆவணங்கள் அஞ்சல் மூலம் அனுப்பப்படுவதுடன், 2011ஆம் ஆண்டு முதல் உறுப்பினர்களுக்கு உடனடியாக கிடைக்கும் வகையில் மின்னஞ்சல் மூலமும் அனுப்பப்படுகின்றன.
- பேரவைக் கூட்டத்தின்போது உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் தங்களது கைபேசிகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள பெட்டக வசதி உருவாக்கம்.
- சட்டமன்றப் பேரவை வளாகத்தில் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் ஸ்மார்ட் பே ஃபோன் வசதிகள்.
- ரூ.11.82 இலட்சம் செலவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு C.C.T.V கேமிராக்கள்.
- ரூ.73.34 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சாலைகள் மின் விளக்கு வசதியுடன் சீரமைப்பு.
- சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மடிக்கணினி/ மேசைக்கணினி, அச்சு இயந்திரம் மற்றும் இணைய டேட்டா கார்டு வழங்கும் திட்டத்தை 17.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.
- வெளி மாநிலங்களிலிருந்து வரும் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக தொகுப்புகளிலுள்ள 10 குடியிருப்புகளுக்கு, நிரந்தர குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூ.1.86 இலட்சம் செலவிலும், கண்ணாடியுடன் கூடிய 10 டிரஸ்ஸிங் டேபிள் ரூ.1.65 இலட்சம் செலவிலும் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக பாதுகாப்பு கருதி, வெளிநபர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தாமலிருக்க இரும்புக் கதவு மற்றும் காவல் சாவடி ரூ.3 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு கருதி, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் சுற்றுச் சுவரினை உயர்த்தி, பிரதான முகப்பு வாயில் அமைப்பதற்கு ரூ.19.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.07.2014 அன்று காணொளிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.
- சட்டமன்ற உறுப்பினர் துணிவகைகளை சலவை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக தங்குமிட வசதியுடன் பணி செய்வதற்காக 18 அறைகள் கொண்ட கட்டடம் ரூ.46 இலட்சம் செலவில், 08.07.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொளிக்காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கென யூரோ அலுமினிய தகடுகளாலான மேற்கூரைகள் அமைப்பதற்கு ரூ.9,99,000/– அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- பேரவை விதி 110இன் கீழ், 31.10.2015 வரையில் 181 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பாட்டிற்காக சட்டமன்ற நூலகத்திலுள்ள பல அரிய நூல்களையும், சட்டமன்றப் பேரவைக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளையும் பாதுகாத்துப் பராமரிக்க ரூ.5.48 இலட்சம் செலவில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் CCTV கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் இந்தியன் வங்கியின் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM), சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தை பராமரிப்பு செய்துவரும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் 2014–2015ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு செலவில் கட்டிக் கொடுக்கப்பட்ட அறையில் அமைக்கப்பட்டு 05.01.2015 முதல் பயன்பாட்டில் உள்ளது.
- வெளி மாநிலங்களிலிருந்து வரும் குழுக்கள் உபயோகத்திற்காக, ரூ.22,93,200/– செலவில், குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்து ஒன்று கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# இளைஞர்களுக்கு எழுச்சி தரும் சிறு தொழில் வளர்ச்சி!



சிட்கோ தலைமையகக் கட்டடம் கிண்டி, சென்னை

சிட்கோ தலைமையகக் கட்டடம், கிண்டி, சென்னை

மாவட்ட தொழில் மையம், திருப்பூர்



- தமிழகத்தின் வளர்ச்சிப் பாதையை கவர்ச்சிகரமாக்கும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் முயற்சியில் ஒன்றாகவும் இந்தியாவின் முன்னுரிமை முதலீட்டு மையங்களுள் ஒன்றாக தமிழகத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் ஒன்றாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் செப்டம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.
- 2015 ஆகஸ்ட் 6 முதல் 11 வரை குறு, சிறு,மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை 32 மாவட்டங்களில் மாவட்ட கருத்தரங்குகளை நடத்தியது. அதன் பயனாக 10,073 தொழில் முனைவோர்கள் ரூ.16,532.67 கோடி முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளனர்.
- படித்த இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் வகையில் அவர்களது தொழில் முதலீட்டு மதிப்பில் 25 விழுக்காடு மானியம் அதிகபட்சம் ரூ.1 கோடி மற்றும் 3 விழுக்காடு பின்முனை வட்டிச் சலுகையுடன் கடனுதவி அளித்திடும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் 2012–2013ஆம்

ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற 1,261 தொழில் முனைவோருக்கு ரூ.606.54 கோடி தொழில் திட்டங்களுக்காக கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.77.17 கோடி மானியம் ஆகும்.

- புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டில் ரூ.41.43 கோடி மானிய மதிப்பிலான 415 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழகம் ஆகியவற்றிற்கு தற்காலிக ஒப்புதல் வழங்கும் பொருட்டு பரிந்துரை செய்யப்பட்டன. இவற்றில் ரூ.28 கோடி மானிய மதிப்பிலான 260 விண்ணப்பங்களுக்கு இந்நிறுவனங்களிலிருந்து தற்காலிக ஒப்புதல் பெறப்பட்டன.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக, 47 இடங்களில், 3,044.11 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளன.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டு மானியம் 15 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. 5,930 தொழில் முனைவோருக்கு ரூ.250 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.50 கோடி செலவில், 32 மாவட்டத் தொழில் மையங்களை மறுசீரமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் 5 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்களும் / 7 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களுக்கு கூடுதல் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 25.06.2014 அன்று காணொலிக்காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது. மேலும் 3 மாவட்ட தொழில் மையங்களில் (திருவண்ணாமலை, கரூர், விழுப்புரம்) மற்றும் தருமபுரி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி, திருச்சி, கன்னியாகுமரி, விருதுநகர், நீலகிரி) புதிய மற்றும் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 25.06.2015ஆம் நாளன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் இரண்டாம் கட்டமாக திறந்து வைக்கப்பட்டது. மீதமுள்ள 9 மாவட்ட தொழில் மையங்களிலும் கட்டிடப்பணி முடிக்கப்பட்டு திறப்பு விழா நடத்த தயார் நிலையில் உள்ளது.
- குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 இடங்களில் ரூ.47.76 கோடி திட்ட மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் அமைப்பு.
- குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு 4 ஆண்டுகளுக்கு 20 விழுக்காடு குறைந்த மின்னமுத்த மானியமாக ரூ.24 கோடியும் 25 விழுக்காடு மின்னாக்கி மானியமாக ரூ.47.48 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.
- குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. 2015–2016இல் 4 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு 5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.28.26 இலட்சம் பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடாக 100 விழுக்காடு மானியம் அளித்திடும் திட்டத்தின் கீழ் ரூ.13 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 18,305 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டு, 16,362 பணியாளர்களுக்கு ரூ.52.60 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- மொத்தமுள்ள 314 தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 261 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சார இலக்கான ரூ.178.20 கோடியில், ரூ.247.02 கோடி அளவிற்கு விற்பனை அடைந்து, ரூ.6.57 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.
- 2015–2016ஆம் ஆண்டில், சேகோசர்வ் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சார இலக்கான ரூ.133.68 கோடியில் ரூ.67.95 கோடி அளவிற்கு விற்பனை செய்தும், ரூ.61.07 இலட்சத்தை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.
- 2015–2016ஆம் ஆண்டில், தாய்கோ வங்கி ரூ.969.76 கோடி அளவிற்கு வைப்புத் தொகை திரட்டி ரூ.509.96 கோடி அளவிற்கு பயனாளிகளுக்கு கடன் வழங்கியுள்ளது. இவ்வங்கி ரூ.3.40 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.



- தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை ஆற்றல் வாய்ந்த நிறுவனமாக சீரமைத்திட சென்னை, கிண்டியில் நவீன பயிற்சி வளாகம் கட்டுவதற்கு ரூ.4.88 கோடி வழங்கப்பட்டு, புதிய கட்டடம் 25.06.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.
- சந்தை மேம்பாட்டு நிதியுதவி திட்டத்தின் கீழ் அரசானது 2015–2016ஆம் ஆண்டு ரூ.75 இலட்சத்தை விடுவித்து கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியமாக வழங்கியுள்ளது.
- சிட்கோ மூலமாக சுமார் 2,000 ஏக்கர் பரப்பிலான நில வங்கி படிப்படியாக உருவாக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க இதுவரை 47 இடங்களில் சுமார் 3,044.11 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளை, நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ், 12 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.5.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் பயனாளிகளான சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கான ஆதார விலையாக கிலோவுக்கு ரூ.2 வீதம் ரூ.17.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் புதிய நஞ்சநாடு தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ரூ.5 கோடி செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறு தேயிலை விவசாயிகளின் துயர்துடைக்கும் பொருட்டு, விலை நிலை நிறுத்துதல் நிதியம் ஒன்று ரூ.12.50 கோடி முதலீட்டு நிதியாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டு, அரசின் பங்காக ரூ.8 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 17,000 சிறு தேயிலை விவசாய உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.
- சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் எனும் சேகோசர்வ் நிறுவனம் ரூ.1,759.41 கோடி விற்பனைத் திறனை 31.03.2015 வரை எய்தியுள்ளது.
- அரியலூரில் புதிய மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டது.
- ஐந்து மகளிர் தொழிற்பூங்காக்களான திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில்; காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம்; சேலம் மாவட்டம் கருப்பூர்; திருச்சி மாவட்டம் வாழவந்தான் கோட்டை; மற்றும் மதுரை மாவட்டம் கப்பலூர் ஆகிய 5 இடங்களில் சிட்கோ மூலம் நேர்த்தி மிகுதொழில்மையம் அமைக்க ரூ.7.91 கோடி ஒதுக்கீடு.
- திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ள மத்தியமின்பொருள் பரிசோதனை கூடத்தின் சோதனை வசதிகளை மேம்படுத்திட ரூ.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.1 கோடி மதிப்பீட்டில் காக்களூர் மற்றும் பெருங்குடியில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதி.
- குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சிறு தொழில் குழுமங்கள் அடையாளம் காணப்பட்டன.
- ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் அருகே கனரக வாகனங்கள் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கென தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கூட்டு முயற்சி முறையில் தனியாக ஒரு தொழிற்பேட்டை.
- தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தால், பள்ளிக்கல்வித் துறைக்கு தேவையான மர அறைகலன்களை செய்ய ரூ.8.91 கோடிக்கும், பொருளாதார மற்றும் புள்ளியல் துறைக்கு தேவையான இரும்பு மற்றும் மர அறைகலன்களை செய்ய ரூ.2 கோடிக்கும், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு தேவையான இரும்பு மற்றும் மர அறைகலன்களை செய்ய ரூ.1.50 கோடிக்கும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு தேவையான மர அறைகலன்களை செய்ய ரூ.1 கோடிக்கு பணி ஆணை பெறப்பட்டு அதனை உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖

# நகராட்சி நிருவாகத்தின் மாட்சி! நல்லாட்சிக்கு இதுவே சாட்சி!



## நகராட்சி நிருவாக ஆணையரகம்

- சென்னை மாநகராட்சியின் அனைத்து கோட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள 214 அம்மா உணவகங்கள் தவிர மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாநகராட்சிகளில் தலா 10 உணவகங்கள் வீதம் 90 அம்மா உணவகங்களும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவனையில் ஒரு அம்மா உணவகம் திறக்கப்பட்டதன் மூலம், குறைந்த விலையில் சத்தான மற்றும் சுகாதாரமான உணவு கிடைக்கப்பெறுவதன் மூலம், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், கூலி வேலை செய்பவர்கள், பள்ளிக் குழந்தைகள் பெரிதும் பயன் அடைகின்றனர். கோயம்புத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், திருச்சி, சேலம், திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளில் உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் தலா ஒன்று வீதம் 7 அம்மா உணவகங்களும், கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் கூடுதலாக தலா ஒன்று வீதம் 4 அம்மா உணவகங்களும், சேர்த்து 11 மாநகராட்சிகளில் மொத்தம் 102 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அம்மா உணவகத்திலும், சராசரியாக காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு 300 நபர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. 31.12.2015 முடிய, ஒரு இட்லி ஒரு ரூபாய், சாம்பார் சாதம் ஐந்து ரூபாய், தயிர் சாதம் மூன்று ரூபாய் என்ற குறைந்த விலையில், 10,14,03,920 இட்லிகளும், 2,40,87,933 சாம்பார் சாதமும் மற்றும் 2,00,49,717 தயிர் சாதமும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 01.06.2014 அறிவிப்பின் அடிப்படையில், அடுத்தகட்டமாக 16 மாவட்ட தலைநகரங்களில் தலா 2 வீதம் 32 அம்மா உணவகங்கள் அரசு பொது மருத்துவமனைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் ஆவடி, பல்லவபுரம், தாம்பரம், மறைமலைநகர் மற்றும் ஓசூர் நகராட்சிகளுக்கு தலா 2 வீதம் 10 அம்மா உணவகங்கள் பொது இடங்களிலும், இதர 103 நகராட்சிகளில் தலா ஒன்று வீதம் 103 அம்மா உணவகங்கள் பொது இடங்களில் அமைக்கப்பட்டு 24.05.2015 முதல் இயங்கி வருகின்றன. மொத்தம், 124 நகராட்சிகளில் 145 அம்மா உணவகங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. நகராட்சிகளுக்குட்பட்ட ஒவ்வொரு அம்மா உணவகத்திலும் 31.12.2015 வரை குறைந்த விலையில் 15,99,47,478 இட்லிகளும், 95,81,652 சாம்பார் சாதமும் மற்றும் 79,25,363 தயிர் சாதமும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- கடந்த 5 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அடிப்படை கட்டமைப்பு – வசதிகளான, குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடைத் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், திறந்த வெளியில் மனிதக்கழிவு கழித்தலை ஒழித்தல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பூங்காக்கள், பேருந்து நிலையம் அமைத்தல் ஆகிய 6,466 பணிகள் ரூ.2,234.91 கோடியில் மேற்கொள்ளப்பட்டு 5,615 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

- கடந்த 5 ஆண்டுகளில் பகுதி–2 திட்டத்தின் கீழ், ரூ.37.58 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் எளிதாக உபயோகிக்கும் கழிப்பறைகள் கட்டுதல், ஜெட்ராடிங் இயந்திரம், ஜெனரேட்டர் தூர் வாரும் இயந்திரம் ஆகியவை வாங்குதல், அலுவலகக் கட்டடம், மழை நீர் வடிகால் அமைத்தல் ஆகிய 184 பணிகளில் 179 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- கடந்த 5 ஆண்டுகளில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், ரூ.609.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 4,527 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் எரிவாயு மின்கூடம், நவீன இறைச்சிக் கூடம், கழிவறைகள் கட்டுமானப் பணி, குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணி, பாதாள சாக்கடைத் திட்டம், மழை நீர் வடிகால்பணி, பேருந்து நிலையம், அலுவலகக் கட்டடம் அமைத்தல் ஆகிய பணிகளில் 3,819 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

- இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், ரூ.234.16 கோடி மதிப்பீட்டில் 267 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில், அரியலூர் நகராட்சியில் அங்காடி மேம்பாட்டுப் பணி, சின்னமனூர் நகராட்சியில் வாராந்திர சந்தை அங்காடிப் பணி, குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், அலுவலகக் கட்டடம் அமைத்தல் ஆகிய 141 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

- திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிப்பதை தவிர்க்கும் வகையில், 1,205 புதிய கழிப்பறைகள் கட்டும்பணிமற்றும்2,059பழையகழிப்பறைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.210.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில், 654 புதிய கழிப்பறைகளும், 1,589 பழைய கழிப்பறைகளை மேம்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

- சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ், ரூ.392.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 826 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில், 69 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

- கடந்த 5 ஆண்டுகளில், வறட்சியால் பாதிக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிவாரணமாக ரூ.197.22 கோடியில் ரூ.103.59 கோடி மானியமாக வழங்கப்பட்டதில் கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகள், சிறிய குழாய் பம்புகள், குழாய் கிணறுகளுக்கான உதிரி பாகங்கள், லாரி மூலம் தண்ணீர் வழங்குதல், சின்டெக்ஸ் தொட்டிகள், வாடகை ஜெனரேட்டர்கள் வாங்குதல் ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2014–2015ஆம் ஆண்டில் கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கும் விதமாக ரூ.10 கோடி வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மழை அளவு குறைவாக உள்ள 8 மாவட்டங்கள் மற்றும் 23 இதர மாவட்டங்களிலுள்ள 9 மாநகராட்சிகள், 75 நகராட்சிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலூர் மாநகராட்சிக்கு ரூ.5 கோடி வறட்சி நிவாரண பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.





உயிர் மீத்தேன் வாயு -மின் உற்பத்தி திட்டம்



சென்னை மாநகராட்சி மண்டலம் – 4, வார்டு 47க்குட்பட்ட ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள எண்.88, பீமாரப்பாள் நகர், கொருக்குப்பேட்டையில் புதிய சமூக நல மைய கட்டடம்.

- 2015இல் பெய்த வடகிழக்குப் பருவ மழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கும் பணிகளுக்கு 2015–2016இல் அரசு ரூ.75 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 8 மாநகராட்சிகள் மற்றும் 58 நகராட்சிகளில் மழையினால் சேதமடைந்த சாலைகள் மற்றும் சிறுபாலங்கள் சீரமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் மரபு சாரா எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி 324.165 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.52.93 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து துகள்களாக்கும் வகையில் 14 பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்கள், 43 பிளாஸ்டிக் துகள்களாக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- 2014–2015ஆம் ஆண்டு, 15 நகர்புர உள்ளாட்சிகளில் பிளாஸ்டிக் துகள்களாக்கும் இயந்திரங்களுடன் கூடிய 15 பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையங்கள் அமைக்க ரூ.2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 5 பணிகள் ரூ.50.50 இலட்சம் செலவில் முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணி மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 2,122.48 கி.மீ நீளமுள்ள சாலைகளை சீரமைக்க மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு ரூ.915.23 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு, 4,266 சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் 4,169 சாலைப் பணிகள் ரூ.864.22 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளன.

- சிறப்பு சாலைகள் திட்டம் 2015–2016இன் கீழ், ரூ.258.29 கோடி மானியத்துடன் ரூ.620.45 கோடி மதிப்பீட்டில் பழுதான சாலைகளை சீரமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது, அதில், 254 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கத்தின் கீழ் வரும் நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை திட்டத்தின் கீழ், 22 திட்டங்களுக்கு ரூ.2,862.55 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடை, மழை நீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன .

- சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ், 68 திட்டங்களுக்கு ரூ.1,421 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடை, சாலைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 42 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு இயக்கத்தின் கீழ் வரும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ், 51 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 7 வருட திட்டக்காலத்திற்காக ரூ.2,316.02 கோடி மதிப்பீட்டில் 89,720 குடியிருப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றில் 72,302 குடியிருப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்களுக்கு வசதிகள் அமைக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில், 94 திட்டங்களுக்கு ரூ.566.11 கோடி மதிப்பீட்டில் 37,720 குடியிருப்புகளில் 34,480 குடியிருப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னை மாநகராட்சி**

- தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியில் அடித்தட்டு மக்கள் சுகாதாரமான மற்றும் சுவையான உணவினை மலிவு விலையில் பெற்று பயனடைய ஏதுவாக, இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மாநகராட்சி 245 அம்மா உணவகங்களை அனைத்துக் கோட்டங்களிலும் 7 அரசு மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில் இரண்டு சப்பாத்தி, பருப்பு கடைசல் மூன்று ரூபாய்க்கும் வழங்கப்பட்டு ஏழை, எளிய மக்கள் மற்றும் அனைத்து தர மக்களின் பசியினை போக்கும் வண்ணம் செயலாக்கப்பட்டு வருகிறது. 31.12.2015 வரை அம்மா உணவகங்கள் மூலமாக 11,82,25,928 சப்பாத்திகளும், 27,21,30,918 இட்லிகளும் 10,95,73,537 பலவகை சாதங்களும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், ஒவ்வொரு நாளும் சுமார் 3 இலட்சம் ஏழை, எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டமானது சமூகப் பொருளாதார நிபுணர்களால் உலகில் மிகச் சிறந்த திட்டமாகவும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாகவும் விளங்குவதாக கருதப்படுகிறது.

- சென்னை மாநகராட்சியில் குடும்ப நலத்துறையில் 10 மண்டலங்கள் மூலமாக 10 இருபத்து நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள், மற்றும் 93 நகர நலவாழ்வு நிலையங்கள் இயங்கி வந்தன. தற்பொழுது, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் 15 மண்டலங்கள், 17 இருபத்து நான்கு மணி நேர அவசர கால மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 140 மாநகர ஆரம்ப சுகாதார நலவாழ்வு நிலையங்கள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தனியார் மருத்துவமனைக்கு இணையாக நவீன மயமாக்கப்பட்டு நவீன உபகரணங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

- சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் சிறப்பினமாக CTG Machine மூலம் சிசுவின் இருதயத் துடிப்பு தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகிறது. ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவத்திற்கான பொருட்களை (Disposable delivery kit) பயன்படுத்தி பிரசவம்

பார்க்கப்படுகிறது. பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ், ரூ.600/– வழங்கப்படுகிறது. 2015–2016ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் 2015 வரை மொத்தம் 62,594 பயனாளிகளுக்கு ரூ.3.78 கோடி, இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

- அறுவை அரங்குகளின் சிறப்புகளாக தனியார் மருத்துவமனைக்கு இணையாக பிரசவம், புற்றுநோய், இதயநோய் மற்றும் தொற்றுநோய் சிகிச்சைகளுக்கும் நவீன தொழில் நுட்பமான நேனோ டெக்னாலஜி (Nano Technology), அதிர்வு கருவி, Disposable LSCS Delivery Kit, Shifting Trolley, Video Laparoscopy, மற்றும் Sonomamogram ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

- உலக சுகாதார நிறுவனத்தின் அட்டவணைப்படி அனைத்து தடுப்பூசிகளும் இலவசமாக நலவாழ்வு மையங்களிலும் மற்றும் களப்பணியின் போதும் போடப்படுகின்றன. முன்பு DPT, TT போன்ற தடுப்பூசிகள் போடப்பட்டு வந்தன. தற்போது தனியார் மருத்துவமனைகளில் போடுவது போல Hepatitis-B, Pentavalent தடுப்பூசிகளும் அனைத்து நலவாழ்வு மையங்களிலும் போடப்படுகிறது. இம்முணைசேஷன் ஆக்டிவிட்டிஸ் பிரிவில் டிசம்பர் 2015 வரை பி.சி.ஜி. – 10,693 பயனாளிகள், பென்டாவேலன்ட் வேக்சீன் – 1,01,427 பயனாளிகள், ஓரல் போலியோ டிராப்ஸ் – 1,01,427 பயனாளிகள், மீசில்ஸ் – 1,14,039 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- தனியார் மருத்துவமனைகளில் கூட இல்லாத ஒரு சிறப்பான, பெண்களுக்கு எளிய முறையில் கருப்பைவாய் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை 14 இடங்களில் செயல்பட்டு வருகிறது. இதுநாள் வரை 2,64,923 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான யோகா பயிற்சி தற்போது 5 இடங்களில் (சைதாப்பேட்டை, வடபழனி, புளியந்தோப்பு, சஞ்சீவராயன்பேட்டை மற்றும் செனாய் நகர்) நடைமுறையில் உள்ளது.

- ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவி, பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு ரூ.25,000/– மற்றும் தங்க நாணயம் 4 கிராம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகின்றது. மொத்தத்தில் ரூ.18.11 கோடி பணமும், 16,928 கிராம் தங்கமும் ஜனவரி 2016 வரை 4,232 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொள்ளும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் 2015–2016ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் 2015 வரை மொத்தம் 22,655 பயனாளிகளுக்கு ரூ.22.67 கோடி வழங்கப்பட்டது.

- அடித்தட்டு மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பற்றி அக்கறை செலுத்தும் அதே வேளையில் சர்வதேச தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட மாநகரமாக சென்னை மாநகரை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையை வெற்றிகரமாக நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு முன்னோடித் திட்டமான சென்னை பெருநகர வளர்ச்சித் (CMCDM) திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளாக முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.1,164.56 கோடி இந்த அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், 976.02 கி.மீ. நீளம் உள்ள சாலைகளின் ஒருங்கிணைந்த மேம்பாடு, 196.99 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்வாய்கள், 321.43 கி.மீ. நீளமுள்ள நடைபாதைகள், 12,952 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டிற்காக பலவகையான வாகனங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் கொள்முதல் ஆகிய பணிகள் செய்ய திட்டமிடப்பட்டு இதுவரையில், 933.68 கி.மீ நீளத்திற்கு சாலைப் பணிகளும், 156 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் பணிகளும், 230 கி.மீ. நீளத்திற்கு நடைபாதை பணிகளும், 11,939 எண்ணிக்கையில் தெருவிளக்குகள் நிறுவும் பணிகளும் ரூ.1,073.83 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் வரும் நான்கு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இத்திட்டத்தை செயல்படுத்தி வருவதன் மூலம் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் நீண்ட கால கோரிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் இந்த அரசினால் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புறச் சாலைகள் மேம்பாட்டு நிதி (TURIF) மூலம் மொத்தம், 387 கி.மீ நீளமுள்ள 471 பேருந்துச் சாலைகளில் 149.70 கி.மீ. நீளமுள்ள 235 சாலைகள்



சீரமைக்கும் பணி ரூ.98.41 கோடி செலவிலும், மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து 40.14 கி.மீ. நீளமுள்ள 93 சாலைகள் சீரமைக்கும் பணி ரூ.30.12 கோடி செலவிலும் கடந்த 5 ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன.

- 2014–2015ஆம் நிதி ஆண்டில் 40.47 கி.மீ. நீளமுள்ள 45 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் ரூ.91.17 கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இதுவரை, 32.82 கி.மீ நீளமுடைய 41 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7.65 கி.மீ நீளமுடைய 4 சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் சேமிப்பு தொகை மூலம் 6.09 கி.மீ நீளமுள்ள 9 பேருந்து தட சாலைகள் ரூ.8.71 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இந்த 9 சாலைகளில் 4 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளது. 5 சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் 2015–2016ஆம் ஆண்டில் 149 பேருந்து சாலைகள் அபிவிருத்தி பணிக்காக தமிழக அரசினால் தற்போது ரூ.242.57 கோடி நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணி நடைப்பெற்று வருகின்றன. இதுவரை, 115.32 கி.மீ நீளமுடைய 141 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12.09 கி.மீ நீளமுடைய 8 சாலைகள் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் 2015–2016ஆம் ஆண்டில் சேமிப்புத் தொகை மூலம் 25.25 கி.மீ நீளமுடைய 49 பேருந்து சாலைகள் ரூ.39.34 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, இதில், 23 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- 2015–2016ஆம் நிதியாண்டில் 72.65 கி.மீ நீளமுடைய 92 சாலைகள் ரூ.161.70 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2015–2016இன் கீழ் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

- சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முன்பு எப்போதும் இல்லாத அளவில், மாநகராட்சியில் உள்ள சுமார் 4,930 கி.மீ. நீளமுள்ள 30,790 உட்புற சாலைகளில் பழுதடைந்துள்ள சுமார் 17,366 சாலைகள் ரூ.2,468 கோடி செலவில் சீரமைக்க திட்டமிட்டு இதுநாள் வரையில் 11,499 சாலைப் பணிகள் சுமார் ரூ.1,314 கோடி செலவில் முற்றிலும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளும் வரும் நான்கு மாதங்களில் முடிக்கப்படும்.

- சென்னை மாநகராட்சியால் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.111.23 கோடி மதிப்பீட்டில் இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம், வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேத்தா நகர் ஆபிசர்ஸ் காலனி முதல் தெருவை வெங்கடாசலபதி தெருவுடன் இணைத்து பாலம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே இந்திரா நகர் 2ஆவது நிழற்சாலையையும் ராஜீவ்காந்தி சாலையையும் இணைக்கும் பாலம், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே பாரி தெருவில் வாகனப்பாலம், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே சின்மயா நகர் காளியம்மன் கோயில் தெருவில் ஏற்கெனவே உள்ள பாலத்திற்கு அருகில் புதிய பெட்டக வடிவ பாலம், இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகன சுரங்கப்பாதை, மணியக்கார சத்திர தெருவில் வாகன சுரங்கப்பாதை, வள்ளலார் நகர் மேம்பாலம், எழில் நகரில் சோலையம்மன் கோயில் தெருவிலும், எம்.கே.பி.நகரையும் கிருஷ்ணமூர்த்தி நகரையும் இணைத்தும், பாபா நகர் ஆர்.கே.லிங்க் சாலையிலும், சூழ்புனல்கரையில் டாக்டர் அம்பேத்கர் சாலையிலும், நாராயணபுரம் ஏரியின் குறுக்கேயும் என புதிதாக 5 பெட்டக வடிவ பாலம் கட்டப்பட்டன, 9 பழைய மேம்பாலங்கள், 3 பழைய ஆற்றுப் பாலங்கள் என மொத்தம் 12 பாலங்களில் அபிவிருத்திப் பணிகள், டி.டி.கே சாலை மேம்பாலத்தில் கைப்பிடியில் துருப்பிடிக்காத எஃகு மூலம் உறைப்பூச்சு பணி, கத்திவாக்கம் நெடுஞ்சாலை – காக்ரேன் பேசின் சாலையில் மேம்பாலம், பாடிக்குப்பம் கால்வாயின் குறுக்கே ஜெ.ஜெ.நகரில் புதிதாக 1 பெட்டக வடிவ பாலம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

- சென்னை மாநகரத்தின் பெரும்பாலான பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து 2.5 மீட்டர் அளவே உயரத்திலுள்ளது. இதனால் பருவ மழைக்காலங்களில் பல்வேறு இடங்களில்

அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. வெள்ள பாதிப்பைக் குறைக்கும் பொருட்டு இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினால் கடந்த நான்கு வருடங்களில் ரூ.521.64 கோடி செலவில் கூடுதலாக 329.05 கி.மீ. மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், சென்னை மாநகராட்சியில் நான்கு வருடங்களுக்கு முன்பாக உள்ள வெள்ள பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளின் எண்ணிக்கை சுமார் 300லிருந்து 169ஆக குறைந்துள்ளது.

- சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றுக்கு 5,000 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகளை சென்னை மாநகராட்சி, 460 நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், 277 டிப்பர் வாகனங்கள் மற்றும் 20 இயந்திர பெருக்கிகள், 57 சக்கரத்தடை வாகனங்கள் மற்றும் 57 முன்பின் பளு தூக்கிகள் மற்றும் 26 ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் (பொக்லேன்) இயந்திரங்கள் மற்றும் 4 எண்ணிக்கையில் புல்டோசர்கள், சிறிய வகை லோடர்கள் (பாப்காட்) 27 ஆகியவற்றை கொண்டு அகற்றப்படுகிறது. இதற்காக 2011–2015ஆம் ஆண்டில் ரூ.62.88 கோடி மதிப்புள்ள வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

- சென்னை வாழ் மக்களின் சமூகத் தேவைகளின் பயன்பாடு மற்றும் பொழுதுபோக்குத் தேவைக்கு ஏதுவாக வணிக வளாகம் ரூ.1.28 கோடி, வாகன இயக்கூர்தி நிலையம் ரூ.4.46 கோடி, அம்மா மாளிகை ஐந்து தளங்களுடன் கூடிய கட்டடம் ரூ.39.11 கோடி சுகாதாரக் கட்டடங்கள் 8 மற்றும் இரண்டு எரிவாயு எரியூட்டகம் ரூ.11.72 கோடி, கல்வித்துறையில் 24 பள்ளிக் கட்டடங்கள் ரூ.15.40 கோடி, 24 வார்டு அலுவலகங்கள் ரூ.26.62 கோடி, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வாலஸ் கார்டனில் பொது மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் பலஅடுக்கு வாகன நிறுத்தும் இடம் ரூ.43 கோடி, எலியட்ஸ் கடற்கரையில் ஸ்மித் நினைவு மண்டபம் புனரமைக்கும் பணி ரூ.1.65 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது, தண்டையார்பேட்டையில் அதி நவீன தொற்று நோய் மருத்துவமனை ரூ.17.38 கோடி, 900 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன மற்றும் அனைத்து வசதிகள் கொண்ட கலையரங்கம் கட்டும் பணிக்கு ரூ.18.05 கோடி, சலவைக்கூடம் மற்றும் ஓய்வறைகள் ரூ.42.43 இலட்சம் ஆகிய பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

- சென்னை மாநகர மக்களின் குறிப்பாக பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு இரவு நேரங்களில் தெருவிளக்குப் பராமரிப்பில் சென்னை மாநகராட்சி மிகுந்த அக்கறை செலுத்துகிறது. இதற்காக 2,28,876 தெருவிளக்குகளை அமைத்து பராமரித்து வருகிறது. மேலும், மின் சேமிப்பினை கருத்தில் கொண்டும் நவீன மின்சேமிப்பு வகை தெருவிளக்குகள் அமைக்கும் வகையில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ரூ.322 கோடி மதிப்பீட்டில் சுமார் 1,10,000 எண்ணிக்கையில் எல்.இ.டி தெருவிளக்குகள் இரண்டு வருடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டு இதுவரையில் ரூ.145.85 கோடி செலவில் 72,861 எண்ணிக்கையில் எல்.இ.டி தெருவிளக்குகள் அமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது இந்தியாவில் எந்த மாநகராட்சியும் செய்யாத சாதனையாகும். மீதமுள்ள 37,139 எல்.இ.டி தெரு விளக்குகள் மார்ச் 2016க்குள் அமைக்கப்படும். இதுமட்டுமில்லாமல், புதிய மற்றும் புதுபிக்கத் தக்கவல்ல எரிசக்தி முறைகளை ஊக்குவிக்கும் வகையில் 745 எண்ணிக்கையில் சூரிய சக்தியுடன் கூடிய 13 வாட் எல்.இ.டி. விளக்குகள் ரூ.213.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகராட்சி ஏற்கெனவே உள்ள 260 பூங்காக்களுடன் கூடுதலாக மாநகராட்சியின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் ரூ.108.14 கோடி மதிப்பீட்டில் 300 புதிய பூங்காக்கள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் ரூ.49.40 கோடி மதிப்பீட்டில் 176 பூங்காக்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் தூய்மையான காற்று, நடைப்பயிற்சி, யோகா பயிற்சி, குழந்தைகள் விளையாட்டு வசதிகள் போன்ற பலவகைப் பயன்கள் கிடைப்பதால் சென்னை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**பேரூராட்சிகள் இயக்குநரகம்**

- நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.531.51 கோடி மதிப்பீட்டில் சாலைகள், குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், சுகாதார வளாகங்கள் கட்டுதல், இறைச்சிக் கூடங்கள் கட்டுதல்



மற்றும் பாலங்கள் அமைத்தல் போன்ற 2,153 எண்ணிக்கையிலான அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில், 2,118 பணிகள் முடிக்கப்பட்டு, 35 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.1,099.53 கோடி ஒதுக்கீட்டில், பல்வேறு உட்தலைப்புகளான சாலை, வடிகால், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, சிறுபாலம் அமைத்தல், தெரு விளக்கு அமைத்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய பல்வேறு தலைப்பின் கீழ், 7,149 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 6,905 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 244 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- 2011–2012, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய நான்கு ஆண்டுகளில் 13ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ், ரூ.411.91 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2015–2016ஆம் ஆண்டில் 14ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ், ரூ.229.11 கோடி பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழிப்பதற்காக, 1,102 புதிய சுகாதார வளாகங்கள் கட்டுதல் மற்றும் 697 பழைய சுகாதார வளாகங்கள் புனரமைத்தல் பணிகள் ரூ.142.58 கோடி மதிப்பீட்டில் திறந்த வெளியில் மனிதக்கழிவு கழித்தலை ஒழிக்கும் திட்டம், நபார்டு திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், மற்றும் பொதுநிதி ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய சுகாதார வளாகம் கட்டும் 1,102 பணிகளில், 1,072 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 30 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இதே போன்று, 697 சுகாதார வளாகங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ், 664 எண்ணிக்கையிலான பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள, ரூ.201.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 621 பணிகள் முடிக்கப்பட்டு, 43 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் 58 பணிகள் ரூ.65.44 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், 48 பணிகள் ரூ.26.10 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகள் நிருவாகத்தின் மூலம் மேற்கொள்ள 22.01.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதர 10 பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயலாக்கத்தில் உள்ளது.

- இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிக்கான இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ், 476 எண்ணிக்கையிலான பல்வேறு கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.92.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 461 பணிகள் முடிக்கப்பட்டு, 15 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் போக, 43 பணிகள் ரூ.21.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 22.01.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- பகுதி II திட்டத்தின் கீழ், ரூ.29.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், அலுவலகக் கட்டடம், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், சிறுபாலம், நவீன இறைச்சிக்கூடம், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், பேரூராட்சிகளுக்கு கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வழங்குதல் உள்பட மொத்தம் 644 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில், 640 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின் கீழ், 825.78 கி.மீ நீளமுள்ள 905 பணிகள் ரூ.232.90 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 902 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளர்ச்சி நிதி கீழ், ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 181 சாலைகள், பிளாஸ்டிக் சாலைகளாகவும், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 15 பேரூராட்சிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தூளாக்கும் இயந்திரக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், 3 ஏரிகளை புனரமைக்கும் பணிகளுக்கு ரூ.4.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் அங்கன்வாடிகளை புனரமைப்பு செய்தல் மற்றும் அங்கன்வாடியில்

குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல், அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் கூடுதல் அங்கன்வாடி கட்டடங்கள் கட்டுதல், சிறிய பழுதுகளை நீக்கம் செய்தல், குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல், மின்மோட்டார் பொருத்துதல் போன்ற தலைப்பின் கீழ், 506 பணிகள் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு இதில், 481 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 25 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- சிறப்புத் திட்டமாக மாற்றுத்திறனாளிகளுக்கு 503 பேரூராட்சிகளில் ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் 532 எண்ணிக்கையிலான பிரத்தியேக கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டில் 77 பேரூராட்சிகளில் ரூ.43.728 கோடி ஒதுக்கீட்டில் திடக்கழிவு மேலாண்மை கட்டமைப்பு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 76 பேரூராட்சிகளிலும் பணிகள் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள அன்னூர் பேரூராட்சியில் மட்டும் வழக்கின் காரணமாக நிலுவையில் உள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் 214 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் ரூ.53.57 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள 25.01.2016இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டம் சோளிங்கர், செங்கம், உத்தமபாளையம், வத்தலக்குண்டு மற்றும் பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சிகளில் மேற்கொள்வதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு தற்போது பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

- துணை நகரத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் ரூ.123.75 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில், திடக்கழிவு மேலாண்மை முடிக்கப்பட்டுள்ளது. குடிநீர் மேம்பாடு மற்றும் பாதாள சாக்கடைப் பணிகள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவாரியம் மூலம் செயலாக்கத்தில் உள்ளன.

- 2015–2016ஆம் ஆண்டில் சிறப்புச் சாலைத் திட்டத்தின் கீழ், 145 பேரூராட்சிகளில் ரூ.163.52 கோடி மதிப்பீட்டில் 384 எண்ணிக்கையில் 328.11 கி.மீ நீளத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில், 11 பணிகள் முடிவுற்றுள்ளது. எஞ்சிய 373 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- 66 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.3.96 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

- பேரூராட்சிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடிசை / மண்வீடுகளில் வசிக்கும் 20,000 குடும்பங்களுக்கு ரூ.420 கோடி மதிப்பீட்டில் சூரிய மின்சக்தியுடன் கூடிய கான்கீரிட் வீடுகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- அம்ரூட் திட்டத்தின் கீழ், வேளாங்கண்ணி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.33.21 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு டுபிட்கோ நிறுவனம் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- அக்டோபர் 2, 2019க்குள் தூய்மையான இந்தியாவினை உருவாக்கிட, மத்திய அரசால் “தூய்மை இந்தியா திட்டம்” அக்டோபர் 2, 2014இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2015–2016ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பேரூராட்சிகளுக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தில் நிதியுதவி பெற தகுதியான பணிகளான வீடுகள் தோறும் புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், புதிய சுகாதார வளாகங்கள் கட்டுதல், பொதுக் கழிப்பிடம் கட்டுதல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகும்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

- ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் கீழ், 23,436 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஊரகக் குடியிருப்புகள் தவிர, 6,799 அரசுப் பள்ளிகளுக்கும், 13,454 அங்கன்வாடி மையங்களுக்கும் மற்றும் 285 அரசு விடுதிகளுக்கும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், குடிநீராதாரங்கள் நீடித்த நிலைத் தன்மை அடைய 3,348 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள்



ஏற்படுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.4,149.83 கோடி செலவில், 93.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மாநிலம் மற்றும் மத்திய அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களின் கீழ், 1 மாநகராட்சி, 16 நகராட்சிகள், 39 பேரூராட்சிகள் மற்றும் 4,751 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் விருதுநகர் மாவட்டத்தில் இரண்டு கூட்டுக் குடிநீர் திட்டங்களும், சேலம் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டமும், வேலூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டமும், மதுரை மாவட்டத்தில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டமும் 62.53 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.2,712 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- நகரக் குடிநீர்த் திட்டங்களின் கீழ், 56 நகரங்களுக்கான (10 நகராட்சிகள் மற்றும் 46 பேரூராட்சிகள்) குடிநீர்த் திட்டங்கள் ரூ.295.39 கோடி மதிப்பீட்டில், 13.97 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன.

- சின்னமனூர், மறைமலைநகர், நாமக்கல், திருவண்ணாமலை, இராமநாதபுரம், தருமபுரி பெரம்பலூர், திருவாரூர், விழுப்புரம், தேனி–அல்லிநகரம் நகராட்சிகள் மற்றும் மாமல்லபுரம் திருச்செந்தூர், ஒரத்தநாடு பேரூராட்சிகள் ஆகிய 13 நகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டங்கள் 7.44 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.350.19 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வகையில் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 29.05.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை, ரூ.1,678.11 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 33.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 3 நகராட்சிகளுக்கும், 17 பேரூராட்சிகளுக்கும் மற்றும் 7,502 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

- பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.61.19 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- சுமார் 1.30 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் போரூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.12.94 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

**நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்**

- நெம்மேலியில் மத்திய அரசின் முழுமையான நிதியின் கீழ், ரூ.805.80 கோடி திட்ட மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.02.2013 அன்று துவக்கி வைத்தார்கள்.

- ரூ.460.57 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட ஆலந்தூர், அம்பத்தூர், திருவொற்றியூர், மதுரவாயல் ஆகிய இடங்களுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப் பணிகளையும், அண்ணாநகர், தென்மண்டல நீரேற்று நிலையம், கே.கே.நகர் ஆகிய பகுதிகளின் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளையும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களால் 17.74 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளனர்.

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்**

- ரூ.25.10 கோடி ஒதுக்கீட்டில் 35 ஜெட் ராடிங் இயந்திரங்களும், 30 சூப்பர் சக்கர் இயந்திரங்களும், 20 ஜெட்டிங் கம் சக்ஷன் இயந்திரங்களும் மற்றும் 116 டீ சில்டிங் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்த இயந்திரங்கள் கழிவுநீரகற்று அமைப்பில் பராமரிப்புக்காக உபயோகப்படுத்தி வருவதினால் கழிவுநீரடைப்பு புகார்களும் சாலைகளில் கழிவுநீர் வழிந்தோடுவதும் கணிசமாகக் குறைந்துள்ளன.

- சென்னை நகரில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறப்புக் கண்ணோட்டத்துடன் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்த ரூ.583.86 கோடி ஒதுக்கீட்டில் குடிநீர் இணைப்புகள் இல்லாத குடிசைப் பகுதிகளில் வாழும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் விநியோக குழாய்கள் பதித்தல், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள்

அமைத்தல், அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைக்கவும், சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட நொளம்பூர், காரம்பாக்கம், இராமாபுரம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ஒக்கியம் – துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னசேக்காடு, மணலி, பள்ளிக்கரணை, முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம் மற்றும் புழல் ஆகிய 25 பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை நகரிலும் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் சிறப்புக் கண்ணோட்டத்துடன் உட்கட்டமைப்பு மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்களுக்காக ரூ.552.56 கோடி ஒதுக்கீட்டில் கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல், பிரதான கழிவு நீரேற்று குழாய்கள் பெரிதாக்குதல், பிரதான கழிவுநீரேற்று குழாய்களை புதிய வழிதடத்தில் அமைத்தல், புதிதாக இணைக்கப்பட்டுள்ள அம்பத்தூர் பகுதியில் (முகப்பேர்) பல்வேறு இடங்களில் மனித நுழைவாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல், தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவு நீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள், கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்கவும் மற்றும் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட கத்திவாக்கம், இராமாபுரம், சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம், சூரப்பட்டு, புத்தகரம்–கதிர்வேடு, நொளம்பூர் மற்றும் திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) பகுதிகளில் கழிவு நீரகற்றும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த 2012–2013ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்க இயலும். இக்கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும். முதல் கட்டமாக, உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து ரூ.150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும். இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 158 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் ரூ.163 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அடையாறு நீர் வழிப்பாதையை சார்ந்துள்ள பகுதிகளுக்கான பணிகள் 01.09.2015 முதல் நடைபெற்று வருகின்றன. மற்ற நீர் வழி பாதைகளுக்கானப் பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
- ரூ.86.04 கோடி மதிப்பீட்டில் மாதவரம், அம்பத்தூர் பகுதி 3, சிப்பம் 1 மற்றும் 5 பகுதிகளில் முடிவுற்ற ஒருங்கிணைந்த கழிவு நீரகற்றும் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்கள். மேற்கண்ட திட்டங்களால் 1.55 இலட்சம் மக்கள் கழிவுநீர் இணைப்புகளையும் பெற்று பயனடைவர்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்பேட்டில் 120 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.87.35 கோடி மதிப்பீட்டிலும், மீனம்பாக்கம் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை ரூ.4.70 கோடி மதிப்பீட்டிலும், சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதி மக்களின் தரமான சேவைக்காக ரூ.19.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 82 புதிய சென்னைக் குடிநீர் வாரிய அலுவலகக் கட்டடங்களையும், சென்னை மாநகராட்சி 20 கோட்ட அலுவலங்களில் ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 78 பொது வரி வசூல் மையங்களையும் 15.09.2015 அன்று திறந்து வைத்தார்கள்.
- நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புதிறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூரில் அமைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைக் கொண்டு செல்லும் குழாய்களை அமைத்திடவும் ரூ.4,070.67 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவான திட்ட அறிக்கை, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு குழுமத்திடம் இருந்து நிதி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நடப்பு நிதி ஆண்டிலேயே (2015–2016) ஜப்பான் பன்னாட்டு நிதியை பெற தமிழக அரசும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் முயற்சி செய்து வருகிறது. இந்தத் திட்டம் மற்றும் மதிப்பீடு பற்றி கலந்தாய்வு செய்ய ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் ஆய்வு குழுவினர் 13.01.2016 அன்று சென்னைக்கு வருகை புரிந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.
- நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புதிறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, ஏற்கனவே நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புதிறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தின் வளாகத்தில் உள்ள 10.50 ஏக்கர் காலி இடத்தில் அமைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைக் கொண்டு செல்லும் குழாய்கள் அமைத்திடவும் ரூ.1,371.86 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தமிழக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விரிவான திட்ட அறிக்கை, மத்திய அரசின் நிதி மற்றும் ஜெர்மன் வங்கியின் நிதி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனைடையில் உள்ளது. இது சம்மந்தமாக ஜெர்மன் வங்கியின் மதிப்பீட்டுக் குழு அக்டோபர் 2015இல் சென்னைக்கு வருகை தந்து இத்திட்டத்தைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தனர். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தபுள்ளி ஆவணங்களுக்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.
- சென்னை மாநகரின் வருங்கால குடிநீர் தேவை நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகவும், நீராதாரங்களைப் பாதுகாத்து சீரமைப்பதற்காக, நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளது.
- சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் புதிய குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய் பதிக்கும் பணிகள் ரூ.116 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் 29.12.2015 அன்று பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
- கழிவுநீரை மறு சுழற்சி செய்து குடிநீர் அல்லாத பிற தேவைக்கு பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டும் வடசென்னையை ஒட்டியுள்ள மணலி மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலைசுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ரூ.255 கோடி மதிப்பீட்டில் அமைக்க தமிழக அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கான ஒப்புதல் பெறப்பட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட உள்ளது.
- இருங்காட்டுகோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் ஆகிய தொழிற்சாலை பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்க 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் கோயம்பேட்டில் ரூ.394 கோடி மதிப்பீட்டில் துவங்க ஒப்பந்தங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
- சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மின் உற்பத்தி செய்யும் அமைப்புகளுடன் கூடிய புதிய கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையத்தினை, ரூ.65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்க தமிழக அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 15.12.2015 அன்று பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

❖ ❖ ❖

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

# திறம்பட்ட மனித வளத்தால் சிறந்திடும் அரசுத்துறை நிருவாகம்

**தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம்**

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும்இணையவழிவிண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- இணைய வழி விண்ணப்பப் படிவம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் இருப்பதுடன் பயன்பாட்டிற்கு எளிதாகவும், விண்ணப்பதாரரின் அடிப்படை மற்றும் முக்கிய விவரங்களைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொருவிண்ணப்பதாரரும்தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் (ரூ.50) கையொப்பம் (ம) புகைப்படத்துடன் நிரந்தரமாகப் பதிவு செய்யும் முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒவ்வொரு ஆண்டும் தேர்வுத்திட்ட அறிக்கையை வெளியிடுகிறது.

- தேர்வுக்கூடங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அனைத்துத் தேர்வுக்கூடங்கள்/அறைகள், ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாகக் கண்காணிக்கப்படுகின்றன. வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில் நேர்காணல் தேர்வின் அனைத்து நடவடிக்கைகளும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

- மாற்றுத்திறனாளிகளின் வசதியினைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் தரை தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். தேவைப்படின் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

- தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகள், முறைகேடுகள் ஏதுமின்றி நேர்மையாகவும், விரைவாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட கணினி வழித் தேர்வுகள் அறிமுகம்.

- தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களின் (விரிவான விடை எழுதுதல்) விடைத்தாள் நகலினை, தேர்வாணையத்திலேயே பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், கொள்குறி வகையைச் சார்ந்த விடைத்தாள் நகல், தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்கள் கோரும் பட்சத்தில் வழங்கப்படுகிறது.

- தேர்வாணையம், பணி (ம) அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கலந்தாய்வு முறையில் காலிப்பணியிடம் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.

- அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் மாறுதல் வழி நியமனம் தொடர்புடைய கருத்துருவினை துறை பதவி உயர்வு குழுக் கூட்டத்தில் விரைவாக கூர்ந்தாய்வு செய்வதற்கு ஏதுவாக தேர்வாணையம் ஒற்றைச் சாளர முறையினை அறிமுகப்படுத்திச் செயல்படுத்துகிறது.

- தேர்வாணைய வரலாற்றிலேயே, முதன்முறையாக தொகுதி–4 (2013) தேர்விற்கு 17.06 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 14.12 இலட்சம் விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத அனுமதி.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2014–2015ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வு திட்ட அறிக்கையின்படி 3,686 காலிப் பணியிடங்களுக்கான தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- தேர்வாணைய வரலாற்றில் முதன் முறையாக, தொகுதி–4 (2013) தேர்வில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை, கலந்தாய்வுக்கு முன்னதாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கடந்த 4½ ஆண்டுகளில், அதாவது மே 2011 முதல் டிசம்பர் 2015 வரை பல்வேறு துறைகளுக்கு 54,753 நபர்களை போட்டித்தேர்வுகளின் வாயிலாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.19.86 கோடி மதிப்பில் சென்னை பார்க் டவுன் பகுதியில் 6 தளங்களுடன் கூடிய புதிய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலக வளாகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.09.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2013–2014ஆம் ஆண்டுகளில் உரிமையியல் நீதிபதிகள் தேர்வு (162 காலிப்பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–I) (79 காலிப்பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–II) (1,064 காலிப்பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–IIA) (2,269 காலிப்பணியிடங்கள்), கிராம நிருவாக அதிகாரி தேர்வு (2,342 காலிப் பணியிடங்கள்), தொகுதி–4 தேர்வு (4,963 காலிப்பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளை நடத்தியது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 30.04.2015 அன்று ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி–II, நேர்காணல் தேர்வு) (1,241 காலிப்பணியிடங்கள்), 07.05.2015 அன்று உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் தேர்வு (2014) (270 காலிப்பணியிடங்கள்), 10.07.2015 அன்று ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I (தொகுதி–I) (74 காலிப்பணியிடங்கள்), 21.07.2015 அன்று உதவிப் பொறியாளர் (குடிமை) நெடுஞ்சாலைத் துறை தேர்வு (213 காலிப்பணியிடங்கள்) மற்றும் 31.07.2015 அன்று தாய், சேய் நல அலுவலர் தேர்வு (89 காலிப் பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளுக்கான அறிவிக்கைகளை 01.04.2015 முதல் 31.07.2015 வரையிலான காலாண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 01.07.2015 முதல் 31.10.2015 வரையிலான காலாண்டில் (i) 10.07.2015 அன்று ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I (தொகுதி–I) (74 காலிப்பணியிடங்கள்), (ii) 21.07.2015 அன்று உதவிப் பொறியாளர் (குடிமை) நெடுஞ்சாலைத் துறை தேர்வு (213 காலிப்பணியிடங்கள்), (iii) 31.07.2015 அன்று தாய், சேய் நல அலுவலர் தேர்வு (89 காலிப் பணியிடங்கள்) மற்றும் (iv) 12.10.2015 அன்று ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி–IIA) (1,863 காலிப்பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளுக்கான அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 01.11.2015 முதல் 31.12.2015 வரையில், 12.11.2015 அன்று கிராம நிருவாக அலுவலர் தேர்வு–2015, (813 காலிப் பணியிடங்கள்) மற்றும் 16.12.2015 அன்று ஆராய்ச்சி உதவியாளர் (மதிப்பாய்வு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை) தேர்வு (14 காலிப்பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளுக்கான அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது.

- திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்வு.

- 'பகவான் வைகுந்தசுவாமி பிறந்தநாள்' வரையறுக்கப்பட்ட விடுமுறை நாளாக அறிவிப்பு.

- இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 11 மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.85 இலட்சம் செலவில் 11 ஈப்புகள், 20.02.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

- பவானிசாகர் மையத்தில் நவீன சமையற்கூடம் திறந்து வைக்கப்பட்டது. 2 உணவகப் பணியாளர்கள் நிரந்தர அடிப்படையில் அடிப்படை ஊழியர்களாக பணி நியமனம் செய்யப்பட்டனர்.

- ரூ.10.40 இலட்சம் செலவில், ஆண்டுதோறும், அனைத்து மாவட்டங்களிலுள்ள இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு 5 நாட்கள் கொண்ட புத்தாக்கப் பயிற்சி, அந்தந்த மாவட்டத் தலைமையிடங்களில், மாவட்ட

ஆய்வுக்குழு அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

**அண்ணா மேலாண்மை நிலையம்**

- மத்திய தேர்வாணையம் நடத்தும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணவச் செல்வங்களின் பயனுக்கென ரூ.10.14 கோடி மதிப்பீட்டில் சென்னையில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட புதிய பயிற்சி மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- அண்ணா மேலாண்மை நிலையம் 178 குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை நடத்தி 5,700 அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது சென்னை மற்றும் திருச்சி, மதுரை, சேலம் போன்ற மண்டல மையங்களின் மூலமாக ஏறக்குறைய அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடத்திய பயிற்சியின் கூட்டுத் தொகையாகும். இதன் மூலம், மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களின் பொதுவான நிருவாகத்திறன், மனோபாவ மாற்றங்கள் குறித்த பொதுவான திறன்களையும், துறைசார்ந்த குறிப்பிட்ட திறன்களையும், ஆளுமையும் மேம்படுத்தி பொதுச் சேவையின் தரத்தை உயர்த்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

**சிறப்புப் பயிற்சிகள்**

- 2014ஆம் ஆண்டு தொகுப்பில் இருந்து தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 9 இந்திய ஆட்சி பணி பயிற்சி அலுவலர்களின் (தகுதிகாண் பருவத்தினர்) ஆற்றலை அதிகரிக்கும் வகையில் ஒரு மாதத்திற்கும் மேலான கால பணியறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டது. இது அவர்கள் மாவட்டப் பணிக்கு செல்வதற்கு முன்பு பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் கிடைத்ததால் பயிற்சியாளர்கள் இந்த பயிற்சியினை வெகுவாக விரும்பினார்கள்.

- தலைமை பண்புகளின் உத்திகள் என்ற தலைப்பில் மைய அரசின் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, அலுவலக நடைமுறைகள் குறித்து கோவை விவசாய பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்.

- வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கொத்தடிமை ஒழிப்பு மற்றும் அதனைச் சார்ந்த சட்ட வரைமுறைகள் குறித்து கருத்தரங்குப் பட்டறை.

- மைய அரசின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட இரண்டு நாள் வனம் மற்றும் வனத்துறை சார்ந்த முன்னேற்றங்களுக்கான தலைமைப் பண்புகள் குறித்து இந்திய வனப்பணி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி.

- மைய அரசின் அங்கமான சமையல் கலை பயிற்சி மைய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மேலாண்மை உத்திகள் மற்றும் முறைகள் குறித்த பயிற்சி.

- மன இறுக்க மேலாண்மை குறித்து சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி.

- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 குறித்த சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி.

- பேரிடர் மேலாண்மை குறித்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் பயிற்சி.

- மைய அரசு, மக்களுடன் நேரடித் தொடர்புள்ள அரசுப் பணியாளர்களுக்கு என ஒரு அறிமுகப் பயிற்சியினை குறிப்பாக 2014ஆம் ஆண்டிற்கு பிறகு பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு என வழங்க திட்டமிட்டு இவ்வாண்டு 5 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து (கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள்) பயிற்சி வழங்கி நிதியுதவி செய்வதன் மூலமாக பயிற்சிகள் அக்டோபர் மாதம் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இது 12 நாட்கள் வழங்கப்படும். இதனால் பணியாளர்களின் பொதுவான நிருவாகத்திறன், மனோபாவ மாற்றங்கள் குறித்த பொதுவான திறன்களையும், துறை சார்ந்த குறிப்பிட்ட திறன்களையும், ஆளுமையையும் மேம்படுத்தி பொதுமக்களுக்கான சேவையின் தரத்தை உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுலவர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்**

- 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம், காஞ்சி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாக நியமனம் செய்யப்பட்ட மற்றும் பதவி உயர்வின் மூலம் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த மாநில அலுவலர்களுக்கு "அ" மற்றும் "ஆ" பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது. வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்து, இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவடைவதற்கு முன் வரையறை ஆகும். இப்பயிற்சி நிலையம் மாவட்ட வருவாய் அலுவலரால் நிருவகிக்கப்படுகிறது.

- நடப்பு 2015–2016ஆம் ஆண்டில் 15 அணிகளில் 575 அலுவலர்களுக்கு "அ" மற்றும் "ஆ" பிரிவிற்கான அடிப்படை பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் காலாண்டு வரை 6 அணிகளில் 154 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் காலாண்டான ஆகஸ்ட் 2015 முதல் அக்டோபர் 2015 வரை 'ஆ' பிரிவில் 4 அணிகளில் 92 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மேலும் இப்பயிற்சியில் சட்டம், அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், தகவல்அறியும் உரிமைச்சட்டம், மேலாண்மை கோட்பாடுகள், பொது நிதி, பொருளாதாரம், திட்டமும் வளர்ச்சியும் மற்றும் கணினி பயன்பாடுகள் ஆகிய பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு பயன் பெறும் வகையில் கூடுதலாக யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகள் அனுபவமிக்க விரிவுரையாளர்கள் மூலம் பயிற்சி வகுப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் மொத்தம் 3,965 நபர்கள் பயிற்சி பெற்று பயனடைந்தார்கள்.

- அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ஜூன் முதல் டிசம்பர் 2015 வரை 3,965 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கோவையில் 627 நபர்களும், திருச்சியில் 666 நபர்களும், வேலூரில் 742 நபர்களும், சேலத்தில் 740 நபர்களும், பவானி சாகரில் 1,190 நபர்களும் பயிற்சி பெற்றனர்.

**அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகள் பயிற்சி மையம், சென்னை**

- தமிழக அரசின் நேரடி நிருவாகத்தில் இயங்கி வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம், இம்மாநிலத்தில் இருந்து அகில இந்திய நிருவாகப் பதவிகளான IAS, முதலியவற்றிற்கான தேர்வுகளில் பங்கேற்கும், தேர்வு செய்யப்பட்ட 225 பயிற்சியாளர்களுக்கு இக்காலகட்டத்தில் எல்லா உதவிகளும் செய்து தந்தது.

- மழை வெள்ளம் திடீரென சூழ்ந்த நாட்களில், குடிமைப் பயிற்சி அலுவலர்கள் பலர் மையத்திலேயே தங்கி, விடுதியில் தங்கி இருந்த பயிற்சியாளர்கட்கு உணவு மற்றும் குடிநீரை உத்திரவாதம் செய்து உதவினர்.

- மத்திய தேர்வாணைய குழு இந்த ஆண்டு முதன்மைத் தேர்வுகளை 18.12.2015 முதல் 23.12.2015 வரை நடத்திய போது, இம்மைய தேர்வாளர்கட்கு சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சிறப்புப் பேருந்து ஏற்பாடு செய்து அவர்களை ஆர்.ஏ.புரம் மையத்தில் இருந்து தேர்வு மையமான காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரிக்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்தது. தேர்வுகள் நடந்த ஐந்து நாட்களிலும் தேர்வு மையத்தில் பயிற்சியாளர்களுக்கு சூடான மதிய உணவு இப்பயிற்சி மைய ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

**அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

- ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் செயல்படும் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தினை ஒரு முன்னோடி பயிற்சி நிலையமாக உயர்த்தும் பொருட்டு ரூ.36.23 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றும் பயிற்சி கட்டமைப்புகளை நவீனமயமாக்குவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்விளையாட்டு அரங்கத்தின் பணிகள் நிறைவுற்று பயன்பாட்டுக்கு வந்துள்ளது. கலையரங்கம் கட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

- 2015–2016ஆம் நிதியாண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மற்றும் வேலூர், திருச்சி, கோவை, சேலம் ஆகிய நான்கு காவலர் பயிற்சிப் பள்ளிகளில் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்காக நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் 1,379 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# திட்டவளர்ச்சியால் சிறப்பு முயற்சியால் முன்னேறும் தமிழகம்



**மாநிலத் திட்டம்**

- ஐந்து ஆண்டுகளுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1,94,423 கோடி.

- பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவிகிதம் அதிகரித்து, ரூ.2,11,250 கோடி ஒதுக்கீட்டளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் திட்டக்குழு மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தினை 2011–2012ஆம் ஆண்டு முதல் 2014–2015ஆம் ஆண்டு வரை (நான்காண்டுகளுக்கு) செயல்படுத்த ரூ.9,129 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தில் மண்வளப்பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், சாலைகள், சுற்றுலா, கால்நடை பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஊரக வளர்ச்சி, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மீன்வளம், சிறு பாசனம், பேரூராட்சிகள், மற்றும் பட்டு வளர்ப்பு ஆகிய துறைகளில் தனிக்கவனம் செலுத்தப்படுகின்றன.

- மத்திய திட்டக்குழு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நான்கு ஆண்டுகளுக்கு (2011–2015) ரூ.189.21 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, ஊரகச் சாலைகள், உள்ளாட்சி நிறுவனங்களின் மேம்பாடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா, பட்டுவளர்ச்சி, மருத்துவம், பொது சுகாதாரம் மற்றும் சிறுபாசனம் ஆகிய துறைகளில் செயல்படுத்தப்படுகிறது.

- நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், தாவரவியல் பூங்காவிற்கு அருகில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.14.50 கோடி திருத்திய மதிப்பீட்டில் நவீன கலையரங்கம், பொருட்காட்சிக்கூடம், அருங்காட்சியகம் மற்றும் நிலையான விற்பனை அரங்கங்களுடன் கூடிய பழங்குடியினர் பண்பாட்டு ஆதார மையம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள், மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 62 புதிய சிற்றுந்துகள் வாங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 5.50 கோடி மதிப்பீட்டில் உதகை ஏரியில் மாசுகட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- பெரிதளவில் விளையாட்டு போட்டிகள் மற்றும் பந்தயங்களில் பங்கேற்க ஏதுவாக பயிற்சியாளர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் மலை மேலிட பயிற்சி மையத்தில் நிரந்தர பயிற்சி அளிப்பதற்கு உதகையில் செயற்கை இழை ஓடுதளம் அமைக்க ரூ.2.05 கோடியில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- மத்திய வரவு செலவு திட்டம் 2015–2016இல், மத்திய அரசானது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 2015–2016 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படுகிறது என்றும், அத்திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரங்களில் இருந்து தொடர்ந்து செயல்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது. வரவு செலவு திட்டம் 2015–2016இல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப் பகுதிகளைச் சேர்த்து ரூ.75 கோடி ஒதுக்கீட்டில் புதிதாக "சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி**

- 2012–2013ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, வட்டாரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளைக் களைவதற்காக சுகாதாரம், கல்வி, பாலினம், தனிநபர் வருமானம், வறுமை மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கண்டறியப்படும். இதற்கென ஆண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி ஒன்று நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகளை களையும் பொருட்டு இலக்குகளைக் கொண்டத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் 105 மிகவும் பின்தங்கிய வட்டாரங்களிலும், நகர்புறங்களிலும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை 30 மாவட்டங்களின் 105 மிகவும் பின்தங்கிய ஊரக மற்றும் நகர்புறங்களில் ரூ.191.96 கோடி மதிப்பீட்டில் 340 திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டு அத்திட்டங்கள் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல்**

- அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்கு மாநிலத் திட்டக்குழுவில் தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் என்ற ஒரு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது இதற்கென "மாநில புத்தாக்க நிதியம்" என்ற ஒரு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு

இந்த நிதியத்திலிருந்து நிதி வழங்கப்படும். இந்த நிதியத்திற்கு 2015–2016ஆம் ஆண்டு முதல் ரூ. 150 கோடி வழங்கப்படுகிறது. முதற்கட்டமாக 32 திட்டங்களுக்கு ரூ.84.84 கோடி அளவிற்கும் இரண்டாம் கட்டமாக 37 திட்டங்களுக்கு ரூ.65.67 கோடி அளவிற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீட்டு ஆய்விற்காக ரூ.5.34 கோடி அளவிற்கு அப்துல் லதீஃப் ஜமீல் (J-PAL) அமைப்பிற்கு ஒப்புதல்.

- தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023இன், குறிக்கோள்களில் ஒன்றான, தமிழ்நாட்டை புத்தாக்க மையமாக உருவாக்குவதின் தொடர்ச்சியாக அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" (Tamil Nadu Innovative Initiative-TANII) என்ற ஓர் அமைப்பினை மாநில திட்டக்குழுவில் நிறுவுவதற்கும், ஆண்டுதோறும் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாநில புத்தாக்க நிதியம் ஒன்றை ஏற்படுத்தவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருது ஒன்று ஏற்படுத்தப்படும்.

### அரசுத் திட்டங்களின் பயன்பாட்டு மதிப்பீடு

- ஏற்கெனவே நடைமுறைபடுத்தப்பட்டு வரும் திட்டங்களில் கிடைத்த பயன்களை ஆராய்ந்து வறுமை ஒழிப்பு திட்டங்களில் அதிக பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லதீஃப் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (J-PAL) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து 16 மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லதீஃப் ஜமீல் –அமைப்புடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வுஒப்பந்தத்தின் கீழ்மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு, தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ. 18,31,020/–ம், இரத்தசோகை உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு வாராந்திர அயர்ன் ஃபோலிக் அமிலம் அளிப்பதற்கு (WIFS) ரூ.26,12,448/–ம், மேலும், தொற்றாத நோய்களை குறைப்பதற்கும், ஆரோக்கிய பழக்கவழக்கங்களை தூண்டுவதற்கும் ரூ.2,21,86,483/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறைக்கு, வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பப் பள்ளிக் கல்வியை மேம்படுத்த ரூ.41,89,845/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்கு ரூ.29,72,475/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### மாநிலத் திட்டக்குழு

- பகுதி–II திட்டத்தின் கீழ் 2011–2015ஆம் ஆண்டு வரை ரூ.600 கோடி அளவிற்கு புதிய திட்டங்களை மாநிலத் திட்டக்குழு பரிந்துரை செய்தது.

- 2011–2012 முதல் 2014–2015 வரையிலான காலங்களில் பயிலரங்குகள் / கருத்தரங்குகள் மாநிலத் திட்டக்குழுவில் நடத்தப்பட்டு அவற்றின் பரிந்துரைகள் புத்தகங்களாகவும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், முக்கிய பொருள் குறித்து ஆராய்வுகள் ரூ.300.63 இலட்சம் அளவில் எடுத்துக் கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டில் 13 பயிலரங்கங்கள் மாநிலத் திட்டக்குழுவில் நடத்தப்பட்டு அவற்றின் பரிந்துரைகள் புத்தகங்களாகவும் கூட்ட நடவடிக்கை குறிப்புகளாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மூலமாக நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் மூலம் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் 32 ஆராய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- மனித மேம்பாட்டிலுள்ள இடைவெளியைக் கண்டறியும் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.3.40 கோடி. மனித மேம்பாட்டிலுள்ள இடைவெளியை கண்டறிய, மாநிலத் திட்டக்குழுவால், மாநில மற்றும் 32 மாவட்டங்களுக்கு "மனித மேம்பாட்டு அறிக்கை" தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.3.40 கோடி. இதற்கு மாநில அரசால் ரூ.2.40 கோடியும், மத்திய அரசால் ரூ.1 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிதி – மத்தியத் திட்டக்குழு உதவியுடன் தயாரிக்கப்படுகிறது.

## பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

### இந்திய புள்ளியியல் வலுப்படுத்தும் திட்டம் :

- இந்திய புள்ளியியல் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் துறைத் தலைமையிடத்திற்கு ரூ.469 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 26.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மொத்தம் கட்டப்பட வேண்டிய 322 வட்டார புள்ளியியல் ஆய்வாளர் அலுவலகங்களுள் முதற்கட்டமாக 242 அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகங்களில் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு ரூ.6.28 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 228 கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள அலுவலகங்களுக்கு கட்டடப் பணி வெவ்வேறு நிலையில் உள்ளது. இதைத்தவிர 64 அலுவலகங்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கட்டப்பட வேண்டிய 5 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களுள் சேலம் மண்டல புள்ளியியல் இணை இயக்குநர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு 26.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கடலூர், திருநெல்வேலி மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மதுரை மண்டல புள்ளியியல் இயக்குநர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு தயாராக உள்ளது. மேலும் கோயம்புத்தூர் மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலக கட்டடப் பணி தொடங்கப்பட உள்ளது. கட்டப்பட வேண்டிய 49 கோட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் அலுவலகங்களுள், 28 அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அலுவலகங்களுக்கு கட்டுமானப் பணிகள் வெவ்வேறு நிலையில் உள்ளன. இதில், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கோட்ட அலுவலகம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கோட்ட அலுவலகம் 26.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கட்டப்பட வேண்டிய 14 மாவட்ட புள்ளியியல் அலுவலகங்களுள் 12 அலுவலகங்களுக்கு கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள அலுவலகங்களுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றது.

- ரூ.187.73 இலட்சம் மதிப்பீட்டில் 31 மாவட்டங்களுக்கு பொலிரோ ஜீப்புகள் வாகனம் மற்றும் தலைமையிடத்திற்கு ஒரு சீருந்தும், மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு சீருந்து மற்றும் பொலிரோ ஜீப்பு வாங்கப்பட்டுள்ளன. இவ்வாகனங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 20.02.2013 அன்று வழங்கினார்கள்.

- தலைமையிடத்தில் செயல்பட்டு வரும் கூடுதல் கட்டடம்,மாநிலம் முழுவதும் செயல்படும் மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகம், கோட்ட புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலகம், வட்டார புள்ளிஇயல் ஆய்வாளர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு மரச்சாமான்களும், தளவாட பொருட்களும் (Furniture and Fixtures) வழங்குவதற்கு டான்சி (TANSI) நிறுவனத்திற்கு ரூ.2.33 கோடி வழங்கப்பட்டு தற்போது இப்பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.

- 13ஆவது நிதிக்குழு பரிந்துரையின்படி, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் மாவட்டம் நீங்கலாக மாவட்டத்திற்கு ரூ.1 கோடி வீதம் 31 மாவட்டங்களுக்கு 2010–2015ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு ரூ.31 கோடி.

- இந்நிதியினைப் பயன்படுத்தி மாவட்ட வாரியாக பத்து முதன்மைப் பயிர்களுக்கான பயிர் சாகுபடி செலவினம் குறித்த ஆய்வு, சிறப்பு ஆய்வு, மீன்வளப் பிரிவு, கால்நடை பிரிவு, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் குறித்த ஆய்வு, அனைத்து நிறுவனங்களுக்கான ஆண்டுத் தொழில் ஆய்வு, வேலைத் திறன் மதிப்பீட்டு ஆய்வு போன்ற ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வுகளின் முக்கிய நோக்கம் மாவட்ட / மாநில வருவாய் கணக்கீடு செய்யும் முறையை

வலுப்படுத்துவதே ஆகும். இதை கருத்தில் கொண்டு ஆய்வுகளுக்கான மாதிரிகளை அதிகப்படுத்தியும் விரிவுப்படுத்தியும் இவ் ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவடைந்துள்ளன. இவ் ஆய்வு முடிவுகள் மாநில / மாவட்ட வருவாய் கணக்கீடு செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும்.

**2014–2015ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி**

- பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையானது மாநில விவசாய புள்ளி விவரங்களின் அதிகார அமைப்பாக இருப்பதால், தமிழ்நாட்டின் முதன்மை பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி வீதம் ஆகியவற்றினை மதிப்பீடு செய்கிறது. தமிழ்நாட்டின் முதன்மை பயிர்களின் பயிரிடப்பட்ட பரப்பு விவரங்கள் வருவாய் பதிவேடுகளில் உள்ள பதிவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. அதேபோன்று உற்பத்தி வீதம், வேளாண் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட 9,276 பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணக்கிடப்படுகின்றன.
- தமிழ்நாட்டின் 2014–2015ஆம் ஆண்டிற்கான மொத்த உணவு பயிர்களுக்கான பரப்பு வீதம் 36.06 இலட்சம் ஹெக்டேர் எனவும், மொத்த உணவு உற்பத்தி 127.95 இலட்சம் மெட்ரிக் டன் எனவும் கணக்கிடப்பட்டுள்ளன. இந்த உணவு உற்பத்தியான 127.95 இலட்சம் மெட்ரிக் டன் முந்தைய ஆண்டுகளில் இல்லாத தமிழ்நாட்டின் அதிகபட்ச அளவாகும்.

**அடிப்படை ஆண்டு மாற்றம்**

- பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் தொழிற் குறியீட்டெண், மொத்த விலைக் குறியீட்டெண் மற்றும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை கணிப்பதற்கு மத்திய அரசின் தொழில்நுட்ப அறிவுரைக்கேற்ப, 2011–2012ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாக நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிறப்பு முயற்சிகள் துறை

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

- 45 கி.மீ. நீளத்திலான இரண்டு வழித்தடங்களில், 24 கி.மீ. சுரங்கப்பாதையாகவும், 21 கி.மீ. உயர்த்தப்பட்ட வழித்தடமாகவும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் செயல்பாடு.
- உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் கட்டுமானப் பணிகளில் 90 சதவிகிதமும், நிலத்தடி மெட்ரோ நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளில் 65 சதவிகிதமும், டிப்போ கட்டுமானத்தில் 100 சதவிகிதமும் நிறைவு.
- 12 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைக் கொண்டு மொத்தமுள்ள 36 கி.மீட்டரில் 30 கி.மீ. சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.
- பிரேசிலிலிருந்து வந்து சேர்ந்த முதல் இரயில் பெட்டித் தொடரின் சோதனை ஓட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.11.2013 அன்று கோயம்பேடு பணிமனையில் கொடியசைத்து துவக்கப்பட்டது.
- 110 கி.வோ/33 கி.வோ மற்றும் 110 கி.வோ/25 கி.வோ மின்சக்தி பெறும் துணை மின் நிலையம் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த துணை மின் நிலையங்கள் 06.11.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது.
- பிரேசில் நாட்டிலிருந்து மொத்தம் வரவேண்டிய 9 இரயில்பெட்டித் தொடர்களும், ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியிலிருந்து வரவேண்டிய 33 இரயில் பெட்டித் தொடர்களில் 24 இரயில்பெட்டித் தொடர்களும், கோயம்பேடு பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளன.
- 14 கி.மீ. நீளத்திற்கு உயர்த்தப்பட்ட வழித்தடப்பகுதியிலும், பணிமனையில் 10 கி.மீ. நீளத்திற்கும் தண்டவாளங்கள் அமைக்கும் பணி முடிவுற்று. எழும்பூர்–திருமங்கலம் வரையிலான சுரங்கப்பாதையில் தண்டவாளம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.
- கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான (10.15 கி.மீ.) உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் பயணிகள் சேவை 29.06.2015 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ ❖ ❖

# தியாகச் செம்மல்களின் நலம் காக்கும் சாதனைகள்




**பொது (அரசியல் ஓய்வூதியம்)**

- விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/–லிருந்து ரூ.11,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000/– லிருந்து ரூ.5,500/– ஆகவும் உயர்வு.

- விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவப்படி ரூ.100/– லிருந்து ரூ.500/– ஆக உயர்வு. அரசு மருத்துவமனைகளில் "அ" வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சை, புதிய மருத்துவமனைகளில் உயர்தர சிகிச்சை.

- வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நேரடி வாரிசுப் பேரன் திரு.ஆ.உலகநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ.4,500/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.

**பொது (முன்னாள் படைவீரர் நலன்)**

- தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களில் வீர தீரச் செயல்கள் / சிறப்பாக பணிபுரிந்தமைக்கான விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு வழங்கப்படும் பணமுடிப்பு மற்றும் நிலம் வழங்குவதற்கு பதிலாக வழங்கப்படும் பணப் பயன்கள் உயர்வு.

- கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- படைப்பணியில் உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கான நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டு 177 நபர்களுக்குஅரசு வேலைவாய்ப்பு.
- 753 முன்னாள் படைவீரர்கள், பல்வேறு அரசு / தனியார் நிறுவனங்களில் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மூலமாக பணியமர்த்தம்.
- முன்னாள் படைவீரர்களின் பெயர்களைப் பதிவு செய்தல், பணியில் அமர்த்துதல் மற்றும் நலத்திட்டங்களை நிருவகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்த முன்னாள் படைவீரர் நலத்துறையில் தேசிய தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுகைத் திட்டம் அறிமுகம்.
- இரண்டாம் உலகப் போர் மாதாந்திர மானியங்கள் படைவீரர்களுக்கு ரூ.3,000/– லிருந்து ரூ.4,500/– ஆகவும், படைவீரர்களின் கைம்பெண்களுக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.2,500/– ஆகவும் உயர்வு.
- வேலூரில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டும் பணி ஆரம்பம்.
- தருமபுரி, நாமக்கல், திருவாரூர், அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்குப் புதிய முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பு.
- போர்ப் பணி மற்றும் போரையொத்த நடவடிக்கைகளின் போது தன் உயிரைத் தியாகம் செய்யும் அல்லது உடல் ஊனமடையும் இராணுவம் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவித் தொகை அனைத்து வகையிலான துணை நிலை இராணுவப் படையினருக்கும் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
- தற்போது தொழிற்கல்வி, கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் பொது (Regular) நேர கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை மாலை நேரக் கல்லூரிகளில் சேர்க்கப் பெற்று கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கும் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
- முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வட்டி மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் கடன்களின் உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.
- போர்க் கைம்பெண்கள் மற்றும் போரில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஊனமுற்ற படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண மானியம் ரூ.25,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- போரில் மரணமடைந்த படைவீரர்களின் வாரிசுதாரர்கள், போர் கைம்பெண்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் ரூ.12,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியாக 23,974 பேருக்கு ரூ.78.95 கோடியும், தொகுப்பு நிதியாக 15,069 பேருக்கு ரூ.13.38 கோடியும், மறுவாழ்வுப் பயிற்சிக்காக 148 பேருக்கு ரூ.7.30 இலட்சமும், இராணுவ ஆட்சேர்ப்பு எழுத்துத் தேர்வுக்கான முன் பயிற்சிக்காக 529 பேருக்கு ரூ.2.71 இலட்சமும், ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கேட்டரிங் பயிற்சிக்காக 38 பேருக்கு ரூ.1.02 இலட்சமும், தையல் பயிற்சிக்காக 203 பேருக்கு ரூ.21.25 இலட்சமும் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- முன்னாள் படை வீரர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு மின்திருட்டு தடுப்புப் படையில் முன்னாள் படைவீரர்களை பணியமர்த்த வழிவகை செய்யப்பட்டு, அதன் விளைவாக இதுநாள் வரை 200 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ரூ.3 இலட்சம் வரை பயன்பெறும் வகையில் “பணியாளர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்” அறிமுகம்.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணி புரியும் முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு பணிகளில் சிறப்புப் பயிற்சிகள்.



- தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதியம் பெறும் முன்னாள் படைவீரர்கள் கழக ஒப்பந்தப் பணியாளர்களுக்கு தொகுப்பு ஊதியத்தில் 10 சதவிகிதம் உயர்வு.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலமாக 2,226 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தம்.
- 114 முன்னாள் படைவீரர்களின் குடும்பங்கள் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் ஈட்டுறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5,000 முதல் ரூ.3,60,000 வரை இழப்பீட்டுத் தொகை.
- ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.1.78 கோடி முதலீட்டுடன் குழு ஓய்வூதிய நலத்திட்டம்.
- 9,200 பணியாளர்கள் பயனடையும் வகையில் ரூ.65 இலட்சம் செலவில் இலவச சீருடைகள்.
- படைப்பணியில்உயிர்நீத்தோரின்வாரிசுகளுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், படைப்பணியில் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாகவும், ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும் உயர்வு.
- படைப்பணிக்கு தனது ஒரே மகன்/மகளை மேலும், தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/ மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஒரே தடவையாக முறையே ரூ.20,000/–மும், ரூ.25,000/–மும் மற்றும் வெள்ளிப்பதக்கமும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர்களாக (Permanent Commissioned Officers) பயிற்சியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1,00,000/–மும், குறுகிய கால படைத்துறை அலுவலர்களாக (Short Service Commissioned Officers) பயிற்சியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.50,000/–மும், இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளில் (Junior Commissioned Officers and other Ranks) சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.25,000/–மும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- முன்னாள் படைவீரர்களின் தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல கழகம் (TEXCO) மூலமாக 2015–2016 ஆண்டில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்னாள் படைவீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**பொது (மறுவாழ்வு)த் துறை**

- தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் குறித்து 31.12.2015 வரையிலான சாதனைகள்
- தமிழகத்தில் உள்ள 109 முகாம்களில் (2 சிறப்பு முகாம்கள் உட்பட) வசிக்கும் 64,277 இலங்கைத் தமிழ் அகதிகளும் மற்றும் வெளிப்பதிவில் உள்ள 36,855 வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீடித்த மற்றும் உயர்த்தப்பட்ட நிவாரண திட்டங்கள் பின்வருமாறு :
- தமிழக மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.
- நீட்டித்து வழங்கப்பட்ட இலவச அரிசி திட்டம்: முகாம்வாழ் 19,543 இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு அரிசி 8 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மாதம் 6 கிலோ வீதமும், ஏனையோருக்கு மாதம் 12 கிலோ வீதமும் கணக்கிட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க வேண்டிய மொத்த அரிசியில் முதல் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.
- நீட்டித்து வழங்கப்பட்ட முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம்: இத்திட்டம் தமிழகத்தில் உள்ள முகாம்களில் வசிக்கும் மற்றும் முகாம்களுக்கு வெளியே வெளிப்பதிவில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரையில் 25,972 குடும்பத்தைச் சார்ந்த முகாம் மற்றும் வெளி முகாம் வாழ் அகதிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- நீட்டித்து வழங்கப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்: பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/– எனவும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/– எனவும், ஒவ்வொரு குழந்தையின்

மீதும் 20 வருடங்களுக்கு வைப்பீடு என்ற திட்டத்தின் கீழ் 122 பெண் குழந்தைகளின் பேரில் நிதி வைப்பீடு.

- நீட்டித்து வழங்கப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டம்: சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மணமாகாத முதிர் கன்னிகள் ஆகியோருக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/– வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 16,697 அகதிகள் பயனடைந்துள்ளார்கள்.

- நீட்டித்து வழங்கப்படும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்வி கட்டணச் சலுகை: ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறியியல் கல்வி பயின்று வரும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் உள்ள முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை.

- நீட்டித்து வழங்கப்படும் தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர அனுமதி: பொதுப்பிரிவின் கீழ் தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில், இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அனுமதி.

- நீட்டித்து வழங்கப்படும் விடுதிகள் வசதி: தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் 5 இடங்கள் கூடுதலாக உருவாக்கி அவற்றை அகதி மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக ஒதுக்கீடு (12,660 இடங்கள் 2,532 விடுதிகளில்) செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 362மாணவர்கள்இவ்விடுதியில்சேர்ந்துள்ளனர்.

- உயர்த்தப்பட்ட மாதாந்திர பணக்கொடை: முகாம் வாழ் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு மாதாந்திரப் பணக்கொடை குடும்பத் தலைவருக்கு ரூ.400/–லிருந்து ரூ.1,000/– ஆகவும், பெரியவர்களுக்கு ரூ.288/– லிருந்து ரூ.750 ஆகவும் 12 வயதுக்கு உட்பட்ட சிறியவர்களுக்கு ரூ.180/– லிருந்து ரூ.400/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- உயர்த்தப்பட்ட ஈமக்கிரியைக்கான நிதி உதவி: முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இறந்தவர்களுக்கான ஈமக்கிரியை நிதியுதவி ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு. இதுவரை 882 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

- நீட்டித்து வழங்கப்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி: இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்படும் 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் ரூ.41.60 இலட்சம் சுழல் நிதி.

- முகாம்களில் மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள்: இலங்கைத் தமிழர் முகாம்களில் ரூ.25 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் மேம்பாடு.

- ரூ.19.86 கோடி செலவில் 1,655 புதிய வீடுகள் கட்ட ஆணை வெளியிடப்பட்டதில், 1,202 வீடுகள் கட்டப்பட்டு மீதத் தொகை ரூ.543.6 இலட்சம் செலவில் இலங்கைத் தமிழர் வீடுகளின் கூரைகள் பழுது பார்த்தல் பணிக்காக நிதி திருப்புதல் செய்யப்பட்டது.

- இலங்கைத் தமிழர் முகாம்களில் அவசர சில்லரை செலவினங்களை சந்திக்க, தலா ரூ.10,000/– என ரூ.11.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- 2014 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் அனைத்து முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கும் ரூ.100 ரொக்கத்தொகை அடங்கிய ரூ.152 மற்றும் ரூ.318 மதிப்பிலான பொங்கல் பரிசுத் தொகை.

- நீட்டித்துவழங்கப்படும்இலவசதையல்இயந்திரம் திட்டம்: முகாம்களில் உள்ள தையல் கலை தெரிந்த 4,085 பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

- 12ஆம் வகுப்பு பயிலும் 1,029 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள்.

- அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, புத்தகப்பை, கணித உபகரணப் பெட்டிகள் (Geometric box) மற்றும் மிதிவண்டிகள் (886 எண்ணிக்கை) போன்றவை விதிகளுக்கு உட்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன.



- முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர், நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.இ/பி.டெக்/எம்.பி.ஏ/எம்.சி.ஏ/எம்.டெக்/எம். ஆர்க் பட்டப்படிப்புகளுக்குத் தகுதியின் அடிப்படையில் பொதுப்பிரிவின் கீழ் அனுமதி.

- உயர்த்தப்பட்ட மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்: டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி ரூ.6,000/– லிருந்து ரூ.12,000/– ஆக உயர்வு. 3,046 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

- உயர்த்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண நிதியுதவி திட்டம்: மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் பட்டம் / பட்டயம் பயின்ற பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம். இதரப் பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம். 390 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

- உயர்த்தப்பட்ட முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதி: முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து, முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் விபத்து காரணமாக இறப்பவருக்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூ.15,000/– லிருந்து ரூ.25,000/– ஆக உயர்வு. இதுவரை 22 குடும்பங்கள் (13 குடும்பம் ரூ.15,000/– வீதமும் மற்றும் 9 குடும்பம் ரூ.25,000/– வீதமும்) இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

- இயற்கை இடர்பாடுகள், தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் பொருட்சேதத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தொகை முழுமையான சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.2,000/– லிருந்து ரூ.5,000/– ஆகவும், பகுதியாக சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/–லிருந்து ரூ.2,500/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 2015–2016ஆம் கல்வியாண்டுகளில் இலங்கைத் தமிழ் மாணவர்களை சேர்க்கைக்கு அனுமதித்தல்.

- பரிசு மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல்: மாநில அளவில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளில் தமிழக அரசு பொது தேர்வுகளில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் முகாம் வாழ் இலங்கை தமிழ் மாணவ, மாணவியர் இருபாலருக்கும் ஆண்டொன்றுக்கு ஊக்கத் தொகை ரூ.3,20,000/– செலவில் கல்வியாண்டு 2015–2016 முதல் வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- பாத்திரங்கள் வழங்குதல்: இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஒரு குடும்பத்திற்கு ரூ.250/– மதிப்பிற்கான எட்டு வகை சமையல் பாத்திரங்கள் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கூட்டுறவு அங்காடிகள் மூலம் வழங்கப்படுகிறது.

- துணிமணிகள் வழங்குதல்: ஒவ்வொரு வருடமும் அரசால் நிர்ணயம் செய்யப்பட்டவாறு முகாம்வாழ் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் கோ–ஆப்டெக்ஸ் மூலம் துணிமணிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை போர்வைகளும் வழங்கப்படுகிறது.

- இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை: இத்திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி தொடரும் பொருட்டு வருடாந்திர கல்வி உதவித் தொகை ரூ.850/–லிருந்து ரூ.4,700/– வரை பாடப்பிரிவு தன்மைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது. இதுவரை 1,592 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

- இடம் பெயர்ந்தோர் வள மையம்: ரூ.15 இலட்சம் செலவில் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலன் தொடர்பாக "இடம் பெயர்ந்தோர் வள மையம்" ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

- சுழல் நிதி: வெளிநாடு வாழ் தமிழர்கள் இறப்பின் போது அவர்களின் உடலைக் கொண்டு வருவதற்கும், வறிய நிலை / மருத்துவ இயலாமையில் உள்ள தமிழர்களை தாய் நாட்டிற்கு திரும்ப அழைத்து வருவதற்கும் ஏற்படும் செலவினங்களை மேற்கொள்ள ரூ.1 கோடி சுழற்சி நிதியாக அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- பொதுமக்களின் குறைகளை விரைவில் களைந்திட 24/7 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி (Toll Free) எண் 1100 மூலம் தொடர்பு கொள்ள "அம்மா அழைப்பு மையம்" 19.01.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

❖ ❖ ❖

# ஏற்றமிகு கட்டடங்கள், எழிலார்ந்த நீர்நிலைகள்... போற்றுதலுக்குரிய புகழ்மிகு திட்டங்கள்!









- முல்லைப் பெரியாறு அணையில், தமிழ்நாடு, முதற்கட்டமாக 142 அடி வரையில் நீரை உயர்த்திக்கொள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆணை.
- ரூ.117.92 கோடி செலவில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 373 கால்நடை பராமரிப்பு மையங்களுக்கான, 335 கால்நடை மருந்தகங்கள், 15 கால்நடை மருத்துவமனைகள், 1 கண்காணிப்பு மையம், 3 கால்நடை நோய் நுண்ணறிவு மையங்கள், 2 பாலிகிளினிக் மையங்கள், 5 கருவூட்டல் மையங்கள் மற்றும் 12 கால்நடை பண்ணைகள் ஆகிய கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றன.
- ரூ.44 கோடி செலவில், கால்நடைத் துறையின் 798 கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் முடிவுற்றன. மேலும், ரூ.20 கோடி செலவில் கால்நடைத் துறையில் 345 கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் முடிவுற்றன.
- ரூ.5.20 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள கால்நடை விதைமுடக்க உற்பத்தி பிரிவு கட்டடத்தினை மேம்படுத்தும் பணி முடிவுற்றது.



- ரூ.6 கோடி செலவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சேலம், பெரம்பலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், இராமநாதபுரம், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 20 இடங்களில் கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றன.
- ரூ.12.75 கோடி செலவில் 85 கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 83 பணிகள் முடிவுற்றன. 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.1.56 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள ஒரத்தநாடு கால்நடை அபிவிருத்தி பண்ணையில் உழவர்களுக்காக பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.3.40 கோடி செலவில் தேசிய வேளாண்மை திட்டம் 2012–2013இன் கீழ் Liquid Nitrogen Bulk Storage Tanks (Silos) 10 மாவட்டங்களில் கட்டும் பணிகளில் 9 முடிவுற்று, 1 பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.
- ரூ.16.56 கோடி செலவில் ESVHD 2012–2013இன் கீழ் 142 ஊரக கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 140 பணிகள் முடிவுற்றன. 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.94.50 கோடி செலவில், கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள், கால்நடை நோய் நுண்ணறிவு மையம் மற்றும் இதர மையக் கட்டடங்கள் ஆகிய 450 பணிகளில், 337 பணிகள் முடிவுற்று 113 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.28.09 இலட்சம் செலவில், தேசிய பால்வள திட்டத்தின் கீழ் உதகமண்டல கால்நடை பண்ணை விரிவாக்கப் பணி முடிவுற்றது.
- ரூ.58.74 கோடி செலவில், 226 இடங்களில் உள்ள கால்நடை மையங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 37 பணிகள் முடிவுற்றன. 189 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.33.42 கோடி செலவில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மையத்தில், புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகம், இதர கட்டடங்கள் மற்றும் உட்புறச்சாலைகள் ஆகிய பணிகள் முடிவுற்றன.
- ரூ.94.78 இலட்சம் செலவில், சென்னை அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சி மையத்தினை மேம்படுத்தும் பணி முடிவுற்றது.
- ரூ.19 கோடி செலவில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய விருந்தினர் மாளிகை கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.2.55 கோடி செலவில், பகுதி–2இல் தேசிய பால்வள திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் உள்ள கால்நடை பண்ணையினை விரிவாக்கம் செய்யும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.
- ரூ.2.40 கோடி செலவில் சென்னை அரசுப் பல் மருத்துவக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான விடுதியின் கூடுதல் தளம் கட்டும் பணிகள் முடிவுற்றது.
- ரூ.2 கோடி செலவில் சென்னை, கீழ்பாக்கம் வளாகத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் தேர்வுக்குழு கட்டடத்தின் இரண்டாம் தளம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.
- ரூ.4.35 கோடி செலவில் சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனை வளாகத்தில், சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் உடலியக்க மருத்துவக் கட்டடத்தின் கூடுதல் தளங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டு ஒப்படைப்பு.
- ரூ.6.633 கோடி செலவில், 23 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகளில், 16 பணிகள் முடிக்கப்பட்டன, 3 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன, 1 பணி துவங்கப்படவுள்ளது, 3 பணிகள் கைவிடப்பட்டன.
- ரூ.3.36 கோடி செலவில், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூலகக் கட்டடம் பணிகள் முடிவுற்றது.
- ரூ.60 கோடி செலவில், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனை ஆகிய இடங்களில் (ஒவ்வொன்றும் ரூ.20 கோடி) தாய் சேய் நல மேன்மைமிகு மைய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

- ரூ.58.65 கோடி செலவில், சென்னை அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் புறநோயாளி பிரிவு, முடக்கியல் பிரிவு, சிறு நீரகவியல் அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் சிறு நீரகவியல் மருத்துவப் பிரிவு ஆகியவற்றிற்கு அடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.
- ரூ.31.65 கோடி செலவில், 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி துவங்கப்படவுள்ளன.
- கரூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.18.52 கோடி செலவில், 8 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தும் பணி துவங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ரூ.10.091 கோடி செலவில், 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 12 பணிகள் முடிக்கப்பட்டன, 1 பணி முடிவுறும் தருவாயில் உள்ளது, 3 பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளன, 4 பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.6 கோடி செலவில், சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான விடுதிகள் கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.1.20 கோடி செலவில், சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையின் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கும் அரங்கம் ஆகியவற்றினை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.2.70 கோடி செலவில், சென்னை ஸ்டான்லி, மதுரை இராஜாஜி, திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதம், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிசு தீவிர சிகிச்சை மையக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு வரைபடங்கள் மற்றும் தோராய மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் துவங்கப்படவுள்ளன.
- ரூ.3.50 கோடி செலவில், 10 இடங்களில் உள்ள அரசு வட்ட மருத்துவமனையின் அமரர் அறை கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.5 கோடி செலவில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள அரசு சித்தா மருத்துவக் கல்லூரியில் வெளிநோயாளிகளுக்கான புதிய கட்டடம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.2.02 கோடி செலவில் மதுரை மாவட்டம், செக்கனூரணியில் கள்ளர் மாணவியர்களுக்கு அரசு உயர்நிலைப்பள்ளி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.
- ரூ.197.08 கோடி மதிப்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவ, மாணவியர் தங்கி பயில சூரிய எரிசக்தி வசதியுடன் கூடிய 208 விடுதிகள் கட்டும் பணிகளில், 136 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 55 பணிகள் முன்னேற்றத்திலும் 17 பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.25 கோடி செலவில் 2013–2014ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்மாணவ,மாணவியருக்கான 575 விடுதிகளுக்கான கட்டடங்கள் பராமரிப்பு பணிகள் முடிவுற்றன.
- ரூ.15.954 கோடி செலவில், 2014–2015ஆம் ஆண்டில் 10 இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியருக்கான நலவிடுதிகள் கட்டும் பணிகளில், 9 பணிகள் நடைபெற்று வருகின்றன. 1 பணி துவங்கப்படவுள்ளது.
- ரூ.5.79 கோடி செலவில், 54 இடங்களில் உள்ள கள்ளர் துவக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 117 கூடுதல் கழிப்பறைகள் கட்டும் பணிகளில், 29 பணிகள் நடைபெற்று வருகின்றன, 25 பணிகள் துவங்கப்படவுள்ளன.
- ரூ.11.60 கோடி செலவில், 114 இடங்களில் உள்ள கள்ளர் துவக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணிகளில், 12 பணிகள் முடிக்கப்பட்டன, 20 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.4.50 கோடி செலவில், 10 இடங்களில் உள்ள கல்லூரி மாணவ / மாணவியர் விடுதிகளில் கூடுதல் அறைகள் கட்டும் பணிகள் துவங்கப்படவுள்ளன.
- ரூ.2 கோடி செலவில், 64 விடுதிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் துவங்கப்படவுள்ளன.



- ரூ.36.57 இலட்சம் செலவில், விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு புதிய கிளை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.40.75 இலட்சம் செலவில், விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு புதிய கிளை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.
- ரூ.42.35 இலட்சம் செலவில், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு புதிய கிளை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.3.75 கோடி செலவில் சென்னை பூங்கா நகர் மற்றும் கிருஷ்ணகிரியில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.40.95 இலட்சம் செலவில் நாமக்கல்லில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.
- ரூ.40 இலட்சம் செலவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி முடியும் நிலையில்உள்ளது .
- ரூ.12.60 கோடி செலவில், மத்தியக் கூட்டுறவு வங்கியின் 18 கிளைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.294.24 கோடி செலவில் தமிழகத்தின் 12 கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்புமையக்கட்டடங்கள்கட்டும்பணிஉலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பகுதிகளில் பேரிடர் குறைப்புத் திட்டம் மேற்கொள்ளும் கட்டும் பணிகளில் 42 பணிகள் முடிவுற்றன. 67 பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 12 பணிகள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன.
- ரூ.4.50 கோடி செலவில் சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தங்கும் விடுதிகள் கட்டும் பணி முடிவடைந்துள்ளது.
- ரூ.8.10 கோடி செலவில் திண்டுக்கல், காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.4 கோடி செலவில், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திண்டுக்கல் மற்றும் பிற மாவட்ட விளையாட்டு வளாகக் கட்டடங்களை புனரமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.3 கோடி செலவில், 23 மாவட்டங்களில் உள்ள, 25 நீச்சல் குளங்களை புனரமைக்கும் பணி துவங்கப்படவுள்ளது.
- ரூ.6 கோடி செலவில், நாமக்கல், நாகப்பட்டினம், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பல்வகை உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.2.78 கோடி செலவில், விருதுநகர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தருமபுரி, நீலகிரி, விழுப்புரம் ஆகிய இடங்களில் பல்வகை உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.12 கோடி செலவில், மதுரை மாவட்டம், இடையப்பட்டியில் தேசிய மாணவர் படை பயிற்சி கழக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.105.84 கோடி செலவில் திருவள்ளூர் மாவட்டம்,பெத்திகுப்பத்தில்நவீனப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சுங்கச்சாவடி அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.1.83 கோடி செலவில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் சோதனைச் சாவடி அமைக்கும் பணி முடிவடைந்துள்ளன.
- ரூ.2.79 கோடி செலவில், மண்மங்கலம், உசிலம்பட்டி, திருத்தணி மற்றும் செய்யாறு ஆகிய இடங்களில் போக்குவரத்துப் பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.1.55 கோடி செலவில், சிதம்பரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள போக்குவரத்துப் பிரிவு அலுவலகத்தை வட்டார போக்குவரத்து அலுவலகமாக மாற்றி புதிய கட்டடம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.1.77 கோடி செலவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் சோதனை ஓடுதளம் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.



- ரூ.6.90 கோடி செலவில் காஞ்சிபுரம் மாவட்டம், நன்மங்கலத்தில் உள்ள TBGP திட்ட மேலாண்மை பிரிவிற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

- ரூ.61 கோடி செலவில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கலையரங்கம் மற்றும் ரூ.2 கோடி செலவில் மாநில செய்தி நிலையம் அமைக்கும் பணி முடிவுற்றது.

- ரூ.25 இலட்சம் செலவில் சென்னையில் உள்ள மகாகவி பாரதியார் இல்லக் கட்டடத்தினை புதுப்பிக்கும் பணி முடிக்கப்பட்டது.

- ரூ.15 இலட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவகம் மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவக கட்டடத்தினை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

- ரூ.1.30 கோடி செலவில், திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோர்களுக்கு ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைக்கும் பணி துவங்கப்படவுள்ளது.

- ரூ.8.39 கோடி செலவில், ஈரோடு, கோயம்புத்தூர், வாணியம்பாடி மற்றும் பெருந்துறை ஆகிய இடங்களில் மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலகம் மற்றும் ஆய்வக கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.

- ரூ.7.13 கோடி செலவில், காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியியல் பூங்காவில் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மற்றும் ஆராய்ச்சியாளர் பயிற்சி விடுதி கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டன.

- ரூ.2 கோடி செலவில் சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.2.32 கோடி செலவில் சென்னை இராயபுரம் பகுதியில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டும் பணிக்கான ஆரம்பக்கட்ட பணிகள் முடிவுற்றது.



- ரூ.60 இலட்சம் செலவில் சிவங்கை மாவட்டம், சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணி முடிவுற்றது.

- ரூ.2.10 கோடி செலவில் தஞ்சாவூரில், கல்லணையில் கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.7.70 கோடி செலவில் சென்னை, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மேம்படுத்தி அழகுபடுத்துதல் மற்றும் ரூ.1.20 கோடி செலவில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் மேம்படுத்துதல் பணிகள் முடிவுற்றன.

- ரூ.11.61 கோடி செலவில் சென்னை, கிண்டி சர்தார் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டபம் வளாகம் புதுப்பித்து பணிகள் முடிவுற்றன.

- ரூ.27.50 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை, வேலுநாச்சியார் அவர்கள் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுவரும் வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கும் நினைவுச் சின்னம் அமைக்கும் பணி முடிவுற்றது.

- ரூ.1.20 கோடி செலவில், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி முடிவுற்றது.

- ரூ.77 இலட்சம் செலவில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.15 கோடி செலவில், தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.2.50 கோடி செலவில், சென்னையில் கலைக் கூடக் கட்டடப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.15 இலட்சம் செலவில், சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி மையத்தில் பொன்விழா வளைவு மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

- ரூ.15.61 கோடி செலவில் தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்ல கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் செயற் பணியாளர் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடங்கள் 9 இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.2 கோடி செலவில் சென்னை பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான பள்ளியில் விடுதியுடன் கூடிய நவீன சமையலறைக் கட்டடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

- ரூ.2.10 கோடி செலவில், 5 சமூக நல மையங்களில் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.2.60 கோடி ஒதுக்கீட்டில், 26 குழந்தைகள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மையக் கட்டடப் பணிகள் முடிவடைந்தன.

- ரூ.1.92 கோடி செலவில், 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லக் கட்டடங்கள்கட்டும்பணிதொடங்கப்படவுள்ளன.

- ரூ.1.06 கோடி செலவில், தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் ஆண்களுக்கான ஆறு இல்லக் கட்டடங்கள் மற்றும் விருதுநகர், அரியலூர், திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பெண்களுக்கான ஐந்து இல்லக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.

- ரூ.1.01 கோடி செலவில், வேலூர் மாவட்டத்தில் விழுப்புரம் மற்றும் காட்பாடியில் அரசில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்படவுள்ளது.

- ரூ.30 இலட்சம் செலவில் கோயம்புத்தூரில் உள்ள அரசு கண்ணாடி அறிவியல் பயிற்சி மையக் கட்டடம் புதுப்பித்தல் பணி முடிவுற்றது.

- ரூ.2 கோடி செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள சோதனை ஆய்வக கட்டடங்கள் பணி முடிவுற்றது.

- ரூ.1.35 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் துறைக்கென ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.7.50 கோடி செலவில் சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.13.87 கோடி செலவில், தூத்துக்குடி மாவட்டம், வெப்பலோடை, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.36.50 இலட்சம் செலவில், மதுரை மாவட்டம், மதுரையில் வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.1.11 கோடி செலவில், நாகர்கோவில் (2 எண்ணிக்கை), நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கடல்சார் பொருத்துநர் பயிற்சிக்காக கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.1.58 கோடி செலவில், சென்னை கிண்டி வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.1.64 கோடி செலவில், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றன, கோவையில் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.2 கோடி செலவில், கரூர் மாவட்டம், கரூரில் மகளிர் தொழிற்பயிற்சி நிலைய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.4.50 கோடி செலவில், 12 இடங்களில், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய கட்டடத்தினை மேம்படுத்தும் பணிகளில், 9 பணிகள் முடிவுற்றன, 3 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.40.04 கோடி செலவில், திருச்சி மாவட்டம் மணிகண்டம், விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம், திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர், கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் மற்றும் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் புதிய தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.2.30 கோடி செலவில், நாமக்கல் மாவட்டம் நாமக்கலில் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக் கூடம், வகுப்பறை, அலுவலகக் அறை, நூலக அறை ஆகிய கட்டடங்கள் கட்டும் பணிநடைபெற்று வருகிறது.
- ரூ.7.77 கோடி செலவில், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் (தலா ரூ.1.65 கோடி) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.105 கோடி செலவில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் 7 தூங்கும் அறைகள் (Dormitories) கட்டும் பணிகளில், 2 இடங்களில் பணி நடைபெற்று வருகிறது, மீதமுள்ள இடங்களில் தூங்கும் அறைகள் (Dormitories) கட்டும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.
- ரூ.5.21 கோடி செலவில், 12 இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வகுப்பறை மற்றும் ஆய்வக கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.54.48 கோடி செலவில், 19 இடங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் நல துறை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- 9 இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய பாடப்பிரிவுகளுக்கான புதிய கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- கோயம்புத்தூர் மாவட்டம் அணைகட்டு, சேலம் மாவட்டம் கருமந்தை, நீலகிரி மாவட்டம் கூடலூர், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர் ஆகிய இடங்களில் பழங்குடியின மாணவர்களுக்கான அரசு தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.



- ரூ.1.16 கோடி செலவில், 12 இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வக கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.7.03 கோடி செலவில், சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.41.42 கோடி செலவில், 11 இடங்களில் ரூ.22.50 கோடி செலவில் மாவட்ட தொழில் மையங்களுக்கான புதிய கட்டடம், 18 இடங்களில் ரூ.16.50 கோடி கூடுதல் கட்டடம் மற்றும் புனரமைக்கும் பணி மற்றும் ரூ.2.42 கோடி செலவில் 3 இடங்களில் புனரமைக்கும் பணிகள் முடிவுற்றன.
- ரூ.5 கோடி செலவில் நஞ்சநாடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.4.88 கோடி செலவில் சென்னை கிண்டியில் தொழில் முனைவோர் நிலையக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.2.15 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்பு பணி முடிவுற்றது.
- ரூ.1 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய பதிவு அறை கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.90.20 இலட்சம் செலவில் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் புதிய விருந்தினர் இல்லம் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.
- ரூ.50 கோடி செலவில் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.
- ரூ.52.14 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.19.80 கோடி செலவில், கோயம்புத்தூர் ஆட்சியர் அலுவலகக் வளாகத்தில் 4 தளங்கள் கொண்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.12.12 கோடி செலவில், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம், திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர், வேலூர் மாவட்டம் ஆம்பூர் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி (ஒவ்வொன்றும் ரூ.202 இலட்சம்) மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.2.83 கோடி செலவில், வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு (ஒவ்வொன்றும் ரூ.14.16 இலட்சம்) 20 இடங்களில் 16 பணிகள் முடிவுற்று, 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.8.66 கோடி செலவில், கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு (ஒவ்வொன்றும் ரூ.7.60 இலட்சம்) 114 இடங்களில் 104 பணிகள் முடிக்கப்பட்டன. 6 பணிகள் நடைபெற்று வருகிறது. 3 பணிகள் தொடங்கப்படவுள்ளன. 3 பணிகள் பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளன.
- ரூ.10.13 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில், ஆட்சியர் அலுவலகக் வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் (மூன்றாம் தளம்) கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.66.24 கோடி செலவில், 26 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், 11 இடங்களில் வட்டாட்சியர் குடியிருப்பு, 2 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் 1 இடத்தில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணிகளில் சில பணிகள் நடைபெற்றும், சில பணிகள் துவங்கப்படவும், சில பணிகள் பணித்தளம் ஒப்படைக்கப்பட்டும், சில பணிகள் துவங்கப்படவுள்ளன.
- ரூ.2.20 கோடி செலவில், சென்னை சேப்பாக்கம் வளாகத்தில், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலகக் கூடுதல் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.27 கோடி செலவில், உதகமண்டலத்தில் 28 அலுவலகங்கள் கொண்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.45 கோடி செலவில், 15 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.



- ரூ.14.08 கோடி செலவில், 2,828 இடங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலக் கட்டடங்களை புதுப்பிக்கும் பணிகளில், 2,514 இடங்களில் பணி முடிவுற்றது, 201 இடங்களில் பணி நடைபெற்று வருகிறது மீதமுள்ள 113 இடங்களில் பணி துவங்கப்படவுள்ளன.
- ரூ.15 கோடி செலவில், 1,388 இடங்களில் உள்ள கிராம நிருவாக அலுவலக் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணிகளில், 168 பணிகள் முடிவுற்றன, 325 பணிகள் நடைபெற்று வருகின்றன, 667 பணிகள் தொடங்கப்படவுள்ளன, 228 பணிகள் பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளன.
- ரூ.3.62 கோடி செலவில், 25 இடங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.
- ரூ.11.25 கோடி செலவில், சேலம் மாவட்டம் ஆத்தூர், திருவாரூர் மாவட்டம் வலைங்கைமான் மற்றும் நீடாமங்கலம், விருதுநகர் மாவட்டம் சாத்தூர், ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்கட்டும்பணிதொடங்கப்படவுள்ளது.
- ரூ.28.11 இலட்சம் செலவில், நாமக்கல் மாவட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.8.08 கோடி செலவில், புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் கரம்பக்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.
- ரூ.19.82 கோடி மதிப்பீட்டில் 33 சார்நிலைக் கருவூல கட்டடம் கட்டும் பணிகளில் 15 பணிகள் நடைபெற்று வருகிறது. 18 பணிகள் பணித்தளம் துவங்கப்படவுள்ளது.
- ரூ.21.60 கோடி செலவில், சென்னை நந்தனத்தில் நிதித்துறையின்கீழ் செயல்படும் அரசு அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டட வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.



- ரூ.9.08 கோடி செலவில், 15 இடங்களில் சார்நிலை கருவூல அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில், 14 பணிகள் முடிக்கப்பட்டன, 1 பணிக்கான பணித்தளம் ஒப்படைக்கப்படவுள்ளது.
- ரூ.66 இலட்சம் செலவில், திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளத்தில் சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.11.30 கோடி செலவில், 17 இடங்களில் சார்நிலை கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகளில், 8 பணிகள் நடைபெற்று வருகின்றன, 9 பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.75 கோடி செலவில், திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமம், ஸ்ரீரங்கத்தில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிக்கான கட்டடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டன.
- ரூ.59.27 கோடி செலவில் சென்னை, பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு புதிய வளாகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.6.88 கோடி செலவில் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலகக் அறை கொண்ட கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.3.15 கோடி செலவில் செங்கல்பட்டு, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.6.54 கோடி செலவில், தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.4.89 கோடி செலவில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு நீதிபதிகளுக்கான (5 எண்ணிக்கை) குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.3.88 கோடி செலவில், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.37.05 கோடி செலவில், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் நாகப்பட்டினம் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம்,காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக மற்றும் குடியிருப்புக் கட்டடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக குடியிருப்புக் கட்டடம், துறையூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடம் மற்றும் நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.1.54 கோடி செலவில், நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.15.35 கோடி செலவில், நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.
- ரூ.1.25 கோடி செலவில் தேனி மாவட்டம், லோயர் கேம்பில் திரு. கர்னல் ஜான் பென்னி குயிக் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி முடிவுற்றது.
- ரூ.28 கோடி செலவில் சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டட முகப்புத் தோற்றத்தினை மேம்படுத்தும் பணி முடிவுற்றது.
- ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவைக் கொண்டாடும் வகையில் எழில்மிகு அலங்கார வளைவு அமைக்கும் பணி முடிவுற்றது.
- ரூ.6.50 கோடி செலவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்கான 25 குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.5 கோடி செலவில் உலக வங்கி திட்டத்தின்கீழ் தரமணியில் நீர்நிலைகளின் நிருவாக நிறுவனத்திற்காக புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.
- ரூ.72.20 இலட்சம் செலவில், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் ஆய்வு மாளிகைக் கட்டடம் ( 2 அறைகள்) கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.4.84 கோடி செலவில், சென்னை, பசுமைவழிச்சாலையில் மாண்புமிகு நீதிபதிகளுக்கான அரசு மாளிகைக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன.

- ரூ.10.12 கோடி செலவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பழங்குடியினருக்கான ஆதார மையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

- ரூ.15 இலட்சம் செலவில், முக்கிய பிரமுகர்களின் உபயோகத்திற்காக இரண்டு சீருந்துகள் வாங்கும் பணி முடிவடைந்தது.

- ரூ.12 இலட்சம் செலவில், ஈரோடு ஆய்வு மாளிகை வளாகத்தில், காவலர் மற்றும் தோட்டக்காரர் ஆகியோர்களுக்கான பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.50 இலட்சம் செலவில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.15 இலட்சம் செலவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பொதுப்பணித்துறையின் இரண்டு பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றன.

- ரூ.1.51 கோடி செலவில், சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள காயங்களுக்கான சிகிச்சை மையக் கட்டடம். எழும்பூர் மகளிர் மருத்துவமனை, ஓட்டேரி அரசு மருத்துவமனை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் ஓட்டேரி அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பிரதான கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான படுக்கை மற்றும் பயணியர் மின்தூக்கி நிறுவும் பணி நடைபெற்று வருகிறன.

- ரூ.13.715 இலட்சம் செலவில், உதகமண்டலத்தில் மாவட்ட கால்நடை பண்ணையில் உள்ள பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டடங்களைச் சீரமைக்கும் பணி முடிவுற்றது.

- ரூ.1.28 கோடி செலவில், பி மற்றும் சி பிரிவு அதிகாரிகளுக்கு உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

- ரூ.42 இலட்சம் செலவில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பி பிரிவு அதிகாரிகளுக்கு உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

- ரூ.4.39 கோடி செலவில், சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைக்கான கூடுதல் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.16.04 கோடி செலவில், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைக்கான 5 மண்டல அலுவலகம், 15 மாவட்ட அலுவலகம் மற்றும் 49 கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில், 30 பணிகள் முடிவுற்றன, 15 பணிகள் நடைபெற்று வருகின்றன, 24 பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.3 கோடி ஒதுக்கீட்டில் 15 இடங்களில் உயிர் உரம் தயாரிக்கும் பிரிவுகளுக்கு சேமிப்புக் கிடங்கு கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

- ரூ.1.30 கோடி ஒதுக்கீட்டில் குடுமியான்மலையில் மையக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நுண்உணவுக் கலவை தயாரிப்பு மற்றும் வழங்கும் கிடங்கு அறை கட்டும் பணிகளில், பிரதான மற்றும் துணைக் கட்டடப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

- ரூ.75 கோடி செலவில் 50 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடங்கள் கட்டும்பணி தொடங்கப்படவுள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் தலா ரூ.150 கோடி மதிப்பீட்டில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.2.38 கோடி செலவில், திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் மற்றும் நாயுடுமங்கலம், விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.22.47 கோடி செலவில், 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி ஆய்வகங்கள், 2 அங்கக உரங்களின் சத்துக்களை ஆய்வு செய்வதற்கு புதிய ஆய்வகங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வக வளாகம் ஆகிய பணிகள் தொடங்கப்படவுள்ளன.

- ரூ.42.33 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.22.50 கோடி செலவில், 68 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்து புதுப்பிக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.12 கோடி செலவில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள 69 திருக்கோயில்களை செப்பனிட்டுப் பாதுகாக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.56 கோடி செலவில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 500 பக்தர்கள் தங்கும் வகையில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.15 கோடி செலவில், சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் அதிநவீன வசதிகளுடன் கூடிய இரண்டு படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.10.85 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டம், வாள்வச்சகோஷ்டம் (ரூ.95 இலட்சம்), சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, (ரூ.57 இலட்சம்), வேலூர் மாவட்டம், ஆற்காடு, (ரூ.57 இலட்சம்), கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், கடலூர் மாவட்டம், சிதம்பரம் (ரூ.161 இலட்சம்), திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி (ரூ.165 இலட்சம்) ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. வேலூரில் (ரூ.275 இலட்சம்) பணி நடைபெற்று வருகின்றன.

- ரூ.19 இலட்சம் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வணிகவரி அலுவலகக் வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி முடிவுற்றது.

- ரூ.30 கோடி செலவில், 11 சார்பதிவாளர் அலுவலகங்களுடன் கூடிய 4 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகக் கட்டடம் மற்றும் 35 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் (ஒவ்வொன்றும் ரூ.55 இலட்சம்) கட்டும் பணிகளில் சில பணிகள் நடைபெற்றும், சில பணிகள் துவங்கப்படவும், சில பணிகள் பணித்தளம் ஒப்படைக்கப்பட்டும் வருகிறது.

- ரூ.60 கோடி செலவில், சென்னையில் 70 வணிக வரி அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த இரண்டு வணிக வரி அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.1.38 கோடி செலவில், சென்னை எழிலகத்தில் உள்ள வணிகவரி ஆணையர் அலுவலகக் கட்டடத்தினை மேம்படுத்தும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.120 கோடி செலவில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி மையம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.25 கோடி செலவில், சென்னை, காஞ்சிபுரம், திருப்பூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 10 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளடக்கிய 4 ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகமும் மற்றும் 25 சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 18 பணிகள் நடைபெற்று வருகின்றன. 5 பணிகள் தொடங்கப்படவுள்ளன. 2 பணித்தளம் ஒப்படைக்கப்பவுள்ளன.

- ரூ.25.50 இலட்சம் செலவில், திருச்சியில் உள்ள பணியாளர் பயிற்சி மையத்தில் கூடுதல் வசதி அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.76.58 இலட்சம் செலவில், 32 இடங்களில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகக் கட்டடங்களை புதுப்பிக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- ரூ.80.71 இலட்சம் செலவில், தஞ்சாவூரில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தினை புதுப்பிக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

- புதுக்கோட்டையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.

- ரூ.21.59 கோடி செலவில், சென்னை அரசு மைய அச்சக வளாகத்தில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.2 கோடி செலவில், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் மண்டல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.152.73 கோடி செலவில், நபார்டு திட்டத்தில் பகுதில் 18இன் கீழ் 130 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணி மற்றும் திருப்பூர் மாவட்டம் அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளிக்கு ஆண்கள் தங்கும் விடுதிக் கட்டடம் ஆகிய பணிகளில், 120 பணிகள் முடிவுற்றன, மீதமுள்ள 11 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.247.75 கோடி செலவில், நபார்டு திட்டத்தில் பகுதில் 19இன் கீழ் 210 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணியில் 31 பணிகள் முடிக்கப்பட்டன, 178 பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 1 பணி தொடங்கப்படவுள்ளது.
- ரூ.208.62 கோடி செலவில், நபார்டு திட்டத்தில் பகுதி 20இன் கீழ் 155 உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணி நடைபெற்று வருகின்றன.
- ரூ.41.58 கோடி செலவில், நபார்டு திட்டத்தில் பகுதி 20இன் கீழ் 424 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கழிவறை மற்றும் குடிநீர் வசதிகள் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.105.28 கோடி செலவில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், கரூர், திருப்பூர், ஈரோடு மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 44 பெண்கள் விடுதிக் கட்டடம் கட்டும் பணிகளில் 30 பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. 14 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.134.45 கோடி செலவில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், 1,250 கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் 502 அறிவியல் ஆய்வக கட்டடம் கட்டும் பணிகளில் 1,055 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 442 அறிவியல் ஆய்வகப் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், 195 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 60 அறிவியல் ஆய்வகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.551.23 கோடி செலவில், அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டத்தின் கீழ் 2010–2011ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்ட 344 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- ரூ.3 கோடி செலவில், சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் இல்லத்திற்கு ரூ.50 இலட்சத்திற்கு மராமத்துப் பணிகளும், ரூ.2.50 கோடி செலவில் கூடுதலாக புதிய கட்டடமும் நடைபெற்று வருகிறது.
- ரூ.3 கோடி செலவில், திருச்சியில் புதியதாக ஆசிரியர் இல்லம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.18.05 கோடி செலவில், கரூர் மற்றும் சேலம் மாவட்டத்தில் 18 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.80 இலட்சம் செலவில், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் பகுதி II–ன் கீழ் புதிய மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.3.45 கோடி செலவில், அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டத்தின் கீழ் நாகப்பட்டினத்திலுள்ள 3 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணி முடிவுற்றன.

### நீர்வள ஆதாரத்துறை

- காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைகள் மத்திய அரசின் அரசிதழில் 19.02.2013 அன்று வெளியிடப்பட்டதன் மூலம் மாநிலத்தின் உரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது.
- காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை 31.10.2014 அன்றும், 142 அடியை 21.11.2014 மற்றும் 08.12.2015 அன்றும் அடைந்தது, இந்நிகழ்வு சுமார் 35 வருடங்களுக்கு பிறகு ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். முதற்கட்டமாக அணையின் நீர்த்தேக்க அளவை 142 அடியாக உயர்த்தியதால் விவசாயிகள் மற்றும் தமிழக மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும், சென்னை மாநகரின் குடிநீர் வழங்குதலுக்காக 12 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நீர் தமிழகத்தில் பெறப்பட வேண்டும். கடந்த நான்காண்டுகளில் மட்டும், அதிகபட்சமாக மொத்தம் 23.990 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நீர் பெறப்பட்டுள்ளது.
- உலக வங்கி கடனுதவியுடன் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.1,069.14 கோடி மதிப்பில் 2,830 ஏரிகள், 370 அணைக்கட்டுகள் மற்றும் 4,539.32 கி.மீ. நீள வரத்து வாய்க்கால்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெருந்திட்டத்தின் கீழ் தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நீர்ச்செறிவூட்டுத்துளைகள் போன்ற 522 நீர்ச்செறிவூட்டும் கட்டமைப்புகள் நிலத்தடி நீர்ச்செறிவூட்ட வளமுள்ள இடங்களில் ரூ.164.04 கோடி மதிப்பில் முடிவடைந்துள்ளன.
- ரூ.330 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டம், கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்க் கண்டிகை கிராமங்களின் அருகே ஒரு புதிய நீர்தேக்கத்தினை அமைத்தல்.
- உலக வங்கியின் கடனுதவியுடன், ரூ.745.49 கோடி மதிப்பில் அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டம்செயலாக்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தில் 69 நீர்வள ஆதாரத்துறை அணைகள் புனரமைக்கப்படவுள்ளன. முதலாம் கட்டத்திலுள்ள 11 நீர்வள ஆதாரத்துறை அணைகளில், 6 அணைகளில் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. 4 அணைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 1 பணி விரைவில் துவங்கப்படவுள்ளது. மீதமுள்ள 58 நீர்வள ஆதாரத்துறை அணைகளில் (கட்டம் I–ஐத் தவிர), 53 அணைகளுக்கான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 7 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 46 பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமத் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் வெள்ள பாதுகாப்பினை உறுதி செய்திட ரூ.699.86 கோடி மதிப்பிலான பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.
- கடலரிப்பு தடுப்புச்சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி ரூ.101.48 கோடி மதிப்பீட்டிலும், பாரம்பரிய நீர் நிலைகளைச் சீரமைக்கும் பணி (549 பணிகள் முடிவுற்றுள்ளது, 141 பணிகள் நடைபெற்று வருகிறது) ரூ.170.62 கோடி மதிப்பீட்டிலும் 13ஆவது நிதிக்குழுவின் மானிய நிதியுதவித் திட்டத்தில் மார்ச் 2015இல் முடிவடைந்துள்ளன.
- ரூ.254.45 கோடி மதிப்பில் கரூர் மாவட்டத்தில், மாயனூர் கிராமம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.
- ரூ.369 கோடி மதிப்பில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள், சாத்தான்குளம் மற்றும் திசையன்விளையின் வறண்ட பகுதிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு கன்னடியன் கால்வாயில் இருந்து ஒரு வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைப்பதற்காக, பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.
- மத்திய நீர்க் குழுமம், ரூ.11,420 கோடி மதிப்பீட்டிலான "காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைத்து திறன்மிகு பாசன நீர் மேலாண்மை"யினை உறுதி செய்யும் திட்டத்திற்கான முதல் நிலை அறிக்கைக்கு ஒப்புதல்.
- "கல்லணைக் கால்வாய் கட்டுமானங்களை மேம்படுத்திப் புனரமைக்கும் திட்டத்திற்கு" விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு, ரூ.10 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.2610 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.110 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.

#### மாநில நிதியின் கீழ் இதர முக்கிய பணிகள்

- ரூ.50 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் வாய்க்காலின் மைல் 3–3–000 முதல் 9–7–000 வரை புனரமைப்பு.
- ரூ.19.82 கோடி மதிப்பில் திருவாரூர் மாவட்டம், காவேரி மற்றும் வெண்ணாறு உப

வடிநிலங்களில் செயற்கை முறையில் 1335 நிலத்தடி நீர்ச்செறிவூட்டுத் துளைகள்.

- ரூ.1,560 கோடி மதிப்பில், கடைமடை பகுதிகளில் உள்ள நீரொழுங்கிகளை மீள அமைத்து, வடிகால்களை மேம்படுத்தும் பணிகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. ரூ.840.63 கோடி மதிப்பில் கீழ்வெண்ணாறு அமைப்பின் ஒரு பகுதியிலுள்ள 6 ஆறுகள்/வடிகால்களில், திட்டப் பணிகள் ‘தனி திட்டப் பணியாக’ மேற்கொள்ளப்படவுள்ளன.

- ரூ.221.15 கோடி திருத்திய மதிப்பீட்டில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயில் தொலைகல் எல்.எஸ். 0/000 கி.மீ. முதல் 49/300 கி.மீ. வரையுள்ள பகுதிகளை புனரமைத்தல்.

- ரூ.130 கோடி மதிப்பில் சோழவரம், போரூர், அயனம்பாக்கம் மற்றும் நேமம் ஏரிகளின் நீர்த்தேக்கக் கொள்ளளவை உயர்த்தவும், செம்பரம்பாக்கம் ஏரியினை புனரமைத்து அதன் முழு நீர்த்தேக்கத்திறனை மீட்கும் பணி.

- ரூ.108 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் மாவட்டம், கொட்டரை கிராமம், ஆலத்தூர் வட்டம், மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்.

- ரூ.55 கோடி மதிப்பில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டங்களில் 18–ஆம் கால்வாயினைக் கோவிலங்காறு வரை நீட்டித்து ஏரிகளுக்கு கூடுதலாக நீர் வழங்கல். ரூ.18.30 கோடிக்கு நில அளவை மற்றும் மட்ட அளவை மற்றும் நிலம் கையகப்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல்.

- ரூ.18 கோடி மதிப்பில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களிலுள்ள சாயல்குடி கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் மகாமகம் பெருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் குளம், காவிரி ஆறு மற்றும் அரசலாற்றில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள, ரூ.7.52 கோடிக்கு ஒப்புதல்.

- சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், 41 வடகிழக்கு பருவமழை 2015, முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ள, ரூ.3.62 கோடிக்கு ஒப்புதல்.

- ரூ.5 கோடி மதிப்பீட்டில் சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், டாக்டர். இராதாகிருஷ்ணன் நகரில் குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் வகையில் வடக்கு பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே இருவழிப் பாலம்.

- ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தில் ஆடுபள்ளத்திற்கு அருகே வராகநதியின் குறுக்கே ஒரு பாலம்.

- ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திடியூர் கிராமத்தில் இருந்து பச்சையாறு வழிந்தோடிக்குக் கீழ்புறம் வரை செல்லும் சாலையில் வலது பக்க தாங்கு சுவருக்கு அருகே மழை நீர் மற்றும் வடிகால் வாய்க்கால் அமைத்தல்.

**நபார்டு நிதியுதவி திட்டங்கள்**

- ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் வரத்து வாய்க்கால்களை புனரமைத்தல், ஏரிகளை அமைத்தல் மற்றும் அணைக்கட்டுகள், பாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல் போன்ற திட்டங்கள் ஆர்.ஐ.டி.எப் XVI, XVIII, XIX மற்றும் XX –இன் கீழ் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் ரூ.958.49 கோடி மதிப்பில் 110 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ரூ.518.92 கோடி மதிப்பில் 74 திட்டங்கள் முடிவுற்றுள்ளன. 28 திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 8 திட்டங்கள் விரைவில் துவங்கப்படவுள்ளன. ஆர்.ஐ.டி.எப் XXI-இன் கீழ் ரூ.129.09 கோடி மதிப்பில் 54 திட்டங்களுக்கு நபார்டு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**முடிவுற்ற திட்டங்கள்**

- ரூ.67.68 கோடி மதிப்பில் தஞ்சாவூர் மாவட்டம் காவேரி ஆற்றின் உபநதி மற்றும் வடிகால்களின் குறுக்கே 11 மட்டச் சுவர்கள் மற்றும் 14 தடுப்பணைகள்.

- ரூ.41 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம் காளிங்கராயன் வாய்க்கால் தொலை





கல் 0/0–000 மைல் முதல் 3/3–000 மைல் வரை புனரமைக்கும் பணிகள் முடிவுற்று 15,750 ஏக்கர் ஆயக்கட்டு பயன்.

- ரூ.40.55 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களை புனரமைக்கும் பணி முடிவுற்று 24,504 ஏக்கர் ஆயக்கட்டு பயன்.

- ரூ.35 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை.

- ரூ.33.70 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை.

- ரூ.26.58 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டம், கடலோரப் பகுதியில் அமையப் பெற்ற கடலரிப்புத் தடுப்புச் சுவரை 2 மீட்டருக்கு உயர்த்திப் புனரமைத்து கடல் அலைகளால் ஏற்படும் அரிப்பு மற்றும் ஊடுருவலை தொலைகல் 13/100 கி.மீ. முதல் 18/640 வரை தடுக்கும் பணி.

- ரூ.23.50 கோடி மதிப்பில் மதுரை மாவட்டம், நிலையூர் வாய்க்காலினை புனரமைத்து, அதன் நீர் கடத்தும் திறனை அதிகரித்து, நிலையூர் நீட்டிப்பு வாய்க்காலுக்கு நீர் வழங்க பணிகள் முடிவுற்று 9,951 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் வடவார் நீட்டிப்பு கால்வாயின் தொலைகல் 33.01 கி.மீ. முதல் –44.82 கி.மீ. வரை ரூ.23 கோடி மதிப்பில் நவீனப்படுத்தும் பணி முடிவுற்று 15,176 ஏக்கர் ஆயக்கட்டு பயன்.

- ரூ.19.86 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் வட்டம், வலசை கிராமம் அருகே கீழ் நாட்டார்கால் மற்றும் 16 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டப்பட்டு 8,369 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- ரூ.19.70 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் வட்டம் கமுதகுடி கிராமம் அருகே கூத்தாங்கல் வரத்து வாய்க்கால் மூலமாக 36 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டும் பணி முடிவுற்று 20,120 ஏக்கர் ஆயக்கட்டு பயன்.

- ரூ.19.50 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், குன்னப்பநேந்தல் கிராமம் அருகே பார்த்திபனூர் நீர் ஒழுங்கிக்குக் கீழ்ப்பகுதியில் வைகையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு 13,614 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- ரூ.16.83 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டு வட்டம், பாலூர்

கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே உபமேற்பரப்பு அணை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

- ரூ.10.90 கோடி மதிப்பில் திண்டுக்கல் மாவட்டம், அகரம் மற்றும் திருகூர்ணம் கிராமங்களின் அருகே கொடகனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.
- ரூ.20.73 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் 14 தடுப்பணைகள்.
- ரூ.11.50 கோடி மதிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பாலக்கரை பகுதியில் உய்யகொண்டான் வாய்க்காலை புனரமைத்தல்.
- ரூ.9.61 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் வட்டம், காவேரி கழிமுகப் பகுதியில் உள்ள பல ஆறுகள் மற்றும் உபநதிக் குறுக்கே 8 மட்டச் சுவர்கள்.
- ரூ.8.38 கோடி மதிப்பில் நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், குமாரப்பளையம் வாய்க்கால் புனரமைத்தல்.
- ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அத்தியூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல்.
- ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காலிங்கராயன் அணைக்கட்டினை புனரமைத்தல்.
- ரூ.5.44 கோடி மதிப்பில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கோட்டைப்பட்டி கிராமம் வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.3.47 கோடி மதிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அரியாற்றின் குறுக்கே இனாம்குளத்தூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு கால்வாய் புனரமைத்தல்.
- ரூ.2.75 கோடி மதிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சமுத்திரம் மற்றும் மரவனூர் ஏரிகள் மற்றும் அரியாற்றின் குறுக்கே உள்ள 7 அணைக்கட்டுகள் புனரமைத்தல்.
- ரூ.2.64 கோடி மதிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பிராட்டியூர் கிராமத்தில் உள்ள அரியாற்றின் குறுக்கே பிராட்டியூர் அணைக்கட்டினை மறு கட்டுமானம் செய்தல்.
- ரூ.1.15 கோடி மதிப்பில் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமம் கோட்டையாடி கால்வாயின் கீழ்புறம் தொலை கல் 0/0 கி.மீ முதல் 5/800 கி.மீ மற்றும் நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய் தொலைகல் 5/800 கி.மீ முதல் 6/700 கி.மீ–இல் கரையை புனரமைத்தல்.
- ரூ.48 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், 18ஆம் கால்வாயினைக் கோவிலங்காறு வரை நீட்டித்து ஏரிகளுக்கு கூடுதலாக நீர் வழங்கும் பணிக்கு ஒப்புதல்.
- ரூ.30 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், மற்றும் சேலம் மாவட்டத்தில் மேட்டூர் மற்றும் எடப்பாடி வட்டத்தில் உள்ள கிழக்கு கரை கால்வாயினை புனரமைத்தல்.
- ரூ.20 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு ஊட்டுக்கால்வாயை நெடுகை 0.000 முதல் 6.000 கி.மீ வரை புனரமைத்தல்.
- ரூ.17.85 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், உத்தமபாளையம், போடி மற்றும் தேனி தாலுகாவில் உள்ள கம்பம் பள்ளத்தாக்கு பாசன அமைப்பின் ஐந்து அணைக்கட்டுகள் மற்றும் அதன் வழங்கு வாய்க்கால்களை புனரமைத்தல்.
- ரூ.15.16 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆண்டான்கோயில் கிராமம் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.15.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள ஆறுகளின் குறுக்கே மழைநீரை சேமிக்கவும், செயற்கை முறையில் நிலத்தடி நீரை செரிவூட்டுவதற்கும் 14 தடுப்பணைகள் அமைத்தல்.
- ரூ.15 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு, மதுரை கிழக்கு மற்றும் மேலூர் வட்டத்தில் உள்ள பெரியார் பிரதான கால்வாயின் 5ஆவது, 6ஆவது, 8ஆவது, 9ஆவது மற்றும் 11ஆவது கிளைக்கால்வாய்களை புனரமைத்தல்.
- ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி கால்வாய்க்கு கற்காரை பூச்சு மேற்கொள்ளுதல் மற்றும் அதன் மடைகளை புனரமைத்தல்.
- ரூ.13.05 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள ஐந்து அணைக்கட்டுகள்



மற்றும் அதன் வழங்கு வாய்க்கால்களை நவீனப்படுத்துதல்.

- ரூ.10 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சேவலபுரை அணைக்கட்டு மற்றும் வாய்க்காலை புனரமைத்தல்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பேரம்பட்டு நீரொழுங்கியினை நீட்டித்தல் பணிக்கு ஒப்புதல்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், கீழணையில், கொள்ளிடம் ஆற்றின் வடக்கு பகுதியில் உள்ள 30 நீர்ப்போக்கிகள் போக்கிகளுக்கான கதவுகளைப் புதுப்பித்தல் மற்றும் கதவுகளை இயக்கும் கட்டமைப்புகளை புனரமைத்தல்.
- ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பரமன்கேணி கிராமத்திற்கு அருகே உள்ள பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தினை மறுகட்டுமானம் செய்தல்.
- ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், கீழ்நட்டு குறிச்சி கிராமம் வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.7.49 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், காவேரி கழிமுகப் பகுதியில் உள்ள பல ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் குறுக்கே 7 மட்டச் சுவர்கள் கட்டும் பணிக்கு ஒப்புதல்.
- ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலி வடபாதி கிராமத்தின் அருகே அக்னியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.
- ரூ.7.42 கோடி மதிப்பில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், சமுத்திரப்பட்டி கிராமம், ராஜநேரி வழங்கு வாய்க்காலினை நவீனப்படுத்துதல்.
- ரூ.7.21 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஒடலவாடி ஏரிக்கு நீர் வழங்க அரும்பலூர் கிராமம், செய்யார் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.
- ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் குளத்திற்கு நீர் வழங்க தெற்கு வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் பணி.
- ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருவையாறு வட்டம் திருவையாறு கல்யாணபுரம் மற்றும் ஊமை வாய்க்கால்களுக்கு நீர் வழங்க காவேரி ஆற்றின் குறுக்கே மைல் 37/6–இல் தளமட்டச்சுவர் அமைத்தல்.
- ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம், முத்தூர் கதவணையின் அடைப்பு பலகைகளில் பழுது நீக்குதல்.
- ரூ.6.77 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், வைகையாறு, கோட்டக்குடி ஆறு மற்றும் சுத்தகங்கை ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல்.
- ரூ.6.35 கோடி மதிப்பில் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சப்பாத்தில் குழித்துறை ஆற்றின் குறுக்கே தடுப்பணையைப் புனரமைத்தல்.
- ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், இரகுநாத காவேரி வாய்க்காலுக்கு நீர் வழங்க ஏதுவாக வெண்ணாற்றின் குறுக்கே உள்ள தளமட்டச் சுவரை மேம்படுத்துதல்.
- ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், புட்லூர் கிராமம் அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் மற்றும் நங்குனேரி வட்டத்தில் உள்ள, வடமலையாங்கால் மற்றும் அதன் கண்மாய்களைப் புனரமைத்தல்.
- ரூ.5.65 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம் மற்றும வட்டம், கிராமம் அருகில் கொடகனார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.5.62 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், அச்சன்குளம் கிராமம் அருகில் வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள, தேவநதி ஆற்றினை (உப்பனாறு வடிகால்) மேம்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.
- ரூ.5.24 கோடி மதிப்பில் தேனி மாவட்டம் மற்றும் வட்டம், தந்தை பெரியார் வாய்காலில் தொலை கல் 0 மீ முதல் 12,000 மீ வரை புனரமைத்து மேம்படுத்துதல்.
- ரூ.5.23 கோடி மதிப்பில் சேலம் மாவட்டம், ஓமலூர் மற்றும் வட்டம், சரபங்கா நதியின் குறுக்கே உள்ள 13 அணைக்கட்டுகளைப் புனரமைத்து மேம்படுத்துதல்.

- ரூ.5 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம், பன்ருட்டி வட்டம், மல்லிகாம்பட்டு கிராமத்திற்கு அருகே கடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.5 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், ஜே. கிருஷ்ணாபுரம் பிரிவு கால்வாய் நெடுகை 0.000 முதல் 3.470 கி.மீ வரை மற்றும் வலசுபாளையம் கிளை கால்வாய் நெடுகை 0.000 முதல் 3.800 கி.மீ வரை புனரமைத்தல்.
- ரூ.4 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எலமனூர் கிராமம் அருகில் மேலணையில் உள்ள காவேரி மற்றும் கொள்ளிடம் நீர் ஒழுங்கிகளை மேம்படுத்துதல்.
- ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் கிராமத்தில், முடதானி ஏரி, கொத்தமங்கலம் ஏரி மற்றும் சிதாம்பாள் ஏரிகளுக்கு நீர் வழங்க நரியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் மற்றும் அதன் வழங்கு வாய்க்காலினை மேம்படுத்துதல்.
- ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் வட்டம், சூரியூர் (வில்லாரோடை) கிராமம் அருகே கோரையாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை.
- ரூ.3 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பைங்காட்டூர் கிராமத்தில் நெடுகை 130இல் கோரையாற்றின் குறுக்கே புதிய நீரொழுங்கிகள் கட்டுதல்.
- ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், புதுப்பட்டி கிராமம் அருகே பூங்காற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கத்தாளம்பட்டு கிராமம் அருகில் நாகநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வளையப்பாளையம் கிராமம் அருகே பாலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை.
- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தெளிச்சாத்தநல்லூர் கிராமம் அருகே 14 கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே ரூ.19 கோடி மதிப்பில் படுகை அணை கட்டுடும பணி முன்னேற்றத்திலுள்ளது.
- ரூ.2 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்தில் நெடுகை 147.860 கி.மீட்டரில் மகிமலையார் ஆற்றின் வலுது கரையில் உள்ள அரபி வழிந்தோடி நீரொழுங்கியினை மறு கட்டுமானம்.
- ரூ.1.918 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொண்டம்பட்டி கிராமம், உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை.
- ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், மற்றும் கிராமத்தில் உள்ள அஞ்சலக்காரன்குளம் அணைக்கட்டினை மறு கட்டுமானம்.

**நடைபெற்று வரும் திட்டங்கள்**

- ரூ.33.07 கோடி மதிப்பில் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமத்தில் விஸ்வகுடி அருகில் கல்லார் ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைத்தல்.
- ரூ.26.13 கோடி மதிப்பில் திருச்சி மாவட்டம் 10 செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல்.
- ரூ.25 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பட்டரைபெரும்புதூர் கிராமத்தில் வீராகவப்பெருமாள் கோவில் குளத்திற்கு நீர் கொண்டு செல்லும் வகையில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்தல்.
- ரூ.23.65 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு (நீர் ஒழுங்கி) அணைக்கட்டை புனரமைத்து, அடைப்பு பலகை இயக்க அமைப்பினை மின்மயமாக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.
- ரூ.20.07 கோடி மதிப்பில் தூத்துக்குடி மாவட்டம், பேய்க்குளம், பொட்டைகுளம் மற்றும் கோரம்பள்ளம் கண்மாய்களை மேம்படுத்தல்.
- ரூ.19.88 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கண்டலேறு–பூண்டி கால்வாய்களுக்கிடையே தொலை கல் 13.000 கி.மீ. முதல் 25.275 கி.மீ வரை சரிந்த பல்வேறு பகுதிகளை பலப்படுத்தல்.
- விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை மற்றும் விழுப்புரம் வட்டங்களில் முறையே பேரங்கியூர் மற்றும் பிடாகம் கிராமங்களின் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே ரூ.12.63 கோடி மதிப்பில் நிலத்தடி தடுப்புச் சுவர் அமைத்தல்.
- ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல்.
- ரூ.10.20 கோடி மதிப்பில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் செண்கன்பசுவன்தலவு கண்மாயில் இருந்து எண்டப்பட்டி கண்மாய், கொண்டசலமணசுலு கண்மாய் மற்றும் இடையிலுள்ள இதர 8 கண்மாய்களுக்கும் சின்னாற்றின் வெள்ள உபரி நீரினை வழங்கும் பொருட்டு வழங்கு வாய்க்கால் அமைத்தல்.
- ரூ.10 கோடி மதிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம்,மணச்சநல்லூர் வட்டம்,மேலணையில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு மதகுகளின் அடைப்பான்களை இயக்கும் அமைப்புகளை புனரமைத்து, மின் மோட்டார்கள் மூலம் இயக்க வழி வகை செய்யும் பணிகள்.



**செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR)**

- மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் நீர்நிலைகளை “செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல்” திட்டத்தின் கீழ் வேலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள 49 ஏரிகளை புனரமைக்க, ரூ.27.38 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- இரண்டாம் கட்டத்தில், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள 56 ஏரிகள் ரூ.27.30 கோடி மதிப்பில் புனரமைத்தல்.

**நீர்வள நிலவள திட்டம் II:**

- ரூ.2,950 கோடி மதிப்பீட்டில், நீர்வள நிலவள திட்டம் II செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் 2016ஆம் ஆண்டு முதல் ஆறு வருடங்களுக்கு 29 மாவட்டங்களில் 5.43 இலட்சம் எக்டேர் பாசனப்பரப்பு பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் 4,778 ஏரிகள், 477 அணைக்கட்டுகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்கள் புனரமைக்கப்படவுள்ளன. நீர்வள ஆதார துறையின் பங்கு ரூ.2,323 கோடி ஆகும்.

❖ ❖ ❖

# முதன்மைத் தமிழகத்தை முனைந்து உருவாக்கும் வருவாய்த்துறை



**வருவாய்த் துறை**

- இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் மனித உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை ரூ.1,50,000/–லிருந்து ரூ.4,00,000/–ஆக உயர்வு. மேலும், மாடு ஒன்றுக்கு ரூ.20,000/–லிருந்து ரூ.30,000/–ஆகவும் ஆடு ஒன்றுக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/–ஆகவும் மற்றும் கோழி / சேவல் ஒன்றுக்கு ரூ.30/–லிருந்து ரூ.100/– ஆகவும் உயர்வு.
- பாசன ஆதாரம் பெற்ற நிலங்களில் விளைவிக்கப்படும் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500லிருந்து ரூ.13,500 ஆக உயர்வு.
- நீண்ட காலப் பயிர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.12,000/–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்வு.



- ரூ.60 கோடி செலவில் 2014ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையால் ஏற்பட்ட சேதங்களை சீர் செய்திட ஆணை.

**வறட்சி நிவாரணம்**

- இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் சென்னை மாவட்டத்தைத்தவிர அனைத்துமாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.
- டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.2,281.77 கோடி வறட்சி நிவாரண உதவியாக வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.
- தமிழகத்தில் வறட்சியால் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பயிர் இழப்பை அளவிட்டு விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நிவாரண பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் தலைமையில் மூத்த அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.
- 50 சதவிகிதத்திற்கு அதிகமாக நெற்பயிர் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதி விவசாயிகளின் 3,61,000 ஏக்கர் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்கிட ரூ.541.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 3,52,613 விவசாயிகளுக்கு 524.25 கோடி ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.
- வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு ரூ.804.24 கோடி நிவாரணம்.
- வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளில் ரூ.857.78 கோடி செலவில் குடிநீர் வசதி.
- சென்னை தவிர, இதர மாவட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ், கொண்டு வரப்பட்ட, '100 நாட்கள் வேலைத்திட்டம்' என்ற திட்டத்தில் 100 நாட்கள் என்ற பணிவரம்பு 150 நாட்களாக உயர்வு.
- ரூ.47.85 கோடி மதிப்பீட்டில் டெல்டா மாவட்டங்களில் கால்நடை தீவனப் பற்றாக்குறையைப் போக்குதல் மற்றும் பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன்வளர்த்தல் பணிகள்.
- வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனைத் திரும்ப செலுத்துவதில் உள்ள சிரமத்தினை கருத்தில் கொண்டு அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றியமைப்பு.
- ரூ.6 கோடி மதிப்பீட்டில் கால்நடைகளுக்கு உலர் தீவனம்.
- 2012–2013ஆம் ஆண்டில் குறைவாக மழை பெறப்பட்டதைத் தொடர்ந்து, குடிநீர் தட்டுப்பாட்டினைப் போக்கிட மாநிலப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.189.16 கோடியும், துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறையிலுள்ள திட்டங்களின் கீழ், உள்ளாட்சி மற்றும் பொது நிதியிலிருந்து ரூ.492.37 கோடியும் ஒதுக்கீடு.
- 2014–2015ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களில் குறைவாக மழை பெறப்பட்டதைத் தொடர்ந்து, குடிநீர் தட்டுப்பாட்டினைப் போக்கிட அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.66.50 கோடியும், துறைத் தலைமையகங்களுக்கு ரூ.29 கோடியும், நிதி ஒதுக்கீடு.
- சென்னையைப் பொறுத்த வரையில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு, குடிநீர் விநியோகத்திற்காக கூடுதலாக ரூ.52.20 கோடி ஒதுக்கீடு.
- உத்திரகண்ட் மாநிலத்திற்கு புனித யாத்திரை மேற்கொண்டு வெள்ளப் பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட 671 யாத்ரீகர்களுள் 657 யாத்ரீகர்கள், பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர். காணாமல் போன 14 யாத்ரீகர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவியாக, தலா ரூபாய் 7 இலட்சத்திற்கான காசோலைகளை 23.12.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்.
- மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவிட தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமை உருவாக்கம்.
- 26.01.2014 அன்று பிற்பகல் 45 சுற்றுலா பயணிகளுடன் (அவற்றுள் 32 நபர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்) சென்ற தனியார் சுற்றுலாப் படகு ஒன்று அந்தமான் கடலில் "பே" தீவுக்கு அருகில் கவிழ்ந்தது. இச்செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீட்புக் குழுவினரை விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். மேலும், உயிரிழந்த 17 நபர்களின்



குடும்பத்தினருக்கும், தலா ரூ.1 இலட்சம் வீதம் நிதியுதவி உடடினயாக வழங்கப்பட்டது.

- திருப்பெரும்புதூர் வட்டம், மவுலிவாக்கம் கிராமத்தில், தனியாரால் கட்டப்பட்டு வந்த 11 அடுக்குகள் கொண்ட கட்டடம் இடிந்து விழுந்ததில் படுகாயமடைந்த 27 தொழிலாளர்களுக்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, தலா ரூ.50,000மும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 14 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் வீதம், ரூ.98 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார். மேலும், வெளி மாநிலங்களைச் சேர்ந்த உயிரிழந்த 46 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.92 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**வருவாய்த்துறை அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

- ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு பணிகளில் வருவாய்த்துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்திட பயிற்சி. இதன்மூலம் 8,447 அலுவலர்கள் பயன்.

**வடகிழக்குப் பருவ மழை 2015**

**முன்னெப்போதும் இல்லாத கனமழை மற்றும் வெள்ளம்**

- தமிழகத்தில் 28.10.2015 அன்று துவங்கிய வடகிழக்குப் பருவமழையின் போது கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகள் வெள்ள நீர் சூழ்ந்து பெரும் பாதிப்புக்குள்ளாபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் வெள்ள நிலைமை குறித்து அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை துரிதப்படுத்தினார்கள்.
- தமிழகத்தில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளான பல்வேறு மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை கண்காணிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக் குழு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்தப் பகுதிகளை 16.11.2015 அன்று நேரில் பார்வையிட்டதோடு மட்டுமல்லாமல் 03.12.2015 அன்று வான் வழியாகவும் வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட்டார்கள்.
- மாநிலப் பேரிடர் மீட்புப் படையின் ஆறு குழுக்கள், கடலோர காவல் பாதுகாப்பு படையின் ஆறு குழுக்கள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறையின் 1,400 வீரர்கள்,



தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 30,000 வீரர்கள் உள்ளிட்ட அரசு துறையினைச் சார்ந்த 80,000க்கும் மேற்பட்ட நபர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளில் இரவு பகலாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இதுவன்றி, தேசியப் பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த 1,920 நபர்களும், இந்திய இராணுவத்தைச் சார்ந்த 1,200 வீரர்களும், கடலோர மற்றும் கப்பற் படையினைச் சார்ந்த 600 வீரர்களும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர் இதன் காரணமாக வெள்ளம் பாதித்தப் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான நபர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

- இந்திய விமானப் படையின் 6 ஹெலிகாப்டர்கள், இந்திய கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையின் தலா 2 ஹெலிகாப்டர்கள் வெள்ளம் பாதித்தப் பகுதிகளில் மீட்பு பணிகளுக்காகவும், உணவு மற்றும் குடிநீர் வழங்குவதற்காகவும் ஈடுபடுத்தப்பட்டது.
- தமிழகத்தில் பெய்த கனமழையின் காரணமாக 23.51 இலட்சம் மக்கள் தாழ்வானப் பகுதிகளில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு 7,244 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.
- நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்ட நபர்களுக்கும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இதர நபர்களுக்கும் 1.36 கோடி உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.
- 36,840 மருத்துவ முகாம்கள் மூலம் 44.08 இலட்சம் நபர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.
- 8,025 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 24.69 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.
- வெள்ளம் பாதித்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 690 டன் பால் பவுடர் வழங்கப்பட்டது. இதுவன்றி, புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்களை இழந்த மாணவ, மாணவியருக்கு 1.42 இலட்சம் பாடப் புத்தகம் மற்றும் நோட்டு புத்தகங்களும், 37,136 எண்ணிக்கையிலான பள்ளி சீருடைகளும் வழங்கப்பட்டன.
- 2015ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது வெள்ளம் சூழ்ந்த வீடுகளுக்கு ரூ.1,274 கோடி வழங்கப்பட்டது.
- 33 சதவீதத்திற்கும் மேல் பயிரிழப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.450 கோடி வழங்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30,41,868 குடும்பத்தினருக்கு வேட்டி, சேலை மற்றும் 10 கிலோ அரிசி.
- 112 சிறப்பு முகாம்கள் மூலம் 1,25,571 மனுக்கள் பெறப்பட்டு 57,000 மனுக்கள் மீது தீர்வு.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.2,300 கோடி ஒதுக்கீடு.

**மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிகளிலேயே சான்றிதழ்கள் வழங்கிடும் திட்டம்**

- 6,10,12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச்சான்றுகள் வழங்கிட உத்தரவிடப்பட்டு 31.03.2015 வரை 39.65 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன்.

**கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டம்**

- ரூ.1,481.80 கோடி மதிப்பீட்டில் தமிழக கடலோரத்தில் வசிக்கும் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ''கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டம்'' அறிவிக்கப்பட்டு தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இடர்ப்பாடுகளால் பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதிகளில், அனைத்து வகையான பேரிடர்களையும் தாங்கிடும் வகையில், 14,346 புதிய வீடுகள்.
- கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு ரூ.25 கோடி செலவில் வழிகாட்டி அறிவிப்புகளுடன் கூடிய 143 பாதைகள் மற்றும் 121 இடங்களில் பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு ரூ.315 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 22 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல்: ரூ.50 கோடி மதிப்பீட்டில்**

- கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு முன்னெச்சரிக்கை விவரங்களையும் பேரிடர் குறித்த செய்திகளையும் 24x7 முறையில் எப்பொழுதும் தெரிவிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பின் செயல்பாட்டினை சமுதாய




அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் (CBDRM) மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் 13 கடற்கரை மாவட்டங்களில் உள்ள 444 குடியிருப்புகளில் பேரிடர் அபாய முன்னறிவிப்பு கருவிகள் அமைக்கப்பட உள்ளன. இவை DWAS-R என அழைக்கப்படும். 13 கடலோர மாவட்ட தலைமையகத்திலும் DWAS-D எனப்படும் கருவி அமைக்கப்படும். இவை அனைத்தையும் கட்டுப்பாடு செய்யும் கருவி DWAS-C சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் உள்ள அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் நிறுவப்பட உள்ளது. மாநில மையக் கட்டுப்பாட்டு கருவிக்கான மாற்று கட்டுப்பாட்டு அமைப்பு (DWAS-DRC) திருநெல்வேலியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநில அளவிலான இணைய தொடர்பு (TNSWAN) மூலம் மிக அதிக அதிர்வெண் கொண்ட (ஏழகு) ரேடியோ அலைகள் மூலமாகவும் மற்றும் நவீன GSM / GPRS செல்லிட பேசி தொடர்பு மூலமாகவும் இருவேறு வகையில் தொடர்பு கொள்ளுமாறு அமைக்கப்படவுள்ளது.
- முதல் கட்டமாக DWAS–C மாநில அளவில் மாநில அவசரகால கட்டுப்பாட்டு மைய அலுவலகத்தில் நிறுவப்படும். அடுத்ததாக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்யும் விதமாக DWAS-D அமைப்புகள் உருவாக்கப்படும். மூன்றாவது கட்டமாக வட்டம் / ஒன்றிய தலைமையிடம் வழியாக அபாயத்திற்கு உட்படும் கிராமங்களில் (DWAS-R) அமைப்புகள் நிறுவப்படும்.

**தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல்: ரூ.360 கோடி மதிப்பீட்டில்**

- தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கழகமானது (TANGEDCO) கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய நகரங்களில் பூமிக்கு மேல் உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்புகளை (HT & LT) பூமிக்குக் கீழான இணைப்புகளாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

**மீன்வளத்துறைப் பணிகள்**

**உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரப் பணிகள்**

- நாகப்பட்டினம் மாவட்டத்தில், நாகப்பட்டினம் மற்றும் பழையார் ஆகிய மீன்பிடித் துறைமுகங்களை நவீனமாக்க மற்றும் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகூர், கடலூர் மாவட்டத்தில் பரங்கிப்பேட்டை – அன்னன்கோவில் ஆகிய இடங்களில் மீன் இறங்கும் மைய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- உப்பனார் மற்றும் வெள்ளாறு முகப்புத்துவாரப் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது.
- தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் முகப்புத்துவாரம் வலுப்படுத்தும் பணிகளும், 6 கடலோர மாவட்டங்களில் 7 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

**நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை** (FIMSUL II)

- மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவிகள் அளித்தல், கடல் மீன்வளத்தை மேம்படுத்துவது குறித்து மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்கள் ஆபத்து காலங்களில் தங்களை காத்துக் கொள்ள பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது.

**பேரிடர் மேலாண்மை திறன் வளர்த்தல்.**

- ரூ.17.5 கோடி செலவில் GIS மையம் ஒன்றினை உருவாக்கி கொள்கை முடிவுகள் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை பள்ளிமாணவர்களிடையே உருவாக்குவதற்காக பாடத்திட்டங்களில் இப்பாடத்திட்டம் சேர்க்கப்படவுள்ளது.

**சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம்** (CBDRM)

- இத்திட்டமானது பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியமான செயல்பாடுகள்:
- அ) பேரிடர் அபாயம் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் குறித்து மதிப்பீடு செய்தல்
- ஆ) சமூகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் திறன் மேம்பாடு
- இ) முன்னெச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு மையக் கட்டடங்கள் பயன்பாட்டினை சமூகத்துடன் இணைத்தல்
- ஈ) அவசர காலத்தினை எதிர்கொள்வதற்கான திறன்களை வலிமைபடுத்துதல்

**சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் குறிக்கோள்கள்:–**

- கிராம அளவில் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் சமுகத்தின் பேரிடர் அபாயத்தினை குறைப்பது மற்றும் இயற்கை இடர்பாடுகளை தைரியமாகவும் எச்சரிக்கையுடனும் எதிர்க்கொள்வதற்கு தயார்படுத்துதல்.
- கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் உள்கட்டமைப்புகள் குறித்து சமூகத்தின் அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ள செய்வதுடன் இப்பொழுது சொத்துக்களை முறையாகப் பராமரிப்பது மற்றும் அவசர காலங்களில் அவற்றை சிறப்பாகப் பயன்படுத்துவது குறித்தும் அறிந்து கொள்ள செய்தல்.

**ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகள் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்:**

- இயற்கை வளங்களை பாதுகாக்கவும் மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரைப்பகுதிகள் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகள் குறித்த மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் தயாரித்தல் மற்றும் தமிழ்நாடு கடற்கரைப் பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் சுற்றுச்சூழல் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- கடலோர மக்களுக்கு பேரிடர் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு பயிற்சிகள்.
- ரூ.323.21 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மாவட்ட பெருந்திட்ட வளாகம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூடுதல் கட்டடங்கள், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள அம்பத்தூர், ஸ்ரீரங்கம், இலுப்பூர், தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டங்களுக்கு 6 புதிய வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள், 64 புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் உட்பட 19 புதிய வட்டாட்சியர் அலுவலகக்கட்டடங்கள்,54புதியகுடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் 54 குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ரூ.14.33 கோடி மதிப்பீட்டில் 231 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புடன்கூடிய அலுவலகக்கட்டடங்களும் மற்றும் 142 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
- ரூ.40 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள 8,000 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களை புனரமைத்திட தலா ரூ.50,000 வீதம் ஒதுக்கப்பட்டு இதுவரை 4,773 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.15 கோடி செலவில் 3,000 கிராம நிருவாக அலுவலர்களின் அலுவலகங்கள் தலா ரூ.50,000/–செலவில் புனரமைக்க ஆணை.
- உயிர்ப்புள்ளியியல் கணக்கெடுப்பு பணியில், 5 வயது மற்றும் 5 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர்ப்புள்ளியியல்) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகிறது. 640 மையங்கள் மூலம் இப்பணி நடைபெற்று வருகிறது. இதுவரை தயார் செய்யப்பட்டுள்ள ஆதார் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 5.76 கோடி.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2013 அன்று தொடங்கப்பட்ட அம்மா திட்டத்தின் மூலம் மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட முகாம்களில் 50.84 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 49.45 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு.
- அம்மா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறைக்கு, மாண்புமிகு முதலமைச்சரின் மிகச் சிறந்த ஆளுகைக்கான விருது (Best Practices Award for improvement of Quality Delivery System Ensuring Good Governance) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த்துறை செயலர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையின் போது ஏழை, எளிய, மக்களுக்கு விலையில்லா சேலைகள் / வேட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் 6.81 கோடி விலையில்லா சேலைகளும், 6.77 கோடி விலையில்லா வேட்டிகளும் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டிற்கு 167.26 இலட்சம் விலையில்லா சேலைகளும், 166.73 இலட்சம் விலையில்லா வேட்டிகளும் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.486.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணை பிறப்பிக்கப்படுள்ளது.

**சமூகப் பாதுகாப்புத் திட்டம்**

- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர், ஆதரவற்ற விதவையர்,



கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்கள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் மற்றும் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு ஒய்வூதியம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணை. இத்திட்டத்தின் மூலம் 29 விழுக்காடு பேர் பயன். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடும் ரூ. 1,207/– கோடி ரூபாயிலிருந்து 4,198.05/– கோடி ரூபாயாக உயர்வு.

- கடந்த ஐந்தாண்டு காலத்தில் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 29 விழுக்காடு உயர்ந்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடும் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.1,207 கோடி ரூபாயிலிருந்து ரூ.4,198,05 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்தியாவிலே முதன்முறையாக, பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை (Bio-Metric Smart Card) பயன்படுத்தி ஒய்வூதியத்தினை வங்கிகள் மூலமாக வழங்கிடும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு 21.42 இலட்சம் பயனாளிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திலேயும், 9.10 இலட்சம் பயனாளிகளுக்கு தபால் (மணியார்டர்) மூலமும் அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. இதுவரை 30,52,575 பேர் பயன்.

**இந்திராகாந்தி முதியோர் ஒய்வூதிய தேதியத் திட்டம்** (IGNOAPS),

- இந்திராகாந்தி விதவைகள் ஒய்வூதிய தேதியத் திட்டம் (IGNWPS), இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதிய தேசியத் திட்டம் (IGNDPS), ஆதரவற்ற விதவையர் ஒய்வூதியத் திட்டம் (DWP), ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஒய்வூதிய திட்டம் (DDWP), 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஒய்வூதியத் திட்டம் (UWP), ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியத் திட்டம் (DDAP), ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஒய்வூதிய திட்டம் தற்போது முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் (DALP now CMUPT), முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான முதியோர் ஒய்வூதியம் ஆகிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அனைத்தும் இணையதளம் மூலம் நிர்வாகிக்கப்படுகிறது.

**மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.09.2011 அன்று திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், 1.85 கோடி விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்க 1.56 கோடி நபர்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
- 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 62 வட்டங்களைப் பிரித்து புதிய வட்டங்கள் ஏற்படுத்த ஆணை.
- கடந்த 5 ஆண்டுகளில் 4 வருவாய்க் கோட்டங்களும், 49 வருவாய் வட்டங்களும் புதியதாக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2015–2016ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 110 விதியின் கீழ் 16 வட்டங்கள், 5 வருவாய் கோட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**விரைவுப் பட்டா மாற்றம்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.07.2011 அன்று தொடங்கப்பட்ட விரைவுப் பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ், 15.12.2015 வரை 61.15 இலட்சம் பட்டாக்கள் மாறுதல். மேலும், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10,50,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 11,89,875 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 21,08,959 உட்பிரிவு பட்டாக்களும், 36,245 நத்தம் பட்டாக்களும், 6,14,749 மலை கிராமங்களில் 2,312 பட்டாக்களும் நிலவரி திட்டப்பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
- வட்ட அலுவலகங்களில் விரைவுப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், இத்துறை பணியாளர்களுக்கு உதவிபுரிய ஏதுவாக எல்லா வட்ட அலுவலகங்களிலும் தலா 2 தகவல் பதிவேற்றுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் மாத ஊதியம் ரூ.5,000/– லிருந்து ரூ.7,500/– ஆக உயர்வு.
- நில ஆவணங்களை இணையம் வழியாகப் பராமரிக்க ஏதுவாக இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 132 வட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற நிலஆவணங்கள் இணையவழி

பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சிய வட்டங்களின் நிலஆவணங்களும் 15.02.2016–க்குள் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

- இத்திட்டத்தின் வாயிலாகப் பட்டா மாறுதல் விண்ணப்பம் பெறப்பட்டவுடனும், குறுவட்ட அளவர் புல தணிக்கைக்கு தேதி நிர்ணயம் செய்தவுடனும், பட்டா மாற்ற விண்ணப்பத்தின் மீது வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் அங்கீகரித்து / நிராகரித்து ஆணை வழங்கும் போதும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும்.

- அனைத்து வகை நிலஆவணங்களையும் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக கணினிப்படுத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 93.65 சதவிகிதம் நத்தம் நிலஆவணங்களும், 99 சதவிகிதம் நகர்ப்புற நிலஆவணங்களும், 60.86 சதவிகிதம் புலப்படங்களும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை கணினிப்படுத்தப்பட்டுள்ள நிலஆவணங்கள் விரைவில் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளன.

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.3,018.91 கோடி உதவித் தொகை 37.18 இலட்சம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் இறப்புக்குப்பின் அவர் தம் குழந்தைகளுக்கு தொடர்ந்து பயன்.

- இப்புதிய திட்டத்தின் கீழ், பயனாளிகள் தொடர்ந்து பயன்பெறும் வகையில் அவர்களுக்கு 72,40,387 அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 1,59,58,265 நபர்கள் உறுப்பினர்களாகவும், 1,17,49,934 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்த உறுப்பினர்களாகவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

- நீண்ட கால நிலுவை இனங்கள் முடிவு செய்யப்பட்டு நடப்பு காலத்தில் நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உபரியாக அறிவிக்கப்பட்ட 633 ஏக்கர் நிலம் 507 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நிலஉடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உள்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 6 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்டன. 2012–2013ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து புதியதாக 4 வருவாய் நீதிமன்றங்கள் லால்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு 21.01.2013 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன. 01.06.2011 அன்று 9,806 வழக்குகள் நிலுவையில் இருந்து 01.06.2011 முதல் 30.11.2015 வரை, 27,568 வழக்குகள் வரப்பெற்று மொத்தம் நிலுவையில் உள்ள 37,374 வழக்குகளில், 01.06.2011 முதல் 30.11.2015 வரை 29,192 வழக்குகள் முடிக்கப்பட்டு, 8,182 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

- பணியை விரைவுப்படுத்தும் நோக்கோடு 220 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு தலா இரு கணினி, அச்சுப்பொறி, மேஜை, நாற்காலி மற்றும் ஒரு ஒளி அச்சு நகலி ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

- பொதுமக்களுக்குத் தேவைப்படும் நில வரைபட நகல்கள் விரைவாக கிடைத்திட வழிவகை.

- 1,404 நில அளவர் மற்றும் வரைவாளர்கள் பணியிடங்கள் கருணை அடிப்படை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் இனமாற்றம் ஆகியவற்றின் மூலம் நியமனம்.

- நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு அளவை செய்யவும், கணினி வரைபடங்கள் தயாரிக்கவும், வெளி ஆதார முறை மூலமும் சி–ஸ்டார் வாயிலாக தொழில்நுட்ப தகுதி பெற்ற நபர்கள் நியமனம்.

- ரூ.159.88 இலட்சம் செலவில் கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்களைப் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாகவும், இணைய வழி நிலஆவண பராமரிப்பிற்கு உபயோகமாகும் வகையிலும் 600 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள்.

- பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்ள ஏதுவாக, BSNL – CUG திட்டத்தின் கீழ் குறுவட்ட அளவர்களுக்கும், அலுவலர்களுக்கும் ரூ.21.66 இலட்சம் செலவில் 1,600 எண்ணிக்கையிலான சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.



- சென்னை மாவட்டத்தில் நகர்ப்புற நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் பணி நடைபெற்று 3.76 இலட்சம் நில ஆவணங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- நில உடமைதாரர்களுக்கு பயனளிக்கும் வகையில் 1,01,747 தனிப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு குறுவட்டத்திலும் உள்ள புலப்பட நகல்களின் தொகுப்பு ரூ.30 இலட்சம் செலவில் சம்பந்தப்பட்ட குறுவட்ட அளவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- நத்தம் நில அளவைப் பணியின் கீழ், சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம் பகுதிகளில் 9.35 ச.கி.மீ. நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- நகர அளவைப் பணியின் கீழ், சென்னை மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளில் 31.60 ச.கி.மீ. நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

- நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகிய உபகரணங்களைக் கொண்டு புதியதாக தரம் உயர்த்தப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் நகர நில அளவைப் பணி மேற்கொள்வதற்காக 8 மாவட்டங்களில் நவீன நில அளவைத் திட்ட அலகுகள் ஏற்படுத்தப்பட்டு 10.27.5 ச.கி.மீ. பரப்பு அளவை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

- பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் ஒற்றைச் சாளரம் மூலம் வட்ட அலுவலகங்களில் வழங்க நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. 60 வட்டங்களில் இம்மையங்கள் உருவாக்கப்பட்டு, கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 18 வட்ட அலுவலகங்களில் இதற்கானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- நவீன நில அளவை மற்றும் வரைபடங்கள் தயாரிப்பதில் 82 நபர்களுக்கு நவீன பயிற்சியும், நவீன நில அளவைக் கருவிகளான ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றை கையாள்வதற்கு 1,172 நபர்களுக்கு அடிப்படைப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.12.71 கோடியில் 100 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகம் சார்ந்த குடியிருப்பு கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அரசின் பாதுகாப்பில் உள்ள மதிப்புமிக்க நிலங்களை வேலியிட்டுப் பாதுகாத்து பொது நோக்கத்திற்காக எதிர்கால பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு ரூ.18 இலட்சம் செலவில் பல கோடி மதிப்புள்ள 68,189 சதுர மீட்டர் அரசு நிலங்கள் வேலியிட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புற நிலஉச்சவரம்பு சட்டத்தின் கீழ்,கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் அறியாமல் கிரயம் பெற்ற 45 இனங்களில் 2,94,929.29 ச.அடி நிலம் வரன்முறை செய்யப்பட்டு ரூ.2,08,61,765/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு ரூ.655.35 இலட்சம் நகர்ப்புற நிலவரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

- நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையர் அலுவலகம் ரூ.30 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டு, சென்னை மற்றும் ஏனைய மாவட்டங்களிலுள்ள சார்நிலை அலுவலகங்கள் ஆணையர் அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும் வகையில் இணையதள வசதி.

- அதில் 96 குறுவட்டங்களில் அலுவலகம் சார்ந்த குடியிருப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

- எஞ்சிய 4 குறுவட்டங்களில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

- இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை கண்காணிக்கவும், செயல்படுத்தவும் ஏதுவாக இத்துறையைச் சேர்ந்த 50 உயர் அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்க உத்தரவிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்துறை ஆணையரின் அலுவலக அறை ரூ.5 இலட்சம் செலவில் நவீன மயமாக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# ஊரக மக்களின் உள்ளம் களிக்க ஊர்தோறும் மகிழ்ச்சி செழிக்க ஒப்பில்லாச் சாதனைகள்



- முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ், 2,40,000 வீடுகள் ரூ.4,680 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டில் ரூ.1,260 கோடி மதிப்பீட்டில் 60,000 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
- ஊரகப் பகுதிகளின் அனைத்து குக்கிராமங்களுக்கும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (தாய்) கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2,930 கோடி மதிப்பீட்டில் 1,91,699 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் ரூ.750 கோடி மதிப்பீட்டில் 40,405 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- ஊரகக் கட்டடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், 1,36,258 பணிகள் இதுவரை ரூ.745.63 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.
- சூரிய மின்சக்தியுடன் கூடிய தெருவிளக்குகள் 40,000 பணிகள் ரூ.90.12 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.6.05 கோடி செலவில் 85 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் மின்சார செலவினைத் குறைத்திடவும், புதுப்பிக்கவும் சூரிய மின்சக்தி கலன்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.398.30 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல், சமையலறை, குடிநீர் வசதி செய்தல், கழிவறை போன்ற 39,581 உட்கட்டமைப்பு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.98.32 கோடி மதிப்பீட்டில் 8,440 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- கிராமப்புற சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தினை மேற்கொள்ள பெண்கள் சுகாதார வளாகம் அமைத்தது போல், ஆண் மற்றும் இளம்சிறார்களுக்காகவும், தனியாக ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்க முதற்கட்டமாக 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு வீதம் 770 கிராம ஊராட்சிகளில் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.



- ஊரகப்பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.547.67 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள், நூலகங்கள், பாலகங்கள், குடிநீர் ஆதாரம் உருவாக்குதல், சாலை மேம்பாடு, சமுதாயக் கூடம் கட்டுதல், நியாயவிலை அங்காடிக் கட்டடம் கட்டுதல் போன்ற 8,965 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் ரூ.69.72 கோடி மதிப்பீட்டில் 1,146 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1.75 கோடி என்பது 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியாக உயர்த்தப்பட்டு இதுவரை ரூ.1,880 கோடி செலவில் 63,996 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ரூ.3,822.01 கோடி செலவில் 3,53,828 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டில் 53,429 ரூ.641.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நபார்டு வங்கியின், ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1,252.51 கோடி மதிப்பீட்டில் 5,523.51 கி.மீ நீளத்திற்கு 2,374 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலைகள் அமைத்திடும் திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி, 9,191.24 கி.மீ நீளமுள்ள 5,291 சாலைகள் ரூ.1,167.97 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.19,029.35 கோடி செலவில் 162.18 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.
- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1,180 கோடி செலவில் 21,121 உள்கட்டமைப்பு வசதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.1,260 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது
- பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ், ரூ.1,485.86 கோடி மதிப்பீட்டில் 4,046.93 கி.மீ. நீளமுள்ள 1,747 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன
- பதிமூன்றாம் நிதிக்குழு மானியத்தின் மூலம் ரூ.622 கோடி மதிப்பீட்டில் 6,573.13 கி.மீ நீளமுள்ள 3,327 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.
- ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துக்களை உருவாக்குவதும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.616.67 கோடி மதிப்பீட்டில் 4,318.92 கி.மீ நீள 4,160 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ், 1,552.46 கி.மீ. நீளமுள்ள 1,037 சாலைப் பணிகள் ரூ.304.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.
- ஊரக சாலைகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ், 6,782.69 கி.மீ. நீளமுள்ள 3,490 சாலைப்பணிகள் ரூ.700 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1,399.28 கி.மீ நீளமுள்ள 612 சாலைப்பணிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.
- ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின் கீழ், ஊரகப்பகுதிகளில் செயல்படுத்தப்படும் முன்னுரிமைப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 2,083 பணிகள், ரூ.684.66 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 4,225.10 கி.மீ. நீளமுள்ள 2,388 சாலைகளை ரூ.800 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

- 2011–2012ஆம் ஆண்டில் 65,000 சுயஉதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில்



அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2014–2015ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 10,013 புதிய சுய உதவிக் குழுக்கள் ஊரகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டு டிசம்பர் 2015 வரை 9,402 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

- 2011–2012ஆம் ஆண்டில் ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15,000 வீதம் 22,214 சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000 வீதம் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் 11,144 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.15,000 வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் இணைப்பாக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.25,784 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தரமதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. 7,751 தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.77.51 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 68,153 இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களில் 39,572 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்துவதற்காக 16,091 பெண்களுக்குத் தொழிற்திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.320 இலட்சம் செலவில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் 32 மாவட்டங்களில் 507 "கல்லூரி சந்தைகள்" நடத்தப்பட்டு ரூ.726.46 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதல் கட்டமாக செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் உள்ள 5.18 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட 11 "மகளிர் மேளா" விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. ரூ.4.43 கோடி மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி அதன் மூலம் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை மேம்படுத்தி மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- 2012–2013 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு அரசு, "மதி" வர்த்தக பெயர் மற்றும் வணிக சின்னத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. "மதி" வர்த்தக பெயர் மற்றும் வணிக சின்னம் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இணையம் மூலம் சந்தைப்படுத்தும் வகையில், "மதி பஜார்" (Mathi Bazaar) எனும் பெயரில் புதிய இணையதளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- 2012–2013ஆம் ஆண்டு முதல் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக போராடும் மகளிர் சுய உதவிக்குழு பெண்களை ஊக்குவித்திட தலா ரூ.1,00,000/– வீதம் 2 சுய உதவிக் குழுக்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2012–2013ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் 100 சதவிகிதம் கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.50,000/– வீதம் 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2013–2014ஆம் ஆண்டில் நிதி உள்ளாக்கத்தை வலியுறுத்தி 3,176 சுய உதவிக் குழு பெண்கள் வங்கி முகவர்களாக பல்வேறு வங்கிகள் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 265 வட்டாரங்களில் 3 கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 120 வட்டாரங்களில் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 2,388 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் முதல் கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. 3,538 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் இரண்டாவது கட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. 2013–2014ஆம் ஆண்டில் 2,323 கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் சமுதாய முதலீட்டு தொகையாக ரூ.232.30 கோடி வழங்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட்ட 2,388 கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு தலா ரூ.4 இலட்சம் வீதம் ரூ.95.52 கோடி முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட மாவட்டங்களுக்கு முதல் தவணையாக 524 கிராம ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ.4 இலட்சம் வீதம் ரூ.20.96 கோடியும், 2,744 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ.50,000 வீதம் துவக்க நிதியாக ரூ.13.72 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.
- "ஒரு கிராமம் ஒரு உற்பத்தி பொருள்" திட்டத்தின் கீழ், 915 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.1 இலட்சம் வீதம் ரூ.915 இலட்சம் திட்ட நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசின் முயற்சியால் கடந்த ஆண்டுகளில் (2013–2015) மொத்தம் 406 வேலைவாய்ப்பு முகாம்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது. இதில் பங்குபெற்ற மொத்தம் 6,28,210 இளைஞர்களில் 1,09,514 நபர்கள் பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- 2014–2015ஆம் ஆண்டு முதல் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இடையேயான கலாச்சார போட்டிகளுடன் விளையாட்டு போட்டிகளும் ரூ.160 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன.
- மகளிர் சுய உதவிக் குழுக்கள் 43 மண்டல அளவிலான சாரா கண்காட்சிகளில் கலந்து




கொண்டு ரூ.2.91 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**புது வாழ்வுத் திட்டம்**

- புது வாழ்வுத் திட்ட செயல்பாடுகள் மேற்கொள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ரூ.958.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளுக்கு வாழ்வாதார நிதியாக ரூ.330.17 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.
- 1,54,616 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்குப் புது வாழ்வு திட்டத்தின் மூலம் சுய தொழில் தொடங்க தனிநபர் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள இளைஞர்களில் 2,39,077 இளைஞர்கள் பயிற்சி முடித்து, 2,21,526 இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.
- பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, ஆயத்த ஆடைகள் தயாரித்தல், காய்கறிகள் மற்றும் மலர்கள் சாகுபடி போன்ற தொழில்களை செய்ய 1,80,218 நபர்களை கொண்ட 5,869 ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 25 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ரூ.435.43 கோடி மதிப்பீட்டில் சுய உதவி குழுக்களுக்கான இரண்டாம் வங்கி இணைப்பு 15,915 குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- நபார்டு மூலம் 275 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.76.74 கோடி பெருங்கடனாக பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- 6,826 நபர்கள் புது வாழ்வு மனநல திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தனி அடையாள அட்டை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு தற்போது 10,05,487 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அடையாள அட்டை பெற்றுள்ளனர்.
- 4,174 கிராம கற்றல் மையங்கள் கிராம ஊராட்சிகளில் இயங்கி வருகின்றன.
- 9,86,113 குடும்பங்களுக்கு குடும்ப தொலை நோக்கு அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சிகளில் 4,174 இளைஞர் தூதர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- 1,680 சமூக வல்லுநர்களுக்கு இரண்டாம் நிறுவனக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



- 70 வட்டார முகமைகள் மற்றும் இரண்டாம் நிறுவனக் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.22.02 கோடி மதிப்பீட்டில் 510 சமுதாய உட்கட்டமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- மீன்வள ஆதாரத்தைப் பெருக்கும் பொருட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயற்கை பவளப் பாறைகள் கடலுக்கடியில் நிறுவப்பட்டுள்ளன.
- 86 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்களும், மீனவர்கள் பயன்பெறும் வகையில் 40 மீன் உலர் தளங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.
- மக்களின் பங்களிப்புடன் 189 நுண் தொழில்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மொத்த திட்டத் தொகை ரூ.5.63 கோடி.
- நுண் தொழில்களை மேன்மேலும் ஊக்குவிக்கும் வகையில் நபார்டு நிதி நிறுவனத்துடன் (NABFINS) 19.06.2013 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம், 452 புதிய கருத்துருக்கள் நபார்டு நிதி நிறுவனத்தால் (NABFINS) அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 6,846 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.141.52 கோடி வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- துயர் குறைப்பு நிதியாக 16,979 பயனாளிகளுக்கு ரூ.7.93 கோடி குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 28 மீன் விற்பனை சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- 32 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 1,767 மீனவர்கள் ரூ.2.35 கோடி அளவிலான கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
- திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இரண்டு மீனவர் சங்கக் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மூன்று படகு இயந்திரம் பழுது நீக்கும் பணிமனைகள் மற்றும் மூன்று படகு கட்டும் துறைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.47.40 இலட்சம் மதிப்பீட்டில் மீன்வலை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் 6,845 குளிர் பதனப் பெட்டிகள் மீனவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- மகளிர் மீன் வியாபாரிகளை இணைத்து 500 கூட்டு பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.3.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 16,07,406 பெண்களுக்கு மருத்துவ சோதனை செய்து அவர்களுக்கு சுகாதார அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- புதுவாழ்வு திட்டத்தின் மூலமாக 1,702 மாற்றுத் திறனாளிகள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 793 பதக்கங்களை வென்றுள்ளனர். (தங்கம் –349, வெள்ளி –363, வெண்கலம்–181)

**சுனாமி மறுவாழ்வுத் திட்டம்**

- இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 1,102 வீடுகள் ரூ.58.54 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்ட அடிப்படை வசதிப் பணிகளின் கீழ், 54 பணிகள் ரூ.4.97 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின் கீழ், 14,346 வீடுகள் ரூ.546.43 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- கடலோரப் பகுதிகளில் அவசரகாலங்களில் வெளியேற வசதியாக வழிகாட்டு பலகைகளுடன் கூடிய சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 143 பணிகள் ரூ.21.97 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 28 கூட்டு வள மையங்களுக்கு மின் அஞ்சல் மற்றும் இணையதள வசதி அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், 189 நுண் தொழில்கள் மக்களின் பங்களிப்புடன் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் திட்ட பங்களிப்பு ரூ.455 இலட்சமாகும்.

- இத்திட்டத்தின் கீழ், நுண் தொழில்களை மேம்படுத்தும் வகையில், நாபின்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, நாபின்ஸ் நிறுவனத்தின் மூலம் இதுவரை 641 கருத்துருக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இவற்றில் 263 கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.
- 15,843 பயனாளிகள் சமுதாயப் பரிமாற்றம் பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.
- 510 சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் ரூ.2,202.02 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.
- மீன் வளத்தை பெருக்கும் பொருட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஆறு கிராமங்களில் கடலுக்கடியில் செயற்கை பவளப் பாறைகள் ரூ.72 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.
- 6,846 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.14,927.06 இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டது.
- துயர் குறைப்பு நிதியாக 19,813 பயனாளிகளுக்கு ரூ.965 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது.
- 97 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.
- அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் தளவாட சாமான்கள், இணைய தள வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் மின் சேமிப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 17,010 பெண்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் தொழில்கள் தொடர்பானப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 39 மீன் விற்பனை சங்கங்கள் மீனவர் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ளன.
- 1,767 மீனவர்கள் ரூ.441.72 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
- 41 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 44 மீன் உலர் களங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.
- திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மூன்று மீனவர் சங்கக் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மூன்று படகு எந்திரம் பழுது நீக்கும் பணிமனைகளும், மூன்று படகு கட்டும் துறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.47.40 இலட்சம் மதிப்பீட்டில் மீன்வலை விற்பனைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு மீன் ஏலக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு மீன் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.337.32 இலட்சம் மதிப்பீட்டில் மீன்களை பதப்படுத்த 7,333 குளிரூட்டும் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.21 இலட்சம் செலவில் இரண்டு குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ரூ.9.83 இலட்சம் செலவில் 447 சூரிய சக்தி விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2,500 மகளிர் மீன் வியாபாரிகளை இணைத்து 512 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.375 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.129 இலட்சம் மதிப்பீட்டில், 2,500 கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களுக்கு குளிர் பதனப் பெட்டி, எடை இயந்திரம், கத்தி, வெட்டு பலகை போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# 84,568 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செழித்தோங்கி வளர்ந்திடும் பள்ளிக்கல்வி!



**நிதி ஒதுக்கீடு**

- அனைவருக்கும் தரமான கல்வி வழங்கவும், பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்ட அமைப்பிற்காகவும், ஆசிரியர் நியமனம் மற்றும் நலத்திட்டங்களுக்காகவும் பள்ளிக் கல்வித்துறைக்கு கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.84,568 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சேர்க்கை நிலவரம்**

- அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் தொடக்க நிலையில் 2010–2011இல் 99.60 சதவிகிதமாக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2014–2015இல் 99.85 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

அவ்வாறே நடுநிலையில் 2010–2011இல் 98.84 சதவிகிதமாக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2014–2015இல் 99.10 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

- இடைநிலை அளவில் 2010–2011இல் 82.30 சதவிகிதமாக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் 2014–2015இல் 91.17 சதவிகிதமாக ஆக உயர்ந்துள்ளது. மேல்நிலை அளவில் 2010–2011இல் 55.92 சதவிகிதமாக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் 2014–2015இல் 76.77 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

- தொடக்க நிலையில் 2010–2011இல் 1 சதவிகிதமாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2014–2015இல் 0.94 சதவிகிதமாக குறைந்துள்ளது. நடுநிலை அளவில் 2010–2011இல் 1.79 சதவிகிதமாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2014–2015இல் 1.58 சதவிகிதமாக குறைந்துள்ளது. இடைநிலை அளவில் 2010–2011இல் 11.21 சதவிகிதமாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2014–2015இல் 3.94 சதவிகிதமாக குறைந்துள்ளது.

- ஐந்தாண்டுகளில் பன்னிரண்டாம் வகுப்புப் பயின்ற 26.96 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.4,722.76 கோடி செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

- இடைநிலைக் கல்வியை இடைநிற்றலின்றித் தொடர சிறப்பு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,500/–, 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.2,000/– கல்வி ஊக்கத் தொகையாக அவர்களின் பெயரில் முதலீடு செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் மேல்நிலைக் கல்வி முடிந்தவுடன் வழங்கும் வகையில் ஐந்தாண்டுகளில் ரூ.1,810.09 கோடி ஊக்கத்தொகை பெற்று 113.35 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

- 2011–2012ஆம் ஆண்டு முதல், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இணைச் சீருடை, இரண்டு இணையாகவும், பின்னர் நான்கு இணையாகவும் உயர்த்தப்பட்டு, 2011–2012ஆம் கல்வியாண்டில் 46.88 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2012–2013ஆம் கல்வியாண்டில் 47.07 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2013–2014ஆம் கல்வியாண்டில் 53.54 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2014–2015ஆம் கல்வியாண்டில் 46.29 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும் 2015–2016ஆம் கல்வியாண்டில் 46.29 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ஐந்து ஆண்டுகளில் ரூ.1,697.89 கோடி செலவில் இணைச் சீருடைகள் வழங்கப்பட்டன.

- 2013–2014ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் மலைவாழ் பகுதிகளில் உள்ள மதிய உணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா கம்பளிச் சட்டைகள் வழங்கப்படும் திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் ஆண்டில் ரூ.4.12 கோடி செலவில் 1.03 இலட்சம் பேரும், 2014–2015ஆம் ஆண்டில் ரூ.3.71 கோடி செலவில் 1.03 இலட்சம் பேரும், 2015–2016ஆம் ஆண்டில் ரூ3.71 கோடி செலவில் 1.03 இலட்சம் பேரும் பயனடைந்துள்ளனர்.

- ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2011–2012இல் 69.25 இலட்சம் பேருக்கும், 2012–2013இல் 92 இலட்சம் பேருக்கும், 2013–2014இல் 97.70 இலட்சம் பேருக்கும், 2014–2015இல் 111.29 இலட்சம் பேருக்கும், 2015–2016 இல் 111.29 இலட்சம் பேருக்கும் ஐந்தாண்டுகளில் ரூ.998.79 கோடி செலவில் வழங்கப்பட்டன.

- 2012–2013ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2012–2013இல் 81.02 இலட்சம் பேருக்கும், 2013–2014இல் 86.71 இலட்சம் பேருக்கும், 2014–2015இல் 77.66 இலட்சம் பேருக்கும், 2015–2016இல் 77.66 இலட்சம் பேருக்கும், நான்காண்டுகளில் ரூ.426.54 கோடி செலவில் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2012–2013ஆம் ஆண்டில் விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை





பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பை வழங்கும் திட்டத்தில் 2012–2013இல் 92 இலட்சம் பேருக்கு ரூ.127.78 கோடி செலவிலும், 2013 – 2014இல் பள்ளிகளில் புதிதாக சேர்ந்த 13 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.19.79 கோடி செலவிலும், 2014–2015இல் 90.78 இலட்சம் பேருக்கு ரூ.120.71 கோடி செலவிலும், 2015–2016இல் 90.78 இலட்சம் பேருக்கு ரூ.120.71 கோடி செலவிலும் புத்தகப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தில் 2012–2013இல் 46 இலட்சம் பேருக்கு ரூ.16.37 கோடி செலவிலும், 2013–2014இல் பள்ளிகளில் புதிதாக சேர்ந்த 9.68 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.3.87 கோடி செலவிலும், 2014–2015இல் 9.39இலட்சம் பேருக்கு ரூ.3.75 கோடி செலவிலும், 2015–2016இல் 9.39 இலட்சம் பேருக்கும் ரூ.3.76 கோடி செலவிலும் கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கிரையான்ஸ்/ வண்ணப் பென்சில்கள் வழங்கும் திட்டத்தில் 2012–2013இல் 31.45 இலட்சம் பேருக்கு ரூ.5.17 கோடி செலவிலும், 2013–2014இல் 32.46 இலட்சம் பேருக்கு ரூ.5.90 கோடி செலவிலும், 2014–2015இல் 31.45 இலட்சம்

பேருக்கு ரூ.6.47 கோடி செலவிலும், 2015–2016இல் 31.45 இலட்சம் பேருக்கு ரூ.6.49 கோடி செலவிலும் கிரையான்ஸ்/ வண்ணப் பென்சில்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நில வரைபடப் புத்தகம் வழங்கும் திட்டத்தில் 2012–2013இல் 46 இலட்சம் பேருக்கு ரூ.14.27 கோடி செலவிலும், 2013–2014இல் பள்ளிகளில் புதிதாக சேர்ந்த 9.67 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.85 கோடி செலவிலும், 2014–2015இல் 9.39 இலட்சம் பேருக்கு ரூ.3.01 கோடி செலவிலும், 2015–2016இல் 9.39 இலட்சம் பேருக்கு ரூ.3 கோடி செலவிலும் நில வரைபடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2012–2013இல் அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா ஒரு இணை காலணிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2012–2013இல் 78.82 இலட்சம் பேருக்கு ரூ.104.15 கோடி செலவிலும், 2013–2014இல் பள்ளிகளில் புதிதாக சேர்ந்த 6.10 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.8.47 கோடி செலவிலும், 2014–2015இல் 77.66 இலட்சம் பேருக்கு ரூ.120.07 கோடி செலவிலும், 2015–2016இல் 77.66 இலட்சம் பேருக்கு ரூ.120.07 கோடி செலவிலும் ஒரு இணை காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 2011–2012இல் 6.22 இலட்சம் பேருக்கு ரூ.179.21 கோடி செலவிலும், 2012–2013இல் 6.31 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.194.20 கோடி செலவிலும், 2013–2014இல் 6.30 இலட்சம் பேருக்கு ரூ.200.98 கோடி செலவிலும், 2014–2015இல் 6.30 இலட்சம் பேருக்கு ரூ.216.04 கோடி செலவிலும், 2015–2016இல் 6.30 இலட்சம் பேருக்கு ரூ.219.50 கோடி செலவிலும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

- 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2011–2012இல் 46.88 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2012–2013இல் 48.63 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2013–2014இல் 53.40 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2014–2015இல் 46.29 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கும், 2015–2016இல் 46.29 இலட்சம் பேருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

- 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்குமான இலவசப் பேருந்து பயணச்சலுகைத் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 89.02 இலட்சம் பேரும் பயன்.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் தாய், தந்தை இழந்த மாணவர்களின் பெயரில் ரூ.50,000 வீதம் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாகச் செலுத்தப்படும் திட்டத்தின் கீழ், மூன்றாண்டுகளில் 1,080 மாணவ, மாணவியர் பயன் பெற்றனர். 2014–2015ஆம் ஆண்டுமுதல் ரூ.50,000 என்பதை ரூ.75,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

- 2011ஆம் ஆண்டில், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு முடித்துச் செல்லும் மாணவ, மாணவியர் தாங்கள் பயின்ற பள்ளியிலேயே வேலைவாய்ப்புப் பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கான பதிவு அட்டை அவரவர் பள்ளியிலேயே உடனுக்குடன் அளிக்கப்பெறுகிறது. இப்பதிவு முறையினால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் சான்றிதழ்கள் 100% வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்யப்படுகிறது.

- 2012–2013ஆம் ஆண்டு முதல், 6, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதி, இருப்பிட மற்றும் வருவாய்ச் சான்றிதழ்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் சார்ந்த வட்டாட்சியரிடமிருந்து பெற்று வழங்கப்பட்டு வருகிறது. 13,39,543 மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

- பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குறித்த அனைத்து விவரங்களையும் பதிவு செய்யும் கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமைத் திட்டம் ரூ.99.47 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு 57,208 பள்ளிகள், 5,42,743 ஆசிரியர்கள் மற்றும் 1,31,93,950 மாணவர்கள் சார்ந்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மனஅழுத்தத்தைக் குறைக்க 17 நடமாடும் ஆலோசனை மையங்கள். இதுவரை 3,47,875 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

- மாணவர் சார்ந்த விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு முன்னோடியாக திருச்சி மாவட்டத்திலுள்ள 5 பள்ளிகளில் ஸ்மார்ட் கார்ட் வழங்கப்பட்டுள்ளது.

- மாணவர்களின் சிந்திக்கும் திறனை வளர்க்கும் நோக்கிலும், அறிவுசார் திறனை ஊக்குவிக்கும் வகையிலும் 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் பள்ளிகளில் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- 13 மாவட்டங்களில் உள்ள கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் உள்ள குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில், அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் 44 மாதிரிப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.132.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. திட்ட மதிப்பில் மாநில அரசின் 25 சதவிகித பங்களிப்பான ரூ.33.13 கோடிக்கும் கூடுதல் நிதியாக ரூ.57.23 கோடி ஒப்பளிப்பு செய்து 24,640 மாணவ, மாணவியர் கல்வி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- 13 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் ரூ.61.10 கோடி மதிப்பில் 44 மாணவியர் விடுதிகள் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்களிப்பான ரூ.6.11 கோடிக்கும் கூடுதல் நிதியாக ரூ.45.44 கோடி ஒப்பளிப்பு செய்து 4,400 மாணவியர் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மேலும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2009–2010, 2010–2011 மற்றும் 2011–2012 ஆகிய ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு தேவையான பள்ளி கட்டிடங்கள் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவற்றை கட்டி முடிக்க மாநில அரசு 2014–2015இல் ரூ.89.20 கோடியும், 2015–2016இல் ரூ.1263.53 கோடியும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ், உள்கட்டமைப்புப் பணிகளுக்கு ரூ.1,455.40 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 45 தொடக்கப் பள்ளிகளில் பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதியக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.6.57 கோடியும், அரியலூரில் உள்ள மூன்று பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ.29 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 2012–2013 முதல் 2014–2015 வரை 12,092 அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளது.தற்போது அப்பிரிவுகளில் 2.64 இலட்சம் மாணவர்கள் ஆங்கில வழிக் கல்வியில் பயின்று வருகிறார்கள்.

- அரசுப் பள்ளிகளுக்கு 76,338 ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 72,843 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- அரசுப் பள்ளிகளுக்கு ஆசிரியர் அல்லாத 14,711 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- 2002–2003ஆம் ஆண்டில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 5.74 இலட்சமாக இருந்தது. 2010–2011ஆம் ஆண்டில் பள்ளி செல்லாத 56,113 குழந்தைகள் கண்டறியப்பட்டார்கள். அந்த எண்ணிக்கை 2014–2015ஆம் கல்வியாண்டில் 43,024 ஆகக் குறைந்துள்ளது. இக்குழந்தைகளில் 42,245 குழந்தைகள் உண்டு உறைவிடச் சிறப்புப் பயிற்சி மையம், இணைப்புச் சிறப்புப் பயிற்சி மையம், கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV), தேசியக் குழந்தைத் தொழிலாளர் திட்டப் பள்ளிகள் (NCLP) மற்றும் நேரடிச் சேர்க்கை மூலமாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 2014–2015ஆம் ஆண்டில் 159 உண்டு உறைவிடச் சிறப்புப் பயிற்சி மையங்கள் மற்றும் 1,049 இணைப்புச் சிறப்புப் பயிற்சி மையங்கள் பள்ளி செல்லா குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2015–2016ஆம் ஆண்டில், ஏப்ரல் மற்றும் மே 2015ல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி இதுவரை 33,686 பள்ளி செல்லாக் குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளனர். சிறப்புப் பயிற்சி மையங்களில் சேர்க்கப்படும் குழந்தைகளின் கற்றலடைவினை முதலில் மதிப்பீடு செய்து, அதனடிப்படையில் வகுப்புக்கேற்ற சிறப்பு இணைப்புப் பயிற்சி அளித்து, முறையான பள்ளிகளில் மீளவும் சேர்க்கப்படுகிறார்கள்.

- தொலைதூர மற்றும் மலைப்பகுதியில் உள்ள 15,000 மாணவ, மாணவியர்களுக்கு கடந்த மூன்றாண்டுகளில் ரூ.13.82 கோடி செலவில் போக்குவரத்து மற்றும் வழிகாவலர் வசதிகள் அளிக்கப்பட்டது.

- புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி வசதிக்கு ரூ.3.34 கோடி செலவில் 14,941 குழந்தைகள் அரசு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

- நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 25 விழுக்காடு சேர்க்கைக்கான இடஒதுக்கீட்டின்படி, பள்ளி நுழைவு நிலை வகுப்பில் 1,39,593 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். 2015–2016ஆம் கல்வியாண்டில் 94,811 குழந்தைகள் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- கல்வி சார்ந்த பணிகளை மேம்படுத்த ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக உயர்த்தப்பட்டது.

- தேவைக்கேற்ப பள்ளிகளை அமைப்பதோடு, பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்புகளை வழங்கிட இந்த அரசு முன்னுரிமை அளிக்கிறது. கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச் சுவர், மாற்றுத் திறனாளிகளுக்கென சாய்வு தளங்கள் ஆண்/பெண் குழந்தைகளுக்கென தனித்தனியே கழிவறைகள்,போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.2,703.69 கோடி செலவில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஆக பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.4,165.95 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொலைதூர இடங்களிலுள்ள பள்ளிகளை ஒருங்கிணைத்தல்**

- தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்கும் பொருட்டு மாநில அரசால் இணைய தளம் வாயிலாக "பள்ளிகளிலுள்ள வகுப்புகளை இணைத்து ஒருங்கிணைந்து பயிலும் திட்டம்" (Collaborative Learning through Connecting Class Room) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 288 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 44,800 மாணவ மாணவியர்கள் பயன்பெற்றிட பள்ளிகளிலுள்ள வகுப்புகளை இணைத்து 24 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்து பயிலும் திட்டம் 19.02.2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வி வசதி அளிப்பதற்காக ரூ.16.30 இலட்சத்தில் மாநில ஆதார வள மையம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் 1,234 சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களும் பயனடைந்துள்ளனர். 2013–2014ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவினத்தில் மாநில ஆதார வள மையத்திற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசுப் பள்ளிகளில் 100 சதவீதம் கழிப்பறைவசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி துறை ஆகியவற்றின் மூலம் கழிப்பறைகளின் பராமரிப்பிற்காக போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- புவியியல் தகவல் முறைமையைப் பயன்படுத்தி பள்ளிகள் தேவைப்படும் என கண்டறியப்பட்ட குடியிருப்புகளில் 221 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

- 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டன. 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

- ஆள்மாறாட்டத்தை தவிர்க்கும் பொருட்டு முதன்முறையாக பொதுத் தேர்வுத் தொடர்பான ஆவணங்களான பெயர்ப் பட்டியல், நுழைவுச் சீட்டு, வருகைச் சான்றிதழ் மற்றும் முகப்புத்தாள் (Top sheet) போன்றவை தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடியதாகத் தயாரிக்கப்படுகிறது.

- விடைத்தாள்களில் மாற்றெண்ணிடும் முறைக்குப் பதிலாக பட்டக் குறியீடு (Bar Code) முறை அறிமுகப்படுத்தப்பட்டு 2013ஆம் ஆண்டு முதல்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.





- மாணவர்கள் நலன் கருதி மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுக்குப் புகைப்படம் இருபரிமாணப்பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசியக் குறியீடுகளுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் போலி மதிப்பெண் சான்றிதழ்கள் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளன.

- சிறப்புத் துணைத் தேர்வுக்கு மூன்று பாடங்கள் மட்டுமே எழுத அனுமதிக்கப்பட்ட நிலையினை மாற்றி மார்ச் / ஏப்ரல் பருவத் தேர்வுகளில் தோல்வியுற்ற அனைத்துப் பாடங்களையும் ஜூன் / ஜூலை பருவ சிறப்புத் துணைத் தேர்வு எழுதுவதற்கு 2012ஆம் ஆண்டுமுதல் அனுமதி.

- மேனிலைத் தேர்வுகளுக்கு 40 பக்கங்களும் இடைநிலைத் தேர்வுகளுக்கு 32 பக்கங்களும் கொண்ட விடைப்புத்தகங்கள் அறிமுகம். மேலும், ரூ.1.48 கோடி செலவில் விடைப் புத்தகங்களுடன் மாணவர்களின் விவரங்கள் அடங்கிய முகப்புச் சீட்டுகள் தைக்கப்பட்டன.

- வினாத்தாள் / விடைத்தாள்கள் காணாமல் போய்விடுவதும் சிதைவுறுவதுமான நிகழ்வுகளை தடுப்பதற்காக மார்ச், 2014 முதல் வினாத்தாள் / விடைத்தாள்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கும் வாகன வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தேசியக் கல்வித்திட்டமிடல் மேலாண்மைப் பல்கலைக்கழகம் (NUEPA) புதுடில்லி வெளியிட்டுள்ள 2012–2013க்கான பள்ளி விவரங்களின்படி, தமிழகம் கல்வி முன்னேற்றக் குறியீட்டில் தேசிய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. சிறிய யூனியன் பிரதேசங்களான இலட்சத்தீவுகள், புதுச்சேரி மட்டுமே தமிழகத்தைவிட முன்னிலையில் உள்ளன. பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்களுக்குள் தமிழகம் முதலிடத்தை வகிக்கிறது என்பது பெருமைக்குரியதாகும்.

- மாணவர்களின் கற்றல் அடைவு நிலை குறித்து மேற்கொண்ட ஆய்வில், மொழிப் பாடம் மற்றும் கணிதம் பாடத்திட்டத்தில் சராசரி அடைவு நிலையை விட அதிகம் பெற்று தமிழ்நாடு முதன்மையான இடத்தில் உள்ளது.

- குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதற்கான விதிகளை முதன் முதலாக அரசிதழில் வெளியிட்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

- தமிழகத்தில் எழுத்தறிவு பெறாத வயது வந்தோருக்கு முதன்முறையாகக் கணினி வழியாக கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு 40 மையங்கள் “மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்” ஆகத் தரம் உயர்த்தப்பட்டது. இதன்மூலம் 21.36 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

- ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மற்றும் திருச்சி ஆசிரியர் இல்லங்களைப் போன்று கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ரூ.9 கோடி செலவில் புதியதாக இரண்டு ஆசிரியர் இல்லங்கள் கட்ட ஆணை. தென் மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த இல்லம் பயனுள்ளதாக அமையும்.

- சென்னை சைதாப்பேட்டையில் தற்போது செயல்பட்டு வரும் 20 ஆண்டுகள் பழமையான ஆசிரியர் இல்லம் நவீன முறையில் புதுப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. சென்னைக்கு வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ.3 கோடியில் கூடுதலாகப் புதிய கட்டடம்.

- மாவட்ட நூலக அலுவலகங்களில் பணியாற்றும் 32 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் தங்களது பணியைச் செம்மையாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் செய்வதற்கு ஏதுவாக ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

- மாற்றுத்திறனுடைய குழந்தைகளின் வாசிப்புத் திறனை அதிகரிப்பதற்காக கோயம்புத்தூர் மாவட்ட நூலகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு வசதிகளுடன் கூடிய தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

- ஆசிரியர்களுக்குச் சேரவேண்டிய பண, பணி மற்றும் இதரப் பலன்களை உரிய நேரத்தில் பெறுவதில் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க அனைத்துக் கல்வி அலுவலகங்களிலும் சிறப்பு ஆசிரியர் குறைதீர்க்கும் முகாம் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

- மாணவ / மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாகச் சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிடும் பொருட்டு அன்னையர் குழு அமைக்கப்பட்டது.

- விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியினை தலைமை இடமாகக் கொண்டு புதிதாகக் கல்வி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

- தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கென ஆங்கில மொழி உச்சரிப்புக் கட்டகம் (Module) முதற்கட்டமாக 1,600 பள்ளிகளில் ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2012–2013இல் 1 முதல் 8ஆம் வகுப்புகளுக்கு முப்பருவக் கல்வி முறை மற்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2013–2014இல் 9ஆம் வகுப்புக்கும் நீட்டிக்கப்பட்டது. முப்பருவ பாடத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்று முதல் நான்கு வகுப்புகளுக்கு எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்களின் சிந்தனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டும் வகையில் படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- ரூ.128 இலட்சம் செலவில் 64 பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- 7,360 பள்ளிகளில் 20,805 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- தொழில்நுட்ப வளர்ச்சி, மாணவர் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு கற்பித்தல் கற்றல் முறையை இயங்குரு படக் குறுந்தகடுகள் மூலம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் 2011ஆம் ஆண்டில் 85.30 சதவிகிதமாக இருந்த பத்தாம் வகுப்பு தேர்ச்சி வீதம் 2014ஆம் ஆண்டில் 90.70 சதவிகிதமாகவும், 2015ஆம் ஆண்டில் 92.90 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. அவ்வாறே 2011ஆம் ஆண்டில் 85.90 சதவிகிதமாக இருந்த பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி வீதம் 2015ஆம் ஆண்டில் 90.60 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.



தமிழக வரலாற்றில் முதல் முறையாக 2013–2014ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் பயின்ற 6 மாணவர்கள் முதல் மூன்று இடங்களை பெற்றனர். தொடர்ந்து இரண்டாவது முறையாக 2014–2015ஆம் ஆண்டிலும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் பயின்ற 19 மாணவர்கள் முதல் மூன்று இடங்களை பெற்றனர்.

- 2014–2015ஆம் கல்வி ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியரிடையே அழகாக எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 1ஆம் வகுப்பு முதல் 7ஆம் வகுப்பு வரை பயிலும் 45.76 இலட்சம் மாணவர்களுக்கு முதன் முறையாக கையெழுத்து பயிற்சி ஏடுகளும், 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் 63.18 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கலைத் திறன் மற்றும் கற்பனை வளத்தை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் பயிற்சி ஏடுகளும், 9 மற்றும் 10ஆம் வகுப்பில் பயிலும் 10 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் பாடங்களுக்கான செயல்முறைப் பயிற்சி ஏடுகளும் ரூ.5.10 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- சாதி மத வேறுபாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்கிட பள்ளிக் கல்வித் துறை மற்றும் காவல்துறையின் மூலம் சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில் 2014–2015ஆம் கல்வி ஆண்டில் ரூ.9.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2014–2015ஆம் கல்வி ஆண்டு முதல் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.3 கோடி செலவில் முதன்முறையாக பள்ளி நாட்காட்டி (diary with calendar) வழங்கப்பட்டுள்ளது.

- சிறப்புக் கவனம் தேவைப்படும் 1,26,641 குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உள்ளடக்கிய கல்வியின் தொடர்ச்சியாக, ரூ.31.66 கோடி செலவில் சிறப்புப் பயிற்சிகள், உதவும் உபகரணங்கள், அதாவது Assistive Devices ஆகியவை வழங்கப்பட்டன.

- பழங்குடியினர் அதிகம் வசிக்கும் 5 மாவட்டங்களில் உள்ள 482 அரசுப் பள்ளிகளில் பயிலும் 4,782 பெண் குழந்தைகளுக்குக் கராத்தே பயிற்சி ரூ.14 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது.

- கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் உள்ள 9ஆம் வகுப்புப் பயிலும் நலிவுற்ற வகுப்பைச் சார்ந்த 32,563 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.63 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- 32 மாவட்டங்களிலும் அறிவியல் கண்காட்சி ரூ.32 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

- மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய இடைநிலைக் கல்வி வழங்க, ரூ.5.35 கோடி செலவில் 202 சிறப்பு ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- 1,140 உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, ரூ.55 இலட்சம் செலவில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

- பள்ளிக் கல்வித்துறைக்கென இரண்டு சட்ட அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- தருமபுரி, திருவள்ளூர், வேலூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் ரூ.70 இலட்சம் செலவில் “நடமாடும் நூலகங்கள்” அமைக்கப்பட்டன.

- அரசின் நலத்திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள பொது நூலகத் தகவல் மேசை ரூ.26 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

- வீட்டிற்கு ஒரு நூலகம் – தமிழக அரசால் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவச மடிக்கணினிகளில், கன்னிமாரா பொது நூலகத்தில் மின்மயமாக்கப்பட்டுள்ள, காப்புரிமை கோர இயலாத, நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், அரசு பதிப்பு நூல்கள் மற்றும் அரிய நூல்கள் ரூ.6 இலட்சம் செலவில் பதிவேற்றம் செய்யப்படுகிறன.

- நூலகங்களில் இருப்பு நீக்கம் செய்யப்படும் பழமையான, அரிய நூல்களின் ஒரு பிரதியானது, நூல் ஆராய்ச்சியாளர் மற்றும் எதிர்காலச் சந்ததியருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வகையில் ரூ.1.50 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் கட்டப்படும் “நூல்கள் பாதுகாப்பு மையத்தில்” பாதுகாக்கப்படுகிறது.

- தகவல் தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு முன்னோடியாக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1329 தொடக்கப்பள்ளிகளில் ரூ, 10.03 கோடி செலவில் கனிணிகள் வழங்கப்பட்டன.

- “வாசகர் வட்டம்” அமைப்புகளில், மாநில அளவில் நூலக இயக்கம் வளர முனைப்புடன் சிறப்பாகப் பங்காற்றும் 3 வாசகர் வட்டத் தலைவர்களுக்கு ரூ.15,000/– செலவில் “நூலக ஆர்வலர்” விருது வழங்கப்பட்டது.

- மாவட்ட மைய நூலகக் குழந்தைகள் பிரிவில், புதிய உறுப்பினராகச் சேரும் முதல் 100 குழந்தைகளுக்கு, வரை உபகரணங்கள், வண்ணப் பென்சில்கள், களிமண் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய “விலையில்லா கற்றல் உபகரணப் பெட்டிகள்” ரூ.6.40 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

- தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள தொன்மை வாய்ந்த அரிய நூல்களை ரூ.7.50 இலட்சம் செலவில் உருவப்படம் செய்யப்பட்டு, இலக்க முறையில் (Digital) பாதுகாக்கப்படுகிறது.

- மார்ச்/ஏப்ரல் 2015 மேல்நிலைத் தேர்வு மற்றும் இடைநிலைப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதும், தேர்வர்கள் தங்களின் பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பயன்படுத்தி தேர்வுத்துறையின் இணையதளமான http://www.dge.tn.nic.in மூலம் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை (Provisional Certificate) பதிவிறக்கம் செய்து கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் உரிய நேரத்தில் உயர்கல்விக்கு விண்ணப்பிக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

- அனைத்து அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ரூ.1.25 கோடி செலவில் பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு பயிற்சி.

- பள்ளிகளில் இருந்து இடைநின்ற மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 20.6 கோடி ரூபாய் செலவில் அவர்களது தாய்மொழியில் கல்வி பயில சிறப்புப் பயிற்சி. இத்திட்டத்தினால் 40,000 குழந்தைகள் பயன்பெறுவர்.

- அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக தங்களின் திறமையினை வெளிப்படுத்துவதற்கு, 2015–2016ஆம் கல்வியாண்டில் இதுவரை கணினிகள் வழங்கப்படாத 657 நடுநிலைப் பள்ளிகளில், ரூ.8.77 கோடி செலவில் மூன்று கணினிகள் கொண்ட கணினி வழி கற்றல் மையங்கள்.

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 56 இலட்சம் மாணவர்களின் பாடம் மற்றும் பாட இணைச் செயல்பாடுகளை அவர்களது திறன்களை மதிப்பிட்டு பதிவு செய்ய ரூ.8.48 கோடி செலவில் மாணவர் திரள் பதிவேடு அறிமுகம்.

- மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் உள்ளடக்கிய கல்வியின் கீழ் ரூ.8.47 கோடி செலவில், 1,32,353 குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள், போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் படி மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி.

- மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தினை தூண்டும் விதமாகவும் அவர்களின் வாசித்தல் திறனையும் பொது அறிவுத்திறனையும் மேம்படுத்தும் வகையில் 37,977 பள்ளிகளுக்கு கண்கவர் படங்களுடன் புத்தகங்கள் ரூ.3.79 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

- அன்றாட நிகழ்வுகளில் அறிவியல் தேடலை இணைத்து, செய்து கற்றல் திறன்களை மேம்படுத்த 3,500 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணப் பெட்டிகள் ரூ.3.02 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

- 3, 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விலையில்லாப் பாடப் புத்தகங்களுடன் அடிப்படைக் கணித செயல்பாட்டுத் திறன்களை வளர்ப்பதற்கு ஏதுவாக, கூடுதலாக வாய்ப்பாடு புத்தகங்கள் ரூ.53 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

- மாணவர்கள் தரமான கல்வி பெற அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உயர்/மேல் நிலை பள்ளிகளில் பணியாற்றும் ஆங்கிலம், அறிவியல், கணிதம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் 175 ஆசிரியர்களுக்கும்



தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில் தலைமை ஆசிரியர்களுக்கும் ரூ.16.29 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி.

- அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தேசிய அளவிலான திறனறி மற்றும் போட்டித் தேர்வுகளில் (National Talent Search Exam and National Means-cum-Merit Scholarship. Joint Entrance Examination and All India Pre-Medical / Dental entrance Test)) பங்கேற்று வெற்றி பெறுவதற்காக ரூ.80 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி.

- கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வண்ணம், தேர்ந்தெடுக்கப்பட்ட 9 மாவட்டங்களில் (கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம்) கல்வி சார்ந்த கலை விழாக்கள், திருவிழாக்கள் மற்றும் போட்டிகள் ரூ.10 இலட்சம் செலவில் நடத்தப்படுகிறது.

- மாவட்ட நூலக அலுவலர் அலுவலகங்கள் மற்றும் பொது நூலக இயக்கத்தில் பணியாற்றி வரும் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.18 இலட்சம் செலவில் மடிக்கணினி.

- கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் ரூ.15 இலட்சம் செலவில் “போட்டித் தேர்வு பயிற்சி மையம்”.

- அரசு மற்றும் அரசு சார்ந்த பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க நூலக உறுப்பினர்களுக்கு கன்னிமாரா பொது நூலகம் மற்றும் 32 மாவட்ட மைய நூலகங்களில் இலவச இணையதள வசதி.

- நூலகங்களில் தங்களது சொந்த நூல்களை, நூலகத்திற்குக் கொண்டுவந்து படிப்பதற்கு வசதியாக தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் செயல்படும் மாவட்ட மைய நூலகங்களில் “சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு”.

- மேல்நிலை / இடைநிலைத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு ஒவ்வொரு பருவ தேர்வின் போதும் தனித்தனி பதிவெண் வழங்கும் முறை தற்போது நடைறையில் உள்ளது. ஒரு தேர்வருக்கு ஒரே பதிவெண் மட்டுமே வழங்கி, அப்பதிவெண்ணைக் கொண்டே பல பருவங்களிலும் தேர்வெழுதும் புதிய நடைமுறை அறிமுகம்.

- பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை தேர்வினை பல பருவங்களில் எழுதி தேர்ச்சி பெறும் தேர்வர்களுக்கு அவர்கள் தேர்ச்சி அடைந்தபின் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழினை (Consolidated Mark certificate) வழங்கும் திட்டம் நடப்புக் கல்வியாண்டில் அறிமுகம்.

- மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 8ஆம் வகுப்பில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு ரூ.8.80 இலட்சம் செலவில் பிரெய்லி பாடப்புத்தகங்களும் பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கு உருப்பெருக்கப்பட்ட அச்சு பாடப் புத்தகங்களும் வழங்கப்படும்.

- சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில் கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள் மற்றும் சிறப்பு குவிமைய மாவட்டங்களில் தனி விழிப்புணர்வும், பாலின கூர் உணர்வு விழிப்புணர்வும் ஏற்படுத்த ரூ.9 கோடி செலவில் நடவடிக்கைகள்.

- அரசு தகவல் தொகுப்பு மையத்தால் பராமரிக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் மாநிலக் கணக்காயர் அவர்களின் பராமரிப்பில் கொண்டு வரப்பட்டது.

- மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும் பொருட்டு சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கிடங்குகள் ரூ.30 கோடி செலவில் நவீனப்படுத்தி கணினி மயமாக்கம்.

❖ ❖ ❖

# குழந்தை நலம் - மகளிர் நலம் குறைவின்றிக் காத்திடும் சமூகநலம்



- ரூ.1,675.40 கோடி செலவில் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த 4,64,541 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.25,000 வீதம் நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 1,858.16 கிலோ தங்கம். மேலும், ரூ.144.69 கோடி செலவில் பழைய திட்டத்தின் கீழ் 61,766 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி வழங்கப்பட்டுள்ளது.
- பட்டம் / பட்டயம் பெற்ற 2,46,336 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1,231.68 கோடி திருமண நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 985.34 கிலோ தங்கம்.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் (ம) ஈ.வெ.ரா. மணியம்மையார் ஏழை விதவை மகள் நினைவு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000 லிருந்து ரூ.72,000 ஆக உயர்த்தப்பட்டு 2,16,773 குடும்பங்கள் பயன்.
- ரூ.23.85 கோடி செலவில், பணிபுரியும் மகளிருக்காக 13 மாவட்டங்களில் 20 தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



- ரூ.400 கோடி செலவில் நான்கு இணை சீருடைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 47.07 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- 16,621 காலிப் பணியிடங்களில் 14,828 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 1,793 பணியிடங்கள் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 2015–2016ஆம் நிதியாண்டிற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் செயல்படுத்துவதற்காக ரூ.1,470.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 55.16 இலட்சம் குழந்தைகள் பயன்.
- ரூ.10.62 கோடி செலவில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் 17.03 இலட்சம் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் குவளை (Tumbler) வழங்கப்பட்டுள்ளன.
- சத்துணவு மையங்களை எரிவாயு இணைப்புடன் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் ஆண்டு முதல் 2015–2016ஆம் ஆண்டு வரை 39014 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்குவதற்காக ரூ.8713.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.5 கோடி செலவில் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 63,426 குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் பொருட்டு சிறு தானிய உணவு வகைகள்.
- ரூ.5.43 கோடி செலவில் புதிய வகை கலவை சாதங்களை தயாரித்திட ஏதுவாக சத்துணவு மையங்களுக்கு 42,695 மிக்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 9,094 குழந்தை நல மையங்களுக்கும் ரூ.1.13 கோடி செலவில் மிக்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.62.14 இலட்சம் செலவில் புதிய வகை கலவை சாதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 32 முன்னோடி வட்டாரங்களில் உள்ள 3,219 சத்துணவு மையங்களுக்கும், 3,963 அங்கன்வாடி மையங்களுக்கும் கரண்டி மற்றும் கடாய் வழங்கப்பட்டுள்ளன.
- 15.08.2014 முதல் புதிய வகை கலவை சாதங்கள் வழங்கும் திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக உணவூட்டுச் செலவினமாக ரூ.103.28 கோடி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 68.51 இலட்சம் பள்ளி குழந்தைகள் மற்றும் அங்கன்வாடி குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.
- 14,379 சத்துணவு மையங்களில் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டுவதற்காக ரூ.359.70 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 4,590 கட்டுமானப் பணிகள் இன்றளவில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- "முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ் ரூ.472.41 கோடி செலவில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் 111 பெண் குழந்தைகள் உள்பட 2,44,813 பெண் குழந்தைகள் பயன்.
- தொட்டில் குழந்தைத் திட்டம் ரூ.49.07 இலட்சம் செலவில் திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும்

அரியலூர் மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு, இதுவரை 154 குழந்தைகள் மீட்பு.

- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் 1992–1995ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 196 பெண் குழந்தைகளுக்கு ரூ.60.50 இலட்சம் திருமண உதவித் தொகை மற்றும் ரூ.20.94 இலட்சம் செலவில் 784 கிராம் (4 கிராம் வீதம்) தங்கம்.

- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதிர்வுத் தொகை பெற வயதுவரம்பு 20 லிருந்து 18ஆக தளர்த்தப்பட்டு, ரூ.17.23 கோடி செலவில் 20,952 பயனாளிகள் பயன்.

- ரூ.85 இலட்சம் செலவில் குழந்தை திருமணத் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார விளம்பரப் படங்கள் திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு. குழந்தைத் திருமணம் தடைச்சட்டத்தின் கீழ் 3,741 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- 7அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் தங்கி 12ஆம் வகுப்பு படித்து முடித்த மாணவியர் 680 பேருக்கு ரூ.268.59 இலட்சம் உயர் கல்வி நிதி உதவி.

- ரூ.49 இலட்சம் செலவில் 5 குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் 2 அரசு சேவை இல்லங்கள் ஆகியவற்றில் 824 குழந்தைகள் பயன்பெறும் வகையில் சமையலறைகள் நவீன மயமாக்கப்பட்டுள்ளது.

- ரூ.123.93 கோடி மதிப்பீட்டில் 15,399 அங்கன்வாடி மையங்களில் பழுதுகள் நீக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ரூ.29.52 கோடி மதிப்பீட்டில் 16,402 அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



- ரூ.601.91 கோடி செலவில் 15,313 அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, 4,462 அங்கன்வாடி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- ரூ.25.30 கோடி செலவில் 41,830 அங்கன்வாடி மையங்களுக்குச் சமையல் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அடுகலன் வழங்கி நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

- ரூ.26.40 இலட்சம் செலவில் 31,056 அங்கன்வாடி மையங்களுக்கு தானியங்கள் சேமிப்புக் கலன்களும், ரூ.1.09 கோடி செலவில் 6,800 அங்கன்வாடி மையங்களுக்கு 13,600 உணவுப் பொருள் கொள்கலன்களும் வழங்கப்பட்டுள்ளன.



- ரூ.40 இலட்சம் செலவில், 2,000 அங்கன்வாடி மையங்களுக்கு, ஒரு மையத்திற்கு ரூ.2,000 வீதம் செலவிடப்பட்டு ஒரே மாதிரியான வண்ணம் தீட்டிப் புதுப்பொலிவு.

- சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில்பயிலும் 2 முதல் 5 வயது வரையுள்ள 9,34,696 குழந்தைகளுக்கு ரூ.22.79 கோடி செலவில் வண்ணச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் (2015–2016) 3,66,422 குழந்தைகளுக்கு வண்ண சீருடைகள் வழங்குவதற்கு ரூ.9.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள 28.41 இலட்சம் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

- ரூ.12.34 கோடி செலவில் 20,558 அங்கன்வாடி மையங்களில் மின்விசிறி மற்றும் மின்விளக்குகள் பொருத்தி மின் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- 17,190 காலிப் பணியிடங்கள் நிரப்பிட ஆணை வழங்கப்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மட்டும் 841 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள மாவட்டங்களில் பணிநியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதனால், 2–5 வயதுள்ள குழந்தைகளுக்கு சனிக்கிழமை அன்றே ஞாயிற்றுக்கிழமைக்கென சமைக்கத் தகுந்த சத்துணவு வழங்கப்படுகிறது.

- ரூ.7.12 கோடி செலவில் குழந்தைகள் (ம) பச்சிளம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி (ம) பாலூட்டும் தாய்மார்களுக்காக 82,760 எடைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டு 36,609 ஓய்வுப்பெற்ற அங்கன்வாடி பணியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

- ரூ.2.72 கோடி செலவில் 54,439 அங்கன்வாடி மையங்களில் உள்ள 17.31 இலட்சம் குழந்தைகளின் தன்சுத்தம் பேண சுகாதாரப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.50 இலட்சம் செலவில், அங்கன்வாடி குழந்தைகளுக்கான 2,000 எடை பார்க்கும் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.1.20 கோடி செலவில் 10,000 அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்விக்கென நீதிக்கதைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.15.59 கோடி செலவில் முன்பருவக் கல்வி உபகரணங்கள் 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.519.69 இலட்சம் செலவில் 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.1,475 கோடி செலவில் 24.48 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகள், 4.02 இலட்சம் வளரிளம் பெண்கள், 6.70 இலட்சம் கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனுறும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

- 5,565 அங்கன்வாடி மையங்களை எழுச்சிமிகு முன்பருவக் கல்வி மையங்களாக நிலை உயர்த்த ரூ.55.65 கோடி ஒப்பளிப்பு.

- 211 அங்கன்வாடி மையங்களை அங்கன்வாடி – மற்றும் – மழலையர் பராமரிப்பகங்களாக தரம் உயர்த்த ரூ.2.31 கோடி ஒப்பளிப்பு.

- தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை மூலம் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய 5 மாவட்டங்களில், ஒரு முன்னோடித் திட்டமாக, புலம் பெயர்ந்து வாழும் கூலித் தொழிலாளர் குடும்பங்களுக்கென நடமாடும் அங்கன்வாடி சேவைகள் வழங்குவதற்கு ரூ.40.85 இலட்சம் ஒப்பளிப்பு.

- 54,439 அங்கன்வாடி மையங்களிலும் முதலுதவிப் பெட்டிகள் வாயிலாக முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கு ரூ.2.50 கோடி ஒப்பளிப்பு.

- ரூ.2.20 கோடி மதிப்பில், 25 விழுக்காடு மானியமாக ரூ.55 இலட்சமும், வங்கிக் கடனாக ரூ.1.65 கோடியும் வழங்கி மூன்றாம் பாலினத்தவர்களின் 51 சுய உதவிக்

குழுக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார நிலையினையும் மேம்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ரூ.2.60 கோடி செலவில் 26 அரசுக் குழந்தைகள் இல்லங்களில் வசதிகள் அதிகரிக்கப்பட்டு 2,450 குழந்தைகள் பயன்.

- ரூ.6.50 இலட்சம் செலவில் உயிர் காக்கும் மருந்துகள், அசைவ உணவுப் பொருள்கள், முட்டை, பால் மற்றும் காய்கறிகள் வைத்துப் பாதுகாக்க குளிர் பதனப் பெட்டிகள் வாங்க ரூ.6.50 இலட்சம் ஒப்பளிப்பு. 2,450 குழந்தைகள் பயன்.

- ரூ.2.10 கோடி செலவில் செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் நான்கு குழந்தைகள் இல்லங்களில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, 800 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

- ரூ.43.11 இலட்சம் செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்வேறு வகையான உள்ளுறையும் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள 1,200 குழந்தைகள் / பெண்களுக்கு நவீன தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

- ரூ.35.18 இலட்சம் செலவில் சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டு அரசு சிறப்பு இல்லத்தில் கண்காணிப்புக் கேமிராக்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன.

- ரூ.30.80 இலட்சம் செலவில் செங்கல்பட்டு சிறுவருக்கான அரசினர் சிறப்பு இல்லத்தில் உள்ளுறையும் இளம்சிறார்களுக்காக புதிய துயிலிடம் கட்டப்பட்டு 100 சிறுவர்கள் பயன்.

- ரூ.17.50 இலட்சம் செலவில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களான இராயபுரம், தஞ்சாவூர், பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், இராணிப்பேட்டை ஆகிய 5 இடங்களில் உள்ள குழந்தைகள் இல்லங்களுக்கு துணி துவைக்கும் சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டு 1,050 குழந்தைகள் பயன்.

- ரூ.6.27 இலட்சம் செலவில் வடசென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் திறந்தவெளி தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது.

- ரூ.27 இலட்சம் செலவில் 997 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 9 வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு வரவேற்பு பைகள்.

- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,176 மூன்றாம் பாலினத்தவர்கள் பயனடைய ரூ.1.98 கோடி நிதி ஒப்பளிப்பு.

- சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லம், செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்திற்கு மின்தடையின்போது தடையற்ற மின்சாரம் அளிக்க ரூ.26.46 இலட்சம் மதிப்பீட்டில் டீசல் ஜெனரேட்டர்கள் வழங்கப்பட்டு 405 குழந்தைகள் பயன்.

- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தப்பட்டு, ரூ.15,414.51 கோடி செலவில் 37.23 இலட்சம் பயனாளிகள் பயன்.

- பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 3 கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. 23.42 இலட்சம் பயனாளிகள் பயன்.

- ரூ.4.22 கோடி செலவில், சமூகப் பாதுகாப்பு மாத ஓய்வூதியம் ரூ.1,000/– முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 4,464 பயனாளிகள் பயன்.

- இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்கீழ் வயது வரம்பு 65லிருந்து 60 ஆகக் குறைப்பு. 14,36,444 பயனாளிகள் பயன்.

- ரூ.54 கோடி ரூபாய் செலவில், 54,000 நவீனரக தையல் இயந்திரங்களை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கடன் மூலமாக மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வாங்கி வழங்கவும், 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியாக ரூ.5.40 கோடி அரசு மானியமாக வழங்கவும் ஆணை.

- ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெற வயது வரம்பு 45 லிருந்து 18 ஆக குறைப்பு. 2,07,855 பயனாளிகள் பயன்.

❖ ❖ ❖

# இல்லத்தரசியர் இதயங்களில் இனிமை ஊட்டும்! மாணவ, மாணவியர்க்கு தன்னம்பிக்கை கூட்டும்!



- அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்திட முதன்முறையாக தனித்துறை உருவாக்கம்.

**விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல்**

- மகளிரின் பணிச்சுமையைக் குறைக்க அரிசி பெறும் 1.85 கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில், விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் படிப்படியாக வழங்க வகை செய்யப்பட்டு, 31.12.2015 வரை 156.9 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் பெண் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென 2011 முதல் 2016 வரை ரூ.8,870 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கல்**

- மாணவ, மாணவியர்களுக்கு அவர்களின் தொழில்நுட்ப இடைவெளியை குறைப்பதற்காக 31.14 இலட்சம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென 2011 முதல் 2016 வரை ரூ.6,465.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# உலகெங்கும் தமிழ் முழக்கம் ஒளிக்கச் செய்யும் உன்னத சாதனைகள்




- ரூ.3.20 கோடி செலவில் உலகச் செவ்வியல் மொழிகளான சீனம் மற்றும் அரபு மொழிகளில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்களை மொழிபெயர்ப்பு.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளை கொரிய மொழியில் வெளியிட ரூ.36 இலட்சம் தமிழ் மொழியின் அற நெறிக் கருவூலமான ஆத்திசூடியை சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு.
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.1,000/– 01.12.2011 முதல் ரூ.2,000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும், 22.12.2014 முதல் மருத்துவப் படியும் ரூ.100/–ஆக வழங்கப்படுகிறது. விண்ணப்பிக்க ஆண்டு வருவாய் ரூ.12,000/– என்பதை ரூ.24,000/– எனவும் அதன்பின் ரூ.36,000/– எனவும் உயர்த்தப்பெற்றது. கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 30லிருந்து 50ஆக உயர்வு.
- ரூ.19.75 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் அலுவலகங்களுக்கும் தளவாடங்கள் வழங்கித் துறைப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளின் 1,330 குறட்பாக்களையும் ஒப்புவிக்கும் மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் குறள் பரிசு பெறுவோர் 36 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு குறள் பரிசுத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 36 பேர் என்பதை 50 பேர் ஆக உயர்வு.
- பிற மொழி 1,000 சொற்களுக்கு புதிய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



- உலகளவில் ஒரே வகை தமிழ்ச்சொல்லை பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் சொல்வங்கியின் பணிகளை உலகமயமாக்கி ‘சொல் புதிது’ என்ற வலைசார் சொல்வங்கி மையம் அமைத்திட தொடர் செலவினமாக ரூ.22 இலட்சம், தொடராச் செலவினமாக ரூ.3 இலட்சம் என மொத்தம் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாள் என அறிவிக்கப்பட்டு 2012ஆம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்டுவந்த முதல் பரிசுத் தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.10,000/– ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.500/– லிருந்து ரூ.7,000/– ஆகவும், மாநில அளவிலான போட்டிகளுக்கு முதல் பரிசுத் தொகை ரூ.5,000/– லிருந்து ரூ.15,000/–ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.12,000/– ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகை ரூ.2,000/– லிருந்து ரூ.10,000/–ஆகவும் 2011–2012ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளன.
- சிறந்த நூல் வெளியிடும் நூலாசிரியருக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.25,000/– லிருந்து ரூ.50,000/–ஆகவும் நிதியுதவி பெற நூலாசிரியர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ.25,000/–த்திலிருந்து ரூ.50,000/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன.
- சிறந்த நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.18.04 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.
- சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் என்ற இரு புதிய வகைப்பாடுகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு மொத்தம் 33 வகைப்பாடுகளாக்கப்பட்டன.
- பெண் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு 2016 முதல் ஆண்டுதோறும் “அம்மா இலக்கிய விருது” என்ற புதிய விருதும், ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும், தகுதியுரையும் வழங்கப்படும்.
- தரமான பிறமொழி படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு 2016 முதல் ஆண்டுதோறும் சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதும், ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் தகுதியுரையும் வழங்கப்படும்.
- பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125ஆவது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு, இரண்டு நாள் கவியரங்கம் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். மேலும், 2016 முதல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள், ‘தமிழ்க் கவிஞர் நாள்’ என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.
- இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு 2016 முதல் ஆண்டுதோறும், சித்திரை தமிழ்ப் புத்தாண்டில் ‘உலகத் தமிழ்ச் சங்க விருதும்’ விருதாளருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், தகுதியுரையும் வழங்கப்படும்.
- தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர்களுக்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அமைப்புகள் / சங்கங்களை ஊக்கப்படுத்திப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை கொண்ட ‘தமிழ்த்தாய் விருது’ 2012ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.
- தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் கபிலர், உ.வே.சா., கம்பர், சொல்லின்செல்வர், ஜி.யு. போப், உமறுபுலவர், இளங்கோவடிகள் ஆகியோரின் பெயர்களில் விருதுகள் தோற்றுவிக்கப்பட்டு (விருதுத் தொகை ரூ.1 இலட்சம், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை) வழங்கப்பட்டு வருகிறது.
- கணினித் தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் ‘முதலமைச்சர் கணினித் தமிழ் விருது’ என்ற பெயரில் (விருதுத்தொகை ரூ.1 இலட்சம், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை) வழங்கப்பட்டு வருகிறது.
- 2014ஆம் ஆண்டிற்கான சித்திரை விருதுகள் 12.10.2015ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால்

தமிழ்த்தாய் விருது–நவி மும்பைத் தமிழ்ச் சங்கம், கபிலர் விருது–முனைவர் ஆ. இலலிதா சுந்தரம், உ.வே.சா. விருது–திரு. ம. அழகுராஜ் (எ) மருது அழகுராஜ், கம்பர் விருது–முனைவர் செ.வை. சண்முகம், சொல்லின் செல்வர் விருது–மருத்துவர் சுதா சேசையன், ஜி.யு. போப் விருது–திரு. ஜெ. நாராயணசாமி, உமறுப்புலவர் விருது–முனைவர் சேமுமு. முகமதலி, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது–முனைவர் ந.தெய்வசுந்தரம் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

- 2015ஆம் ஆண்டிற்கான சித்திரை விருதுகள் 12.10.2015ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தமிழ்த்தாய் விருது–திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், கபிலர் விருது–கவிஞர் பிறைசூடன், உ.வே.சா. விருது–முனைவர் குடவாயில் மு. பாலசுப்பிரமணியன், கம்பர் விருது–திரு. கோ. செல்வம், சொல்லின் செல்வர் விருது–முனைவர் சோ. சத்தியசீலன், ஜி.யு. போப் விருது–மதுரை இளங்கவின், உமறுப்புலவர் விருது–திரு. மு.சாயபு மரைக்காயர், இளங்கோவடிகள் விருது–முனைவர் திருமதி ஜி.டி.நிர்மலா மோகன், முதலமைச்சர் கணினித் தமிழ் விருது–திரு. து.குமரேசன் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2016ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் திருவள்ளுவர் விருது முனைவர் வி.ஜி. சந்தோசம் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பொன்னடியான் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது முனைவர் வீ. ரேணுகா தேவி அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது தினமணி நாளிதழ் ஆசிரியர் கி. வைத்தியநாதன் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது திரு. இரா.கோ. இராசாராம் அவர்களுக்கும் பேறிஞர் அண்ணா விருது முனைவர் பர்வத ரெஜினா பாப்பா அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது மருத்துவர் இரா. வேங்கடசாமி அவர்களுக்கும், தந்தை பெரியார் விருது திரு. வீ. ஆர். வேங்கன் அவர்களுக்கும், டாக்டர் அம்பேத்கர் விருது திரு. எ. பொன்னுசாமி அவர்களுக்கும் வழங்கி, விருதாளர்களுக்கு விருது மற்றும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை வழங்கி தங்கப்பதக்கம் அணிவித்து, அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 46 பேருக்கு வாழ்நாள் நிதியுதவி ரூ.2,000/–க்கான அரசாணை வழங்கப்பட்டது.

- தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவரும் ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் “தமிழ்ச்செம்மல் விருது” உருவாக்கப்பட்டுள்ளது. “தமிழ்ச்செம்மல் விருது” பெறுபவருக்கு ரூ.25,000 பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கப்படும். இவ்விருது, மாவட்டத்திற்கு ஒருவர் என 32 தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும்.

- ஆண்டுதோறும் 200 இளந்தலைமுறை யினருக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் பயிற்சி மற்றும் பல்வேறு இலக்கியப் பயிற்சிகள் அளித்திடும் வகையில் ‘இளந்தமிழர் இலக்கியப் பட்டறை’ எனும் திட்டம் உருவாக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.20 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

- தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சித் தமிழ் நூலின் அடிப்படையில் ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.30,000/– வீதம் அரசுப் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.9.30 இலட்சம் செலவில் பயிலரங்கம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

- ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்டந்தோறும் நடத்திட தற்போதுள்ள ரூ.5,000/– செலவினத் தொகை ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- அரிய தமிழ் நூல்களை மின்எண்மத்தில் பதிவு செய்து நூலாக வெளியிடும் திட்டத்தின்கீழ், 10 நூல்கள் மின்எண்மப்படுத்தப்பட்டு நூலாக அச்சிடப்பட்டுள்ளன.

- வெளிநாட்டு அறிஞர்களால் எழுதப்பட்ட தமிழ்மொழியின் வரலாறு மற்றும் சிறப்புகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறநெறிக் கருத்துகள் தொகுக்கப்பட்டு ‘அறநெறிக் கருவூலம்’ எனும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.





- தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றும் சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் உள்ள புகழ் வாய்ந்த பொன்மொழிகளை இலக்கியம் வாரியாகத் தொகுத்து பொன்மொழிக் களஞ்சியம் எனும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கணினிவழித் தமிழ் வளர்ச்சித் திட்டத்தில் செயல்பட, தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ஆம் நாளன்று ரூ.5 இலட்சம் செலவில் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

- சென்னை எழும்பூரில் உள்ள ஆல்சு சாலைக்குத் ‘தமிழ்ச் சாலை’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் எட்டு பணியிடங்கள் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்யப்பட்டுள்ளன.

- தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் இருநூற்றாண்டு நிறைவு ஆண்டை அரசு விழாவாகக் கொண்டாடும் வகையில் 07.05.2014 அன்று சென்னையிலும், திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியிலும் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புச் செய்யப்படுகிறது.

- தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக விருது பெற்ற தமிழறிஞர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. ‘

- தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர், எல்லைக் காவலர் மற்றும் மரபுரிமையர்கள் மொத்தம் 51 பேர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்க ஆணை.

- எல்லைக் காவலர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் அவர்தம் மரபுரிமையர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் மருத்துவப்படி ரூ.15 லிருந்து ரூ.100 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- தமிழாய்வுப் பணிகளுக்கென ஆசியவியல் நிறுவனத்திற்கு ரூ.65.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்கு 3 பணியிடங்களுக்கு நிதியுதவியாக ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

- தில்லித் தமிழ் சங்கத்திற்குத் தோரண வாயில் கட்ட நிதியுதவியாக ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவியாக ரூ.6.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- திருவனந்தபுரம், பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளிக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களில் 1,470 நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1981இல் உருவாக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பொலிவூட்டம் பெற்ற மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ரூ.25 கோடி செலவில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு நிருவாகக் கட்டடம், உலகத் தரம் வாய்ந்த நூலகம் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

- பண்டைத் தமிழரின் பெருமைகளையும், சிறப்புகளையும் இன்றைய தலைமுறையினர் கண்டு பெருமை கொள்ளும் வகையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

- அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள், குறிப்பாக மாணவர்கள், தமிழ் கற்பதில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் களைய உலகத் தமிழ் சங்கம் வாயிலாக சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரு நாடுகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் தகவல் மையம் தோற்றுவிக்க ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

- உலகளாவிய தமிழ் அமைப்புகளுக்குத் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகளை எடுத்துச்செல்ல மின்னிதழ் ஒன்றை உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக ஏற்படுத்திட ரூ.5 இலட்சம் தொடர் செலவினமாக வழங்கப்படும்.

- தமிழ் – சீனம், தமிழ் – கொரிய மொழி ஆகிய மொழிகளுக்கிடையேயான வேர்ச்சொல் ஒற்றுமைகள் பற்றிய ஆய்வு நூல் உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக வெளியிடப்பட ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் நான்கு கல்விப்புலங்களிலும் வளர்ந்து வரும் துறைசார் ஆய்வுக்கோட்பாடுகளை இளம் ஆய்வாளர்கள் பயன் கொள்ளும் வகையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் தேசியக் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடத்திடும் வகையில் புலம் ஒன்றுக்கு ரூ.2.50 இலட்சம் வீதம் நான்கு புலங்களுக்கு ரூ.10 இலட்சம் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக வழங்கப்பெறும்.

- மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், சென்னைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய 'உலகத் திருக்குறள் மாநாட்டில்' உலகளாவிய அறிஞர்களும் ஆய்வு வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குத் தொகுப்பு நல்கை, ஓய்வூதிய நல்கை, பிற திட்டங்களுக்கான நல்கை என மொத்தம் ரூ.16.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- அரிய தமிழ் நூல்களை இலக்க முறையில் பதிவு செய்தல் பணிக்காக ரூ.10,00,000/– பெறப்பட்டு ஏறத்தாழ 2,50,000 பக்கங்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு, பழந்தமிழ் மொழி கலைக்களஞ்சியம் தயாரிப்புப் பணிக்கு ரூ.16,00,000/– வழங்கப்பட்டு, நூல் தொகுப்புப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு, 12ஆம் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்ட தமிழ் செம்மொழி நூல்களை தீவிரமாக பதிப்பு செய்யும் திட்டத்திற்கு ரூ.15,00,000/– வழங்கப்பட்டு, செம்பதிப்புப் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு, தமிழ் மொழி பயிற்றுவித்தல்/பயிற்சி தொழில்நுட்ப ஆய்வகம் ரூ.14,00,000/– செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், கையெழுத்துப் பிரதி பாதுகாப்பு மற்றும் ஆதார மையம் ரூ.34,00,000/– செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய தமிழ் நூல்கள் 171 தேடிக் கண்டெடுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா கலைக்களஞ்சியம் (சிறு கதைகள்), The Glory of Tirukkural உள்ளிட்ட 50 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒரு தேசியக் கருத்தரங்கமும், ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டுள்ளது.

- உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் சார்பில் 14 சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்பெற்று வந்த தமிழியல் இதழ் காலாண்டு இதழாக மாற்றப்பட்டு இரு இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் இலக்கியச் சொல்லடைவு தயாரித்தல் திட்டப்பணித் தொடர்பில் 9 வல்லுநர்குழுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று, 80 விழுக்காடு பணிகள் முடிக்கப் பெற்றுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் டான்பாஸ்கோ கல்லூரி – ஏலகிரி, இசுலாமியக் கல்லூரி – வாணியம்பாடி, டோக் பெருமாட்டி கல்லூரி – மதுரை ஆகியவற்றுடன் இணைந்து 3 தேசியக் கருத்தரங்குகள் நடத்தப் பெற்றுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புதுதில்லி, பல்கலைக்கழக மானியக்குழுவால் நடத்தப்பெறும் முனைவர் பட்டம்/ஆய்வாளர்/விரைவுரையாளருக்கான அகில இந்திய தகுதிதேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் மாணவர்களுக்கு கட்டணமின்றி நடத்தப்பெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கான சேர்க்கை நடத்தப்பெற்று 50 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முனைவர் பட்ட வகுப்பில் 28 மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பெற்று ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் திருமந்திரமும், வாழ்வியலும் ஓராண்டு பட்டய வகுப்பு தொடரப்பெற்று 36 மாணவர்கள் இவ்வாண்டில் பயின்று வருகின்றனர்.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறந்த உட்கட்டமைப்புடன் கூடிய திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம், உலகத் தமிழர் பண்பாட்டு மற்றும் வரவேற்பு மையம், சுவடிப் பாதுகாப்பு மையம், தொல்காப்பியர் ஆய்வறிக்கை, மொழிப் பயிற்சிக் கூடம் ஆகியவற்றின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

- உலகத் தமிழ் அறிஞர்களுக்காக தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- 18.05.2015 முதல் 19.05.2015 வரை பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு, சென்னை, 25.05.2015 முதல் 26.05.2015 வரை அயலகத் தமிழ் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் உள்ள சிக்கல்களும், தீர்வுகளும் – மலேசியா, 30.05.2015 முதல் 31.05.2015 வரை அயலகத் தமிழ் மாணவர்கள் தமிழ்க் கற்றலில் உள்ள சிக்கல்களும், தீர்வுகளும் – ஆசுதிரேலியா, 25.07.2015 அன்று புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் – தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர், 13.11.2015 அன்று பாரதிதாசன் 125 – புதுமையும் புரட்சிக்கவிஞரும் – தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், 20.11.2015 அன்று தமிழும் சமயமும் – சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை, சென்னை, 05.12.2015 அன்று புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள் – ஒரு பார்வை–மதுரை, 19.12.2015 அன்று அலைகடலுக்கு அப்பால் தமிழர்களின் அடையாளங்கள் – திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சியிலும் பன்னாட்டு கருத்தரங்குகள் உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை சார்பில் நடத்தப்பட்டன.

- 14.07.2015 அன்று தமிழ் வளர்ச்சியில் தமிழ் அமைப்புகளின் பங்களிப்பு – நவி மும்பை தமிழ்ச் சங்க தேசியக் கருத்தரங்கு நடைபெற்றன.

- 16.07.2015 அன்று தமிழ்நாடு தென்கொரியா மொழி மற்றும் பண்பாட்டுத் தொடர்புகள் – சென்னை, 22.07.2015 அன்று பழந்தமிழரின் சுற்றுச்சூழல் சிந்தனைகள் – மதுரை, 03.10.2015 அன்று புதுக்கவிதையும் தமிழ் வளர்ச்சியும் – மதுரை தியாகராசர் கல்லூரி, மதுரை, 10.10.2015 அன்று சங்கத் தமிழரின் கட்டடக்கலை – தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூரிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

- 21.06.2015 அன்று ஹாங்காங் திருப்பதி நாச்சியப்பன், ஆசுதிரேலியா நாகை கா.சுகுமாரன் – மதுரை, 08.07.2015 அன்று ஆசுதிரேலியா முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன், மலேசியா திரு. க.பழனிசாமி – மதுரையிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

- 16.08.2015 அன்று மலேசியா மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மற்றும் மொழியியல் இளங்கலை பயிலும் மாணவர்களுக்கான சிறப்புப் பயிலரங்கம் மதுரையில் நடத்தப்பட்டது.

- 24.08.2015 அன்று ஆசுதிரேலியா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி ஆலோசகர் திரு. அன்புஜெயா, பிரான்ஸ் வாழ் தமிழர், பேராசிரியர் பெஞ்சமின் லெபோ, அமெரிக்கா தமிழ் உலகம் அறக்கட்டளை ஆலோசகர் திரு.ஆல்பர்ட் பங்கு பெற்ற சிறப்புக் கலந்துரையாடல் மதுரையில் நடத்தப்பட்டது.

- 22.08.2015 அன்று மலேசியத் தமிழ் நாடகக் கலைஞர்களின் 'மாவீரன் இராசேந்திர சோழன்' வரலாற்று நாடகம் மதுரை, உலகத் தமிழர் இலக்கியக் கலைவிழாவில் நடத்தப்பட்டது.

- 29.08.2015 முதல் 07.09.2015 வரை மதுரை 10ஆவது புத்தகக் கண்காட்சியில் 10 நாள்கள் பழந்தமிழர் ஓவியங்கள், கல்வெட்டுகள் புகைப்படக் கண்காட்சி மதுரையில் நடத்தப்பட்டன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூ.50 இலட்சம் வைப்புத் தொகை வழங்கப்பட்டு தொல்காப்பியர் ஆய்விருக்கை தொடங்கப்பட்டுள்ளது. ஆறு சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப் பெற்றுள்ளன.

- பழந்தமிழரின் சிறப்புகளையெல்லாம் எடுத்துக் காட்டும் வகையில், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்க ரூ.3.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருகி வரும் மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டும், கட்டட வசதிகளின் தேவையைக் கருத்திற் கொண்டும், இரண்டு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் இதர செலவினங்களுக்கு தமிழக அரசு ஐந்தாண்டுகளில் ரூ.81.90 கோடி நல்கை வழங்கியுள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வியில் 149 மையங்கள் செயல்பட்டு வந்த நிலையில் புதிதாக 11 மையங்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது 160 மையங்களாக எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. புதிதாக 7 பாடப்பிரிவுகள் பட்டய மற்றும் சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

- கிராமப்புற மாணவர்களுக்கு அரசு அளித்துள்ள வருமான வரம்பிற்குட்பட்டவர்களுக்கு கல்வி கட்டணத்தில் 25 சதவிகிதம் சலுகை அளிக்க ஆட்சிக்குழுவில் அனுமதி பெறப்பட்டு 2016ஆம் ஆண்டு சனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

- ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவில் கல்வியாளர் ஒருவருக்கு 6 மாணவர்கள் என்பதற்கு மாற்றாக 9 மாணவர்கள் என எண்ணிக்கையை உயர்த்தப்பட்டுள்ளது.

- வளர்தமிழ் வானொலி மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு மீண்டும் பல்கலைக்கழக நிகழ்வுகள் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

- பல்கலைக்கழக ஆண்டு விழாவினையொட்டி 5 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# அரசின் திட்டப் பயன்களை மக்கள் பெற்றிட ஒளிகாட்டி வழிகாட்டும் சிறப்பான பணிகள்



**பத்திரிகையாளர் நலன்**

- 18.07.2011 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- 03.08.2011 அன்று ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட தலைமைச் செயலக செய்தியாளர் அறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- பத்திரிகையாளர் ஓய்வூதியம் 14.09.2011 முதல் ரூ.5,000/– த்திலிருந்து ரூ.6,000/– ஆகவும், 07.10.2013 முதல் ரூ.6,000/–த்திலிருந்து ரூ.7,500 ஆகவும், 11.01.2016 முதல் ரூ.7,500/– லிருந்து ரூ.8,000/– ஆகவும் உயர்வு.
- பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் 14.09.2011 முதல் ரூ.2,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும், 07.10.2013 முதல் ரூ.3,000/–த்திலிருந்து ரூ.4,500 ஆகவும்ம், 11.01.2016 முதல் ரூ.4,500/–லிருந்து ரூ.4,750/– ஆகவும் உயர்வு.
- ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்ச வரம்பு தகுதி ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும், பணியில் இருக்கும் பத்திரிகையாளர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்பு தகுதி ரூ.1.20 இலட்சமாகவும் உயர்வு.
- ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் செய்தியாளர் ஊடக மையம் மற்றும் மென்பொருள் வசதியுடன் இணைய மையம் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் செய்தி வெளியீட்டு மையத்திற்கு உயர் தொழில்நுட்ப சாதனங்கள்.
- ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் செய்தி வெளியீட்டுப் பிரிவில் இயங்கிவரும் ஊடக மையத்திற்கு 16 சேனல் பணிநிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தலைமைச் செயலகத்தில் தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி**

- அரசு திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களைக் கண்காணிக்கும் முக்கிய நோக்கத்துடன் முதன்முதலாக தலைமைச் செயலகத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி புதிதாக தலைமைச் செயலகத்தில் உருவாக்கம்.

**புகைப்படப்பிரிவு மற்றும் மேற்கோள்பிரிவு மேம்பாடு**

- தலைமைச் செயலகத்தின் பிரதான நுழைவு வாயிலின் இருபக்கங்களிலும் அமைந்துள்ள புகைப்பட மாடம் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.01.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் புகைப்படச் சுருள்கள் ரூ.15.89 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு முறையில் பாதுகாப்பு.
- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகளை மிகத் துல்லியமாக படப்பதிவு செய்திட தலைமையிட புகைப்படப் பிரிவிற்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் அதி நவீன புகைப்படக் கருவி.
- ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைச் செயலகத்தில் உள்ள மேற்கோள் பிரிவில் பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களைப் பாதுகாக்கும் வகையில் நவீனமயமாக்கம்.
- ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் பழைய நாளிதழ்கள் நவீன முறையில் எண்மயப்படுத்தப்பட்டு (Digitization) பாதுகாக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு ஆண்டும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் வெளிமாநில நாளிதழ்களின் முக்கிய செய்திகள் தொகுக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு – பத்திரிகையின் பார்வையில் ஒளிரும் சாதனைகள், 2013ஆம் ஆண்டு – சாதனை புரிந்த ஈராண்டு! சரித்திரம் பேசும் பல்லாண்டு! மற்றும் 2014ஆம் ஆண்டு – மூன்றாண்டு ஆட்சி முழுமையான வளர்ச்சி மற்றும் 2015ஆம் ஆண்டு ஊடகங்களின் பாராட்டு ஆகியவை சிறப்பு சாதனைமலராக வெளியிடப்பட்டுள்ளன.
- புதுடெல்லி செய்தி நிலையத்திற்கு ஒரு அதிநவீன புகைப்படக் கருவி ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் பகுதி–II திட்டத்தில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**நினைவகங்கள்**

- தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.07.2011 அன்று திறந்து வைத்தார்கள்.
- சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09.12.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடமான சேலம் மாவட்டம், சங்ககிரியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தியாகி வாஞ்சிநாதன் நினைவு மண்டபம் ஆகியவை 23.12.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.48.70 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.02.2014 அன்று திறந்து வைத்தார்கள்.
- தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட மகாமகம் கலையரங்கத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.02.2013 அன்று திறந்து வைத்தார்கள்.





- நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தமிழிசை மூவர் மணிமண்டபம், விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மார்பளவு சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கோபால் நாயக்கர் முழுஉருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.02.2013 அன்று திறந்து வைத்தார்கள்.
- ரூ.11.91 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிடங்களில் கண்காணிப்பு கேமரா.
- சென்னை மாநகராட்சி மூலம் பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மேம்படுத்தி இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைத்திட ஆணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.
- ரூ.21.66 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.
- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் காவல் துறை மூலம் பாதுகாப்புப் பணி உள்துறை மூலம் மேற்கொள்ள தொடரும் செலவினமாக ரூ.2.47 கோடியும் மற்றும் தொடராச் செலவினமாக ரூ.17.39 இலட்சமும் ஒதுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.
- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடங்களில் ரூ.77 இலட்சம் செலவில் முகமை மூலம் (outsourcing) பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் தூய்மை செய்தல் பணிகளை மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.
- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பில் முழு உருவச்சிலையும், திருச்சிராப்பள்ளியில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் முழு உருவச்சிலையும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் தமிழகத்திற்குப்

பெருமை சேர்த்த சிறந்த கவிஞரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் முழு உருவச்சிலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.02.2016 அன்று திறந்து வைத்தார்கள்.

- சென்னை, இராயபுரத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் மற்றும் நூலகம் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகம் ரூ.11.62 கோடி மதிப்பீட்டில் புதுப்பொலிவுடன்புனரமைக்கப்பட்டுமாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு என பெயர் சூட்டுவதற்காக இன்னுயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.06.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, தியாகராயநகரில் உள்ள காமராஜர் நினைவு இல்லம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள காமராஜர் மணிமண்டபம் ஆகியவற்றை ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டன.
- சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்ட இடத்தில் ரூ.65.37 கோடி மதிப்பீட்டில் புதிய கலைவாணர் அரங்கம் மற்றும் மாநிலச் செய்தி நிலையம் 14.02.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- நினைவகங்களை மாற்றுத்திறனாளிகள் எளிதாகச் சென்று பார்வையிட ஏதுவாக ரூ.39.56 இலட்சம் மதிப்பீட்டில் சாய்வு நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் சிலை மற்றும் அதன் சுற்றுப்புறம் ரூ.11.95 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில் ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.06.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் நினைவாக, ஒரே வளாகத்தில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் அமைக்க மாற்று இடம் தேர்வு செய்து அரசாணைக்கு திருத்தம் 13.08.2015 அன்று ஆணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மனுநீதி சோழன் அவர்களுக்குத் திருவாரூரில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைக்க 26.05.2014 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சுவாமி சகஜானந்தா தொண்டு செய்து வாழ்ந்த இடமான கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் அரசின் சார்பில் அவரது நினைவாக மணிமண்டபம் அமைக்க மாற்று இடம் தேர்வு செய்து அரசாணைக்கு 13.08.2015 அன்று ஆணை வெளியிடப்பட்டு , கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கேரள மாநிலம், வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவகத்தைப் புதுப்பித்துப் புனரமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.



- சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி மண்டபம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மணி மண்டபத்தில் பாடல்கள் ஒலிபரப்பு கருவிகள் பொருத்தப்பட்டு அன்னாரின் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தினைப் புனரமைக்க பொதுப்பணித்துறையின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் புனரமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், தில்லையாடி கிராமத்தில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் புனரமைக்கப்பட்டுள்ளது.
- புனரமைக்கப்பட்ட காந்தி மண்டப வளாகத்தின் பூங்கா மற்றும் புல்வெளிகள் பொதுப்பணித்துறையின் மூலம் பராமரிக்க ரூ.2.63 கோடியும் மற்றும் இவ்வளாகத்தின் பாதுகாப்பு பணிகள் வெளிமுகமை மூலமாக மேற்கொள்ள ரூ.22.90 இலட்சத்திற்கும் ஆணை.
- சென்னை அடையாறில் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் மறைந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க பொதுப்பணித்துறையிடமிருந்து திட்டமதிப்பீடு பெறப்பட்டு, தற்போது கோப்பு சுற்றோட்டத்தில் உள்ளது.

**விழாக்கள்**

- மறைந்த அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 08.04.2012 அன்றும், தென்னிந்தியத் திரை உலகத்தின் முதல் பெண் இயக்குநர் மற்றும் முதல் பெண் படத் தயாரிப்பாளர் டி.பி.ராஜலட்சுமி அவர்களுக்கு நூற்றாண்டு விழா 19.09.2013 அன்றும் கொண்டாடப்பட்டன.
- இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிடப்பட்டு 07.07.2011 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.
- கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளை நினைவு கூர்ந்து மகிழும் வகையிலும், அதற்காக அரும்பாடுபட்ட குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையிலும் நவம்பர் 1ஆம் தேதி அன்று நாகர்கோவிலில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி அவர்களது திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திட ஆணையிடப்பட்டு, 01.11.2013 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.
- வீரமங்கை வேலுநாச்சியார் நினைவைப் போற்றி அவரது பிறந்த நாளான ஜனவரி 3ஆம் தேதி ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாட ஆணை பிறப்பிக்கப்பட்டு, 03.01.2015 முதல் சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.
- திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 4ஆம் தேதி ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாக கொண்டாட ஆணை பிறப்பிக்கப்பட்டு, 04.10.2015 முதல் திருப்பூரில் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.
- திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் தியாகி வீர வாஞ்சிநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா தியாகிகள் தினமான ஜூலை 17ஆம் நாளன்று அரசு விழாவாக கொண்டாட ஆணை பிறக்கப்பிக்கப்பட்டது.
- மன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள் தைப்பூச திருநாளை 24.01.2016 அன்று அரசு விழாவாக மதுரையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**பொருட்காட்சி**

- அரசுப் பொருட்காட்சி ஆண்டுதோறும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி திருவண்ணாமலை மற்றும் நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது.
- அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் முழுமையாக தெரிந்து கொள்ளும்

வகையில் தற்போது அரசுப் பொருட்காட்சிகளில் பங்கு பெறும் 15 அரசுத்துறைகளுடன் கூடுதலாக 12 அரசுத் துறைகள் அரசுப் பொருட்காட்சிகளில் பங்கேற்பு.

- அரசுப் பொருட்காட்சிகளை வெவ்வேறு இடங்களில் நடத்துவதற்கு ஏதுவாக, ரூ.99.21 இலட்சத்திற்குக் கூடுதலாக புதிய இரும்பு வளைவுத் தகடுகள் மற்றும் நல்ல முறையில் ஒளி அமைப்புச் செய்திட ரூ.35.98 இலட்சத்திற்கு 170 தெரு விளக்குக் கம்பங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

- கடந்த நான்கு ஆண்டுகளில் 40 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அரசுக்கு ரூ.12 கோடியே 01 இலட்சம் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.

- புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் (Phool Walon Ki Saire), தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

- சென்னையில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அலங்கார ஊர்தி முதல் பரிசும், 2013, 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இரண்டாம் பரிசும் பெற்றன. 2014ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்தி முதல் முறையாக, இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

- தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில், நான்கு கட்டமாக சிறு புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இக்கண்காட்சிகளை 20,77,410 பேர் பார்வையிட்டு, பயன்.

- அரசு சாதனைகளை விளக்கும் வகையில் 32 மாவட்டங்களில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, இதன் மூலம் 6 இலட்சத்து 52 ஆயிரத்து 200 பேர் பார்வையிட்டு பயன்.

**தமிழரசு**

- தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறை வாரியாகத் தொகுத்து "மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசு" என்ற சிறப்பு வெளியீடு வெளியிடப்பட்டது.

- **ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடுகள்;** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் (தொகுப்பு 1 & 2), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – ஆங்கிலம் (தொகுப்பு 1), வெற்றிக்கதைகள், அமுத மொழிகள், புகைப்படத் தொகுப்பு நூல் (Coffee Table book), பத்திரிகைகளின் பார்வையில் மிளிரும் சாதனைகள் ஆகிய தமிழரசு சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

- தமிழரசு அச்சகத்தில் சிப்பம் கட்டும் (Binding) பணிகளை மேற்கொள்ள நிலைச்சிப்பம் (Perfect Binding) இயந்திரம், நெளிச்சிப்பம் (Comb, Spiral Binding) இயந்திரங்கள் ஆகியவை ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டன.

- காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ் 2012 ஜூலைத் திங்கள் முதல் மாதாந்திர இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.

- ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்குப் புதியதாக கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- தமிழரசு அச்சகத்திற்குக் கணினியிலிருந்து நேரடியாக அச்சுத்தகடு செய்யும் வசதி கொண்ட CTP (Computer to Plate) நவீனத் தொழில்நுட்ப இயந்திரம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசின் ஓராண்டு, ஈராண்டு மற்றும் மூன்றாண்டு சாதனைகள் தொகுக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்பு மலர்களாக வெளியிடப்பட்டன.

- **ஈராண்டுச் சாதனை சிறப்பு மலர் வெளியீடுகள்;** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் தொகுப்பு (3 & 4), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்– ஆங்கிலம் (தொகுப்பு–2), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு, விதியை மாற்றிய விதி தொகுப்பு (1 & 2), புரட்சித்தலைவி அம்மா உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள், புகைப்படத் தொகுப்புகள் அடங்கிய (Coffee Table) புத்தகம் மற்றும் 'பத்திரிகைகளின் பார்வையில் மிளிரும் சாதனைகள்' ஆகியவை வெளியிடப்பட்டன.





- தமிழரசு அச்சகத்திற்கு ரூ.4 கோடி மதிப்பீட்டிலான அதி நவீன நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரத்தின் செயல்பாட்டினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று துவக்கி வைத்தார்கள்.

- **மூன்றாண்டு சாதனை சிறப்பு மலர் வெளியீடுகள்;** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் தொகுப்பு (5 & 6), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்– ஆங்கிலம் (தொகுப்பு–3), புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு.

- ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் தமிழரசு அச்சகத்திற்கு உயர் தொழில்நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- **நான்காண்டு சாதனை சிறப்பு மலர் வெளியீடுகள்;** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் – தமிழ் தொகுப்பு (2011–2012, 2012–2013, 2013–2014), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்– ஆங்கிலம் (தொகுப்பு–4), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (ஆங்கிலம்), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் நலத்திட்டப் பயனாளிகளின் வெற்றிக்கதைகள், Awards and Accolades for Tamil Nadu Government, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள், Tamil Nadu in the Forefront.

- தமிழரசு இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மற்றும் சிறப்பு வெளியீடுகள் எண்மியப்படுத்த

(Digitization) ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஆணை.

- தமிழரசு அச்சகத்தில் வெளியிடப்படும் சிறப்பு வெளியீட்டு பணிகளுக்காக அதிக திறன் கொண்ட டிஜிட்டல் பிரிண்டர் (Digital Printer) ஒன்று வாங்க ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஆணை.

**புதியப் பணியிடங்கள் உருவாக்கம், புதிய வாகனங்கள், உபகரணங்கள் கொள்முதல்**

- செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகளை விரைவுபடுத்தி சிறப்புடன் செயலாற்ற பழைய வாகனங்களுக்கு மாற்றாக ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் 34 புதிய வாகனங்கள். ரூ.12.07 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர், அரியலூர் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குப் புதிய ஈப்புகள்.
- ரூ.81.58 இலட்சம் மதிப்பீட்டில் தலைமையகம் மற்றும் அனைத்து மாவட்டங்களுக்கும் நவீனத் தொழில் நுட்ப டிஜிட்டல் கேமராக்கள்.
- மாவட்டங்களில் அமைந்துள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டன.
- தலைமையகத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு மற்றும் மேற்கோள் பிரிவிற்குப் புதிதாக இரண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பணியிடங்கள் மற்றும் ரூ.1.20 இலட்சம் செலவில் புதியதாக இரண்டு மோட்டார் சைக்கிள் வாகனங்கள்.
- புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் செயல்படும் செய்தி நிலையத்திற்கு, செய்தி மற்றும் விளம்பரப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக ஓர் இளநிலை புகைப்படக்காரர் மற்றும் ஒரு வீடியோ ஒளிப்பதிவாளர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிப்பு.
- தலைமைச் செயலகத்தில் செய்தி சேகரிக்க வருகைதரும் பத்திரிகையாளர்களுக்கு உதவிடும் வகையில், பத்திரிகையாளர் அறையை சிறந்த முறையில் பராமரிக்கப் புதிதாக இரண்டு அலுவலக உதவியாளர் பணியிடங்கள் காலமுறை ஊதியத்தில் தோற்றுவிப்பு.
- தலைமையகத்திலுள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, மேற்கோள் பிரிவு மற்றும் புகைப்படப் பிரிவு ஆகியவற்றுக்கு ரூ.14.70 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று நவீன தொழில்நுட்ப வண்ண நகல் கருவிகள்.
- அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில், ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு விளம்பரத் திரைகள் (Digital Display Screens) அமைப்பு.
- மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குப் பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் புகைப்படக் கண்காட்சியில் வைத்திட ரூ.22.24 இலட்சம் செலவில் விளம்பரப் பலகைகள் மற்றும் உபகரணங்கள் வழங்க ஆணை.
- அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கும் குறும்படங்களைப் பொதுமக்கள் பார்க்கும் வகையில் திரையிட, மின்னாக்கி வசதியுடன் கூடிய மின்னணு விளம்பரத்திரை வாகனத்தை மாத வாடகை தலா ரூ.5.80 இலட்சம் தொடர் செலவினத்தில் திருச்சி மற்றும் சென்னையில் முதற்கட்டமாக சோதனை முறையில் களவிளம்பரப் பணிக்கு பயன்படுத்த ஆணை.
- ரூ.20.80 கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் மின்னணு விளம்பரத்திரை வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.
- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகளின் செய்தி, புகைப்படங்கள் மற்றும் வீடியோ படப்பதிவுகள் ஆகியவற்றை விழா நடைபெறும் இடத்திலிருந்தே மின்னஞ்சல் மூலம் விரைந்து அனுப்பிட, தலைமையிடம் மற்றும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ.3.58 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஜி டேட்டா கார்டு வழங்க ஆணை.
- அரசு விழா மற்றும் நிகழ்ச்சிகளுக்கு பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்லும் போது அவர்களுக்கு சிற்றுண்டி, வழங்கிட ஏற்படும் செலவினம், நிகழ்வு ஒன்றிற்கு ரூ.300/– லிருந்து ரூ.500/– ஆக உயர்வு.
- மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நாளிதழ்கள் வாங்கிட ஆகும் செலவினம், மாதம் ஒன்றிற்கு ரூ.750/– லிருந்து ரூ.1,500/– ஆக உயர்வு.
- தலைமையிடம் மற்றும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.29.90 இலட்சம் மதிப்பீட்டில் அதி நவீனக் கருவிகள் மற்றும் ஏனைய சாதனங்கள்.





- கும்பகோணத்தில் உள்ள மகாமகக் கலையரங்கம் மற்றும் புதிதாகக் கட்டப்பட்டு வரும் எட்டு மணிமண்டபங்களுக்கும் சேர்த்து 27 பணியாளர்களை நியமித்திட ஆணை.
- இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை நடத்திய தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.10 கோடி நல்கைத் தொகை.
- சென்னையில் 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 9ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.25 இலட்சமும், 2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 10ஆவது சர்வதேச திரைப்படவிழாவிற்கு ரூ.50 இலட்சமும், 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 11ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சமும், 2014ஆம் ஆண்டு 12ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சமும், 2015ஆம் ஆண்டு 13ஆவது சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சமும் தமிழ்நாடு அரசு சார்பில் மானியமாக வழங்கப்பட்டது.

**எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்**

- ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நவீன டிஜிட்டல் திரைவீழ்த்திக் கருவி.
- நிறுவன வளாகத்தில், ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய நவீன படப்பிடிப்புத்தளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.01.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாணவர்களின் படப்பிடிப்புத் தொகை ரூ.8,000/–த்திலிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.
- ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்க ஆணை.
- ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் முன்காட்சித் திரையரங்கம் நவீனமயமாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- முன்காண் திரையரங்கத்திற்கு நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி, பார்கோ புரொஜக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் கூடிய உபகரணங்கள் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல்.
- ரூ.9.50 கோடி மதிப்பீட்டில், 2013–2014ஆம் கல்வியாண்டில் அனிமேஷன் மற்றும் காட்சிப் பயன் எனும் புதிய பட்டயப்படிப்புகள் தொடங்கப்பட்டு மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பாடத்திட்டத்திற்கு ரூ.3.63 கோடி செலவில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.09.2015 அன்று திறந்து வைக்கப்பட்டன. மேலும், ரூ.93 இலட்சத்தில் ரிச் மேன் ஹவுஸ் மற்றும் ரூ.90 இலட்சத்தில் டப்பிங் தியேட்டர் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

- மாணவர்களின் கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாணவர் விடுதிக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
- கோவாவில் நடைபெற்ற அகில இந்தியத் திரைப்பட விழாவில் திரைப்படப் பயிற்சி மாணவர்கள் தயாரித்த திரைப்படம் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு பரிசு பெற்றது.
- ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் முகப்பு வளைவு மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.02.2016 அன்று திறந்து வைத்தார்கள்.
- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தால் தற்போது கற்பிக்கப்பட்டு வரும் திரைத் தொழில் நுட்பங்களுக்கான பட்டயப்படிப்புகள், இனி இளங்கலை – திரைக்கலை (Bachelor of Cinema) பட்டப்படிப்புகளாக மாற்ற ஆணை.
- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பகுதி நேர வகுப்பு (Part time Course) சுயநிதி அடிப்படையில் தொடங்க ஆணை.
- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களின் கல்வி நலனுக்காக வெளி முகமை மூலம் ஆண்டுதோறும் படப்பிடிப்புக் கருவிகள், உபகரணங்கள் வாடகைக்குப் பெற்று உபயோகப்படுத்த தொடர் செலவினமாக ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஆணை.

**தமிழ்நாடு திரைப்படப்பிரிவு**

- அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் மற்றும் துறைகளின் சாதனைகள் குறித்து அந்தந்த அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் விளம்பரப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் விளம்பரம் மற்றும் IEC நிதியிலிருந்து தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் சாதனை விளக்கக் குறும்படங்கள் தயாரிக்க ஆணை.
- ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் செய்திப்படங்களுக்கு டிஜிட்டல் முறையில் பாதுகாப்பு.
- முக்கிய விழா நிகழ்ச்சிகளை உடனுக்குடன் ஒளிபரப்ப ஏதுவாக ரூ.9.40 இலட்சம் செலவில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்கு ஒரு நேரடி ஒளிபரப்புக் கருவி (Live back bag).
- தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் தயாரிக்கப் படும் வீடியோ செய்தி மலர்கள், குறும்படங்கள் மற்றும் விழிப்புணர்வுப் படங்கள் ஆகியவற்றை நவீனதொழில் நுட்பத்துடன் தொகுக்க ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் நவீன படத்தொகுப்புக் கருவி.
- கடந்த நான்கு ஆண்டுகளில் அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கிக் கூறும் வகையில் 116 படக்காட்சி செய்தி மலர்களும் 45 குறும்பாடல்கள் கொண்ட 6 தொகுப்புகள் மற்றும் 4 வாரசெய்தி தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.
- ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஊடக மையத்திற்கு உயர் தொழில்நுட்ப எண்மயப் பரிமாணத் திறன் பெற்ற வீடியோ படத்தொகுப்புக் கருவிகள் வாங்க ஆணை.
- ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைச் செயலகத்தில் எண்ம முறை மின்னணு ஒலிப்பணி நிலையம் (Digital Audio Work Station) அமைக்க ஆணை.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை**

- அரசு மைய அச்சகத்தினை நவீனமயமாக்கிட, கணினி மூலம் அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் சுமார் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- இவ்வரசு பதவியேற்ற நாள் முதல் நாளது தேதி வரையில் வேலை வாய்ப்பு அலுவலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை மூலமாக 347 நபர்கள் இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையினைச் சார்ந்த அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இரவுநேரப்படியை நாளொன்றுக்கு ரூ.14/– லிருந்து ரூ.25/– ஆக உயர்த்தி, 01.11.2011 முதல் வழங்கப்பட்டு வந்ததை 30.11.2015 முதல் ரூ.25லிருந்து ரூ.50ஆக உயர்வு.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையினைச் சார்ந்த அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர சிற்றுண்டிப்படி ரூ.150/–லிருந்து ரூ.200/– ஆக உயர்வு, இதன்மூலம் சுமார் 1,200 தொழில்நுட்பப் பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் மனமகிழ்மன்றத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதித் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.1,00,000/– லிருந்து ரூ.2,00,000/– ஆக உயர்வு.
- அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் மின் ஆளுகையை படிப்படியாக அறிமுகம் செய்யும் பொருட்டு ரூ.23.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கணினிகளும், லேசர் பிரிண்டர்களும், கணினி மேசை மற்றும் நாற்காலிகளும், தடையில்லா மின்வழங்கும் சாதனம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு மைய அச்சகம், உள்ளிட்ட கிளை அச்சகங்களில் புதிய இயந்திரங்களான நவீன வெட்டும் இயந்திரம், முகப்பு அட்டை செய்யும் இயந்திரம் மற்றும் கம்பி அடிக்கும் இயந்திரம் போன்றவற்றை நிறுவி, அச்சுப் பணியினை மேம்படுத்தும் பொருட்டு, ரூ.71.10 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டுநர்களாகப் பணிபுரியும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளில் 100 சதவிகித முழு செய்மானம் அளிக்கும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.500/– ஊக்கத்தொகை.
- தென்மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் திருச்சியில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் துணை கிளைகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- திருநங்கைகளுக்கான பெயர் மாற்ற அறிவிக்கைகள் கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியிடப்பட்டு வருகின்றன.
- அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டும் பிரிவில் வெட்டும் இயந்திரங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படியானது ரூ.30/– லிருந்து ரூ.200/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- அரசு மைய அச்சகத்தின் வரவு–செலவுப் பிரிவு மற்றும் அதிரகசியப் பிரிவுகளில் பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் வார ஈட்டுப்படி ரூ.15/– லிருந்து ரூ.200/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்ற அரசு அச்சகங்களில் இரவு முறை பணியாக வழக்குப் பட்டியல் அச்சிடும் பணியாளர்களுக்கு சிறப்பூதியமாக ரூ.300/– மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அனைத்து அச்சகங்களிலும் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு சேலைகளுக்குப் பதிலாக ஊதா நிற மேலங்கி (Overcoat) சீருடையாக வழங்கப்பட்டு வருகிறது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அரசு மைய அச்சகத்திற்கு நவீன தரமான இரப்பர் முத்திரை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் தன் மையொற்றி ஆகியவை ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் இயந்திரப் பிரிவை நவீனமயமாக்க அரசு மைய அச்சகத்திற்கு தனித்தாள் வண்ண அச்சு இயந்திரம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- சென்னை அரசு மைய அச்சகத்தில் பணிகளை தரப்படுத்த தரக்கட்டுப்பாட்டுக் குழுக்கள் (Kaizen Principles)உருவாக்கம்.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை கணினிமயமாக்கும் பொருட்டு பகுதி–2 திட்டங்களின் கீழ் கணினி மற்றும் அதனைச்

சார்ந்த உபகரணங்களுக்கு ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அச்சகங்களை நவீனமயமாக்கும் பொருட்டு பகுதி–2 திட்டங்களின் கீழ் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.88.85 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு மைய அச்சகம், சென்னை–79க்கு ரூ.10 இலட்சம் செலவில் திரை அச்சு (ஸ்கிரீன் பிரிண்டிங்) இயந்திரம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- சென்னை உயர்நீதிமன்ற கிளை அச்சகத்திற்கு ரூ.3.20 இலட்சம் செலவில் கம்பியடிக்கும் இயந்திரங்கள் (2) மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககத்திற்கு ரூ.3 இலட்சம் செலவில் அதிநவீன டிஜிட்டல் பிரிண்டர் (1 எண்ணிக்கை) நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு மைய அச்சகம், சென்னை–79க்கு ரூ.40 இலட்சம் செலவில் தானியங்கி சேகரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் செயல்படும் மனமகிழ்மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்வு.
- அரசு மைய அச்சகத்தில் ரூ.67.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியக் காகிதக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்கக வளாகத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கூட்ட அரங்கு நிறுவப்பட்டுள்ளது.
- அரசு மைய அச்சகத்தில் வரவு செலவு பிரிவு மற்றும் அதிரகசியப் பிரிவில் பணிபுரியும் 49 பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ.36,960/– கூடுதல் செலவில், அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த சிறப்பூதியம் பதவிக்கேற்ப ரூ.60, 70, 100 என இருந்ததிலிருந்து தற்போது ரூ.120, 140, 200 ஆகவும் உயர்வு.
- அரசு மைய அச்சகத்தில் தீ விபத்தினால் பாதிப்படைந்த சிவப்புக் கட்டடத்தில் சேதமடைந்த இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் தொடர்புடைய பிறபணிகளுக்கு ரூ.19,07,25,000/– மற்றும் கட்டடப் பணிகளுக்காக ரூ.3,57,20,000/– ஆக மொத்தம் ரூ.22,64,45,000/– மதிப்பீட்டில் 90 சதவிகித பணிகள் நிறைவு.
- அரசு மைய அச்சகத்தில் ரூ.2.50 கோடி மதிப்பில் தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- அரசு மைய அச்சகத்திற்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் சுமை ஊர்தி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- அரசு மைய அச்சகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் நிறுவிட ரூ.21,59,30,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப்பணி மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அரசு அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் சலவைப்படி ரூ.60/–லிருந்து ரூ.100/– ஆக உயர்வு.
- தென்மாவட்ட அரசு அலுவலகங்களின் அச்சுப்பணிகளை விரைந்து முடித்திட மதுரை அரசு கிளை அச்சகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நவீன இருவண்ண வெப் ஆப்செட் இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு அச்சகங்களின் பணிகளை மேலும் சீராகவும் விரைவாகவும் மேற்கொள்ள அரசு அச்சகங்களின் உட்கட்டமைப்பினை நவீனமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அலுவலகங்கள் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் தீத்தடுப்பு சாதனங்கள் மற்றும் கண்காணிப்பு கேமிராக்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

# சுற்றுப் பயணிகளை உவர்ந்து ஈர்க்கும் ஒப்பிலாத் தலங்கள் உலகத்தர கட்டமைப்புகள்




**சுற்றுலாத் துறை**

- 2013ஆம் ஆண்டில், தமிழ்நாடு உள்நாடு சுற்றுலா பயணிகளின் வருகையில் முதல் இடத்திலும், வெளிநாடு சுற்றுலா பயணிகளின் வருகையில் இரண்டாம் இடத்திலும் உள்ளது.

- தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த அனைத்து சுற்றுலா வசதிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் சுற்றுலா சிறப்பு பூங்காக்கள், 7 மாவட்டங்களில் ஊரக சுற்றுலாத் தொகுப்புகள், தமிழ்நாட்டில் 4 சுற்றுலா சுற்றுகளை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம், சாலையோர வசதிகள், சுகாதாரக் கழிவறை விழிப்புணர்வு, கடல் வழி சுற்றுலா, வான்வழி சுற்றுலா ஆகிய புதியத் திட்டங்கள் ஊக்குவித்தல்.

- ரூ.450 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதில்

முதல் கட்டமாக ரூ.135 கோடி செலவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- ரூ.21.20 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம், மன்னார்குடி, கொல்லிமலை, ஸ்ரீவாஞ்சியம், ஏலாக்குறிச்சி, திருச்சுழி, திருக்கோஷ்டியூர், சிவகங்கை, மணமேல்குடி, ஆய்குடி, தூத்துக்குடி, இருக்கன்குடி, செட்டிநாடு, இராமேஸ்வரம், திருக்கடையூர் ஆகிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் இராமநாதபுரம், திருவள்ளூர், தேனி, நாமக்கல், வேலூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், கோவை, திண்டுக்கல், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, திருவாரூர், திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு.
- ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விருதுநகர், சிவகங்கை ஆகிய 10 மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.23.82 கோடி மதிப்பீட்டில் ஜவ்வாது மலை, தஞ்சாவூர், ஏற்காடு, குற்றாலம், சென்னை (இசைக் கல்லூரி), முட்டுக்காடு, சமண புனிதத் தலங்கள் ஆகிய ஏழு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்.
- ரூ.21.38 கோடி முதல் தவணை நிதியில் கல்லணை, வைகை அணை, திருவானைக்காவல், ஜேடர்பாளையம் ஆகிய பகுதிகளில் சுற்றுலா மேம்பாடு.
- தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலா, நலவாழ்வு சுற்றுலா ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக மையக் குழுக்கள்.
- 2013–2014ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ், ரூ.88.80 இலட்சம் மற்றும் 2014–2015ஆம் ஆண்டில் ரூ.102 இலட்சத்தில் சென்னையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா ஆணையரக கட்டடத்தில் ஐந்தாவது தளம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் புதுப்பிக்கப்பட்டுள்ள டென்மார்க் ஆளுநர் மாளிகை பராமரிப்பு மற்றும் நிதி ஆதாரங்களை நிருவகிக்க அறங்காவலர் குழு உருவாக்கம்.
- சுற்றுலாத் துறைக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காகவும், ஊடக ஆலோசனைக்காகவும் ஆலோசகரைத் தேர்வு செய்ய நடவடிக்கை.
- தமிழ்நாடு “தொலைநோக்கு 2023” என்ற ஆவணத்தில் வெளியிடப்பட்டதற்கிணங்க சுற்றுலாவை மேம்படுத்தப் புதிய சுற்றுலா கொள்கை வெளியிட நடவடிக்கை.
- தமிழ்நாடுசுற்றுலாத்துறைக்குவரைவுகொள்கை தயாரித்தல், “10 ஆண்டு செயல் திட்டம்” கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணிகளுக்கான ஆலோசனை அமைப்பாக தமிழ்நாடு நகர்ப்புறக் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் நியமனம்.
- ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கத்தில் கலையரங்கம்.
- ரூ.36.31 கோடி மதிப்பீட்டில் மதுரை, இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை மேம்படுத்தவும், ரூ.14.75 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரை மேம்படுத்தவும் சுற்றுலா பெருந்திட்டப் பணிகள்.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சிவகங்கை, விழுப்புரம், நாகப்பட்டினம், விருதுநகர், திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுலா சாலை மேம்பாடு.
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார குப்பைத் தொட்டிகள் வைத்தல் மற்றும் தூய்மை குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.
- இராஜஸ்தானில் 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற “புஷ்கர் மேளா” வில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு இரண்டாவது பரிசு. 2014ஆம் ஆண்டில் முதல் பரிசு.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 32.17 விழுக்காட்டிலிருந்து 34.01 விழுக்காடாக உயர்வு. எதிர்வரும் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை, மேலும் அதிகரிக்கும் வண்ணம் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் முக்கொம்பு பகுதியில் சுற்றுலா மேம்பாடு.









- குறைவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் 32 சுற்றுலாத் தலங்களைத் தேர்ந்தெடுத்து, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க அவ்விடங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம்.
- சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காட்டில் கோடை விழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, உதகமண்டலத்தில் தேயிலை சுற்றுலா விழா, தரங்கம்பாடியில் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய விழா, மதுரையில் மதுரை விழா, தஞ்சாவூரில் சதய விழா.
- சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் சுற்றுலா சுற்றுச்சூழல் பூங்கா.
- இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக தியானமண்டபம்.
- இலண்டனில் நடைபெற்ற சர்வதேச பயணச் சந்தை (World Travel Mart),சீனாவில் செங்டு நகரில் நடைபெற்ற PATA சுற்றுலா சந்தை மற்றும் ஜெர்மனியில் பெர்லின் மாநகரத்தில் சர்வதேச சுற்றுலா சந்தைகளில் (International Tourism Bourse) சுற்றுலாத்துறை கலந்து கொண்டு தமிழ்நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய “குறும் பதிவி” (Pen Drive) சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கியது.
- ரூ.6.19 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை ஏரிப்பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சைமலை (சுற்றுச்சூழல் சுற்றுலா), திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை கழிமுகத்துவாரம் (சுற்றுச்சூழல் சுற்றுலா) ஆகிய பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.50 இலட்சம் செலவில், இந்தியா முழுவதிலும் உள்ள தேர்ச்சிபெற்ற மற்றும் பிரபலமான நடனக் கலைஞர்களைக் கொண்டு சிறப்பான முறையில் மாமல்லபுரத்தில் நூற்றுக்கும் மேலான பல வகையான கலை நிகழ்ச்சிகள் கொண்ட இந்திய நாட்டிய விழா ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகிறது.
- ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், நன்மங்கலம் காப்புக்காடுகள் பகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுப்பணி.
- ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், பொன்னணியாறு அணைப்பகுதி, சேலம் மாவட்டம் மேட்டூர் அணைப்பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.

- ரூ.22 இலட்சம் செலவில், சமயபுரம் கோயில், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், உப்பிலியப்பன் கோவில், சுவாமிமலை, கூத்தனூர், சிக்கல், கீழபெரும்பள்ளம், வேளாங்கண்ணி மாதா, நாகூர் தர்கா, மாசானியம்மன் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 22 சுற்றுலாத் தலங்களில் தூய்மை விழிப்புணர்வு முகாம்கள்.
- ரூ.7 இலட்சம் செலவில், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் திருக்கோவில் வழிகாட்டிகளுக்கு திறன் வளர்ச்சிப் பயிற்சி.
- ரூ.4 இலட்சம் செலவில் இராஜஸ்தான், ஜெய்ப்பூரில் சுற்றுலா விளம்பர முகாம்.
- ரூ.5 இலட்சம் செலவில், முக்கிய சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் தகவல் மையங்களில் "தொடுதிரை தகவல் கணினிகள்"
- ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உதகமண்டலத்தில் "தேயிலை சுற்றுலா திருவிழா 2013" கொண்டாடப்பட்டது.
- சுற்றுலா அலுவலகங்களுக்கு 14 பொலேரோ ஈப்பு வாகனங்கள்.
- மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடலாண்மை புராதன அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடு.
- ரூ.28 இலட்சம் செலவில், சுற்றுலா இயக்குநரகம் புனரமைப்பு.
- 11 சுற்றுலா அலுவலர்கள், ஒரு உதவி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர், 14 உதவி சுற்றுலா அலுவலர் நிலை–2, மூன்று கண்காணிப்பாளர், ஒரு கணக்கர், ஒரு உதவியாளர், 4 இளநிலை உதவியாளர்கள், 2 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், ஒரு துப்புரவாளர், இரண்டு உதவி சுற்றுலா அலுவலர் நிலை–1, ஆகிய பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டன.
- ரூ.6.84 கோடி செலவில், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் கோவில், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருள்மிகு சிலம்பணி சிதம்பர விநாயகர் திருக்கோவில், திருநெல்வேலி மாவட்டம், உவரி சுயம்புலிங்க சுவாமி கோயில், புதுக்கோட்டை மாவட்டம்,திருமணஞ்சேரிசுகந்தபரிமளேஸ்வரர் கோயில், திருபுனவாசல் சிவன்கோவில், விராலி மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ஈரோடு மாவட்டம், காங்கேயம் பாளையம் அருள்மிகு நட்டாற்றீஸ்வரர் கோவில் மற்றும் விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூரில் உள்ள வீரட்டேஸ்வரர் கோவில், திரிவிக்கிரமர் கோயில் ஆகிய ஆன்மீகத் தலங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்.
- ரூ.5 கோடி செலவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் அமைந்துள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தை அனைத்து விதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக தரம் உயர்த்துதல்.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.98 இலட்சத்தில் தேனி மாவட்டம், போடி தாலுகா டாப் ஸ்டேசன் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.30 இலட்சத்தில் தூத்துக்குடி மாவட்டம், சொக்கன் குடியிருப்பிலுள்ள மணல்மாதா திருத்தலத்தில் ஓய்வுக்கூடம் கட்டுதல்.
- 2014–2015ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ், ரூ.14 இலட்சத்தில் எல்காட் நிறுவனம் மூலம் 3 ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்புடன் கணினிகள், மின் சேமிப்புக் கலன் (UPS) அச்சுப்பொறிகள் (Printers) மென்பொருள்கள் (Software) மற்றும் ஸ்கேனர்கள் வாங்குதல்.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.77 இலட்சத்தில் ஈரோடு மாவட்டம், சென்னிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கு செல்லும் மலைச்சாலை மேம்பாடு.
- 2014–2015ஆம் ஆண்டில் ரூ.117.70 இலட்சத்தில் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை உவர்நீர் ஏரியில் சுற்றுப்புற உயிரின சுற்றுலா மேம்பாடு.
- ரூ.10 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாட்டிற்குச் செல்வோம் 2014" என்ற உத்தியின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணிகள்.
- 14 மாவட்டங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்படுவதால் அதற்காக சுற்றுலா அலுவலர், உதவி சுற்றுலா அலுவலர் நிலை–2 மற்றும் தட்டச்சர் அடங்கிய 43 புதியப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.



- வேலூர் மாவட்டம் திருப்பாற்கடல் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோவில் பகுதியில் 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளவும், இதில் சுற்றுலாத் துறை பங்காக ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
- 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.376 இலட்சம் செலவில், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை, திருவேங்கைவாசல் அருள்மிகு பிரகதாம்பாள், திருவேங்கைநாதர் திருக்கோயில் மற்றும் திருநல்லூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில் பகுதிகளில் சாலைகள் மேம்படுத்துதல்.
- 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் செலவில், புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் பகுதியில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்.
- ஜெர்மனி பெர்லின் நகரில் மார்ச் 2015இல் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தை, சுவிட்சர்லாந்து நாட்டின் பெர்ன் மற்றும் நெதர்லாந்து நாட்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் சுற்றுலா விளம்பர முகாம்களில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்பு.
- 2014–2015ஆம் நிதியாண்டில், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியத்தில் உள்ள கொற்கை, திருப்புளியன்குடி, கே. அப்பன்கோயில், பராங்குசநல்லூர் ஆகிய பகுதிகளில் ரூ.62.25 இலட்சம் செலவில் சுற்றுலா சாலை மேம்பாட்டுப் பணிகள்.
- 2014–2015ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் மேலணை அருகிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில், வனத்துறை மூலம் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திரவனத்தில் கூடுதல் வசதிகள் அமைப்பதற்கு சுற்றுலாத்துறையின் பங்காக ரூ.337 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது,
- ஜனவரி 2015இல் சாகச சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் ராட்சத எரிவாயு பலூன்கள் (Hot-Air Ballooning) சாகச நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சியில் நடத்தப்பட்டன.
- ஜனவரி 2015இல் கடற்கரை சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள, "மணப்பாடு" என்ற இடத்தில் பன்னாட்டு நீர்சறுக்கு (Surfing) விளையாட்டுகள் நடத்தப்பட்டன.
- மகாராட்டிர மாநிலம் ஔரங்காபாதில் 11.02.2015 அன்றும், மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் 24.03.2015 அன்றும் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.
- 2014–2015ஆம் ஆண்டில் 60 சுற்றுலா வழிகாட்டிகளுக்கு வழிகாட்டி பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு 2014ஆம் ஆண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதல் முறையாக முதலிடத்தைப் பெற்றுள்ளது என மைய அரசு சுற்றுலா அமைச்சகம் அறிவித்துள்ளது.
- 2015–2016 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டம், பெருங்குளம் பேரூராட்சியில் உள்ள சிவன்கோவில் சாலையில் தகவல் மையம் மற்றும் சுகாதார வளாகம் கட்டுவதற்கு ரூ.70 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- பெங்களூரில் செப்டம்பர் 2015இல் நடைபெற்ற பசிபிக் ஆசிய சுற்றுப்பயண சங்க சுற்றுலா சந்தை 2015இல் (PATA Travel Mart) தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது.
- இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் சார்பில் கனடா நாட்டில் மாண்ட்ரியல், டொராண்டோ, அமெரிக்கா நாட்டில் சிகாகோ, ஹூஸ்டன் ஆகிய நகரங்களில் ஜூன் 2015இல் நடைபெற்ற சுற்றுலா விளம்பர முகாம்களில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது.
- தமிழகத்தில் உள்ள முக்கிய மலை வாழிடங்களான உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கொல்லிமலை, கல்வராயன் மலை, ஜவ்வாது மலை ஆகிய சுற்றுலாத்தலங்களில் கோடைவிழா சுற்றுலாத்துறையின் சார்பாக 2015 மே, ஜூன் மற்றும் ஜூலை ஆகிய மாதங்களில் சிறப்பாக நடத்தப்பட்டது.
- ஜூலை 2015ஆம் மாதத்தில் சுற்றுலா வழிகாட்டிக்கான மூன்றாம் கட்ட பயிற்சி 27 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் விழா 2015 ஜூலை மாதம் 10 நாட்கள் சிறப்பாக நடத்தப்பட்டது.

- மெரினா கடற்கரையில் 05.08.2015 தனியாரால் பாராசெயிலிங் சாகச விளையாட்டுகள் நடத்தப்பட்டன.
- சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் கூட்டமைப்பு மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் 20.08.2015 முதல் 22.08.2015 முடிய நடத்திய வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளப்பட்டது. இதில் சுற்றுலா சுவரொட்டிக்கு முதல் பரிசு கிடைத்தது.
- சென்னையில் நடைபெற்ற 'தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015' மாநாட்டில் 09.09.205 மற்றும் 10.09.2015 ஆகிய நாட்களில் சுற்றுலாத்துறை பங்கேற்பு.
- சென்னையில் இந்திய கடலோரக் காவல்படையால் 06.09.2015 அன்று நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பேரணியில் சுற்றுலாத்துறை கலந்து கொண்டது.
- காஞ்சிபுரம் மாவட்டம் கோவளத்தில் 17.09.2015 முதல் 19.09.2015 முடிய தனியார் நடத்திய கடல் சறுக்கு சாகச விளையாட்டு துவக்கி வைக்கப்பட்டது.
- உலக சுற்றுலா தினக் கொண்டாட்டத்தில் 27.09.2015 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் கல்லூரி மாணவர்களுக்கான சுற்றுலா நடைபயணத்தை வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். விழாவின் போது மெட்ராஸ் ஃபிளையிங் கிளப் சிறிய விமானம் மூலம் வானிலிருந்து பூச்சொரிதல் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.
- மும்பையில் 28.09.2015 முதல் 30.09.2015 முடிய நடைபெற்ற மகாராஷ்டிரா பன்னாட்டு சுற்றுலாச் சந்தையில், தமிழ்நாடு சுற்றுலா அரங்கம் அமைத்து கலந்து கொள்ளப்பட்டது.
- இராஜஸ்தான் மாநிலம் ராந்தம்போரில் இந்திய பாரம்பரிய ஹோட்டல்கள் சங்கம் 21.09.2015 முதல் 24.09.2015 முடிய நடத்திய வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளப்பட்டது. மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு வருகை புரிந்தார்.
- 2013–2014 ஆம் ஆண்டிற்கான மைய அரசு சுற்றுலாத் துறையின் "சிறந்த குடிமை மேலாண்மை பேணும் சுற்றுலாத் தலம் – தரங்கம்பாடி'' என்பதற்கான தேசிய சுற்றுலா விருதை மரியாதைக்குரிய இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து 18.09.2015 அன்று சுற்றுலாத் துறை பெற்றது.
- 14.08.2015, 28.09.2015 மற்றும் 27.10.2015 அன்று சென்னையில் சுற்றுலா கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- 02.11.2015 முதல் 05.11.2015 வரை லண்டனில் நடைபெற்ற உலக பயணியர் சந்தையில் கலந்து கொள்ளப்பட்டது.
- 22.12.2015 அன்று சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெற்ற சுற்றுலா விளம்பர முகாமில் கலந்து கொள்ளப்பட்டது.
- நியூ யார்க் டைம்ஸ் பத்திரிக்கையின் 2016 ஆம் ஆண்டிற்கான 52 சிறந்த சுற்றுலாத்தலங்களின் வரிசைப் பட்டியிலில் இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டை மட்டும் 24வது சுற்றுலாத்தலமாக தெரிவு செய்துள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

- ஆடி மாதம் 108 அம்மன் திருக்கோயில்களை தரிசிக்கும் வகையில் ஆன்மீக சுற்றுலாத் திட்டம்.
- மதுரை நாகனா குளத்தில் படகு சவாரி தொடக்கம்.
- முதலியார் குப்பம் படகு குழாமில் 32 பேர் அமரக்கூடிய சொகுசுப் படகு சவாரி புதிதாகத் தொடக்கம்.
- பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக சுற்றுலாப் பயணத்திட்டங்கள் புதிதாகத் தொடக்கம்.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் தங்குவதற்கும், பயணங்கள் மேற்கொள்வதற்கும் ஆன்லைன் மற்றும் "கைப்பேசி'' மூலம் முன்பதிவு செய்யும் முறை செயலாக்கம்.
- உதகமண்டலம் படகு இல்லம் ரூ.5.30 கோடி செலவில் புனரமைக்கப்பட்டது.
- 10 தமிழ்நாடு ஓட்டல்களில் ரூ.1.92 கோடி செலவில் மின்னாக்கிகள் நிறுவப்பட்டன.
- 534 மெத்தைகள் மற்றும் 858 தலையணைகள் ரூ.85 இலட்சம் செலவில், வாங்கப்பட்டு தமிழ்நாடு விடுதிகளுக்கு வழங்கப்பட்டன.



- உதகமண்டலம், ஏற்காடு, இராமேஸ்வரம், கிருஷ்ணகிரி மற்றும் கொடைக்கானல் தமிழ்நாடு ஓட்டல்களில் ரூ.77 இலட்சம் செலவில், புதுமையான சமையலறை உபகரணங்கள் நிறுவப்பட்டன.
- 18 இருக்கைகள் கொண்ட இரண்டு குளிர்சாதனப் பேருந்துகளும், ஒரு வால்வோ பேருந்தும் ரூ.117 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன.
- முதலியார்குப்பம் படகு இல்லத்திற்கு இரண்டு வாழைப்பழ வடிவிலான படகுகள் வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.
- திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.25 இலட்சம் செலவில் ஒரு மின்தூக்கி அமைக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் உணவகம் ரூ.42 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.
- 35 இருக்கைகள் கொண்ட 2 குளிர்சாதன சொகுசு பேருந்துகள் மற்றும் 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதனமற்ற 3 பேருந்துகளும் ரூ.150.52 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.
- ஓசூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.40.61 இலட்சம் செலவில், புதிய கருத்தரங்க அறை கட்டப்பட்டுள்ளது.
- ஒகேனக்கல், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு விடுதிகள் மற்றும் ஊட்டியிலுள்ள இளைஞர் விடுதி ரூ.442 இலட்சம் செலவில் 2014–2015ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக வரலாற்றில், முதன்முறையாக 2013–2014ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ஈவுத் தொகை ரூ.3.13 கோடி அரசிடம் வழங்கப்பட்டுள்ளது.
- 81 புதிய படகுகள் ரூ.76.18 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- 2014–2015 ஆம் ஆண்டிற்கு ரூ.3.13 கோடி ஈவுத் தொகை அரசுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

**கலை பண்பாட்டுத்துறை**

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் கலை பண்பாட்டு வளாகம் ரூ.96 இலட்சம் செலவில் கட்டப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- காஞ்சிபுரத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டலக் ''கலை பண்பாட்டு வளாகம்'' ரூ.92.92 இலட்சம் செலவில் கட்டப் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மதுரை மாவட்டத்தில், ''மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்'' ரூ.87.10 இலட்சம் செலவில், கட்டப்பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- திருநெல்வேலியில் மாவட்ட அரசு இசைப்பள்ளி, ''மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்'' ரூ.1.13 கோடி செலவினத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு ரூ.61.60 இலட்சம் செலவில், குடில்கள், வகுப்பறைகள் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- சேலம் மாவட்ட அரசு இசைப்பள்ளி, மண்டல "கலை பண்பாட்டு வளாகம்" ரூ.107.86 இலட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு மலுமிச்சம்பட்டி கிராமத்தில் கட்டடம் கட்ட ரூ.189.71 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தொகையினை ரூ.250/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி 2012–2013ஆம் ஆண்டு முதல் வழங்க ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2011–2012ஆம் ஆண்டில் முதன்முறையாக கல்வி உதவித் தொகை மாதம் ரூ.200/– வழங்கப்பட்டது. மேலும், இந்த கல்வி உதவித் தொகை 2012–2013 ஆம் கல்வி ஆண்டு முதல் ரூ.200/– என்பதை இரு மடங்காக உயர்த்தி மாதம் ரூ.400/– என்ற அளவில் வழங்க ஆணையிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.
- நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற நிருணயிக்கப்பட்டிருந்த நலிந்த கலைஞர்களின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.12,000/– என்ற நிலையிலிருந்து, அதிகளவில் பயன்பெறும் வகையில் ரூ.60,000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.
- சென்னை, அருங்காட்சியகத்தில், அருங்காட்சியகங்கள் துறை மற்றும் கலை பண்பாட்டுத்துறை ஆகிய துறைகள் இணைந்து நமது பாரம்பரியமிக்க கலைகளை மாணவர்களுக்கு வெளிப்படுத்த ‘பண்பாட்டுப் பலகணி’ என்ற சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் டிசம்பர் 2015 வரை 32,339 கலைஞர்கள் புதியதாக உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 7,362 உறுப்பினர்களுக்கு ரூ.1,25,93,612/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- சென்னை, எழும்பூர் ஆல்சு சாலையில் உள்ள தமிழ் வளர்ச்சி வளாகத்தின், இரண்டாம் தளத்தில் செயல்பட்டு வரும் கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு கூடுதல் கட்டடம் ரூ.66.50 இலட்சம் செலவில் கட்டப்பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் பகுதி நேர கலையாசிரியர்களுக்கு ரூ.1,500/–லிருந்து, ரூ.2,000/– ஆகவும், மாவட்டங்களில் உள்ள கலையாசிரியர்களுக்கு ரூ.300/– லிருந்து ரூ.1,500/– ஆகவும், ஊரக மையங்களுக்கு ரூ.150/– லிருந்து ரூ.1,000/– ஆகவும் மாதந்தோறும் தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்திட கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக, தற்போது ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 2014–2015ஆம் ஆண்டு முதல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய அரசு இசைக் கல்லூரிகளில் பட்டப் படிப்புகள் தொடங்க ஆணையிடப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் இசைக் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக கௌரவப் பேராசிரியர்களை நியமனம் செய்ய ஆணையிடப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஆண்டொன்றுக்கு செலவினம் ரூ.12 இலட்சம்)
- சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள், வார விடுமுறை நாட்களில் விருப்பமுடைய இல்லத்தரசிகளுக்கும், கூடுதல் பட்டம் பெற விரும்பும் கல்லூரி மாணவர்களுக்கும், இசை, நடனம், கவின்கலை ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்கிட ஆணையிடப்பட்டு 2014–2015ஆம் ஆண்டு முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
- கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 7 அரசுக் கல்லூரிகளில் சுகாதார வசதிகள், உணவுக் கூடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் ரூ.1கோடி செலவில் கட்டித்தர ஆணையிடப்பட்டுப் பொதுப்பணித்துறையால் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டது.
- இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகளில் நவீன அனிமேஷன் தொழில்நுட்பத்துடன் கூடிய டிஜிட்டல் கணினிக்கூடங்களும், மூன்று அரசு இசைக் கல்லூரிகளில் கணினிக்கூடங்களும் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நான்கு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பாட்டிற்கு 7 ‘‘டெம்போ டிராவலர்’’ வாகனங்கள் ரூ.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.



- மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் வழங்கப்படும் விருதுத்தொகை அகவைக்கேற்றவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- சென்னை, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் ரூ.103 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் ரூ.5.04 இலட்சம் செலவில் வழங்க ஆணையிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை, கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2013–2014ஆம் கல்வியாண்டிலிருந்து கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை ரூ.10.41 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் சென்னை அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், சென்னை அரசு இசைக் கல்லூரியில் இப்பல்கலைக் கழகம் தற்காலிகமாக செயல்பட ஏதுவாக ரூ.3.87 கோடி செலவில் கட்டட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பல்லைக் கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், புல்லாங்குழல், நாதஸ்வரம், போன்ற பிரிவுகளில் முதுநிலை பட்டப் படிப்பும், டிஜிட்டல் புகைப்படக் கலை மற்றும் காட்சிவழி தகவல் வடிவமைப்பு போன்ற பட்டயப் படிப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் ரூ.75 இலட்சம் செலவில் கலைக்கூடம் கட்டப்பட்டுள்ளது.
- சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள ஆவணக்காப்பகக் கூடத்தினை ரூ.25 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.
- 2013–2014ஆம் நிதியாண்டில் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500/– வீதம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் வண்ணக்கலைப் பிரிவில் நவீன பயிற்சி முறையினை செயல்படுத்திட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- சென்னை மற்றும் திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் வயலின் மற்றும் கீ–போர்டு நவீன கற்பிப்பு முறைகளை அறிமுகப்படுத்திட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளுக்கு மாணவ, மாணவியர்கள் பயன்பாட்டிற்காக இசைக் கருவிகள் வாங்க 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் புதிய டிஜிட்டல் பதிவு அரங்கு நிறுவிட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 2014–2015ஆம் நிதியாண்டில் சென்னை, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு, அரசு இசைக் கல்லூரிகளில் முதலாமாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் 149 மாணவ, மாணவிகளுக்கு ரூ.25.88 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.
- மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் ஒரு முறை (One

time) வழங்கப்படும் குடும்பப் பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.6,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கிட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.9.26 இலட்சம் ஒதுக்கீடு செய்து திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் ஒரு முறை (One time) வழங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.2,000/– வீதம் 200 கலைஞர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ. 6,000/– வீதம் 100 கலைக்குழுக்களுக்கும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் வழங்கிட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- வளரும் சமுதாயத்தினர் பயனுறவும், நாடகத்துறையைச் சார்ந்த பல்வேறு கலைஞர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் தமிழ் நாடகங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் வண்ணம் 2014–2015ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் புதிய வரலாறு மற்றும் புராண நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்திட நாடகம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு 5 நாடகங்களுக்கு ரூ.7.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- கிராமியக் கலைகளைப் பாதுகாக்கும் நோக்கில், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் படைப்புகளை, ஆர்வமுள்ள இளம் கலைஞர்களை தெரிவு செய்து இசை நாடகத் துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளித்திடவும் தெரிவு செய்யப்படும் கலைஞர்களுக்குத் தேவையான இசைக்கருவிகள், பயிற்சிப் பொருட்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் வழங்கிட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் பாரம்பரியம்மிக்க அரிய கிராமியக் கலைகளான பொம்மலாட்டம், தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து, இசை நாடகம் போன்ற கலைகளை முதுபெரும் கிராமியக் கலைஞர்களிடமிருந்து இளையத் தலைமுறையினர் அறியும் வண்ணம் ஆவணமாக்கிட 2014–2015ஆம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆவணமாக்கம் செய்யப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் செயல்படுத்தப்படும் மாநிலங்களுக்கிடையேயான கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்திற்கான தொகையினை ரூ.75,000/– லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- 2014–2015ஆம் நிதியாண்டில் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500/– வீதம் வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.
- சவகர் சிறுவர் மன்ற பகுதி நேர கலை ஆசிரியர்/ திட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் மாத தொகுப்பூதியத்தினை உயர்த்தி வழங்கிட 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ. 9.89 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளுக்குப் புதிதாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.4 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய பொலிரோ சீருந்து வாங்கிட 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ. 7 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- 2015–2016ஆம் நிதியாண்டில் நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500/– வீதம் நிதியுதவி வழங்கிட ரூ.22.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- இதிகாசங்களான மகாபாரதம், இராமயணம் மற்றும் பாகவதம் போன்றவற்றிலிருந்து ஏதேனும் ஒன்றை மையப் பொருளாக வைத்து “வர்ண களஞ்சியம்” என்ற தலைப்பில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் கலை விழாவினை நடத்திட 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- தொன்மை சிறப்பு மிக்க நம் தோற்பாவைக்கூத்து மற்றும் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை பாதுகாக்கும் பொருட்டு அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடையச் செய்யவும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பொம்மைகள் மற்றும் தோல் பொம்மைகள் கலைப் பொருட்கள் வாங்குவதற்கு உள்ளிட்ட செலவினங்களுக்காக 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- கருத்தாழமிக்க கலைகள் சார்ந்த தகுதியுள்ள நூல்களை பதிப்பிக்கவும்,நூல் ஆசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கவும் 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- அயல்நாடுகளுக்கிடையே கலைப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன் மற்றும் அடிலெய்டு ஆகிய இடங்களில் தமிழ் கலை பண்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பாக 20.03.2015 முதல் 31.03.2015 வரை ரூ.19.19 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் சிலோம் என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீமகாமாரியம்மன் ஆலயத்தில் 12.10.2015 முதல் 22.10.2015 வரை நடைபெற்ற நவராத்திரி திருவிழாவில் தமிழக அரசின் சார்பாக கலை பண்பாட்டுத் துறையின் சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள் வழங்குவதற்காக ரூ.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு தாய்லாந்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- சென்னை தமிழ்ச்சங்கம் மற்றும் மலேசிய தமிழ்ச்சங்கத்தால் மலேசியாவில் 10.12.2015 முதல் 13.12.2015 வரை 4 நாட்கள் நடத்தப்பெற்ற பாரதியார் பிறந்தநாள்விழா பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும் மாமன்னர் ராசராசசோழன் மற்றும் இராஜேந்திரசோழன் ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களில் தமிழகம் சார்பில் கலை பண்பாட்டுத் துறையின் திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கலை நிகழ்ச்சிகள் வழங்கிட ரூ.6.65 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு மலேசியாவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தென்னிந்திய கலை மற்றும் பண்பாட்டினை மொரிஷியஸ் நாட்டு மக்களிடையே சிறப்பிக்கும் விதமாக தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பாக சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் மொரிஷியஸ் நாட்டில் 12.11.2015 முதல் 17.11.2015 வரை 6 நாட்கள் கலை நிகழ்ச்சிகள் வழங்கிட ரூ.6.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு மொரிஷியஸ் நாட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக அருங்காட்சியக வளாகத்தில் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் மூலம் சனிக்கிழமை தோறும் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகள் வழங்கிட 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ. 8.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டம், ஈரோடு நகரில் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் மூலம் மார்கழி இசை விழா நடத்திட 2015–2016ஆம் நிதியாண்டில் ரூ.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**தொல்லியல் துறை**

- “தமிழ்நாடு புராதன ஆணையச் சட்டம்” 16.05.2012 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்டது.
- இந்திய மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கி வருகின்றது.
- அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் பொதுப்பணித் துறையின் மூலம் ஏற்படுத்த ரூ.119.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு

பொதுப்பணித் துறை மூலம் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

- பொதுமக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள சுவடிகளை நுண்படம் மூலம் பாதுகாக்க ரூ.3.54 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

- தொல்லியல் துறையின் வரலாற்றுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பற்றிய விவரங்களை சுற்றுலாத் துறையின் மாவட்ட வரைபடங்கள் மற்றும் கையேடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

- தொல்லியல் வெளியீடாக (கல்வெட்டு நூல்கள்–9, மாணவர்கள் ஆய்வேடுகள்–6, அகழாய்வு அறிக்கைகள்–7, அகழ்வைப்பக கையேடுகள்–3, தொல்லியல் கையேடு–6, பொது–5, கல்வெட்டு காலாண்டு இதழ்கள்–11) ஆகிய மொத்தம் 47 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- 2011–2012ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.54.55 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, வரலாற்றுச் சின்னங்களில் இடிதாங்கிகள் அமைத்தல், தீயணைப்பு கருவிகள் பொருத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டன.

- காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம் ஆலம்பரை கோட்டை பகுதியில் 2011–2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பலவகை பானை ஓடுகள், பீரங்கி குண்டுகள், செம்பு காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக ஒரு கண்காட்சி பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அகழாய்வு அறிக்கை நூலாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துறையின் செயல்திறன் மேம்படுத்துதல் (Autonomous Status) மற்றும் அவசர தேவைக்கான நிதி ஆதாரம் (Discretionary Fund)இன் கீழ், தொல்லியல் துறையின் சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களின் பாதுகாப்பு, பராமரிப்புப் பணிகள், கல்விசார் மற்றும் தொழில்நுட்ப பணிகளை மேற்கொள்ள கண்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், தொல்லியல் விழாக்கள் கொண்டாடுதல் ஆகிய நிகழ்வுகளுக்காக ஆண்டுதோறும் ரூ.10 இலட்சத்திற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- 2012–2013ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.61.50 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. துறை வெளியீடுகள், அரிய நிழற்பட கருப்பு வெள்ளை எதிர்மறை படங்கள் (Negatives) மற்றும் நிழற்பட மெல்லிய சதுர தட்டு (Slides)–களை எண்ணிலக்க நவீன நிழற்படங்களாக மாற்றுதல், கல்வெட்டு நூல்களை வெளியிடுதல், தொல்லியல் துறை நூலகத்தின் தரத்தை மேம்படுத்துதல், பாதுகாப்பு பணிகளுக்காக வேதியியல் பொருட்கள் வாங்குதல், நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் பகுதியில் ஆழ்கடல் அகழ்வைப்பக கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொளிக்காட்சி மூலம் 27.06.2014 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. கல்வெட்டு நூல்களை வெளியிடுதல், துறை நூலகத்தின் தரத்தினை மேம்படுத்துதல், பாதுகாப்புப் பணிக்காக வேதியியல் பொருட்களை வாங்குதல் போன்ற பணிகள் முற்று பெற்றுவிட்டன.

- சிவகங்கை, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் தொடர்ந்து கல்வெட்டுகள் மைப்படி எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை, 684 கல்வெட்டுகள் மைப்படி எடுக்கப்பட்டுள்ளன.

- பழம் பொருட்கள் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ், 844 கலை பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் 41,100 பக்கங்கள் டிஜிட்டல் படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

- 13ஆவது நிதிக் குழு மானியம் (2011–2015) இன் கீழ், இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 30 புராதன கோயில் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு பணிகளுக்கான தொகை மொத்தமாக ரூ.970.70 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதில், 2011–2012ஆம் நிதியாண்டில் இரண்டு சின்னங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2012–2013ஆம் ஆண்டு 16 கோயில்களின் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் ரூ.5.95 கோடி



செலவிலும் மற்றும் 2013–2014 ஆம் ஆண்டு ரூ.3.57கோடி மதிப்பில் 9 கோயில்களில் சின்னங்களின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனமாக மூன்று தட்டச்சர்கள் மற்றும் ஒரு இளநிலை உதவியர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஒரு நிழற்படமெடுப்பவர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- தொல்லியல் துறையில் காலியாக இருந்த 13 தொழில்நுட்ப அலுவலர் பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- விழுப்புரம் மாவட்டம், பெருமுக்கல் எனும் கிராமத்தில் அமைந்துள்ள முக்தியாசாலேஸ்வரர் கோயிலின் பாதுகாப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.1 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு பொதுப்பணித்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டு அதனை கணினி மென்பொருள் மற்றும் வன்பொருளில் பதிவு செய்வதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு. எல்காட் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை, 14,000 கல்வெட்டு மைப்படிகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டுள்ளன. பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

- ரூ.2 இலட்சம் செலவில் "அறிந்து கொள்ளுங்கள் உங்கள் பாரம்பரியத்தை" என்ற மாணவர் சமுதாயத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் (21.01.2014), சென்னை (30.01.2014), தஞ்சாவூர் (18.02.2014) மற்றும் மதுரை (12.03.2014 மற்றும் 13.03.2014) ஆகிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்டது.

- திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள அகழ்வைப்பக வளாகத்தில் "தொல் பழங்காலப் பூங்கா" அமைப்பதற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு. மேற்படி, பணிகள் கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, தொல் பழங்கால விலங்குகள் மாதிரிகள் 29.10.2015 அன்று பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- மதுரை, மனோரா, தரங்கம்பாடி, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய அகழ்வைப்பகங்களுக்கு நுழைவுக் கட்டணம் வழங்க 8 நவீன கையடக்கக் கருவிகள் ரூ.20 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு ஆணை. எல்காட் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 16.11.2015 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் ஆண்டு 'ஐம்பை பிராமி கல்வெட்டுகள்' திருகோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம், 'வழிப்போக்கர் மண்டபம்' பாப்பனம் கிராமம், காரியபட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம் மற்றும் 'அருள்மிகு நாகநாதசுவாமி கோயில், மானம்பாடி கிராமம், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய மூன்று சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயில் பகுதியில் தொல்லியல் அகழாய்வு ரூ.5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

- 2014–2015 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், உக்கிரன்கோட்டை ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் ரூ. 6 இலட்சம் மதிப்பில் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

- 2014–2015ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், திருமலை கிராமத்தில் அமைந்துள்ள "பாறை ஓவியம், தமிழ் பிராமி கல்வெட்டுகள், சமணர் படுக்கை, குடைவரை கோயில் புதிய சின்னம் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டு, மே 2015 அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை புராதன நினைவுச் சின்னங்கனை பாதுகாக்க டிசம்பர் 3ஆம் தேதி முதல் ஜனவரி 13ஆம் தேதி வரை கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறையின் 22 பொறியாளர்களுக்கு 'பாதுகாப்பு

மற்றும் புனரமைப்பு' என்னும் குறுகிய கால ஆறுவார கால பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சி பொறியாளர்களுக்கு தொல்லியல் விதிகளின்படி கோயில்களை பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு தொடர்பான விவரங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக மேலும் 22 பொறியாளர்களுக்கான பயிற்சி 19.03.2015 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன.

- தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சமஸ்கிருத சுவடிகளை நவீன முறையில் எண்ணிலக்கம் செய்து மின்–வெளியீடு துறையின் வலைதளத்தில் வெளியிடும் பணிகளுக்காக ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு, பணிகள் எல்காட் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சப்த ரிஷி நாடி என்னும் நூலின் ஆறு தொகுதிகளை (மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி லக்கனம்) மறுபதிப்பு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சியின் மூலம் 15.09.2015 அன்று பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்கள் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது.
- 2015–2016 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் கீழ் நான்கு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ரூ. 10 இலட்சம் செலவில் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் தொல்லியல் அகழாய்வு.
- இந்துசமய அறநிலையத்துறை பொறியாளர்களுக்கான 6 வார குறுகிய கால "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு" பயிற்சி ரூ.25 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளுதல்.
- இந்துசமய அறநிலையத்துறை செயல் அலுவலர்களுக்கு 4 வார குறுகிய கால "புராதன நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பயிற்சி" ரூ.20 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளுதல்.
- துறையின் ஐந்து அகழ்வைப்பகங்களை மேம்படுத்தும் நோக்கில் நவீன LED TV, இன்வெர்ட்டர், ஊடக கருவிகள், தேவையான உள்கட்டமைப்பு மற்றும் தேவையான உபகரணங்கள் ரூ.20 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்துதல்.

**அருங்காட்சியகங்கள் துறை**

- சென்னை மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் பல்வேறு காலியிடங்களில் இருபத்து ஏழு நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.
- ரூ.95 இலட்சம் செலவில், 88.5 மீட்டர் நீளத்திற்கு அருங்காட்சியகப் பாரம்பரியச் சுற்றுச் சுவரின் மீதமுள்ள பகுதியைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது.
- ரூ.36 இலட்சம் செலவில், கருங்கல் தளம் அமைத்து பார்வையாளர்களுக்குரிய வசதிகளுடன் சிறுவர் அருங்காட்சியகத்தினை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது.
- ரூ.2.83 இலட்சம் செலவில் மரச்சிற்ப வேலைப்பாட்டுக் காட்சிக் கூடத்தைத் திருத்தியமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ரூ.35 இலட்சம் செலவில், பாறை மற்றும் குகைக் காட்சிக்கூடத்தைப் புத்தாக்கம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.
- ரூ.9.4 இலட்சம் செலவில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு நடைபழகு சிற்பப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- காட்சிப்படுத்தப்பட்ட பின் எஞ்சிய அமராவதிச் சிற்பங்களைப் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தும் பணி ரூ.43 இலட்சம் செலவில் முடிவடைந்துள்ளது.
- ரூ.57.5 இலட்சம் செலவில், நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடத்தைப் புத்தாக்கம் செய்திடும் பணி முடிவடைந்துள்ளது.
- ரூ.19 இலட்சம் செலவில், சென்னை அரசு அருங்காட்சியக உள் சாலைகளை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.
- ரூ.1 கோடி செலவில், சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக்கூடங்களுக்கென 5 மின் உற்பத்தி ஆக்கிகள்.



- ரூ.11 இலட்சம் செலவில் அருங்காட்சியகச் செயற்பாட்டு மையத்தைப் புத்தாக்கம் செய்யும் பணி.
- ரூ.16 இலட்சம் செலவில், மாற்றுத் திறனாளிகளுக்கான கூடுதல் கழிப்பறைகள்.
- தமிழ்நாட்டுக் கலைகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 'பண்பாட்டு பலகணி' என்ற கலாச்சார நிகழ்ச்சியை கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து சென்னை அருங்காட்சியகத்தில் 26.07.2012 முதல் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.
- புது முயற்சியாக 'இவ்வாரக் காட்சிப் பொருள், மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு கலை பயிற்சி அளித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஜுன் 2011ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகின்றன. புதியத் திட்டங்களாக 'நேர் நிகர் அருங்காட்சியகம்', 'சென்னை அருங்காட்சியகத்தைப் பற்றிய தகவல்கள் தரும் திரைப்படம்' உயிருள்ள விலங்கினம் போன்ற டைனோசர் மாதிரி அமைப்பு ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.11 கோடி செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நெடுங்காலமாக சீர் செய்யப்படாமல் இருந்த தேசிய கலைக்கூடத்தினைப் புனரமைப்பு.
- ரூ.1 கோடி செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் சேமிப்பில் உள்ள கலைப்பொருட்களைக் காட்சிக்கு வைப்பதற்கு காட்சியமைப்புடன் கூடிய இருப்பறை.
- ரூ.10 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்கள் வசதிக்காக வழிகாட்டிப் பலகைகள்.
- ரூ.2 கோடி செலவில் அரியலூரில் புதையுயிரி படிவ அருங்காட்சியகம்.
- ரூ.2 இலட்சம் கிராமபோன் ரெகார்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தென்னிந்திய பழங்குடியினர் வழக்கு மொழிகள் மற்றும் கண்ணாடி எதிர்பிரதிகளில் பதிவு செய்யப்பட்டவற்றை ஆவணப்படுத்தி இணையதளத்தில் (e-publishing) வெளியீடு.
- அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவில், திருவல்லிக்கேணி, அருள்மிகு வரதராஜ சுவாமி கோவில், காஞ்சிபுரம் ஆகிய கோவில்களில் கண்டெடுக்கப்பட்ட சுவரோவியங்கள் பாதுகாத்து மீட்டுருவாக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.
- சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள ஒரு மார்பிள் சிலைக்கு வேதிய பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- 18.05.2015 அன்று அகில உலக அருங்காட்சியகங்கள் தினத்தையொட்டி 'தமிழ் நாட்டின் அருங்காட்சியகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள்' பற்றிய ஒரு சிறப்பு கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது.
- மாதாந்திர சிறப்பு கண்காட்சியாக அரிய கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- அருங்காட்சியகத் துறையின் அனைத்து வெளியீடுகளையும் மின்னணுப் பதிப்பாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு மாத கால 41வது அரும்பொருட்களை பாதுகாக்கும் புத்தொளிப் பயிற்சி நடத்தப்பெற்றது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.09.2015 அன்று காணொலிக் காட்சி மூலம் சென்னை, அரசு அருங்காட்சியத்தில் 2,400 சதுரஅடி பரப்பளவு கொண்ட சேமிப்புடன் கூடிய இருப்பறை கட்டடத்தை திறந்து வைத்து, 1. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் அமராவதி காட்சிக்கூடம் புத்தாக்கம் மற்றும் பாதுகாப்பு செய்யப்பட்ட அமராவதி சிற்பங்களின் தொகுப்பேடு, 2. திருப்புடைமருதூர் சுவர் ஓவியங்கள் மற்றும் மரச்சிற்பங்கள் மற்றும் 3. சென்னை அரசு அருங்காட்சியக படிமங்களின் கையேடுகள் ஆகிய மூன்று புத்தகங்களை வெளியிட்டார்கள்.
- சென்னை, அருள்மிரு பார்த்தசாரதி கோயிலில் இரண்டு சுவர் ஓவியங்கள் பாதிக்கப்பட்டும் சிமெண்ட் பூச்சு பூசப்பட்டும் இருந்ததைக் கண்டறிந்து அவற்றை தொல்லியல் பாதுகாப்பு முறையில் மீட்டு உருவாக்கும் பணிகள் 2015, செப்டம்பர் மாதத்தில் முடிக்கப்பட்டன.
- சென்னை, உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதிகளின் 100 உருவ ஓவியங்கள் சென்னை அரசு அருங்காட்சியக வேதியியல் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தால் சீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள்

தற்போது 30 ஓவியங்கள் அக்டோபர் 2015 வரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஓவியங்கள் மார்ச் 2016ற்குள் முடிக்கப்படும்.

- சென்னை, அரசு அருங்காட்சியகத்தின் உலகப் புகழ்பெற்ற படிமக் காட்சிக்கூடத்தில் 2003 ஆம் ஆண்டு ஜெர்மானிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றி காட்சிப்பெட்டிகளை வடிவமைத்து படிமங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அக்காட்சிப் பெட்டிகளில் உள்ள மின்னொளி அமைப்புகளுக்கு மாற்றாக நவீன எல்.இ.டி மின்னொளி அமைப்புகள் அதற்கான பேனல்களுடன் ரூ. 50 இலட்சம் செலவில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தற்கால ஓவியங்கள் மற்றும் ராஜா ரவி வர்மா ஓவியங்கள் காட்சியமைக்கப்பட்டுள்ள வளர்கலைக் கூடத்திலும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. படிமக்கூட காட்சிப்பெட்டிகளை நவீனப்படுத்த ரூ.30 இலட்சமும், வளர்கலைக்கூடத்தில் உள்ள காட்சிப்பெட்டிகளுக்கு ரூ.20 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்”.

**இந்து சமய அறநிலையத் துறை**

- 694 திருக்கோயில்களுக்கு சொந்தமான 4,185.98 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்ய ஆணை பெறப்பட்டது.
- 118 திருக்கோயில்களுக்கு சொந்தமான 563.91 ஏக்கர் பரப்பளவுடைய நிலங்களின் பதிவுகள் கணினி சிட்டாவில் தனியார் பெயரில் இருந்ததைக் கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 206 திருக்கோயில்களுக்கு சொந்தமான 1,940.33 ஏக்கர் நிலங்களும் 311 கிரவுண்டு 2,233 சதுர அடி மனைகளும், 138 கிரவுண்டு 1,483 சதுர அடி கட்டடங்களும் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு சுவாதீனம் பெறப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் ரூ.2,391.75 கோடியாகும். இவற்றில் 2015–2016ஆம் ஆண்டில் மட்டும் 53.54 ஏக்கர் விளை நிலங்களும் 7 கிரவுண்டு 16.38 சதுர அடி பரப்பளவுள்ள மனைகளும், 14 கிரவுண்டு 0457 சதுர.அடி பரப்புள்ள கட்டடங்கள் சுவாதீனம் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.54.20 கோடி ஆகும்.
- அன்னதானத் திட்டம் தற்போது 518 திருக்கோயில்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பழநி மற்றும் ஸ்ரீரங்கம் திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 2013–2014ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், 2014–2015ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும் அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 724 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் நடைபெற்று வருகிறது.
- ரூ.2.63 கோடி அரசு மானியத்தில் முதுமலை தெப்பக்காட்டில் 2011 இல் 37 யானைகளுக்கும் கோவை மாவட்டம், தேக்கம்பட்டியில் 2012 மற்றும் 2013 இல் 68 யானைகளுக்கும், 2014–2015இல் 30 யானைகளுக்கும் சிறப்பு நலவாழ்வு முகாம்கள் சிறப்பாக நடைபெற்றன. 2015–2016 ஆம் ஆண்டிற்கு யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 07.01.2016 முதல் 23.02.2016 வரையிலான 48 நாட்கள் கோவை மாவட்டம் தேக்கம்பட்டியில் நடைபெற்று வருகிறது.
- ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ், 12,504 திருக்கோயில்களுக்கு, ரூ.1,00,000/– முதலீடு செய்யப்பட்டு ரூ.125.04 கோடி முதலீட்டில் ஒருகால பூஜைத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.
- பெரிய வளாகம் உள்ள திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் எளிய முறையில் சென்று தரிசனம் செய்ய ஏதுவாக 12 மின்கல மகிழுந்துகள் 9 திருக்கோயில்களில் பயன்பாட்டில் உள்ளன.
- 8,499 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது (31.12.2015 வரை).
- 250 தொன்மையான திருக்கோயில்களில் பழைமை மாறாது புதுப்பிக்க ஆண்டொன்றுக்கு ரூ.22.50 கோடி வீதம் ரூ.90 கோடி வழங்கப்பட்டது.
- 143 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.






- 611 திருக்குளங்கள் ரூ.3.31 கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்வு செய்யப்பட்டு 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டுகளில் 624 திருக்கோயில்களுக்கு ரூ.3.12கோடியும்,2013–2014ஆம்நிதியாண்டிற்கு 1,006 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ.5.03 கோடி நிதியுதவியும், 2014–2015ஆம் நிதியாண்டிற்கு 1,006 திருக்கோயில்களுக்கு ரூ.5.03 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டிற்கு 1,004 திருக்கோயில் திருப்பணிகளுக்கு ரூ5.02 கோடி நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டுக்கு 96 திருக்கோயில்களின் திருப்பணிக்காக வருடத்திற்கு ரூ.3 கோடியாக இரு வருடங்களில் ரூ.6 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது. 2013–2014ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் அரசு மானியம் ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக உயர்த்தப்பட்டு, 70 திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டது. 2014–2015ஆம் ஆண்டிற்கானமானியம்2016இல் மகாமகம் நடைபெறும் 36 திருக்கோயில்கள் திருப்பணிக்கென வழங்கப்பட்டுள்ளது.
- 753 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.57.17 கோடி பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.
- துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், இவ்வரசு பொறுப்பேற்ற பின் மாத ஓய்வூதியம் ரூ.800 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி மொத்தம் 3,995 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.
- அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர்கள், திவ்யப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.750/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தப்பட்டு, 364 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.
- துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கிராமப்புறப் பூசாரிகளுக்கான ஓய்வூதியம் ரூ.750/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் 3,022 பூசாரிகள் பயனடைவர்.



- இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் 12,160 திருக்கோயில் பணியாளர்கள் பயன் அடைந்தனர்.
- இந்து சமய அறநிலைய துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு, திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்து விவரங்களை சேகரித்து வைக்கவும், எந்த தருணத்திலும் விவரங்கள் அளிக்க தயார் நிலையில் இருக்க ஏதுவாக பணியிலுள்ள 767 அலுவலர்களுக்கு ரூ.2.99 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.
- திருக்கோயில் நிலங்களைக் கண்டறியும் பணிக்காக, இவ்வரசு பொறுப்பேற்றப் பின்னர் ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்கள் 3, ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள் 8 பேர் மற்றும் நில அளவையர்கள் 8 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- ஒருங்கிணைந்த கன்னியாகுமரி திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும், நிருவாக செலவினத் தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், இந்து சமயத்தைச் சேர்ந்த, சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை, எளிய 1,006 இணைகளுக்கு 18.06.2012 அன்று திருவேற்காட்டில் திருமணம் செய்து வைக்கப்பட்டது.
- மாவட்டந்தோறும் ‘பாவை விழா’ நடத்தப்பட்டு கலந்து கொண்ட 17,783 மாணவ, மாணவியர்களில் 2,910 மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்பட்டு, 25,920 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
- 4,460 திருக்கோயில்களில் பணிபுரியும் 5,579 சிப்பந்திகளுக்கு ரூ.270.31 இலட்சம் சம்பள பாக்கி நிலுவைத் தொகை வழங்கப்பட்டது.
- பணியில் இருக்கும் போது இறந்த பணியாளர்களின் 332 வாரிசுதாரர்களுக்கு ரூ.3.27 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.
- திருக்கோயில்களில் கருணை அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களின் 98 வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம்.
- சிலைகள் பாதுகாப்பிற்காக ரூ.14.19 கோடி செலவில் தற்போதுள்ள 19 சிலை பாதுகாப்பு மையங்களுடன் புதியதாக 15 சிலை பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- 2012–2013ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணம் மேற்கொண்ட 146 நபர்களுக்கு தலா ரூ.40,000/–மும் முக்திநாத் புனித பயணம் மேற்கொண்ட 10 நபர்களுக்கு தலா



ரூ.10,000/–மும் மானியம் வழங்கப்பட்டது. 2013–2014ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணம் மேற்கொண்ட 209 நபர்களுக்கு ரூ.40,000/–மும், முக்திநாத் புனித பயணம் மேற்கொண்ட 11 நபர்களுக்கு தலா ரூ.10,000/–மும் மானியம் வழங்கப்படவுள்ளது.



- ரூ.47.08 கோடி செலவில் ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவண்ணாமலை மற்றும் இராமேஸ்வரத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்படவுள்ளது.
- திருக்கோயில் பாதுக்காப்பிற்காக நவீனப்படுத்தப்பட்ட களவு எச்சரிக்கை மணி, கண்காணிப்பு காட்சிக் கருவி (CCTV) ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதைப் போல நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கும் களவு எச்சரிக்கை மணி பொருத்த நிதி வசதி செய்யப்பட்டு, 505 திருக்கோயில்களில் ரூ.63.98 இலட்ச மதிப்பீட்டில் பொருத்தப்பட்டது.
- திருக்கோயில் ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.72,000/–க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் பெறும் ஊழியர்கள் பயன்பெறுவது மட்டுமல்லாது ரூ.72,000/– மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மகாமகம் திருவிழாவை ஒட்டிய திருப்பணிக்களுக்கான இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக நிதி ரூ6.00 கோடி திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.
- 10,000 சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ2.44 கோடி செலவில் வழங்கப்பட்டன.
- அன்னதானத்திட்டத்தில் பணியாற்றும் 820 தற்காலிக பணியாளர்களை பணிவரன் முறை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.09.2015 அன்று ஆணைகள் வழங்கப்பட்டன.
- தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த 8,184 திருக்கோயில் பணியாளர்களை பணிவரன் முறை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.09.2015 அன்று ஆணைகள் வழங்கப்பட்டன.

❖ ❖ ❖

## போக்குவரத்துத் துறை

# வளர்ச்சிப் பாதையில் என்றும் முன்னோக்கிய பயணம்!






- 1,480 புதிய வழித்தடங்கள் தொடக்கம். சென்னையில் 40 சிற்றுந்துகள் இதில் அடங்கும்.
- 7,571 புதிய பேருந்துகள் ரூ.1,422.84 கோடியில் வாங்க ஆணை. இதுவரை 6,559 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. (அனைத்து விதமான பேருந்துகள் உட்பட)
- சென்னையில் பயணம் செய்யும் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போக்குவரத்து இணைப்பில்லா பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையங்களுடன் இணைப்பதற்கு 100 சிற்றுந்துகள் (Small Buses) 40 வழித்தடங்களில் இயக்கம். மேலும், 100 சிறிய பேருந்துகள் 2014–2015இல் வாங்க ஆணை.
- மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில் 208 சிற்றுந்துகள் இயக்க அனுமதி மற்றும் 80 பேருந்துகள் இயக்கம்.
- சென்னை மாநகர் மக்களின் கூடுதல் போக்குவரத்துத் தேவையினை நிறைவேற்றும் வகையில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 2013–2014இல் 134லிருந்து 200 ஆகவும், 2014–2015இல் 200லிருந்து 250ஆகவும் உயர்வு.
- முதல்முறையாக மாற்றுத்திறனாளிகள் எளிதாக ஏறி இறங்க பத்து சிறப்பு வடிவமைப்பு பேருந்துகள் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகம்.
- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக ஸ்ரீரங்கம் – சென்னை தடத்தில் உணவு வசதியுடன் கூடிய இரண்டு பேருந்துகள் தொடக்கம்.
- ரூ.48.79 கோடி செலவில் 717 பழையப் பேருந்துகள் புதுபிக்கப்பட்டு இயக்கம்.
- கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் உதிரி பாகங்களை மின்னணு ஏல முறையில் ஏலமிடும் முறை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் அறிமுகம்.

**புதிய முயற்சிகள்**

- ரூ. 31.66 கோடி அரசு செலவில், புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அறிமுகம். முன்னோட்டமாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் திருநெல்வேலி தவிர, மற்ற கழகங்களில் 17,251 கையடக்க மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் வழங்கல். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.
- கூடுதல் வருவாயை ஈட்டும் பொருட்டு சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை அறிமுகம்.
- அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் கட்டணமில்லாக் கையடக்க இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பயணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் ஒரு லிட்டர் பாட்டில் ரூ.10/–க்கு வழங்க அம்மா குடிநீர் நிலையம் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலம் கும்மிடிப்பூண்டியில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், ஒரு அம்மா குடிநீர் நிலையம் மாநகரப் போக்குவரத்துக் கழகம் மூலம் கும்மிடிப்பூண்டியில் நிறுவப்படவுள்ளது. 13.12.2015 வரை 10,98,00,204 லிட்டர் குடிநீர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நகரப் பேருந்துகளில் மூன்றில் ஒரு பங்கு சலுகை கட்டணத்துடன் கூடிய பயணச்சீட்டு வழங்கும் முறை புறநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் விரிவாக்கம்.
- தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்கள் நீங்கலாக முன்பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தபட்சம் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் குழுமப் பயணிகளுக்கு பயணத்தொகையில் பத்து சதவிகித தள்ளுபடி.
- ரூ.3.55 கோடி செலவில் சென்னை மாநகரப் பேருந்துகளில் கையடக்க பயண அட்டையை அமல்படுத்த அனுமதி.
- கரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் ஊட்டியில் போக்குவரத்துக் கழக புதிய மண்டலங்கள் தொடக்கம்.
- அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் தாமாக முன்வந்து இரத்த தானம் வழங்கும் திட்டம் தொடக்கம். 14.02.2014 அன்று ஒரே நாளில், 53,129 தொழிலாளர்கள் இரத்ததானம் செய்து கின்னஸ் சாதனை செய்துள்ளனர்.

**போக்குவரத்துக் கழக ஊழியர்களின் நலன்**

- 45 வயதிற்கு மேற்பட்ட 21,885 ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை. 2013–2014இல், இத்திட்டம் 45 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 52,646 பணியாளர்கள் பயன்.
- பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.1.28 கோடியில் புதிய சி.டி. நிழல் ஒளிக்கூறு இயந்திரம்.
- விபத்தில்லாப் பணித் திட்டத்தின்கீழ், ரூ.12.72 கோடி மதிப்பில் விபத்தில்லாமல் பணி செய்த ஓட்டுநர்களுக்கு ஊக்கத் தொகை.
- கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பணியாளர் ஓய்வறையில் ரூ.17 இலட்சம் செலவில் 223 இரண்டு அடுக்குக் கட்டில்.
- பண்டிகைக் கால முன்பணம் ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- ரூ.3.81 கோடி செலவில், பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள பணியாளர் ஓய்வறைகள் மேம்பாடு.
- போக்குவரத்துக் கழக மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் தேதி ஊதியத்துடன் சிறப்பு விடுப்பு அனுமதி.
- 2014–2015இல் பணியிலிருக்கும், போக்குவரத்துக்கழக தொழிலாளர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில், உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சித் திட்டம்.
- பணியிலிருக்கும் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு குடும்ப இலவசப் பயண சலுகை 4,500 கி.மீட்டரிலிருந்து 5,500 கி.மீட்டராக உயர்வு.
- போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 200 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், பணிமனை மற்றும் தொழிற்கூடங்களில் ரூ.3 கோடி செலவில் ஆணை.
- போக்குவரத்துத் தொழிலாளர்களின் மகள் மற்றும் மகன் திருமண உதவித் தொகையாக



முறையே, ரூ.30,000/– லிருந்து ரூ.50,000/–மாகவும், ரூ.20,000/– லிருந்து ரூ.50,000/–மாகவும் உயர்வு.

- போக்குவரத்து தொழிலாளர்களின் ஈமச்சடங்கு செலவுத் தொகை ரூ.2,000/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்வு.
- அக்டோபர் 2013 வரை ஓய்வு பெற்ற 14,089 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.292.94 கோடி ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை நான்கு கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளது.
- 47,649 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.45.77 கோடி அகவிலைப்படி நிலுவைத் தொகை மற்றும் 4,908 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.24 கோடி ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- ஓய்வுபெற்ற 13,995 பணியாளர்களுக்கு பணிக்கொடையாக, ரூ.499.08 கோடி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 5,175 பணியாளர்களுக்கு விடுப்பு சம்பளம் ரூ.50.93 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- சாலைப் போக்குவரத்து நிறுவன பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் பட்டயப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஈரோடு பொறியியல் கல்லூரியில் கட்டடப் பொறியியல் பிரிவிலும், தானியங்கிப் பொறியியல் பிரிவிலும் தலா 30 கூடுதல் இடங்கள் ஒதுக்கீடு.
- விபத்தில்லாமல் பேருந்து ஓட்டும் ஓட்டுநர்களுக்கு ரொக்கப் பரிசு உயர்த்தி வழங்கப்படுகிறது. அதன்படி, 1 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.1,000லிருந்து ரூ.1,500ஆக உயர்வு, 5 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.5,000ஆகவும், 10 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.10,000ஆகவும், 15 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.10,000லிருந்து ரூ.15,000ஆகவும் உயர்வு. 20 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.15,000லிருந்து ரூ.20,000ஆகவும் உயர்வு. 25 வருடம் விபத்தின்றி பேருந்து இயக்குதலுக்கு ரூ.20,000லிருந்து ரூ.25,000ஆக உயர்வு
- நடத்துனர் மற்றும் ஓட்டுநரின் கட்டணம் பணியிலுள்ள கழக நடத்துநர் மற்றும் ஓட்டுநர்களுக்கு திரும்ப வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- 2015–2016 ஆம் ஆண்டில் பணியாளர்களுக்கு பஞ்சப்படி நிலுவைத் தொகைக்காக ரூ.66 கோடியும், ரூ.66 கோடி ஓய்வூதிய பணப்பலன்கள் வழங்கவும் மற்றும் ரூ.152 கோடி ஊதிய ஒப்பந்த நிலுவைத் தொகையாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- மேல்நிலைப் பள்ளி தேர்வில் (+2) முதலிடம் பெற்ற போக்குவரத்துக் கழக தொழிலாளர் குழந்தைகளுக்கு மேல் படிப்பிற்கான கல்விக் கட்டணத்தை ஒவ்வொரு கழகமும் வழங்குதல்.

**ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சலுகைகள்**

- ஓய்வு பெற்றவர்களுக்கும் அவர்களது துணைவியரும் புறநகர் பேருந்துகளிலும் இலவச பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இது இறந்த பணியாளர்களின் துணைவியருக்கும் புறநகர் பேருந்துகளில் அனுமதி.



- 01.09.2010க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ஏப்ரல் 2015 முதல் 15 சதவிகிதம் உயர்வு.
- 01.09.1992 முதல் 31.08.1998 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் ஒவ்வொரு மாதமொன்றுக்கு ரூ.1,000 பணப்பலன் வழங்குதல்.

**பணி நியமனங்கள்**

- 35,255 ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.
- அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் 388 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- 2012–2013 அறிவிப்பின்படி அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 9,157 பதிலி பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.
- பணியிடை இறந்த போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 800 பேர்களுக்கு பதிவு மூப்பின்படி கருணை அடிப்படையில் இரண்டு ஆண்டு பயிற்சிக்குப் பின் பணி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**விருதுகள்**

- 2015இல் 2012–2014ஆம் ஆண்டிற்கான ஏழு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு செயல்திறன்களுக்காக, 34 விருதுகளை அனைத்து மாநில சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பிலிருந்து (ASRTU) பெற்றுள்ளன.
- தமிழகப் போக்குவரத்துக் கழகங்களின் 2011–2012ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக மத்திய திட்டக்குழுப் பாராட்டு.

**புதிய கட்டடங்கள்**

- 74 புதியப் பணிமனைகள் அமைக்க நடவடிக்கை. இதில் இதுவரை 33 பணிமனைகள் ரூ.27.89 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன.
- அரசுப் போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலியில் தலைமையகம் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டு அலுவலகம் இயங்கி வருகிறது.
- நவம்பர் 2011 முதல் 37 பயணவழி உணவகங்கள் தரம் உயர்வு.
- 2014–2015இல் தண்டையார்பேட்டை, அயனாவரம், புதுக்கோட்டை தகுதிச்சான்று பிரிவு மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவும், ரூ.3 கோடியில் விரிவாக்கம்.
- சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பள்ளி திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் ரூ.15 கோடி செலவில் அமைத்தல்.
- குரோம்பேட்டை, பொள்ளாச்சி, கரூர் ஆகிய இடங்களில் கூடுதல் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு அமைத்திட அனுமதி. அதில், குரோம்பேட்டை மற்றும் பொள்ளாச்சி கூண்டுகட்டும் பிரிவு இயங்கி வருகிறது.
- 13 மாவட்ட தலைநகரங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்கள் அமைத்திட ஆணை.

**பேருந்துகளின் இயக்கம்**

- வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை, 19,167இல் இருந்து 20,739 ஆக உயர்வு.
- தொலைதூர வழித் தடங்களுக்கு முன்பதிவு மையத்தின் இணையதளம் மூலமாக பயண சீட்டுகள் எங்கிருந்தும் வழங்கப்படுகிறது.
- தொலைதூரப் பயணிகளின் வசதிக்காக தமிழகத்தின் பல்வேறு இடங்களில். 123 (On-Line) முன்பதிவு மையங்கள் தொடக்கம்.
- "விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு"முறை வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மாநகராட்சிகளிலும் ஜுன் 2012இல் அறிமுகம்.

**உயர் வேக டீசலுக்கான நிதியுதவி**

- மத்திய அரசின் டீசல் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவை மக்கள் மீது சுமத்தாமல் ஈடுசெய்ய போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.1,300 கோடி ஒதுக்கீடு. ரூ.500 கோடி 2015–2016 இல் ஒதுக்கீடு. மேலும், ரூ.578 கோடி நடைமுறை மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடாக அதிகரித்துவரும் இயக்கச் செலவுகளை ஈடுகட்ட ஒதுக்கப்பட்டுள்ளது.




2015–2016க்கு ரூ.150 கோடி பங்கு மூலதனமாக கொடுக்கப்பட்டுள்ளது.

**மோட்டார் வாகன இழப்பீட்டுத் தொகை நேர்வு**

- விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய விபத்து இழப்பீட்டுத் தொகை திட்டம் மூலம் ரூ.110 கோடி நிதியுதவி.
- 2012–2013இல் நீதிமன்றப் பிணையில் இருந்த 219 பேருந்துகளை மீட்க ரூ.13.91 கோடி நிதி ஒதுக்கீடு.
- நீதிமன்ற பிணையிலுள்ள 544 பேருந்துகளை மீட்க, ரூ.39.73 கோடி வழிவகை முன்பணமாக 2014–2015இல் அனுமதிக்க ஆணை.
- வருடந்தோறும் வழங்கப்படும் அரசின் விபத்து காப்பீடு நிதி ரூ.20 கோடியிலிருந்து ரூ.30 கோடியாக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் பங்காக ரூ.30 கோடி வழங்கும்.

**பொது**

- சென்னையில் மோனோ இரயில் திட்டத்தை ரூ.8,500 கோடி செலவில் முதற்கட்டமாக, மூன்று வழித்தடங்களில் 43.48 கி.மீ. தூரத்திற்கு DBFOT முறையில் செயல்படுத்திட அரசு அனுமதி.
- ரூ.236.63 கோடி செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய ஒளி மூலம் 25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திர நிலையம்.
- மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 569 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.
- ஒரு லிட்டர் எரிபொருளுக்கு பேருந்துகள் செல்லக் கூடிய இயக்க தூரம் 5.25 கி.மீ. லிருந்து 5.28 கி.மீ. ஆக அதிகரிப்பு.
- பெருந்துறை சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையினை மேம்படுத்த புதிய மருத்துவ உபகரணங்கள் ரூ.3.16 கோடி செலவில் போக்குவரத்து நிறுவன நிதியுதவியுடன் வாங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ஈரோட்டில் அமைந்துள்ள சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்ப பொறியியல் கல்லூரியை மேம்படுத்தும் பொருட்டு, கணினி உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் ரூ.1.79 கோடி செலவில் சாலை போக்குவரத்து நிறுவன உதவியுடன் வாங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# மாற்றுத்திறனாளிகளுக்கு மதிப்பளிக்கும் மக்கள் அரசின் மகத்தான சாதனைகள்!



- 678 மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன.

- மாற்றுத்திறனாளிகளுக்கான 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,720 மாணவ மாணவியர் மற்றும் அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லியில் தொழிற்பயிற்சி பிரிவில் பயிலும் 55 மாணவ, மாணவியர் ஆகியோருக்கு இந்த ஆண்டு முதல் ரூ.14.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 4 இணை சீருடைகள்.

- பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகள் பள்ளித்தேர்வுகள் எழுத, உதவியாளரை அமர்த்திக் கொள்ள தேர்வுத் தாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டுந்த ரூ.100/– தொகை ரூ.250/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணை. அதன்படி, 500 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கிட ரூ.27,65,250/– நிதி ஒதுக்கீடு.



- அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர் சுமார் 1,400 குழந்தைகள் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்து பயன்பெற்றிட அவர்களுக்கு ஊக்கத் தொகையாக, 10ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.1,500/–ம், 12ஆம் வகுப்பு பயிலும் மாணவருக்கு ரூ.2,000/–ம் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை. அதன்படி, இத்திட்டத்திற்காக ரூ.22.34 இலட்சம் ஒதுக்கீடு.
- அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/– லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்பாசிரியர்களுக்கான ஊதிய மானியம் மாதம் ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில், 12ஆம் வகுப்பில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கும், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ, மாணவியர்களுக்கு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெறுவோருக்கு ரூ.50,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறுவோருக்கு ரூ.30,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், இதேபோன்று 10ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் இடம் பெறும் மாணவருக்கு ரூ.25,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.15,000/– ஆகவும் வழங்கிட ஆணையிடப்பட்டு அனைத்து மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் மாநில அளவில் ரூ.3,55,000/– மற்றும் மாவட்ட அளவில் ரூ.82,29,500/– வழங்கப்பட்டது.
- 22 அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு சூரிய ஒளியின் மூலம் தண்ணீரைச் சூடேற்றும் கருவிகள் ரூ.15 இலட்சத்தில் வழங்கப்படுகிறது.
- ஆரம்ப நிலையில் செவித்திறன் குறையுடையோரை கண்டறியும் மையங்கள் ரூ.39 இலட்சம் மதிப்பில் திருச்சி மற்றும் கோவையில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி**

- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் மாவட்டத்திலுள்ள தனியார் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப தங்கும் வசதியுடன் கூடிய குறுகிய கால தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 32 மாவட்டங்களிலும் ரூ.50.24 இலட்சம் செலவில் 2,400 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வண்ணம் வழங்கப்பட்டது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ், அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் வழங்குவதை கண்காணிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, அரசு தலைமைச் செயலர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடங்களாக 1,928 பணியிடங்கள் கண்டறியப்பட்டு நிரப்ப நடவடிக்கை.
- மாற்றுத்திறனாளிகளுக்கான வட்டார வள மற்றும் பயிற்சி மையம், திருச்சி மாவட்டத்தில் ரூ.14.31 இலட்சம் செலவில் துவக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், குரூப்–4 இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 321 மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பணியாளர் தேர்வு நடத்தப்பட்டு, பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், இந்தியாவில் முதன்முறையாக தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளை 100 நாள் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணிகள் வழங்கப்பட்டு வருகிறது. அத்திட்டத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகையாக 4 மணி நேரங்கள் பணிகள் மேற்கொண்டவர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஒரு நாள் பணிக்கான சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 182 ஆசிரியர் பணிக்கு மாற்றுத் திறனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.









**மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை**

- கடுமையாக பாதிக்கப்பட்ட / மன வளர்ச்சி குன்றிய / தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 1,04,865 நபர்கள் ரூ.124.68 கோடி செலவில் பயன்பெற்று வருகிறார்கள். 2014–2015ஆம் ஆண்டில் இவ்வூதியத் தொகை மேலும் உயர்த்தப்பட்டு தற்போது ரூ.1,500/– ஆக வழங்கப்படுகிறது.
- மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் அடைந்திட நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45 லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் பயன்பெற பாதிப்பு சதவீதம் 60–லிருந்து 45 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.1,000/– வழங்கப்படுகிறது. இதன் மூலம் 5,280 நபர்கள் ரூ.6.11 கோடி செலவில் பயன்பெறுகிறார்கள்.

**திருமண உதவித் திட்டம்**

- பார்வையற்ற / கை, கால் பாதிக்கப்பட்ட / செவித் திறன் குன்றிய மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு திருமண உதவித் தொகை ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.




- திருமணம் செய்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு படித்திருந்தால், திருமண உதவித் தொகை ரூ.50,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.
- திருமண உதவி திட்டத்தின் கீழ் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 490 என்று இருந்த உச்ச வரம்பினை முற்றிலுமாக நீக்கி, தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது 1,817 பயனாளிகளுக்கு ரூ.6.56 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

**உதவி உபகரணங்கள்**

- இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 12,691 பேருக்கு ரூ.14.72 கோடி செலவில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்கள்.
- செவித் திறன் குறையுடைய 5,075 குழந்தைகளுக்கு ரூ.2.00 கோடி செலவில் காதுக்கு பின்புறம் அணியும் நவீன காதொலிக் கருவிகள்.
- பார்வைத்திறன் குறையுடைய கல்வி பயிலும் 602 மாணவர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாக்கி காட்டி, சுயமாக படிக்க உதவும் கருவிகள் (Magnifier).
- மூளை முடக்குவாத நோயால் பாதிக்கபட்ட 1,896 பேருக்கு ரூ.98.00 இலட்சம் செலவில் சிறப்பு சக்கர நாற்காலிகள்.
- கால் முட்டிக்கு கீழ் மற்றும் கால் முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன் கை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 378 பேருக்கு ரூ.1,05,20,000 செலவில் நவீன செயற்கை அவையங்கள்.
- 6,474 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் நடப்பதற்கு உதவியாக ரூ.13.85 இலட்சம் செலவில் ஒளிரும் மடக்கு குச்சிகள் (Reflecting folding sticks).
- 5,400 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.216 இலட்சத்தில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்.



- மாற்றுத்திறனாளிகள் 20,648 நபர்களுக்கு ரூ.2.11 இலட்சம் மதிப்பில் பல வகை உதவி, உபகரணங்கள்.

**ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள்**

- 0–6 வயதிற்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் 01.01.2012 முதல் 20 மாவட்டங்களில் ரூ.34.30 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.
- ரூ.2.62 கோடி செலவில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வரும் மனவளர்ச்சி குன்றிய ஆடவர் மற்றும் பெண்களுக்கான 27 சிறப்பு இல்லங்களில் 1,080 மன வளர்ச்சி குன்றிய ஆடவரும், பெண்களும் தங்கி, தொழிற் பயிற்சி பெற்று பயனடைகின்றனர்.

**மருத்துவ காப்பீடு திட்டம்**

- ஒரு குடும்பத்தில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தாலும், அக்குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் வருமான உச்சவரம்பின்றி பயனடையும் வகையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**புதிய கட்டடங்கள்**

- பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்குவதற்காக பல்நோக்கு விடுதி மற்றும் நவீன சமையல் அறை புதிதாக கட்டுவதற்கும், அங்குள்ள பிரெய்லி அச்சு இயந்திரத்தை பழுது பார்க்கவும் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பரனூர், யா. புதுப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லங்களில் ரூ.5.21 கோடி செலவில் புதிய கட்டடங்கள் மற்றும் நவீன சமையலறைகள் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பேருந்து பயண சலுகை**

- மாற்றுத்திறனாளிகள் வெளியூர் பேருந்துகளில் பயணம் செய்ய75 விழுக்காடு பேருந்து பயண சலுகை ரூ.17.45 கோடி செலவில் 11,51,099 தடவைகளில் மாற்றுத்திறனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.
- செவித்திறன் குறையுடையோருக்கான ஆரம்பநிலை மண்டல பரிசோதனை மையங்கள், 27 மாவட்டங்களில் ரூ.5.5 கோடி செலவில் நிறுவப்பட்டது.
- அரசு சிறப்பு பள்ளிகளுக்கு ரூ.18.90 இலட்சம் செலவில் சூரிய ஒளி மின் நிலையம் அமைக்கப்பட்டது.
- மாற்றுத்திறனாளிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சென்னையில் ரூ.1 கோடியில் அருங்காட்சியகம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.
- தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதிரி மையம் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- 12 சிறப்புப் பள்ளிகளில் ரூ.44 இலட்சம் செலவில் சலவை இயந்திரங்கள்.
- ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.66 இலட்சம் நிதியில் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குதல் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.
- படித்து வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ள இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 15 சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்படும் வங்கிக் கடன் திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு தொகையை அரசே ஏற்று வழங்குகிறது. இவ்வகையில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.
- மாற்றுத்திறனாளிகள் சிறு மற்றும் குறுந்தொழில் சுய வேலைவாய்ப்பு வங்கிக்கடன் திட்டத்தில் வழங்கப்படும் மான்ய தொகை ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
- மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களுக்கு 4 புதிய பொலிரோ ஈப்புகள் ரூ.21.60 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளிகள் மாநில ஆணையரகத்தின் உபயோகத்திற்கென நகல் பெருக்கி, படிப் பெருக்கி மற்றும் கணினிகள் ரூ.11.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.
- கல்வி உதவித் தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.
- நடமாடும் சிகிச்சை மையம் ரூ.4.49 கோடி செலவில் 32 மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

# இளைஞர்களுக்கு ஊக்கம் தரும் இணையிலாச் சாதனைகள்



- ஒலிம்பிக்கில் தங்கம் வெல்பவர்க்கு பரிசுத் தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்வு.
- ஆசிய, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வெல்பவர் களுக்கு ஊக்கத் தொகை ரூ.50 இலட்சமாகவும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.30 இலட்சமாகவும், வெண்கல பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.20 இலட்சமாகவும் உயர்வு.
- சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் ரூ.1.70 கோடி செலவில் அமைப்பு.
- முதன் முறையாக மாநில அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் ரூ.15 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.
- நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் ரூ.3,000 ஆக உயர்வு.
- தினப் பயிற்சி திட்டம் மற்றும் வார இறுதி பயிற்சித் திட்டத்திற்கு ரூ.69.32 இலட்சம் ஒதுக்கீடு.
- தேசிய மாணவர் படை கப்பற்படை அலகு மிதவைப் பயணப் போட்டிக்கான நிதி ஒப்பளிப்பு ரூ.2 இலட்சமாக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிற்றுண்டிப் படி ஒரு மாணவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.3/–லிருந்து ரூ.10/– ஆக உயர்வு.
- குடியரசு தின முகாம்கள் செலவினம் ரூ.50 இலட்சமாக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர்களுக்கான ஊக்கத் தொகை 10 மாதங்களுக்கு 100 முதுநிலை மாணவ, மாணவியர்களுக்கு ரூ.200/– வீதமும் 100 இளநிலை மாணவ, மாணவியர்களுக்கு ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கும் உயர்த்தப்பட்டது.



- 2012–2013இல் தேசிய அளவிலான பைக்கா போட்டிகளில் தமிழக அணி ஒட்டுமொத்த சாம்பியன் பிரிவில் இரண்டாம் இடம்.
- அனைத்து விளையாட்டுகளிலும் பயிற்சி அளித்திட கூடுதலாக 79 பயிற்றுநர்கள் நியமனம்.
- சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் ரூ.2 கோடி நிதியுதவியுடன் நடத்தப்பட்டன.
- ஜார்கண்டில் நடைபெற்ற 34ஆவது தேசியப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத் தொகை.
- 5ஆவது முறையாக உலக சதுரங்க சேம்பியனாக வெற்றிபெற்ற திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு ரூ.2 கோடி ரொக்கப் பரிசு.
- ரூ.6 கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் செயற்கை இழை தடகள ஓடுபாதை.
- ரூ.6 கோடி செலவில் மதுரையில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம்.
- ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற வாய்ப்புள்ள தலைசிறந்த 5 விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.25 இலட்சம் உதவித்தொகை.
- 10 மாவட்டங்களில் தலா ரூ.1.50 கோடியில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள்.
- தலா ரூ.2 கோடி செலவில் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நீச்சல் குளங்கள்.
- ரூ.70 இலட்சம் செலவில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள்.
- ரூ.62 இலட்சம் செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமம் ஒன்றில் கிராம விளையாட்டு மையம்.
- குடியரசு தின விழா முகாம் மற்றும் அதைச்சார்ந்த முகாமில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை ரூ.5.80 இலட்சமாக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவர்கள் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் பங்கேற்கும் முகாம்களில் இடை நிகழ் செலவு தலா நாள் ஒன்றுக்கு ரூ.12/– லிருந்து ரூ.18/– ஆக உயர்வு.
- குடியரசு தின முகாம்கள் செலவினம் ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.60 இலட்சமாக உயர்வு.
- புது தில்லியில் நடைபெறுகின்ற குடியரசு தின முகாமில் பங்கு பெறும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தட்டம்மை தடுப்பு ஊசி போடுவதற்கு ரூ.1,74,000/– நிதி ஒதுக்கீடு.
- தமிழகத்தில் உள்ள ஆதி திராவிடர் பள்ளிகளில் 4,000 பள்ளி மாணவர்களை தேசிய மாணவர் படையில் சேர்த்திட தமிழக அரசு ரூ.54,50,583/– நிதி ஒதுக்கீடு.
- ரூ.25.05 கோடி செலவில் கிராம விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.4.15 கோடி செலவில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதிகள்.
- உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தில் 3,240 திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.6,000 ஊக்க உதவித் தொகை.
- ரூ.33.60 கோடி செலவில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் உள் விளையாட்டரங்கில் உள்கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு பணிகள்.
- ரூ.5.4 கோடி செலவில் அரியலூர், நாமக்கல், சிவகங்கை, தேனி, பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிய விளையாட்டு விடுதிக் கட்டடங்கள்.
- ரூ.80 இலட்சம் செலவில் விருதுநகரில் நீச்சல்குளம்.
- ரூ.7 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம்.
- 2012இல் ரூ.5.52 கோடி செலவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.



- தேனியில் கட்டப்பட்டு வரும் நீச்சல்குளப் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் நிதியாக ரூ.72.50 இலட்சம் ஒதுக்கீடு.
- ரூ.4.50 கோடி செலவில் சென்னை டென்னிஸ் விளையாட்டரங்கம் மேம்பாடு.
- ரூ.30 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுதிறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.25 இலட்சம் செலவில் கடற்கரை மாவட்டங்களில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.8.09 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.36.88 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பல்லூடக ஊடக வகுப்பறை.
- ரூ.2.20 கோடி செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு அறிவியல் மையம்.
- ரூ.20 இலட்சம் செலவில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்குப் பயிற்சிக்காக எடை குறைந்த சரி நுட்பத் திறன் வாய்ந்த நவீனரகப் துப்பாக்கிகள் வாங்குதல்.





- கடற்படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கப்பல் மாதிரி வடிவமைப்பு மானியம் கல்லூரி ஒன்றுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– மற்றும் பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.
- விமானப்படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு வானூர்தி மாதிரி வடிவமைப்பு மானியம் கல்லூரி ஒன்றுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– மற்றும் பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.
- ‘பிடே’ உலக சதுரங்க வாகையர் போட்டிகள் ரூ.29.15 கோடி செலவில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- ரூ.26.44 இலட்சம் செலவில் குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு விளையாட்டு வசதிகளை உருவாக்கம்.
- சென்னை பல்நோக்கு விளையாட்டரங்கில் குளிர் சாதனம், மின் விளக்குகள் போன்றவற்றை மாற்றுவதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு.
- ரூ.250 இலட்சம் செலவில் சென்னை பல்நோக்கு உள் விளையாட்டு அரங்க வளாகத்தில் திறந்தவெளி சறுக்கு வளையம்.
- ரூ.5 கோடி செலவில் ஊட்டியில் உலகத்தரம் வாய்ந்த மலைமேலிட பயிற்சி மையம்.
- ரூ.245 இலட்சம் செலவில் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் தமிழ்நாடு மாநில முதன்மை நிலை பளுதூக்கும் மையம்.
- சென்னை ஓப்பன் சூப்பர் பேட்மின்டன் போட்டிகள் நடத்துவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு.
- ரூ.40.36 இலட்சம் செலவில் மாநில அளவிலான குடிமைப்பணிகள் விளையாட்டுப் போட்டிகள்.
- ரூ.75 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு வசதிகள் மேம்பாடு, உடற்பயிற்சிக் களம் அமைப்பு.
- 2010இல் சீனாவில் நடைபெற்ற பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் மாற்றுத்திறனாளிகளுக்கான வாள்வீச்சுப் போட்டியில் வெண்கலம் வென்ற திரு.எஸ்.நூருதீன் அவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.
- 2010இல் ஜெர்மனியில் நடைபெற்ற உலகக் கோப்பை டென்னிகாய்ட் விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் வென்ற

திரு.G. நாராயண சூர்யா அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

- 2010இல் சீனாவில் நடைபெற்ற 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.13.50 இலட்சம் வழங்கப்பட்டது
- 2010இல் புதுடெல்லியில் நடைபெற்ற 19ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.16.50 இலட்சம் வழங்கப்பட்டது.
- 2009இல் மலேசியாவில் நடைபெற்ற 2ஆவது இளையோர் ஆசிய மாணவ, மாணவியர்களுக்கான கபாடி சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற செல்வி ஆர்.எம்.பியாரா அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.
- தலைமைச் செயலக ஊழியர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பு.
- ஒப்பந்தப் பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் ரூ.8,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.
- சென்னை மற்றும் திருச்சி விளையாட்டரங்கில் இருப்பிடம், உணவு அருந்துமிடம் மற்றும் சமையலறை வசதிகள் செய்ய ரூ.3 கோடி ஒதுக்கீடு.
- தலா ரூ.1.50 கோடி செலவில் ஸ்ரீரங்கம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய ஊர்களில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க ஆணை.
- சிறப்பு விளையாட்டு விடுதிகள் மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான உணவுப்படி ரூ.250/– ஆக உயர்வு.
- ரூ.12 கோடி செலவில் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஒருங்கிணைந்த விளையாட்டரங்கம்.
- விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெறுவோருக்கான சத்துணவு சமச்சீர் உணவுப்படி ரூ.75 லிருந்து ரூ.250 ஆக உயர்வு.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டரங்கங்களை புனரமைக்க ரூ.5 கோடி மானியம்.
- ரூ.3.50 கோடி செலவில் சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம்.
- உலகக்கோப்பை கபடி சேம்பியன்ஷிப் போட்டிகளை சென்னையில் நடத்துவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு.
- ரூ12 கோடி செலவில் தேசிய மாணவர் படைக்கென தனியாகப் பயிற்சி அகாடமி அமைப்பு.
- மதுரை, டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கில் உள்ள இறகுப்பந்து உள்விளையாட்டரங்கில் மரத்தளம் அமைக்க ரூ.57.50 இலட்சம் ஒதுக்கீடு.
- பாய்மரப் படகோட்டுதல் அகாடமி அமைக்கவும் மற்றும் முதன்மை விளையாட்டு மையம் அமைக்கவும் சென்னை திருவல்லிக்கேணியில் 2.75 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு.
- ரூ.75 இலட்சம் செலவில் சென்னை– வேளச்சேரி, செனாய்நகர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள நீச்சல்குளங்களில் ஓசோன் சுத்திகரிப்புடன் கூடிய புதிய வடிகட்டும் நிலையங்கள்.
- சென்னை முகப்பேரில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைக்க கூடுதலாக ரூ.39.50 இலட்சம் ஒதுக்கீடு.
- பாரம்பரிய விளையாட்டுக்களை நான்கு மாவட்டங்களில் நடத்திட அரசு மானியமாக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு.
- 20ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த 7 நபர்களுக்கு ரூ.2.70 கோடி உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.
- சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் 2013 பட்டம் வென்ற செல்வன் கார்த்திகேயன் முரளி அவர்களுக்கு, சர்வதேச கிராண்ட் மாஸ்டர் 2013 பட்டம் வென்ற செல்வன் எம். ஷியாம் சுந்தர் அவர்களுக்கும் முறையே ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.5 இலட்சம் ஆக மொத்தம் ரூ.8 இலட்சம் வழங்கப்பட்டது.



- கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 முதல் 11ஆம் தேதி முடிய சீனா, ஆர்டோஸ் நகரில் நடைபெற்ற முதலாவது ஆசிய ஹாக்கி வாகையர் கோப்பையினை வென்ற இந்திய அணியின் பயிற்றுநரான தமிழகத்தைச் சேர்ந்த திரு. முகமதி ரியாஸ் அவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டது.
- ரூ.67 இலட்சம் செயற்கை இழை ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ள சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கு தடகள விளையாட்டு உபகரணங்கள்.
- நீர் விளையாட்டுக்களை ஊக்குவிக்க ரூ.40 இலட்சம் செலவில் இரண்டு 49er Racing Dinghy Boats.
- ரூ.50 இலட்சம் செலவில் சென்னை நேரு விளையாட்டரங்கில் உள்ள மாநில விளையாட்டு வசதி மையத்திற்கு கூடுதல் வசதிகள்.
- தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பங்கேற்கும் பயிற்சிப் படிப்புகளில் பயிற்சியாளர்களுக்கு சிற்றுண்டிப் படி தலா நாள் ஒன்றுக்கு ரூ.95/– லிருந்து ரூ.213/– ஆக உயர்வு.
- மதுரை மாவட்டம், இடையப்பட்டி கிராமத்தில் அமையவுள்ள என்.சி.சி பயிற்சி அகாடமியில் ரூ.15 இலட்சம் செலவில் சூரிய சக்தி மின் அமைப்பு ஏற்படுத்த ஆணை.
- ரூ.91 இலட்சம் செலவில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் முகாம் மையம் மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி ஆய்வுக்கூடம்.
- ரூ.44 இலட்சம் செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் உணவருந்தும் கூடம், சமையலறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய உணவகம்.
- ரூ.18.03 கோடி செலவில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், ஆய்வகம், கூட்டரங்கம், தியானக்கூடம், சர்வதேச தரத்திலான நூலகம் மற்றும் பல்கலைக் கழகத்திற்குள் இணைப்புச் சாலை.
- 2015ஆம் ஆண்டு ஏர்செல் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகளை நடத்துவதற்காக அரசு மானியமாக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு.
- 2014இல் தென்கொரியாவில் நடைபெற்ற 17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 நபர்களுக்கு ரூ.4.80 கோடி உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.
- 2016ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ரக்பி 7S ஆசிய முன் தகுதிச் சுற்று விளையாட்டுப் போட்டிகளை 2015இல் நடத்துவதற்காக அரசு மானியமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு.
- 92 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன.
- 3,245 தன்னார்வலர்களைக் கொண்டு 46 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 92,840 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- 2,528 யூனிட் இரத்தம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.
- 18 மருத்துவ / கண் / நோய் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 360 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 11 தேசிய அளவிலான முகாம்கள் 180 நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் 18 திட்ட அலுவலர்களுடன் நடத்தப்பட்டுள்ளன.
- 2014–2015ஆம் ஆண்டில் 2 சிறந்த நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் 1 சிறந்த விருப்பார்வ தொண்டருக்கு இந்திரா காந்தி நாட்டு நலப்பணித்திட்ட விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

“மக்களால் இந்த அரசு
மக்களுக்காகவே இந்த அரசு!”

**செல்வி ஜெ ஜெயலலிதா**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**